

# தொண்டை நாடும் வைணவமும்



முனைவர். இரா. வ. கமலக்கண்ணன், எம்.ஏ., பிஎச்.டி., பி.எட்.

திருவேங்கடவன் பதிப்பகம்,
கீழ்ப்புத்தூர்-604 501, தி.ச.மா.

# தொண்டை நாடும் வைணவமும்




முனைவர். இரா. வ. கமலக்கண்ணன்

# தொண்டை நாடும் வைணவமும்

(பகுதி 1)

முனைவர். இரா. வ. கமலக்கண்ணன், எம்.ஏ., பிஎச்.டி., பி.எட்.

திருவேங்கடவன் பதிப்பகம்,
கீழ்ப்புத்தூர்-604 501, தி.ச.மா.

முதற்பதிப்பு : டிசம்பர் 1994

உரிமை : பதிப்பகத்தார்க்கு

விலை

நூல் கிடைக்குமிடம்

"பாரிநிலையம்",
184பிராட்வே,
சென்னை-600001

அச்சிட்டோர் : எஸ். விஸ்வநாதன் (பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்) பிரைவேட் லிமிடெட் 38, மெக்நிக்கல்ஸ் சாலை, சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# காணிக்கை

பரமபாகவதர்களாக வாழ்ந்து திருநாடலங்கரித்துக் கொண்டிருக்கும்,

| | | |
|---|---|---|
| இராமகிருஷ்ணப்பிள்ளை | — | தந்தை வழிப்பாட்டனார் |
| இராமாநுஜம்மாள் | — | தந்தை வழிப்பாட்டியார் |
| இராமசாமிப் பிள்ளை | — | தாய்வழிப் பாட்டனார் |
| சுந்தரம்மாள் | — | தாய்வழிப் பாட்டியார், |
| வரதராஜப்பிள்ளை | — | தந்தையார்—ஆகியோர்க்கும் |

வாழ்ந்து கொண்டிருக்கும் தாயார்,

திருமதி. சாரதாம்பாளுக்கும் அடியேனின் பணிவார்ந்த அன்புப் படையலாக இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

"இந்நூல் புதுவைப் பல்கலைக் கழகத்திற்கு முனைவர் பட்டத்திற்காக, தொண்டை நாடும் வைணவமும்," என்னும் தலைப்பில் அளிக்கப்பட்ட ஆய்வேடு ஆகும். அப்பல்கலைக் கழக அனுமதியுடன் நூலாக்கம் பெறுகின்றது. (பு.ப. கழக அனுமதிக் கடித எண் PU/CE/AR/Ph.D/94- நாள் 16.06. 94)

## பதிப்பகத்தாரின் பணிவுரை

சான்றோர்களே !

"தொண்டை நாடும் வைணவமும்" என்னும் அரிய ஆய்வு நூலை, எம்பதிப்பகத்தின் முதல் வெளியீடாக வெளியிடுவதில் நாங்கள் பெரிதும் மகிழ்வடைகிறோம். இந்நூலாசிரியர் தம் டாக்டர் பட்டத்திற்கு உருவாக்கிய ஆய்வேடு, இன்று நூல் வடிவில் உங்கள் திருக்கரங்களில் திகழ்கின்றது. ஆசிரியர் முனைவர். திருமிகு. இரா.வ. கமலக்கண்ணன் அவர்கள், பல திருத்தலங்களுக்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்து, பெரும் பொருட்செலவில் சேகரித்த நூறு வண்ணப்புகைப்படங்களை இந்நூலில் சேர்க்க இயலாத நிலை ! எனினும் அவற்றுள் இருபது புகைப்படங்களை மட்டும் இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ளோம். அடுத்த பதிப்பிலாவது அனைத்து வண்ணப்புகைப்படங்களையும் சேர்க்கும் வகையில் "அவன்" திருவருள் துணை செய்யும் என்று நம்புகிறோம்.

இந்நூல் உருவாக்கத்திற்கு நன்கொடை வழங்கிய திருமலைதிருப்பதி தேவஸ்தானத்தினர், மற்றும் பல அருளாளர் அனைவர்க்கும், முன்பதிவுத்திட்டப்படி பொருள் உதவி வழங்கிய சான்றோர் பெருமக்களுக்கும் எம் பணிவார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். தமிழ் கூறும் நல்லுலகமும், குறிப்பாக வைணவ சமயப் பெரியோர்களும் இந்த அரிய ஆய்வு நூலை வாங்கி எமக்கு ஆதரவளிக்க வேண்டுகிறோம்.

எம்பெருமான் திருவருளால் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று வாழ வணங்கி நிற்கின்றோம்.

இவண்,
திருவேங்கடவன் பதிப்பகத்தார்.

உயர்திருவாளர். முனைவர் அ. பாண்டுரங்கனார் அவர்கள்,

பேராசிரியர் - துறைத் தலைவர்,
சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி இலக்கிய உயராய்வு நிறுவனம்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுவை.

## வாழ்த்துரை :

வைணவம், இந்து சமயப் பிரிவுகளுள் தொன்மையானதாகும். வேதத்தில் விஷ்ணு மூர்த்தி உலகை மூன்றடியால் அளந்தமை சொல்லப்படுகின்றது. வேத காலத்திற்குப் பின்னர் இதிகாசங்களும் புராணங்களும் செல்வாக்குப் பெற்ற நிலையில், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் 'வைணவம்' எனும் பெயரில் ஓங்கி வளர்ந்து செழித்துப் பரவியது. பாகவத சமயம் எனும் பெயரிலும் இது பாரதம் எங்கும் பரவிப் படர்ந்து வளர்ந்தது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில், விஷ்ணுவின் மற்றொரு பெயரான 'மாயோன்', முல்லை நிலத் தெய்வமாகத் தொல்காப்பியத்திலேயே குறிக்கப் பெறுகிறான். பரிபாடல் மாயோனின் புகழ்பாடுகின்றது ; மாயோன் பெருமையை அது "வாய்மொழி" என்று பாராட்டுகின்றது.

வைணவ சமயத்தின் வளர்ப்புப் பண்ணைகளாக, வேங்கடமும், காஞ்சியும், திருமாலிருஞ்சோலையும் சங்ககாலத்திலிருந்தே சிறந்து விளங்கின. எனினும் வைணவ சமய எழுச்சியில், தொண்டைநாடே வீறு பெற்று விளங்கியது. இவ்வுண்மையை நிறுவும் வகையில் நண்பர் திரு. இரா. வ. கமலக்கண்ணன் பல அரிய செய்திகளைத் தொகுத்து காலந்தோறும் தொண்டை நாடு எவ்வாறு வைணவ சமய வளர்ச்சிக்கு ஊற்றுக் கண்ணாக விளங்கியது என்பதனை இந்நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார்.

வைணவத்தின் முன்னோடிகளான முதலாழ்வார்கள் ஓடித்திரிந்த யோகியராய் எவ்வாறு வைணவத்தைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று வளர்த்தனர் என்பதனை ஆழ்வவார்களின் அருளிச் செயல்களிலிருந்து, ஆராய்ந்து ஆசிரியர் கூறியுள்ளார். முதலாழ்வார்களை அடுத்துத் தோன்றிய தொண்டை நாட்டு ஆழ்வாரான திருமழிசைப்பிரான் சமயவாதங்களில் ஈடுபட்டு வைணவ நெறியே மேலான நெறி-நீதில் நன்னெறி-என விளக்கியிருப்பதை இரா.வ. கமலக்கண்ணன் தெளிவாகச் சுட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

முதலாழ்வார்கள், திருமழிசைப்பிரான் ஆகியோர் காலத்திற்குப் பிறகு வைணவ சமயத்தின் குவிமையங்களாகப் பாண்டிய நாடும் சோழ நாடும் பரிணாமம் பெறுகின்றன. ஆழ்வார்களுடைய பிரபந்தங்கள் சோழ நாட்டில் தொகுக்கப் பட்ட பிறகு, அவற்றுக்குத் தத்துவ விளக்கம் கொடுக்கும் பெரும் பணியைத் தொண்டை நாட்டிலிருந்து சென்ற ஸ்ரீஇராமானுசர், கூரத்தாழ்வார், திருக்குருகைப்பிரான் பிள்ளான், எம்பார், முதலியாண்டான் போன்ற ஆசாரியப் பெருமக்கள் எவ்வாறு திறம்படச் செய்துள்ளனர் என்பதை நூலாசிரியர் விளக்கமாக ஆராய்ந்து கூறுகிறார். பாண்டிய நாட்டைச் சேர்ந்தவரான மணவாள மாமுனிகள் திருவரங்கப்

பெருநகரில் வைணவ சமயத் துறைத் தலைமையேற்று வழிநடத்திச் சென்ற காலத்தில் அவருக்கு உறுதுணையாயிருந்த தொண்டை நாட்டு வைணவச் சான்றோர்கள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது.

தற்காலத்தில் வைணவ சமயம் உயிர்த்துடிப்புடன் விளங்குவதும் தொண்டைநாட்டுப் பகுதியில் தான் என்பதற்கு நூலாசிரியர் பல காரணங்களைச் சுட்டியிருக்கிறார். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை முதன் முதலில் ஏட்டுச் சுவடிகளிலிருந்து ஒரு நூலாக அச்சுக் கொண்டு வந்த முடிச்சூர் அப்பாவு முதலியார் பற்றியும், அவரை அடுத்துத் தோன்றிய தொண்டை நாட்டுப் பெரியோர்கள் கொண்டு வந்த "நாலாயிரத்திவ்வியப்பிரபந்தப் பதிப்புகள்" பற்றியும் ஆசிரியர் தெளிவு படுத்தியிருப்பது, ஆய்வாளர்களுக்கு இனிய செய்திகளாகும். சென்னை, பண்ணுருட்டி, புதுச்சேரி, பில்லாலி, சம்பாரெட்டி பாளையம், புவனகிரி, வந்தவாசி போன்ற தொண்டை நாட்டு ஊர்களில் ஆண்டுதோறும் நடைபெறும் வைணவ மாநாடுகள் எவ்வாறு தொண்டை நாடு வைணவத்தின் ஏற்றத்திற்கு இன்றும் உறுதுணையாக இருக்கிறது என்பதனை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவுபடுத்துகின்றது.

தொண்டைத் திருப்பதிகள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் தனியாக ஓர் இயலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. உக்கல், திருமால்புரம் போன்ற இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளிலிருந்து வைணவ சமயம் தொண்டை நாட்டில் எந்த அளவுக்குச் செழித்தோங்கியிருந்தது என்பதையறியும்போது நம் உள்ளத்தில் உவகை துள்ளுகிறது.

நூல் முழுவதும் நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், தொண்டை நாடு சங்ககாலம் முதல் இன்றுவரை வைணவ சமயத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தது என்னும் மையக்கருத்துப் பாவும் ஊடுமாக, நூலின் அடிநாதமாக ஒலிக்கின்றது. தமிழ்நாட்டின் வரலாற்றில் தொண்டைநாடு கண்ட ஏற்ற, இறக்கங்களையொட்டி வைணவ சமய வரலாறும் அமைந்திருப்பதை இந்நூல் குறிப்பாகப் புலப்படுத்திகிறது.

இந்நூல் புதுவைப் பல்கலைக் கழகத்தின் முனைவர் பட்ட ஆய்வுக்கு புலவர். இரா.வ. கமலக்கண்ணன் அவர்களால் பணிக்கப்பட்ட ஆய்வேடாகும். ஆய்வாளருக்கு வழிகாட்டியாக-நெறியாளராக இருந்து-வழிப்படுத்தியவன் என்ற முறையில் நான் பெரிதும் மகிழ்கின்றேன். "விரிவும், ஆழமும், நுட்பம் நிறைந்த ஆய்வேடு" என்றும், "மிகவும் பாராட்டத்தக்கது" என்றும் தேர்வாளர்களால் ஒரு மனதாகப் பரிந்துரைக்கப்பட்ட இவ்வாய்வேடு, இப்போது நூல்வடிவம் பெறும்போது, "ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே" என்னும் சங்கப் பாடலடியே என் நினைவுக்கு வருகின்றது.

முனைவர் இரா. வ. கமலக்கண்ணனுக்கு என் வாழ்த்துகளும் பாராட்டுரைகளும் உரித்தாகுக. தான் தொடங்கிய பணியை அவர் மேலும் தொடர, அலர்மேல் மங்கை உறைமார்பன் அருள்வானாகுக !

புதுவை,

அ. பாண்டுரங்கன்.

ஸ்ரீ

## அணிந்துரை

**கல்விக்கடல் உயர்திருவாளர் தி.வே. கோபாலய்யர் அவர்கள் ;**
**தலைவர், தமிழ்த்துறை ;**
**பிரெஞ்சுக் கலைக்கழகம்-புதுவை.**

முனைவர் கமலக்கண்ணனார் அவர்கள் தம்முனைவர் பட்டத்துக்கு வரைந்த ஆய்வேட்டின் அச்சுப்படியினை வாசித்து, சுவைத்து, மகிழும் பேறு பெற்றேன். இவ்வாய்வேட்டிற்கு ஆசிரியர் மேற்கொண்ட களப்பணிகள் பல. பெரும்பாலான விண்ணகரங்களைத் தாம் நேரில் சென்று தரிசித்து, எம் பெருமான் திருவருள் பெற்றதோடு, அவை பற்றிய பலதிறச் செய்திகளையும் தொகுத்து வழங்கியுள்ளார். திருப்பதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது அருளிச் செயல்களில் அத்திருப்பதிகளைப் பற்றிய பாசுரங்களின் கருத்துகளை நிரல்படக் குறிப்பிடுகின்றார்.

இந்நூலில் எட்டுப் பெருந்தலைப்புகளும், மிகு பயன் நல்கும் பொருள் செறிந்த பிற் சேர்க்கையாகிய ஆறு அட்ட வணைகளும் இடம் பெற்றுள்ளன. இயைபு ஏற்படும் இடங்களில் எம் பெருமானுடைய ஐவகை நிலை, உறுதிப்பொருள் நல்கும் ஐவகைச் செய்திகள், அர்ச்சைத் திருமேனியின் பலவகைகள், கிடந்த திருக்கோலத்தின் பலவகைகள், வைணவத்தின் தத்துவ, இத, புருஷார்த்தங்கள், அருளிச் செய்கனின் பழைய உரையாசிரியர்கள் குறிப்பிடும் அரிய செய்திகள், ஐதிகங்கள், ஸ்ரீவசனபூடணம், ஆசாரிய இருதயம், இவற்றின் கருத்துகள், குருபரம்பரை, பெரிய திருமுடியடைவு என்ற நூல் செய்திகள் ஆகியவற்றைக் குறிப்பிட்ட செய்தி பாராட்டத் தக்கது.

எடுத்துக் கொண்ட தலைப்பிற்கு ஏற்பத் தொண்டை நாட்டு ஆசாரியர்க எஞ்சாது தொகுத்துப் பெயர் சுட்டி, அவர்கள் ஆற்றிய தொண்டுகளை நிரல்பட விளக்கும் திறம் இனிது.

தொடக்கத்தில் தொண்டை நாட்டு நிலப்பரப்பினை விளக்கி, வடவேங்கடம் தொண்டை நாட்டுத் தலங்களுள் அடங்கு மாற்றையும் அதன் தொன்மையையும் சிறப்பையும் விளக்கி, நடுநாட்டுத் திருக்கோவலூரும், திரு அயிந்திரபுரமும் தொண்டை நாட்டினவாகத் தாம் கொள்ளுதற்கு முன்னோர் நூல்களின் கருத்துகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

சைவ சமயச் சார்புடையவர்கள் நில உடைமையாளராகிய வேளாளர் எனவும், அவர்கள் எண்ணிக்கையில் மிகுந்தவர் எனவும், வைணவ சமயச் சார்புடையவர்கள் ஆயர்களும் கைவினைஞர்களுமாகிய சிறுபான்மையினர் எனவும் இவர் குறிப்பிடுவது சுவைபயப்பதாக உள்ளது.

முதலாழ்வார்கள் காலத்தில் அவர்களால் பாசுரம் பாடப்பட்ட பல திருப்பதிகளையும் பற்றிச் சுருக்கமாக் குறிப்பிட்டு அவர்கள் மிகுதியும் பாடிய வேங்கடத்தின் இயற்கை வருணனை, எம்பெருமானுடைய சிறப்புகள் இவற்றை விரித்து உரைக்கின்றார்.

திருமழிசையாழ்வார் வரலாற்றைக் குருபரம்பரையை ஒட்டிக் கூறும் இவர் அவர் முதலாழ்வார் காலத்தவர் என்பதனை உடன்படுகின்றார். திருமலையில் எம்பெருமானைச் சங்கர நாராயண வடிவில் வழிபட்ட முதலாழ்வார்கள் இறையில் இயற்கையையும் இயற்கையில் இறையையும் இணைத்துக் காண்பவர்கள் எனவும், தம் அனுபவம் கூறித் திருத்தல வழிபாடு இறைவழிபாட்டுப் பயன் அளிக்கும் என்ற வழிபாட்டுப் பக்தி நெறியைப் பரப்பவே இவர்கள் அவதரித்தனர் எனவும் குறிப்பிடுகிறார்.

வளர்ந்து பெருகிய சைவம் திருமாலைத் தாழ்த்துக் கூறியதால் திருமாலின் பேரிறைமையை நிறுவ வேண்டிய காலத்தில் திருமழிசையாழ்வார் திருவவதாரம் ஏற்பட்டது என்று கூறி முனைவர். குலசேகரன் கூறுவனவற்றையும் தொகுத்துக் கூறுகிறார். திருமழிசையாழ்வார் பாடல்களில் உள்ள தத்துவக் கருத்துகளைப் பாடல்களையே காட்டி நன்கு விளக்கியுள்ளார். வேற்று இடங்களில் காணப்படாமல் அவர் பாடலிலேயே உள்ள இராவணன் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறார். திருமாலே முழு முதற் கடவுள் என்பதனை உடன்பாடு, எதிர்மறை என்ற இரு திறத்தாலும் நிறுவிய செய்திகளையும், முதலாழ்வார்களைப் போல இராமன், கண்ணன் என்ற அவதாரச் செய்திகளை உரைப்பதனோடு இவர் நரசிம்மாவதாரச் செய்திகளைப் பலவாகப் போற்றிய திறத்தையும் சுட்டியுள்ளார். திருமழிசையார் குறிப்பிட்ட முக்கோற் பகவர் பற்றிச் சில குறிப்பிடுகிறார். இவ்வாழ்வாரின் தீவிர வைணவம் பரசமய நிந்தனையளவும் நீண்ட திறம் அக்காலச் சூழ்நிலை என்று இவரால் கொள்ளப்படுகிறது.

இவ்வாழ்வார் நால்வரும் தொண்டை நாட்டில் அவதரித்தவர். ஆழ்வாருள் ஏனையார் அந்நாட்டில் அவதரிக்கவில்லை எனினும் அவர்கள் பாடிய தொண்டை நாட்டுத் திருத்தலங்களைப் பட்டியலிட்டு விளக்குகிறார். அட்டபுயகரம், திரு இடவெந்தை, திருஅல்லிக்கேணி பற்றிய திருமங்கையாழ்வார் பாசுரக்களை மிகவும் சுவைபட விளக்குகிறார். பார்த்தசாரதிக்கு என அமைந்த தனிக்கோயில் திருஅல்லிக்கேணியே என்று அதன் சிறப்பை எடுத்து இயம்புகிறார், காஞ்சியில் உள்ள பல கோயில்களில் அட்டபுயகரத்திலேயே பரமபதவாசல் உள்ளது என்ற அரிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். பரமேசுவர விண்ணகரம் ஆகிய வைகுந்தப் பெருமாள் கோயிலைப் பற்றிய விரிவான வருணனை கூறி அக்கோயிலை எடுப்பித்த இரண்டாம் நந்திவர்மன் சோழ மண்டலத்தில் எடுப்பித்த நந்திபுர விண்ணகர் பற்றியும் குறிப்பிடுகிறார். கடல் மல்லையிலுள்ள பல கோயில்கள் பற்றிய விரிவுரையை அடுத்து, கடிகையில் வைகானச ஆகம வழிபாடு நிகழ்த்தப்படும் திருக்கோயில், அங்குப் பண்டு இருந்த கல்லூரி இவை பற்றிய பல செய்திகளையும் குறிப்பிடுகிறார். திருத்தண்காவில் பண்டு பெருமான் சயனத் திருக்கோலத்தில் காட்சி வழங்கியமை, திருநீர்மலை ஆண்டிற்கு ஆறுதிங்கள் நீரால் சூழப்பட்டிருந்த நிலை என்பனவற்றைச் சான்று கொண்டு விளக்குகிறார். வேங்கடம், கோவலூர் பற்றிய பாசுரங்களின் கருத்துகள் விரிவாக விளக்கப்படுகின்றன. வேங்கடம் பற்றிய பலசெய்திகளையும் இப்பகுதியில் தொகுத்துரைக்கிறார். மக்கள் உய்வதற்குப் "பிரபத்தியாகிய நெறியே எளிய நெறி என்பது அருளிச் செயல்களின் முடிந்த முடிபாகும்", என்பது இப்பகுதியில் விளக்கப்படுகிறது. ஆழ்வார்களின் தமிழ்ப்பற்று பல சான்றுகளால் விளக்கப்பட்டுள்ளது.

தொண்டை நாட்டில் ஆழ்வார்களுக்குப் பின்னர்த் தோன்றிய ஆசாரியர்களின் பட்டியலை முதலிலேயே தருகிறார். ஆசாரியர்களுள் நாதமுனிகள், ஆளவந்தார் என்பவர்களைப் பற்றிச் சுருக்கமாகப் பேசி, இராமாநுசருடைய வரலாற்றையே விரிவாகக் குறிப்பிடுகிறார். இராமநுசர் 9 நூல்களை வடமொழியில் இயற்றியிருப்பினும் அவர் தமிழிலும் வல்லவர் என்பதனைப் பல சான்றுகள் கொண்டுநிறுவுகிறார். அருளிச் செயல்களுக்குப் பாடப்பட்ட தனியன்களைக் கொண்டு ஆசாரியர்களின் தமிழ்ப்புலமையை உலகறியச் செய்கிறார். இராமாநுசர் காலத்துக்குப் பின் ஏற்பட்ட வடகலை, தென் கலை இவற்றிடையே கொள்ளப்பட்டிருக்கும் பல வேறுபாடுகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். காஞ்சிவடகலையாருக்கு உகந்த திருத்தலமாகவும், திருவரங்கம் தென்கலையாருக்கு உகந்த திருத்தலமாகவும் ஆசாரியர்கள் காலத்தில் இருந்த சூழ்நிலையை விளக்கிக் காஞ்சி வரதராசர் கோயில் பற்றிய எல்லாச் செய்திகளையும் முறையாகத் தெளிவாக எடுத்து இயம்புகிறார்.

வடகலை, தென்கலை ஆசாரியர்களில் தொண்டை நாட்டினராய பலரைப் பற்றியும் நுட்பமான செய்திகளைத் தேவைமான அளவு குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதி பயங்கரம் அண்ணன் (கி.பி. 1340—1440) பாடிய வேங்கடேச சுப்ரபாதம் பற்றிச் சற்று விரிவாகக் குறிப்பிடும் இவர், முனைவர் பார்த்தசாரதியின் திருவேங்கடத்தான் திருப்பள்ளி எழுச்சி என்ற இக்காலத் தமிழாக்கத்தின் அருமையையும் எடுத்து இயம்புகிறார்.

ஆசாரிய அபிமானத் தலங்களில் பெரும்பூதூர், மதுராந்தகம், உத்தரமேரூர், காவேரிப்பாக்கம், திருப்பாற்கடல், கூரம், திருவதிகை, கோவிந்தப்பாடி, களத்தூர், எண்ணாயிரம், கங்கபுரம், தெள்ளாறு, நாவல்பாக்கம், வந்தவாசி, மலைவையாவூர், சிங்கப்பெருமாள் கோயில், செய்யூர், மயிலாப்பூர், உக்கல், மீஞ்சூர், தேசூர், ஆரணி, திருவண்ணாமலை, பள்ளிகொண்டா, ஐயன்குளம், ஆர்க்காடு முதலிய திருத்தலங்களை நேரில் தரிசித்து அவற்றின் சிறப்புகளைக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தரமேரூர் துலாபாரத்தனி பற்றிய சிறப்பு, திருப்பாற்கடல்நாதன் தனிச்சிறப்பு, கோவிந்தப்பாடியில் நம்மாழ்வார் பிரபந்தங்களை நாளும் சேவிக்க நிவந்தம் விடப்பட்ட செய்தி, பொன்பதர் கூடத்திலுள்ள இராமர் விக்கிரகச் சிறப்பு, விகனசர் படிவங்கள் அமைந்துள்ள கங்கபுரம் முதலிய ஊர்களின் நிரல், நாவல்பாக்க உடையவர் விக்கிரகச் சிறப்பு, வந்தவாசியில் சிவ விஷ்ணு ஆலயங்கள் ஒரே மதிற்சுவர்களுக்கு இடையே அமைந்துள்ள திறம் முதலியவை குறித்துரைக்கத்தக்கன.

ஈட்டின் ஓராண்வழிச் செலவு நீங்கியமை குறிப்பிடப்படுகிறது. வேதாந்த தேசிகர் வரலாறு விரிவாகக்குறிக்கப்பட்டுள்ளது. அவர் இயற்றியநூல்களின் பட்டியலும், சிலவற்றைப் பற்றிய குறிப்பும் சுட்டப்பட்டுள்ளன. பிரம்மதந்திர சுவதந்திரர், ஆதிவண் சடகோப ஜீயர், ஆத்தான்ஜீயர், தொட்டாச்சாரியர் முதலிய பிற்காலச் சான்றோர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

பாரதவெண்பா, வீரசோழிய உரை இவற்றில் திருமால் சிறப்புக் கூறும் பாடல்களைக் குறிப்பிட்டு விளக்கும் ஆசிரியர், ஆசாரியர்கள் காலத்தில் தோன்றிய ஞானசாரம், பிரமேயசாரம் முதலியவற்றையும், பிற்பட்டனவாகிய பெரிய திருமுடியடைவு, தேசிகர் நூற்றந்தாதி, அட்டப்பிரபந்தம், இருசமய விளக்கம்,

திருவேங்கடக் கலம்பகம், நல்லாப்பிள்ளை பாரதம், எம்பிரான் சதகம் ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இராமாநுச நாவலர் இயற்றிய நூல்கள், அண்ணங்கராசாரியாருடைய அருந்தொண்டும் நூல்களும் ஆகியவை பற்றியும் குறிப்பிட்டு, இவர்களுடைய வைணவத் தொண்டினை விரிவாக விளக்கியுள்ளார்.

விசயநகர மன்னர் ஆட்சியில் காஞ்சி வரதராசர் கோயில் வடகலையின் தலைமையிடமாகவும், திருவரங்கம் தென்கலையாரின் தலைமையிடமாகவும அமைய, வைணவ வளர்ச்சிக்கு அக்காலச் சான்றவர் பாடுபட்டதிறம் சுட்டப்படுகிறது.

இக்கால வைணவம் என்ற தலைப்பில் திவ்வியப்பிரபந்தப் பதிப்புகள், அதன் உரைகளின் பதிப்பு, வைணவத் தொடர்பான பல நூல்களின் வெளியீடு, பழைய உரைகளின் தமிழாக்கத் தொண்டு, வைணவசபைகளின் தொண்டு, என்பன குறிப்பிடப்படுகின்றன. அருளிச் செயல்களை ஓதியும் பரப்பியும் செய்ய வேண்டிய தொண்டுகளை ஆசிரியர் வற்புறுத்திக் கூறுகிறார்.

கல்வெட்டுகள் பற்றிய செய்திகளில் பெரும்பான்மை கோயில்களில் விளக்கு எரிக்கவும், கோயில் நிருவாகம் செய்யவும் செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றியவை. அருளிச் செயல்களை நாளும் ஓத அமைந்த நிவந்தம் பற்றிய கல்வெட்டுகள் சிலவே.

பிற்சேர்க்கையில் உள்ள திருமலை வரலாறு, விசிட்டாத்துவைதம், பிரமசூத்திரம், தேசிகருடைய நூல்களின் பட்டியல், வைணவ ஆகமங்கள் பற்றிய விளக்கம் ஆகியவை வைணவம் பற்றி அறிவார்க்குத் தேவையான செய்திகளைக் கொண்டுள்ளன.

ஆய்வுக்கு இந்நூல் ஒரு முன்னோடியாகவே கொள்ளப்படல் வேண்டும் என்ற ஆசிரியர் விருப்போடு இந்நூல் நிறைவு பெறுகிறது.

ஆசிரியருடைய தமிழ்த்தொண்டு சிறக்க எம்பெருமான் அருளுவானாக !

டாக்டர் சஙி. இராமன்
M.A., B.L., Ph.D.
செயலாளர்
உலக நிகழ்வு ஆய்வுக்கான இந்தியக் குழுமம்
சென்னை.

No. 88 ஹாரிங்டன் சாலை
சேத்துப்பட்டு
சென்னை-600 031.

## அணிந்துரை

வைணவம் ஓர் இயக்கமாக மலர அடித்தளம் அமைத்தது தொண்டை நாடு என்றால் அதில் மிகை இல்லை. முதல் நான்கு ஆழ்வார்கள் தொண்டை நாட்டினர் என்பது யாவரும் அறிந்ததே. ஆலாகப் பெருகிய இம்மதத்திற்குச் சித்தாந்த உருவம் தந்து, இதை எந்நாளும் நிலைத்திருக்கும் ஒரு சமயமாகச் செய்த ஸ்ரீ ராமானுஜர் இந்நாட்டைச் சேர்ந்தவர் என்பது இந்த மண்ணுக்கு மகிமை சேர்க்கிறது.

தமிழகமெங்கும் தவழ்ந்து மக்களிடையே பெரும் மாற்றத்தைச் செய்த இந்த மதம் இன்றும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் இது ஒரு மனித நேய இயக்கமாக மலர்ந்தது தான். நிறை ஞானம் என்னும் எட்டாக் கொம்பில் நிற்கும் அத்துவைத மதம் ஒரு பக்கமும், வைதிக மதத்தின் அடித்தளத்தையே உடைக்க முற்படும் சைவசித்தாந்தம் ஒரு பக்கமும் இருக்க, மக்களின் உள்ளங்களோடு இணைந்த பக்தி பூர்வமான, உணர்ச்சி பூர்வமான ஒரு மதமாக எளியோரையெல்லாம் கவரும் ஒரு மதமாக அமைந்தது ஸ்ரீ வைஷ்ணவம். மேற் சொன்ன மேட்டுக் குடியினரின் மதங்களால் புறக்கணிக்கப்பட்ட எளிய மக்கள் தங்களுக்கெல்லாம் உய்ய வழி இல்லையே என்று திகைத்து நின்ற காலக் கட்டத்தில் தோன்றியதே இம்மதம். தொண்டை நாட்டில் மலர்ந்து, ஸ்ரீ ராமானுஜரின் அவதாரத்தால் இம் மண்ணில் பூரணத்துவம் பெற்றதால் தொண்டை நாட்டோடு தொடர்பு படுத்தி இதன் வரலாற்றினைக் கணிக்கும் பணியில் இந்நூல் ஈடுபடுகிறது. வைணவத்தின் தோற்றம், வளர்ச்சி இன்றைய நிலை ஆகியவற்றினைப் பற்றி முறையாக ஆராய்ந்து கோவையாக அளிக்கிறார் இந்நூலாசிரியர். தொடக்க காலத்தில் இருந்த சமரசபாவம், காழ்ப்புணர்ச்சியும், எதிர்ப்பும் தாக்கிய காரணத்தினால் திரு மழிசை ஆழ்வார் காலத்தில் மாறியமைந்து வீரிய மதமாக உருப்பெறும் தன்மையினைக் காட்டுகிறார்.

உணர்ச்சி பூர்வமான பக்தி மதமாகத் தோன்றிய வைணவம், ஸ்ரீ ராமானுஜர் காலத்திற்குப் பிறது சித்தாந்த வடிவம் பெற்று அறிவு பூர்வமான வாதங்களைத் தானும் கைக்கொண்டாலும், அர்ச்சாவதாரம் என்னும் பக்தி இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டதால், ஆழ்வார்கள் அமைத்த பக்தி மலர்ப் பூங்கா வாடாமல் நிற்க உறுதுணையாக நின்ற பாங்கு தெரிவிக்கப்படுகிறது.

ஆழமான ஆராய்ச்சி வகை நூல்களின் பாற்பட்டது இந்த முயற்சி. தமிழ் இலக்கியத்தை சீராகக் கற்றவரின் கைவண்ணத்தில் தோன்றிய நூல் என்பது தென்னெனத் தெரிகிறது. சான்றுகளைக் காட்டுவதிலும் அவற்றிற்கு மேலும் ஆதாரங்களைத் தருவதிலும் ஆசிரியரின் ஆராய்ச்சித் திறன் வெளிப்படுகிறது. ஒவ்வொரு வரியிலும் பொருளாழத்தைக் காட்டும் பாங்கு மிளர்கிறது. சிறந்த ஆராய்ச்சி உத்திகளின் சாயல் ஆங்காங்கே முத்திரை பெற்றிருக்கிறது.

இருப்பினும் நூலைப்படிக்கும் போது ஏதோ ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்தாமல் நம் உள்ளமே அதில் இலயிக்கும் படியாக நிகழ்ச்சிகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் பற்றிக் கோவையாகத் தருவது மகழ்வைத் தருகிறது. நிகழ்ச்சிக் கோவையின் இடையே சித்தாந்தத்தையும் எளிய நடையில் தந்திருப்பது இவ்வாசிரியரின் திறமை. ஆற்றொழுக்காகப் போகும் நூலின் போக்கு கற்பவரின் மனதில் எவ்வித சலிப்பும் ஏற்படுத்தாமல் இருப்பது இந்நூலின் பெருமை.

வைணவம் ஒரு வற்றாத ஜீவநதி. அதில் எத்துணை பேர்கள் மூழ்கி முத்தெடுத்தாலும் குறையாமல் வழங்கும் சாகரம். இதில் டாக்டர் கமலக்கண்ணன் வழங்கும் முத்துகள் ஒளிதரும் சுடர்மணிகளாக நிற்கின்றன. நூலாசிரியன் முயற்சி போற்றத்தக்கது. இந்த நூல் பெருமையோடு வரவேற்கத்தக்கது.

டாக்டர் ச. கி. இராமன்

ஸ்ரீ ஆண்டாள் துணை

## அணிந்துரை

திருமதி. டாக்டர். பிரேமாநந்தகுமார் எம்.ஏ., பிஎச்.டி.
தொண்டை நாடும் வைணவமும்.

வேத கால முதல் இந்திய மக்களிடம் வைணவத்தின் ஆளுமை உண்டு. திருமால் தன் திருவடியால் மூவுலகத்தை அளந்த பெற்றி ரிக்வேத சூக்தங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேதாதிதி முனிவர் ரிக்வேதத்தில் பாடுவார்.

"இதம் விஷ்ணுர்விசகரமே
த்ரேதா நிதகே பதம்
ஸமூஹளமஸ்ய பாம்ஸுரே

த்ரீணி பதாவிசக்ரமே
விஷ்ணுர்கோபா அதாப்ய :
அதோ தர்மாணி தாரயன்"

(விஷ்ணு இவ்வாறு திருவடியினை மூன்று முறை எடுத்து வைக்கவும், உலகம் முழுவதும் அவரது திருவடியின் கீழே கிடந்தது.

காப்பாற்றும் கடவுள், ஏமாற்றமுறாத விஷ்ணு, மூன்று முறை திருவடி எடுத்து வைத்து, அவ்வாறே அறங்களனைத்தையும் வளர்த்தார்.)

தமிழகத்திலும் வைணவம் ஆதிகாலம் முதல் வழக்கில் இருந்திருக்கிறது. பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் திருமால் சிறப்பினை எடுத்து உரைத்துள்ளன. இயற்கையுடன் ஒன்றிக்காணும் இரணிய சம்ஹார மூர்த்தியின் எழிலைப்பரிபாடலில் கடுவன் இளவெயினனார் அற்புதமாகக்காட்டுவார்.

"நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள ;
நின், தண்மையும் சாயலும் திங்களுள ;
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள ;
நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள ;
நின், நாற்றமும் ஒண்மையும் பூவையுள ;
நின், தோற்றமும் அகலமும் நீரினுள ;
நின், உருவமும் ஒலியும் ஆகாயத்துள ;
நின், வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள ;
அதனால், இவ்வும், உவ்வும், அவ்வும், பிறவும்
மேவல் சான்றன எல்லாம்."

பாரதமெங்கும் ஏனைய மதத்தினரால் வைணவம் தளர்வுற்றபோது, ஆழ்வார்கள் தோன்றி பக்திப்பனுவல்கள் பாடி, வைணத்திற்கு மறுமலர்ச்சி தோற்றுவித்தனர். தமிழகத்தில் தோன்றிய இந்த பக்தி இயக்கம் இந்தியாவின் ஏனைய பிரதேசங்களிலும் மற்ற நாடுகளிலும் வேகமாகப்பரவியது. இன்று வைணவம்

தன்னிகரில்லாத உணர்ச்சி வெள்ளமாக, மக்களிடையே ஜாதி பேதங்களைக் கடந்த ஒரு சமநிலை தத்துவமாக விளங்குகிறது.

ஆழ்வார்களது பனுவல்களும், சேர, சோழ, பாண்டிய, பல்லவப் பேரரசுகள் கோவில் பண்பாட்டிற்குத் தந்த ஏற்றமும் ஒருங்கிணைந்தன. மாறும் தெய்வீகத்தை நன்கு உணர்ந்து கொண்டது. டாக்டர் கமலக்கண்ணன் சொல்வதுபோல்,

"கடவுளுக்கு முன் மக்கள் அனைவரும் சமம் ; கடவுள் ஒருவரே தலைவர். அரசரைப் பாடப்பயன்பட்ட தமிழ், கடவுளைப்பாட மட்டும் பயன்படவேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. அரண்மனையை விட ஆலயங்கள் உயர்ந்தன ; அரசரை எழுப்பும் துயிலெடைநிலை, ஆலயத்தில் ஆண்டவனை எழுப்பும் திருப்பள்ளி எழுச்சியாயிற்று ; அரண்மனை விழாக்கள் கோயில் விழாக்களாயின ; மனிதரிடை உயர்வு, தாழ்வு, சாதி வேறுபாடுகள் ஒருவாறு புறக்கணிக்கப்பட இத்திருப்பம் பயன்பட்டது."

இவ்வாறாக வைணவம் ஆன்மீகம், இலக்கியம், கலை, சமூக உணர்வுச்சிந்தனைகள் அனைத்தையும் உள்ளடக்கிய வாழ்க்கை நெறியாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் தோன்றிய தமிழ் பக்தி இயக்கம் சோழநாடு, பாண்டிய நாடு, சேரநாடு, தொண்டை நாடு என்று சில இடங்களில் மையம் கொண்டு வளர்ந்தது என வரலாறு கூறும். இவற்றில் தொண்டைநாட்டில் வைணவம் தோன்றிப் பொலிந்த வரலாற்றை இலக்கியம், வரலாறு, செவிவழிச் செய்திகள், கல்வெட்டுக்கள், ஆழ்வார்கள் ஆசாரியார்கள் அரசர்கள் தம் தொண்டு எனப் பல முனைகளில் ஆராய்ச்சி செய்து, அற்புதமான நூலாக டாக்டர் கமலக்கண்ணன் வெளியிட்டுள்ளார். இந்தியப்பண்பாட்டில் ஆர்வம் உள்ளோர் அனைவரும் படித்து, பாராட்டிப் பயன்பெறவேண்டிய நூல்.

இந்நூல் ஏகமான செய்திகளை ஒரு களஞ்சியம் போல் சுமந்து வருகிறது. பக்தி இயக்கத்தின் மூல கர்த்தாக்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் தொண்டைநாட்டில் தோன்றியவர்கள். திருமழிசையாகும் தொண்டை நாட்டினரே. இவர்கள் ஆரம்பித்த இயக்கம் திருமலை, காஞ்சிபுரம் போன்ற கோவில்களாலும், உடையவர், வேதாந்த தேசிகர் போன்ற ஆசாரியர்களாலும் வளம் பெற்று, இன்றும் பதிப்பாசிரியர்கள், சபைகள் மூலம் வைணவத்தைச் செழுமையாக வளர்த்து வருகிறது. டாக்டர் கமலக்கண்ணன் அவர்களது ஆய்வு மூலம் "தொண்டைநாடு சான்றோருடைத்து" எனும் சொல் பொய்யாமொழி என்பதைத் தெளிகிறோம்.

புதுக்கற்காலத்தில் சான்றுகளுடன் தொண்டைநாட்டின் சரித்திரம் துவங்குகின்றது. சங்க கால நூல்களில் பல சுவையான செய்திகள். திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவத்துக்குப் பெரும் ஏற்றம். காஞ்சி, திருவல்லிக்கேணி, திருக்கடிகை முதலிய திவ்ய தேசங்கள் தவிர, தொண்டை நாட்டில் கண்ட இடமெல்லாம் கவினுறு கோவில்கள் தோற்றம். மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம் எனப்பல குடைவரைக் கோவில்கள் மாமல்லபுரமெங்கும் கலையின்

அற்புதத்தையும் பக்தித் தேனையும் சிந்துகின்றன. ஜலசயனம், வராகப் பெருமாள் சந்நிதி போன்றவையும் உண்டு. திருமலை, அத்தியூர், திருக்கோவலூர் போன்ற கோவில்களைப் பற்றி முழுமையான விவரங்கள் பெறுகிறோம்.

'ஆசாரியர்கள் காலத்தில் வைணவம்' என்பது ஒரு முக்கியமான இயல். எப்படி ஆழ்வார்களில் அனைத்து வருணத்தாரையும் காண்கிறோமோ, அதுபோல் ஆசாரியர்களும் அனைத்து வருணத்திலிருந்தும் முன்வந்து வைணவத்தை வளர்த்து வந்துள்ளதை பாராட்டுடன் விவரிக்கும் இயல், எம்பார், பட்டர், திருக்கச்சி நம்பி, பிரதிவாதி பயங்காரம் அண்ணன், ஏப்பாக்கம் ஸ்ரீமத் ராமானுஜ நாவலர் என்று பல வருணத்தாரும் வைணவத்தை ஜீவநதியாக அமைத்திருப்பது கேட்டு உள்ளத்தில் உவகை பொங்குகிறது. மனம் அமைதி பெறுகிறது.

சுயமாக பல நூறு கோவில்களுக்குச் சென்று பல தரப்பட்ட செய்திகளைத் திரட்டியளிக்கும் டாக்டர் கமலக்கண்ணன், பலநூறு நூல்களையும் ஆழமாகப்பயின்று இப்புத்தகத்தை உருவாக்கியிருக்கிறார். வைணத்தின் ஆதார சுருதியான ஆழ்வார்களின் அருளிச்செயலில் தோய்ந்த அவரது நெஞ்சம் டாக்டர் பட்டத்துக்கான ஆய்வேட்டையும் ஒரு பக்திப்பனுவலாக மாற்றி அமைத்துவிட்டது. எளிய த்மிழ் நடை, இருபது திவ்ய தேசப்புகைப்படங்கள் இப்புத்தகத்தை ஒரு ஆனந்த அனுபவமாகச் செய்கின்றன. வைணவத்திற்குச் சிறந்த தொண்டு. டாக்டர் கமலக்கண்ணனின் வைணவத் தொண்டு மேன் மேலும் சிறந்து விளங்க வேண்டுமெனத் திருவரங்கத் திவ்வியத் தம்பதிகளைப் பிரார்த்திக்கிறேன்.

'முதல் திருமாளிகை' பிரேமா நந்தகுமார்.
91, தெற்குச்சித்திரைவிதி
ஸ்ரீரங்கம்-620006

### நன்றியுரை

புதுவைப் பல்கலைக் கழகத்தில் பகுதிநேர ஆய்வு மேற்கொள்ள உத்தரவு வழங்கியருளி, பின்னர் ஆய்வேட்டை நூலாக வெளியிட அனுமதியளித்த பல்கலைக் கழகத்தினர்க்கு என் நன்றியைப் பணிவுடன் தெரிவிக்கின்றேன்.

தமிழ்த்துறையில் தமிழாய்வுப் பணியில் என்னைப் பயிற்றுவித்து அன்போடும் பண்போடும் ஆய்வியல் அணுகு முறைகளைத் தெரிவித்து, அரிய விளக்கங்கள் அளித்து, மேற்பார்வை செய்து, ஆய்வேடு உருவாகப் பெரிதும் துணைசெய்து, இன்று "வாழ்த்துரை" வழங்கியும் சிறப்பித்துள்ள தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியரும் அடியேனின் வணக்கத்திற்குரியவருமான உயர்திருவாளர் டாக்டர். அ. பாண்டுரங்கனார் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிவுடன் காணிக்கையாக்குகின்றேன். காரைக்கால் மையத்தில் ஆய்வு மாணவனாக யான் பயின்ற காலத்தில் பலவகையில் உதவிய இணைப்பேராசிரியர் டாக்டர் திருமிகு எஸ். ஆரோக்கியநாதன், விரிவுரையாளர் டாக்டர். திருமிகு. ம. மதியழகன் ஆகியோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ் ஆய்வுத் தலைப்புக் கேற்ப பலதிருக்கோயில்களுக்கும் சென்று கள ஆய்வு மேற்கொண்ட போது உதவிய நிருவாக அலுவலர்கள் பலர் ; ஆலய அருச்சகர்கள் பலர் ; சமயப் பெரியோர்கள் பலர் ; அனைவர்க்கும் என் நன்றி உரித்தாகுக. குறிப்பாகப் பேராசிரியர் திருமிகு ந. சுப்புரெட்டியார், திருவல்லிக்கேணி "கீதாசாரியன்" ஆசிரியர். திருமிகு. எம். ஏ. வேங்கடகிருஷ்ணன், செய்யாறு. திருமிகு. ஈ. வி. கிருஷ்ணசாமி அய்யங்கார், காஞ்சிபுரம் அமரர் திருமிகு. அனந்தாழ்வார் அய்யங்கார், செய்யாறு கல்லூரிப் பேராசிரியர்கள் திருமிகு. சி. என். குமாரசாமி, திருமிகு. த. கோ. சம்பந்தன், திருமிகு. எம். எஸ். வேங்கடாச்சாரி, திருமிகு. எம். சுந்தேரேசன், பொன்னூர் புலவர் எஸ். தன்யகுமார், வந்தவாசி புலவர். என். பாஸ்கரதாஸ், தேசூர் மேல்நிலைப்பள்ளி முதுகலைத் தமிழாசிரியர் திருமிகு. திரு சீனிவாசராகவன் நூலகப்பொறுப்பாளர் திருமிகு. கே. வி. இராதாகிருஷ்ணன், வெம்பாக்கம் தலைமையாசிரியர் திருமிகு. மா. அன்புதுரை, மானாம்பதி. திருமிகு. ஏ. ஆடலரசன், வெம்பாக்கம் பள்ளி ஆசிரியர்கள், அல்லியந்தல் பள்ளி ஆசிரியர்கள், "தேசூர் பரமா" ஸ்டுடியோ உரிமையாளர். திரு. பாலாஜி, சேத்துப்பட்டு "விஜயா" கலர் ஸ்டுடியோ உரிமையாளர், காஞ்சிபுரம் "ரங்கா" ஸ்டுடியோ உரிமையாளர், திருவல்லிக்கேணி "தஞ்சை மூர்த்தி ஸ்டுடியோ" உரிமையாளர் ஆகிய அனைவர்க்கும் என் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இவ்ஆய்வுப் பணிக்காகப் பொருளுதவி செய்த என் இளவல்கள் புலவர், திருவ. திருவேங்கடராமாநுசம், புலவர். திரு. வ. நந்தகோபால் ஆகியோர்க்கும், புகைப்படத்தொகுப்பு உருவாகப் பெரிதும் துணைசெய்த என் மக்கள் செல்வன். க. கோவிந்தராசன், செல்வன். க. மாதவன், செல்வி. க. கீதாலட்சுமிக்கும் வாழ்வின் துணையாக விளங்கிவரும் க. நாராயணிக்கும் இறையருள் கூட்ட வேண்டுகின்றேன். ஆய்வேட்டை தட்டச்சு செய்து தந்த புதுவை "ரேணுகா மின்னியல் தட்டச்சு நடுவக" உரிமையாளர் திரு. இரா. குமாருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ் ஆய்வேட்டை நூல்வடிவில் கொண்டுவர விரும்பிப் பணியைத் தொடங்கியவுடனே முதன்முதலாகத் தம் திருக்கரத்தால் நன்கொடை அளித்து இத்தெய்வீகத் திருப்பணியைத் தொடங்கிவைத்த மகான் பண்ணுருட்டி வைணவ சபைச் செயலர். திருமிகு. ப. சீனிவாச ராமாநுச நாவலர் தாசர் அவர்களுக்கும், நூல் வெளியீட்டுக்கு மனமுவந்து நன்கொடை வழங்கிய திருமலை-திருப்பதி தேவாஸ்தானத்தினர்க்கும், அவ்வுதவி கிடைக்க எல்லா வகையிலும் பேருதவி புரிந்த

'திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில்'' தமிழ்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்று, "ஆழ்வார்கள் திவ்வியப்பிரபந்தத் திட்டத்தின்'' தலைவராகத் தெய்வீகப் பணியாற்றிவரும் பேராசிரியர். உயர்திருவாளர். பொன். சௌரி ராஜன் அவர்களுக்கும், இந்தியன் வங்கியின் சார்பாக நிதிஉதவி வழங்கிய பொதுமேலாளர், பொதுநலத்தொண்டர், வைணவச் செம்மல் உயர்திருவாளர். எம். கோபால கிருஷ்ணன் அவர்களுக்கும், இந்தியன் வங்கி அலுவலர் திருமிகு. வேங்கடரத்தினம், செய்யாறு கிளை மேலாளர். திருமிகு. சாரநாதன் ஆகியோர்க்கும், வல்லம் அப்பாய் நாயுடு அறக்கட்டளை சார்பாக நிதிஉதவி வழங்கிய வள்ளல் டாக்டர். உயர்திருவாளர். இராமதாஸ் அப்பாய் அவர்களுக்கும், புதுவை வைணவ சபைச் செயலர் திருமிகு. வித்துவான் மு. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், முதுபெரும் புலவர். காரணி. திருமிகு. வே. வேணுகோபால் ரெட்டியார் அவர்களுக்கும், பாரதிய மாநில வங்கி பொதுமேலாளர் திருமிகு. கலியாணசுந்தரம் அவர்களுக்கும், மனிதவள மேம்பாட்டுத் துறைத் தலைவர் அவர்களுக்கும், வந்தவாசி வைணவ சபைத் தலைவர் திருமிகு. ஏ. இராமச்சந்திரெட்டியார் அவர்களுக்கும், இராசிபுரம் புலவர் மு. இராமசாமியார் அவர்களுக்கும் மயிலம் மகாவித்துவான் வே. சிவலிங்கனார் அவர்களுக்கும் அடியேனின் பணிவார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் முன்பதிவுத் திட்டப்படி நூல் வாங்க முன்பணம் வழங்கியுள்ள அருளாளர்கள் பலர் (அவர்களுடைய திருநாமங்கள் விவரமாக அச்சிடப்பட்டுள்ளன) அவர்கள் அனைவர்க்கும் அடியேனின் பணிவார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். அனைவரும் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலின் திருவருள் பெற்றுப் பல்லாண்டுவாழ வேண்டுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியருளிய சான்றோர்கள் கல்விக் கடல், உயர்திருவாளர். தி. வே. கோபாலய்யர் அவர்களுக்கும், பல்வகையில் அடியேனுக்கு உதவிவரும் உலக நிகழ் ஆய்வுக்கான இந்தியக் குழுமச் செயலர் உயர்திருவாளர். டாக்டர். ச. கி. இராமன் அவர்களுக்கும், திருவரங்கம், திருமதி. டாக்டர். பிரேமா நந்தகுமார் அவர்களுக்கும் என் பணிவார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். நூலின் 219 ஆம் பக்கத்தில் "வராகர் சந்நிதியில் விக்கிரகம் இல்லை, என்று அடியேன் தவறுதலாகக்குறிப்பிட்டிருப்பதை அன்புடன் சுட்டிக் காட்டி, விக்கிரகம் உள்ளது என்றும், எங்கள் குடும்பத்தார் சார்பாகக்குட முழுக்கு விழா செய்து, ஆண்டுதோறும் இலட்சுமி குமார தாத தேசிகர் திருநட்சத்திரத்தன்று திருமஞ்சனம் முதலியவற்றை நடத்திவருகின்றோம்'', என்று இவ்வம்மையார் குறிப்பிட்டிருந்தமைக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

மற்றும் பல பெரியோர்கள், சான்றோர்கள், பாகவத உத்தமர்கள் அடியேனின் இத்தெய்வீகத் திருப்பணிக்குப் பலவகையில் உதவியுள்ளனர். அவர்களுக்கும் பணிவார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த சென்னை சேத்துப்பட்டு விஸ்வநாதன் பிரிண்டர்ஸ்'' அவர்களுக்கும், மேலாளர் திரு. இராஜேந்திரன் அவர்களுக்கும், நூலைப்பதிப்பித்த திருவேங்கடவன் பதிப்பகத்தார்க்கும்'' என் மனங்கனிந்த நன்றியைத்தெரிவிக்கின்றேன்.

இவண்,
அடியார்க்கடியேன்,
இரா. வ. கமலக்கண்ணன்.

## சுருக்கக் குறுக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அமி. | — | அருள்மிகு |
| அகக. | — | அகநானூறு. |
| ஆஇ. | — | ஆண்டு இல்லை. |
| இர. திரு. | — | இரண்டாம் திருவந்தாதி. |
| இரா. நூ. | — | இராமாநுச நூற்றந்தாதி. |
| கம்ப. அயோத். | — | கம்பராமாயணம்-அயோத்தியாகாண்டம் |
| குறுந். | — | குறுந்தொகை |
| சிலப். | — | சிலப்பதிகாரம் |
| திருவாய். | — | திருவாய்மொழி |
| திரு. விரு. | — | திருவிருத்தம். |
| திருச். விரு. | — | திருச்சந்த விருத்தம் |
| திரு. நெடுந். | — | திருநெடுந்தாண்டகம் |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நற். | — | நற்றிணை |
| நாச். திரு. | — | நாச்சியார் திருமொழி |
| நான். திரு. | — | நான். திருவந்தாதி. |
| ப. | — | பக்கம் |
| பக். | — | பக்கங்கள் |
| பதி. | — | பதிப்பாசிரியர் |
| பரி. | — | பரிபாடல் |
| பின்பழகிய. குரு. | — | பின்பழகிய ஜீயர் குருபரம்பரை |
| புறம். | — | புறநானூறு |
| பெரி. திரு. | — | பெரிய திருமொழி |
| பெரியா. திரு. | — | பெரியாழ்வார் திருமொழி |
| பெரு. திரு. | — | பெருமாள் திருமொழி |
| பெரும்பாண். | — | பெரும்பாணாற்றுப்படை |
| பொருள். | — | பொருளதிகாரம் |
| முத. திரு. | — | முதல் திருவந்தாதி |
| மூன். திரு. | — | மூன்றாம் திருவந்தாதி |
| மொழி. | — | மொழிபெயர்ப்பு |
| யாப். விருத்தி. | — | யாப்பருங்கல விருத்தி |
| வி. பா. | — | வில்லிபாரதம் |

# பொருளடக்கம்



| இயல் எண் | விவரம் | பக்க எண் |
|---|---|---|
| | காணிக்கை | V |
| | பதிப்பகத்தாரின் பணிவுரை | VII |
| | வாழ்த்துரை | IX—X |
| | அணிந்துரைகள் | XI—XIX |
| | நன்றியுரை | XX—XXI |
| | சுருக்கக் குறுக்க விளக்கம் | XXIII |
| | **பகுதி I** | |
| ஒன்று | முன்னுரை | 1—10 |
| இரண்டு | தொண்டை நாட்டின் பழைய வரலாறு | 11—28 |
| மூன்று | முதலாழ்வார்கள் காலத்தில் வைணவம் | 29—58 |
| நான்கு | திருமழிசை யாழ்வார் காலத்தில் வைணவம் | 59—94 |
| ஐந்து | ஏனைய ஆழ்வார்கள் காலத்தில் வைணவம் வைணவத் திருக்கோயில்கள் | 95—178 |
| | **பகுதி II** | |
| ஆறு | ஆசாரியர்கள் காலத்தில் வைணவம் | 179—260 |
| ஏழு | தற்காலத்தில் வைணவம் | 261—276 |
| எட்டு | கல்வெட்டில் தொண்டை நாட்டுத் திருப்பதிகள் | 276—294 |
| ஒன்பது | முடிவுரை | 295—298 |
| | துணை நூற்பட்டியல் | 299—305 |
| | பின் இணைப்புகள் | 307—348 |

# இயல் - ஒன்று

## முன்னுரை

1.0 ஆய்வுப்பொருள்

1.1 ஆய்வுச்சூழல்

1.2 கருநிலை

1.3 ஆழ்வார்கள் தோற்றுவித்த பக்தி இயக்கம்

1.4 தொண்டை நாட்டுக்கு மீண்டும் ஏற்றம்

1.5 ஆய்வுத்தலைப்பு

1.6 ஆய்வின் நோக்கம்

1.7 ஆய்வின் இன்றியமையாமை

1.8 ஆய்வின் எல்லை

1.9 ஆய்வு மூலங்கள்

1.10 ஆய்வு அணுகுமுறைகள்

1.11 ஆய்வேட்டின் அமைப்பு

# இயல் — ஒன்று

## முன்னுரை

1.0 **ஆய்வுப்பொருள்** : தொண்டை நாடும் வைணவமும் என்ற பொருளில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

1.1 **ஆய்வுச்சூழல்** : "உயர்வற உயர்நலம் உடையனாகிய"—திருமகளுடன் கூடிய திருமாலை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவ சமயமாகும். இச்சமயம் தமிழகத்தில் பண்டுதொட்டே நிலைத்திருந்தது என்பதை,

"மாயோன் மேய காடுறை உலகமும்"—என்ற தொல்காப்பிய நூற்பாவால்[1] அறியலாம். பெரும்பாணாற்றுப்படையில காஞ்சி மாநகரில் திருமால் பள்ளிகொண்டிருக்கும் திருக்கோயில் (வெஃகா) குறிப்பிடப்படுகிறது. இவ்வகையில் சங்க காலத்திற்கு முன்பிருந்தே வைணவ சமய வரலாறு இத்தொண்டைநாட்டில் தொடங்குகின்றது எனலாம்.

1.2 கருநிலை : (EMBRYO) குப்தப்பேரரசு கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஏற்பட்டது. குப்தர்கள் திருமாலின் பக்தராவர் ; அவர்களுடைய சின்னம் கருடன். சமுத்திரகுப்தன் வைணவன். இவன் மகன் இரண்டாம் சந்திரகுப்தன் (கி.பி. 376-414) நாடு முழுதும் இச்சமயம் பரவக் காரணமாயிருந்தான். இக்கால முதல் அரச குடும்பத்தினர் "பரமபாகவதன்"என்னும் பட்டப்பெயரைப் புனைந்தனர். சந்திரகுப்தன் வெளியிட்ட நாணயத்தில் திருமாலிடமிருந்து இவ்வரசன் ஒரு பரிசு பெறுவதுபோன்று பொறிக்கப்பட்டுள்ளது.

முற்காலப் பல்லவரும், கங்கமன்னரும், கதம்பரும் பாகவதராயிருந்தனர். பாண்டிய நாட்டில் வாசுதேவ வழிபாடு பழங்கால முதல் கலந்திருந்தது. அங்கு விருஷினி மக்களின் ஒரு பிரிவினர். குப்தர்கள் காலத்தில் தமிழகத்தில் தோன்றிய இலக்கியங்களில் பலதேவன், கண்ணன் வழிபாடு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

சமண, பௌத்த சமயங்கள் இலங்கை வரை பரவி இருந்தன. சமுத்திரகுப்தன் காஞ்சி விஷ்ணுகோபனைத் தோற்கடித்தான். ஒவ்வொரு போர் மற்றும் படையெடுப்புகளினாலும், பின்விளைவுகள் உண்டாவது இயற்கை. சங்க காலம்வரை தமிழகம் தன் தனித்தன்மையை, பண்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. களப்பிரர் இடையீட்டினால் அது சிதையத்தொடங்கியது. இதனால் இந்நிலத்தின் மற்ற பகுதிகளோடு உறவுகொள்ளத் தொடங்கியது. இவ்வுறவுகள் சமுத்திரகுப்தனின் காஞ்சிப்படையெடுப்பால் மேலும் வலிமை பெற்றது. இதன் விளைவாக வடஇந்தியாவில் ஏற்பட்ட வைதிக சமய மறுமலர்ச்சியின் தாக்கம் தமிழகத்தில் தொண்டைநாட்டில் ஏற்பட்டு. அதன் அலைகள் படிப்படியாகத் தமிழகம் முழுவதும் பரவின. இதனால் வைதிக சமயம் இந்தியா முழுவதும் (Pan-Indian)

இணைக்கலாயிற்று. இதன் விளைவாக அடுத்த காலகட்டத்தில் தமிழகத்தில் பக்தி இயக்கம் எழுச்சி பெற்றது.

1.3 **ஆழ்வார்கள் தோற்றுவித்த பக்தி இயக்கம்** : தமிழகத்தில் (தொண்டை நாட்டில்) முதலாழ்வார்கள் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தனர். சைவ சமயத்தைச் சார்ந்த காரைக்கால் அம்மையும், திருமூலரும் இக் காலகட்டத்தினர் ஆவர். விரைவில் அதன் தாக்கம் தென்கோடியில் உள்ள பாண்டிய நாடுவரை பரவியது. அங்கு வைணவ சமயத்தில் மிகச்சிறப்பாகக் கருதப்பெறும் நம்மாழ்வார், ஸ்ரீஆண்டாள், பெரியாழ்வார் முதலிய ஆழ்வார்கள் தோன்றி வைணவ சமயத்தை மேலும் செழுமையுறச் செய்தனர். இவை இரண்டும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. அக்கால கட்டத்தில் தமிழகத்தின் அரசியல் வடபகுதி பல்லவரிடமும், தென்பகுதி பாண்டியரிடமும் இருந்தன. இவ்விரு அரசுகளும் தளர்ச்சியடையத்தொடங்கிய ஓர் இறுதியான காலகட்டத்தில் சோழநாட்டில் திருப்பாணர், தொண்டரடிப்பொடி, திருமங்கை மன்னர் முதலியோர் தோன்றினர். பின்னர் இவ்விரு பேரரசுகளும் மறைந்து சோழப்பேரரசு தோன்றுகின்றது. முதல் முறையாகத் தமிழகம் முழுவதும் ஒருகுடைக்கீழ் வருகின்றது. இக்காலகட்டத்தில் வைணவத்தின் தலைமைப்பீடம் தொண்டை நாட்டிலிருந்தும், பாண்டிய நாட்டிலிருந்தும், சோழநாட்டிற்கு (திருவரங்கம்) மாறுகின்றது. இவ்வாறு பார்க்கும்போது, தமிழக அரசியல், சமுதாய வரலாறுகளோடு வைணவ, சைவ சமய வரலாறுகளும் பின்னிப் பிணைந்து இருப்பதை நாம் அறியமுடிகின்றது.

நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பௌத்த சமயங்களை எதிர்த்து மக்களைத் திரட்டக் கலைநயத்துடன் கூடிய ஆழ்வார்கள்-நாயன்மார்களின் பக்திப்பாடல்கள் பயன்பட்டன. சமண, பௌத்த சமயத்தோர் புலனடக்கம், உண்ணாநோன்பு, இன்பவெறுப்பு, ஆகியவற்றை மக்களிடை வற்புறுத்தி வந்தனர் ; துறவறம் போற்றப்பட்டது. ஆனால், ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தியைப் போற்றி அதற்கு இசைவான ஆடல், பாடல் முதலிய கலைகளைப் பாராட்டினர்; இல்லற வாழ்விலும் உள்ளத்தை இறைவனுக்கு உரியதாக வைத்து வாழ்வு நடத்தினால் போதும் என்றனர். பல்வகைக் கலைகளையும் வளர்க்கும் இடமாகக் கோயில்கள் ஓங்க அவர்களுடைய பக்தி இயக்கம் துணைசெய்தது. இவ்வியக்கம் மக்களிடம் பரவ, அவர்களுடைய தமிழ்ப்பாடல்கள் இசையோடு அமைந்து உதவின.

இவ்வாறு கி.பி. ஆறாம் நூற்றாண்டில் விதைத்த விதை பெரிய பக்தி இயக்கமாய் வளர்ந்து தமிழகம் முழுவதும் பரவியதோடு இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் மெல்ல மெல்லப் பரவியது. இதைப் பஷியபுராணமும் சிறப்பித்துக் கூறுகின்றது.[3]

பக்திப்பாடல்கள் விளைத்த புரட்சி ஒன்று. கடவுளுக்கு முன் மக்கள் அனைவரும் சமம்; கடவுள் ஒருவரே தலைவர். அரசரைப் பாடப் பயன்பட்ட தமிழ்,

கடவுளைப்பாட மட்டுமே பயன்படவேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. அரண்மனையைவிட ஆலயங்கள் உயர்ந்தன; அரசரை எழுப்பும் துயிலெடைநிலை, ஆலயத்தில் ஆண்டவனை எழுப்பும் திருப்பள்ளி எழுச்சியாயிற்று; அரண்மனை விழாக்கள் கோயில் விழாக்களாயின; மனிதரிடை உயர்வு, தாழ்வு, சாதி வேறுபாடுகள் ஒருவாறு புறக்கணிக்கப்பட இத்திருப்பம் பயன்பட்டது.[4]

1.4. **தொண்டை நாட்டுக்கு மீண்டும் ஏற்றம் :** ஆசாரியர்கள் காலத்தில் மீண்டும் தொண்டைநாடு வைணவ சமய மறுமலர்ச்சியில் உடையவர் காலம்முதல் தலைமை இடம் பெறுவதை உணர முடிகின்றது. சோழப் பேரரசின் சிதைவிற்குப்பின் மீண்டும் இரண்டாவது பாண்டியப் பேரரசு தலைதூக்குகிறது. எனவே, மீண்டும் பாண்டிய நாட்டினர் தலைதூக்குகின்றனர். விளாஞ்சோலைப்பிள்ளை, திருவாய்மொழிப் பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலியோர் இச்சமய வளர்ச்சியில் தொடர்ந்து பாடுபடுகின்றனர். வானமாமலை, மடம் ஏற்படுத்தப்படுகிறது. இந்நிலையிலும் மணவாள மாமுனிகளின் சீடர்களான 'அட்ட திக்கயங்களில்' - திருவேங்கட ஜீயர், பிரதிவாதி பயங்கரம் அண்ணா, எறும்பியப்பா முதலியோரும், தொட்டாசாரியார், தாதாசாரியார், அழகிய மணவாள ஜீயர், திருமலைநாராயணஜீயர், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர், புதுவை இராமாநுஜ நாவலர் முதலியோரும் இங்குத் தோன்றி இச்சமயத்தை வளர்த்தனர்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பதிப்பாசிரியர்களில் பெரும்பான்மையோர் இந்நாட்டினரே. வைணவ சபைகளும், பஜனை சபைகளும் பெரும்பாலும் இங்கு இருந்துகொடு வைணவ சமயத்தை இன்றும் வளர்த்து வருகின்றன. இவ்வாறு இந்நன்னாட்டில் முதலாழ்வார்கள் காலம் முதல் இன்றுவரை எண்ணெய் ஒழுக்குப்போல (தைலதாரை) வைணவ சமயம் வளர்ந்து வந்துள்ளது.

1.5 **ஆய்வுத்தலைப்பு :** இவ்வாறு எல்லாவகையிலும் பண்டு தொட்டு இன்றுவரை இச்சமயத்தை வளர்த்துவரும் பெருமை தொண்டை நாட்டிற்குரியதாகலின் தொண்டை நாடும் வைணவமும் என்பது நம் ஆய்வுப்பொருளாகவும், தலைப்பாகவும் அமைகின்றது.

1.6 **ஆய்வின் நோக்கம் :** இங்ஙனம் அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தின் வளர்ப்புப் பண்ணையாகத் திகழும் இந் நன்னாட்டில் தோன்றிய இச்சமயப் பெரியோர்களின் வரலாறுகளை இவர்கள் காலத்தில் ஆண்ட அரசர்களின் தெய்வத்திருப்பணிகளை, சமுதாயச் சூழல்களை ஆராய்வது பலவகையில் நலம் பயக்கும். இவர்கள் காலத் தமிழகத்தின்-தொண்டைநாட்டின் சமய, சமூக, அரசியல் வரலாறுகளைக் கண்டறிவதும், மதிப்பிடுவதும் ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. இத்தகு ஆய்வினால் பிறபகுதிகளில் ஏற்பட்ட வைணவ சமய வளர்ச்சி பற்றி மேலும் பல புதிய செய்திகள் கிடைக்கப்பெற்று, வைணவ சமயத் தமிழாய்வு செழுமையும் வளமும் ஆழமும் விரிவும் பெறக்கூடும்.

1.7 **ஆய்வின் இன்றியமையாமை :** ஆழ்வார்கள் பன்னிருவருள் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீஆண்டாள், பெரியாழ்வார், குலசேகராழ்வார் போன்றோரின் நூல்களும், வரலாறுகளும் பல அறிஞர்களால் இதுவரை ஒப்பீட்டு முறையிலும் வேறுபல முறைகளிலும் ஆராயப்பெற்றுள்ளன. ஆயின், முதலாழ்வார்கள், திருமழிசை ஆழ்வார் போன்றோரின் படைப்புகளும், வரலாறுகளும் முழுமையாக இதுவரை ஆராயப்பெறவில்லை. அவ்வாறே தொண்டைநாட்டில் வைணவ சமயம் வளர்ந்த விதமும் முறையாக ஆராயப்பெறவில்லை. அவ்வகையில் இவ்ஆய்வு இன்றைய நிலையில் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது.

1.8 **ஆய்வின் எல்லை :** சங்க காலம் தொடங்கி தற்காலம்வரை இத்தொண்டைநாட்டில் ஏற்பட்டுள்ள வைணவ சமய வளர்ச்சியும் ஆழ்வார்கள், ஆசாரியர்களின் தொண்டுகளும் பல்வேறு காலங்களில் இங்கு ஆட்சிபுரிந்த மன்னர்களின் திருப்பணிகளும் இங்கு ஆராயப்பெறும்.

1.9 **ஆய்வு மூலங்கள் :** சான்று ஆதாரங்கள் - முதன்மைச் சான்றாதாரங்கள், துணைமைச் சான்றாதாரங்கள் என இருவகைப்படும். முதலாழ்வார்கள் திருமழிசையாழ்வார், ஏனைய ஆழ்வார்கள் ஆகியோர் தம் பிரபந்தங்கள், குருபரம்பரை நூல்கள் ஆகியன முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன. உடையவர், தேசிகர் ஆகியோரின் நூல்களும், கல்வெட்டுச் செய்திகளும், இதுவரை இப்பொருள் பற்றி எழுதப்பெற்றுள்ள நூல்களும், கட்டுரைகளும், பிற ஆய்வேடுகளும் துணைமைச் சான்றுகளாக அமையும்.

1.10 **ஆய்வு அணுகுமுறைகள் :** இவ் ஆய்வில் மூன்று வகையான அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆழ்வார்கள் ஆசாரியர்களின் வரலாறுகள், அவர்தம் பிரபந்தங்கள், நூல்கள் ஆகியவை பற்றிக் கூறுமிடத்து விளக்கமுறை ஆய்வு இடம்பெறுகின்றது. கல்வெட்டுச் சான்றுகளைக் கூறுமிடத்தும் அரசர்களின் வரலாறுகள், திருப்பணிகளைக் கூறுமிடத்தும் வரலாற்றுமுறை இடம்பெறுகின்றது. சமூக, அரசியல் நிலைகளைக் கூறுமிடத்தும் இது இடம்பெறும். திவ்விய தேசங்களைப் பற்றிப் பாடியுள்ள ஆழ்வார்களின் பாசுரங்களை ஒப்பிட்டுக் கூறுமிடத்து ஒப்பீட்டுமுறை ஆய்வு இடம்பெறும். இவ்வாறு ஆய்வின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு அணுகுமுறைகளும் பலவாக அமைகின்றன.

1.11 **ஆய்வேட்டின் அமைப்பு :** இவ் ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக பின்வரும் ஏழு இயல்களைப்பெற்றிருக்கும். அவையாவன :

(1) தொண்டை நாட்டின் பழைய வரலாறு.

(2) முதலாழ்வார்கள் காலத்தில் வைணவம்.

(3) திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவம்.

(4) ஏனைய ஆழ்வார்களின் காலத்தில் வைணவம்.

(5) ஆசாரியர்கள் காலத்தில் வைணவம்.

(6) தற்காலத்தில் வைணவம்.

(7) கல்வெட்டுக்களால் அறியப்பெறும் வைணவ சமயச் செய்திகள்.

"முன்னுரையில்"—ஆய்வுப்பொருள், ஆய்வுச்சூழல், கருநிலை, ஆழ்வார்கள் தோற்றுவித்த பக்தி இயக்கம், ஆய்வுத்தலைப்பும், நோக்கமும், ஆய்வின் இன்றியமையாமை, ஆய்வின் எல்லை, ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வேட்டின் அமைப்பு — ஆகிய கருத்துகள் ஆய்வாளரால் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

"தொண்டை நாட்டின் பழைய வரலாறு"—என்பது இரண்டாம் இயலாகும். இந்நாட்டின் பழைய எல்லை வரையறை முதலில் குறிப்பிடப்படுகின்றது. அடுத்து, பத்துப்பாட்டில் குறிப்பிடப்பெறும் தொண்டைநாட்டு ஊர்கள் ஆராயப்படுகின்றன. அக்காலத்தில் தொண்டைநாட்டை ஆண்ட தொண்டையர், பல்லவர் ஆகியோரைப் பற்றிய செய்திகளும் இவ்வியலில் இடம்பெறுகின்றன. சிலப்பதிகாரம் குறிப்பிடும் திருமலைப் பெருமாள் பற்றிய செய்திகள் அடுத்து எடுத்துரைக்கப்படுகின்றன.

''முதலாழ்வார்கள் காலத்தில் வைணவம்'' — என்பது மூன்றாம் இயலாகும். இவ்வியலில் பக்தி இயக்கக் காலத்தின் முன்னோடிகளான முதலாழ்வார்களின் வரலாறு ஆராயப்படுகின்றது. அவர்களின் காலம் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. குரு பரம்பரைச் செய்திகள் சுருக்கமாகக் குறிக்கப்படுகின்றன. நச்சினார்க்கினியர், யாப்பருங்கலவிருத்தி உரைகாரர் குறிப்புகள் சுட்டப்படுகின்றன. களவழி நாற்பது பாடிய பொய்கையாரும், பொய்கையாழ்வாரும் வெவ்வேறானவர் என்ற முடிவு கூறப்படுகின்றது. இவர்கள் பாடியருளிய மூன்று திருவந்தாதிகளின் அமைப்பு, சிறப்புகள் ஆகியனவும் கூறப்படுகின்றன. பின்னர், இவர்கள் பாடியருளிய (மங்களா சாசனம் செய்த) திவ்விய தேசங்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. குறிப்பாகத் திருவேங்கடவனைப் பற்றிய இவர்தம் பாடல் கருத்துகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இயற்கை அழகில் இவர்கள் கொண்ட ஈடுபாடு சுட்டப்படுகின்றது. இறுதியாக இவர்தம் பாடல்களில் குறிப்பிடப்படும் "வைணவநெறி" இன்னதென்பதும், யாப்பும் அணியும் பற்றிய செய்திகளும் ஆராய்ந்துரைக்கப்படுகின்றன.

"திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவம்"—என்பது நான்காம் இயலாகும். இவ்வியலில் இவருடைய வரலாறு, காலம் ஆகியன எடுத்துரைக்கப்படுகின்றன. இவர்தம் பிரபந்தங்களாகிய திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகியவற்றின் அமைப்பும், சிறப்பும் ஆராய்ந்துரைக்கப்படுகின்றன. அடுத்து, இவர்தம் ஏற்றமும், "மறந்தும் புறந்தொழா"மாண்பும், வைணவ நெறியில் இவர் கொண்டிருந்த ஊற்றமும்

புலப்படுத்தப்படுகின்றன. அத்துடன் இவர் காலத்திய சமய, சமூகச் செய்திகளும் ஆராயப்படுகின்றன.

"ஏனைய ஆழ்வார்கள் காலத்தில் வைணவம்"—என்பது ஐந்தாம் இயலாகும். தொண்டரடிப்பொடியாழ்வார், திருவரங்கம் தவிர ஏனைய திவ்விய தேசங்களைப் பாடாதவர். மதுரகவியாழ்வார் "தேவு மற்றறியேன்"என்று நம்மாழ்வாரை மட்டுமே பாடியுள்ளார். இவ்விருவரைத் தவிர ஏனைய ஆழ்வார்கள் அறுவரும் பாடியருளிய தொண்டைநாட்டுத் திவ்விய தேசங்கள், அவர் தம் பாசுரக்கருத்துகள் முதலியன இங்கு ஆராயப்பெறுகின்றன. அவர்கள் காலத்தில் தொண்டை நாட்டையாண்ட பல்லவ மன்னர்களின் திருப்பணிகள் இங்கு ஆய்விற்கு உள்ளாகின்றன. அக்காலத்தில் வைணவ சமயநிலை, சமுதாயச் செய்திகள் ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன.

"ஆசாரியர்களின் காலத்தில் வைணவம்"—என்பது ஆறாம் இயலாகும். ஆழ்வார்களுக்குப்பின் தோன்றிய வைணவ சமயச் சான்றோர்கள் ஆசாரியர்கள் எனப்படுவர். இவர்களுள் முதன்மையானவர் சோழநாட்டில் வீரநாராயணபுரத்தில் வாழ்ந்த நாதமுனிகள் ஆவார். இவர்தம் பெயராகிய ஆளவந்தாருக்குப்பின் ஆசாரியராக அமைந்தவர் ஸ்ரீராமானுஜராவார். இவருடைய வரலாறு சுருக்கமாக இங்குக்குறிக்கப்படுகின்றது. இவர் வைணவ சமயத்தை நிலை நிறுத்த மேற்கொண்ட பெரும்பணிகள் இங்குச் சுட்டப்படுகின்றன. இவர் இயற்றிய நூல்களைப் பற்றிய குறிப்புகளும் இங்கு இடம்பெறுகின்றன. இவர்காலத்தில் காஞ்சி வரதராசர் ஆலயத்திற்கு ஏற்பட்ட பெருமையும், அதனால் விளைந்த வைணவ சமய மறுமலர்ச்சியும் பற்றி ஆராயப்படுகிறது. தமிழிலக்கியங்களில் வைணவ சமயச் சார்பானவை பற்றியும் இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

இவரும், இவருக்குப் பின்வந்த ஆசாரியர்களும் நம்மாழ்வாரின் பாசுரங்களின் அடிப்படையில் வைணவத் தத்துவங்களை எவ்வாறு உருவாக்கினார்கள் என்னும் செய்திகள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன. உடையவருக்குப்பின் வைணவநெறி, வடகலை-தென்கலை என இருபிரிவாக ஆனமை, அவ்விரு நெறிகளின் முதன்மையான ஆசாரியர்கள் இத்தொண்டை நாட்டில் தோன்றியமை ஆகிய செய்திகளும் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

வேதாந்த தேசிகரின் வரலாறு, அவர் இயற்றிய நூல்கள், மகமதியர் படையெடுப்பின்போது வைணவ சமயக்கோட்டையை அவர் பாதுகாத்தமை, திருவரங்கன் திருமலையில் எழுந்தருளியிருந்த செய்திகள் ஆகியனவும் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

மேலும், இக்காலத்தில் ஆட்சிசெய்த விஜயநகர மன்னர்களின் திருப்பணிகள் இங்கு ஆராயப்படுகின்றன. மணவாள மாமுனிகளின் முக்கிய சீடர்கள் எண்மரில் ஒருவரான பிரதிவாதி பயங்கரம் அண்ணன் அவர்களின்

தொண்டுகள் சுட்டப்படுகின்றன. மற்றொருவரான எறும்பியப்பாவைப் பற்றிய செய்திகளும் இடம்பெறுகின்றன. மேலும், கோடி கன்னிகாதானம் தாதாசாரியார், சோழசிம்மபுரம் தொட்டாசாரியார், ஆத்தான் ஜீயர், அழகிய மணவாள ஜீயர் ஆகியோர்தம் தொண்டுகளும் இங்கு மதிப்பிடப்படுகின்றன. ஆழ்வார்களின் பாடல்களைப் பெறாத சில திருக்கோயில்களைப் பற்றியும் இங்குச் சுருக்கமாக ஆராயப்படுகின்றது.

இவை தவிர அக்காலத்தில் ஆண்ட சிற்றரசர்களின் தொண்டுகள் திருப்பணிகள் ஆகியவையும், பிராம்மணர் அல்லாத ஆசாரிய புருடர்களைப் பற்றிய செய்திகளும் இறுதியில் சுட்டப்பெறுகின்றன.

"தற்காலத்தில் வைணவம்"—என்பது ஏழாம் இயலின் தலைப்பாகும். நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தைப் பதிப்பித்த சான்றோர் பலர் இங்கு வாழ்ந்தவராவர். அவர்களைப் பற்றிய செய்திகள் இங்கு இடம்பெறுகின்றன. இக்கால கட்டத்தில் தோன்றிய பிற இலக்கியங்களைப் பற்றிக் குறிக்கப்படுகின்றது. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார், அகோபில மடம் 44-ஆம் பட்ட ஜீயர் ஆகியோரின் பணிகள் மதிப்பிடப்படுகின்றன.

சென்னை, காஞ்சிபுரம், புதுவை, பண்ணுருட்டி, வந்தவாசி, தெள்ளாறு, பில்லாலி, சம்பாரெட்டிபாளையம் முதலிய நகர்களில் உள்ள வைணவ சபைகள் எவ்வாறு வைணவப் பயிரைத் தொடர்ந்து வளர்த்துவருகின்றன என்பது பற்றிய செய்திகள் இறுதியில் தொகுத்துக் கூறப்படுகின்றன.

"கல்வெட்டுகளால் அறியப்பெறும் வைணவ சமயச் செய்திகள்" - என்பது எட்டாம் இயலின் தலைப்பாகும். பல்வேறு அரசர்களின் காலங்களில் வெளியிடப்பெற்ற கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றின் துணைகொண்டு அவ்வக்காலங்களில் ஏற்பட்ட வைணவ சமயத்தின் ஏற்ற, இறக்கங்களைப் பற்றிய செய்திகள் இவ்வியலில் தொகுத்தளிக்கப்படுகின்றன. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - திருமால் திருக்கோயில்களில் ஓத ஏற்பாடு செய்யப்பெற்ற செய்திகள், அரசர்கள், குடிமக்கள் ஆகியோர் ஆலயங்களுக்கு வழங்கிய அறக்கொடைகள் முதலியனவும் இவ்வியலுள் ஆராயப்படுகின்றன.

இறுதியாக முடிவுரை அமைகின்றது. ஆய்வில் கண்டறிந்த உண்மைகள் இங்கு தொகுத்துச் சுட்டப்படுகின்றன. புதிய ஆய்வுக் களங்களை இனங்கண்டு ஆய்வாளர் கூறுகின்றார். அடுத்து துணைநூற்பட்டியல் இடம்பெறுகின்றது. பின்னிணைப்பில் முதலாழ்வார் பாடிய திருத்தலங்களின் பட்டியல், திருவல்லிக்கேணி கல்வெட்டு, திருமலை பற்றிய வரலாற்றுச் செய்திகள், உடையவர் எழுதிய ஸ்ரீபாஷ்ய விளக்கம், தேதிகர் நூல்கள் பற்றிய விவரம், வைகானச பாஞ்சாராத்திர ஆகம விளக்கங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா, 5, கழகப் பதிப்பு, சென்னை.
2. Dines, Chandra Sircar, "Early History of Vaishnavism", "The Cultural Heritage of India", Vol, IV, Haridas Bhattacharya (Ed.) The Ramakrishna Mission Institute of Culture, Vth Edn., Calcutta 1938, pp. 139-145.
3. "பக்திநெறி தமிழகத்தில் தோன்றி, மராட்டியத்தில் வளர்ந்து குஜராத்தில் மலர்ந்து, இராஜபுதனத்தில் இருளகற்றி, வங்கத்தில் வான்புகழ் கொண்டது" - பவிஷியபுராணம்.
4. மு. வரதராசன், "தமிழ் இலக்கிய வரலாறு", முதல் பதிப்பு, புதுதில்லி, 1972, பக். 123-126.

இயல்—இரண்டு

# தொண்டை நாட்டின் பழைய வரலாறு

2.0. முன்னுரை.

2.1. தொண்டை நாட்டின் எல்லை வரையறை.

2.2. தொண்டை நாட்டின் பழமையும் பெருமையும்.

2.2.1. தொண்டையர்.

2.3. பத்துப்பாட்டில் தொண்டை நாட்டுப் பகுதிகள்.

2.3.1. திருவெஃகா.

2.3.2. கச்சிமா நகரம்.

2.3.3. நன்னனது மலைநாடு.

2.4. தொண்டையரும் பல்லவரும்.

2.5. வடவேங்கடமும் தொண்டைமானும்

2.6. அகநானூற்றுப்பாடல், புறப்பொருள் வெண்பாமாலைப்பாடல் ஆகியவை தரும் செய்திகள்.

2.7. சிலப்பதிகாரமும் திருமலையும்.

2.8. ஆழ்வார் பாசுரங்களில் தொண்டைநாட்டுக் குறிப்புகள்.

2.8.1. திருஅட்டபுயகரம்.

2.8.2. திருஅத்தியூர்.

2.8.3. திருவல்லிக்கேணி.

2.8.4. திருஇடவெந்தை.

2.8.5. திருஊரகம்.

2.8.6. திருஎவ்வுள் (திருவள்ளூர்).

2.8.7. திருக்கடல்மல்லை.

2.8.8. திருக்கடிகை.

2.8.9. திருநீர்மலை.

2.8.10. திருப்பரமேச்சுர விண்ணகரம்.

2.8.11. திருவெஃகா.

2.8.12. திருவேங்கடம்.

2.8.13. திருவேளுக்கை.

2.9. நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதிகளில் தொண்டைநாட்டுத் தலங்களின் எண்ணிக்கை.

2.10. தொண்டைமண்டல சதகம்.

2.11. முடிவுரை.

# இயல்—இரண்டு

## தொண்டை நாட்டின் பழைய வரலாறு

2.0 **முன்னுரை** : “சான்றோருடைத்து தொண்டை நாடு” என்று போற்றப்பெறும் இந்நாட்டின் பழைய வரலாற்றைப் பற்றி இங்குச் சுருக்கமாக அறிவது நலம். வடவேங்கடம் முதல் தென்பெண்ணையாறு வரையுள்ள நிலப்பகுதி பண்டு தொண்டைநாடு என வழங்கப்பெற்றது. நெடுங்காலத்திற்கு முன் இது “குறும்பர் நிலம்” என்று பெயர் பெற்றிருந்தது. குறும்பர் தம் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு இங்குக்காலம் கழித்தனர் ; அவர்களே தங்கள் நாட்டை இருபத்துநான்கு கோட்டங்களாக வகுத்தனர் ; பூம்புகார் வணிகருடன் கடல் வாணிபம் செய்தனர். பிற்காலத்தில் “ ஆதொண்டைச் சக்கரவர்த்தி” என்பவன் இக் குறும்பரை வென்று, குறும்பர் நாட்டைக் கவர்ந்து, அதற்குத் தொண்டைமண்டலம் எனப் பெயரிட்டனன், என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது.[1] இதன் பழைய வரலாறு சுருக்கமாக இங்கு ஆராயப்படும்.

### 2.1 தொண்டை நாட்டின் எல்லை வரையறை :

இந்நாட்டின் நான்கெல்லைகளை,

“மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குப்-பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு”.

என்னும் பழைய வெண்பா கூறுகின்றது. இதன் மேற்கெல்லை பவளமலை; வடக்கில் திருமலை ; கிழக்கில் கடல் ; தெற்கெல்லை பெண்ணையாறு ; பரப்பளவு இருபது காதம் என்று இவ்வெண்பா கூறுகின்றது. இது இன்றுள்ள நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, சித்தூர், வடார்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், செங்கற்பட்டு, தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒய்மானாடு நீங்கலாகத் திண்டிவனம் வட்டத்தில் மேற்குப்பகுதி, விழுப்புரம் வட்டம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட நிலப்பகுதி ஆகும்.

இந்நாட்டின் தென்பகுதி “அருவா நாடு” என்று முற்காலத்தில் வழங்கப்பெற்றது. வடபகுதி “அருவாவடதலை நாடு” என வழங்கப்பெற்றது. இதனைப் பவத்திரி என்னும் நகரைத் தலைநகராகக்கொண்டு திரையன் என்பவன் ஆண்டுவந்தான்.

“செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி”[2]

எனப் புகழப்பட்ட பவத்திரி, சென்னைக்கு அருகில் உள்ள பழவேற்காடு எனும் பரந்த உப்பங்கழியின் இடைகளில் இடுங்கிய ஒரு திட்டாகி,

> "ராஜேந்திர சோழ மண்டலத்து, கடல் கொண்ட பவத்திரிக் கோட்டத்துக் காகந்தி"

என இவ்வூர் பாண்டரங்கேச்வரர் ஆலயத்து, முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுகளால் அறியப்படுகிறது[3]. தொண்டை நாட்டின் தென்பகுதியைக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு இளந்திரையன் என்பவன் ஆண்டுவந்தான். இம்மன்னர்கள் "திரையர்" என்றும், "தொண்டையர்" என்றும் பெயர் பெற்றிருந்தனர். மாமல்லபுரம் இதன் சிறந்த துறைமுகமாக விளங்கியது.

தமிழ்நாட்டின் பிரிவுகளையும், அவற்றின் சிறப்புக்களையும் கூறவந்த அவ்வையார்,

> "வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்து-பூழியர்கோன்
> தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
> நன்னாடு சான்றோர் உடைத்து"[4]

எனப்பாடுகின்றார். இந்நாடு வயல் வளங்களைக்கொண்டு விளங்கியதோடு நில்லாது, சான்றோர்களையும் கொண்டிருந்த காரணத்தால் இதை "நன்னாடு" எனக் குறிப்பிடுகிறார் அவ்வையார்.

2.2. **தொண்டை நாட்டின் பழமையும் பெருமையும் :** தொண்டைநாடு வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலத்திலேயே இருந்தது என்பது அகழ்வாராய்ச்சிகளால் புலப்படுகின்றது[5]. புதுக் கற்காலம், இரும்புக்காலம் ஆகியவற்றுக்கான சான்றுகளும் கிடைக்கின்றன[6]. இந்நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது முன்னரே கூறப்பட்டது[7]. பண்டு இந்நாட்டைக் குறும்பர் ஆண்டதால், ''குறும்ப பூமி'' என்று இப்பகுதி வழங்கப்பட்டது[8]. குறும்பர்கள் போரில் விருப்பம் உள்ளவர்கள் என்பதும், அக்காலதில் இருந்த அரசர்கள்கூட அவர்களைக் கண்டு அஞ்சினர் என்பதும் புறநானூற்றால் தெரியவருகிறது[9].

2.2.1 **தொண்டையர் :** ஆதொண்டைச் சக்கரவர்த்தி குறும்பரை வென்று தொண்டைமண்டலம் எனப் பெயரிட்டனர் என்று மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன.[10] கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் கரிகாற்சோழன் காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் என்பவன் சோழர் சார்பாக நின்று தொண்டை மண்டலத்தை ஆண்டுவந்தான்.[11] இளந்திரையன் சோழ அரசன் கிள்ளிவளவனின் (நெடுமுடிக்கிள்ளியின்) மகன் எனக் கருதப்பெறுகிறான். 'திரையன்' எனில் 'கடலைச் சேர்ந்தவன்' என்பது பொருள். சோழ மன்னன் புகாரின் கடலோரத்தில்

நாக கன்னிகை (பீலிவளை) ஒருத்தியைக் கண்டு கூட, ஒரு பிள்ளை பிறந்தது. அதைத் தொண்டைக்கொடிகளால் சுற்றி, கம்பளச்செட்டி என்பவன் மூலமாகக் கொடுத்தனுப்பினான். தொண்டைக்கொடி சூழ்ந்த தொண்டைமான் ஏற்படுத்திய நாடு 'தொண்டை மண்டலம்' ஆயிற்று. இக்கதை மணிமேகலையில் காணப்படுகிறது.[12]

தொண்டைமான் இளந்திரையனுக்குப்பிறகு சோழ இளவரசன் இளங்கிள்ளி தொண்டை மண்டலத்தை ஆண்டுவந்தான். சாதவாகனர் பேரரசில் தென்மாநிலத் தலைவராக இருந்தவரும் அவர் மரபினரும் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருவா வடதலை நாட்டை முதலில் கைப்பற்றினர். பிறகு சோழரின் வலியற்ற நிலையைக் கண்டதும் அருவா நாட்டையும் கைப்பற்றினர். இவர்களே பல்லவர்களாவர்.[13]

இலக்கிய அடிப்படையில் நாம் அறிவது இளந்திரையனின் சங்ககாலப் பாக்களே. இவன் பாடிய பாடல்களில் புறநானூற்றில் ஒன்றும் (185), நற்றிணையில் மூன்றும் (94.99.106) உள்ளன. இவன் காலத்தே மாமல்லபுரம் துறைமுகமாகவும், கச்சி என்ற காஞ்சிப்பதி மதில் சூழ்ந்த அரணுடைய கோநகரமாகவும் விளங்கியது. அடுத்த நூற்றாண்டில் இளங்கிள்ளி ஆட்சியில் பௌத்தமதம் ஓங்கியிருந்தது. சங்ககாலங்களில் விளங்கிய மரம், சுதை, செங்கல்லால் ஆன கோயில்களின் பாணியை மாற்றி, கல்லில் குடைந்த குடைவரைகள் இந்நாட்டில் அமைக்கப்பட்டன. மலையம்பட்டி, பனைமலை, காஞ்சி ஆகிய இடங்களில் மிகத்தொன்மையான ஓவியஙகள் உள்ளன. சைவமும் வைணவமும் இங்குத் தளிர்த்தன. பல்லவரும், பின்வந்த சோழரும் இங்குப் பல கோயில்களை அமைத்தனர். ஆதித்தன், இராசாதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், இராசேந்திரன் ஆகிய சோழமன்னர்கள் இறுதியை எதிர்கொண்டது இங்குத்தான்.

வடபுலத்தை ஒட்டியிருப்பதால் தொண்டைநாடு உத்தர திசையிலிருந்து போரிடவந்த பல மன்னர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த பெருமையுடையது. அத்துடன் அவர்கள் நம் கலாச்சாரங்களை மதித்துப் போற்றியதோடு அவர்கள் நாட்டிலும் இக்கலைகளைப் படரவிட்டனர்.[14]

2.3 **பத்துப்பாட்டில் தொண்டை நாட்டுப் பகுதிகள் :** 'இடைக்கழி நாடு' - என்பது செங்கை மாவட்டத்து மதுராந்தகம் வட்டத்தில் உப்பங்கழிக்கும், கடற்கரைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியாகும். அது இன்று 'எடக்கநாடு' என மருவியுள்ளது. இவ்வூரில் வாழ்ந்த நத்தத்தனார் என்னும் புலவர் பாடியதே சிறுபாணாற்றுப்படையாகும்.

பெரும்பாணாற்றுப்படையைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பவர். தொண்டைநாட்டின் உட்பகுதியிலிருந்தே புதிய

பாணனுக்குக் காஞ்சி செல்ல, பெரும்பாணன் வழி கூறியதாக இந்நூலில் குறிப்பிடப்பெற்றுள்ளது. அவன் மூன்று இடங்களைத் தெளிவாகக் கூறியுள்ளான்.

அவை :

1. நீர்ப்பெயற்று என்னுமிடத்தில் அமைந்த துறைமுகம்.
2. காஞ்சிக்கு முன்னுள்ள பள்ளிகொண்ட திருமால்கோயில்.
3. காஞ்சிமாநகரம்

என்பனவாகும்.

2.3.1 **திருவெஃகா :** "காஞ்சிக்கு அருகில் கதிரவன் ஒளிக்கதிர்கள் உட்புக இயலாத நெருக்கம் உடைய இளமரச்சோலைகள் உண்டு. அங்குப் பக்க மலையில்யானை கிடந்தாற்போல், பாம்பணையாகிய படுக்கையில் திருமால் பள்ளிகொண்டுள்ளனர். வழிப்போக்கரான பாணர் அத்திருமாலை வாழ்த்தி யாழைச் சிறிது வாசித்து அவ்விடத்தினின்று செல்வர்.[15]

இக்கோயிலைத் திருவெஃகா-என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். இது இன்றுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில் (யதோத்தகாரி) என்பர். இங்குத் திருமால் பள்ளிகொண்ட கோலத்தில் உள்ளார்.

'பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்'[16]

என்னும் பெரும்பாணாற்றுப்படை அடியை,

'பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய
வேந்தனைச் சென்று காண்டும் வெஃகாவுளே'[17]

என்னும் திருமங்கை மன்னரின் பாடல் அடிகள் ஒத்துள்ளமையை அறியலாம்.

இக்கோயிலுக்கருகில் 'வெஃகா' என்ற வேகவதியாறு பாய்ந்து கொண்டிருந்தது. அது இப்பொழுது சுமார் முக்கால் கி.மீ. தொலைவில் பாய்கின்றது. ஆற்றின் பெயர் அவ்வாறு பாய்ந்த இடத்தில் அமைந்த கோவிலுக்குப் பெயராகியது. வேகணை > வெஃகணை > வெஃகா. என மருவிற்று என்பர். இக்கோயில் பற்றிக் கீழ்வரும் புராண வரலாறு கூறப்படுகின்றது.

"பிரமன் இன்று திருவெஃகா. என்னும் கோயில் உள்ள இடத்துக்கருகில் தவம் செய்துகொண்டிருந்தான். அத் தவத்தைக் கெடுக்க விரும்பிய அவன் மனைவியான கலைமகள் வெஃகா என்னும் ஆற்று வடிவில் வந்து தோன்றினாள். அதைக்கண்டு கவலை கொண்ட பிரமன், அவ் வெள்ளத்தைத் தடுக்கும்படி திருமாலை வேண்டினான். திருமால் ஆடையற்ற கோலத்தில் அங்குத் தோன்றி, அணையைப்

போல் பள்ளிகொண்டார். தன் மாமனாரின் செயலைக்கண்ட கலைமகள் நாணி, தன் போக்கை மாற்றிக்கொண்டாள். அன்று திருமால் பள்ளிகொண்ட இடமே இன்று கோயிலாய் இருப்பது"[18] என்று காஞ்சித் தல வரலாற்றில் கூறப்பெறுள்ளது.

வெஃகா என்னும் பெயருக்குத் தலபுராணம் கூறும் விளக்கம் கற்பனைப் பாங்கில் அமைந்துள்ளது. வெஃகா என்பதனை வெவ்+கா எனப் பகுக்கலாம். விரும்பத்தக்க சோலை என்பது இதன் பொருளாகும். பண்டைத்தமிழ் மக்கள் காடுகளிலும் (சோலை) ஆற்றிடைக்குறைகளிலும் ஆற்றின் கரைகளிலும் குளக்கரைகளிலும் இறைவனுக்குக் கோவில் எழுப்பி வழிபாடு செய்தனர் என அறிகின்றோம். அம்மரபை நினைவூட்டும் வகையில் இறைவன் கோயில் கொண்ட திருப்பதிகளின் பெயர்கள் இன்றும் வழங்குகின்றன. திருவெண்காடு, சாய்க்காடு, திருமாலிருஞ்சோலை, திருவெள்ளக்குளம் முதலிய பெயர்களை ஒப்பிடுக. இவ் அடிப்படையில் வெஃகா என்பது சோலைகள் நிறைந்த இடம் எனப் பொருள்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படை அடிகளும் இத்திருப்பதியை சோலைகள் சூழ்ந்த இடமாகவே குறிப்பிடுகின்றது. ஆழ்வார் பாசுரங்களும் இதனை அரண் செய்கின்றன. எனவே, திருவெஃகா என்பது தூய தமிழ்ச் சொல் என்பதைத் தூய தமிழ்ச் சொல்லின் அடிப்படையில் விளக்குவதே பொருத்தமாகும்.

2.3.2 **கச்சிமாநகரம் :** கச்சிமாநகரம் தாமரை மலர் போன்ற அமைப்புடையது ; அதனைச் சுற்றிலும் அகழி இருந்தது ; அகழியைச் சூழக் காவற்காடு இருந்தது ; கச்சியில் சோலைகள் இருந்தன ; தேர்கள் பலகால் ஓடிக்குழித்த காட்சியையுடைய நெடிய தெருக்களும் வேறுபல தெருக்களும் இருந்தன. பண்டங்களை விற்கவும் வாங்கவும் அமைந்த பெரிய கடைத்தெரு இருந்தது ; வலிமையும் புகழும் மிகுந்த படைகள் இருந்தன ; பல சமயத்தாரும் தொழத்தக்க கோயில்கள் இருந்தன ; அவற்றில் விழாக்கள் பல நடைபெற்றன ; அந்நகரம் பழத்தின் இனிமையால் உயர்த்திச் சொல்லும் பலா மரத்தைப்போல, பல சமயத்தாரும் நடத்தும் விழாக்களால் உலகத்து நகரங்களுள் சிறந்து விளங்கிற்று ; அந்நகரிலிருந்த திரையனது அரண்மனை வாயில் பரிசிலர்க்கு அடையாதது.[19]

2.3.3 **நன்னனது மலைநாடு :** நவிர மலையில்[20] காரியுண்டிக் கடவுள் உள்ளார். அம்மலைத்தொடரின் தெற்கில் சேயாற்றின் தென்கரையில் 'செங்கண்மா' - என்னும் ஊர் உள்ளது. இங்கு உள்ள சிவன் கோயில் கல்வெட்டில் இவ்வூர் 'செங்கைமா' என்று குறிக்கப்படுகிறது.[21]

2.4 **தொண்டையரும் பல்லவரும் :** ஏறத்தாழக் கி.பி. 300-முதல் காஞ்சியிலிருந்து தொண்டை நாட்டை ஆளத்தொடங்கிய பல்லவருள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மகேந்திரவர்மனும், அவன் பின்னோரும் 'தொண்டையந்தார் வேந்தர்' எனக் கல்வெட்டிலும், நந்திக்கலம்பக நூலிலும் குறிக்கப்பட்டுள்ளனர். ஆதலால் அவர்களைத் 'தொண்டையர் மரபினர்' என்று வரலாற்றாசிரியர் சிலர் நம்பினர். பல்லவர்கள் பிராகிருத மொழியிலும்,

வடமொழியிலும் தங்கள் பட்டயங்களை முதலில் வெளியிட்டனர். வடமொழிப் புலவர்களையே அவர்கள் ஆதரித்தனர். பெரிய வடமொழிக் கல்லூரியைக் காஞ்சியில் நிறுவினர். பல நூற்றாண்டுகள்வரை பெண் கொடுக்கல் வாங்கல்களைத் தக்காணப்பகுதி மன்னரிடமே வைத்துக்கொண்டனர். இவையனைத்தும் அவர் தமிழராகார் என்பதை வலியுறுத்துவனவாகும். இங்கு வந்து ஆளத்தொடங்கிய மன்னரேனும் தமிழராய் மாறியிருக்கலாம். ஆனால், பல்லவர் இவற்றைப் பல நூற்றாண்டுகள்வரை செய்யவில்லை. அவர் திரையர் எனப்பட்ட தொண்டையர் மரபினராயின், அவரது 'ஆட்சியில் தொடர்ந்து தமிழன்றோ சிறப்புற்றிருக்கும் ? இவையனைத்தும் தொண்டையர் வேறு, அவர்க்குப் பிற்பட்ட பல்லவர் வேறு என்பதை நன்கு வலியுறுத்துவனவாகும்.[22]

2.5 **வடவேங்கடமும் தொண்டைமானும்** : தொண்டை நாட்டில் மிகப்பழைய காலத்தில் தொண்டைக்கொடி படர்ந்து சிறந்திருந்தது. அதனால், நாடாக்கப்பட்டபோது இப்பகுதி தொண்டைநாடு என்ற பெயர் பெற்றிருக்கவேண்டும். தொண்டைமாலையை இதையாண்ட மன்னரும் அணியத் தொடங்கினர். அவருக்குப்பின் ஆண்ட பல்லவரும் தொடர்ந்து தம் அடையாள மாலையாக அதனையே அணிந்துவந்தனர் எனலாம்.

பெரும்பாணாற்றுப்படையில் திரையன், 'தொண்டையோர் மருக !'[23] என்று விளிக்கப்பெற்றுள்ளான். அவ்வையார் காலத்துத் தொண்டைமான் ஒருவன் காஞ்சியில் வாழ்ந்தான் என்று புறநானூறு (95) புகல்கின்றது. தாயங்கண்ணார் என்ற புலவர்.

> 'வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
> இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
> ஓங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்'[24]

என்று தொண்டையரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கல்லாடனார் என்ற புலவர்.

> ..... .... ..... 'பொருவார்
> மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை
> வண்டேர்த் தொண்டையர் வழையமல் அடுக்கம்'

என்று தமது குறுந்தொகைப் பாடலில் தொண்டையரைப் பற்றிக் கூறியுள்ளார்.

'தொண்டையர் வழையமல் அடுக்கம் என்பது தொண்டையர்க்குரிய வேங்கடமலை' என்று உ.வே. சாமிநாதையர் கூறியுள்ளார்.[25] பெரும்பாணற்றுப்படை, தனது பாட்டுடைத் தலைவனை,

'பல்வேல் திரையன்' (அடி.37) என்றும்,

'தொண்டையோர் மருக ;-(அடி.454)

என்றும் கூறியுள்ளது. இவற்றால் திரையரும் தொண்டையரும் ஓரினத்தவரே என்பது தெளிவாகும். யாப்பருங்கல விருத்தி உரையில் உள்ள மூன்று செய்யுள்களும்[26] திரையர் எனப்பட்ட தொண்டைமான்களைக் குறிப்பவையாகும்.

திருமலையில் உள்ள வடவேங்கடவன் திருக்கோவிலைக் கட்டி விழாக்களை அமைத்தவன் தொண்டைமான் என்று அத்தலம் பற்றிப்பேசும் பண்டைய நூல்கள் பகர்கின்றன. கரிகாலன் காலத்திற்கு முன் இளந்திரையனுக்கு முற்பட்ட தொண்டைமான் திருமலையில் இருந்தவனாவான் என்று பலவாறு ஆய்ந்து முடிவுகட்டுகின்றார் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்.[27]

2.6 அகநானூற்றுப்பாடல் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல் ஆகியவை தரும் செய்திகள் :

..... ..... ..... .....
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ அரிதே—[28]

என அகநானூறு பாடுகின்றது. இவ்வடிகளில் "விழவுடை விழுச்சீர் வேங்கடம்"—என்னும் அடி திருமலையில் விழாக்கள் பல நடந்தன என்று தெரிவிக்கின்றது. இதனால் அங்குத் திருக்கோயில். இருந்தமை பற்றி ஊகித்துணரமுடிகிறது. திருமலை பற்றிய சமயச் சார்பான குறிப்பு, புறப்பொருள் வெண்பாமாலையிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றது. இவற்றையே முதலாகக் கூறப்பெறும் மிகப்பழைய குறிப்புகளாகக் கருதலாம். முதலில் ஐயனாரிதனார் வாக்கினைக் காண்போம்:

"வெறிகொள் அறையருவி வேஙகடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும் — பொறிகட்கு

இருளீயும் ஞாலத்து இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்"[29]

என்ற பாடலில் "வேங்கடம்" குறிப்பிடப்பெற்றிருப்பதுடன் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவாழியைத் தரித்துக்கொண்டிருக்கும் குறிப்பு, "ஆழியவன்" என்ற சொல்லால் சுட்டப்பெற்றிருத்தல் நோக்கத்தக்கது.

2.7 சிலப்பதிகாரமும் திருமலையும் :

திருமால் நின்ற கோலத்தில் திருவேங்கடத்தில் காட்சி தருவதை,

"வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை

விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடிஉடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்,
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி,
நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு,
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"[30]

என நம் மனக்கண் முன்னால் திருவேங்கடவனைக் கொண்டுவந்து நிறுத்துகிறார் இளங்கோ. இப்பகுதி இடைச்செருகல் என்பர் கோதண்டபாணிப்பிள்ளை.[31] ஆயின் இதற்குமுன் அமைந்துள்ள திருவரங்கனின் கோல வருணனையும், திருமலையப்பனின் கோல வருணனையும் ஆற்றொழுக்காக அமைந்துள்ளமையைக் கற்பார் நன்கறிவர்.

மேலும் திருமலையில் உள்ள பெருமாள் முருகன் எனவும், சிவபிரான் எனவும் பலர் பலவாறு கூறுவர். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர்,

"உலகீன்ற பச்சையுமை யணன்
வடவேங் கடத்தில் உறைபவன்
உயர் சார்ங்க சக்கர கரதலன்"—என்று

இபமாந்தர் சக்ரபதி என்ற தொடங்கும் திருப்புகழில் பாடியுள்ளார் என்பது மட்டும் இங்குக் கூறப்படுகிறது.

2.8 **ஆழ்வார் பாசுரங்களில் தொண்டை நாட்டுக் குறிப்புகள் :** மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பல திவ்வியதேசங்களுக்கும் சென்று, ஆங்காங்கு கோயில் கொண்டிருக்கும் திருமால் மூர்த்தங்களைப் பாடியருளியுள்ளனர். அவர்கள், தொண்டை நாட்டில் உள்ள திருத்தலங்களுக்குச் சென்று பாடிய பாசுரங்களில், தொண்டை நாட்டுக் குறிப்புகள் பல காணக்கிடக்கின்றன. அகர வரிசைப்படி அவை இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன.

2.8.1 **திரு அட்ட புயகரம் :**

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடிமாலை வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி அட்டபுயகரத்து ஆதி"[32]

2.8.2 **திரு அத்தியூர் :**

"கல்லார் மதில்சூழ் கச்சி நகர்"[33]
"கல்லுயர்ந்த நெடுமதில் சூழ்கச்சி"[34]

.... "புலிகேசியின் பெரும்படைக் கடலைக்கண்டு, காஞ்சி அரசன் காஞ்சிபுரக் கோட்டைக்குள் புகுந்துகொண்டான்"[35]. இவ்வரலாற்றுச்செய்தி ஆழ்வார் பாசுரத்தாலும் உறுதிப்படுகின்றது.

2.8 3 **திருவல்லிக்கேணி :**

"வந்துதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று"[36]

"மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமா ளிகையும்மண் டபமும்
தென்னன்தொண் டையர்கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக்கேணி"[37]

2.8.4 **திரு இட வெந்தை :**

"ஏரார் பொழில் சூழ் இடவெந்தை"[38]

2 8 5 **திரு ஊரகம் :**

"மதிள்கச்சி ஊரகம்"[39]

2.8. **திரு எவ்வுள் :**

"ஏலம் நாறும் பைம்புறவின் எவ்வுள்"[40]

2.8.7 **திருக்கடல் மல்லை :**

"கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனம்"[41]

"புலன்கொள் நிதிக்குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள் நவ மணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலன்கள் இயங் கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்"[42]

2.8.8 **திருக்கடிகை :**

"மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானை புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானை கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேனே"[43]
......."வண்டு

வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை"[44]

2.8.9 **திரு நீர்மலை :**

"சேடார் பொழில்சூழ் திருநீர் மலை"[45]

2.8.10 **திருப்பரமேச்சுர விண்ணகரம் :** இத்தலம் பற்றித் திருமங்கை மன்னர் பெரிய திமொழியில் பாடியுள்ள பத்துப் பாசுரங்களிலும்[46] பல வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. இவற்றைப் பற்றிப் பின்னர் தனியே கூறப்படும்.

2.8.11 **திருவெஃகா :**

........"ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்"[47]

2.8.12 **திருவேங்கடம் :** இத்திருத்தலம், பிற்கால நூற்றெட்டுத் திவ்விய தேசஅமைப்பில், வடநாட்டுத் திவ்விய தேசங்களுள் முதலாவதாகச் சேர்க்கப்பெற்றது. எனினும், பண்டு இஃது தொண்டை நாட்டில் இருந்ததென்பது அனைவரும் அறிந்ததே.

"கடியார் பொழிலணி வேங்கடம்"[48]
"குளிரருவி வேங்கடம்"[49]
"செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந் தெழுந்துவிண் புடைக்கும் வேங்கடம்"[50]
"கானவர்இடு காரகிற்புகை யோங்கு வேங்கடம்"[51]
"கவரி மாக்கணம் சேரும் வேங்கடம்"[52]
"தொல்லை வேங்கடம்"[53]

இங்ஙனம் ஆழ்வார் பாசுரங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் திருமலையின் இயற்கை எழில் விதந்து கூறப்பட்டுள்ளது.

2.8.13 **திருவேளுக்கை :**

"......மாமாட வேளுக்கை"[54]

2.9 **நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதிகளில் தொண்டைநாட்டுத் தலங்களின் எண்ணிக்கை :** "நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை"—என்னும் நூல் "அமுதனார்" என்பவரால் இயற்றப்பெற்றது. இதுவே வைணவ சமயத் தொடர்புடைய நூற்றெட்டுத் திருத்தலங்களை வகுத்துக்கூறும் நூல்களுள் முதலாவதாகத் தோன்றியது. அமுதனார் தொண்டைநாட்டுத் திருப்பதிகள் இருபத்தொன்று என்று கூறுகின்றார். இதில்பவள வண்ணம் என்னும் திருப்பதி இல்லை. மேலும், திருவயிந்திரபுரம், திருக்கோவலூர் ஆகிய நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டையும் தொண்டைநாட்டுத் திருப்பதிகளுடன் சேர்த்துக் கூறியுள்ளார்.

— — — — —
"பொறுக்கும் புகழ்த் தொண்டை நாட்டில்-எறிக்கும்
அயிந்திரபுரம் கோவலூர் அம்பொன்மதிட் கச்சி
வியன்றிரு அத்தியூர் வெஃகா -குயின்ற
பரமேச விண்ணகரம் பாடகம் மாடத்
திரண்மேய சீர்த்திருத் தண்கா -உரன்மேய
நீரகம் வேளுக்கை நிலாத்திங்கள் துண்டம்சொற்
காரகம் கார்வானம் கள்வனூர்-ஊரகமே
மட்டவிழுஞ் சோலைசூழ் எவ்வுள்மறை பயிலும்
அட்ட புயகரமா மாநிநகர் —சிட்டர் தொழ
நின்றவூர் புட்குழி நீடுதிரு நீர்மலை
என்று மழகார் இடவெந்தை —துன்று
கடன்மல்லை யம்பொற் கடிகைச் சிலம்பு
திடமாந் திருவல்லிக்கேணி."[55]

"நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி"—என்னும் நூல் பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் பாடிய அட்டப்பிரபந்தங்களுள் ஒன்றாகும். அடியார்கள் நூற்றெட்டுத் திருப்பதிகளையும், அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களையும் பாடித்துதித்துப் பெரும்பயன் பெறுவதற்காகவே இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூலின்படி தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு என அறியலாம்.

"ஈரிருப தாம்சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலைநா டோரிரண்டாம்—சீர்நடுநா
டாறோ டீரெட்டு தொண்டை அவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்"[56]

இவற்றிலிருந்து வைணவ சமய வளர்ச்சியின் வரலாறுகளையும் நாட்டு வரலாறுகளையும் ஒட்டி, திருப்பதிகளின் எண்ணிக்கை கூடியும் குறைந்தும் வருவதை உணரமுடிகின்றது.

2.10 **தொண்டைமண்டல சதகம் :** கி. பி. 17—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப்புலவர் என்பவரால் பாடப்பெற்றது இந்நூல். கட்டளைக் கலித்துறையால் அமைந்த நூற்றிஒரு பாடல்களைக் கொண்டது இந்நூல். இந்நூலில் இம்மண்டலத்தின் எல்லை, இங்குள்ள சிறந்த தலங்கள் ஆகியன குறிப்பிடப்பெறுகின்றன. இங்கிருந்த புலவர்களும், அடியார்களும் வள்ளல்களும் இந்நூலில் குறிக்கப்பெறுகின்றனர்.

"வையம் பெறினும் பொய்சொல்லமாட்டார் தொண்டை நாட்டாரே" என்று குறிப்பிடுகிறார். காஞ்சி, குன்றத்தூர், பொன்விளைந்த களத்தூர், மயிலை, சென்னை, செஞ்சி, வேலூர், மாமல்லை ஆகிய ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. இங்குள்ள சைவத் திருத்தலங்கள் முப்பத்திரண்டு எனவும், வைணவத்திருத்தலங்கள் இருபத்திரண்டு எனவும், இந்நூலில் குறிப்பிடப்படுகின்றது. உடையவர் அவதாரம் குறிக்கப்படுகின்றது. கரிகாலனுக்குப்பின் வெள்வேற்கிள்ளி என்னும் சோழன் மகனான தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டான் என்றும் இந்நூல் குறிப்பிடுகிறது.

எம்பார் திருமலையில் பாம்பின்வாயில் கைவிட்டு, அங்கு தைத்திருந்த முள்ளைப்பிடுங்கிய அருள்திறத்தை ஒரு பாடலில் பாடுகின்றார்.

> "தாயினும் நல்லதயை யுடையோர்கள் தமதுடலம்
> வீயினும் செய்கை விடுவர்கொல்லோ தங்கள்மெய்ம்முழுவதும்
> தீயினும் வீழ்வர் முதுகினும் சோறிட்டுச் சீறரவின்
> வாயினும் கையிடுவாரவர் காண் தொண்டை மண்டலமே".[57]

கணிகண்ணன் பின் திருமால் சென்ற சிறப்பை, மற்றொரு பாடலில் குறிப்பிடுகிறார்.

> "பின்போர் தமைக்கண்டு பாவித்ததோ அன்றிப் பின்புவந்தோர்
> தன்போல் நடக்கப் பணிப்பித்ததோ தமிழ்க்கே யிரங்கி
> முன்போம் புலவற்குப் பின்போயினானு முகுந்தனிது
> வன்போ மனத்தினி லன்போ சொல்வீர் தொண்டை மண்டலமே"[58]

2.11 **முடிவுரை :** இதுவரை இவ்வியலில் தொண்டை நாட்டின் வரையறையும், அதன் பழம்பெருமையும் சுட்டப்பட்டன. தொண்டையரும், பல்லவரும் வெவ்வேறானவர் என்பதையும் ஆய்ந்து உணரப்பட்டது. வடவேங்கடத்திற்கும் தொண்டைமானுக்கும் உள்ள தொடர்புகள் கூறப்பட்டன. அகநானூறும், புறப்பொருள் வெண்பாமாலையும், சிலப்பதிகாரமும் கூறும் திருமலை பற்றிய செய்திகள் அடுத்து இடம்பெற்றன. அடுத்து ஆழ்வார் பாசுரங்களில் உள்ள தொண்டைநாட்டுக்குக் குறிப்புகள் தொகுத்து அறியப்பட்டன. தொண்டைநாட்டுத் தலங்களின் எண்ணிக்கை பற்றிய வேறுபட்ட கருத்துகள் ஆய்ந்தறியப்பட்டன.

இறுதியில் தொண்டை மண்டல சதகம் கூறும் வைணவ சமயம் தொடர்பான சில செய்திகள் கூறப்பட்டன. இவற்றிலிருந்து தொண்டைநாடு தொடக்க நிலையிலிருந்தே வைணவ சமயத்தின் நாற்றங்காலாக இருந்ததை நாம் தெளிவாக உணரமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை, "பல்லவர் வரலாறு", ஐந்தாம் பதிப்பு, (சென்னை 1964), ப. 4.
2. அகம். 340.
3. Nellore Inscriptions, Vol. I., No. 86.
4. தனிப்பாடல்.
5. Robert Bruce Foote, 'The Foote Collection of Indian Perhistoric and Proto-historic Antiquities' (Madras, 1914).
6. C. S. Srinivachari, 'History of the city of Madras', (Madras, 1939).
7. 24 கோட்டங்கள் : (பல்லவர்க்கு முன்னரே இப்பிரிவு)

| | | | |
|---|---|---|---|
| 1. | புழல் கோட்டம். | 2. | ஈக்காட்டுக் கோட்டம். |
| 3. | மணவிற் கோட்டம். | 4. | செங்காட்டுக் கோட்டம். |
| 5. | பையூர்க்கோட்டம். | 6. | எயில் கோட்டம். |
| 7. | தாமல் கோட்டம். | 8. | ஊற்றுக்காட்டுக்கோட்டம் |
| 9. | களத்தூர்க்கோட்டம். | 10. | செம்பூர்க்கோட்டம். |
| 11. | ஆம்பூர்கோட்டம். | 12. | வெண்குன்றக்கோட்டம். |
| 13. | பல்குன்றக்கோட்டம் | 14. | இலங்காட்டுக் கோட்டம் |
| 15. | கலியூர்கோட்டம் | 16. | செங்கரைக்கோட்டம். |
| 17. | படுவூர்க்கோட்டம் | 18. | கடிகூர்க்கோட்டம் |
| 19. | செந்திருக்கைக்கோட்டம் | 20. | குன்றவட்டான கோட்டம் |
| 21. | வேங்கடக்கோட்டம் | 22. | வேலூர்க்கோட்டம் |
| 23. | சேத்தூர்க்கோட்டம் | 24. | புலியூர்க்கோட்டம் |

8. "தொண்டைமான் சக்கரவர்த்தியின் வரலாறு", அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, எண். D. 3822.
9. புறம். பாடல். 97, 117.
10. "ஆதொண்டை சக்கரவர்த்தி வரலாறு", அ. கீ. சு. நூ. எண். 3827.

11. மா. இராசமாணிக்கம் பிள்ளை, "பல்லவ வரலாறு". ப. 31.

12. மணிமேகலை, வரி. 172.

13. மா. இராசமாணிக்கம் பிள்ளை, "பல்லவர் வரலாறு", ப. 31.

14. மேலது., ப. 183.

15. பெரும்பாண்—அடி. 373—392.

16. மேலது., ப. 373.

17. பெரி. திரு. 10 : 1:7.

18. மா. இராசமாணிக்கம் பிள்ளை, "பத்துப்பாட்டு ஆராய்ச்சி"முதல் பதிப்பு, (சென்னை) காஞ்சிபுரம் ஆலயங்கள், ப. 7.

அடிக்குறிப்பு: A Manual of Chingleput District, p. 113.

19. மேலது., பக். 135—136.

20. மேலது., பக். 136—150.

21. S.I.I., VII. 177. (இன்று இவ்வூர் செங்கம் என மருவி வழங்குகின்றது.)

22. R. Goplan, "*Pallavas of Kanchi*"., pp. 23, 24 & Dr. C. Meenakshi, "Administration and Social Life under the Pallavas" pp. 12—13.

23. பெரும்பாண். அடி. 454.

24. அகம். 213.

25. குறுந். 260.

26. யாப். விருத்தி. பக். 45, 181, 350.

27. S. Krishnasamy Ayyangar, "*History of Tirupathi*", Vol. I. pp. 34—44.

28 அகம். 61.

29. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், புலவராற்றுப்படை, 43.

30. சிலப். 11:45—51.

31. இவ்விவாதம் பற்றிய விவான செய்திகளை, மு. இராகவையங்கார் எழுதிய "ஆராய்சித் தொகுதி" — இருபதாம் கட்டுரையிலும், ந. சுப்புரெட்டியார் எழுதிய, "திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்" என்னும் நூலில் பக்கம் 67—83 முடியவும் காணலாம்.

32. பெரி. திரு. 2 : 8 : 10

33. மேலது., 6 : 10 : 4
34. திருநெடுந். 15.
35. மா. இராசமாணிக்கம் பிள்ளை, "பல்லவர் வரலாறு", பக். 91.
36. மூன். திரு. 16.
37. பெரி. திரு. 2 : 3 : 10
38. சிறிய திருமடல். 71.
39. மேலது., அடி. 70
40. பெரி. திரு. 2 : 2 : 5
41. மேலது., 2 : 5 : 5
42. மேலது., 2 : 6 : 6
43. மேலது., 8 : 9 : 4
44. மூன். திரு. 61.
45. பெரி. திரு. 6 : 8 : 4
46. மேலது., 2-ஆம், பத்து 9-ஆம் திருமொழி
47. திருநெடுந். 8
48. பெரியா. திரு. 6:8:4
49. நாச். திரு. 8:3
50. திருச். விருத். 60.
51. பெரி. திரு. 2 : 1 : 1
52. மேலது., 2 : 1 : 6
53. திருவிருத்தம். 81.
54. மூன். திரு. 62.
55, 56. கி. வேங்கடசாமி ரெட்டியார் (பதிப்), நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1981, பின்இணைப்பிலிருந்து.
57. தொண்டை மண்டல சதகம் 14
58. மேலது., பாடல் எண் 29.

## இயல் - மூன்று

# முதலாழ்வார்கள் காலத்தில் வைணவம்


3.0 முன்னுரை

3.1 திருக்கோவலூரில் சந்திப்பு

3.2 காலம்

3.3 களவழி நாற்பது பாடிய பொய்கையாரும், பொய்கையாழ்வாரும்

3.4 முதலாழ்வார் பாடிய திருத்தலங்கள்

3.5 முதலாழ்வார் பற்றிய பிற்பட்ட ஆழ்வார்களின் குறிப்புகள்

3.6 முதலாழ்வார் பாசுரங்களில் அகச்சான்றுகள்

3.7 முதலாழ்வார்களும் திருவேங்கடமும்

3.7.1 திருமலையின் இயற்கைக் காட்சிகள்

3.7.2 திருமலையப்பனின் பெருமை

3.7.3 பூதத்தாழ்வாரின் அனுபவங்கள்

3.7.4 பூதத்தார் காட்டும் இயற்கைக் காட்சிகள் (திருமலையில்)

3.8 பேயாழ்வார் காணும் திருமலை

3.9 பேயாழ்வார் காட்டும் குறிஞ்சிநில மக்களின் செயல்கள்

3.9.1 யானைக்காட்சி

3.9.2 குரங்குகளின் செயல்கள்

3.9.3 திருமலையின் உயர்வு

3.10 முதலாழ்வார் பாடல்களில் வைணவ நெறி

3.10.1 ஆன்மா இறைவனை அடையும் வழிகள்

3.10.2 யாப்பும் அணியும்

3.11 முடிவுரை

## இயல் - மூன்று

## முதலாழ்வார்கள் காலத்தில் வைணவம்

3.0 முன்னுரை : முதல் இயலில் தொண்டை நாடு பற்றிக் கூறப்பட்டது. இவ்வியலிலிருந்து இவ் ஆய்வின் அடிப்படைப் பொருளான வைணவம் தொடர்பான பொருள்களை ஆராயவிருக்கின்றோம். இவ் இரண்டாம் இயலில் முதலாழ்வார்கள் காலத்தில் நிலவிய வைணவ சமயம் பற்றி ஆராய்கின்றோம்.

"ஆழ்வார்" என்ற சொல்லின் பொருள் குறித்து நாம் முதலில் எண்ணுவோம். இன்று இச்சொல் வைணவ சமயத்தோடு தொடர்புடைய, திருமாலைப் பற்றி பாடிப் பரவிய பன்னிரு அடியார்களைக் குறிக்கின்றது. ஆழ் என்னும் வினையடியாகப் பிறந்த ஆழ்வார் என்னும் சொல்லுக்கு "பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்" என்று சென்னைத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றது. திருமால் அடியார்களுக்கு மட்டுமன்றி சமண, பௌத்தப் பெரியோர்களும் அவிரோதியாழ்வார், மைத்திரியாழ்வார் என அழைக்கப்பெற்றுள்ளனர். இறைவனையும் ஆழ்வார் என்று குறிப்பிடும் வழக்கினையும் கல்வெட்டுகளிலிருந்து அறிகின்றோம். ஆழ்வார் திருவரங்க தேவர் என்று கல்வெட்டுக் குறிக்கின்றது.[1]

அரசர்களும் அரசியல் தலைவர்களும் அரசியரும் ஆழ்வார் என அழைக்கப்பெற்றிருந்தமையை வரலாற்றிலிருந்து அறிகின்றோம். "ஆழ்வார் பராந்தகன் குந்தவைப் பிராட்டியார்", "கருணாகரனாரான தொண்டைமானார் தேவியர் அழகிய மணவாளினியுடையாழ்வார்", எனவரும் கல்வெட்டுத் தொடர்களைக் கொண்டு இதனை அறியலாம்.

இதன் மற்றொரு வடிவமான ஆள்வார் என்ற சொல்லும் நமக்குக் கிடைக்கின்றது. இச்சொல் "ஆள்" என்னும் வினையடியில் பிறந்த சொல்லாகும். இச்சொல்லும் இறைவனைக் குறிக்கின்றது. திருத்தீக்காலி ஆள்வார் கூத்தப் பெருமாள் அடிகளுக்கு என வரும் கல்வெட்டுத் தொடரிலிருந்து இதனை நாம் அறிகின்றோம்.[2]

எனவே இச்சொல் ஆள், ஆழ் என்னும் இரண்டு சொற்களின் மாற்று வடிவம் போல் தோன்றுகின்றது. பேச்சுத்தமிழில் ழகரம் ளகரமாகத் திரிவதைக் காண்கின்றோம். இதற்கு எதிரான போக்கும் இருந்திருக்கின்றது. கேள்வி என்னும் சொல் சில இடங்களில் கேழ்வி எனவும் வருகின்றது. இஃது ஓர் அருகிய வழக்கு எனினும் இலக்கியத்தில் நிலைபேறு பெற்றிருக்கின்றது. ஆள் என்னும் வினையடியில் பிறந்து ஆள்வோரான அரசரையும் அரசியல் அதிகாரிகளையும்

அரச குடும்பத்தின் பெண்டிரையும் குறித்த "ஆள்வார்" என்னும் சொல் பக்தி இயக்கம் வலிமை பெற்ற காலத்தில் தலைமை பெற்ற இறைவன் அடியார்களுக்கும் ஏற்றப்பட்டு, ஆழ்வார் என உறழ்ந்து வழங்கி, நிலைபேறு பெற்றது எனலாம்.

"ஆழ்வார்கள்" என்னும் சொல்லுக்குப் பூர்வாசிரியர்கள், "எம்பெருமானுடைய மங்கல குணங்களில் ஆழங்கால்படுபவர்கள்" என்று கூறியருளினார்கள். எம்பெருமானுடைய குணங்களில் ஆழங்கால்படும் அறிவாவது, வேதத்தாலும் அளவிட்டறிய இயலாத "அவனது" எல்லாக் குணங்களையும் அவனருளால் அறிந்து அனுபவிக்கும் ஞானமாகும். அவர்களுடைய அவதார வைப்புமுறை பின்வருமாறு :

"பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யபட்ட
நாதன்அன் பர்தாள் தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர்தோற் றத்தடைவாம் இங்கு"

என்பது மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் அருளிய பாடலாகும்.[3] இவர்களுள் மற்றைய ஆழ்வார்களுக்கு முன்னே இப்புவியில் அவதரித்து முதன்முதலாகத் "திராவிட வேதம்" என்று சிறப்பித்துக் கூறப்பெறும் நாலாயிரதிவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் இயற்பா பிரிவில் உள்ள முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி மூன்றாம் திருவந்தாதிகளைப் பாடியருளியோர் முதலாழ்வார்களாவர்.

இவர்களுள் பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்தில் உள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலருகில் உள்ள திருக்குளத்தில் தாமரை மலரில், ஐப்பசி மாதம் திருவோண நன்னாளன்று திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றான "பாஞ்சசன்யம்" என்னும் திருச்சங்கின் அமிசராய் அவதரித்தார் எனவும், மறுநாள் அவிட்ட நன்னாளில் திருக்கடன் மல்லையில் உள்ள திருக்குளத்தில்[4] மாதவிப்பூவில் "கௌமோதகி" என்னும் கதாயுத அமிசராய் பூதத்தாழ்வார் அவதரித்தார் எனவும், அதற்கு அடுத்த சதய நன்னாளில் மயிலாப்பூர் ஆதிகேசவப்பெருமாளுக்குரிய திருக்கிணற்றில்[5] "செவ்வல்லி மலரில்" "நந்தகம்" என்னும் வாளின் அமிசராய் பேயாழ்வார் அவதரித்தார் எனவும் குருபரம்பரை நூல்கள் கூறும். இவர்கள் கி.மு. 4303-இல் தோன்றினர் எனவும் குருபரம்பரைகள் கூறும். இச்செய்திகளையெல்லாம் இக்கால ஆய்வாளர் ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வியலில் இவர்களுடைய வரலாற்றையும், இவர்களுடைய பிரபந்தங்களையும், இவர்கள் பிற திருத்தலங்களைக் காட்டிலும் திருமலையப்பன் மீது பாடிய பாடலின் கருத்துகளையும் தொகுத்து ஆராயப்படும்.

3.1 **திருக்கோவலூரில் சந்திப்பு :** இம்மூவரும் தனித்தனியே ஒடித்திரியும் யோகியராக ஒருவரையொருவர் அறியாமல் வாழ்ந்து வந்தனர். இவர்களை ஒன்றுசேர்த்து உலக மக்களுக்கு உதவ எண்ணிய எம்பெருமான் திருக்கோவலூரிலே இடைகழியிலே மழைக்கு ஒதுங்கவேண்டிய நிலையில் ஒன்று கூட்டினான். அந்நிலையில் நெருக்கத்தை உண்டாக்குகின்றான். அதை உணரவேண்டி இம்மூவரும், "வெய்ய கதிரோன் சுடர் விளக்கேற்றியும்", "ஞானச்சுடர் விளக்கேற்றியும்", "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று நெஞ்சமென்னும் உட்கண்ணாலே எம்பெருமானைக் கண்டார்கள். கண்டு அனுபவித்தது உள்ளடங்காமையால் "வையந்தகளியா" - என்று தொடங்கி முதல் திருவந்தாதியைப் பொய்கை ஆழ்வாரும், "அன்பே தகளியா" - என்று தொடங்கி இரண்டாம் திருவந்தாதியைப் பூதத்தாழ்வாரும், "திருக்கண்டேன்" - என்று தொடங்கி மூன்றாம் திருவந்தாதியைப் பேயாழ்வாரும் அருளிச்செய்து உலகை உய்வித்தார்கள். பின்னர் இவர்கள் திருவல்லிக்கேணியில் யோகத்தில் எழுந்தருளியிருந்த திருமழிசையாழ்வாரைச் சந்தித்து அளவளாவினர் என்று குரு பரம்பரைகள் யாவும் கூறும்.[6]

3.2 **காலம் :** குரு பரம்பரைகள் கூறும் கால எல்லை ஒப்புக்கொள்ளக் கூடியதன்று என்பதை அனைவரும் நன்கறிவர். இவர்கள் சங்க காலத்தினர் அல்லர். அதற்கு அடுத்த கால கட்டத்தில் இவர்கள் வாழ்ந்தவராவர் என்பதைப் பின்வரும் கருத்துகள் உறுதி செய்யும்.

முதலாழ்வார்கள் பாடிய முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளில் வடசொல் ஆட்சி மிக மிகக்குறைவு. பத்துப் பத்துப் பாக்களைக்கொண்ட பதிகமாய், பெரும்பாலும் ஏதேனும் ஒரு திருப்பதியின் மேல் பாடப்பெறும் பிற்கால வழக்குப்படி, இவர்கள் பாடவில்லை. மாறாக, முற்ற முழுக்கப் பொதுவகையினவாய், நூறு நூறு பாக்களைக்கொண்டு, "கார் நாற்பது", "களவழி நாற்பது" என்பன போன்று தனி நூல்களாய் மூன்று பிரபந்தங்களும் அமைந்திருத்தலுமே அவற்றின் பழமைக்குச் சான்றாகும்.

பல்லவர் காலப் பெருந்தேவனாரின் (கி. பி. 9) பாரத வெண்பா, நளவெண்பா (கி. பி. 13) என்பவற்றைப்போல், வெவ்வேறு காலங்களில் வெண்பா நூல்கள் பிற்காலத்தும் இயற்றப்பட்டிருந்தாலும், சமகாலத்தினராகக் கூறப்பெறும் மூவரின் திருவந்தாதிகளுமே வெண்பாவினவாய் உள்ளமை, வெண்பா பெருவழக்கிற்றாய் இருந்த காலத்தே இவை இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இவர்தம் திருப்பெயர்கள் (பொய்கை, பூதம், பேய்) செந்தமிழ்ப் பெயர்களாக உள்ளமையும் இவர்களின் காலப் பழமையை நமக்கு உணர்த்துவனவாகும்.

களவழி நாற்பது, புறநானூறு (பாடல் 48, 49) நற்றிணை (பாடல் 19) ஆகியவற்றின் ஆசிரியராக ஒரு பொய்கையாரும், பூதன் (நற். 29) நப்பூதன்

(முல்லைப்பாட்டு) பூதப்பாண்டியன் (புறம். 246) கரும்பிள்ளைப் பூதனார் (பரி. 10) குன்றப்பூதனார் (பரி. 9, 18) எனச் சில பூதர்களும், பேயனார் (குறுந். 233, 359, 400) ; ஐங். 410-500 ; அகம் 234 ; பேயார் (குறுந். 339) எனச் சில பேய்ப்பெரியோரும் சங்க இலக்கியங்களில் பேசப்பெறுகின்றனர்.

அடுத்து, பேராசிரியர் என்னும் உரையாசிரியர், தாம் சிறந்த சிவநேயச் செல்வராக இருந்தும், தொல்காப்பியச் செய்யுளியல் 239-ஆம் நூற்பாவிற்கு உரையெழுதுமிடத்து, "விருந்து" என்னும் வனப்பிற்குப் பொய்கையார் அந்தாதியை எடுத்துக்காட்டாகக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. முதல் திருவந்தாதியே அந்தாதி வகைச் சிற்றிலக்கியத்தின் முன்னோடி என்பது அவர்தம் கருத்தாதல் இதனால் நன்கு புலனாகின்றது. "பொய்கையார் முதலாயினோர் அந்தாதிகள்" என்பதால் பூதத்தாரும், பேயாரும் செய்த அந்தாதிகளும் தழுவிக்கொள்ளப்பட்டனவாக ஆசிரியர் மு. இராகவையங்கார் கருதினார்.[7]

சமண, பௌத்த சமயக் காழ்ப்பு இவற்றில் சிறிதும் இல்லாமையும் இவற்றின் பழைமையைக் காட்டும். மேலும், இவற்றைப் பிற்காலத்தியனவாகக் காட்டும் உறுதியான சான்றுகள் ஒன்றுகூட இவற்றில் இல்லை என்பது பெரிதும் குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறுமிடத்து, இவர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரல்லர் என்பது உறுதி என்பர்.[8]

3.3 **களவழி நாற்பது பாடிய பொய்கையாரும் பொய்கையாழ்வாரும் :** சங்ககாலப் புலவர்களுள், புறநானூற்றில் வரும் பொய்கையார், சேரமான் கோக்கோதை மார்பனைப் பாடியுள்ளார் (48, 49). அதில் இவர்தம் ஊர் தொண்டி என்று குறிப்பிட்டுள்ளார்.

"கோதை மார்பிற் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்
மார்கழி மலர்ந்த நெய்த லானும்
கள்நா றும்மே கானலந் தொண்டி
அஃதெம் மூரே யவனெம் இறைவன்"[9]

மற்றும், கணைக்கால் இரும்பொறை, மூவன் என்பானைப் போரில் வென்று அவனது பல்லைப் பிடுங்கித் தொண்டிக்கோட்டை வாயிற்கதவில் தைத்தவன் என அவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.[10]

"சங்ககால மன்னனின்மேல் சங்ககாலப்புலவரால் பாடப்பட்டதாகக் கூறப்பெறும் 'களவழி நாற்பது' சங்க நூற்பட்டியலில் இடம்பெறாதது ஏன் ?" என்னும் வினாவிற்குத் தமிழண்ணல் அவர்கள் கூறும் விடை நோக்கத்தக்கது.

"சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டு, குடவாயிற்கோட்டத்துச் சிறையிற் கிடந்து, தண்ணீர் தாவென்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்ற அடிக்குறிப்புடன் புறத்தில் ஒரு பாடல் உள்ளது (74) . நமக்குக் கிடைக்கும் களவழி நாற்பது, பொய்கையார் செங்கணான் மீது பாடி கணைக்காலிரும்பொறையை வீடுகொண்டதாகக் குறிக்கப்படுகிறது. இரும்பொறை இறந்துபோனானா, விடுதலை செய்யப்பெற்றானா ? என்ற ஐயம் ஏற்படுகிறது. பரிதிமாற்கலைஞர் விடுதலையான செய்தி வரும்முன் இறந்துவிட்டதாகப் புனைந்துள்ளார், "மானவிஜயம்" நாடகத்தில். பிற்காலப் பிரபந்தங்களில், பொய்கையார் இவ்வாறு தம் மன்னனை விடுதலை செய்வித்து மீட்ட பெருமை பாராட்டுமிடங்கள் பலவாகும். இச்செவி வழிச் செய்தியில் ஏதோ உண்மை அடங்கியுள்ளது. அச்செய்தியை அடிப்படையாக வைத்துச் சங்கம் மருவிய காலத்திலும், பொய்கையார் என்ற பெயருடன் வாழ்ந்த ஒரு புலவர் வெண்பா யாப்பில் இக் களவழியைப் பாடி இருக்க வேண்டும். அதன்பிறகு பக்திக்காலத்திலும், பொய்கையாழ்வார் என ஒருவர் வாழ்ந்துள்ளார். மூவரும் வேறு வேறு என உணர்க"[11] என்பது அவர் தரும் விளக்கமான விடையாகும்.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் முதல் திருவந்தாதியில் வரும், 'பாலன்றன துருவாய்', 'எவிதினிரண்டடியும்'[12] என்னும் வெண்பாக்களை எடுத்துக்காட்டி 'இப்பொய்கையார் வாக்கினுள், என்று கூறியதால், இவரே பொய்கையாழ்வார் என்று அறியப்படும்' என்று நற்றிணை உரையாசிரியர் கூறுவது[13] பொருந்தாத கருத்தாகும். 'நாக்கொண்டு மானிடம் பாடாத' இவர் அவரல்லர் என்பது வெள்ளிடைமலை என விளங்கும்.

3.4 **முதலாழ்வார் பாடிய திருத்தலங்கள் :** தமிழகத்தில் பண்டு சிறப்புற்று இருந்த வைணவத் திருத்தலங்கள் ஐந்தாகும். அவை . திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருவெஃகா, கூடல் எனப்பெறும் இருந்தையூர் என்பனவாம். இவற்றுள் திருவரங்கம், திருவெஃகா, திருமலை ஆகியவற்றுடன் பொய்கையாழ்வார் பாடிய திருத்தலம் திருக்கோவலூர் (இரு பாசுரங்கள்) திருப்பாற்கடல் (ஒரு பாசுரம்) ஆக இரண்டாம்.

பூதத்தாழ்வார் திருவத்தியூர் (2), திருவரங்கம் (4), திருக்கடன்மல்லை (1) திருக்குடந்தை (2) திருக்கோட்டியூர் (2) திருக்கோவலூர் (1) தஞ்சைமாமணிக்கோயில் (2) திருநீர்மலை (1) திருப்பாடகம் (1) திருப்பாற்கடல் (2) திருமாலிருஞ்சோலை (3) திருமலை (9) எனப் பதின்மூன்று திருத்தலங்களைப் பாடியுள்ளார். இவர் பொய்கையாழ்வாரை அடுத்துப் புதியனவாக மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் ஆறு ஆகும்.

பேயாழ்வார் திருவட்டபுயகரம் (1) திருவத்தியூர் (1) திருவரங்கம் (2) திருவல்லிக்கேணி (1) திருக்கடிகை (1) திருக்குடந்தை (2) திருக்கோட்டியூர் (1) திருப்பாடகம் (1) திருப்பாற்கடல் (4) திருமாலிருஞ்சோலை (1) திருவிண்ணகர் (2) திருவெஃகா (4) திருமலை (19) திருவேளுக்கை (3) ஆக பதினான்கு திருத்தலங்களைப் பாடியுள்ளார். இவற்றுள் புதியனவாக இவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவை ஐந்து திருத்தலங்களாம்.

முதலாழ்வார்கள் பாடியுள்ள திருப்பதிகளின் பட்டியலை உற்று நோக்கும்போது, பெரும்பான்மையான வைணவத் திருப்பதிகள் தொண்டை நாட்டினைச் சேர்ந்தனவாக உள்ளன என்பதனை அறிகின்றோம். எனினும், இப்பெரியோர்கள் தம் சமய நடவடிக்கைகளைத் தொண்டை நாட்டோடு நிறுத்திக்கொள்ளாமல் ஏனைய பாண்டிய, சோழ நாடுகளிலும் தொடர்ந்துள்ளனர். பாண்டிய நாட்டுத் திருப்பதிகளும் சோழநாட்டுத் திருப்பதிகளும் அவர்களுடைய பாடல்களில் இடம்பெறுகின்றன. எனவே இவர்களை "ஓடித் திரியும் யோகியர்" என்று குருபரம்பரை வரலாறுகள் குறிப்பது பொருத்தமே ஆகும்.

### 3.5 முதலாழ்வார் பற்றிப் பிற்பட்ட ஆழ்வார் குறிப்புகள் :

'இன்கவி பாடும் பரம கவிகளால்
தன்கவி தான்தன்னைப் பாடுவியாது இன்று
நன்குவந் தென்னுடன் ஆக்கியென் னால்தன்னை
வன்கவி பாடும்என் வைகுந்த நாதனே'[14]

'இன்கவி பாடும் பரம கவிகளால்-தன்னைக் கவி பாடுவித்துக்கொள்ள நினைத்தால், பராசர, வியாச, வால்மீகிகளாதல், 'செந்தமிழ்பாடுவார்' என்னும் முதலாழ்வார்களாதல் அன்றோ பாத்ரபூதர்'-என்னும் திருவாய்மொழி உரையினால் நம்மாழ்வார் இவர்களை, 'இன்கவி பாடும் பரம கவிகள்' என்று சிறப்பித்துப் போற்றியிருப்பதை அறியலாம்.

திருமங்கையாழ்வாரும் தம் பெரிய திருமொழியில்[15] இவர்களைச் சிறப்பித்து 'வெந்திறல் வீரரில் வீரரொப்பார் வேதமுரைத்திமையோர் வணங்கும் செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவர் இவர்கொல் தெரிக்கமாட்டேன்' என்று பாடுகிறார்.

'நீர்மையைப் பார்த்தால் பாங்காய் இருப்பார் எல்லாரும் ஏத்தும்படி இருப்பர். 'பெருகுமதவேழம்'[16] என்கிறபடியே கலப்பற்ற பசுந்தமிழ் பாடும் முதலாழ்வார்கள் ; அவர்களுக்குப் பற்றத் தகுந்தவன் ஆகிய திருவேங்கடம் உடையானைப்போல இருக்கிறார்' என்னும் பெரியவாச்சான்பிள்ளையின் உரை இங்கு நோக்கத்தக்கதாகும்.

3.5.1 **அமுதனார், வரந்தருவார் குறிப்புகள் :** திருவரங்கத்தமுதனார் இம்மூவரையும் சிறப்பித்து இராமாநுச நூற்றந்தாதியில் பாடிய பாடல் அடிகள் பின்வருமாறு :

> 'வருத்தும் புறவிருள் மாற்ற எம் பொய்கைப் பிரான் மறையின்
> குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்
> திரித்தன் றெரித்த திருவிளக்கு'[17]

> 'இறைவனைக் காணும் இதயத் திருள்கெட ஞானமென்னும்
> நிறைவிளக்கேற்றியபூதத் திருவடி தாள்கள்'[18]

> 'மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலூர் மாமலராள்
> தன்னொடும் ஆயனைக் கண்டமை காட்டும் தமிழ்த்தலைவன்'[19]

வில்லிபுத்தூராழ்வாரின் குமாரர் வரந்தருவார், முதலாழ்வார்களை,

> 'பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநாளிரவின்
> மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத
> நன்னாடு'[20]

என்று போற்றுகின்றார்.

3.6 **முதலாழ்வார் பாசுரங்களில் அகச்சான்றுகள் :**

இம்மூவரும் திருக்கோவலூரில் சந்தித்தது பற்றிய அகச்சான்று

> 'நீயும் திருமகளும் நின்றாயால் ; குன்றெடுத்துப்
> பாயும் பனிமறைத்த பண்பாளா - வாசற்
> கடைகழியா உட்புகாக் காமர் பூங்கோவல்
> இடைகழியே பற்றி இனி'[21]

என்னும் பாடலில் குறிப்பிடப்பெறுகின்றது. பூதத்தாழ்வார் பாடலிலும் திருக்கோவலூர் இடம்பெற்றுள்ளது.[22]

3.7 **முதலாழ்வார்களும் திருவேங்கடமும் :** 'வேயோங்கு தண்சாரல் வேங்கடத்தானையே' பெரிதும் இம்மூவரும் பாடிக் களிப்புற்றனர்.

பொய்கையாழ்வார் ஆறு திருத்தலங்களையும், பூதத்தாழ்வார் பதின்மூன்று திருத்தலங்களையும், பாடியுள்ளனர். இவற்றுள் இவர்கள் திருமலையையே அதிகமாகப் பாடியுள்ளனர். (பின்இணைப்பு - அட்டவணை-1 காண்க).

இதனால் திருவரங்கத்தைக் காட்டிலும் திருமலையே முதலாழ்வார்களின் உள்ளத்தைக் கவர்ந்தது என்பது இனிது விளங்கும். இனி பொய்கையாழ்வார்

பாசுரங்களைக்கொண்டு திருமலை, திருவேங்கடவன் பெருமைகளைச் சுருக்கமாகக் காணலாம்.

ஸ்ரீ வைணவம் என்னும் ஞானகங்கையின் உற்பத்தி இடமாகிய ஒரு பொய்கை போல் விளங்கும் பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதியில் 26-ஆம் பாசுரம் முதல் திருமலைப்பெருமானைத் துதிக்க இருப்பவர் ஆதிவராகப்பெருமானை முந்துற 25-ஆம் பாசுரத்தில் ஏத்துகிறார். 'ஆதிவராகப் பெருமானைத் தொழுதபின்பே திருமலையப்பனை வணங்கவேண்டும்' என்று வேங்கடேச மகாத்மியத்தில் சொல்லப்பெற்றுள்ளது ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

...... கேழலாய்ப் பூமி
இடந்தானை யேத்தி எழும்.[23]

'பூகத ஜலம் போலே (பூமிக்குள் இருக்கும் நீர்) அந்தர்யாமித்வம் ; ஆவரண ஜலம் போலே (அண்டத்திற்குப் புறம்பேயுள்ள கடல்நீர்) பரத்துவம் ; பாற்கடல் போலே வியூகம் ; பெருக்காறுபோலே விபவம் ; அதிலே தேங்கினமடுக்கள் போலே அர்ச்சாவதாரம்[24] என்பர் பிள்ளை லோகாசாரியார் என்னும் பெரியார். அத்தகைய சிறப்புமிகுந்த அர்ச்சாவதாரத் திருக்கோலத்தில் திருமலையப்பன் எழுந்தருளியுள்ளார்.

3.7.1 அர்ச்சை : (விக்கிரக வடிவில் எழுந்தருளியிருக்கும் நிலை) தேகத்தாலும், கரணத்தாலும் சேயதன்றி, கோயில்களிலும் வீடுகளிலும் என்றும் காண இலக்காய், 'பின்னானார் வணங்கும் சோதி' ஆன அர்ச்சாவதாரங்கள். அவதாரங்களின் குணங்கள், திருவுருவங்கள் அர்ச்சை வடிவில் தேங்கிய மடுக்களாய் உள்ளன. அவ் அர்ச்சைகளுக்கெல்லாம் மூலமாம் திருவேங்கடம் என்று அப்பெருமானை ஏத்த முயன்றவராய், அவன் எழுந்தருளியிருக்கும் திருமலையே அவனைக்காட்டிலும் சிறந்ததென்று அதனையே முதலில் கொண்டாடுகிறார் பொய்கையாழ்வார்.

சித்தும்-அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். அசித்தும் எம்பெருமானுடைய படைப்பாகி, அவனுடைய திருமேனியாகத் திகழ்வதால் அதுவும் வழிபாட்டிற்கு உரியதாம். திருமலை பற்றிய முதற்பாசுரத்தின் கருத்தை நோக்கலாம்.

'விரும்பிய செல்வம் கிடைத்ததும் பெருமானைக் கைவிட்டுப்போகும் செல்வ விருப்பினரும்,

கைவல்ய மோட்சம் கிடைத்ததும் பெருமானைக் கைவிட்டுப்போகும் கைவல்யார்த்திகளும்.

ஒருநாளும் நீங்காமல் சிந்தித்து எப்போதும் அனுபவிப்பவர்களான முமுட்சுகளும் ஆகிய இம்மூவர்க்கும், அவரவர் வேண்டும் பலன்களுக்குத் தடையான தீவினைகளைப் பின்வருமாறு நீக்கி, அருள்வார்.

1. எழுவார் வினைச்சுடரை நந்துவித்தல்-செல்வம் கிடைப்பதற்குப் பகையான பாவங்களை நீக்கி, செல்வ விருப்பத்தை நிறைவேற்றுதல்.

2. கைவல்யார்த்திகளின் வினைச்சுடரை நந்துவித்தலாவது—ஆத்ம அனுபவத்திற்குப் பகையான பாவங்களைத் தொலைத்து கைவல்யானுபவத்தை நிறைவேற்றுதல்.

3. வைகல் தொழுவார்களின் வினைச்சுடரை நந்துவித்தலாவது பிறவிக்குக் காரணமான தீவினைகளைத் தொலைத்து 'முக்தி' அளித்தல்.

இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த திருமலையே நித்தியசூரிகளுடைய இதயமாகிய விளக்கைத் தூண்டி ஒளிரச்செய்யும் என்கிறார். வானோர் மனச்சுடரைத் தூண்டும் முறையாவது, பரமபதத்திலே பரத்துவ குணத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் அவர்களை, இங்கு வந்து பெருமானுடைய சௌலப்பியம் முதலிய குணங்களை அனுபவிக்குமாறு உற்சாகமூட்டுவதாம்.

> "எழுவார் விடைகொள்வார் ஈன்துழா யானை
> வழுவா வகைநினைந்து வைகல் - தொழுவார்
> வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்
> மனச்சுடரைத் தூண்டும் மலை"[26]

அடுத்து பெருமானின் திருக்கைகளைச் சிறப்பாகத் துதிக்கிறார். அவை 'மலையால் குடை கவித்தன ; மாவாய் பிளந்தன ; மராமரம் ஏழ் செற்றன ; குவலயாபீடம் என்னும் யானையின் கொம்புகளைப் பறித்தன. குருந்த மரத்தைச் சாய்த்தன என்கிறார்.[26]

'அஞ்ஞானத்தைத் தொலைக்கும் நுட்பமான கேள்வியறிவு வாய்ந்த வைதிகர்கள், தூப தீபங்களையும், பூக்களையும், தீர்த்தங்களையும் ஏந்தி நாளும் பல திசைகளிலிருந்து நெருங்கி வந்து இறைஞ்சும் திருவேங்கடமே திருமால் உகந்த திருத்தலமாகும்.'[27]

3.7.2 **திருமலையின் இயற்கைக் காட்சிகள் :** இம்மூன்று ஆழ்வார்களின் பாசுரங்களிலும் இயற்கை எழில் நன்கு இயம்பப்பெறுகின்றது. பொய்கையாழ்வார் காட்டும் காட்சிகளைக் காண்போம் :

திருமலையில் வாழும் குறவர்கள் தங்கள் தினைப்புனங்களில் பட்டிமேயும் யானையைத் துரத்த வேண்டிப் பரண்களிலிருந்தபடியே கையில் உள்ள மாணிக்கக் கட்டியை அதன்மீது எறிவர். அப்போது அங்குத் திரியும் மலைப்பாம்புகள் அந்த இரத்தினத்தைக் கண்டு, யானையை மேகமாகவும், இரத்தினத்தை மின்னலாகவும் எண்ணி மயங்குகின்றன. மின்னலுடன் இடி தோன்றும் என்றஞ்சி அவை புற்றினுள் புகுகின்றன.[28]

புனங்களில் பட்டிமேயும் யானையைத் துரத்தும் குறவர்கள், ஒரு கையில் வில்லும் அம்பும், மற்றொரு கையில் தீவட்டியையும் கொண்டு யானையை அதட்டிச்செல்வர் ; யானை வெருவியோடும்போது. விண்ணினின்றும் விழும் மீன் தானாக அதன் வழியில் பேரொளியுடன் விழுவதைக்கண்டு, அதைக் குறவர்களின் கைத்தீவட்டி என மயங்கி மேல் செல்லாது திகைத்து நிற்கிறது.[29]

3.7.3 **திருமலையப்பனின் பெருமை :** அடுத்து ஒரு பாசுரத்தில் திருமலையில் நிற்கும் பெருமானின் பெருமையைப் பொய்கையாழ்வார் பேசுகிறார்.

'தன் கோட்டால் (வராக அவதாரத்தில்) குத்தி எடுத்ததுபூமியை ; கையால் எடுத்தது கோவர்த்தனத்தை ; பாய்ந்தது கம்சன்மீது ; பள்ளிகொண்டு இருப்பது பாற்கடலில் ; நிற்பது திருமலையில்[30] என்கிறார். இரணியாட்சன், இரணியன், கம்சன், ஆகியோர் அஞ்சினர் ; அச்செயல்கள் சில கணங்களே நடந்தன ; அவைகளைவிடப் பெருமை வாய்ந்தது பாற்கடலில் கிடப்பது. ஆனால் அது நீளோத மாகடல் ; தொலைவு ; அணுகவியலாதது ; நித்திரையில் இருக்கிறான் அங்கே ; உறங்குவோனை எழுப்பி வேண்டிக்கொள்ள வேண்டும். ஆனால், அருகில் உயர்ந்த இடத்திலிருந்து எல்லாருக்கும் எளிமையாகக் காட்சியளித்து, கேட்பதையெல்லாம் அளிக்க நின்றே விளங்குமிடம் திருமலை ஆனதால் இதன் சிறப்பு சொல்லாமலேயே விளங்கும்.

அடுத்து, 'உணர அரியவன் அவன்' என்கிறார் ஒரு பாடலில்.[31] மேலும், 'பக்தி நெறியிலே நின்று பெருமானை வணங்குவோர் வழுவாமொழி நின்ற மூர்த்தியராவர். ஆனால், உலகங்களை அளந்த பெருமானின் திருமலையே ஒரு குறையும் வராதபடி வைத்துப்பரமபதத்தைத் தரும் என்று பாடுகிறார். இப்பாசுரத்தை நாளும் சிற்றஞ்சிறுகாலையில் அனுசந்திப்பார் எம்பார் என்பர்.

'எம்பார் விடிவோறே அனுசந்திக்கும் பாட்டு'-

என்பது பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானமாகும். அப்பாசுரம் பின்வருமாறு :

'வழிநின்று நின்னைத் தொழுவோர் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர் - பழுதொன்றும்

வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங் கடம்'[32]

திருமால் திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் நிலை நான்கு வகைப்படும்.

அவை, நின்ற திருக்கோலம் - ஸ்தானகமூர்த்தம் - திருமலை
அமர்ந்த திருக்கோலம் - ஆசனமூர்த்தம் - விண்ணகர் (பரமபதம்)
கிடந்த திருக்கோலம் - சயனமூர்த்தம் - திருவெஃகா
இயங்கும் திருக்கோலம் - யானகமூர்த்தம் - திருக்கோவலூர்

இவ்வாறு பெருமான் எழுந்தருளியிருக்கின்ற சிறப்பினை நாம் போற்றினால், நாம் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் செய்த பாவங்களெல்லாம் தானே நீங்கும் என்பதாம்.

'வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் — நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்'[33]

'பெண்கள் துவாதசியன்று மாலைகளுடன் சென்று திருமலையப்பனை வழிபடுவர் ; அவர்கள் ஏந்திய தூபமானது விண்மீன்களை மாசு உண்டாகச்செய்யும்படி திருமலை அமைந்திருக்கிறது' என்று ஒரு பாடலில்[34] பெண்களின் வழிபாட்டைக் குறிப்பிடுகின்றார்.

'திருப்பாற்கடல், திருவேங்கடம் முதலிய இடங்கள் எம்பெருமானுக்கு இருப்பிடங்களாயினும், அவ்விடங்களில் எம்பெருமான், எழுந்தருளியிருப்பது, சமயம் பார்த்து ஞானிகளின் மனதிலே புகுவதற்காகவேயாம்' — என்று மற்றொரு பாடலில் அறுதியிட்டு உரைக்கின்றார்.

'உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத் — துளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளாலும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளானென் றோர்'.[35]

இவ்விடத்து, 'திருமாலிருஞ்சோலை மலையே' என்கிறபடியே, உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்.''

''அங்குத்தை வாசம் சாதனம் ; இங்குத்தை வாசம் சாத்தியம்''

"கல்லும் கனைகடலும்" என்கிறபடியே இது சித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும்"

எனவரும் ஸ்ரீவசனபூடண சூத்திரங்களும் அவற்றின் பொருள்களும் ஒப்புநோக்கி அறியத்தக்கன.[36]

இப்பாடலின் சிறப்பு நோக்கிய பேயாழ்வார் முதலிரு அடிகளை அப்படியே எடுத்துக்கொண்டு,

"விண்ணொடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணொடுங்கத் தானளந்த மண்"[37]

என்றமைத்துப் பாடியுள்ளார்.

திருமழிசையாழ்வாரும் அவ்வாறே முதலிரு அடிகளை அப்படியே எடுத்துக்கொண்டு,

"தன்னொப்பான் தானா யுளன்காண் தமியேற்கும்
என்னொப்பார்க் கீச னிமை"[38]

என்று அமைத்துப் பாடியுள்ளனர்.

"எங்கும் எல்லாவற்றிலும் என்றும் நின்றருளும் பரம்பொருள் (Omnipresence) இந்த மனித உள்ளத்துக்குள்ளேயே கோயில் கொண்டு நிற்கிறது" என்பதைப் பாடுகிறார். "பாற்கடலிலும், வேங்கடத்திலும் காட்சிதரும் மூர்த்தி, மனித உள்ளத்திற்குள் உணர்வு நிலையிலேயே நின்றருளுகின்றான் ; எந்தத் துன்பம் ஏற்படினும் அவன் அருளைத் தேடுவாய் ; உறுதியாகப் பெறுவாய் ; பாற்கடலுக்கும் போகவேண்டியதில்லை ; வேங்கடமலை மேலும் ஏற வேண்டியதில்லை ; கொஞ்சம் தியானித்தாயானால் உள்ளத்திற்குள்ளேயே காண்பாய்"என்று சொல்கிறார்.

இப்பாடலில் ஐந்து கருத்துக்கள் உள்ளன. அவையாவன :

1. உலகை ஆளும் கடவுள் ஒருவன் உண்டு.
2. கடவுள் உத்தமன் ; எனவே முடிவான நன்மைதான் அவனுடைய அருளாட்சியின் நோக்கம்.
3. கடவுள் என்றும் இருக்கிறான்.
4. எங்கும் இருக்கிறான்.
5. அவன் வெள்ளத்திலும், திருமலையிலும் இருக்கிறான் என்று பக்தர்கள் வழிபடுகின்றனர். ஆயின் பகவானோ இவர்களுடைய உள்ளத்தையே பாற்கடலாகப் பரமபதமாகக் கொள்கின்றான்.

3.8 **பூதத்தாழ்வாரின் அனுபவங்கள் :** இனி, பூதத்தாழ்வாரின் பாடல்களைக் காண்போம். இரண்டாம் திருவந்தாதியில் பத்துப்பாடல்கள் திருமலையப்பனைப் பற்றி உள்ளன. அவற்றின் திரண்ட கருத்துகள் வருமாறு :

'பெருமான் அவதாரம் செய்து, சென்றது இலங்கைக்கு ; அழித்தது இராவணனை ; நின்ற திருக்கோலமாய் விளங்குவது மூங்கில்கள் ஓங்கி வளரும் திருமலையிலேயே[39] அவன் வந்து, சென்று, கொன்றெல்லாம் பாடுபட்ட விடாய் எல்லாம் தண்சாரல் வேங்கடத்தில் நின்றதால் நீங்கிற்று ; வேய் போல் வணங்குபவர் ஓங்குவது அங்கேயாம்; சாதுக்களைக் காக்கவே விபவ, அர்ச்சாவதாரங்கள் செய்தருள்கின்றான்'என்பதே இப்பாடலின் அடிப்படைக் கருத்தாகும்.

'தேவாதிதேவன் உலகைக் காக்க முதலில் பாற்கடலில் வந்து தங்கிப் பின்பு கண்ணனாய் அவதரித்து, சம்சாரிகளைக் காக்க கோயில், திருமலை முதலிய திருப்பதிகளில் எழுந்தருளி, இப்பொழுது என் நெஞ்சிலேவந்து கிடக்கின்றான்'[40] என்கிறார்.

'என்மனம் அவன் திருநாமங்களின் கருத்துகளில் எப்பொழுதும் உறுதி பூண்டுள்ளது ; திருமலைப்பனையே சேவிக்கின்றேன் ; வாக்கு அவனுடைய திறமைகளையே சொல்லிக்கொண்டிருக்கும் வகை உடையது ;'[41]

'திருமால் வெகுகாலமாகப் பழகியிருப்பது திருவரங்கத்தில், திருக்கோட்டியூரில், திருமலையில், திருமாலிருஞ்சோலைமலையில், திருநீர்மலையில் ; வேங்கடத்திற்குச் செல்ல இயலவில்லையெனில் திருவரங்கத்தில் அனுபவிக்கலாம்;'[42]

'திருமலையில் தவம் செய்வார்தம் தலைமயிர்த்தொகுதி முன்பக்கம் உயர்ந்து, பின்புறம் கீழே தொங்குமாறு இருக்கும் ; இதைக் குழல் என அறியாமல் சிறிய மலை என எண்ணிக் கொடிகள் சுற்றும் ; அருவிகள் அங்குப் பாயும் ; அதுவே நாம் விரும்பும் திருமலையாகும் ;'[43]

> ''வெற்பென் றிருஞ்சோலை வேங்கடம்என் றிவ்விரண்டும்
> நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல் — நிற்பென்
> றுளம்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன் 'வெள்ளத்
> திளங்கோயில் கைவிடேன்' என்று[44]

என்பது ஒரு சிறந்த பாசுரமாகும். ''வேங்கடமே விரும்புமிடம்'' — என்றதால் பிறவற்றில் விருப்பமில்லையென நினைக்கவேண்டா என அறிவிக்கக் கருதி, எல்லாவற்றிற்கும் மூலமான அவதாரத் தலத்தில் தம் விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

''அழகர் மலை, திருமலை என்ற இரு திருமலைகளும் உனக்கு நிலைத்திருக்கும் இடங்களாக நீ கொண்டாடி இருக்கிறாய். அவ்வாறே என் மனத்தையும் நீ நிலைத்து

வாழும் திருக்கோயில் என்று முடிவுசெய்து, பாற்கடலில் உள்ள பாலாலயத்தை நீ விடவேண்டாம் என்று வணங்கிக்கொண்டே உன்னை அனுபவிக்கின்றேன்" என்று மொழிகின்றார் பூதத்தாழ்வார்.

திருப்பாற்கடல் எல்லா அவதாரங்களுக்கும் மூலக்கிழங்கு. திருமலை முதலிய திருத்தலங்களும், அன்பர்களுடைய இதயமுமாகிற பெருங்கோயில்களிற்சென்று சேர்ந்து வாழ்வதற்குப் பூர்வாங்கமாகவே பெருமான் பாற்கடலில் வாழ்கின்றான். அவ்வாறு பெருங்கோயிலிற்சென்று அமர்ந்தபின் இளங்கோயிலிடத்து அன்பு இருக்க இடமில்லை. எனினும் அதை ஒருநாளும் கைவிடலாகாது என்கிறார்.

'பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ'

என்னும் பெரியாழ்வாரின் பாடல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. "இப்படிப் பாற்கடலையும் கைவிடும்படியான வியாமோகம் அப்பெருமானுக்கு உண்டு" என்று தெரிவிப்பது இப்பாசுரத்தின் அடிப்படைக் கருத்தாகும்.

"இளங்கோயில் கைவிடேல்' என்று இவன் பிரார்த்திக்க வேண்டும்படியாய் இருக்கும்"- என்னும் ஸ்ரீவசனபூடண சூத்திரத்தின் பொருள் இப் பாசுரப்பொருளே என்பர்.[46]

3.8.1 **பூதத்தார் காட்டும் இயற்கைக் காட்சிகள்** : "திருமலையில் உள்ள குரங்குகள் விடியலை உணர்ந்து மலர்நிறைந்த மடுக்களில் புக்கு நீராடி, மலர்களைப் பறித்துக்கொண்டு துதிக்கும். வானரங்களுக்குப் பூவின் குணம் தெரியாது ; எனினும் வேங்கடமலையில் உள்ள அவை மலர்களால் ஏத்துகின்றன. என் உள்ளமே ! நீயும் அவ்வாறு செய் ! என்கிறார்.[47]

திருமலையில் மதம் கொண்டு திரியும் ஒரு களிறு வழியில் தன் பிடியைக் காண்கின்றது. அப்பிடி தன்னைப் பிரிந்து செல்லாதிருக்க, இரண்டே கணுக்களை உடைய மூங்கிற்குருத்தொன்றைப் பிடுங்கி, அருகிருக்கும் தேனில் தோய்த்துத் தருகின்றது.[48]

"வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர்முளை யளைமிகு தேன்
தோய்த்துப் பிரசவாரி தன்இளம் பிடிக்கருள் செயும் பிரிதி
சென்றடைநெஞ்சே !

என்ற திருமங்கை மன்னனின் வாக்கும்[49] கம்பநாடர் வாக்கும்[50] இங்கு ஒப்பிடத்தக்கன.

3.9 **பேயாழ்வார் காணும் திருமலை :** இவர் திருவேங்கடவனைத் துதிக்கும் பாசுரங்களின் கருத்துகள் பின்வருமாறு அமைகின்றன :

"இந்திரியங்களைப் பட்டிமேய ஒண்ணாதபடி அடக்கி நின்று, அறநூல்களைக் கற்றால் எம்பெருமான் திருவடியைக் காணலாம் ; இது எளிதில் கைகூடுமோ ? எனின் திருமலையில் தேவர்கள் வணங்க நிற்கும் பெருமானிடம் நெஞ்சை ஊன்ற வைத்தால், சிற்றின்ப விருப்பம் ஒழியும்" என்கிறார்.[51]

"எம்பெருமான் என் சிறந்த சிந்தையிலும், ஆதிசேடன் மீதும், காஞ்சி, திருமலை, திருவெஃகா, திருவேளுக்கை, திருப்பாற்கடல், திருக்குடந்தை, பரமபதம், திருப்பாடகம், திருவரங்கம் — ஆகிய திருத்தலங்களிலும் வேறுபாடு இல்லாமல் திருவுள்ளம் உவந்து வாழ்கின்றான்' என்கிறார் மூன்று பாசுரங்களில்.[52] மேலும், "அறநூல்களையும், யோகியர் உள்ளத்தையும் அவன் வாழிடமாகக் கொண்டுள்ளான்" என்று மற்றொரு பாசுரத்திலும் தெரிவிக்கின்றார்.[53]

பரம்பொருளாய், நிலம், எண்திசை, வேதங்கள், வானம் ஆகியவைகளாய் விளங்கும் திருமலைமேய பெம்மான், என் நெஞ்சினுள்ளே இருக்கிறான்" — என்று மகிழ்ந்து பாடுகிறார்.[54] இதே கருத்தை வேறொரு வகையாகவும் வெளியிடுகின்றார்.

"என்னை ஆட்கொள்ளும் முன்பெல்லாம், பரமபத நாதனாகிய எம்பெருமானுக்கு திருப்பாற்கடலும். திருமலையும், திருக்கடிகையும் (சோளிங்கபுரம்) திருவிண்ணகரும் ஆகிய இத் திருத்தலங்களெல்லாம் கோயில்களாக இருந்தனபோலும் ! இப்போதோ என்னில் என் நெஞ்சம் ஒன்றே அவனுக்குக் கோயிலாக இருக்கிறது என்பது உள்ளுறை ![55]

மற்றொரு பாசுரம் திருமலையப்பனின் சங்கரநாராயண வடிவினைத் துதிக்கின்றது.

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து"[56]

"எம்பெருமான் செய்தருளிய பல அவதாரங்களில் சங்கரநாராயணவதாரம் என்பதும் ஒன்று. பாதிவடிவம் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியாகவும், பாதிவடிவம் பரமசிவமூர்த்தியாகவும் கொண்டதாமிது ! அதையே ஆழ்வார் இங்கு அநுசந்திக்கிறார் என்பர் ![57] அரிஅர வடிவால் காட்டிய சீலம் திருவேங்கடவன் பக்கல் பொலிகின்றது என அநுபவித்துச்சொன்னார் என்க !—என்னும் பிரதிவாதி பயங்கரம் சுவாமிகளின் உரையை நோக்குக.[58]

அடுத்து "ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்" — என்றபடி பேயாழ்வார் தாமே அவன் அழகில் ஈடுபட்டுச்சொல்லும் பாசுரம் ஒன்றை இனி நோக்குவோம். திருமாலின் அழகில் ஈடுபட்ட அடியார், திருமலையைத் "திவ்வியமான மலை" என்று கூறி வருணித்துப்பாடுவர் ; திருத்துழாயைப் பதிவிரதம் என நினைத்துக் கூந்தலில் சூடுவர். நீராட நாளும் பாற்கடலுக்குச் சென்று சேருவர். இப்பாசுரம்[59] தாய் கூறும் பாசுரமாகலாம் என்று ஒருவாறு துணிவர் உரையாசிரியர் — பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்.

"திருமலையில் சேவை சாதிப்பவன் கண்ணே" — என்று இவர் மேலும் பாடுகிறார். அவன் திருவடிகளை ஏத்துவதே நாவினைப்பெற்ற பயனாகும் ! என்றும் போற்றுகின்றார்.[60]

3.9.1 **பேயாழ்வார் காட்டும் குறிஞ்சிநில மக்களின் செயல்கள் :** பேயாழ்வார் இயற்கையழகில் ஈடுபட்டுப் பல பாசுரங்களைப் பாடுகின்றார். "திருமலையில் குறத்திகள் தம் கைகளால் மூங்கிலைப்பற்றி அதன் மேலேறி விளையாடுவர். அம்மூங்கில்கள் சந்திரனை இராகுவிடமிருந்து விடுவிக்கும் ; அது நித்தியசூரிகளுக்குத் தலைவனான பெருமானுடைய திருத்தலமாகும்.[61]

தேன்திரட்டுதல், வேட்டையாடி விலங்குகளைப் பிடித்து வருதல் முதலியன குறவர்களின் தொழில்களாகும். இவற்றை வயது முதிர்ந்த குறவர் செய்யவியலாது. ஆகவே, அவர்கள் பயிர்த்தொழில் செய்ய எண்ணுவர். ஆயினும் தாமே உழ இயலாத நிலையில் அவர்கள் இருப்பர். திருமலையில் காட்டுப்பன்றிகள் செருக்கு மிகுதியால் மூங்கில்களை வேர் பறியுண்டு விழத்தள்ளி, அந்நிலங்களை மூக்கால் உரசி, ஒருசால் உழுதுவைக்கும். அத்தகைய நிலங்களில் இக் கிழக்குறவர் தினைகளை விதைத்துப் பிழைப்பர். ஏற்கனவே பன்றிகள் தள்ளியிருந்த மூங்கில்கள் பயிருக்குக் களையாகும் என்று அவற்றை இக்குறவர் நன்கு களைந்துபோட்டாலும், அவை நிலவளத்தால் முன்புபோலவே வளர்ந்து வானத்தை அளாவி நிற்கின்றனவாம் ; இப்படிப்பட்ட நிலவளம் வாய்ந்த திருமலை முன்பு கண்ணனாய் அவதரித்து வேணுகானம் செய்த பெருமாள் வாழுமிடமாகும்.[62]

3.9.2 **குரங்குகளின் செயல்கள் :** கற்பாறையின் மீதிருந்த மந்தி, தன்னிடம் அன்புள்ள ஆண் குரங்கைப் பார்த்து, "சந்திரனைக் கொணர்ந்து கொடு" என்று கேட்குமிடம் அத்திருமலையாகும்.[63] இது உயர்வு நவிற்சியணியின்பாற்படும். இக்காலத் திறனிகள் இதனை "Fancy" என்பர். அம்மலையின் ஒருபக்கத்தில் சுனை நீரைப் பார்க்கும் ஆண்குரங்கு அதில் தன் நிழலைப் பார்த்து வேறொரு ஆண்குரங்காக எண்ணும், நிழற்குரங்கு களாப்பழங்களைப் பறிப்பதாகக் கருதி, "அதைப் பிடித்துத்தா" என்று கைநீட்டும்.[64]

3.9.3 **யானைக்காட்சி :** திருவேங்கடவன் சந்நிதியில் தொண்டுசெய்யச் செல்வோர் வாய்பூசி கை கால்களைத் தூய்மை செய்துகொண்டு,

மலர்களைக்கொண்டு செல்வது வழக்கம். இப்பழக்கம் விலங்கான யானைக்கும் அமைந்துள்ளது என்கிறார் பேயாழ்வார்.

யானை பொய்கையில் நீராடி, மலர்களைக்கொண்டு கோயிலுக்குள் புக மத்தகம், கன்னங்களில் பெருகும் மதநீரால் வாய்பூசி, கால் அளவும் பெருகும் மதநீரால் கால்களைக் கழுவிக்கொள்கின்றது. அம்மலர்களைக் கொண்டு திருமலையப்பனைக் கண்டு வணங்குகின்றது.[65]

மதயானை பெண்யானையுடன் கலவிசெய்து, கலகத்தால் பிரிந்து கோபத்தால் திரிந்து, மலையைத் தந்தத்தால் குத்திப் போர்செய்து, தந்தங்களிலிருந்து முத்து உதிர்க்கும் வேங்கடமே, ஆதிவராகப்பெருமானின் திருமலையாகும். இதனால் பொருள் இன்பங்களைத் தியாகம் செய்வித்து வினைகளைப் போக்கும் மலை இது என்கின்றார்.[66]

> "மக்கள் தாமே ஆறறி வுயிரே
> பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[67]
>
> "ஒருசார் விலங்கும் உளவென மொழிப"[68]

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களும்,

"மக்களே ஆறறிவுடையவர் எனப்படுவோர். ஆறறிவுடைய தேவர், அசுரர், இயக்கர் முதலிய பிறவும் உள்ளன ; ஆறறிவுடைய விலங்குகளும் ஒருசில உள்ளன என்பர் ; அவை கிளி, குரங்கு, யானை முதலியனவாம்" என்னும் அவற்றின் உரைகளும் இவ்விடத்து நோக்கத்தக்கன.

முகில்வண்ணனைப்போன்ற மேகத்தை யானை குத்த, அதனால் அவ்யானையை யாளி அழித்து நின்று முழங்குகின்றது ஒரு பக்கத்தில்.[69] பகைவரை அழிக்கவே ஏற்பட்டது வேங்கடம் என்பதாம். அதுமட்டுமன்று அடியார்களைக் காத்தலும் அங்கு உண்டு என்கிறார் அடுத்த பாசுரத்தில், இவ்வாறு குரங்கின் செயல்களைப் பெருமையுடன் பாடுகிறார்.

3.9.4 **திருமலையின் உயர்வு** : வானில் இயங்கும் சந்திரன் திருமலையின் சிகரநுனியில் தனது அடிப்பகுதி தேயும்படியாக உராயும். அப்போது சந்திரனிடம் உள்ள முயலைத் திருமலைமீது திரியும் வேங்கைப்புலி கண்டு. அதைத்தான் உணவாக் கொள்ளக் கருதிப் பார்க்கும்.[70]

இத்தகைய அழகிய காட்சிகளைத் திருமலையில் கண்டு, நமக்கும் காட்டுகிறார் பேயாழ்வார்.

3.10 **முதலாழ்வார் பாடல்களில் வைணவநெறி** : முதலாழ்வார்களுடைய நூற்றந்தாதிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு பொதுவான

கருத்துடையது. ஒவ்வொரு செய்யுளிலும், திருமாலைப்பற்றி நேராகவோ மறைமுகமாகவோ குறிப்பிட்டு, அவர் காத்தல் தொழிலைச் செய்யவேண்டி மேற்கொண்ட பலவிதமான அவதாரங்களையும் எடுத்துக்காட்டி, இவற்றால் ஏற்படும் ஒரே முடிவு, "திருமால்தான் யாவற்றையும் காக்கக்கூடிய முழுமுதற் கடவுள் ; அவரைத் தவிர வேறொருவரும் பாதுகாக்க வல்லவர் அல்லர்" என்பது. வீடு பேற்றுக்குக் கீழான சில நலன்களை மற்றத் தெய்வங்கள் மூலம் அடையக் கூடுமாயினும், அத்தெய்வங்கள் விஷ்ணுவால் படைக்கப்பட்டவர்களே தவிர, அவர்களாகவே உண்டாகவில்லை. அவர்களும் விஷ்ணுவின் பாகமேயாவார்கள். திருமாலே எல்லாப்பொருள்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறார். ஆகவே, அவர்தாம் முழுமையான பலனைக் கொடுக்கக்கூடும் என இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

முதலாழ்வார்கள் மூவரும் திருமாலின் மற்றைய அவதாரங்களைவிட கிருஷ்ணாவதாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு மெய்சிலிர்க்கிறார்கள். ஆயினும் திரிவிக்கிரமாவதாரச் செயல்கள், ஏனமாகி இருநிலம் கீண்ட செய்தி, இராமாவதார நிகழ்ச்சிகளில் ஒன்றிரண்டு ஆகியவற்றையும் இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஐந்து இந்திரியங்களையும் அடக்கித் தம்மை அறிந்து, தலைவனையும் அறியும் மெய்யுணர்வினரே அப்பெருமானைக் காணுதல் கூடும் எனவும்,[71] நறுமண மாலையைச் சாத்தியும், அவனைக் குறித்து வேள்விகள் ஆற்றியும், தந்திர மந்திரங்களாலும் அவனை வழிபடுவதும் உரிய வழிபாட்டு முறைகள் என்பர் பொய்கையாழ்வார். இதனால் எய்தும் பலனைப் பல பாசுரங்களில் அவர் பாடியுள்ளார். மனமாசு தீரும் என்றும், அருவினைகள் சாரா என்றும்,[72] குன்றனைய குற்றம் செய்யினும் குணங்கொள்ளும் பொன்னாழிக் கையான் ஆவான் என்றும்,[73] ஆறிய, அன்பு இல் அடியார் தம் ஆர்வத்தால் கூறிய குற்றச் சொற்களைப் புகழ்ச்சொற்களாக ஏற்பவன் என்றும், எனவே, அவனை வழிபடுதலே சிறப்பென்றும்[74] கூறியுள்ளார். இவ்விடத்து,

"வண்டுபடி துளப மார்பனிடைச் செய்த பிழை
உண்டுபல என்று உணர்ந்தனரேல் - தொண்டர் செயும்
பல்லாயிரம் பிழைகள் பார்த்திருந்தும், காணும்கண்
இல்லா தவன்காண் இறை"

என்னும் அருளாளப் பெருமாள் எம்பெருமானாரின் பிரமேய சாரப்பாடல் ஒப்பு நோக்கத்தக்கது.

எம்பெருமானுக்குப் பலவகையிலும் பணிசெய்வதே மக்களுக்குரிய சிறந்த கடமை என்பதை உணர்த்த ஆதிசேடன் திருமாலுக்குப் பலவகையிலும் புரியும் சேவையை விளக்குவதான,

"சென்றால் குடையாம் இருந்தால்சிங் காதனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு"[75]

என்ற பாசுரம், பகவானுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சேஷ-சேஷி (தலைவன்-அடியவன்) உறவைக் குறிக்கிறது என்பர் வைணவ உரையாசிரியர்கள்.

பூதத்தாழ்வாரின் பல பாசுரங்கள்[76] எம்பெருமானின் திருவடிப் பெருமையை ஏத்துவனவாக அமைந்துள்ளன. மாதவனின் திருநாமத்தைச் சொல்லுவதே வேதங்களில் சாரம்[77] என்று கூறும் பூதத்தாழ்வார் அதனை ஓதுமாறு தம் நெஞ்சையும்,[80] பிறரையும்[81] ஆற்றுப்படுத்துவார்.

பேயாழ்வார் எழுபிறப்பிலும் எம்பெருமானுக்கே அடிமை செய்யும் பேற்றையே தமக்கு அருளுமாறு வேண்டுவர்.[80] எம்பெருமான் தன் நெஞ்சத்தில் வலைப்பட்டு மெத்தெனவே நின்று, இருந்து, கிடப்பதைப் பேசுவார்.[81]

மூவர்தம் திருவந்தாதிகளின் முதல் பாசுரங்களின் பொருளைக் காணுமிடத்துப் பல வைணவ சமயக் கருத்துகள் அவற்றுள் பொதிந்து கிடத்தலை அறியலாம்.

"வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய சுடரோன் விளக்காக — செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொன் மாலை
இடராழி நீங்குகவே என்று"[82]

இது ஒரு சூரியோதயப்பாட்டு. ஒரு தீபசிகைபோல் இளஞ்சூரியன் கிழக்குத் திக்கில் ஒளிர்கின்றது. அத்தீபத்திற்கு நெய்போலிருக்கிறது கடல் ; விளக்கின் தகழிபோல் தோன்றுகிறது பூமி ; இச்சூரியன் ஆழ்வார்க்கு இறைவனுடைய சுடராழியையும் நினைவூட்டுகின்றது. இவ்விளக்கைக்கொண்டு அச்சுடராழி வேந்தனைக்கண்டு பாடியதும், இடர்க்கடல் விலகி எங்கேயோ போய்விடுகிறது.

இப் பாசுரத்தில் வையம் - அகல் ; கடல் - நெய் ; சுடரோன் - விளக்கு என உருவகம் செய்யப்பெற்றுள்ளன. ஆனால் திரி குறிப்பிடப்பெறவில்லை. திருவரங்கத்தமுதனார் இராமானுச நூற்றந்தாதியில் இதைக் குறிப்பிடுகிறார் :

"வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்
திரித்தன் றெரித்த திருவிளக்கு"[83]

மறையின் குருத்தின் பொருள், செந்தமிழ் - தன்னையும் கூட்டி - என்பது உபய வேதாந்தமாகும்.

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்''[84]

என்பது பூதத்தாழ்வாரின் முதல் பாசுரமாகும். அன்பைத் தகளியாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், இன்புருகு சிந்தையைத் திரியாகவும் கொண்டு எம்பெருமானுக்கு ஞானச்சுடர்விளக்கு ஏற்றினேன் என்கிறார். இத்தகைய விளக்கில் பேயாழ்வார் "இலட்சுமிநாராயணமூர்த்தி" யைக் கண்டார்.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் ; புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று"[85]

"தகவுரை" கூறி சேதனனை எம்பெருமானிடம் சேர்ப்பிக்கும் பிராட்டியைக் கண்டேன். அவளுடைய சேர்க்கையாலே நிறம்பெற்ற திருமேனியைக் கண்டேன் ; சூரியனைப்போன்று அழகிய நிறத்தையும் கண்டேன் ; போரில் சீறும் திருச்சக்கரத்தையும், மற்றொரு திருக்கையில் உள்ள வலம்புரிச்சங்கையும் சேவிக்கப்பெற்றேன் — என்கிறார்.

பரிபாடலில்[86] குறிக்கப்பெற்ற தத்துவக் கருத்துக்கள் இவர்கள் பாடல்களில் விளக்கமாகக் கூறப்படவில்லை எனினும், குறிப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன. முதல் திருவந்தாதியில் மூன்று பாடல்களிலும் இரண்டாம் திருவந்தாதியில் ஒரு பாடலிலும்[87] திருமாலே ஐம்பூதங்களாகவும் இருக்கிறார் என்று கூறப்பெற்றுள்ளதை அறியலாம்.

3.10.1 **ஆன்மா இறைவனை அடையும் வழிகள் :** வைணவ சமயத்தில் இதற்கு இரு வழிகள் கூறப்பெறுகின்றன. ஒன்று பக்தி ; மற்றொன்று பிரபத்தி ; கரும, ஞான, யோகங்களின் மூலம் பக்தி யோகம் சரியான பக்குவநிலை பெறுகின்றது. எப்பலனையும் எதிர்பாராமல் செய்யப்பெறும் கருமத்தால் மனம் தூய்மையடைகின்றது. இஃது ஆன்மா வழிபாட்டில் அழுந்த வழியாகவும் அமைகின்றது. கருமத்தின் அடுத்த நிலையாகிய ஞானயோகம்,

"ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்தன் நாமங்கள்
தானத்தால் மற்றுஅவன் பேர் சாற்றினால்—வானத்து
அணியமரர் ஆக்குவிக்கும்"[88]

என்ற பாசுரத்தால் அறியப்பெறுகின்றது. வழிபாட்டின் மூலம் (தியானம்) ஆன்மா தன் உண்மை நிலையை உணர்ந்து, தான் இறைவனைச் சார்ந்திருக்கும் நிலையை அறிகின்றது. அதன்பிறகு அது இறைவனை அடைய அவாக்கொண்டு, தியானத்தில் அழுந்துகின்றது. ஞானத்தைப் போல் பக்தியிலும் தியானநிலையுண்டு. இந்நிலையில்தான் ஆன்மா தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை அறிகின்றது.

"உய்த்து உணர்வு என்னும் ஒளிகொள் விளக்கேற்றி
வைத்து அவனை நாடி வலைப்படுத்தேன்"[89]

என்ற பேயாழ்வாரின் பாசுரத்தில் இந்நிலையை அறியலாம்.

ஞானமே பக்தி நிலையாக முதிர்கின்றது. இதையே "ஞானம் கனிந்த நலம்"[90] என்று அமுதனார் குறிப்பிடுவது நினைக்கத்தக்கது. பக்தி முதிர்ந்து முழுநிலையினை அடையுங்கால் ஆன்மா இறைவனையே காண்கின்றது.

பகவானுடைய திருநாமங்களைச் சொல்வதால் ஏற்படும் பெருமைகளைப் பற்றிப் பொய்கையாழ்வார் பல இடங்களில் பேசுகிறார்.[91]

"நாவாயில் உண்டே ; நமோநார ணாஎன்று
ஓவா துரைக்கும் உரையுண்டே"

பூதத்தாழ்வாரும் அவ்வாறே பேசுகிறார்.[92] பேயாழ்வாரும்,

"நாமம் பல சொல்லி நாரா யணாஎன்று
நாம்அங்கை யால்தொழுதும் நன்னெஞ்சே"[93]

என்று தன் உள்ளத்திற்குக் கூறுகிறார். மேலும் அவர், 'அவன்' பேர் ஓதுவது பற்றிப் பல பாசுரங்களில் பாடுகின்றார்.[94] எம்பெருமானுடைய திருவடிகளைத் தொழுவார், நலம் அந்த மில்லாதோர் பரமபதத்தை அடைவர் என்பதை மூவரும் ஒருமித்த குரலில் ஓதுகின்றனர்.[95]

"இவர்கள் காலம்வரை வேத விதிகளைத் தவறாது மேற்கொண்டுவந்த மிகவும் கடினமான பிராமண மதம் பாகவத மதமாகத் திருத்தப்பெற்றது. இத்திருத்தம் பக்தி மார்க்கத்தை அடிப்படையாகக்கொண்டவர்களால் ஏற்படுத்தப்பெற்றது. பக்திமார்க்கத்துறை ஏற்பட்டு, தெய்வ வழிபாடு எளிதான வழியில் மாறி பிராமண மதம் என்னும் கடினமதம் பாகவத மதம் என்னும் சுலபமான மதமாக மாறி, இவ் ஆழ்வார்கள் காலத்தில் முற்றிலும் வேரூன்றி நித்திய வழிபாட்டில் வழங்கப்பட்டு வந்தது." என்கிறார் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்[96]

"இனிமேல் நரகத்தின் வாயிலை யார் அடைவார்கள் ? அதன் கதவுகளை நன்றாக அடையுங்கள் ; ஏனெனில் இந் நாவலந்தீவில் இருப்பவர்களுக்கு கண்ணபிரானின் திருவடிகளே சொந்தம்" — என்று பொய்கையாழ்வார் அறைகூவல் விடுக்கின்றார்[97]. இதனால் இப்பக்திநெறி அக்காலத்தில் எவ்வளவு வலிவு அடைந்துவிட்டது என்று தெரிகின்றது.

செந்தமிழால் திருமாலைப் புனைந்து பாடும் பெரும்பேறு தமக்கு வாய்த்ததை எண்ணிப் பூதத்தாழ்வார் மகிழ்கின்றார் :

"யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் — யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழ னல்லேன் பெரிது"[98]

3.10.2 **யாப்பும் அணியும் :** முதல் இரண்டு, மூன்று திருவந்தாதிகளிலும் உள்ள முந்நூறு பாடல்களில் இரண்டாம் திருவந்தாதியில் உள்ள 19-ஆம் பாடல் மட்டும் இன்னிசை வெண்பாவாகும். இது இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் அமைந்தது. ஏனைய 299 பாசுரங்களும் செம்பாகமான நேரிசைவெண்பாவால் அமைந்தவை.

முதல் திருவந்தாதி 47-ஆம் பாடலிலும், மூன்றாம் திருவந்தாதி 89-ஆம் பாடலிலும் பின் இரண்டடிகளில் ஆசெதுகை அமைந்துள்ளது.

| | |
|---|---|
| மெய்ஞ்ஞானத்தால் | வேய்ங்கழை |
| கைந்நாகம் | தீங்குழல் |

வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் (நாள், மலர்) காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றைப்பெறும் என்னும் விதிக்கேற்ப ஈரசையில் முடியும்போது குற்றியலுகர இறுதி அமைய வேண்டும். ஆனால் முற்றியலுகர இறுதியும் அமையலாம் என்னும் யாப்பருங்கலக்காரிக்கை விதிப்படி[99] மூன்று திருவந்தாதிகளிலும் இவ் அமைப்பைக் காணமுடிகிறது.[100]

**அணி :** சொற்பொருள் பின்வருநிலையணி முதல் திருவந்தாதியில் இரு பாடல்களிலும் (68, 99) இரண்டாம் திருவந்தாதியில் ஒரு பாடலிலும் (81) மூன்றாம் திருவந்தாதியில் முதல் பாடலிலும் அமைந்துள்ளது. முதல் திருவந்தாதியில் ஐந்து, ஐம்பத்துநான்கு, எழுபத்தேழு ஆகிய எண் உள்ள பாசுரங்களில் நிரல்நிறையணி அமைந்துள்ளது.

முதல் திருவந்தாதியில் ஐம்பத்தெட்டு, நாற்பது ஆகிய பாடல்களிலும், மூன்றாம் திருவந்தாதியில் ஐம்பத்தெட்டு, அறுபத்தெட்டு ஆகிய பாடல்களிலும்

மயக்கணி அமைந்துள்ளது. இயல்பு நவிற்சி அணி பெரும்பாலும் பல பாடல்களில் அமைந்துள்ளது.

3.11 *முடிவுரை* : இம்மூவரது அந்தாதிப் பிரபந்தங்கள் இவர்களது பழமையைத் தெரிவிக்கின்றன. வைணவ பக்தி இயக்கத்தின் முன்னோடிகளான இவர்கள் சைவபத்தி இயக்க முன்னோடிகளான காரைக்காலம்மை, திருமூலர் ஆகியோர் காலத்தைச் சார்ந்தவர் என்பது அறியத்தக்கது. அம்மையார் அரி அயனின் இணைந்த உருவைக் கண்டு சமயப்பொறையும் இணைவும் இருந்த ஒருகாலத்தை, கருத்தைப் புலப்படுத்தியது போன்று பேயாழ்வாரும் ஒரே உருவில் சிவன் திருமால் கோலம் காண்கிறார்.

பரிபாடல் பாண்டிய நாட்டின் திருமாலிருஞ்சோலை மலையை முதன்மையாகப் புகழ, சிலப்பதிகாரமே திருவேங்கடத்தில் திருமாலின் நின்ற திருக்கோலத்தைப் பாடிப் பரவுகின்றது. முதலாழ்வார் மூவரும் திருமாலையப்பனையும் அவன் வீற்றிருந்த வேங்கடமலையையும் புகழ்வது, பக்திப்பாடலின் தலச்சார்பாகிய பொதுமையை ஒட்டி அமைகின்றது. இறையில் இயற்கையையும், இயற்கையில் இறையையும் இணைத்துக் காணும் பாங்கும் இங்குச் சுட்டற்குரியது.

பிற சமயக் கண்டனம் இடம் பெறாமை, கொந்தளிப்பற்ற அமைதியான பக்திப்பெருக்கம் ஆகியன இம்மூவர் பாடலின் சிறப்புக் கூறுகளாகும். தல வழிபாடு இறைவழிபாட்டுப் பயனையளிக்கும் என்ற எண்ணம் இவர்களிடம் காணப்படுகின்றது. பக்திப் புலவர்க்குப் பொதுவான "தன்னனுபவம் கூறல்" இவர்கள் பாடலிலும் அமைந்து இவர்கள் இறைவனைக் கண்டமையைக் கூறுகின்றது. "மாதவனின் பெயரைச் சொல்வதே வேதங்களின் சாரம்" எனச் சமயநெறி காட்டலும், எம்பெருமானின் திருவடிப் பெருமையைப் போற்றுதலால் வழிபாட்டு நெறிகாட்டலும் இவ் ஆழ்வார்களிடம் அமைகின்றன.

**அடிக்குறிப்புகள் :**

1. தமிழ்லெக்சிகன், ப. 253, சென்னைப் பல்கலைக்கழகம், 1936.
2. மேலது – ப. 254.
3. உபதேசரத்தினமாலை – 4.
4. இக்குளம் ஊஞ்சல் மண்டபத்திற்கருகில் உள்ளது. அருகில் பூதத்தாழ்வார் உருவம் பொறித்த கற்சிலை உள்ளது.
5. இக்கிணறு 'மணிகரவிணி' எனப்படும். இது மயிலை அருண்டேல் தெருவில் உள்ளது.
6. எதிராஜ ராமானுஜதாஸன், 'குருபரம்பரை வைபவம்', முதற்பதிப்பு, (சென்னை, 1982) பக். 2–3 மற்றும் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் (பதிப்.) ஆறாயிரப்படி குருபரம்பராப்பிரபாவம், முதல்பதிப்பு, (திருச்சி, 1980), பக். 8–12.
7. செந்தமிழ், (மதுரை, 1902–3), பக். 264–71.
8. எஸ். குலசேகரன், 'வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை', முதல்பதிப்பு, (சென்னை, 1988), பக். 7-16.
9. புறம். 48.
10. நற். 18.
11. தமிழண்ணல், 'தமிழ்மணி'–கேள்வி அரங்கம் பகுதி, தினமணிசுடர், தினமணி இணைப்பு, சென்னை, ஆகஸ்டு 8, 1992, ப. 22.
12. முத. திரு. 69 & 51.
13. பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர், நற்றிணை உரை, முதல்பதிப்பு, (சென்னை–ஆண்டு இல்லை), ப. 61.
14. திருவாய்மொழி. 7 : 9 : 6.
15. பெரி. திரு. 2 : 8 : 2.
16. இர. திரு. 75.
17. இரா. நூ. 8.
18. மேலது – 9.
19. இரா. நூ. 10.
20. வி. பா. சிறப்புச் செய்யுள். 9.

21. முத. திரு. 86.
22. இர. திரு. 70.
23. முத. திரு. 25.
24. ஸ்ரீவசனபூஷணம். சூத். 42.
25. முத. திரு. 26.
26. மேலது – 27.
27. மேலது – 37.
28. மேலது – 38.
29. மேலது – 40.
30. மேலது – 39.
31. மேலது – 68.
32. மேலது – 76.
33. மேலது – 77.
34. மேலது – 82.
35. மேலது – 99.
36. ஸ்ரீவசனபூடணம். சூத்திரங்கள் : 174, 175, 176.
37. மூன். திரு. 40.
38. நான். திரு. 86.
39. இர. திரு. 25.
40. மேலது – 28.
41. மேலது – 33.
42. மேலது – 46.
43. மேலது – 53 ; மு. இராகவையங்கார் இப்பாடலுக்கு வேறுபொருளைக் காண்பர். 'வழியிடையுள்ள யானையைக் குன்று என்று கருதிக் கொடிகள் தங்கும்' என்பது அவர் காணும் பொருளாகும் (ஆழ்வார்கள் காலநிலை, பக். 303–305).
44. இர. திரு. 54.

45. பெரியார். திரு. 5 : 4 : 9.
46. ஸ்ரீவசனபூடணம் – சூத். 177.
47. இர. திரு. 72.
48. மேலது – 75.
49. பெரி. திரு. 1 : 2 : 5.
50. கம்ப. அயோத்.சித்திரகூடம் – 10.
51. மூன். திரு. 14.
52. மேலது – 26, 30 & 62.
53. மேலது – 32.
54. மேலது – 39 'மலைமேல் தான்நின்று என் மனத்துளிருந்தானை' – என்னும் திருவாய்மொழியும் 10:4:4 - இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.
55. மேலது – 61.
56. மேலது – 63.
57. இப் பாசுரப்பொருளை நன்கு விளக்கி பூதூர் வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள் எழுதியுள்ள விளக்கத்தை, அவர் பதிப்பித்துள்ள நாலாயிர திவ்வியப்பிரபந்தம் பின்னிணைப்பு - 1, பக். 165-170 முடிய காண்க.
58. மூன். திரு. திவ்யார்த்த தீபிகை - பக். 59-60.
59. மூன். திரு. – 69.
60. மேலது – 73.
61. மேலது – 72.
62. மேலது – 89.
63. மேலது – 58.
64. மேலது – 68.
65. மேலது – 70.
66. மேலது – 45.
67. தொல். பொருள் மரபியல், சூத்.33.
68. மேலது – சூத்.34.

69. மூன். திரு. 71.
70. மேலது – 75.
71. முத. திரு. 47.
72. மேலது – 43.
73. மேலது – 41.
74. மேலது – 35.
75. மேலது – 53.
76. இர. திரு. 5, 6, 7, 11.
77. மேலது – 39.
78. மேலது – 36, 44.
79. மேலது – 57.
80. மூன். திரு. 18.
81. மேலது – 94.
82. முத. திரு. 1.
83. இரா. நூ. 8.
84. இர. திரு. 1.
85. மூன். திரு. 1.
86. பரிபாடல். 13 : 14–25.
87. முத. திரு. 12, 29, 92 மற்றும் இர. திரு. 24.
88. இர. திரு. 2.
89. மூன். திரு. 94.
90. இரா. நூ. 66.
91. முத. திரு. 11, 56, 63, 72, 95.
92. இர. திரு. 2, 21, 50, 93, 100.
93. மூன். திரு. 8.
94. மேலது – 10, 17.

95. முத. திரு. 13, 16, 30, 47, 58, 87.
இர. திரு. 84, 90, 91.
மூன். திரு. 2, 77, 99.

96. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், 'ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தான வரலாறு' முதல் பதிப்பு (மொழி) டி. வி. எஸ். ராகவன், (சென்னை, 1984). பக். 32-34.

97. முத. திரு. 87.

98. இர. திரு. 74.

99. யாப்பருங்கலக்காரிக்கை – எண். 29, பக்கம் 76.

100. முத. திரு. 69 – சொல்லு – முற்றியலுகர இறுதிச்சொல்
இர. திரு. 88 – கதவு – முற்றியலுகர இறுதிச்சொல்
மூன். திரு. 21 – வடிவு – முற்றியலுகர இறுதிச்சொல்
மேலது – 56 – பொலிவு – முற்றியலுகர இறுதிச்சொல்
மேலது – 58 – வாழ்வு – முற்றியலுகர இறுதிச்சொல்
மேலது – 62 – தாழ்வு – முற்றியலுகர இறுதிச்சொல்
மேலது – 99 – சார்வு – முற்றியலுகர இறுதிச்சொல்

## இயல் — நான்கு
## திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவம்

4.0 முன்னுரை

4.1 வரலாறும் காலமும்

4.2 குடமூக்கிற் பகவர்

4.3 திருமழிசையாரும் சிவவாக்கியரும்

4.4 திருமழிசையாரின் நூல்கள்

4.4.1 கவிதைப்பொருள்

4.4.2 கண்ணபிரான் ஓதிய வாக்கு

4.4.3 பக்தியோகம்

4.4.4 இவர் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள்

4.5 திருச்சந்த விருத்தம்

4.5.1 திரண்ட கருத்துகள்

4.6 வைணவ தத்துவக் கருத்துகள்

4.7 இவர்தம் ஏற்றம்

4.8 இவர் காலச் சமயநிலை, அரசர்தம் திருப்பணிகள்

4.9 திருமழிசையாரின் திருவுள்ளம்

4.9.1 திருமாலை அடையும் நெறிகள்

4.9.2 தனக்காக வேண்டுதல்

4.9.3 சொல்லாட்சித்திறம்

4.10 இவர் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் பற்றி ஓர் ஆய்வு

4.11 முக்கோற்பகவர்

4.12 முடிவுரை

## இயல் — நான்கு

## திருமழிசையாழ்வார் காலத்தில் வைணவம்

4.0 **முன்னுரை** : முந்திய இயலில் முதலாழ்வார்கள் பற்றி ஆராய்ந்து கூறினோம். இவ்வியலில் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியான திருமழிசையாழ்வார் பற்றி ஆராய்கின்றோம்.

பக்தி இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் வைதிக சமயப் பிரிவுகளான சைவமும் வைணவமும் புறச் சமயங்களான சமண, பௌத்த சமயங்களை வெற்றி கொள்வதில் முழுமையான கவனம் செலுத்தின. சைவ நாயன்மார்களான திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் சமண சமயத்தினருக்கு எதிராகப் பேரியக்கங்களை நடத்தியதைப் பக்தி இயக்க வரலாறு தெளிவுறுத்துகின்றது. பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மனும் பாண்டிய மன்னனான நின்றசீர் நெடுமாறனும் முறையே திருநாவுக்கசராலும் திருஞான சம்பந்தராலும் சைவ சமயத்திற்கு சமணத்திலிருந்து மாற்றப்பெற்றனர். நாட்டை ஆளும் மன்னர்களின் முழுமையான ஆதரவு சைவ சமயத்திற்குக் கிடைத்தது. நிலவுடமையாளர்களான வேளாளர்கள் பெரும் அளவுக்குச் சைவ சமயத்தின் சார்பில் குரல் எழுப்பினர்.

இத்தகைய வரலாற்றுச்சூழல் வைணவ சமயப் பிரிவுக்குத் தொடக்க நிலையில் வாய்த்ததாகத் தெரியவில்லை. முல்லை நிலத் தெய்வமான மாயோன் வேதக் கடவுளருள் ஒருவராகிய விஷ்ணுவோடு இணைக்கப்பட்டுப் பாகவத சமயம் உருவாகிய நிலையில், அது பெரும்பாலும் நிலவுடைமையாளர்கள் அல்லாத ஆயர்களிடமும் கைவினைஞர்களிடமும் பரவியிருந்தது. அவர்கள் எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் குறைந்தே இருந்தனர். வளாந்து பெருகிக் கொண்டுவந்த சைவ சமயம் சிவபெருமானைத் தவிர ஏனைய திருமால், பிரமன் முதலிய தெய்வங்களை — மும்மூர்த்திகளில் இருவரை — முழுமுதற்கடவுளாக ஏற்றுக்கொள்ளாமல், சிவபெருமானுக்கு உட்பட்ட சிறுதெய்வமாகவே காட்ட முயன்றது. சிவபெருமானின் அடியையும் முடியையும் திருமாலும் பிரமனும் தேடிய கதை இந்தப் பின்னணியில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், திருமாலைச் சிவபெருமானின் தேவியாகச் சித்திரிக்கும் போக்கும் தோன்றியது.

இந்நிலைப்பாட்டுக்கு எதிரான முடிவை எடுக்கவேண்டிய நிலைக்கு வைணவ சமயம் தள்ளப்பட்டது எனலாம். சங்கரனையும் நாராயணனையும் ஒருருவில் வைத்துப் பாடிப் பரவிய நிலை மாறி, திருமாலின் பரத்துவத்தை மேலாம் தன்மையை நிலை நிறுத்த வேண்டிய கடப்பாடு வைணவர்களுக்கு ஏற்பட்டது. அடிமுடி தேடிய கதைக்கு எதிராகத் திருமால் உலகளந்த கதை தோன்றியது. சிவபெருமான் கங்கையைச் சடையில் தாங்கிய வராலாற்றுக்கு எதிராக, திருமால்

உலகளந்தபோது அவருடைய திருவடிகளில் அர்க்கியமாகப் பிரமன் பூசித்த புனித நீரே கங்கை எனப்பட்டது. வைணவ குருபரம்பரைக் கதைகள் கூறும் திருஞான சம்பந்தர் திருமங்கையாழ்வருக்குச் சீர்காழியில் வேல் வழங்கிய கதையை இந்தச் சூழலில் விளக்க வேண்டும்.

இத்தகையதொரு பின்னணியில் திருமழிசையாழ்வார் தோன்றுகின்றார். அகச் சமயங்களான சைவ, வைணவப் போராட்டங்கள் வெளிப்படையாகக் கிளர்ந்து எழத் தொடங்கிய ஒருகாலத்தில் இவ்ஆழ்வார் அவதரிக்கின்றார். வைணவ சமயத்தின் தனித்தன்மையையும் திருமாலின் பரத்துவத்துவதையும் உறுதியாக நிலைநிறுத்த வேண்டிய கட்டத்தில் இவருடைய வாழ்வு மலர்கின்றது. பல்வகைச் சமய நெறிகளையும் தத்துவங்களையும் யோக நெறியையும் கற்றிருந்த திருமழிசையாழ்வார் வைணவ சமயத்தின் சார்பாக அழுத்தம் திருத்தமாகப் பேசுகின்றார். இவரைத் தமிழ் வைணவ உலகு "மறந்தும் புறந்தொழா வீர வைணவர்" என்று கொண்டாடுகின்றது. அவரது வரலாறு, வைணவ சமயத்திற்கு அவர் ஆற்றிய பணி, அவருடைய நூல்கள் பற்றி இவ்வியல் ஆராய முயல்கின்றது.

4. 1 **வரலாறும், காலமும் :** பார்க்கவர் என்னும் முனிவர் காஞ்சிக்கருகிலுள்ள மகீசாரம் என்னும் வனத்தில் தவம் செய்துகொண்டிருந்தார். அவருக்கும் ஒரு தேவகன்னிகைக்கும் ஒரு மகவு பிறந்தது. இக்குழவி ஒரு பிரப்பம் புதரில் கிடத்தப்பெற்றிருந்தது.[1,2] இக்குழவி பிரம்பு விற்றுப் பிழைக்கும் குலத்தினரான திருவாளன் என்பவர் மனையில் வளர்ந்தது. இதே சமயத்தில் கணிகண்ணன் என்ற ஒருவன் நான்காம் வருணத்தவர் குலத்தில் பிறந்து வளர்ந்து வந்தான். நாளடைவில் இவன் திருமழிசையாரின் சீடனுமானான்.

ஒருசமயம் திருமழிசையார் தமக்குப் பணிவிடை செய்துவந்த ஒரு வயது முதிர்ந்த கிழவியை இளம் பெண்ணாக மாற்றியமை கண்டு, காஞ்சிநகர மன்னன் அவரையழைத்துத் தன்னையும் இளையனாக்குமாறு வேண்டினான். அதற்குக் கணிகண்ணன் இணங்க மறுத்தானாக, அரசன் வெகுண்டு அவர்களிருவரையும் நகரை விட்டேகுமாறு பணித்தான். உடனே பக்திசாரர் என்னும் திருமழிசையார் திருமாலிடம் சென்று,

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா-துணிவுடைய
செந்நாப் புலவன்யான் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்"

என்று பாட, பெருமாளும் அவர் சொன்னவண்ணம் (யதோக்த-காரி) செய்தார். காஞ்சியிலிருந்து உத்தரமேரூர் செல்லும் வழியில் சுமார் இரண்டு கி.மீ. தொலைவில் உள்ள "ஓர் இரவு இருக்கை" என்ற ஓர் இடத்தில் இவர்கள் தங்கியிருந்தனர்.[3]

பின்னர் அரசன் அப்பெரியார்களின் பெருமையை உணர்ந்து அழைக்க, உடன் ஆழ்வார் எம்பெருமானை நோக்கி,

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் — துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்"

என்று வேண்ட, அவரும் திரும்பிவந்து பள்ளிகொண்டனர். இந்நிகழ்ச்சியைத் தீவிர சைவப் பெரியாரான குமரகுருபர சுவாமிகளும்

" ...பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே"

என்று போற்றிப் பாடியுள்ளார்.

இவர் தாம் சீரிய வைணவராதற்கு முன் பல்வேறு சமய உண்மைகளைக் கண்டறிந்ததாக அவரது பாசுரங்களினின்றும் புலப்படுகின்றது.

''சாக்கியங் கற்றோம் சமண்கற்றோம் சங்கரனார்
ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம் — பாக்கியத்தாற்
செங்கட் கரியானைச் சேர்ந்துயாம் தீதிலோம்
எங்கட் கரியதொன் றில்''[4]

என்று கூறியதாகக் குரு பரம்பரை குறிப்பிடுகிறது.

இவர் 700 ஆண்டுகள் நிலவுலகில் தவம் புரிந்துவந்ததாகவும் கூறுவர். வாழ்நாளின் கடைப்பகுதியில் திருக்குடந்தையில் இருந்தனர் என்பது வரலாறு. திருக்குடந்தையிலிருந்தபோது இயற்றப்பட்டனவே இவரது நான்முகன் திருவந்தாதியும் திருச்சந்த விருத்தமும் என்பது பொதுவான நம்பிக்கை. இவர் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்த போது, முதலாழ்வார் மூவரும் அங்கு எழுந்தருளி, இவரைச் சந்தித்து அளவளாவிப் பிரிந்தனர் என்பர்.

இவர்தம் நான்முகன் திருவந்தாதிப் பாசுரத்தில் திருமாலை, 'குணப்பரனே' என்று விளிக்கின்றனர்.

''காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பன்
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும் — ஆக்கை
கொடுத்தளித்த கோனே ! குணப்பரனே ! உன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்''[5]

என்று பாடுகிறார். குணபரன் என்ற பெயர் முதல் மகேந்திரவர்மனுக்குரியதென்பதைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.[6] முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி. 591—630) பரமபாகவதனான சிம்மவிஷ்ணு — I-வின் மகன் என்ற வகையில் ஆரம்ப காலத்திலாகிலும் வைணவனாக இருந்திருக்கக்கூடும். காஞ்சிக்கருகில் மகேந்திரவாடியில் இவன் அமைத்த விஷ்ணுக்கிருகமும், மாமண்டூரிலுள்ள ஒரு குகைக்கோயிலும் இவன் ஒரு சமயம் வைணவனாக இருந்ததைக் காட்டுகின்றன. எனவே அப்பெயர் வைணவனாயிருந்த மகேந்திரவர்மனைப் பெருமை செய்யும் முறையிலோ, பல சமயங்களிலும் அலைந்து கடைசியில் வைணவம் புக்க தனக்கு நேர் மாறாக, வைணவத்தில் தொடங்கி, சமணத்தில் சிலகாலம் இருந்து, பின் சைவம் சார்ந்த மகேந்திரனுக்குக் குணபரன் என்ற பெயர் அடுக்காது, அது அனைத்து நற்குணங்களுக்கும் இருப்பிடமான திருமாலுக்கே பொருந்தும் என எண்ணி, அவ்வரசனை இகழ்தல் பற்றியோ தான் மழிசையாரால் எடுத்தாளப் பெற்றிக்கவேண்டும், என எஸ். குலசேகரன் அவர்கள் கருதுகின்றார்.[7] அவ்வாறெனில் முதலாழ்வார்கள் காலம் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் அமைந்தது. திருமழிசையாழ்வார் முதலாழ்வார்களைத் திருவல்லிக்கேணியில் சந்தித்த வரலாறு இக்கொள்கைக்குத் தடையாகும். எனினும் திருமழிசையார் நீண்ட காலம் வாழ்ந்தனர் என்ற திவ்விய சூரி சரித வரலாறு கொண்டு இவர்கள் சந்திப்பும் ஏற்கக்கூடியதாகலாம்.

4.2. குடமூக்கிற் பகவர் : குடமூக்கிற் பகவர் — என்ற பெயர் யாப்பருங்கல விருத்தியுரையில் காணப்படுகின்றது. அந்நூலின் உரையாசிரியர் அவரை ஆக்கவும் கெடுக்கவும் பாடவல்ல ஆற்றலுடையவராக முதலாழ்வார்களுடன் ஒப்பக் கூறியுள்ளார். மேலும், அதில் குடமூக்கிற் பகவர் இயற்றிய 'வாசுதேவனார் சிந்தம்' என்ற நூலே திருமழிசையாரின் திருச்சந்த விருத்தம் என்று மு. இராகவையங்கார் அவர்கள் கூறும் கருத்து ஏற்கத்தக்கது எனலாம்.[8]

4.3 திருமழிசையாரும் சிவவாக்கியரும் : குருபரம்பரைகள் திருமழிசையார் சைவராய் இருந்த காலத்தில் சிவவாக்கியர் என்ற பெயருடன் இருந்தார் என்று கூறும். சிவாக்கியர் பாடல்களில் 308, 237, 266, 265, 264, 268 ஆகியன முறையே ஆழ்வார் திருச்சந்த விருத்தத்தின் 1, 2, 3, 4, 17, 79-ஆம் பாடல்களுடன் ஒத்திருத்தல் இதற்குத் துணையாகின்றது. இச்சிவவாக்கியர் தேவார மூவர்க்கும், மாணிக்கவாசகருக்கும் கூடப் பிற்பட்டவராகப் பட்டினத்தாரால் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் குறிப்பிடப்பெறுகிறார். பாடல் வருமாறு :

"வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்தமார் சிவவாக் கிய தேவரும். . ."[9]

மேலும் திருமழிசையாரின் ஏனைய பாடல்களுடன் ஒப்பிடத்தக்கவையாகச் சிவவாக்கியரின் பாடல்கள் அமையவில்லை. அவை இலக்கியத் தரத்தில் தாழ்ந்தவையாக உள்ளன என்று திறனாய்வாளர் கருதுகின்றனர்.[10] எனவே இருவரும் ஒருவராகார் என்பது துணியப்பெறும். குருபரம்பரைகள் கூறுவதை நாம் ஏற்பதாயின் திருமழிசையாரை முதலாம் சிவவாக்கியர் என்று கொள்ளலாம். திருமழிசையார் சைவராக இருந்தபோது இயற்றிய பாடல்களில் வைணவக் கோட்பாடுகளுக்கு உகந்தவற்றை மட்டும் திருச்சந்த விருத்தத்துள் கோத்தமையே மேற்காட்டிய பாடல்கள் இரண்டிடத்தும் காணப்படுவதன் காரணம் ஆகலாம்.[11]

4.4 *திருமழிசையாரின் நூல்கள்* : இவர் அருளிச்செய்தன நான்முகன் திருவந்தாதியும், திருச்சந்தவிருத்தமும் ஆகும். தொண்ணூற்றாறு பாசுரங்களைக் கொண்ட நான்முகன் திருவந்தாதி முதலாழ்வார்தம் பாக்களைப்போல வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. நூற்றிருபது பாசுரங்களைக் கொண்ட மற்றொரு பிரபந்தம் 'திருச்சந்த விருத்தம்' என்பது. இது விருத்தப்பாக்களால் ஆகியது. ஆகவே இவ் ஆழ்வார் ஒரு நூலில் முதலாழ்வார்களுடன் கைப்பிடித்துக்கொண்டு, மற்றொரு கையைப் பின்வருபவர்களுக்குக் கொடுக்க இரண்டாவது நூலை விருத்தத்தில் பாடினார் எனலாம். இவர் மறந்தும் புறந்தொழா வீரவைணவர் என்பதை,

> "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
> தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் — யான்முகமாய்
> அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளை
> சிந்தாமல் கேண்மினீர் தேர்ந்து"[12]

என்று பாடித் திருமாலுக்கே பரத்துவம் கூறுவதால் அறியலாம்.

வைணவ சமயக் கொள்கைப்படி ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற்கடவுள் ; இப்பெருமான் எப்பொழுதும் மாறுபடாத தன்மையுடையவன் ; ஞானவடிவானவன்; இங்குத்தான் உள்ளான் என்று தேயத்தாலும், இப்பொழுதுதான் உள்ளான் என்று காலத்தாலும் கணிக்க முடியாதவன் ; சித்து, அசித்து ஆகிய இரண்டும் இவனுடைய உடலாய்த் திகழும். இதனை ஆழ்வார்,

> "நீயே உலகெல்லாம் ; நின்னருளே நிற்பனவும் ;
> நீயே தவத்தேவ தேவனும் ; நீயே
> எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
> இருசுடரும் ஆய இவை"[13]

என்று விளக்குவர். இவனே முழுமுதற்கடவுள் என்பதை,

> "தேருங்கால் தேவன் என்றுரைப்பர் ;
> ஆரும் அறியார் அவர் பெருமை — ஒரும்

பொருள்முடிவும் இத்தனையே எத்தவம் செய்தார்க்கும்
அருள் முடிவது ஆழியான் பால்"[14]

என்ற பாசுரத்தால் விளக்கிக் கூறுவர்.

"ஆராயுமிடத்து மேலான தெய்வமாகவுள்ளவன் திருமாலே என்று முனிவர் கூறுவர் ; அவன் பெருமையை ஒருவரும் அறிய மாட்டார் ; வேத-வேதாந்தங்களில் ஆராயப்படும் பொருளின் நிர்ணயமும் இவ்வளவேயாம். இப்படிப்பட்ட பெருமானை அடைவதற்குக் கருமம், ஞானம், பக்தி முதலிய உபாயங்களைக் கடைப்பிடித்தாலும் முடிவில் பலனையளிப்பது எம்பெருமானிடத்து உண்டாகும் அருளேயாகும். அவனை அடைய எத்தவம் செய்தாலும் இயலாது;அவனுடைய திருவருளே பலன் அளிக்கவல்லது," என்பது கருத்தாகும்.

"இப்பொழுது என் மனம் அவனை இருப்பிடமாகக் கொண்டுள்ளது. அரவணையில் பள்ளிகொண்டிருப்பவன் என் மனத்தில் உள்ளான். அப்பெருமானுக்குச் சமமாகச் சிவனையும், அயனையும் வைக்கமாட்டேன்"[15]என்று உறுதிபடக் கூறுகிறார்.

"சிவன் தட்சிணாமூர்த்தி வடிவமாக நான்கு முனிவர்களுக்கு உபதேசித்தது என்னவெனில், தானே உலகளந்த திருமாலைத் தொழுகிறேன்[16] என்பதே என்று பிறிதொரு பாடலில் கூறுகிறார். மேலும், திருமால் உலகளந்தபோது, பிரமன் திருமாலின் திருவடியைக் கழுவியதாகவும், அந்நீரைச் சிவபிரான் புனிதநீராகத் தம் சடையில் ஏற்றதாகவும் கூறுவர்.[17]

4.4.1 **கவிதைப்பொருள்** : காதலும், வீரமும் கவிதைக்குரிய கருப்பொருளாக இருந்துவந்த பண்டைய இலக்கிய மரபை மறுத்து, எம்பெருமானே அச்சிறப்பிற்குரிய அரும்பொருள் என்று கூறிய முதற்கவி இவரே ஆவர்.

. . . . "கவிக்கு
நிறை பொருளாய் நின்றானை நேர்பட்டேன் பார்க்கில்
மறை பொருளு மத்தனையே தான்"[18]

4.4.2 **கண்ணபிரான் ஓதிய வாக்கு** : பகவத்கீதையின் சாரமான சரமச்சுலோகக் கருத்தை — "நீ என்னையே சரணமாகக் பற்றினால் நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் ; கலங்க வேண்டா" என்பதனை ஒரு பாசுரத்தில் மொழிகின்றார். அதன் பொருளினை அறியப் பெற்றவர்களே தத்துவஞானம் அடைந்தவராவர் ; பிறர் பகைவராவர் "என்று முழங்குகின்றார்.[19]

4.4.3 **பக்தியோகம்** : "பக்திசாரர்"என்ற பெயருக்கேற்ப, இவர் பக்தியே வடிவெடுத்த பரமயோகியாவார்.

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது"[20]

இவருடைய பக்தியின் ஊற்றத்தை, திருமலை என்றவுடன் மோட்சம் சித்தமாயிற்று வேதங்களின் வலையில் அகப்பட்டு, நிலையாயுள்ள திருமகள் நாதனின் திருவடிகளாகிய வலையில் அகப்பட்டுத் தடுத்து நிற்கின்றேன்"[21] என்று பாடும் இடத்து அறிந்து மகிழலாம். மேலும்,

"பெறற்கரிய நின்னபாத பக்தியான பாசனம்
பெறற்கரிய மாயனே எனக்கு நல்க வேண்டுமே"[22]

என்று திருச்சந்த விருத்தத்தில் வேண்டுவதை, நான்முகன் திருவந்தாதியிலும்,

"கிளர்ஒளி என்கேசவனே கேடின்றி
ஆள்வாய்க்கு அடியேன் நான் ஆள்"[23]

என்று வற்புறுத்திக் கூறுவதைக் காணலாம்.

"அவன் தாளை வணங்குவதற்கு அவன் அருளே தேவை"—என்பதை மாணிக்கவாசகர் அருமையாகக் குறிப்பிடுவார். "பரந்த சிந்தை ஒன்றிநின்று நின்னபாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்க வேண்டுமே"[24] என்னும் இவர் வாக்காலும் அக்கருத்து விளக்கப்படுகிறது.

4.4.4.4 இவர் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் : பதினான்கு திருத்தலங்களை இவர் பாடியுள்ளார். அவற்றுள், அல்லிக்கேணி, ஊரகம், எவ்வுள், பாடகம், வெஃகா, வேங்கடம் என்பன தொண்டைநாட்டுத் திருத்தலங்களாம். இவற்றுள் திருமலையைப் பற்றியும், அவ் எம்பெருமானைப்பற்றியும் பாடியுள்ள பாடல்களின் கருத்தைச் சுருக்கமாகக் காண்போம்.

"திருமலையில் சொரியும் அருவிகள் இரத்தினங்களைத் திரட்டிக்கொண்டு வந்து இழிய, அவற்றின் ஒளியைக் கண்டு கொள்ளிவட்டம் என மருண்டு, யானைகள் பயந்து நிற்கும் ; மலைப்பாம்புகள் அவற்றை மின்னலாகக் கருதி மயங்கிப் புற்றிலே சென்று மறையும் ; அப்படிப்பட்ட திருமலையைச் சென்று அடைய வேண்டும் என்று கூடல் இழைக்கின்றேன்."[25]

"திருமலையில் திருவோணத் திருநாளில் வேதபாராயண ஒலி அதிரும் ; நீ என் நெஞ்சில் புகுந்துவிட்டாய் ; எனினும் நான் அத்திருமலையில் சென்று சேவிக்க விரும்புகின்றேன்"[26].

"நான்முகனும் சிவனும் எப்பொழுதும் தாமரை மலர்களை இட்டு, அப்பெருமானைத் துதிப்பர் ; அப்படிப்பட்ட திருமலையைச் சென்று வணங்குங்கள்"[27].

"முன்பு இராவணன் தன் பத்துத்தலைகளையும் மறைத்துக்கொண்டு பிரமனிடம் வரம் பெற வந்தபோது, திருமால் குழவியாய் பிரமன் மடியில் இருந்து தன் திருவடியால் பத்துத்தலைகளையும் எண்ணிக்காட்டி, வந்தவன் யார் என்பதை உணர்த்தினன்" அத்தகைய பெருமான் நிற்குமிடமான திருமலைக்கே விருப்பொடு செல்லுங்கள்"[28].

"திருமலை மண்ணுலகத்தவர்க்கு மட்டுமன்றி, விண்ணவர்க்கும் நிதியாய் இருக்கும்"[29]. சந்திரனைக் கண்ட ஓர் யானை, இதை நம் துதிக்கையால் பிடித்து எடுத்து, திருமலையப்பனின் சந்நிதியில் நந்தாவிளக்காக வைத்தால் நன்றாக இருக்கும் என்று கைநீட்டுகையில், வேடர்கள் மெல்ல அருகில் வந்து அவ் யானையை வளைத்துக்கொள்ள, குறவர் அம்பு தொடுக்கின்ற மலையாகும் அது."[30]

"நித்தியசூரிகளால் தொழப்படுவதும் திருமலையே ; பாவங்களையும் உடல் நோய்களையும் தீர்க்கவல்லதும் திருமலையே ; அசுரர் மாய, தேவரைக் காத்தருளும் பெருமானுடைய மலை திருவேங்கடமேயாகும்."[31]

இவ்வாறு நான்முகன் திருவந்தாதி முழுவதும் பெருமானின் பரத்துவத்தை நன்கு நிறுவி, இறுதியாக,

> "இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் ;
> இனி அறிந்தேன் எம்பெருமான் ! உன்னை-இனி அறிந்தேன் ;
> காரணன் நீ ; கற்றவை நீ ; கற்பவை நீ ; நல்கிரிசை
> நாரணன்நீ ; நன்கு அறிந்தேன் நான்"[32]

என்ற பாசுரத்துடன் முடிப்பர்.

4.5 **திருச்சந்த விருத்தம் :** இப்பிரபந்தம் நூற்றிருபது பாசுரங்களைக் கொண்டது. இந்நூலின் முதல் பாதியில் வைணவர்களின் முக்கிய கொள்கையான திருமால்தான் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவர் என்பதை நிலைநிறுத்துகிறார். இப்பகுதியில் பாஞ்சராத்திரக் கொள்கையான பரத்துவ, வியூக, விபவ முதலிய தத்துவங்களைத் தெளிவாகக் கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| பரத்துவம் | - | வைகுந்தத்தில் இருக்கும் இருப்பு. |
| வியூகம் | - | பரவாசுதேவன் இவ்வுலகில் முத்தொழிலை நடத்தவும், அடியார்கட்குத் தண்ணளி சுரப்பதற்கும் வாசுதேவன், |

சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் வடிவங்கொண்டு இருக்கும் நிலை.

இந்நிலையைத் திருமழிசையாழ்வார்,

"ஏகமூர்த்தி மூன்று மூர்த்தி நாலுமூர்த்தி நன்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி எண்ணில் மூர்த்தியாய்
நாகமூர்த்தி சயனமாய் நலங்கடற் கிடந்துமேல்
ஆகமூர்த்தி யாயவண்ணம் என்கொலாதி தேவனே"[32]

என்ற பாசுரத்தில் குறிப்பிடுவர்.

| | | |
|---|---|---|
| இதில் ஏகமூர்த்தி என்பது | - | பரவாசுதேவனை |
| மூன்றுமூர்த்தி என்பது | - | சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் ஆகிய அவதாரங்களைக் குறிப்பிடுவது. |
| நாலுமூர்த்தி என்பது | - | பிரதானம், புருடன் (சீவான்மா) அவ்யக்தம் (நுண்நிலை) காலம் என்ற தத்துவங்களாகும். |
| போகமூர்த்தி என்பது | - | போகத்துக்குத் தகுதியுள்ள (அர்உறமான) வடிவம். |
| புண்ணியத்தின் மூர்த்தி என்பது | - | புண்ணியமே வடிவுகொண்ட ஓர் உருவம். |
| நாகமூர்த்தி என்பது | - | ஆதிசேடன்மேல் உறங்குவான்போல் யோகுசெய்யும் பெருமான். |
| ஆகமூர்த்தி என்பது | - | அர்ச்சாவதாரம் இப்படியாக வேண்டும் என்று சங்கல்பித்துக் கொண்டு தோன்றிய மூர்த்தி (ஆ) யாகமூர்த்தி > ஆகமூர்த்தி. |
| இவற்றுள் வாசுதேவ வடிவமான பரத்துவத்தில் | - | ஞானம், சக்தி, பலம், செல்வம், வீரியம், தேஜஸ் (ஒளி) என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். |

ஏனைய மூன்றிலும் அவரவர் மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| 1. சங்கர்ஷணனிடம் | - | ஞானம், பலம் என்ற இரு குணங்களும், |
| 2. பிரத்யும்நனிடம் | - | ஐசுவரியம், வீரியம் என்ற இரு குணங்களும், |

3. அநிருத்தனிடம் - சக்தி, தேஜஸ் என்ற இரு குணங்களும் கூடியிருக்கும்.

*அ) கிளைவியூகங்கள் :* மேற்கூறிய நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பன்னிரண்டு கிளைவியூகங்களாகப் பிரியும்.

1. வாசுதேவனிடத்து - கேசவன், நாராயணன், மாதவன் என்ற கிளைகளும்,
2. சங்கர்ஷணனிடத்து - கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் என்ற கிளைகளும்,
3. பிரத்யும் நனிடத்து - திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன் என்ற கிளைகளும்,
4. அநிருத்தனிடத்து - இருடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்ற கிளைகளும் தோன்றி அவ்வத் திருப்பெயர்களைப் பெறும். இவற்றின் அறிகுறியாக வைணவர்கள் தம் உடலில் பன்னிரு இடங்களில் திருமண் காப்பிட்டுக் கொள்வர்.

*விபவம் :* அவதாரங்கள், இவை ஆதிஅம் சோதிஉருவை அங்கு வைத்து இங்குப் பிறந்தவையாகலின், பிறப்பு இறப்பு அற்றவனான இறைவனது தன்மைகளைக் கொண்டவை.

*அந்தர்யாமித்துவம் :* சேதனர்களின் இதயக் கமலத்துள்ளே எழுந்தருளியிருக்கும் இருப்பு.

*அர்ச்சை:* "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்" என்ற பொய்கையாழ்வார் வாக்கின்படி அன்பர்கள் எதைத் தனக்குத் திருமேனியாகக் கொள்கின்றனரோ அதனையே தனக்கு வடிவாக விக்கிரக உருவங்கள் கொண்டுள்ள நிலை. எல்லா ஆழ்வார்களும் இந்த அவதாரத்தில் தான் அதிக ஈடுபாடு கொண்டு பேசுவர்.

திருமழிசையார் திருக்குடந்தை ஆராவமுதனிடம் ஓர் உரையாடலையே நிகழ்த்துகிறார். எம்பெருமானின் சயனத்திருக்கோலத்தில் ஈடுபட்டு,

> " நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலம் ஏனமாய்
> இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
> கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்
> கிடந்தவாறு எழுந்திருந்து பேசு; வாழி கேசனே"[33]

என்று பள்ளிகொண்டிருப்பதன் காரணத்தை வினவுகிறார். இவரது பக்திப் பெருக்கில் திளைத்த பெருமானும் இவருக்கு மறுமொழி தருவான்போல் எழுந்திருக்க

முயல, அந்த அழகில் "சிறுமாமனிசரின்" கண் எச்சில்படும் என்று அஞ்சிய ஆழ்வார் உடனே, "வாழி கேசனே" என்று கூற, பெருமாளும் தலையைத் தூக்கியபடியே இருந்து அவருக்குச் சேவை சாதித்தார். அந்நிலையிலேயே இன்றும் சேவை சாதிக்கிறார்.

4.5.1 **திரண்ட கருத்துகள் :** இப்பிரபந்தத்தில் ஆழ்வார், "திருமாலே ஐம்பூதங்களுக்கும் உபாதாந காரணம் என்றும், உயிர்கள் இறைவன் காட்டக் காண்பன என்றும், அவன் கருணாமூர்த்தி என்றும், எல்லா உயிர்களும் அவனிடமே தோன்றி அவனிடமே ஒடுங்கும் என்றும், வேதங்களாலும் அவன் அறியப்படாதவன் என்றும், மக்களிடையே அவன் பலகாற் பிறந்தமை, அவன் பத்துடை அடியவர்க்கு எளியன் என்பதை விளக்கும் என்றும், அவனே மூவகைக் காரணமும் ஆவான் என்றும்[34] பல பட இறைவனின் பெருமைகளைக் கூறுவதை அறியலாம்.

ஐம்புலன்களை அடக்கி, நல்லபுலத்தின் வழிகளைத் திறந்து, ஞானச்சுடரைக் கொளுவி, என்பெல்லாம் நெக்குருக உரோமம் சிலிர்ப்ப, உள்ளத்துள்ளே கனிந்தெழுந்ததோர் அன்பினாலேயே இறைவனைக் காணலாம் என்ற உயரிய கருத்துப்பட,

புன்புல வழியடைத் தரக்கிலச் சினைசெய்து
நன்புல வழிதிறந்து, ஞானநற் சுடர்கொளீஇ
என்பிலெள்கி, நெஞ்சுருகி, யுள்கனிந் தெழுந்ததோர்
அன்பிலன்றி, ஆழியானை யாவர்காண வல்லரே[35]

என்று பாடியுள்ளார்.

4.6 **வைணவ தத்துவக் கருத்துகள் :** உலகப் படைப்புக் குறித்து ஆராய்வோர் அதற்குக் காரணங்களாக இருப்பவற்றைத் தத்துவங்கள் எனக் குறிப்பர். உலகம் 24 தத்துவங்களால் ஆகியது என்பது வைணவ சமயக் கருத்தாகும். 25-ஆம் தத்துவம் உயிர் :26-ஆம் தத்துவம் பரம்பொருள்.

| | | |
|---|---|---|
| நிலம், நீர், தீ, வளி, வானம் - பருப்பொருள்கள் | - 5 | (பஞ்சபூதங்கள்) |
| மெய், வாய், கண், மூக்கு, செவி - அறிகருவிகள் | - 5 | (ஞானேந்திரியங்கள்) |
| வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்-தொழிற் கருவிகள் (வாய்) (கால்) (கை) (எருவாய்) (கருவாய்) | - 5 | (கன்மேந்திரியங்கள்) |
| சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்-நுண்ணிய பொருள்கள் | 5 | (தன்மாத்திரைகள்) |
| | 20 | |

மனம், முனைப்பு, (அகங்காரம்), மான் (மகான்)
விளக்கமில்பகுதி (அவ்யக்தம்) என்பவை 4
ஆக வைணவத்தத்துவங்கள் 24
சீவாத்மா -1 ; பரமாத்மா -1 +2 ஆக 26.

இவைபற்றிய குறிப்பு பரிபாடலில் நல்லெழுநியார் பாடலில் காணப்படுகிறது.

சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு
அவையும் நீயே, அடுபோர் அண்ணால்
அவை அவை கொள்ளும் கருவியும் நீயே
முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியு நீயே
மூன்றி னுணரும் தீயு நீயே
நான்கி னுணரும் நீரு நீயே
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே
அதனால், நின்மருங்கின்று மூவேழ் உலகமும்
மூலமும், அறனும், முதன்மையின் இகந்த
காலமும், விசும்பும், காற்றொடு கனலும்.[36]

என்பதே அப்பகுதி. தத்துவங்கள் பதினாறு என எவரும் கூறுவதில்லை. எனவே அறிதற்கருவிகள் ஐந்து குறிக்கப்பட்டிருப்பதால், அவற்றோடு தொடர்புடைய ஐந்து தொழிற்கருவிகளையும், மூலப்பகுதி சுட்டப்பட்டிருப்பதால் அதன் விகுதிகளாகிய (காரியமாகிய) மான், முனைப்பு, மனம் ஆகியவையும் குறிப்பாகச் சுட்டப்படுவதாகக்கொள்ளலாம். அவ்வாறு கொள்ளும்போது வைணவ சமயத்தத்துவங்கள் இருபத்தாறும் இடம்பெற்றுள்ளதாகக் கொள்ளலாம்.

"இத்தத்துவங்கள் அனைத்துமாய் இருப்பவன் பரந்தாமனே" என்கிறார் திருமழிசையாழ்வார்.

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கண்நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி, வேறு வேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே ?[37]

| | | |
|---|---|---|
| வானத்திடம் | - | ஒரு குணம் மட்டும் உண்டு—சப்தம் |
| காற்றிடம் | - | தன் குணமாகிய தொடுவுணர்ச்சி (ஸ்பரிசம்) — யுடன் வானத்தின் குணமாகிய சப்தம் சேர்ந்து இரண்டு உண்டு. |
| தீயிடம் | - | உருவம் (ரூபம்) வாயுவிடமுள்ள சப்த, ஸ்பரிசம் சேர்ந்து மூன்று குணமுண்டு. |
| நீரிடம் | - | சுவை ஒன்று — தீயிடமுள்ள சப்த, ஸ்பரிச, ரூபங்கள் சேர்ந்து நான்கு குணமுண்டு. |
| மண்ணிடம் | - | மணம் ஒன்று — நீரிடமுள்ள சப்த, ஸ்பரிச, ரூப, ரசம் ஆகியவை சேர்ந்து ஐந்து குணமுண்டு. |

''எம்பெருமானே ! நீ இந்த ஐந்து குணங்களுக்கும் நிர்வாகனாய் உள்ளாய் : தேவ, மனித வடிவுகளாகவும் வேறுபட்டிருக்கிறாய் ; இவ்வாறு நீ நிற்கிறவாறும் உன்னையும் தன் முயற்சியால் நினைக்க வல்லவர் ஒருவருமில்லை''என்று பாடுகின்றார். இவ்வாறு இருபத்து நான்கு தத்துவங்களாக இருப்பவன் எம்பெருமானே என்பதை 'ஐந்தும் ஐந்தும்' என்ற பாசுரத்தில்[38] விளக்குகிறார்.

இனி தத்துவக் கருத்தமைந்த மற்றொரு பாசுரத்தையும் காண்போம்.

> "ஆறு மாறு மாறுமாய் ஒரைந்துமைந்து மைந்துமாய்
> ஏறுசீரி ரண்டுமூன்றும் ஏழுமாறு மெட்டுமாய்
> வேறுவேறு ஞானமாகி, மெய்யினோடு பொய்யுமாய்
> ஊறொடோசை யாயவைந்தும் ஆயஆய மாயனே !"[39]

| | | |
|---|---|---|
| ஆறும் ஆய் | - | ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், தான்கொடுக்கை, பிறர் தருவதை ஏற்றுக்கொள்கை - என ஆறு தொழில்கள் அந்தணர்க்குரியன. இவற்றுக்கு எம்பெருமான் நிர்வாகன். |
| ஆறும் ஆய் | - | அத்தருமங்களை மேற்கொள்வதற்குரிய இளவேனில், முதுவேனில், கார், குளிர், முன்பனி, பின்பனி ஆகிய ஆறு பருவங்களாய் இவற்றுக்கு அவன் பிரவர்த்தகன். |

ஆறும் ஆய் - ஆக்னேயம், அக்நிஷோமீயம், உபாம்சுயாஜம், ஐந்திரம் - இரண்டு, ஐந்திராக்நம் - என யாகங்கள் ஆறு. இவற்றின் பயனை அவனே எல்லாத் தெய்வங்கட்கும் இருப்பிடமாக இருந்து ஏற்கின்றான்.

ஓர் ஐந்தும்ஆய் - தேவ, பித்ரு, பூத, மனித, பிரம்ம யாகங்களுக்குத் தலைவனாய்,

ஐந்தும் ஆய் - பிராண, அபாந, விபாந, உதாந, சமானங்கள் என்னும் ஐந்து ஆகுதிகள். இவை அந்தரியாமியான அவனுக்கே சேரும் ஆராதனங்களாம்.

ஐந்தும் ஆய் - ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி, ஔபாசனாக்கினி சூரியன் என்னும் ஐந்துவகை நெருப்பையும் உடலாகக் கொண்டான் அவன்.

ஏறுசீர் இரண்டுமாய் - மிக்க அதிசயத்தையுடைய ஞான, விரக்திகளாகிற இரண்டையும் அளக்கவல்லவன்.

மூன்றுமாய் - பரபக்தி, பரஞான, பரமபக்திகளை அளிப்பவனாய்,

ஏழும் ஆய் - விவேகம், விமோகம், அப்பியாசம், கிரியை, கலியாணம், அநவசாதம், அநுத்தர்ஷம் - என்னும் இவற்றுக்குத் தலைவனாய்,

ஆறும் ஆய் - ஞானம், பலம், செல்வம், வீரியம், சக்தி, தேஜஸ் என்னும் ஆறு குணங்களுக்கும் நிர்வாகனாய்,

எட்டும் ஆய் - பாபசம்பந்தமற்றவன், மூப்பற்றவன், மரணமற்றவன், சோகமற்றவன், பசியற்றவன், தாகமற்றவன், அடியார்களுக்கு ஏற்ற குணவிபூதிகளை உடையவன் ; ஒன்றிலும் வீணாகாத சங்கல்பத்தை உடையவன். இவைகளுக்கு நிர்வாகனாய்,

| | | |
|---|---|---|
| வேறுவேறு ஞானமாகி | — | வணங்கும் துறைகள் பலபலவாக்கி, மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி, |
| மெய்யினோடு பொய்யுமாய் | – | மெய்யர்க்கே மெய்யனாகும், விதியிலா என்னைப் போலப் பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடியுடைய கோமான் |
| ஊறொடு ஓசை ஆய ஐந்தும் ஆய் | | சுவை, ஒளி முதலிய புலன்களுமாகக் கடவையாய், |
| ஆய | - | ஆயர்குலத்தில் வந்து பிறந்தவனே ! |

நின்னை யார் நினைக்க வல்லரே !

ஒன்றுமுதல் நாற்பது பாசுரங்களில் பாஞ்சராத்திரக் கொள்கைகளை விவரிக்கிறார்.[40] குலம், கல்வி, திறமை இவற்றில் குறைந்தவர்கள், அவை நிறைந்த பெரியோர் காணும் பரமாத்ம சொரூபத்தை அடைய வழிகாட்டுகிறார். வேதங்களில் வல்லோர் வகுத்த முறை கடினமானது ; பிறர் பின்பற்ற இயலாதது. அவற்றுக்கு ஒருவிதத்திலும் குறைவில்லாத பயன்தரும் வேறுவழிகளால் அவனை அடையமுடியும் என விவரிக்கிறார். இவை பகவானுக்குச் செய்யும் சேவைகள், கைங்கரியங்கள், இவற்றைப் பிரம, உருத்திரர் கூட தங்கள் நித்திய கர்மங்களைச் செய்ய உரிமை பெறப் பரமாத்மாவுக்குச் செய்ய வேண்டும் என்கிறார். ஒருவன் எக்குலத்தவனாயினும் இவற்றைப் பக்தி சிரத்தையுடன் செய்தால் பெருமானின் திருவருள் அவனுக்கு உறுதியாகக் கிடைக்கும் என்கிறார்.

கடைசி முப்பது பாசுரங்களில் கடவுளின் அருளையும் அதன் சிறப்பையும் சொல்லி, இனி அவன் விதித்த வழிதான் வீடு அளிக்கும் ; தன்னாலாவதொன்றில்லை என்ற மனநிலையை அடைகிறார். நான்கு குலங்களுள் ஒன்றிலும் தான் பிறவாதிருத்தலையும், வேதங்களைப் பயிலாதிருத்தலையும், புலன்களை அடக்கியாளாதிருத்தலையும், வெளிப்படுத்துகிறார். ஆகவே வேறு வழியின்றி அவன் திருவடிகளே தஞ்சம் என்று முழுமனதுடன் அவனைத் தொழுவதில் ஈடுபடுகிறார். இறுதியாக தன்னை வெவ்வேறு பிறவிகள் எடுக்கச் செய்து உழன்று கொண்டிருப்பதிலிருந்து பிரித்து எடுத்து, தன் மனத்தை அவனிடமே நிலைநாட்டச் செய்து, தன்னைக் காத்தருளவேண்டும் என்று வேண்டிமுடிக்கிறார். திருச்சந்த விருத்தம் என்ற பாவகையில் முதலில் பாடல்களைப் பாடிய சிறப்பு இவருக்குண்டு.

4.7 **இவர்தம் ஏற்றம் :** இவர் இதர தெய்வங்களைக் கீழ்மைப்படுத்திப் பேசுகிறார். முதலாழ்வார்களிடமிருந்த சமரச மனப்பான்மையை இவரிடம் காணவியலாது.

"உருவினவாள் உறையில் இடாதே முதல், நடு, இறுதிகளிலே மற்றைத் தேவர்களின் பிற்பாட்டினைக் கூறுதல் முன்னாக, எம்பெருமானுடைய முதன்மையை எடுத்துக்கூறும் திருமழிசைப்பிரான். இவர்கள் தாம் கைக்கொண்ட பகைவர்களைக் கொல்லுதலாகிய செயலைச் செய்தபடியே இருப்பதுபோன்று, திருமிழிசையாரும் மற்றைத் தெய்வங்களினுடைய தாழ்வையும், எம்பெருமானுடைய முதன்மையையும் தம்முடைய பிரபந்தங்களில் ஆதியோடு அந்தமாய் மிக்க மாற்றத்தோடு அருளிச்செய்து போந்தவர் ; எனவே இவர் உறையிடாதவர் எனப்பட்டார்", என்பது இவருக்கு "ஆசாரிய இருதயம்" தரும் ஏற்றமாகும்.[41]

திருக்கச்சி நம்பிகள் இவரைப் பாராட்டிப் பாடியுள்ள தனியனும் இங்கு நோக்கத்தக்கது.

"உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க — உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது"[42]

4.8 **இவர்காலச் சமயநிலை, அரசர் திருப்பணிகள் :** இவர்காலத்தில் சமண சமயம் வீழ்ச்சியுறத் தொடங்கியது ; சைவ சமயம் வளர்ச்சியடையத் தொடங்கியது ; இந்து சமயத்தின் முக்கியச் சமயங்களான சைவமும் வைணவமும் தம்முள் மாறுபட்டன ; அதன் தாக்கங்களை இவர் பாசுரங்களிலும் கண்டோம். மகேந்திரவர்மன் காலத்தில் மலைகளை வெட்டிக் குடைந்து கோவில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள், மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம் (நாமக்கல்) கீழ்மாவிலங்கை ஆகிய இடங்களில் குடையப்பெற்றவை திருமால் கோவில்கள் ஆகும். இவற்றைப்பற்றி நிரலே காண்போம்.

4.8.1 **மாமண்டூர் :** இது கச்சிக்குத் தெற்கே ஒன்பது கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள ஒரே சிறிய குன்றில் இரு கோவில்கள் உள்ளன. அவற்றில் ஒன்றில் மகேந்திரனின் கல்வெட்டு உள்ளது. உள்ளறையில் சிலை ஒன்று இருந்திருக்கவேண்டும். வலப்புறத்தில் உள்ளது திருமாலுக்கும், இடப்புறத்தில் உள்ளது சிவபெருமானுக்கும் அமைந்தவை.

4.8.2 **மகேந்திரவாடி :** இவ்வூர் சோழசிங்கபுரத்திற்கு—சோளிங்கபுரம், தென்கிழக்கே ஐந்து கி.மீ. தொலைவில் உள்ளது. ஊருக்குக் கிழக்கே உள்ள குன்றில் ஒரு சிறிய குகைக்கோவில் உள்ளது. இக்கோவில் "மகேந்திர விஷ்ணு கிருஹம்" என்னும் பெயருடையது. "நல்லவர் அனைவரும் மிகப் புகழ்வதும் மக்கட்கு இன்பம் பயப்பதும் ஆகிய அழகிய 'மகேந்திர விஷ்ணுக்ருகம்' என்னும் முராரியின் பெருங் கற்கோவிலை மகேந்திரனது பேரூரில் மகேந்திர தடாகத்தின் கரையில் பாறையைப் பிளந்து குணபரன் அமைத்தான்" என்பது இங்குள்ள கல்வெட்டாகும்.[43]

4.8.3. **சிங்கவரம் :** செஞ்சிக்கு வடக்கே 3.2 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. சிங்கபுரம் என்பது சிங்கவரம் என மருவியது. இங்குள்ள ஸ்ரீ அரங்கநாதர் கோயில் பாறையைக் குடைந்து அமைக்கப்பெற்ற குகைக்கோவில் ஆகும். முன்மண்டபம், திருநிலையறை, அதில் அநந்த சயன மூர்த்தியின் உருவம் ஆகியன உள்ளன. மாமல்லை கடற்கரைக் கோயிலில் உள்ள அநந்த சயன மூர்த்தியைப் போல இவரும் வலக்கையை நீட்டித் தொங்கவிட்டிருக்கிறார். இங்குள்ள பிற்காலச்சாசனம் ஒன்றில் இக்கோயில் 'திருப்பன்றிக்குன்று' (எம்பெருமான்) என்று கூறப்படுகிறது. அரங்கநாதர் திருஉருவம் சுமார் 4.2 மீட்டர் நீளம் உள்ளது.[44]

குன்றின்மீது ஏறிச்சென்றதும் முதலில் ஸ்ரீவரதராசப் பெருமாள் பூதேவி, சீதேவியுடன் எழுந்தருளியுள்ளார். வடக்கே சந்திரபுஷ்கரணி. அதற்கு வடக்கே திருக்கோயில் மண்டபம். துவாரபாலகியர் இருவர். திருநிலையறையில் பள்ளிகொண்டிருக்கும் பெருமான் விண்ணைப் பார்த்தவண்ணம் யோக சயனத்தில் உள்ளார். நீட்டியுள்ள வலத்திருக்கை விரல்களின் கீழே சிறிய திருவடி உள்ளார். இடத்திருக்கையை இடுப்புவரை நீட்டிப் பின் மேலே உயர்த்தி நான்கு விரல்களையும் மடக்கி, சின்முத்திரையின் தத்துவத்தைப் போதிக்கிறார்.

அரங்கரின் வலப்புறத் திருமார்பில் திருமகள் ; கொப்பூழ்க் கொடித்தாமரையில் பிரமன், பக்கத்தில் கந்தருவர், சுவாமியின் பாம்பணையை ஒட்டிக் கீழே அரசன் மகேந்திரவர்மனும், அவன் மனைவியும் உள்ளனர். திருவடிப்பக்கம் பிரகலாதன், பூமிதேவி, சங்கரர் ஆகியோர் காட்சியளிக்கின்றனர்.

அரங்கநாயகித் தாயாரின் சந்நிதி தனியே உள்ளது. இதன் பின்புறம் கொற்றவை கோயில் உள்ளது. பல்லவர் சிற்பங்களிலேயே மிகவும் பழமையான சிற்பம். அரங்கநாதர் திருக்கோயிலுக்கு வடக்கில் ஆதிவராகப்பெருமாள் கோவில் உள்ளது. கருவறையில் சுவாமி இல்லை. இங்குப் பல கல்வெட்டுகள் உள்ளன.

பிற்காலத்து வரலாற்று நிகழ்ச்சி : முகம்மது துக்ளக் டெல்லியை ஆண்டபோது அவனுடைய சேனாதிபதி மாலிக்காபூர் என்பவனைத் தென்னாட்டிற்கு அனுப்பிக் கோயில்களைக் கொள்ளை இட்டான். இது கி.பி. 1327-28-இல் நடைபெற்றது. ஸ்ரீரங்கத்துக்கு அவன் வந்தபோது பிள்ளைலோகாசாரியரும், வேதாந்ததேசிகரும் முறையே தென்னாட்டிற்கும். மைசூருக்கும் ஓடி மறைந்தார்கள். ஸ்ரீரங்கத்திலிருந்து அரங்கநாதரை முதலில் திருமலைக்குக் கொண்டு சென்றார்கள் ; பின் அங்கிருந்து சிங்கவரத்திற்குக் கொண்டுவந்தனர். பின்னர் செஞ்சியை ஆண்ட துபாகி கிருஷ்ணப்பநாயகர் என்னும் அரசரின் குருவாக இருந்த நல்லான் சக்கரவர்த்தி சத்ரயாகம் சேஷாத்திரி அய்யங்கார் என்பவரின் முயற்சியால் அரங்கநாதர் திருவிக்கிரகம் மீண்டும் திருவரங்கத்திற்குக் கொண்டுபோகப்பட்டுக் கோபனார்யர் என்பவரால் பிரதிட்டை

செய்யப்பெற்றது என்று அனந்தார்யர் இயற்றிய பிரபன்னாம்ருதம் என்னும் நூல் கூறுகிறது. இவ்வகையான பெருமையும் இத்திருத்தலத்திற்கு உண்டு.

**கீழ்மாவிலங்கை :** தென்னாறு - திண்டிவனம் சாலையில், வெள்ளிமேடு பேட்டையைத் தாண்டி இவ்வூர் உள்ளது. சாலைக்குக் கிழக்கே சற்றுத்தொலைவில் உள்ள ஒரு பாறையில் ஒரே அறை - உயரம் ஐந்துஅடி ; அகலம் மூன்று அடி. பின்சுவரில் திருமாலின் புடைப்புச்சிற்பம் உள்ளது. திருமாலின் சிற்ப உயரம் நான்கடி நான்கு அகலம் ; நான்கு திருக்கைகள் ; தலைவாயிலில் இருபக்கத்திலும் வாயிற்காவலர் சிற்பம் ; முற்றுப்பெறவில்லை ; மகேந்திரவர்மன் காலத்துச் சிற்பம்.

4.9 **திருமழிசையாரின் திருவுள்ளம் :** "மறந்தும் புறந்தொழா மாந்தராகிய"[45] இவர் இயற்றிய இரு பிரபந்தங்களின் துணைக்கொண்டு இவரது திருவுள்ளத்தில் ஊற்றெடுத்துப் பொங்கி வழிந்த அகவுணர்வினைத் தொகுத்து நோக்கல் நலம்.

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்"[46]

என்ற கொள்கையில் அசையாத உறுதியுடைய இவர், அக்கருத்தைப் பல பாக்களிலும் திருமாலை விளிக்கும் இடங்களில் காணலாம்.

"என்றும் யார்க்கும் எண்ணிறந்த ஆதியாய் !
"அன்று நான்முகற் பயந்த ஆதிதேவன்",[47]

"ஆதியான வானவர்க்கும் ஆதியான ஆதிநீ",[48]

"ஆமையாகி ஆழ்கடல் துயின்ற ஆதிதேவ"[49]

"ஆதிதேவனே !"[50]

"ஆதிப்பெருமான்"[51] என நான்முகன் திருவந்தாதியிலும் குறிப்பிடுகிறார். "பரம்பொருள் எது" - என்னும் வினாவிற்கு விடையாவது, "எல்லாப் பொருள்களும் எப்பொருளினின்றும் தோன்றி மீண்டும் அப்பொருளிலேயே ஒடுங்குகின்றனவோ, அதுவே பரம்பொருள்" என்பதாகும். இதனை விளக்க ஓர் அருமையான உவமையை இவர் கூறுகின்றார்.

"கடல் நீரிலிருந்து அலைகள் தோன்றுகின்றன ; மீண்டும் அவ் அலைகள் கடல் நீரிலேயே அடங்குகின்றன. அது போலப் பரம்பொருளாகிய திருமாலினிடத்திலிருந்து எல்லாப் பொருள்களும் தோன்றி, அப் பரம்பொருளிடத்தே அனைத்தும் மகாப் பிரளயகாலத்து ஒடுங்குகின்றன" என விளக்குகின்றார். இது விசிட்டாத்வைதக் கருத்தாகும்.

"தன்னுளே திரைத் தெழும் தரங்க வெண் தடங்கடல்
தன்னுளே திரைத் தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்

நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின் கண் நின்றதே"[52]

எனவே. திருமாலை, மூலப்பரம்பொருளை விளிக்க வந்தவிடத்து புண்ணியா ! புனிதனே ! உத்தம ! வேதனே ! ஈசனே ! வேதகீதனே ! ஞாலநாதனே ! வேலைவண்ணனே ! அண்ணலே ! பூவை வண்ணனே ! மாயனே ! கண்ணனே ! கேசனே ! புண்டரீகனே ! விற்கை வீரனே ! வாமனா ! பூமிநாதனே ! எனப்பல திருப்பெயர்களால் பெரும்பாலும் ஓரொரு பாசுரங்களில் குறிப்பிட்டவர், "ஆதிதேவன்" என்ற பொருள்பொதிந்த தொடரை பதின்மூன்று பாசுரங்களில் திரும்பத்திரும்பக் குறிப்பிடுகின்றார்.

இவர் திருமாலின் அவதாரச் செயல்களைப் பல படியாகப் பல பாசுரங்களில் போற்றிப்பாடுகிறார். கூர்மாவதாரம் பற்றியும்[53], வாமன, திரிவிக்கிரம அவதாரம் பற்றியும்,[54] வராக அவதாரம்பற்றியும்,[55] கண்ணன் அவதாரம் பற்றியும், இராமாவதாரம் பற்றியும் பலஇடங்களில் பாடியுள்ளார். கண்ணன் அவதாரச் செயல்களில்,

"அசோதை பிள்ளை ஆய்ச்சியாய் சாடுடைத்தது",
"புள்ளின் வாய் கீண்டது" 56

"பூதனையை அழித்தது"
"விளங்கனி உதிர்த்தது"
"குருந்த மரம் சாய்த்தது" 57
"கேசியை அழித்தது"
"மண்ணை, வெண்ணெய் உண்டது"

"குவலயாபீடம் என்னும் யானையை அழித்தது"
"காளியன்மீது நடமாடியது"
"குடக்கூத்தாடியது" 58
"காலநேமி என்னும் அசுரனை அழித்தது"
"பசுக்களை மேய்த்தது"

"கோவர்த்தன மலையெடுத்து ஆயரையும் பசுக்களையும் காத்தது"[59]

"நப்பின்னையை மணக்க ஏழு எருதுகளை அடக்கியது"
"ஆயர் மங்கை வேய தோள் விரும்பியது" 60

"வாணாசூரனின் ஆயிரம் தோள்களையும் துணித்தது"[61]

"தேனுகனை அழித்தது"[62]

"அருச்சுனனுக்குத் தேரோட்டி, பல மாயங்களைச்செய்து, ஐவர்க்கு ஆட்சியை அளித்தது"[63]

"காசி மன்னன், வக்கரன், பவுண்டிரன் ஆகியோரை அழித்தது"[64]

"சிவேதனைச் சேனாதிபதியாக்கியது"[65] ஆகியவற்றைப் பல பாசுரங்களில் விதந்து பாடியுள்ளார்.

இவ்வண்ணமே இராமாவதாரச் செயல்களில்,

"கூனகம் புகத் தெறித்த கொற்றவில்லி"[66]

"கருங்கடல் சிவந்து வேவ . . . வாளியிட்ட வீரர்"[67]

"இலங்கை மன்னவன் சிரங்கள் பத்தறுத்தது"[68]

"இலங்கை கட்டழித்தவன்"[69]

"வாலி வீழ முன்னொர்நாள் உரம் பொதச்சரம் துரந்தது"[70]

"மராமரம் ஏழ் அடங்க எய்தது"[71]

"மாலி, மான், சுமாலி . . . நாசமுற்றுவீழ நாள் கவர்ந்தது"[72]

"இலங்கையை அடையச் சேதுபந்தனம் செய்தது"[73]

"இராவணன் உருமாறிப் பிரமனிடம் வரம்கேட்க வந்தபோது, திருமால் பிரமன் மடியில் குழவியாய் இருந்து தன் கால்களால் பத்துத்தலைகளையும் எண்ணிக்காட்டியது"[74] ஆகியவற்றைப் பலபாசுரங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இச்செய்தி வேறு இதிகாசங்களில் காணப்படாத ஒன்று.

இங்ஙனம் திருமாலின் திரு அவதாரச்செயல்கள் பல கூறப்பட்டிருப்பினும் நரசிம்மாவதாரம் பற்றி இவர் கூறும் செய்திகள் சிந்திக்கத் தூண்டுகின்றன.

"வால் நிறத்தொர் சீயமாய் வளைந்தவா ளெயிற்றவன்
ஊன்நிறத் துகிர்த்தலம் அழுத்தினாய்"[75]

"சிங்கமாய தேவ தேவ !"[76]

"வரத்தினிற் சிரத்தைமிக்க வாளெயிற்று மற்றவன்
உரத்தினிற் கரத்தைவைத் துகிர்த்தலத்தை யூன்றினாய் !"[77]

"திரண்டதோ ளிரணியன் சினங்கொளாக மொன்றையும்
இரண்டுகூறு செய்துகந்த சிங்கமென்ப துன்னையே"[78]

"தொகுத்த வரத்தனாய்த் தோலாதான் மார்வம்
வகிர்த்த வளையுகிர்த்தோள் மாலே"[79]

"மாறாய தானவனை வள்ளுகிரால் மார்விரண்டு
கூறாகக் கீறிய கோளரியை"[80]

என்று ஆவேச அவதாரமாகிய நரசிம்மாவதாரத்தைப் பற்றி அடுத்தடுத்த பாசுரங்களில் பாடுகின்றார். இதற்குரிய காரணம் யாதாக இருக்கலாம் ? அக்காலத்தில் பொதுவாக அரசர்களின் ஆதரவு சைவ சமயத்துக்கு இருந்தது. எனவே, தேவாரமூவர் சிவபிரானுக்கு ஏற்றமளிக்கலாயினர். சிவனின் இடப்பாகத்தில் "அரியலால் தேவியில்லை" - என்று நாவுக்கரசர் பாடுகின்றார். திருமால் பன்றியாகிச் சிவபிரானின் அடியைத்தேடிய செய்தியைத் தேவாரத்தில் பல இடங்களில் குறிப்பிடக் காண்கின்றோம். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சேக்கிழாரும் பெரியபுராணத்தில் இச்செய்தியைப் பல இடங்களில் குறிப்பிடுவார். எனவே சைவ-வைணவப் பிணக்குகள் தோன்றி, வளர்ந்து நின்ற காலகட்டத்தில் வாழ்ந்த திருமழிசையார், திருமாலுக்குப் பரத்துவம் கூற வேண்டியவரானார்.

"நான்முகனை நாரா யணன்படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்" -

என்று நான்முகன் திருவந்தாதியின் முதற்பாடலிலேயே கூறத்தொடங்கினார். மேலும் சிவபிரான் பிரமனின் ஐந்தாவது தலையைக் கிள்ளிய பாவத்தைத் திருமால் நீக்கிய செய்தியை எடுத்துக்கூறினார்.[81]

"சலங்கலந்த செஞ்சடைக் கறுத்தகண்டன் வெண்தலைப்
புலன்கலங்க உண்டபாத கத்தன்வன் துயர்கெட
அலங்கல் மார்வில் வாசநீர் கொடுத்தவன்"[82]

என்று பாடுகின்றார்.

மேலும், "திருமால் திரிவிக்கிரமனாக மூவுலகையும் அளக்கையில், மேல் உலகை அளக்க நீண்ட திருவடியைப் பிரமன் திருமஞ்சனமாட்டினான் ; அந்நீர் கங்கையாகப் பெருகியது ; அதனைச் சிவன் தன் தலையில் தாங்கினான்" என்ற புராணக் கருத்தை இவர் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

"குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி — கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை ஆங்கு"[83]

"பேராழியான் பெருமையைக்கார் செறிந்த கண்டத்தான், என் கண்ணான் காணான்" -என்றும் உரைக்கின்றார்.[84]

நான்முகன் திருவந்தாதியின் இறுதிப்பாசுரத்தில்,

"இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமான் ! உன்னை — இனியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்"[85]

என்று முடிவாக உரைக்கின்றார். எனவே,

. . . . ."வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான் விண்ணவர்க்கு
நற்பொருள் தான் நாரா யணன்"[86]

என்பது இவர்தம் முடிவான கருத்து என்பதை உணரமுடிகின்றது.

4.9.1 **திருமாலை அடையும் நெறிகள் :** "வேதநான்குமாகி நின்று, அவற்றுளே தங்குகின்றன தன்மையன்"[87] ஆன திருமாலை அடையும் நெறிகள் பல. இவர் யோக நெறியை மேற்கொண்டவர் என்பது இவர்தம் வரலாற்றால் அறியமுடிகிறது. எனவே இவர்,

"தூய்மை யோகமாயினாய்"[88] என்றே விளிக்கின்றார். யோகநெறி கடினமானது. அனைவராலும் கடைப்பிடிக்க இயலாதது. அதைவிட எளியது "பக்திநெறி" என்னும் "அன்புநெறி" ஆகும். இதைப் பிரபத்தி என்றும் கூறுவர். இந்த அன்பு நெறியைப்பற்றியும் இவர் குறிப்பிடுகின்றார்.

"நின்னை யார் நினைக்க வல்லரே"[89]
"நின்னை யாவர் காண வல்லரே"[90]
"உலகில் நின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே" ?[91]
"உன்கருத்தை யாவர்காண வல்லர்" ?[92]
"ஒருத்தரும்நினாது தன்மை இன்னதென்ன வல்லரே ?"[93]
"எங்கள் செங்கண்மாலை யாவர் காண வல்லரே ?"[94]

என்று பல இடத்தும் வினவும் இவர், அதற்குரிய விடையையும் கூறுகின்றார்.

"ஐம்புலன்களை ஒடுக்கவேண்டும் ; நல்ல நெறியில் நின்று ஞானமாகிய விளக்கேற்றி, எலும்பு உருகி, நெஞ்சு நெக்குருகி, உள்ளம் கனிந்த நிலையில் எழும் அன்பினாலன்றி திருமாலைக் காணவியலாது" என்று அழகாக ஒரு பாடலில் பாடுகின்றார்.

"புன்புல வழியடைத் தரக்கிலச் சினைசெய்து
நன்புல வழிதிறந்து, ஞானநற் சுடர்கொளீஇ
என்பிலெள்கி, நெஞ்சுருகி, யுள்கனிந் தெழுந்ததோர்
அன்பிலன்றி, ஆழியானை யாவர்காண வல்லரே"[95]

இவ்விடத்து யோகநெறியும் - அன்புநெறியும் இணையும் பாங்கு பக்தி இயக்கக்காலத்தில் ஏற்படுவதை அறியமுடிகிறது. இவர் நான்முகன் திருவந்தாதியிலும்,

"வாழ்த்துகவாய் ; காண்க கண் ; கேட்கசெவி மகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால் — சூழ்த்த
துழாய்மன்னும் நீண்முடிஎன் தொல்லைமால் தன்னை
வழா, வண்கை கூப்பி மதித்து"[96]

என்று வழிபாட்டு முறைகளை வரிசைப்படுத்திக் கூறுவர். பக்திநெறி இவர் காலத்தில் எவ்வளவு வேரூன்றி நின்றது என்பதை, இவர் திருமாலுக்கு இடும் ஒரு திருப்பெயரைக் கொண்டே அறியமுடிகிறது. "பக்தி உழவன்" என்று இவர் அழைக்கின்றார். அப்பக்தி உழவனின் பழைய நிலத்தில் விதையும் இட வேண்டுமோ ? என்று இவர் வினவுகின்றார்.

"வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ விடையடர்த்த
பத்தி யுழவன் பழம் புனத்து ?"[97]

இவ்விடத்து,

"வித்தும் இடல்வேண்டும் சொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலன்"

என்னும் குறளின் அடியை எடுத்தாண்டுள்ளார். இவ்வகையில் திருக்குறளை தம் பாசுரத்தில் எடுத்தாண்ட முதல் ஆழ்வார் இவர்தாம்.

அவ்வாறு திருமாலை வணங்கும்போது "திருவெட்டெழுத்து" மந்திரம் கூறவேண்டும் என்று இவர் அறிவுறுத்துகின்றார்.

. . . . ."அவன் பெயர் எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர்
வானமாளவே"[98]

. . . . ."நின்மலன்நலங்கழல்
ஆர்வமோ டிறைஞ்சிநின் றவன் பெயரெட் டெழுத்தும்
வாரமாக ஓதுவார்கள் வல்லர் வான மாள வே"[99]

என்று அம்மந்திரத்தை ஓதுவார் பெறும் பயனையும் சுட்டுகின்றார்.

"அப்பெருமான் நம்முடைய குற்றங்களையும் குணமாகக் கொள்வன்" எனவும், "நாம் அவனை வைதாலும் நமக்கு அவன் அருள்செய்வான்" எனவும்[100] கூறுகின்றார்.

பிறர் நலத்துக்காக இரங்குதல் : "பராநர்த்தம் கண்டு இரங்குபவரே-பிறர்துன்பம்கண்டு இறங்குபவரே, உண்மையான வைணவர்" என்பர் பெரியோர். அவ்வகையில் இவர் இரங்கிப் பாடும் பாடல்களின் கருத்துகளை ஆய்தல் நலம்.

"அன்பர்களே ! சூரியமண்டல வழியே சென்று வீடுபேறடைந்து மகிழ்ந்திருப்பீர் ; புண்டரீகனின் புண்ணியப் புகழைச் செவிமடுத்து உங்கள் மிக்க வினைத்துயரை நீக்கிப் பிழைத்திடுங்கள்"[101]. "வேறு எவ்வகையிலும் பிழைக்க வழியில்லை ; திருமாலை வாழ்த்தி வாருங்கள்" என்றும்[102], ஆதி மூர்த்தியை வணங்கி உங்கள் பிறப்பறுங்கள் என்றும்[103], வேங்கடம் அடைந்த மாலின் பாதமே அடைந்து நீங்கள் உய்யுங்கள் என்றும்[104] உரைக்கின்றார். அத்துடன், நமக்குச் "சரணாகதி" நெறியை விளக்கிக் கூறுகின்றார்.

"அகப் புறப்பற்றுகளை நீக்கிய மனத்தோடு, பாசம் விட்டவர்களுக்கு இங்கும், அங்கும், எங்கும், எத்திறத்தும் இன்பமே" என அறுதியிட்டுக் கூறுகின்றார்.[105] இவ்விடத்து,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்னும் குறள் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

4.9.2 தனக்காக வேண்டுதல் : இவ்வாறு பிறருக்கு நல்வழிகாட்டும் இவ் ஆழ்வார், தனக்காகவும் திருமாலிடம் வேண்டுகின்றார். திருமாலிடம் நேரில் பேசுவதுபோன்று பாடல்களைப் பாடி முறையிடுகின்றார்.

. . . . . . . . . . . . "நாயினேன்
வீடுபெற்றிறப்பொடும் பிறப்பறுக்கு மாசொலே"[106] எனவும்,

"நீ ஓரிடத்திலும் இல்லாதவன் எனவும், உன் இருப்புக்கு எல்லையில்லை எனவும் கூறுவர் ; ஆகவே, நான் சேரும் இடத்தைத் தெரிந்து வணங்கும் வழி கூறுவாயாக"[107] எனவும் வேண்டுகின்றார்.

"நீ ஊரகத்தில் நின்றகோலத்திலும், பாடகத்தில் இருந்தகோலத்திலும் திருவெஃகாவில் கிடந்த கோலத்திலும் சேவை சாதிக்கின்றாய். அன்று எனக்கு ஞான உணர்வு வந்திலது ; வந்தபின் உன்னை மறந்தறியேன் ; இப்பொழுது நின்றும், இருந்தும், கிடந்தும் ஆகிய சேவைகளைச் சாதிப்பது என் நெஞ்சுள்ளேயே"[108] என்று உறுதிபட உரைக்கின்றார். இவ்வாறு பக்தராகிறார் இவர்.

"உன்னைத் தவிர எனக்கு வேறு சுற்றமில்லை ; நின்னை என்னுள் நீக்கவேண்டா" என்று வேண்டிநிற்கிறார்.[109] இவ்வாறு உன் திருவடிகளேயே சரணமாகப் பற்றிய என்னை ஏற்று "அஞ்சல்" என்று அருள்செய்ய வேண்டும் எனவும் மனமுருகி நிற்கின்றார்.[110]

"உடலில் உயிராகவும், உறக்கமும் உணர்ச்சியாகவும், பசுவிடமுள்ள ஐந்து பொருள்களாகவும், அப்பொருள்களிடத்துள்ள தூய்மையாகவும், ஐம்பூதங்களாகவும், யானாகவும், எம்பிரானாகவும் ஆக எல்லாமாக இருப்பவனும் நீயே"[111] என்று எடுத்துரைக்கின்றார். இங்கு மகாவாக்கியங்களான "தத்வமஸி", "அஹம்பிரம்மாஸ்மி" என்பன ஒப்புநோக்கத்தக்கன.

திருமாலின் திருக்கோலங்கள் நான்கு வகைப்படும். அவையாவன :

1. நின்றகோலம் — ஸ்தானகமூர்த்தம் — திருமலை முதலிய பல திருக்கோயில்களில் இவ்வாறு உள்ளார்.
2. அமர்ந்தகோலம் — ஆசனமூர்த்தம் — பாடகம் முதலிய கோயில்களில்.
3. கிடந்தகோலம் — சயனமூர்த்தம் — திருவரங்கம், திருவெஃகா முதலிய திருக்கோயில்களில்
4. இயங்குகோலம் — யானகமூர்த்தம் — திரிவிக்கிரமர், சக்கரத்தாழ்வார்.

இவற்றை இவர் முறையே குறிப்பிட்டு, இக்கோலங்களில் நீ காட்சி தரும்போதும் உன்னுடைய பொற்கழலைக்தொடர்ந்து நிற்கும் தொடர்ச்சி அளிக்கவேண்டும் என்றும் முறையிடுகின்றார்.

"எதிர் மறைகளாக இருக்கும் பெருமானே" என இவர் அழைக்கின்றார். அவையாவன :

"ஆணும் பெண்ணும் ; நல்லவை அல்லவை ; பொய்யும் மெய்யும்"[112]
"உடலும் உயிரும் ; உறக்கம் உணர்ச்சி ; வானும் மண்ணும்"[113]
"தூயன் அல்லாதவன் ;[114] அத்தன் அன்னை"[115]
"அல்லும் பகலும் ; மாலையும் காலையும்"[116]

இங்ஙனம் எதிர்மறைகளாக இருந்து (Binary Opposition) காக்கும் பெருமையே !

என் உயிர் பல்பிறவிகளாகிய வினைக்கட்டிலிருந்து விடுபட்டு, உன்னுடைய திருவடியாகிய சுடரில் நிலையாக வந்து வாட்டமின்றி நிலை பெற்றது. இன்பவீடு பெற்றது[117] என்று திருச்சந்த விருத்தத்தை நிறைவு செய்வது போலவே,

"ஏன்றேன் அடிமை ; இழிந்தேன் பிறப்பிடும்பை
ஆன்றேன் அமரர்க் கமராமை - ஆன்றேன்
கடன்நாடும் மண்ணாடும் கைவிட்டு மேலை
இடம்நாடு காண இனி"[118]

என்று கூறி நான்முகன் திருவந்தாதியையும் முடிக்கின்றார்.

4.9.3 ***சொல்லாட்சித்திறம்*** : இவர் சந்தப்பாடல்கள் பாடுவதில் வல்லவர் என்பதைத் திருச்சந்த விருத்தப் பாடல்களால் அறியமுடியும். குறிப்பாக ஏழு, எட்டு, பதினொன்று, முப்பத்தொன்பது ஆகிய பாடல்களில் அடிதோறும் முதல் சீர்கள் அனைத்தும் ஒரேமாதிரியாக அமைந்துள்ளன.

எண்களை அடுக்கிப்பாடுவதிலும் இவர்க்குத் திறமுண்டு என்பதை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஏழு, பதினேழு, எழுபத்தேழு, எழுபத்து ஒன்பது, ஆகிய பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது. ஆறாம் பாடலில் நாகம் மாதம் என்ற சொற்களைப் பலபொருள்களில் அமைத்துப் பாடுமிடத்துச் சொற்பொருள் பின்வருநிலையணி அமைந்துள்ளது. எட்டாம் பாடலில் ஆதி யான என்ற சொல்லும் அதன் பொருளும், பதினோராம் பாடலில் சொல்லினால் என்ற சொல்லும் அதன் பொருளும், பன்னிரண்டாம் பாடலில் உலகு என்ற சொல்லும் அதன் பொருளும், முப்பத்தொன்பதாம் பாடலில் வெற்பெடுத்து என்ற சொல்லும் அதன் பொருளும், தொடர்ந்து வந்து சொற்பொருள் பின்வருநிலையணி அமைந்துள்ளது.

"ஆதியாதி யாதி ; நீயொ ரண்டமாதி ; யாதலால்
சோதியாத சோதிநீ ; அ துண்மையில்வி ளங்கினாய்
வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி, ஆயனாய மாயமென்ன மாயமே ?"

"ஆனைகாத்தோ ரானைகொன்ற தன்றியாயர் பிள்ளையாய்
ஆனைமேய்த்தி ; ஆனெயுண்டி ; அன்று குன்ற மொன்றினால்
ஆனைகாத்து, மையரிக்கண் மாதரார்திறத்து முன்
ஆனையன்று சென்றடர்த்த மாயமென்ன மாயமே ?"

என்பன போன்ற பல பாடல்களில்[119] இவரது சொல்லாட்சித்திறம் நன்கு விளங்குகின்றது.

4.10 ***இவர் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் பற்றி ஓர் ஆய்வு*** : இவர் பதினாறு திருத்தலங்களைப் பாடியுள்ளார். அவற்றுள் தொண்டைநாட்டில் உள்ளவை

ஆறு திருத்தலங்களாம். ஒப்புநோக்குமுறையில் ஆராயும்போது இவ் ஆறு திருத்தலங்களில் திருமலை ஒன்று பற்றியே பதினான்கு பாடல்களைப் பாடியுள்ளார். திருவரங்கம் பற்றியும் பதினான்கு பாடல்களில் குறிப்புகள் உள்ளன. அடுத்து இவர் தம் சீடர் கணிகண்ணனுக்காகத் திருமாலை நோக்கிப் "பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்" என்று பாடியவாறே செய்த திருவெஃகாவிலுள்ள திருமாலுக்கு மூன்று பாடல்கள் இவரால் பாடப்பட்டுள்ளன. அடுத்து திருப்பாடகம் திருவூரகம் பற்றித் தலா இரண்டும், திருவல்லிக்கேணி, திருஎவ்வுளூர் பற்றித் தலா ஒன்றுமாகப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் வியூகமூர்த்தியான பெருமாள், எல்லா அவதாரங்களுக்கும் மூலக்கிழங்காக விளங்குபவர். எனவே அவரைப் பற்றிப் பதின்மூன்று பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அடுத்த நிலையில் இவர் "எழுந்திருந்து பேசு வாழிகேசனே" என்று வேண்டியதற்கேற்பச் சயனநிலையிலிருந்து எழுந்த திருக்குடந்தை ஆராவமுதப் பெருமானைப் பன்னிரண்டு பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். பரமபதம் பற்றிய பாடல்கள் இரண்டு உள்ளன.

4.11 *முக்கோற்பகவர் :* சித்து, அசித்து, ஈசன் என்று வைணவ சமயத் தத்துவம் மூன்றாக அமையும். அதற்கு அடையாளமாக வைணவ சமயச் சந்நியாசிகள், மடாதிபதிகள் முக்கோலைச் சேர்த்துக் கட்டித் தாங்கியிருப்பதை இன்றும் காணலாம். இவர்களைக் "குடீசகசந்நியாசிகள்" என்பர் வடநூலார். கலித்தொகையில் "முக்கோல்பகவரை வினாதல்" என்னும் துறையில் அமைந்த பாடல் உண்டு.[120] அடுத்த நிலையில் இவர் அச்செய்தியைத் தம் பாடல் ஒன்றில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

"சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்ட ரொன்றினார்
அற்றபற்றர் சுற்றிவாழும் அந்தணீர ரங்கமே"[121]

அம்முக்கோல்பகவர் பற்று அற்றவர்களாய் வாழ்ந்துவந்தனர் என்ற குறிப்பும் இங்கு உணரத்தக்கதாம். மேலும் அகப்பொருள்துறையிலும் பாடல்கள் இயற்றிப் பின்வந்த ஆழ்வார்களுக்கு இவர் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார்.[122]

இவ்வகையில் திருமழிசையாரின் திருவுள்ளக் கருத்துகள் இரு நூல்களிலுள்ள பாசுரக்கருத்துகளால் அறியமுடிகின்றன. இவ்வாறு அக்காலகட்டத்தில் வைணவ சமயம் வளர்க்கப் பெரும்புரட்சியாளராய் விளங்கிய இவரைக் குரு பரம்பரைகள் திருமாலின் "ஆழி" யின் அம்சர் எனக் குறிப்பிடுவது பொருத்தமானதேயாகும் எனலாம்.

4.12 *முடிவுரை :* இறைவன் புகழ் கிளத்தல், அவன் பெருமையை உணர்த்துதல் என்ற அடிப்படை நோக்கம் இவர் பாடலில் பொருந்துவதைக் கண்டோம். இறையுறை தலச்சிறப்பும், அவன் கொண்ட அவதாரப் பெருமைகளும்

பொருண்மையாகின்றன. திருமால் தத்துவப் புலப்பாடாக இவர் பாடல்கள் அமைகின்றன. முதலாழ்வார்களிடம் காணாப் பிற சமயப்பழிப்பும், நான்முகன், சிவன் முதலியோரை இழித்து மொழிதலும் இவரிடம் உண்டு. இதற்குக் காரணம் இவர் பல சமயங்களையும் ஆராய்ந்து இறுதியில் வைணவ சமயத்தைத் தழுவியதாகலாம். இன்றும் புதிய சமயத்தைத் தழுவுவோர் அதில் ஏற்கெனவே ஈடுபாடு கொண்டிருப்போரைக் காட்டிலும் அதிக வேகம் கொண்டிருப்பதைக் காணலாம். "நான்முகன் திருவந்தாதி" என்று பிரம்மனின் பெயருடன் நூல் அமைவது திவ்வியப் பிரபந்த அமைப்பில் ஒரு வேறுபாடாம். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியரான சீனிவாசப்பிள்ளையும் ஆழ்வார் பதின்மரில் சிறந்தோர் மூவருள் ஒருவராக இவரைத் தேர்ந்தனர். இவ்வகையில் இவரது பெருமையும், இவர் வைணவ சமய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டமையும் நன்கு புலனாகும்.

## அடிக்குறிப்புகள்

1. திருமழிசையாழ்வார் அவதரித்த இடத்தில் ஒரு மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. பாழடைந்த நிலையில் அது உள்ளது. ஊரிலிருந்து சற்றுத்தொலைவில் வயல் வெளிகளுக்கிடையில் உள்ளது. இது கள ஆய்வில் கண்டது.
2. திருமழிசை திருக்கோயிலின் எதிரிலுள்ள திருக்குளத்தின் படித்துறையிலுள்ள பரமபதநாதன் சிலை பின்னமாக உள்ளது.
3. இவ்வூர் இன்று "ஒரிக்கை" என மருவி வழங்குகின்றது.
4. பின்பழகிய குருபரம். ப. 10.
5. நான். திரு. 93.
6. S.I.I. Vol. I, PP. 29, 30, 40.
7. எஸ். குலசேகரன், "வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை", பக். 58-59.
8. மு. இராகவையங்கார், "ஆழ்வார்கள் கால நிலை", ப. 68.
9. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, அடிகள். 30-33.
10. பி. டி. சீனிவாச அய்யங்கார், "பல்லவர் சரித்திரம்", ப. 307.
11. எஸ். குலசேகரன், "வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை", பக். 63-64.
12. நான். திரு. 1.
13. மேலது - 20.
14. மேலது - 2.
15. மேலது - 66
16. மேலது - 17
17. மேலது - 9
18. மேலது - 69
19. மேலது - 71
20. மேலது - 63
21. மேலது - 40

22. திருச். விரு. 100
23. நான். திரு. 95
24. திருச். விரு. 101
25. நான். திரு. 39
26. மேலது - 41
27. மேலது - 42
28. மேலது - 44
29. மேலது - 45
30. மேலது - 46
31. மேலது - 96
32. திருச். விரு. - 17
33. மேலது - 61
34. பொருளின் தோற்றத்திற்கு வினைமுதல், (நிமித்தகாரணம்) முதற்காரணம், (உபாதாந காரணம்) துணைக்காரணம் (ஸஹகாரி காரணம்) என்று மூன்று காரணங்கள் வேண்டும். குடம் தோன்ற குயவன் (வினைமுதல்) மண் (முதற்காரணம்) சக்கரம், நீர் முதலிய துணைக்காரணங்களும் தேவைப்படுகின்றன.
35. திருச். விரு. 76
36. பரி. 13 : 14-25
37. திருச். விரு. 1
38. மேலது - 3
39. மேலது - 2
40. மேலது - 17, 31, 34, 39
41. ஆசாரிய ஹிருதயம், 155-ஆம் சூத்திர விளக்கம், ப. 404
42. திருச். விரு. தனியன் - 2
43. மா. இராச மாணிக்கம்பிள்ளை, "பல்லவர் வரலாறு", ப. 107.

44. தாமரைக்கண்ணன், "சிங்கவரம் கோயில்", "பெருங்கருணை", இதழ் (சென்னை, 1987) மற்றும்,

மயிலை. சீனி. வேங்கடசாமி, "மகேந்திரவர்மன்", முதல் பதிப்பு, (சென்னை ஆ. இ.) ஆகியவற்றினின்றும் தொகுத்த சில குறிப்புகள்.

45. நான். திரு. 68

46. மேலது - 1

47. திருச். விரு. 5

48. மேலது - 8

49. மேலது - 14

50. மேலது - 17

51. நான். திரு. 64

52. திருச். விரு. 10

53. மேலது - 20, 28, 39

54. மேலது - 27, 43, 58, 66 - மற்றும் நான். திரு. 17, 25

55. மேலது - 20, 70

56. மேலது - 36

57. மேலது - 37, 43

58. மேலது - 38, 43, 52, 86, மற்றும் நான். திரு. 33

59. மேலது - 40

60. மேலது - 41, 42, 55, 92

61. மேலது - 53

62. மேலது - 80, 107

63. மேலது - 89

64. மேலது - 107

65. நான். திரு. 24

66. திருச். விரு. 39, 49

67. மேலது - 50

68. மேலது - 51, 56. மற்றும், நான், திரு. 8, 28
69. மேலது - 54
70. மேலது - 73, 81 மற்றும், நான், திரு. 28, 85
71. மேலது - 81
72. மேலது - 107
73. நான். திரு. 28
74. நான். திரு. 44
75. திருச். விரு. 23
76. மேலது - 24
77. மேலது - 25
78. மேலது - 62
79. நான். திரு. 5
80. மேலது - 18
81. திருச். விரு. 42
82. மேலது - 113
83. நான். திரு. 9
84. மேலது - 73
85. மேலது - 96
86. மேலது - 13
87. திருச். விரு. 15
88. மேலது - 14
89. மேலது - 1, 13
90. மேலது - 3, 8
91. மேலது - 12
92. மேலது - 25, 27
93. மேலது - 29

94. மேலது - 75

95. மேலது - 76

96. நான். திரு. 11

97. மேலது - 23

98. திருச். விரு. 77

99. மேலது - 78

100. மேலது - 111

101. மேலது - 67

102. திருச். விரு. 68

103. மேலது - 69

104. மேலது - 81

105. மேலது - 82

106. மேலது - 46

107. மேலது - 47

108. மேலது - 64, 65

109. மேலது - 91, 95

110. மேலது - 92

111. மேலது - 94

112. மேலது - 26

113. மேலது - 94

114. மேலது - 110

115. மேலது - 115

116. மேலது - 118

117. மேலது - 119, 120

118. நான். திரு. 95

119. திருச். விரு. 34, 40

120. கவித்தொகை. 9

121. திருச். விரு. 52

122. நான். திரு. 39

# இயல்-ஐந்து

# ஏனைய ஆழ்வார்களின் காலத்தில் வைணவம்-வைணவத் திருக்கோயில்கள்


5.0 முன்னுரை

5.1 திரு அட்டபுயகரம்

5.1.2 திருஅத்தியூர்

5.1.3 திருஅல்லிக்கேணி

5.1.4 திருஇடவெந்தை

5.1.5 திருஊரகம், திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம்

5.1.6 திருஎவ்வுள் (திருவள்ளூர்)

5.1.7. திருக்கடல் மல்லை

5.1.8. வராகப்பெருமாள் சந்நிதி

5.1.9. ஜலசயனம்

5.1.10 அனந்த சயனமூர்த்தி

5.1.11 வராக மண்டபம்

5.1.12 திரிவிக்கிரமமூர்த்தி

5.1.13 திருக்கடிகை (சோளங்கிபுரம்)

5.1.14 திருக்கள்வனூர்

5.1.15 திருத்தண்கா (விளக்கொளிப்பெருமாள் கோயில்)

5.1.16 திருநிலாத்திங்கள் துண்டம்

5.1.17 திருநின்றவூர் (தின்னனூர்)

5.1.18 திருநீர்மலை

5.1.19 திருப்பரமேச்சுரவிண்ணகரம் (வைகுந்தப்பெருமாள் கோயில்)

5.1.20 இக்கோயிலின் அமைப்பும் சிறப்புகளும்

5.1.21 திருநந்திபுர விண்ணகரம்

5.1.22 நந்திவர்மனின் திருவல்லிக்கேணித் திருப்பணி

5.1.23 திருப்பவளவண்ணம்

5.1.24 திருப்பாடகம் (பாண்டவதூதர் திருக்கோயில்)

5.1.25 திருப்புட்குழி.

5.1.26 திருவெஃகா (சொன்னவண்ணம் செய்த பெருமான் கோயில்)

5.1.27. திருவேங்கடம்

5.1.28 திருமலை—ஆலய அமைப்பு—மூலவர், பஞ்ச பேரங்கள்.

5.1.29 ஆழ்வார்களின் பாசுரக் கருத்துகள்.

5.1.30 திருவேளுக்கை.

5.1.31 திருக்கோவலூர்.

5.1.32 இயற்கைவளம்.

5.1.33 ஆலய அமைப்பு.

5.1.34 திருவயிந்திரபுரம்.

5.1.35 இயற்கையழகில் ஈடுபாடு.

5.2. சமுதாயச் செய்திகள்.

5.3. முடிவுரை.

# இயல் — ஐந்து

## ஏனைய ஆழ்வார்களின் காலத்தில் வைணவம் — வைணவத் திருக்கோயில்கள்

5.0. *முன்னுரை* : பன்னிரு ஆழ்வார்களுள் தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கம் தவிர வேறு திருத்தலங்களைப் பாடாதவர், மதுரகவியாழ்வாரோ "வேதம் தமிழ் செய்த மாறனைத்" தவிர வேறொன்றும் அறியாதவர். முந்தைய இயல்களுள் முதலாழ்வார் மூவர், திருமழிசையார் ஆகிய நான்கு ஆழ்வார்களும் தொண்டைநாட்டுத் திருத்தலங்களைப் பற்றிப் பாடிய பாசுரக் கருத்துகள் பல ஆராயப்பட்டன. இவர்களது பாசுரக் கருத்துகள் சில இங்கும் தலமுறையில் குறிக்கப்பெறும். எஞ்சியுள்ள ஆழ்வார்களான.

(1) நம்மாழ்வார்.

(2) குலசேகராழ்வார்.

(3) பெரியாழ்வார்.

(4) ஸ்ரீஆண்டாள்.

(5) திருப்பாணாழ்வார்.

(6) திருமங்கையாழ்வார்—என்னும் ஆறு ஆழ்வார்கள் பாடியருளியுள்ள பாசுரங்களை அடியொற்றி, தொண்டைநாட்டுத் திருத்தலங்களின் பெருமைகளை இவ்வியலில் அறியப்படும். திவ்விய தேசங்கள் அகர வரிசைப்படி தொகுத்து எழுதப்பெற்றுள்ளன.

5.1. *திருஅட்டபுயகரம்* : காஞ்சியிலுள்ள இத்திருத்தலத்தில் வராகப்பெருமாள், இராமர், புஷ்பவல்லித் தாயார், ஆண்டாள் ஆகியோர்க்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. முக்கிய சந்நிதியில் பெருமாள் எட்டுத் திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இதனால் "அட்டபுயகரத்தான்" என்ற திருநாமம் ஏற்பட்டது. ஆதிகேசவப்பெருமாள் என்ற திருநாமமும் உண்டு.

பெருமான் தம் வலப்புறம் நான்கு திருக்கைகளில் சக்கரம், கத்தி, மலர், அம்பு ஆகியவற்றையும், இடப்புறம் நான்கு திருக்கைகளில் சங்கம், வில், கேடயம், கதை ஆகியவற்றையும் ஏந்தியவண்ணம் மேற்கு முகமாகச் சேவை சாதிக்கிறார்.[1] இங்கு பாஞ்சராத்திர ஆகம முறையில் வழிபாடு நடக்கிறது. காஞ்சியிலுள்ள திருத்தலங்களில் இங்கு மட்டுமே பரமபத வாசல் உள்ளது.

இப்பெருமானைப் பேயாழ்வாரும், திருமங்கை மன்னரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். பேயாழ்வார் ஒரு பாசுரத்தில் பாடியுள்ளார்.

''தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று—குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்குச் சார்வு''[2]

''எட்டு ஆயுதங்களையும் சிரமமின்றி ஏந்தித் தவறாமல் வெற்றிபெறும் பெருமான், நீர்ப்பொய்கையில் முதலை இறக்க இலக்குத் தவறாமல் விட்ட ஆழிப்படையானின் திருவடிகளே நமக்கு அடையத்தக்க பொருளாகும்.''

''ஐம்பொறிகளாகின்ற பல முதலைகளின் வாயிலே அகப்பட்டுத் துடிக்கின்ற நம்மைக் காத்தருளவே, பெருமான் இங்கு எழுந்தருளியுள்ளான்'' என்பது உள்ளுறையாகும்.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் இரண்டாம் பத்து எட்டாம் திருமொழியில் பத்துப் பாசுரங்களால் இவரை மங்களாசாசனம் செய்துள்ளார். இதில் ஐந்தாம் பாசுரத்தில் 'எண்கையான்' என்று இவரைக் குறிப்பிடுகின்றார். அகப்பொருள் துறையில் அமைந்த இப்பாசுரங்களின் கருத்துகளைத் தொகுத்துக் காண்போம்.

தலைவனைப் பிரிந்த தலைவி மெலிந்தாள் ; திருவட்டபுயகரப் பெருமானை நினைந்து நிற்க, உருவெளிப்பாடு தோன்றியது. அந்நிலையில் அவரிடம் சில சொற்கள் சொல்வது போலவும், அவர் அதற்கு மாற்றங்கள் சொல்வது போலவும் தலைவி தன் தாய், தோழி ஆகியோரிடம் சொல்லத் தொடங்கினாள்.

''முப்புரம் எரித்தவனும், பிரமனும் வியக்கப் பிரகலாதனுக்காக இரணியன் உடல்பிளக்க நரசிங்க உருவம் கொண்ட இவர் யார் என்று யான் வினவ,'' நான் அட்டபுயகரத்து நாயனார்' என்றார்.[3]

**உள்ளுறை :** ஒரு சிறுவனுக்காக வந்து உதவியதுபோல, உனக்கு உதவ இங்கே வந்து காத்திருப்பவன் என்கிறார்.

''இராமபிரானைப் போன்ற இவர் முதலாழ்வார்கள் வணங்கும் திருவேங்கடமுடையவனோ ? மாவலியிடம் மூன்றடி நிலம் பெற்று உலகை அளந்திட்ட அறவோனைப் போன்று இருந்த இவர் யார் ?' என்று வினவ 'அட்டபுயகரத்தேன்'' என்றார்.[4]

**உள்ளுறை :** ''மண்ணை இரந்து வந்தவன் அல்லேன் ; உன்னை இரந்து வந்தவன் : எனக்காக இரந்தவனல்லன் ; பிறர்க்காக இரந்தவன்'' என்கிறார்.

''எட்டுத் திருக்கைகளிலும் திவ்விய ஆயுதங்களைத் தரித்தவனும், குவலயாபீடம் என்னும் யானை முடியும்படி செய்தவனும் ஆகிய இவர் யார் ?'' என்று யான் வினவ, 'அட்டபுயகரத்தேன்''[5] என்றார்.

**உள்ளுறை :** ''கம்சன் ஏவிய யானையை முடித்து, அவன் படைவீட்டிலிருந்த பெண்களின் அச்சத்தைப் போக்கியதுபோல, உன் அச்சம் தீர்க்கவும் நிற்கிறேன்'' என்கிறார்.

''மழையைத் தடுத்து யானையின் கொம்பைப் பறிக்கும் கண்ணனோ ? திருநாட்டில் அழகிய சுடர் போல இருக்கும் இவர் !''[6] என்ன, அட்டபுயகரத்தேன்''[7] என்றார்.

**உள்ளுறை :** ''அவ்வளவு சேய்மையில் உள்ளவன் என்று கைவாங்க வேண்டா, உனக்காகக் கிட்ட வந்து நிற்பவன்' என்கின்றார்.

''வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், இலக்கணநூல்கள், மீமாம்சை நூல்கள் ஆகியவற்றைத் தேவர்க்கும் மனிதர்க்கும் அருளி அலையெறியும் கடல் போன்றவர் அட்டபுயகரத்தேன்'' என்றார்.[8]

**உள்ளுறை :** ''கடல்போல் இறங்க ஒண்ணாதபடி வரம்பற்றவன் என்று இருக்க வேண்டா ; உனக்கு நெஞ்சால் அளந்து அறியத்தக்கவாறு வந்து நிற்கிறவன்'' என்கின்றார்.

''நாம் இவருடைய படிகளை எவ்வாறு அறியப்புகுந்தாலும், ஒன்றும் அறியமுடியவில்லை. பெண்டிரைத் தம் வயமிழக்கச் செய்யும் நீலமேனியரான இவர் அட்டபுயகரத்தேன்'' என்றார்.[9]

**உள்ளுறை :** உன்னால் அறிய முடியாவண்ணம் இருப்பதாகச் சொல்கிறாய் ; நீ அறிவதற்காக வந்து நிற்கிறவன் அன்றோ நான்'' என்கிறார்.

''திருத்துழாய் மாலையைத் திருமேனியில் தரித்து, சந்தனம் பூசி, தாமரை போன்ற திருக்கண்களும், அழகான திருமார்பும், திருத்தோள்களும், திருவாயும் அழகியனவாக இருக்கும். இவர் அட்டபுயகரத்தேன்'' என்றார்.[10]

**உள்ளுறை :** ''இவ் ஒப்பனை அழகைக் கொண்டு திருநாட்டிலே இருப்பவன் என்று கூசவேண்டா ; உனக்காக வந்து நிற்பவன் நான்'' என்கின்றார்.

"மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்
நீண்முடி மாலை வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி
அட்ட புயகரத் தாதி தன்னைக்
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
காமரு சீர்க்கலி கன்றி குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ் சொல்மாலை
ஏத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே."[11]

"வயிரமேகன் வணங்கும் பெருமானாகவுள்ள அட்டபுயகரத்தானை, திருமங்கை மன்னன் சொன்ன சொல்மாலையைக் கொண்டு பெருமானை வணங்க வல்லவர்க்கு இருப்பிடம் வைகுந்தம் ஆகும்."

"மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் நீள்முடிமாலை வயிரமேகன்" என்ற பாசுரத்தொடர், நந்திவர்மனுடைய சாசனத்தில் அவன் புகழ்ச்சியாக அமைந்த வடமொழி வாக்கியத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது. அஃதாவது,

ப்ரணதாவநீபதி மகுடமாலிகாலீட சரணாரவிந்த'[12] என்பது. "இங்குக் குறிக்கப்பெற்றவன் இரண்டாம் நந்திவர்மனே என்றும், "வயிரமேகன்" என்பது அவனது சிறப்புப்பெயர்" என்றும் மு. இராகவ அய்யங்கார் பலவாறு ஆராய்ந்து கூறுவர்.[13]

5.1.2. **திருஅத்தியூர் :**[14] அ/மி. வரதராஜப்பெருமாள் திருக்கோவில் பெருந்தேவித் தாயார். கோயில் (திருவரங்கம்) திருமலை, பெருமாள் கோவில் (அத்தியூர்) ஆகிய வைணவத் திருத்தலங்கள் மூன்றனுள் ஒன்று. பாசுரங்களில் பொதுவாகக் "கச்சி" என்று குறிக்கப்படும் இடங்களில் இத்தலம் கொள்ளப்படுகின்றது. இங்குள்ள அத்திகிரியை வேள்விச் சாலையாகக் கொண்டு பிரம்மா யாகம் செய்ய, அதில் தோன்றிய புண்ணியகோடி விமானத்தில் பெருமாள் எழுந்தருளி வரம் கொடுத்தபடியால், 'வரதராஜன்' என்ற திருப்பெயர் ஏற்பட்டது என்பது புராணவரலாறு.

பூதத்தாழ்வார் இப்பெருமானை இரு பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.[15] அவர் "அத்தியூரான் புள்ளையூர்வான்" எனப் பாடியருளிய பின்னர் இவருக்கும், இத்திருத்தலத்திற்கும் ஏற்றமுண்டாயிற்று. திருமங்கையாழ்வார் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில்[16] மூன்றாம் பாசுரத்தில்

"வரம் தரும் மாமணிவண்ணன்" என்று இவரைக் குறிப்பிடுவார். இத்தொடர் இவ்ஆலயக் கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளது.[17]

5.1.3. **திருஅல்லிக்கேணி :**[18] "அழகிய அல்லிமலர்கள் நிரம்பிய குளத்தையுடைய ஊர்"—என்று பொருள். இக்கோயிலில் அ. மி. வேங்கடகிருஷ்ணன் மூலவர். அ. மி. நரசிம்மர், அரங்கநாதர், இராமர், வரதர் ஆகிய ஐந்து பெருமான்கள் தனித்தனிச் சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளனர். அரங்கநாதருக்காக வேதவல்லித் தாயாரும், பார்த்தசாரதிக்காக ஆண்டாளும் தனித்தனிச் சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளனர். முக்கிய சந்நிதியின் நடுவில் வேங்கடகிருஷ்ணன் காட்சியளிக்கிறார். வலப்புறம் உருக்குமிணியும், இடப்புறம் தம்பி சாத்யகியும் உள்ளனர். வடதிசை நோக்கி அண்ணா பலராமரும், எதிர்த்திசையில் தென்திசை நோக்கி மகன் பிரத்யும்நனும், பெயரன் அநிருத்தனும் உள்ளனர். இதைப் பஞ்சமூர்த்தி தலம் என்பது பிற்கால ஐதிகமாகும். பஞ்சவீரத் தலந்தான் அது.

வியூகத்தத்துவமே பாஞ்சராத்திர ஆகமத்தின் அடிப்படைக்கொள்கை. வியூகம் என்ற சொல்லுக்குப் "பிரிந்து நிற்றல்" என்றும் ஒரு பொருள் உண்டு. ஒரே தெய்வம் நான்கு விதமாகத் தன்னைப் பிரித்துக்கொண்டு நிற்கின்றது. இது பஞ்சவீர வழிபாட்டிலிருந்தும் தோன்றியுள்ளது. பன்னெடுங்காலமாகவே யாதவ, சாத்வத விருஷ்ணி மக்களது வழிபாட்டிலிருந்து வந்த வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்தன், அநிருத்தன், சாம்பன் என்ற பஞ்சவீர ஆராதனையை வைதிக வேதாந்திகள் தழுவிக்கொண்டு பஞ்சவீரர்க்கும் சமநிலை வழங்கி, வியூகத்தத்துவத்தை வகுத்துள்ளனர். சங்கர்ஷணன்-ஜீவனாகவும், பிரத்யும்நன்-அகங்காரமாகவும், அநிருத்தன்-மனமாகவும் தத்துவ விளக்கம் தந்து பலவித மந்திரங்களையும், வழிபடும் முறைகளையும் வகுத்துள்ளனர். வாசுதேவனே பரம்பொருள் என்றும், அவனே புராணங்களின் மும்மூர்த்திகளின் இடத்திலே முத்தொழில் புரிகிறான் என்றும் கற்பித்துள்ளனர்.

"வியூக வழிபாடு காலப்போக்கிலே வாசுதேவ வழிபாட்டிலே கலந்து மறைந்தது. இதற்குக் காரணம், கருவறையிலே பஞ்சமூர்த்திகளை வைத்துப பூசிப்பது கைவிடப்பட்டு, மூலமூர்த்தி ஒன்றன் வழிபாடு மட்டும் தொடங்கியதாகலாம். மூலமூர்த்திக்கும் வழிபாட்டிலே மந்திரபுஷ்பம் என்ற கிரியை செய்யும்பொழுதுதான் முதலிலே நான்கு வியூகங்களின் பெயரைச் சொல்லி அருச்சித்தபின், பன்னிருவியூகங்களின் பெயரைச் சொல்லிப் பூச் சொரிவர், வியூக வழிபாடு பெயரளவில்தான் உள்ளது. கோயில் விமானங்களின் வெளிப்புறத்தில் கிழக்குப் பார்த்து வாசுதேவன், தெற்குப் பார்த்து சங்கர்ஷணன், மேற்குப் பார்த்துப் பிரத்யும்நன், வடக்குப் பார்த்து அநிருத்தன் ஆகியோர் தோன்றுவர்."[19]

கண்ணபிரானுக்கென்று பல கோயில்கள் இருந்தாலும், பார்த்தசாரதி கோலத்துக்கென்று இருப்பது இக்கோயில் ஒன்றே ! பார்த்தனுக்குத் தேரோட்டிய அவசரம் ஆனதால் சக்கராயுதமில்லை. வலத்திருக்கையில் சங்கு உண்டு. போரில் பெற்ற வெற்றியை ஊதி அறிவிக்கச் சங்கம் அவசியமாகிறது. இடத்திருக்கை வரத முத்திரையோடு இலங்குகின்றது.

மூலவருக்கு முன்னால் உற்சவமூர்த்தமாக நிற்பவரே பார்த்தசாரதி ஆவார். உபயநாச்சிமாருடன் எழுந்தருளியுள்ளார். இவர் திருக்கரத்தில் தேரோட்டுவதற்குரிய சாட்டை உண்டு என்பர். அதை நகைகள் மறைத்துவிடும்.

மூலவர் இடையிலேயிருந்து ஒரு கத்தி தொங்கும். பார்த்தனுக்குத் தேரோட்டும்போது ஆயுதமே எடுப்பதில்லையென்று சத்தியம் செய்துகொடுத்திருந்தானே அப்படியிருக்கக் கத்தியை இடையில் செருகி இருப்பதேன் ? இதற்குக் கீதாசாரியனாய், ஞானயோகத்தை விளக்கும்போது,

"அஞ்ஞானம் வேரூன்றிய நெஞ்சில் எழும் ஐயங்களை
ஞானவாளால் அறுத்து யோகநிலை கொள், பார்த்த ! எழுந்து நில்"

என்று பார்த்தசாரதி சொன்னானே அந்த ஞானவாளே இடையிலிருப்பது என்று கொண்டால் நம் சந்தேகம் நீங்கும்.[20]

தொண்டைமானின் வழிபாட்டிற்கு இரங்கித் திருவேங்கடமுடையானாகக் காட்சியளித்த தலம் இது என்பர். பேயாழ்வார்,

. . . . . . . . . "எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று"[21]

என்று ஒரு பாசுரத்தால் "மந்நாதனை"—வேதவல்லித்தாயாரின் மணாளனை மங்களாசாசனம் செய்கிறார்.[22]

திருமங்கை மன்னர் பெரிய திருமொழியில், இரண்டாம் பத்து மூன்றாம் திருமொழியில் பத்துப் பாசுரங்களில் இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார். திருமழிசையாரும் இவரை ஒரு பாசுரத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார்.[23]

"அடியார் பகையினைக் கிழங்கெடுப்பவனாய், அடியாரோடு கூடி இருத்தலையே இயற்கையாகக் கொண்டவனாய், அடியார்க்கு எளியவனாய் இருப்பவன் எம்பெருமான். அவன் இத்தகு குணங்களோடு திகழும் தனது திருவல்லிக்கேணி இருப்பினைக் காட்டிக்கொடுத்தான். மக்கள், மலர் முதலிய வழிபாட்டுப் பொருள்களைக் கொண்டு வணங்குவதற்கு ஏற்ப வந்து கிடக்கின்றான் ; மேலும் கஜேந்திரன் முதலையால் பற்றப்பட்டபொழுது, அதன் துதிக்கையில் இருந்த மலர் செவ்வி அழியாதபடி, பெருமான் திருவடிகளிலே அதைப் படைக்கவேண்டி இடர்ப்பட்டது ; அவ் இடரைத் தீர்க்க, அது இடர்ப்பட்ட மடுவின் கரையில் அரை குலையத் தலைகுலைய வந்து விழுந்தான் ; அவ் யானையின் துயர்நீக்கி அதனை ஆற்றினான்.[24] அத்துடன் அமையாமல், இன்னமும் இப்படி

இடர்ப்படுவாருண்டோ ? என்று சாய்ந்தருளினான். அவனைக் கண்டேன் என்கின்றார், என்று இத்திருமொழிக்குத் தோற்றுவாய் செய்கின்றார் பெரியவாச்சான்பிள்ளை.[25]

''கம்சனும் மல்லர்களும் யானையும் அதன் பாகனும் ஆகிய எல்லாம் விழும்படி அழித்தவனை, சிவனின் துன்பத்தைக் களைந்த தலைவனை, பகைவர் மாய அருச்சுனனது தேரில் தேரோட்டியாய் நின்றவனை, சிற்றன்னை பணியால் முடிதுறந்த பெருமானைத் திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.''[26]

உள்ளுறை : பகைக்கூட்டத்தை அழிப்பவனாய், தம்மை இறைவனாக நினைத்துக்கொண்டிருப்பவர்க்கும் இடர்நேரின் போக்குபவனாய், தன் அடியார்க்காகத் தன்னை அழியமாறி உதவுபவனாய், பொய் அன்பினர்க்கும் அவர்கள் ஏவியது செய்பவனாய் அமைந்தவனைக் கண்டேன் என்கிறார்.

''வேதவடிவாய் இருப்பவனை, அதன் பயனாய் இருப்பவனை, முனிவர்கள் விழுங்கும் நற்கனியை, நந்தகோபர் மகனை, உலகினர் பணிந்து பரவும் முதல்வனைக் கண்டேன் ; பூதனையின் உயிருண்டவனை, அசுரர்களுக்குக் காலனாய் இருப்பவனை, மோகினி வடிவுகொண்டு தேவர்களுக்கு அமுதம் அளித்தவனைக் கண்டேன் ; ஆயர்கள் இந்திரனுக்கென்று எடுத்த விழாவை மாற்றியதால், இந்திரன் கோபித்து மழை பெய்விக்க, ஆயர்கள், 'எங்களுடைய பசுக்களையும் எங்களையும் காத்தருள்க'' என்று வேண்ட, கோவர்த்தன மலையைக் கொண்டு அம்மழையைத் தடுத்தவனைக் கண்டேன். (எந்நாளும் பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளம்—ஸ்தோத்திர ரத்தினம்—49, என்று சொல்லப்படும் உலக வாழ்க்கையாகிய மழையை மாற்ற வந்தவன்).

பாண்டவர்க்காகத் தூது சென்றவனைக் கண்டேன். துச்சாதனன் திரௌபதியிடம் சென்று, ''எங்களுக்கு அடிமை செய்வாய்'' என்று கூற, அதுகேட்டுப் பொறாமல், ''இறைவா ! காத்தருள்வாய்'' என வேண்ட அத்திரௌபதியின் மனவருத்தத்தை நூற்றுவரின் மனைவியரடைந்து மங்கல நாண் இழக்குமாறு செய்து, அருச்சுனனது தேர்முன் நின்றவனைக் கண்டேன். (ஒருவர் வலியார் சிலரைத் தமக்குச் சார்பாகப் பற்றினாலும் தானே தாழநின்று பாதுகாக்க வல்லவன். திரௌபதியின் துன்பத்தை நீக்கக் கணவரால் இயலவில்லை. அருச்சுனனுக்கு அரவக்கணையால் பேரிடர் வந்தபோது இந்திரன் உதவவில்லை ; இரண்டிடத்தும் இறைவனே முறையே புடைவை சுரந்தும், தலையைக் காத்தும் உதவி செய்தான்).

''பரத இலக்குவ சத்துருக்கனரொடு சீதையும் வணங்கும்படி எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, குரவமலர்கள் மணக்கும் குளிர்ந்த

சோலையில், பாடும் குயில்களோடு மயில்கள் ஒத்துநின்று ஆட, சூரியனின் கதிர்கள் உள்ளே நுழைந்தறியாத திருவல்லிக்கேணியில் கண்டேன்.''[27]

இயற்கையோடியைந்த வாழ்க்கை வாழ்ந்த அக்கால மக்களின் பெருமையை இவ்வடிகளால் அறியமுடிகிறது. இயற்கையில் இறைவனைக் கண்டு, இயற்கை வாழ்வு வாழ்ந்த அக்காலம் சிறந்த காலமாக இருந்தது. இன்றைய இயந்திரயுகத்தில் இயற்கையை மனிதன் அழித்துவரும் நிலையைக் காணமுடிகின்றது.

கம்பநாடன், இரணியவதைப் படலத்தில் நரசிங்கம் வெளிப்பட்ட காட்சியைப் பாட முன்னோடியாக இருந்த பாசுரத்தை இனிக் காண்போம்.

''பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
 வாயிலோர் ஆயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போதவாங் கதனுக்
 கொன்றுமோர் பொறுப்பில னாகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப்
 பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
 திருவல்லிக் கேணிக் கண்டேனே''[28]

தெள்ளிய சிங்கம்—இதன் அடியாகவே திருவல்லிக்கேணி அழகிய சிங்கப்பெருமாளுக்குத் தெளிசிங்கப் பெருமாள் என்னும் திருப்பெயர் வழங்கலாயிற்று.

இறுதிப்பாசுரத்தில் தொண்டையர்கோன் செய்த திருப்பணி குறிக்கப்பெறுகின்றது. இதில் சுட்டப்பெறும் தொண்டையர்கோன் இரண்டாம் நந்திவர்மன் ஆகலாம் என்பர் மு. இராகவையங்கார். இவன் மகன் தந்திவர்மனது கல்வெட்டு இக்கோயிலில் உள்ளது (பின்இணைப்பு-அட்டவணை 2-இல் காண்க).

5.1.4. திரு இடவெந்தை[29] ஆழ்வார்களின் பாடல் பெற்ற திருத்தலங்களுள் பெருமாள் வராக வடிவினராய்ச் சேவை சாதிக்கும் திருத்தலம் இது. பெருமாள் தன் இடப்புறத்தில் பிராட்டியை ஏந்தியுள்ளமையால் "திரு இட எந்தை" எனப் பெறுகின்றார். திருநாமம் நித்திய கலியாணர். தாயார் அகிலவல்லி நாச்சியார். கோயிலுள் சோழர்காலக் கல்வெட்டுகள் பல உள்ளன.[30] கல்வெட்டுகளில் இவ்வூர் ஆமூர்க் கோட்டத்துப் படுவூர் நாட்டுத் திருவிடவெந்தை என்று வழங்கப்படுகிறது. இக்கோயில் நிருவாகம் இவ்வூர்ச் சபையார், ஊரார் என்று வழங்கப்பட்ட இருவகைக் குழுவினரிடம் இருந்தது.

உத்தம சோழனுடையதாகக் கருதப்படும் பரகேசரிவர்மனுடைய 6-ஆம் ஆண்டில் இவ்வூரிலுள்ள இறைவனாகிய மணவாளப் பெருமாளுக்கு விளக்கு

எரிப்பதற்காக 30 கழஞ்சுப்பொன் நன்கொடை வழங்கிய செய்தியை இக்கோயில் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

இங்கு வீரபாண்டியன் முடித்தலை கொண்ட பரகேசரிவர்மனாகிய பார்த்திவேந்திரவர்மனுடைய மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இவை அவனுடைய 13-ஆம் ஆண்டுவரை செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் காணப்படுவது கொண்டு அவன் தொண்டை மண்டலத்தில் இராசப்பிரதிநிதியாக ஆண்ட அரசகுல இளவரசன் என்று எச். கிருஷ்ண சாஸ்திரியர் கூறுவது கருதத்தக்கது. இவன் சுந்தரசோழன் காலத்தில் முதன்முதல் தொண்டைமண்டலத்தில் அரசப்பிரதிநிதியாக அலுவல் புரிந்தவனாவான். இக்கல்வெட்டுகளிலிருந்து இவ்வூருக்கு அசுரகுலகால நல்லூர் என்ற பெயரும் வழங்கி வந்தது தெரிகின்றது.

இத்திருத்தலத்தைப் பாடியுள்ள ஒரே ஆழ்வார் திருமங்கையாழ்வார். இப்பெருமானை இவர் "ஏத்துவார் தம் மனத்துள்ளான்" என்று ஒரு பாசுரத்தில் பாடியருளுகின்றார்.[31] பெரியதிருமொழி இரண்டாம் பத்து ஏழாந்திருமொழி முழுவதும் பத்துப் பாசுரங்களால் இப்பெருமானை ஆழ்வார் ஏத்துகின்றார்.

ஆழ்வார் தாமான தன்மையை இழந்து, தலைவி நிலையடைந்து தளர்ந்தார். திருத்தாயார் அதைப்பார்த்து, இடவெந்தைப் பெருமானின் திருவடிகளில் தலைவியைக் கொண்டுவிட்டாள். "நீர் இவள்பால் என் செய்வதாக எண்ணியுள்ளீர் ? என்று வினவுகின்றாள், திருத்தாயார். அத்திருத்தாயார் பாசுரத்தால் தமக்குப் பிறந்த நிலையினைப் பேசுபவரானார்.

"எம்பெருமானே ! திருமகளும் நின் திருமார்பில் உறைவதையறிந்தும், இவள் நின்னிடம் கொண்ட காதலை விடவில்லை ; வைகுந்தத்தில் புகமுடியாமல் அகன்றவர்களும் பிழைப்பதற்காகத் திருவிடவெந்தையில் வந்து நிற்கும் என் குலத் தலைவனே ! இவளை என் செய்வதாக உன் மனத்தில் நினைத்திருக்கிறாய் ? சொல்வாய்.[32]

"இவள் தோழியரிடம் சிரித்துப் பழகாமலும், நகில்களில் சாந்தணிந்து ஒப்பனை செய்யாமலும், கண்களுக்கு மைதீட்டாமலும், மலர்களைக் கூந்தலில் அணியாமலும், உன்னிடம் மயக்கம் கொண்டிருக்கிறாள். "இவள் திறத்தில் என் நினைந்திருந்தாய் ? சொல்வாய் ![33] இப்பத்துப்பாசுரங்களிலும் தலைவியின் உடல் வேறுபாடும், மெலிவும் கேட்போர் உள்ளம் இரங்குமாறு கூறப்பெற்றுள்ளன.

ஆழ்வார்கள் தம்முடைய பாசுரங்களில் அகப்பொருள் தத்துவத்தைக் குழைத்துத் தருவர். பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும் ஒன்பதுவகையான தொடர்புகள் உண்டு என்று வைணவத் தத்துவம் கூறுகின்றது. அவற்றுள் "நாயக-நாயகி பாவனையும்" (தலைவன்-தலைவி உறவு) ஒன்றாகும். இந்த உறவே

ஏனையவற்றுள் சிறந்ததாகும். இம்முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும், சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாடல்களை நாலாயிரத்திலும் தேவாரத்திலும் காணலாம். ஆயினும் வைணவப் பெருமக்களே சங்ககால நெறியையொட்டி ஓர் அகப்பொருள் நெறியினை அமைத்துக்காட்டிய பெருமையினைப் பெற்றனர். தாய் கூற்றாக, தோழி கூற்றாகப் பாடல்கள் பாடினர். புருடோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன்னர், உலகிலுள்ள ஆன்மாக்கள் யாவும் பெண் தன்மையினை அடைந்து நிற்கும் என்பது அவர்கள் கண்டதத்துவமாகும். எனவே, ஆழ்வார்கள்—குறிப்பாக நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும், பெண் தன்மை எய்திப் பல திருக்கோயில் பெருமான்களை அனுபவித்ததை அவர்களுடைய பாசுரங்களில் காணலாம்.

நம்மாழ்வார் போன்ற ஞானச்செல்வர்களிடம் சில சமயம் ஞானம் தலைதூக்கி நிற்கும் ; சில சமயம் பிரேமம் (காதல்) மீதூர்ந்து நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலிருக்கும்பொழுதும் அவர்கள் பாசுரங்கள் அருளியுள்ளனர். இதனை,

"ஞானத்தில் தம்பேச்சு ;
பிரேமத்தில் பெண்பேச்சு"[34]

என்று "ஆசாரிய ஹிருதயம்" என்ற நூல் குறிப்பிடும். அதாவது, ஞானநிலையிலிருக்கும்பொழுது அவர்கள் தாமான தன்மையிலே நின்று பேசுவர். பிரேம நிலையிலிருக்கும்பொழுது பெண் தன்மையையடைந்து வேற்று வாயாலே பெண் பேச்சாகப் பேசுவர். அப்போது நம்மாழ்வாருக்குப் 'பராங்குசர்" என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் 'பராங்குசநாயகி" என்ற பெண்மைப் பெயரும், திருமங்கையாழ்வாருக்குப் "பரகாலர்" என்ற ஆண்மைப்பெயர் நீங்கிப் "பரகாலநாயகி" என்ற பெண்மைப் பெயரும் வழங்கப்பெறும்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு பெருமானை அனுபவிக்கும்பொழுது, அவர்கள் தோழி, தாய், தலைவி என்ற மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர். இதன் காரணமாகப் பாசுரங்களும் தாய் சொல்வதுபோல வடிவெடுத்துத் "தாய்ப்பாசுரம்" என்றும், தோழி சொல்வதுபோல உருக்கொண்டு "தோழிப்பாசுரம்" என்றும், தலைவி பேசுவதுபோல் வடிவெடுத்துத் "தலைவிப்பாசுரம்" என்றும் பெயர்களைப் பெறும். இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுகள் நிகழ்ந்து பாசுரங்களில் வெளிவந்தாலும், பாசுரங்கள் பேசுகின்றவர்கள் ஆழ்வார்களே ஆவர். இங்ஙனம் மூன்று நிலைகளாக வடிவெடுக்கும் பாசுரங்களுக்கு ஆசாரிய ஹிருதயம் "மூன்று பிரஜ்ஞாவாஸ்தைகள்" என்று விளக்கம் தருகிறது. (பிரஜ்ஞாவஸ்தை—மூன்று காலத்தையும் அறியும் அறிவின் நிலை).

வேதாந்தங்களில் குறிப்பிடப்பெறும் பக்தி இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்கின்றது. இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம் "பகவத் விடிய காமம்" என்று வழங்கப்பெறும். இங்ஙனம் இவர்கள் மாதவன்மீது கொள்ளும் காமம் மங்கையர்மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது. ஆயினும், சிற்றின்ப அனுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும். அகப்பொருள் துறைகள் யாவும் இந்த பகவத் விஷய காமத்திற்கும் கூறப்பெறும். சிற்றின்ப அனுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பதுபோல, பகவத் விஷய அனுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்று சமயச் சான்றோர் கொள்வர்.

இத்திருத்தலம் சென்னை—மாமல்லபுரம் கடற்கரைச்சாலையில் கோவளம் அருகே உள்ளது.

5.1.5 **திருஊரகம், திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம்**[35] இந்நான்கு திவ்விய தேசங்களும் காஞ்சிபுரம் உலகளந்தப்பெருமாள் திருக்கோயிலுள் உள்ளன. எனவே இவ் ஒரே திருக்கோயிலே நான்கு திவ்விய தேசங்களாகின்றது.[36] (இதனால் இங்கு அகரவரிசை முறைதவறி ஒருங்கே குறிப்பிடப்பெறுகின்றன).

உள்ளே முக்கிய சந்நிதியில் எம்பெருமான் உலகளந்த பெருமாளாக மிகப்பிரம்மாண்டமான திருமேனியுடன் (10 மீட்டர் உயரம்) எழுந்தருளியிருக்கிறார். "பேரகத்தான்" என்று திருநாமம், தம் இடத்திருக்கரத்தை நீட்டி, இருவிரல்களைக் காட்டி, தான் இரண்டு அடிகளால் மண்ணையும் விண்ணையும் அளந்துவிட்டதாகக் கூறுகின்றான். வலத்திருக்கரத்தில் ஒரு விரலைக் காட்டுவதன் மூலம் மூன்றாவது அடியை எங்கே வைப்பது என்று கேட்கின்றான். மாவலி தன் சிரசை வளைத்துக் காட்ட, அதன் மேல் தன் வலத்திருவடியை வைத்து அமுத்துகின்றான். இடத்திருவடியால் விண்ணையும் மண்ணையும் அளக்கின்றான்.

பக்கத்திலுள்ள ஒரு சிறிய சந்நிதியில் பெருமான் ஆதிசேடனாய் சேவை சாதிக்கின்றான். "ஊரகத்தான்" என்பது திருநாமம். (உரகம் > ஊரகம்). இந்த இரு சந்நிதிகளும் சேர்ந்து ஒரே திவ்விய தேசமாகும். திருமங்கை மன்னரும் "மதிள்கச்சி ஊரகமே பேரகமே" என்று சேர்த்தே மங்களாசாசனம் செய்துள்ளார். மற்ற எம்பெருமான்கள் மூவர் தனிச் சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளனர்.

இரண்டாவது பிராகாரத்தில் நீரகத்தான் சந்நிதியும், மூன்றாவதில் காரகமும், கார்வானத்து எம்பெருமான் சந்நிதிகளும் உள்ளன. முக்கிய எம்பெருமானாகிய பேரகத்தானின் உற்சவமூர்த்திக்கே எல்லாத் திருவிழாக்களும் நடக்கின்றன. இவரைப் பாடியுள்ள ஆழ்வார்கள் மூவர்.

பேயாழ்வார் "கச்சி வெஃகாவில் கிடந்திருந்து நின்றதுவு மங்கு"[37] என ஒரு பாசுரத்தாலும்,

திருமழிசையார், "குன்றிருந்த மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து" எனவும்,

"நின்ற தெந்தை ஊரகத்தும்" எனவும்[38]

இரு பாசுரங்களாலும்,

நம்மாழ்வார்,

"நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன
ஒன்றலா வுருவாய் அருவாயநின் மாயங்கள்
நின்றுநின்று நினைக்கின்றேன் ; உன்னை
எங்ஙனம் நினைகிற்பன் பாவியேற்
கொன்றுநன் குரையாய், உலக முண்ட ஒண்சுடரே ![39]

(நின்றவாறும் —திருஊரகத்தில் நின்றபடியை ஆதல் என்பது நம்பிள்ளை ஈடு) என்று ஒரு பாசுரத் தாலும் மங்களசாசனம் செய்துள்ளனர்.

திருமங்கை மன்னர் பெரிய திருமொழியில் ஒரு பாசுரத்திலும்,[40]
"மதின் கச்சி ஊரகமே பேரகமே", (சிறிய திருமடல்)
"ஊரகத்துள்ளவனை யட்ட புயகரத் தெம்மானேற்றே", (பெரிய திருமடல்)
"காமருபூங் கச்சி யூரகத்தாய்", (திருநெடுந்தாண்டகம்)

என ஏனை மூன்று பிரபந்தங்களிலும் பாடியருளியுள்ளனர். மேலும் இவர் இந்நான்கு திருத்தலப் பெருமான்களையும் சேர்த்து ஒரே பாசுரத்தில் மங்களாசாசனம் செய்துள்ளமையையும் படித்து மகிழலாம்.[41]

"நீரகத்தாய் ! நெடுவரையி னுச்சி மேலாய் !
நிலாத் திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய் !
உள்ளுவார் உள்ளத்தாய்! உலக மேத்தும்
காரகத்தாய் ! கார்வானத் துள்ளாய்! கள்வா !
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராதென் நெஞ்சி னுள்ளாய் !
பெருமான்! உன் திருவடியே பேணி னேனே!

குறிப்பு : "சிறிய திருமடலில் "மதிட் கச்சி யூரகமே பேரகமே" என்ற இடத்தில் "பேரகம்" என்பது திருவூரகத்தில் திரிவிக்கிரமனாகச் சேவை சாதிக்கும் உலகளந்த பெருமானைக் குறிப்பதாகப் பலரும் கூறுவர். இப்பாசுரத்தில் "பேரகத்தாய்" என்றதும் அப்பெருமானையே என்று பலர் மயங்குவர். இங்கு"காவிரியின் தென்பால் மன்னு" என்று விசேஷமிட்டிருப்பதையும் நோக்காமல் மயங்கிக் கூறுவார்க்கு என் சொல்லவல்லோம் ?"—என்னும் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரின் குறிப்புரை இங்கு நோக்கத்தக்கது. (திருநெடுந்தாண்டகம் -திவ்வியப்பிரபந்த திவ்யார்த்த தீபிகை - பக். 58)

5.1.6 **திருஎவ்வுள் (திருவள்ளூர்)**[42] சாலி கோத்திர முனிவரின் தவத்தை மெச்சி, அவருக்குக் காட்சியளித்த பெருமான், —நாம் வசிப்பதற்கு உரிய உள் எவ்வுள்? " என்று வினவ அவர் இத்தலத்தையே காட்டினார் (திருஎவ்வுள் ஊர் > திருவள்ளூர்).

மூலவர் சயனத் திருக்கோலம் ; திருநாமம் வீரராகவன் ; வலத்திருக்கையைச் சாலிகோத்திர முனிவரின் தலைமீது வைத்து, நான்முகனுக்கு வேதங்களை உபதேசிக்கும் வண்ணமாக இடத்திருக்கையில் ஞானமுத்திரையோடு எழுந்தருளியுள்ளார். கனகவல்லித்தாயார் தனிச்சந்நிதியில் கோயில் கொண்டிருக்கிறார். பாஞ்சராத்திர ஆகம முறைப்படி வழிபாடுகள் நடக்கின்றன.

இத்திருத்தலத்தைப் பாடியுள்ள ஆழ்வார்கள் இருவராவர். அவர்கள் திருமழிசையார்,

"நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருஎவ்வுள்"[43]

என்ற பாசுரத்தில் திருமால் பள்ளி கொண்டிருக்கும் திருத்தலங்களை வரிசைப்படுத்துகின்றார்.

திருமங்கையாழ்வார்,

"என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை"[44]

என்று பெரிய திருமடலில் குறிப்பிடுகின்றார். மேலும் இவர் பெரிய திருமொழி இரண்டாம் பத்து இரண்டாம் திருமொழி முழுவதும் பத்துப்பாசுரங்களால் பாடியருளியுள்ளார்.

"பெருமான் தனக்கு அடியார்கள் பக்கல் உண்டான இனிமையாலே, அவர்கள் தங்கள் உடல் தொடர்பு அற்றுத் திருநாட்டிற்குச் சென்றால் செய்யும் அடிமையை இவ்வுலகிலேயே செய்யத் திருஎவ்வுளிலே வந்து சாய்ந்தருளினான். இத்தன்மையை எண்ணி இனியராகுகிறார்."

"சீதையிடம் காமம் கொண்ட இராவணனுடைய இலங்கை பாழாக முடிக்கவல்ல வீரத்திரு நிறைந்தவனும், நமக்குத் தலைவனும், இடைச்சியர் வெண்ணெய் திருடி உண்டவன் என்று கூறி ஏசுமாறு நின்றவனும் ஆகிய எம்பெருமான், திருஎவ்வுளூரில் கண் வளர்ந்தருளினான்". அறிவுடையார் "இராம, இராம" என்று பேச, நசையுடையார் வெண்ணெய் திருடி என்று ஏச, இவை இரண்டையும் கேட்டுத் திருஎவ்வுளூரிலே உறங்குகின்றான்[45].

> "முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்தரக்கன்
> மன்னூர் தன்னை வாளியினால் மாள முனிந்தவனே
> பின்னோர் தூதா திமன்னர்க் காகிப் பெருநிலத்தார்
> இன்னார் தூதன் என நின்றான் எவ்வுள் கிடந்தானே"[46]

"பாண்டவதூதன்"- "சிறியார் பெரியார் என்ற வேறுபாடின்றி, எல்லாரும் ஒக்கப் "பாண்டவதூதன்"என்று சொல்வதைக்கொண்டு உயிர் தாங்கி நின்றான். குலப்பிறப்போ, செயல் மாட்சியோ இட்டுச் சொல்ல ஒண்ணாதாரைப்போலே தனக்கென இட்டுச் சொல்லல் ஆவது ஒன்றும் இல்லாமல்,"பாண்டவர் தூதன்" என்னும் அதனாலே உயிர் வாழ்ந்தான். குலம், செயல் முதலியவற்றை இட்டுச் சொல்ல வேண்டாதே பாண்டவர் தூதன் எனபதே அவனுக்குச் சான்றாய் இருந்தது. அடியார்க்குக் கையாளாய் இருக்கும் தன்மையினை இட்டுத் தன்னைச் சொல்லுவாரைப் பெற்றால் உண்ணாமலேயே உடல் தடிப்பவனாய் இருந்தான்."-என்னும் பெரியவாச்சான்பிள்ளையின் விரிவுரை இங்கு அறிந்து மகிழத்தக்கது.

இப்பாசுரக் கருத்தை அப்படியே அடியொற்றி, வில்லிபுத்தூராழ்வார் பாடியுள்ள பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாம்.[47] இங்ஙனம் இத்திருமொழி முழுதும் "அவன்" பெருமைகளைப் பேசி இனியராகிறார் திருமங்கையாழ்வார்.

5.1.7 **திருக்கடல் மல்லை :**[48] மாமல்லபுரம் என இவ்வூர் இன்று வழங்குகின்றது. புண்டரீகர் என்னும் முனிவர்க்குத் "தலசயனத்தில்" சயனித்த திருக்கோலத்தில் காட்சியளித்தார். அம்முனிவர் பெருமானின் திருவடிகளில் தாமரை மலர்களைப் பணிந்தளித்தார். மூலவர் திருவடி அருகில் புண்டரீகர் கைகூப்பிய வண்ணம் நிற்க, அவர் சமர்ப்பித்த தாமரை மலர்மீது தமது திருவடிகளை வைத்துள்ளார் பெருமாள்.

திருமால் நிற்பார், இருப்பார், கிடப்பார், நடப்பார் என்பதை அறிவோம். இவற்றுள் அவரது சயனத் திருக்கோலமே நிரம்பவும் அழகானது. இருபத்தேழு தலங்களில் அவர் சயனித்திருக்கிறார். அச்சயன வகைகள் எட்டாகும். இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் அவர் சயனித்திருப்பது ஆதிசேடன் மீதுதான். இதையே "புஜங்க சயனம்" என்பர். மற்றவை உத்தியோக சயனம், தர்ப்ப சயனம், போக சயனம், மாணிக்க சயனம், வடபத்ர சயனம், வீர சயனம் என்பன. இவ்வகைச்

சயனவகைகள் ஒவ்வொரு திவ்விய தேசங்களில் அமைந்துள்ளன. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஓரிடத்திலே "தரையிலே" படுத்துக்கொள்கின்றார். அது இத் தல சயனமாகும். உற்சவர் தலசயனத்துறைவார் ; தாயார் நிலமங்கை நாச்சியார்.

இங்கு அவதரித்த பூதத்தாழ்வாருக்கு இக்கோயிலில் தனிச் சந்நிதி உண்டு. மூலவர் "ஞானத் தமிழ் புரிந்த நான்" என்பதற்கேற்ப, வலத்திருக்கையைத் திருமார்பின்மேல் உபதேச முத்திரையாக வைத்துள்ளார். உற்சவர் கூப்பிய கரங்களுடன் எழுந்தருளியுள்ளார்.

இக்கோயில் சோழர்களுடைய காலத்திலேயே வழிபாட்டிலிருந்து, பின்னர் திருத்தி அமைக்கப்பட்டது என்பதற்குச் சான்றாகப் பல சோழர்காலக் கல்வெட்டுகளின் பகுதிகள் இங்குக் காணப்படுகின்றன. இப்போதுள்ள கருவறைப்பகுதி 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சார்ந்தது என்பது தெளிவு. மற்ற பகுதிகள் காலப்போக்கில் எழுப்பப்பெற்றுள்ளன. சுந்தரபாண்டியன், இராஜநாராயண சம்புவராயர், விஜய நகர ஸ்ரீரங்க தேவராயர் முதலியோரின் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. இராஜநாராயண சம்புவராயர், பாண்டியர்களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு விஜயநகரப் பேரரசின் தோற்றம் வரை இப்பகுதியில் ஆண்டு வந்தார். அவர் காலத்தில் இங்குச் சில திருப்பணிகள் நடந்துள்ளன. இவர் கி. பி. 1340-இல் அரசரானார்.[49]

இத்திருத்தலத்தைப் பூதத்தாழ்வார், "தமருள்ளும் மாமல்லை"[50] என்று பாடியுள்ளார். திருமங்கையாழ்வார்,

. . ."சங்கு தங்கு தடங்கடல் மல்லையுள் கிடந்தாய்" எனவும்[51]

. . ."கள்வா கடன்மல்லைக் கிடந்த கரும்பே" எனவும்[52]

பாடியுள்ளார். மற்றும் திருக்குறுந்தாண்டகம் (19). சிறிய திருமடல் (அடி. 73) பெரியதிருமடல் (அடி 120) திருநெடுந்தாண்டகம் (9) ஆகிய பிரபந்தங்களிலும் மங்களாசாசனம் செய்துள்ளார். மேலும் பெரிய திருமொழி இரண்டாம் பத்து -ஐந்து, ஆறு திருமொழிகளில் இருபது பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். முதற்கண் ஐந்தாம் திருமொழிப் பாசுரக்கருத்துகள் சிலவற்றைக் காண்போம்.

"பெருமான் அடியாருடைய பகையினை முற்றும் களைபவன் ; அவர்களிடம் பரிவுடையவன் ; எளியவன்;தன்னை அடைவதற்கு வழியும் தானேயாய் இருப்பவன் ; அவனைத் திருக்கடல் மல்லையிலே நான் நெஞ்சில் நிற்குமாறு காணப்பெற்றேன். அவனை ஒழித்தன அடங்கலும் படுகுழிகள். அவற்றில் புக்கு இடர்ப்பட்டு நிற்காதீர்கள். அவன் அரியன் என்று கைவாங்காமல் அவனைச் சார்ந்து கரை சேரப் பாருங்கள்" என்கிறார்.

"கயேந்திரனுடைய துன்பத்தை நீக்கிய பெருமானைத் தலசயனத்தே கண்டேன்" "கயேந்திரனின் துன்பத்தை நீக்கப் பெருமாள் காலத் தாழ்வு இன்றி அவன் இடர்ப்பட்ட மடுவின் கரைக்கே வந்து உதவினான். அதுபோலே நான் நோவுபடும் இவ்வுலகத்திலே நோவுபட்டுக்கொண்டிருக்கும் காலத்திலேயே காணப்பெற்றேன்", என்கிறார்.[53]

"தொண்டாயார் தாம்பரவும் அடியி னானைப்
படிகடந்த தாளாளற் காளாய் உய்தல்
விண்டானைத் தென்னிலங்கை அரக்கர் வேந்தை
விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்கள் ஆண்டு
பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து
வேள்விகளும் கேள்வியோ டங்கம் ஆறும்
கண்டானைத் தொண்டனேன் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல் மல்லைத் தலசயனத்தே"[54]

"தொண்டரானார் வழிபடும் திருவடிகளை உடையவனும், மண்ணளந்த பெருமானுக்கு வேறுபட்டவனாய் இருந்த இராவணனை விலங்குகள் உண்ண அம்புகளைச் செலுத்தி நான்கு வேதங்களையும், ஐந்து வேள்விகளையும், ஆறு அங்கங்களையும்[55] சொன்னவனாகிய பெருமானைத் தல சயனத்தில் கண்டேன்.

ஆறாம் திருமொழிப் பாசுரங்களில் சிலவற்றின் கருத்துகளைக் காண்போம். "தல சயனத்தில் பள்ளி கொண்டிருப்பவரை நினையாமல் இருப்பாரைச் சிறிது போதும் நினைக்கமாட்டோம் ; இப்பெருமானைச் சிந்திக்கவல்ல மனம் உடையவர்கள் எவரோ அவர், எங்களை அடிமை கொள்ளத்தக்கவர்.

**உள்ளுறை :** அவர்கள் எப்பிறப்பினராயும் எவ் ஒழுகலாறு உடையராகவும் எத்தகைய அறிவுடையராகவும் இருக்கலாம்; ஆயின் இவ் இடத்தை எண்ணும் நெஞ்சுடையராக இருத்தலே வேண்டுவது.[56]

"அடுத்த பாசுரம்[57] தல சயனப்பெருமாள் கோயிலுக்குச் சுமார் 1 கி. மீ. தொலைவிலுள்ள வராகமூர்த்தி- ஞானப்பிரான் சந்நிதியில் சேவிக்க வேண்டும். இத்திருமொழியின் ஒன்பதாம் பாசுரம் கடற்கரையிலுள்ள ஜல சயனத்தில் சேவிக்க வேண்டும் என்று அறிஞர் கூறுவர்."[58] ஏனையவை தலசயனப் பெருமாள் சந்நிதியில் சேவிக்க வேண்டுவன.

வராகப்பெருமாள் திருக்கோயில் பற்றிய விவரங்களை அடுத்துக் காண்போம். இங்கு பாசுரத் தொடர்புநோக்கி, அப்பெருமான்மீது பாடப்பெற்றுள்ள பாசுரக்கருத்தை நோக்கலாம். இவ்வாறே சலசயனப் பெருமாள் சந்நிதியில் சேவிக்கப்பெறும் பாசுரக் கருத்தையும் அடுத்து நோக்குவோம்.

*"பன்றி வடிவுகொண்டு நிலமகளின் அழகு கெடாதவாறு அண்டச் சுவரினின்றும் ஒட்டுவித்து மீட்டுக் கொணர்ந்தவனும், அமரர்கள் போற்றுவதற்கேற்பக் கடல் மல்லைத் தலத்தில் சயனித்திருப்பவனும், ஞான ஒளிபொருந்திய வடிவத்தை உடையவனும் ஆன பெருமானை நினைப்பவர் எனக்குத் தலைவராவார்.* (2 : 6 : 3)

*"அவர் எங்கள் குலதெய்வமாவார்" என அடுத்த பாசுரத்தில் போற்றுகின்றனர். "நம் குலத்துத்குத் தெய்வமாக இருக்கும் கமலக்கண்ணனுடைய அந்தத் திருவடித் தாமரைகளைப் பராவுவேன்" (ஸ்தோ. ர. 6) என்பது ஆளவந்தாரின் அருளிச்செயல்.*

*"எங்கள் அன்பு இறைவன் திருவடியை வணங்கும் அவ் அளவோடு அமைவதன்று ; அதற்கும் மேலாக இறையடியார்களை வணங்கும் அளவினது என்கிறார்" என்பது பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானமாகும்.*

*ஆறாம் பாடலில் மாமலலபுரம் துறைமுகமாக இருந்த பெருமையைக் குறிப்பிடுகின்றார். ஒன்பதாம் பாசுரம் முற்கூறியவாறு கடற்கரையிலுள்ள சலசயனத்தில் சேவிக்கப்பெறுவது. அதன் கருத்தைப் பார்ப்போம்.*

*"மடநெஞ்சே ! பிணங்களை வைக்கும் சுடுகாட்டில் கூத்தாடும் சிவனோடு, திருவாழியாழ்வானையுடைய எம் தலைவனுக்கு இடமாக இருப்பதும், வானவர் உலவும் பெருமையுடையதுமாகிய தல சயனத்தை வணங்கும் நெஞ்சுடையவரை வணங்குவாய்."*

5.1.8 ***வராகப் பெருமான் சந்நிதி :*** *தல சயனப் பெருமாள் சந்நிதியிலிருந்து சுமார் 1 கி. மீ. தொலைவில் உள்ளது இது என முன்பே கண்டோம்.*

*வராக மூர்த்தியின் சிற்பங்கள் (1) பூவராகர் (அ) ஆதிவராகர் (2) யக்ஞவராகர் (3) பிரளயவராகர் என்று மூன்று விதமாகக் காணப்படுகின்றன. பூவராகமூர்த்தி நான்கு திருக்கரங்களில் மேலிருகைகளில் சங்கு, சக்கரம் தரித்திருப்பார். வலக்கால் மடிந்து ஆதிசேடன்மீது ஊன்றியிருக்கும். மடித்த கால்மீது அமர்ந்திருக்கும் பூதேவியைக் கீழ் இடத்திருக்கரம் தாங்கியிருக்கும். கீழ்வலத் திருக்கரம் அவளது இடையை அணைத்திருக்கும். பூதேவியின் மார்பைப் பார்த்தபடி முகம் சற்றுத் திரும்பியிருக்கும். பூதேவியும் கைகூப்பி அஞ்சலி செலுத்தியிருப்பாள். வராக மூர்த்தியை நிமிர்ந்து பார்த்திருக்கும் பூதேவியின் முகத்தில் நாணமும் மகிழ்ச்சியும் ததும்பும் என்கிறது சிற்ப நூல்.*[59]

*இங்குள்ள வராகப் பெருமாள் சந்நிதி இன்றும் வழிபாட்டிலுள்ளது. இங்குத் தென்புறச் சுவரில் மகேந்திரன் உருவமும், வடபுறச் சுவரில் அவன் தந்தையான*

சிம்மவிஷ்ணுவின் உருவமும் பாறையில் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பெற்றுள்ளன.

இக்குகைக்கோயில் பல்லவக்கிரந்தக் கல்வெட்டில், "பரமேச்சுர மகாவராக விஷ்ணு கிருஉறம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. சிம்ம விஷ்ணுவின் சிற்பத்திற்கு மேல் "சிம்ம விண்ணப்போத்திராதிராசன்" எனவும், மகேந்திரனின் உருவச்சிலைக்கு மேல்" மகேந்திர போத்திராதிராசன்"எனவும் பல்லவக்கிரந்தக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இவ் இரு வகையான சிற்பங்களையும் ஆராய்ந்த வரலாற்று ஆய்வாளர்கள் இங்குக் குறிப்பிடப்பெறும் உருவச்சிலைகளை முறையே,

(1) சிம்மவிஷ்ணு மற்றும் முதலாம் மகேந்திரன் என்றும்,

(2) முதல் நரசிம்மனாகிய மாமல்லன் மற்றும் முதலாம் மகேந்திரன் என்றும்,

(3) மாமல்ல நரசிம்மன் மற்றும் அவன் மகனான இரண்டாம் மகேந்திரன் என்றும், பல்வேறு கருத்துக்களை வெளியிட்டனர்.

1962-ஆம் ஆண்டு இரா. நாகசாமி இதுகாறும் கிடைத்துள்ள பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகிய அனைத்தையும் ஆழ்ந்து ஆராய்ந்து, மாமல்லையின் சிற்பப்பணிகள் அனைத்தும் அத்தியந்தகாமன் என்னும் இராசசிம்ம பல்லவனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதைச் சான்றுகளுடன் மெய்ப்பித்தார்.[60] இக்கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அவரது கருத்துப்படி, ஆதிவராகக்குகைக் கோயிலிலுள்ள,

> "சிம்மவிண்ணப்போத்திராதிராசன் "எனும் அமர்ந்தநிலைச் சிற்பம் இராசசிம்ம பல்லவனது என்றும்,

நின்ற நிலையிலுள்ள,

> "மகேந்திர போத்திராதிராசன்"என்னும் சிற்பம் இராசசிம்மனின் மகனான மூன்றாம் மகேந்திரனின் சிற்பம்" எனவும் அமைகின்றன.[61]

இக்குகைகோயில் 33 அடி நீளமும், 14 அடி அகலமும், $11\frac{1}{2}$ அடி உயரமும் உடையது. சிறிய கருவறையில் வராகப்பெருமாள் திருவுருவம் உள்ளது. கருவறைக்கு இடப்புறத்திலும், வலப்புறத்திலும் சுவரில் பெரிய சிற்ப உருவங்களாகக் கஜலட்சுமி, கொற்றவை முதலிய உருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. திருமாலுக்கென்று ஏற்பட்ட இக்கோயிலில் சிவனைப் போற்றும் கல்வெட்டுள்ளது. திருமாலின் பத்து

அவதாரங்களையும் குறிக்கும் கல்வெட்டு இங்குள்ளது. அதில் புத்தரும் ஒருவராகக் குறிப்பிடப்பெற்றுள்ளார்.[62]

"இதன்முன் மண்டபமும், இடைமண்டபமும் ஒரே மாதிரியாக நான்கு தூண்களையும் இரு சுவர்த் தூண்களையும் பெற்றுள்ளன. இவை அடியிலிருந்து முனைவரை எண்கோணப்பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளன. முன்மண்டபத்தூண்களின் அடியில் அரிமாவின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குடைவரையின் மேற்புறத்தில் பத்துக் கூடுகளும், கலசங்களும் காணப்படுகின்றன. உட்புறத்தில் கருவறைக்கு இரு பக்கத்திலும் சுவர்த்தூண்களும் வாயிற்காப்போரும் உள்ளனர். சுவர்த்தூண்களின் நடுவிலும் சோடனைகள் காணப்படுகின்றன. திருமால், அரி அரன், சிவன் முதலியோரின் உருவங்கள் இதன் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன. அரசனும் அரசியும் அமர்ந்துள்ள காட்சி சிறப்புடையது."[63]

5.1.9 **ஜல சயனம்**[64] : "கடற்கரைக்கோயில் இராசசிம்மனால் கட்டப்பட்டதாகும். இத்துடன் மொத்தம் மூன்று கோயில்கள் முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். அவை சத்திரிய சிகாமணிப் பல்லவேச்சுரம், இராசசிம்மப் பல்லவேச்சுரம், பள்ளி கொண்டருளிய தேவர் கோயில் என்பனவாகும். முதலிரண்டும் கடலில் அழிந்துவிட்டனவாக ஆய்வாளர் கருதுகின்றனர். முன்புறம் ஒரு சிவன் கோயில் உள்ளது. அதற்குப் பின்புறமுள்ள கோயில்தான் திருமால் "அனந்த சயனம்" கொண்டுள்ள கோயிலாகும். திருமாலின் திருமுகம் வடக்கு நோக்கியுள்ளது. நீளம் பத்தடியாகும். இது பாறையில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பமாகும். இதன் கருவறைக்கு மேலுள்ள கோபுரம் மூன்று தளங்களையுடையது. இதன் உட்புறத்தில் கருவறைவுள்ளது. அதைச் சுற்றிலும் திருச்சுற்றுப்பாதை செல்கின்றது. அதில் ஒன்பது சிறு குடில்கள் உள்ளன. இக்கோயிலுக்கு முகமண்டபமோ, வேறு துணைக் கட்டடங்களோ இல்லை. ஒவ்வொரு தளமும் சதுர வடிவிலமைந்துள்ளது. மேலே செல்லச் செல்லக் குறுகிச்சென்று, மிகப்பெரிய கருங்கல்லாலான கலசத்தில் முடிகிறது. ஒவ்வொரு தளத்திலுமுள்ள கொடுங்கைகளும், செங்குத்தாக உந்திக்கொண்டிருக்கும் பலகணிகளோடு பொருந்தி ஒரே வார்ப்பாக காணப்படுகின்றன. இக்கோவிலிலுள்ள சுவர்த்தூண் வளர்ச்சியும், மதில் மீதுள்ள சிங்கங்களின் அணிவரிசையும் திராவிடப் பாணிக் கட்டடத்தின் தனித்தன்மையை எதிரொலிக்கின்றன.

"பள்ளிகொண்ட பெருமாளின் உருவம் பிற்காலத்தவரால் செதுக்கப்பட்டது. இக்கோயிலில் பொதுவாகவே நீர் நிரம்பி வழியுமாதலால், "சலசயனக் கோயில்"என்னும் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். இராசசிம்மன் கட்டிய கோயிலாதலின் "இராசசிம்மப் பல்லவேச்சுரம்" என்ற பெயரும், அவன் விருதுப் பெயரால் (சத்திரிய சிம்மன்) சத்திரிய சிகாமணிப் பல்லவேச்சுரம் என்ற

பெயரும் வழங்கலாயிற்று என்பதை இங்குள்ள தமிழ்க் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்."[65]

5.1.10 **அனந்த சயனமூர்த்தி**[66] : மகிஷாசுரமர்த்தினி மண்டபத்தில் தெற்குப் புறச்சுவரில் அனந்த சயனமூர்த்தி உள்ளார். வடக்குப்புறச் சுவரில் மகிஷாசுரமர்த்தனியின்[67] (கொற்றவை) போர்க்கோலம் செதுக்கப்பட்டுள்ளது.

அ. மி. அரங்கநாதர் ஆதிசேடன்மேல் யோகநித்திரை செய்கிறார். திருமால் இரு திருக்கரங்களுடன் காணப்படுகிறார். வலக்கையைப் படுக்கைமேல் நீட்டி, இடக்கையின் முழங்கையைத் தூக்கிப் படுத்திருக்கிறார். மணிமகுடம் தரித்த திருமுடியும், அமைதியான திருமுகமும் இனிய காட்சியை அளிக்கின்றன. திருவடியின் பக்கத்தில் இருவீரர் கனமான ஆயுதத்தைத் தாங்கியுள்ளனர். மது, கைடபராகிய இவர்கள் திருமாலைத் தாக்கப் பார்க்கின்றனர்.

"காய்ந் திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள்
ஏய்ந்த பணைக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப—வாய்ந்த
மதுகை டவரும் வயிறுருகி மாண்டார்
அதுகே டவர்க்கிறுதி யாங்கு."

என்று பேயாழ்வார் கூறுவதுபோன்று (மூன்றாம் திருவந்தாதி-66) மதுகைடபர்கள் அவரைக் கொல்லமுயன்று கடைசியில் அவர்களே இறந்தொழிந்தார்கள் என்னும் புராணக்கதை இச்சிற்பத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

5.1.11 **வராக மண்டபம்**[68] : இங்குப் பாறைச் சுவரிலுள்ள புடைப்புச்சிற்பம் வெகு அழகானது. வராகப்பெருமான் இடக்காலை ஊன்றி, வலக்காலை மடக்கித் தூக்கியிருக்கிறார். தூக்கிய திருவடி ஆதிசேடன் தலைமேல் வைக்கப்பெற்றுள்ளது. பின்னால் நிற்பது சிவன். மேலே சூரியன் பெருமானைப் போற்றி வணங்குகிறான். கீழே தண்ணீர் உள்ளது. பெருமாள் தம் மடக்கிய காலின் தொடையின்மேல், நீரிலிருந்து எடுத்த நிலமங்கையை உட்கார வைத்திருக்கிறார். பெருமாளின் மற்ற இரு திருக்கரங்களில் சங்கு, சக்கரங்கள் உள்ளன. திருமுகம் பன்றியின் முகமாக அமைந்து, ஒற்றை மருப்புடன் காணப்படுகிறது. தலையில் கிரீட மகுடம் உள்ளது. திருவடியின்கீழ் நீரும் நீரில் வாழும் நாகனும் காணப்படுகின்றனர். நாரதர் வீணை வாசித்துத் திருமாலைப் போற்றுகிறார். தேவர்களும் துதிக்கின்றனர். இடப்புறம் பிரம்மா உள்ளார்.

"சிலம்பு முதல் கலனணிந்தோர் செங்கண்குன்றம்
திகழ்ந்த தெனத் திருவுருவம் பன்றியாகி
இயங்குபுவி மடந்தை தனை இடந்து புல்கி,
எயிற்றிடைவைத் தருளியஎம் ஈசன் காண்மின்"

என்று திருமங்கை மன்னர் (பெரிய திருமொழி 7 : 8 : 4-) பாடிய பாடல் கருத்து வராகப்பெருமானின் சிற்ப வடிவிற்குப் பொருந்தியுள்ளது.

இம்மண்டபத்திலுள்ள இன்னொரு சிற்பம் திருமகளாகும். தாமரை மீதமர்ந்துள்ள இவருக்குப்பின் இரு யானைகள் உள்ளன. வலப்புற யானை தன் தும்பிக்கையால் திருமஞ்சனநீரைத் திருமுடிமேல் பொழிகிறது. முன்புறத்தில் பக்கத்திற்கு இருவராக நான்கு தெய்வமகளிர் நிற்கின்றனர். இவர்களில் இருவர் தமது தோளின்மேல் நீர்க்குடத்தை ஏந்தியுள்ளனர்.

5.1.2 **திரிவிக்கிரம மூர்த்தி**[69] : வராக மண்டபத்தின் தென்புறச் சுவரில் திரிவிக்கிரமனின் திருவுருவச் சிற்பம் காணப்படுகின்றது. இவர் நீண்டு நிமிர்ந்த உருவத்தோடு வலப்புறத் திருவடியைத் தரையில் ஊன்றி நின்று, இடப்புறத் திருவடியை தோள்வரை உயர்த்தி நிற்கிறார். பக்கத்துக்கு நான்காக எட்டுத் திருக்கைகள் உள்ளன. இவரது வலப்புற மேற்புறத்தில் பிரமன் தாமரை மலரில் அமர்ந்திருக்கிறார். தோளுக்குக் கீழே வல, இடப்புறங்களில் சூரிய சந்திரர் வானில் நின்றவண்ணம் பெருமானைச் சுட்டிக்காட்டுகின்றனர். திருவடியின்கீழே மகாபலி, சுக்கிராச்சாரியார், அமைச்சர், சேனாதிபதி ஆகியோர் உள்ளனர். மேலே ஜாம்பவான் மத்தளம் வாசிக்கிறான்.

> "கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
> களவில்மிகு சிறுகுறளாய் மூவடியென் றிரந்திட்டு
> அண்டமும் இவ் வலைகடலும் அவனிகளும் எல்லாம்
> அளந்தபிரான்". . . . .

என்று திருமங்கை மன்னர் பாடியுள்ளபடி (பெரிய திருமொழி 3 : 10 : 5 -) இச்சிற்ப உருவம் மிக எழிலுடன் அமைந்திருக்கிறது.

5.1.13 **திருக்கடிகை (சோளங்கிபுரம்)**[70] சோழசிம்மராஜபுரம் > சோழசிம்மபுரம் > சோளிங்கபுரம் என மருவியது. இவ்வூருக்கு மூன்று கிலோமீட்டர் தொலைவு முன்னதாகக் கொண்டபாளையம் என்னுமிடத்தில் இருமலைகள் உள்ளன. பெரியமலை நானூறு அடி உயரமும், ஆயிரம் படிகளும் கொண்டது. இம்மலைமீது யோக நரசிம்மர் நான்கு திருக்கரங்களுடன் சாந்த வடிவினராய் யோகநிலையில் மூலவர் மட்டும் எழுந்தருளியுள்ளார். பக்கத்தில் தனிக்கோயில் நாச்சியாரான அமிருதவல்லித் தாயார் சந்நிதி உள்ளது. சோளிங்கபுரம் ஊரிலுள்ள கோயிலில் உற்சவரான "தக்கான்" என்னும் பெருமான் எழுந்தருளியுள்ளார். மேலும் இங்குக் கேசவப்பெருமாள், ஆண்டாள், ஆழ்வார்கள், ஆசாரியர்கள், எறும்பியப்பா, தொட்டாசாரியார் ஆகியோருக்கும் சந்நிதிகள் உள்ளன. வைகானச ஆகமப்படி திருவாராதனம் நடக்கிறது.

கொண்டபாளையம் மலையடிவாரத்தில் "தக்கான்குளம்" உள்ளது. இக் குளக்கரையில் தான் காஞ்சிவரதர் தொட்டாசாரியாருக்குத் தமது கருட சேவையைக்

காட்டியருளினார். அதற்கடையாளமாக இக்குளக்கரையில் ஒரு வரதராஜர் சந்நிதியும் உள்ளது.

வடமொழியில் "கடிகா"—என்றால் சர்வகலாசாலை என்ற பொருள் உள்ளது. பல்லவர் காலத்தைப்போல் இங்கு இன்றும் ஒரு மொழிக்கல்லூரி உள்ளது. சிறியமலையில் யோக ஆஞ்சநேயர் சந்நிதியுள்ளது. கோயிலின் முக்கிய வாயில் வடக்கு நோக்கியிருப்பினும், சந்நிதி மேற்கு நோக்கியே உள்ளது. இக்கோலத்தில் அனுமனை வேறு எங்கும் காணமுடியாது என்பர்.

இத்திருத்தலத்தைப் பேயாழ்வார் ஒரு பாசுரத்தில் பாடியுள்ளனர்.

. . .   . . . "வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் ணகர்"[71]

திருமங்கை மன்னர் இவரை வணங்கி, இவரைத் தக்க பெருமையுடைய தயாளு என்று உணர்ந்து, அனுபவிப்பவர்களுக்கு "வெல்லம்போல் இனிப்புள்ள கனியாக விளங்குகிறார் என்று போற்றுகிறார். வெல்லக்கட்டியையே விதையாகக் கொண்டு ஒரு மரம் உண்டாக்கி, அதில் பழம் பழுத்தால் எவ்வளவு இனிப்பாக இருக்குமோ அவ்வளவு இனிமை மிகுந்தவர் என்பது கருத்து. ஆதலால் "மிக்கான்" என்றே இம்மூர்த்தியை நமக்கு அவர் அறிவக்கிறார்.

"மிக்கானை ; மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை—அடைந்துய்ந்து போனேனே"[72]

நாலாயிரம் பாசுரங்களுள், கடிகாசல நரசிம்மனைப் பற்றிய முழுப்பாடல் இது ஒன்றுதான். மேலும் இவர் இத்தலத்தை

சிறிய திருமடலில் "கடிகை கடன்மல்லை" (அடி 73) என மீண்டும் குறிப்பிட்டுள்ளனர்.

எம்பெருமானார் இத்தலத்தில் எழுந்தருளியபோது, நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரத்தைக் கொண்டு இங்குள்ள எம்பெருமானை மங்களாசாசனம் செய்ததாக வரலாறு உண்டு. அப்பாசுரம் வருமாறு:

"எக்காலத் தெந்தையாய் என்னுள் மன்னில் மற்
றெக்கா லத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேதவிமலர் விழுங்கும் என்
அக்காரக் கனியே ! உன்னை யானே ![73]

இதில் "எம்பெருமானோடு சேரப்பெறும் பேற்றினைத் தவிர வேறொன்றையும் தான் விரும்பவில்லை" என்று தம் திருவுள்ளத்தைப் புலப்படுத்துகிறார்.

இத்தலம் இரு ஆசாரியர்கள் வாழ்ந்து திகழ்ந்த இடம். மணவாள மாமுனிகளின் முக்கிய சீடர் எறும்பியப்பா. இயற்பெயர் வரதாசாரியார். இவர் இங்கிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ள "எறும்பி" என்ற ஊரில் பிறந்தவர். இவர் இப்பெருமானைக் குறித்து, "அமிர்த பலாவளிசதகம்" என்ற நூலை வடமொழியில் இயற்றியுள்ளார். மற்றவர் தொட்டையாச்சாரியார். இவரைப் பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

5.1.14 **திருக்கள்வனூர்**[74] : காஞ்சி காமட்சியம்மன் கோயிலுக்குள் எழுந்தருளியிருக்கிறார் இவ் எம்பெருமான். காமாட்சியம்மன் கருவறைக்கு முன் ஒரு மூலையில், கிழக்கே திருமுக மண்டலமாய், நான்கு திருக்கரங்களுடன் எழுந்தருளியிருக்கிறார். காமாட்சி அம்மையின் வலப்பக்கத்தில் சௌந்தரியலட்சுமி ; இடப்புறத்தில் அரூபலட்சுமி ; இது பற்றி புராண வரலாறும் உண்டு.[75]

காமாட்சியம்மன் திருக்குளத்தின் வடக்கிழக்கு மூலையில் ஒரு சந்நிதியில் மூன்று அடுக்குகளில், "நின்றான், இருந்தான், கிடந்தான்" என்று மூன்று திருக்கோலங்கள் உள்ள ஒரு சந்நிதி உள்ளது. இது பற்றிய புராண வரலாறும் உண்டு.[76]

புராணப்படி இவர் திருநாமம் ஆதிவராகன். திருமங்கை மன்னர் மட்டும் இவரை மங்களாசாசனம் செய்துள்ளார்.

"...காரகத்தாய் கார் வானத்துள்ளாய் கள்வா"[77] முழுப்பாசுரமும் ஏற்கனவே திருஊரகம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ள இடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

5.1.15 **திருத்தண்கா** (விளக்கொளிப்பெருமாள் கோயில்)[78] : சின்னகாஞ்சிபுரம் தேரடிக்கு அருகில் இச்சந்நிதி உள்ளது. வேதாந்த தேசிகரின் அவதாரத்தலம் இதுவே. மேற்கு முகமான சந்நிதியில் தீபப்பிரகாசன் எழுந்தருளியுள்ளார். பிரமன் திருமாலைக் காணவேண்டி யாகம் செய்தபோது, அதைக் கெடுக்கவந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக்கிவிட, எம்பெருமான் ஒரு பேரொளியாய்த் தோன்றி இருட்டைப் போக்கினான். அதனால் "விளக்கொளிப் பெருமாள்" என்ற திருநாமம் ஏற்பட்டது.

குளிர்ந்த சோலைகள் சூழப்பெற்ற திவ்ய தேசம் என்ற பொருளில் தண்கா எனப்பெற்றது. சந்நிதிக்குப் பின்புறம் திருக்குளம் உள்ளது. ஆண்டாள் சந்நிதியும், தாயார் சந்நிதியும் உள்ளன. மரகதவல்லித் தாயார் ; மூலவர் நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீ தேவி, பூதேவிகளுடன் எழுந்தருளியுள்ளார். தெற்கு நோக்கி வேதாந்த தேசிகர் சந்நிதி உள்ளது. தேசிகர் ஞானமுத்திரையோடு எழுந்தருளியிருக்கிறார்.[79]

தேசிகருடைய திருக்குமாரரான நயினவரதாசாரியார் அமைத்த திருமேனி என்பர். பக்கத்தில் தேசிகருடைய திருவாராதனப் பெருமானான "இலட்சுமி அயக்கிரீவர்" எழுந்தருளியுள்ளார்.

"இத்தலத்தெம் பெருமான் பண்டு சயனத் திருக்கோலமாக எழுந்தருளி இருந்ததாகப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தாலும், அரும்பதவுரை, மற்றும் சில குறிப்புகளாலும் அறியக்கிடக்கிறது " (திவ்யப்பிரபந்த திவ்யார்த்த தீபிகை, பக். 74) இத்தலத்தைப் பாடியுள்ள ஆழ்வார் திருமங்கை மன்னர் ஒருவரே.

"பொன்னை மாமணி யையணி யார்த்ததோர்
மின்னை வேங்கடத் துச்சியிற் கண்டுபோய்
என்னை யாளுடை யீசனை யெம்பிரான்
தன்னை யாம்சென்று காண்டும்—தண்காவிலே"[80]
"முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை, மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கம்மேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தையானை
விளக்கொளியை, மரகதத்தைத் திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
"வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக ! என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே![81]

"விளக்கின் ஒளி பொருள்களை விளங்கச்செய்வதுபோல், இப்பெருமானும்,

(1) ஆன்மாவின் இயல்பு
(2) ஈசுவரனது இயல்பு
(3) ஆன்மா அடையும் பயன்
(4) அப்பயனை அடைவதற்கு உபாயம்
(5) அப்பயனை அடையப் பகையாய் உள்ளவைகள்,

ஆகிய "அர்த்தபஞ்சகத்தையும்"—தனக்கு விளங்கச் செய்வான் என்பதை இப்பெருமானின் திருப்பெயர் குறிக்கிறது.

5.1.16 **திருநிலாத் திங்கள் துண்டம்**[82] : காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் சந்நிதியில், கருவறைக்கு வலப்புறத்தில் தனிச்சந்நிதியில் "நிலாத்திங்கள் துண்டத்தான்" எனும் எம்பெருமான் எழுந்தருளி உள்ளார். பரமசிவனுக்குச் சந்திரன் போல குளிர்ந்த முகத்துடன் சேவை சாதித்தபடியால் இத்திருப்பெயர் பெற்றார். மூலவர் மட்டுமே உள்ளார். பழைய மூலவர் ஒருவரும் பக்கத்தில் இருக்கிறார் ; பின்னமானதால் புதிய

மூலவரை அமைத்து இருப்பார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது. அருச்சகரைக் கேட்டும் விவரம் கிடைக்கவில்லை. உற்சவர் இல்லை. எனவே, உற்சவங்களும் இல்லை. நித்தியப்படி வழிபாட்டை ஏகாம்பரேசுவரர் ஆலய அருச்சகரே செய்கிறார். நேரொருவரில்லாவல்லி என்ற நாச்சியார் சந்நிதி தற்போது இல்லை. மங்களாசாசனம் செய்துள்ளவர் திருமங்கை மன்னர் ஒருவரே.

> "நீரகத்தாய் நெடுவரையிலுச்சி மேலாய்
> நிலாத்திங்கள் துண்டத்தாய்"[83]

இத்திருத்தலம் பற்றிய புராணக்குறிப்பும் காணத்தக்கது.[84]

நிலாத்திங்கள் துண்டப்பெருமானை நாவரசரும் பாடியுள்ளார்.

> "நீருரும் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணாய்
> நிலாத்திங்கள் துண்டத்தாய் நின்னைத்தேடி
> ஒருரும் ஒழியாமே ஒற்றித் தெங்கும்
> உலகமெல்லாம் திரிதந்து நின்னைக் காண்பான்
> தேருரும் நெடுவீதி பற்றி நின்றேன்"[85]

5.1.17 **திருநின்றவூர் : (தின்னனூர்)**[86] : சென்னைக்கும் திருவள்ளூருக்கும் இடையில், சென்னையிலிருந்து 31 கி. மீ. தொலைவில் உள்ள ஊர். பெருமாள் திருநாமம் "பக்தவச்சலன்" என்றும் "பத்தராவி" என்றும் அழைக்கப்பெறுகிறார். தாயார் திருநாமம் "என்னைப் பெற்ற தாயார்" என்பது. திருமால் தனது திருத்தேவியைத் தேடிவருகையில், திருமகள் இத்தலத்தில் விரும்பி வாசம் பண்ணுவதைக் கண்டார் (திரு + நின்றவூர்). இத்திருத்தலப் பெருமானைத் திருமங்கையாழ்வார் இரு பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். அவை வருமாறு :

> "பூண்டவத்தம், பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப்
> பொய்ந்நூலை மெய்ந்நூ லென் றென்றுமோதி
> மாண்டு அவத்தம் போகாதே வம்மின் ; எந்தை
> என்வணங்கப் படுவானை கணங்களேத்தும்
> நீண்டவத்தைக் கருமுகிலை எம்மான் தன்னை
> நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை
> காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக்
> கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத் தே"[87]

அவத்தம்பூண்டு—"வீணான செயல்களை மேற்கொண்டு—பிறருக்கு அடிமைத் தொழில் செய்து, உண்மைக்கு மாறான பிற சமய நூல்களை உண்மையான நூல்கள் என்று கருதி, எப்போதும் படித்து அழிந்தும், பாழாகப்போய்விடாமல் உய்வடைய வாருங்கள் ; எனக்குத் தந்தையும், என்னைப் போன்றவர்க்கும் வணங்கலாம்படி

எளியனாய் இருப்பவனும், அறிவுடையார் பரவும் விரிந்த பொருளாக உள்ளவனும், முகில்போன்ற எம்மானை, திருநின்றவூரில் முத்துத்திரள் போலே குளிர்ந்த வடிவோடு இருப்பனும், காண்டவ வனத்தை எரித்தவனும் ஆகிய பெருமானை நான் தலசயனத்தை கண்டேன்."

. . . . "நின்றவூர் நித்திலத் தொத்தினைக்
காற்றினைப் புனலைச் சென்று நாடிக்
கண்ணை மங்கையுன் கண்டு கொண்டேனே"[88]

இத்திருக்கோயில் திருமலை பெரிய ஜீயர் சுவாமி ஆதீனத்திற்குட்பட்டது. சந்நிதி அருகில் அவர் மடம் உள்ளது.

5.1.18. **திருநீர்மலை**[89] : இத் திவ்வியதேசம் ஒரு சிறிய மலைமீது அமைந்துள்ளது. சுமார் இருநூறு அடி உயரம் உள்ள இந்த மலைக்கு இருநூற்றைம்பது படிகள் உள்ளன. மலைமீது முக்கிய சந்நிதியில் ஸ்ரீரங்க விமானத்தடியில், ஆதிசேடன்மீது அறிதுயில் கொண்டநிலையில் ஸ்ரீரங்கநாதன்—மூலவர் "கிடந்தான்" என்னும் நிலைக்கேற்ப எழுந்தருளியுள்ளார். உற்சவர் மலையடிவாரத்தில் உள்ள கோயிலில் எழுந்தருளியுள்ளார். அரங்கநாதர் சந்நிதியை வலம் வந்தால், ஒரு சிறிய சந்நிதியில் "நடந்தான்" எனும் நிலைக்கு ஏற்ப எம்பெருமான் திரிவிக்கிரமனாக எழுந்தருளியுள்ளார். அதனை அடுத்துள்ள சந்நிதியில் "இருந்தான்" எனும் நிலைக்கேற்ப எம்பெருமான் நரசிம்மராகக் காட்சி தருகிறார். தவிர, ஸ்ரீரங்கநாயகித் தாயார் சந்நிதியும் உள்ளது.

மலையடிவாரத்தில் உள்ள சந்நிதியில் எம்பெருமான், "நின்றான்" எனும் நிலைக்கேற்ப, "நீர்வண்ணன்" என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கிறார். ஆக, "நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தாற்கு இடம் மாமலையாவது நீர்மலையே"[90] என்று திருமங்கையாழ்வார் பாடியுள்ளதற்கேற்ப, இந்நான்கு நிலைகளிலும் எழுந்தருளியுள்ளமை இத்தலத்தின் சிறப்பாகும்.

மலையடிவாரத்தில் உள்ள கோயிலில் ஆண்டாள், அணிமாமலர் மங்கைத் தாயார், ஸ்ரீராமர், ஆழ்வார், ஆசாரியர்கள் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. மலைமீது மூலவர் அரங்கநாதரும், மலையடிவாரக் கோயிலில் உற்சவரும் எழுந்தருளியிருந்தாலும், உற்சவ காலங்களில் உற்சவர் மலைக்கு எழுந்தருள்கிறார்.

இவ்வூரை மங்களாசாசனம் செய்யத் திருமங்கையாழ்வார் எழுந்தருளியபோது மலையைச் சுற்றிலும் நீர் அரண்போல் சூழ்ந்திருந்ததாம். எனவே, அவர் பெருமாளைச் சேவிக்கமுடியாமல் ஆறுமாதகாலம் ஊருக்கு வெளியே காத்திருந்தாராம். அவர் எழுந்தருளியிருந்த இடம் இன்றும் திருமங்கையாழ்வார்புரம் என்றே அழைக்கப்படுகிறது. இவ்வாறு, நீர்-மலையை அரணாகச் சூழ்ந்திருந்தபடியால் இம்மலைக்கு "நீர்மலை" என்றே பெயர் ஏற்பட்டது.

இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள் இருவர்

"பயின்ற தரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே ! பன்னாள் — பயின்ற
தணிதிகழும் சோலை யணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்"[91]

"எழில்கொழிக்கும் சோலைகளையுடையதாய், இந்நிலவுலகினுக்கு ஆபரணம் போன்றதாய் இருப்பது திருநீர்மலை" என்பது பூதத்தாழ்வாரின் திருவுள்ளம். மேலும், திருவரங்கம், திருமலை, திருக்கோட்டியூர் ஆகிய திருத்தலங்களைப் போலவே திருநீர்மலையும் மிகப்பழமையான திருத்தலம் என்பதும் இவ் ஆழ்வார் வாக்கினால் தெளிவாகிறது.

திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் இரண்டாம்பத்து நான்காம் திருமொழி முழுவதும் பத்துப்பாசுரங்களால் இத்திருத்தலத்தைப் பாடியருளியுள்ளார். இவற்றில் சில பாசுரக்கருத்துகளை நோக்குவோம்.

"அன்றா யர்குலக் கொடியோ டணிமா
மலர்மங் கையொடன் பளவி அவுணர்க்கு
என்றா னுமிரக் கமிலா தவனுக்
குறையும் மிடமா வதிரும் பொழில் சூழ்
நன்றா யபுனல் நறையூர், திருவாலி
குடந் தைதடந் திகழ்கோ வனகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு
இடமா மலையா வதுநீர் மலையே !

"கண்ணன் நப்பின்னையோடும் திருமகளோடும் அன்புடன் கலந்து, அசுரரிடம் இரக்கம் இல்லாதவனுக்கு இருக்கும் இடம் நீர்மலையாகும். திருநறையூர், திருவாலி, திருக்குடந்தை, திருக்கோவலூர் ஆகிய இடங்களில் முறையை நின்றும், அமர்ந்தும் படுத்தும் நடந்தவனுமாகிய பெருமானுக்கு இடம் நீர்மலையே ஆகும் ! இதுவே மலையாக இருப்பதுடன் உறைவிடமாகவும் அமைந்தது ; ஆதலின், உகந்தருளின நிலங்கள் எங்கும் செய்வதற்குரிய விருப்பத்தை இதனிடம் செய்துகொண்டு வந்து உறைபவனானான்.[92]

அடுத்த பாசுரத்தில் திரிவிக்கிரமனைப் போற்றுகிறார் (2 : 4 : 2). நான்காம் பாசுரத்தில் நரசிம்மனைப் போற்றுகிறார். (2 : 4 : 4). ஆறாம் பாசுரத்தில் மலையின்கீழ் உள்ள கோயிலில் விளங்கும் பெருமானுடைய திருநாமத்தை குறிப்பிடுகிறார். "நீர் ஆர் பெயரான் நெடுமால்"—நீர்வண்ணன் என்பது பெருமான் திருநாமமாகும்.

நீர் ஆர் பேரான்—"நீர் நாரம் எனப்படும்"—என்று சொல்வதற்கேற்ப நீரிலே கண்வளர்த்தருளுகையாலே நாராயணன் என்னும் திருப்பெயரை உடையவன் என்க.

திருமங்கையாழ்வார் தலைவி நிலையில் நின்று பாடும் பாசுரங்கள் மூன்று உள்ளன.[93] மங்களாசாசனம் செய்யும் முறையில் அமைந்த பாசுரங்கள் நான்கு உள்ளன.[94] சிறிய திருமடல், பெரிய திருமடலில்[95] இத்திருத்தலப்பெயரைக் குறிப்பிடும் இடங்கள் இரண்டு.

திருநெடுந்தாண்டகத்தில் தாயார் பேசும் பேச்சாக ஒரு பாசுரம் அருளுகிறார்.

"தலைவன் திருமேனி மிகவும் அழகு வாய்ந்தது ; அழியா அழகன். அவன் திருமேனி மேகம் போன்றது ; அவன் திருக்கண்களும், திருவாயும் திருக்கைகளும், திருவடிகளும் தாமரையின் வண்ணமாய் அமைந்து சிவந்து விளங்குவன ; அவன் நிலமடந்தை, திருமகள் ஆகியோர்க்கு நாயகன் ; இப்படிப்பட்ட அழகனின் மையலில் மயங்கிய அழகிய என் மடமகள்," எம்பெருமான் திருவரங்கம் எங்கே ? என்று வினவுவாள். நீர்வண்ணன் கோயில் கொண்டிருக்கும் நீர்மலைக்குச் செல்வேன் என்று மயங்கி நிற்பாள் : என்மகள் இப்பித்துப் பிடித்த நிலையை அடைய, நான் செய்த பாவம்தான் என்ன ? ஆ ! இதுவே தன் நிறையழிந்தவர்களின் நிலை ! என்று தாயார் தலைவி நிலை கண்டிரங்கிப் பேசும் பேச்சாக அமைந்த அழகிய பாடலைப் பார்ப்போம்.

"கார் வண்ணம் திருமேனி ; கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்
பார்வண்ண மடமங்கை பத்தர் ; பித்தர்
பனிமலர்மேல் பாவைக்கு ; பாவம் செய்தேன் !
ஏர்வண்ண என்பேதை என்சொல் கேளாள் ;
"எம்பெருமான் திருவரங்க மெங்கே ?" என்னும்
"நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்' என்னும் ;
இதுவன்றோ நிறையழிந்தார் நிற்கு மாறே" ?[96]

"திருக்குறையலூரில் நின்றும் புறப்பட்டுத் திருநீர்மலைக்குப் போய், அங்கிருந்து திருவரங்கம் போகவேணும் என்று இங்ஙனே இவள் வழிகண்டிருக்கிறாள் போலும். கோவிலிலே கெட்டுப்போன பொருளைக் குளத்திலே தேடுமாப்போலே இவள்படி ; திருப்பதிகளிலே தங்கித் தங்கிப் போகப் பார்க்கிறாளாயிற்று" என்னும் திவ்வியப்பிரபந்த திவ்யார்த்த தீபிகை, (ப. 84) உரை இங்கு அறியத்தக்கதாம்.

5.1.19. ***திருப்பரமேச்சுர விண்ணகம்***[97] : (வைகுந்தப்பெருமாள் கோயில்) காஞ்சியில் உள்ள பாடல்பெற்ற திருத்தலங்களுள் இதுவும் ஒன்றாகும். கோயிலுக்கு இராஜகோபுரம் கிடையாது. உள்ளே நுழைந்ததும் முன்மண்டபம், கருடன் சந்நிதி, பலிபீடம், துவஜஸ்தம்பம் முதலியவை அமைக்கப்பெற்றுள்ளன. முக்கிய சந்நிதியைச் சுற்றிலும் உள்ள திருச்சுற்றில் அரிய சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பத் தொடர்கள் பல்லவ அரசர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் எம்பெருமானது பல வடிவங்களையும் புலப்படுத்துகின்றன.

இக்கோயில் விமானம் மூன்று தளத்துடன் கூடிய அஷ்டாங்க விமானமாகும்.[98] விமானத்தின் அடியில் பெருமாள் வீற்றிருந்த நிலையிலும், நடுவில் (இரண்டாம் தளத்தில்) சயன நிலையிலும் ; உச்சியில் (மூன்றாம் தளத்தில்) நின்ற நிலையிலும் சேவை தருகிறார். பெருமான் பரமபதநாதன் ; பெருமாட்டி வைகுந்தவல்லி.

5.1.20. ***இக்கோயிலின் அமைப்பும் சிறப்புகளும்*** : ''விண்ணகரம்'' என்பது பல்லவர்களால் கட்டப்பெற்ற திருமால் கோயில்களுக்குப் பொதுவாக வழங்கப்படும் பெயராகும். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் திருமால் கோயில்களை விளக்கும்போது அரிமேய விண்ணகரம், வைகுந்த விண்ணகரம், நந்திபுர விண்ணகரம், காழிச்சீராம விண்ணகரம், திருவிண்ணகரம் முதலிய வற்றைக் குறிப்பிடுகிறார். இரண்டாம் நந்திவர்ம பல்லவனால் கட்டப்பெற்றது இத்திருக்கோயில். தண்டன் தோட்டப் பட்டயத்தில் இவ்வரசனை, "முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறொன்றிற்கும் தலை வணங்காதவன்" என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. இக்கருத்தை விளக்கும் வகையில் இக்கோயிலில் ஒரு சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் பொதுவாகக் காணப்படும் கோயில் உறுப்புகளையும் துணைக் கட்டடங்களையும் தனித்தனியாகப் பெற்றிராமல் ஒட்டுமொத்தமாகப் பெற்று விளங்குகிறது. இதனால் இவை யாவும் ஒன்றாகச் சேர்ந்து இதன் முதன்மைக் கட்டடமாகக் கொள்ளப்படுகிறது. இக்கோயில் பல்லவரின் கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குவதோடு, பல்லவர் கட்டிய பல்வேறு திருமால் கோயில்களில் தலையாய சிறப்புடையதாகவும், தனித்தன்மை வாய்ந்ததாகவும் காணப்படுகிறது. இக்கோயிலில் பல்லவர் வரலாற்றை அறிவதற்கான சுவர்ச் சிற்பங்கள் அணியணியாகக் காணப்படுகின்றன. இக்கோயிலை இரண்டாம் நந்திவர்மன் கட்டினான் என்பதை இக்கோயிலில் உள்ள கல்வெட்டு தெளிவாகக் கூறுகின்றது.

நீள் சதுரவடிவில் அமைந்துள்ள இக்கோயிலின் பின்புறச்சுவர் 87' அடி நீளமுடையது. இக்கோயில் 108' — 2" நீளமும் ; 79' — 2" அகலமும் உள்ள பரப்பில் அமைந்துள்ளது. பண்டைய விகாரைகளைப்போலவே மூன்று

அடுக்குகளைக்கொண்டு ஒவ்வோரடுக்கிலும் ஒரு கருவறையைப் பெற்று ஒரு தலைசிறந்த விமானக் கோயிலாகத் திகழ்வதே இதன் சிறப்பியல்பாகும்.

அடியில் உள்ள கருவறையில் திருமால் இருக்கையிலமர்ந்து இடக்காலையூன்றி, வலக்காலை மடக்கி இருக்கையில் வைத்துக்கொண்டுள்ளார். இவருக்கு நான்கு திருக்கரங்கள் உள்ளன. சங்கு, சக்கரம் ஆகிய படைகளையேந்தி, 'அபய' முத்திரை காட்டுகிறார். இரண்டாவது தளத்தில் உள்ள கருவறையில் திருமால் ஐந்தலை நாகத்தின்மீது அறிதுயில் கொண்டுள்ளார். மூன்றாவது கருவறைக்குச் செல்ல மேடைகளின்மேல் அமைந்த கிழக்கு நோக்கிய வாயிற்படிகள் உள்ளன. விமானத்தின் அடியில் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

"இக்கோயிலைக் கயிலாசநாதர் கோயிலமைப்புடன் ஒப்பிட்டு நோக்கும்போது பல வேறுபாடுகளும், பல வளர்ச்சிக் கூறுபாடுகளும் காணப்படுகின்றன. முதலாவதாக, வைகுந்தப்பெருமாள் கோயிலில் அடிக் கருவறையைச் சுற்றிலும் இரு திருச்சுற்றுப்பாதைகளும், மண்டபத்தையடுத்து மூன்றாவது திருச்சுற்றுப்பாதையும் வெளிப்புறத்தில் ஒன்றுமாக நான்கு இருப்பதைக் கணக்கிடலாம். ஆனால், கயிலாசநாதர் கோயிலில் இத்தகைய தாராளமான அமைப்பில்லை. இங்கு மகாமண்டபமும் கோயிற்கட்டடமும் 26 அடி இடைவெளிவிட்டுத் தனித்தனியே நிற்கின்றன. ஆனால், வைகுந்தப் பெருமாள் கோயிலில் மண்டபங்களும் திருச்சுற்றுப்பாதைகளும் ஒரே கட்டடக் கூரையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன. இதில் உள்ள பல தூண்களின் மிகப்பெரிய மண்டபம் கூடக் கோயிற் கட்டடத்தின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது. இத்தகைய அமைப்புப் பல்லவர் பாணியில் ஒரு புதிய மாற்றத்தையும், வழிபாட்டுமுறையில் ஒரு மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது எனலாம்."[99]

சுவரில் நாற்கரத்தூண்களும் அவற்றில் யாளிகளின் உருவங்களும் காணப்படுகின்றன. சுவரில் உள்ள மாடக்குழிகளைச் சுற்றிலும் மணிக்கறைச் சட்டங்கள் காணப்படுகின்றன. வார்ப்பைப் போன்ற மணிப்பட்டை, சுவரைச் சுற்றிலும் செல்லுகிறது. மகாமண்டபத்தில் கிழக்குத்தோற்றம் ஒரு நவீனக்கட்டடத்தைப்போல உள்ளது. அர்த்தமண்டபம் கருவறைக்கு முன்புறம் உள்ளது. கோயிலின் உட்புறத்தில் உள்ள கூடத்தைச் சுற்றிலும் உள்ள சுவரின் வெளிப்புறத்தில் முப்பத்துநான்கு சிங்கங்களின் வரிசை காணப்படுகிறது. கூடமும் கருவறையும் ஒன்றிணைந்து சதுரவடிவில் காணப்படுகின்றன. இதனையடுத்துள்ள பக்கச்சிறை எட்டுத்தூண்களை உடையது. இதன் வழியாகவும் அர்த்த மண்டபத்திற்குச் சென்று கருவறையை அடையலாம். கருவறைக்கு மேல் உள்ள விமானம் பிரமிடு வடிவிலானது.[100]

இத்திவ்ய தேசத்தை மங்களாசாசனம் செய்துள்ள ஆழ்வார் திருமங்கை மன்னர் ஒருவரே. அவர் இரண்டாம்பத்து, ஒன்பதாம் திருமொழியில் பத்துப் பாசுரங்களால் பாடியருளியுள்ளார். அவர் திருவாக்கினைத் தொகுத்து நோக்குவோம்.

"பல்லவன் பரமேச்சுர விண்ணகரத்திலே பெரும் நற்பணிகளைச் செய்தான். அணிகலன்களையெல்லாம் ஒன்றை ஆயிரமாகப் பெருக்கினான். பின்பு சோழன் அவற்றைக்கண்டு பொறுக்கமாட்டாமல் அவற்றைச் சேமத்திலே வைத்தான். இறைவனைக் குறித்து ஓர் அடி எடுத்துவைத்து முன் நின்றாரைத் தமக்குக் கருதத்தக்காராக நினைத்திருப்பவர் இவர் ; அதனாலே, அவன் தன்மைகள் எல்லாம் தமக்கு இனியவாய் இருந்தபடியால் அவற்றை நினைத்து மகிழ்ந்து பேசுகிறார்."[101]

"காட்சி முதலியவற்றிற்குப் புலப்படாத பொருள்களையும் சொல்லக்கூடிய அறநூல்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகிய சொற்கள், இவற்றைக்காட்டிலும் நிலைத்த வேதம், வேதம் உரைக்கும் பொருள் ஆகிய அவற்றுக்குத் தலைவனாய் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புல இன்பங்களும் தானாய், சிவனுக்கு உள்ளுறைபவனாய் இருந்தும், தானான தன்மையாலும், பிரமனுக்கு உள்ளுறைபவனாய் இருந்தும் உலகினை நடத்துபவன் ஆகிய பெருமானுக்கு உறைவிடமாய் இருப்பது, காஞ்சியிலே பல்லவன் என்றும், வில்லவன் என்றும் பல பெயர்களாலே சொல்லக்கூடிய அரசர் பலராலே வணங்கப்படும் வீரக்கழல்களை உடையவனும், கடல் மல்லையில் உள்ளவர்களுக்கு அரசனும் ஆகிய பல்லவ மன்னன் வணங்கிய பரமேச்சுர விண்ணகரம் ஆகும்.[102] (இரண்டாம் நந்திவர்மனின் வேறுபெயர் பரமேசுவரன் என்பதாம்.[103])

இத் திருமொழியில் ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டாம் நந்திவர்மனுடைய போர்ச்செயல்களை ஆழ்வார் சிறப்பித்துப்பாடுகிறார். அவற்றை இங்குக் காண்போம்.

(1) பாண்டியனைப் போர் முகப்பில் மிடுக்கை அழித்தவன்—இரண்டு, ஐந்தாம் பாடல்கள்.

(2) மண்ணை என்னும் நகரில் உள்ள பகைவர்களை வென்றவன்—மூன்றாம் பாட்டு.

(3) பாண்டியனைக் கருவூரில் வென்றவன்—ஏழாம் பாட்டு.

(4) வில்லவன் என்னும் அரசனை நென்மேலி என்னும் நகரில் வென்றவன்—எட்டாம் பாட்டு.

இச்செய்திகள் இரண்டாம் நந்திவர்மன் சாசனம் கூறும் வரலாறுகளோடு பெரிதும் ஒத்துள்ளன !

"உதயசந்திரன் என்ற (நந்திவர்மனின்) சேனாதிபதி, தன்னரசனான நந்திவர்மனுடன் எதிர்த்த தலைவர்களை—மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கரக் கிராமம், நெல்வேலி, (நென்மேலி-எனப் பாடலில் வருகிறது) காளிதுர்க்கம் என்ற களங்களில் நடந்த போர்களில் வென்றதாக உதயேந்திர சாசனம் கூறுகின்றது. (காளிதுர்க்கம்-குன்றெயில் என்று பாடலில் குறிப்பிடப்பெறுவதாம்).[104]

மேலும் இத்திருமொழியில் ஐந்தாம் பாசுரத்திலும், ஆறாம் பாசுரத்திலும் பல்லவனின் கொடியைக் குறிப்பிடுகிறார்.

"பாம்புடைப் பல்லவர் கோன்" (5-ஆம் பாடல்)
"விடை வெல்கொடி வேல்படை முன் உயர்த்த" (6-ஆம் பாடல்)

"விடை என்றும், விடம் என்றும், விறல் என்றும் பாடவேறுபாடுகள் உண்டு ; விடை—இளம்பாம்பு ; விடம் — நஞ்சு ; விறல் — மிடுக்கு" — பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம்.[105]

"பல்லவனுக்கு ஆதிகாலமாக விருஷபக்கொடி இருந்ததென்றும், பின்பு நாகலோகத்தளவும் சென்று வென்று வந்தது காரணமாக நாகக்கொடி உண்டாயிற்று என்றும் வரலாறு உள்ளதாகச் சொல்லக் கேள்வி உண்டு" எனவரும் திவ்யார்த்த தீபிகை உரைக்குறிப்பு இங்குக் கருதத்தக்கது.

"உத்தரமேரூர் சுந்தரவரதப்பெருமாள் கோயிலில் உள்ள துவாரபாலகர் உருவங்கள் முடிதரித்த அரசர் உருவங்கள்போல் உள்ளன. இவர்களுடைய முடிக்குமேல் பாம்புப்படம் எடுத்தது போன்ற உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குச் சூதுராஜன் என்று பெயர் கூறுகின்றனர். (சூது-பாம்பு) இவர்களின் உருவம் பல்லவ அரசர்களின் உருவம்போலும்"[106] என்று மயிலை. சீனி. வேங்கடசாமி குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

மேலும் இத்திருமொழி ஒன்பதாம் பாடலில்,

"கறையுடை வாள்மற மன்னர்கெ டக்கடல்
போல்முழங் கும்குரல் கடுவாய்ப்
பறையுடை பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே"

என்று நந்திவர்மனின் பறையைக் குறிப்பிடுகிறார். அதனைச் "சமுத்திர கோஷம்" என்று கல்வெட்டு குறிக்கும்.[107] அப்பெயரின் தமிழாக்கமே "கடல்போல் முழங்கும் குரல் கடுவாய்" என்பது. இவ்வாறு இத்திருமொழியில் பல வரலாற்றுச்செய்திகள் அடங்கியுள்ளன.

இனி, அரசர்க்கரசனும், பரம பாகவதனுமான தொண்டைவேந்தன் ஒருவனுடன் திருமால் ஏழு நாழிகையளவும் எழுந்தருளியிருந்து, திருமந்திரப்பொருளை அவனுக்கு உபதேசித்தருளினார் என்பதை,

"துளங்கு நீண்முடி அரசர்தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்கு
உளங்கொ ளன்பினோ டின்னருள் சுரந்தங்
கோடு நாழிகை யேழுட னிருப்ப
வயங்கொள் மந்திரம் மற்றவற் கருளிச்
செய்த வாறடியேன் அறிந்து உலகம்
அளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே !"[108]

என்று திருவரங்கப் பதிகத்தில் பாடுகிறார் திருமங்கை மன்னர். வைணவ அரசருள் எல்லாம் இரண்டாம் நந்திவர்மனே சிறந்த பாகவதன் ஆனபடியால், இவனே நந்திபுரத்தில் ஆண்டுகொண்டிருந்தபோது இங்ஙனம் திருவரங்கத்தில் திருவெட்டெழுத்து உபதேசம் பெற்றிருக்கலாம் என்பர்.[109]

இந்நந்திவர்மன் செய்த திருப்பணி என்னும் ஒப்புமைநோக்கி, சோழநாட்டுத் திருப்பதியைச் சார்ந்ததாயினும், இவ்விடத்து நந்திபுர விண்ணகரம் பற்றிச் சில செய்திகளைக் கூறநேர்கின்றது.

5.1.21. **திருநந்திபுர விண்ணகரம்**[110] : . . . . "நந்தி பணிசெய்த நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே" என்று பெரிய திருமொழி ஐந்தாம்பத்து ஏழாம்பாசுரத்தில் இவ் ஆழ்வார் குறிப்பிடுகிறார். கும்பகோணத்திற்கு அருகில் இக்கோயில் உள்ளது. மூலவர் ஜகந்நாதன், விண்ணகரப்பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம், தாயார் செண்பகவல்லி.

"இந்த நந்திபுரம் பழையாறையைச் சார்ந்தது அன்று ; இதற்கு ஆயிரத்தளி என்று ஒரு பெயர் உண்டு. பராந்தகன் கல்வெட்டுகள் 'கிழாற் கூற்றத்து நந்திபுரமான ஆயிரத்தளி' என்று இவ்வூரைக் குறிப்பிடுகின்றன. முதல் இராசேந்திரன் காலக் கல்வெட்டுகள், 'நித்த விநோத வளநாட்டுக் கிழாற் கூற்றத்து ஆயிரத்தளி என்னும் ஊரிலிருந்த ஸ்ரீபராந்தக தேவீஸ்வரம், ஸ்ரீவானவன் மாதேவீஸ்வரம்' என்னும் இரண்டு கோயில்களைக் குறிப்பிடுகின்றன. பின்வந்த சோழ அரசர்கள் கல்வெட்டுகளிலும் இவ்வாறு குறிக்கப்பெறுகிறது ; இன்றுவரை வரலாற்றாசிரியர்கள் நாதன்கோயிலை நந்திபுரம் எனக் கருதினர். அதற்கு ஆதாரம் கோடிக்காவவில் உள்ள சோழற் காலக் கல்வெட்டு. இதில் பழையாற்று நந்திபுரத்து வியாபாரி குமரன் கணவதி' செய்த அறக்கட்டளை குறிக்கப்பெறுகிறது. இது மூலக்கல்வெட்டன்று ; ஒரு பழங்கல்படி ஆயிரத்தளியினை நந்திபுரத்திலிருந்து இதை

வேறுபடுத்திக் காட்டவே பழையாற்று நந்திபுரம் எனக்குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. இராஜராஜனின் கல்வெட்டுகளை ஆராயும்போது முத்தரையர்களின் தலைநகரான நியமத்தில் ஓர் ஆயிரத்தளியும் கிழாற்கூற்றத்தில் ஓர் ஆயிரத்தளியும் (நந்திபுரம்) இருந்தமைதான் அறியமுடிகிறது. அதேநேரத்தில் அவரது சாசனங்களில், (அ) பிற மன்னர் சாசனங்களில் ஓர் இடத்தில்கூடப் பழையாறையில் "ஆயிரத்தளி" இருந்ததாகக் குறிப்பு இல்லை. தெளிவான கல்வெட்டுகள், செப்பேடுகள் துணையோடு ஆராயும்போது இன்றைய கண்டியூர், செங்கமேடு, வீரசிங்கம்பேட்டை இணைந்த அன்றைய கடிநகரே பல்லவ மன்னனால் தோற்றுவிக்கப்பெற்ற நந்திபுரம் என்பதை உறுதியாக நம்பலாம்" என்று விரிவாக ஆராய்ந்து குடவாயில் பாலசுப்பிரமணியன் தம் கட்டுரையில் கூறுகின்றார்.[111] ஆயின் இவ்வளவு விரிவாக ஆராய்ந்த இக்கட்டுரையில், திருமங்கை மன்னரால் பாடப்பெற்ற நந்திபுர விண்ணகர ஆலயம் எங்குள்ளது ? என்பது பற்றி ஒருவரியும் குறிப்பிடாமல் விட்டுள்ளார். எனவே, அறிஞர்கள் இதுபற்றி மேலும் ஆராய்ந்து முடிவுசெய்யலாம்.

### 5.1.22. நந்திவர்மனின் திருவல்லிக்கேணித் திருப்பணி :

'திருமங்கை மன்னர் தம் திருவல்லிக்கேணித் திருப்பதிகத்தில்,[112]
"மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமா ளிகையும் மண்டபமும்
தென்னவன்தொண் டையர்கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக்கேணி நின்றானை"
. . . . . . . . . . . . . . . . . . .

என்னும் ஈற்றுப் பாசுரத்தில் பல்லவ வேந்தனைப் பற்றிக் கூறுதல் காணலாம். அவ்வூர், ஸ்ரீபார்த்தசாரதி கோயில் கருவறையில் கண்டறியப்பட்ட கல்வெட்டு ஒன்று கி.பி. 780-இல் பட்டம் பெற்ற தந்திவர்மனது 12-ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக உள்ளது.[113] இச்சாசனப் போக்கிலிருந்து இக்கோயில் தந்திவர்மன் ஆட்சிக்கு முன்பே எல்லாத் திருப்பணிகளும் நிரம்பி இருந்ததாகவே தோற்றக்கூடியது.

அதனால் மேற்பாசுரம் கூறுமாறு, வாவி, மதிள், மாடமாளிகை, மண்டபம், முதலியவற்றைப் புதியனவாக நியமித்துத் திருவல்லிக்கேணியைச் சிறப்பித்த பல்லவன் அத்தந்தியின் தந்தையும் பரம பாகவதனுமான பல்லவமல்லன் ஆகக் (இரண்டாம் நந்திவர்மன்) கருத இடமுண்டு[11] என்று மு. இராகவையங்கார் கூறுவது ஏற்புடையதே.

இப்பரமபாகவதனைக் காசக்குடிப்பட்டயம், "அரிசரணபரன்" என்று குறிப்பிடுகிறது.

5.1.23. **திருப்பவளவண்ணம்**[115] : (பெரிய) காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திலிருந்து கிழக்காகச் செல்லும் தெருவிற்கு வடவண்டை இராஜவீதி என்று பெயர். இத்தெருவின் இடையில் இடப்புறம் செல்லும் சாலையில் பச்சைவண்ணன்-பவளவண்ணன் சந்நிதிகள் எதிரெதிராக அமைந்துள்ளன.

பவழவண்ணர் சந்நிதி மட்டும் திருமங்கை மன்னரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசமாகும். பச்சைவண்ணர் சந்நிதி பாடல் பெற்ற தலம் அன்றெனினும் புராணச் சிறப்புடையது.

பவழவண்ணர் சந்நிதியில் இடப்புறம் ஆண்டாள் சந்நிதியும், அழகான மண்டபமும் உள்ளன. தனிக்கோயில் நாச்சியார் திருநாமம் பவழவல்லித்தாயார் என்பது. பவழவண்ணர் (மூலவர்) ஆதிசேடன் மீது வீற்றிருந்த திருக்கோலத்தில் பரமபதநாதனாக எழுந்தருளியுள்ளார்.

**அருள்மிகு வரதராசப்பெருமான், பிரம்மோற்சவம்-ஐந்தாம் திருநாள் அன்று நாச்சியார் திருக்கோலத்துடன் இத்திருக்கோயிலுக்கு எழுந்தருள்கிறார்.**

''வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய் ! மதிள்கச்சி யூராய் ! பேராய் !
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் !
பனிவரையி னுச்சியாய் ! **பவள வண்ணா !**
எங்குற்றாய் ? எம்பெருமான் ! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே !'[116]

புராணத்தின்படி இத்தலம் சுமார் 2 கி. மீ. தொலைவுக்கப்பால் பாணபட்டரை என்னுமிடத்தில் அமைந்திருக்கவேண்டும். ஆயினும், அச்சந்நிதி பழுது அடைந்துவிட்டதால் முன்னோர் இவ்விடத்தில் இச்சந்நிதியை ஏற்படுத்தியிருக்கலாம் என்பர்.

பவள வண்ணா—என்ற சொல் பெருமாள் திருமேனியின் நிறத்தைக் குறிப்பிடுகிறதே தவிர, இத்திருத்தலத்தின் அடையாளம் எதையும் குறிப்பிடவில்லை. எனவே, இதுதான் பழைய திருத்தலமா ? வேறெங்காவது இருக்கிறதா ! என்று கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆயினும் பெரியவர்கள் வெகுகாலமாக இதைத்தான் திவ்யதேசமாகக் கருதிச் சேவித்துவருகின்றனர்.[117] இங்குக் குறிப்பிட்டுள்ள வினாவிற்கு மேல்பத்தியில் விடையுள்ளது. இதைத் திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதிப் பாடலில் காணமுடிகின்றது.[118]

"கண்டறிந்தும் கேட்டறிந்தும் தொட்டறிந்தும் காதலால்
உண்டறிந்தும் மோந்தறிந்து முய்யனே—பண்டைத்
தவளவண்ணா ! கார்வண்ணா ! சாமவண்ணா ! கச்சிப்
பவளவண்ணா ! நின்பொற் பதம்"

பெருமான் நான்கு யுகங்களுக்கு ஏற்ப, வெண்ணிறம், சிவந்தநிறம், பசுமைநிறம், நீலநிறம், ஆகிய நான்கு நிறம் கொண்டவன். "காஞ்சியில் பவழவண்ணப்பதியில் உறைபவனே ! உன் திருவடிகளை வணங்கி, ஐம்புல இன்பங்களையும் நீத்து வாழ்வேன்" என்கின்றார். ஆக இவரது கருத்துப்படி பவளவண்ணம் ஒரு திவ்வியதேசமாக அமைவது தெளிவு.

5.1.24. **திருப்பாடகம்**—பாண்டவதூதர் திருக்கோயில்[119] : தொண்டைநாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டினுள் பதினான்கு திவ்வியதேசங்கள் காஞ்சியில் அமைந்துள்ளன. கங்கைகொண்டான் மண்டபத்திற்கருகில், கச்சித்தெருவில் இடப்புறம் செல்லும் சாலையில் சென்றால் இத்திருத்தலத்தை அடையலாம்.

கண்ணபிரான் தூது சென்றபோது துரியன் கண்ணனை மாய்க்க எண்ணி ஒரு நிலவறையைத் தோண்டி, அதில் பல மல்லர்களை வைத்து, தழைகளால் மூடி, அதன்மீது ஓர் ஆசனத்தையும் இட்டான். கண்ணபிரான் அமர்ந்தவுடன், ஆசனம் நிலவறைக்குள் சரிந்துவிழ, உள்ளேயிருந்த மல்லர்கள் பெருமானை நெருக்கிக் கொல்ல முயன்றார்கள். உடனே கண்ணன் மிகப்பெரிய திருவுருவம்—விசுவரூபம் எடுத்துக்கொண்டு அம்மல்லர்களை மாய்த்தான்.[120] இவ்வரலாற்றுக்கேற்ப மிகப்பெரிய திருவுருவுடனே சேவை சாதிக்கிறார் பாடகத்தில். சுமார் 25 அடி உயரம் உள்ள மிகப்பெரிய திருமேனி. கருவறை நிலவறையைப்போலவே குவிந்து உள்ளது. வீற்றிருந்த திருக்கோலம். பாடு + அகம் ; பாடகம் ; "பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் தலம்" என்பது இதன் பொருள்.

இவ்வெம்பெருமானைப் பாடியுள்ள ஆழ்வார்கள் ஐவர்.

"பூம்பாடகத்துள் இருந்தானை ஏத்தும் என் நெஞ்சு"[121] என்று தன் நெஞ்சினை ஆற்றுப்படுத்துகிறார் பூதத்தாழ்வார். "மறைபாடகம்" என்று குறிப்பிடுகிறார் பேயாழ்வார்.[122] அவரே 'கச்சி வெஃகாவில் கிடந்து இருந்து நின்றதுவுமங்கு" என்றும் போற்றுகிறார்.[123]

திருமழிசையார் "குன்றிருந்த மாடநீடு பாடகம்" என்று வியந்து பாடுகிறார்.[124] அவரே, "இருந்த தெந்தை பாடகத்து"—என்று அடுத்த பாசுரத்திலும் குறிப்பிடுகிறார்.[125] நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரப்பகுதி (5 : 10 : 6) பின்வருமாறு :

"நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்" . . .

இங்கு 'ஈடு' உரையாசிரியர் நம்பிள்ளை அவர்கள், "திருவூரகத்திலே நின்றபடியும், திருப்பாடகத்திலே இருந்தபடியும், திருவெஃகாவிலே கிடந்தபடியும் ஆதல்" என்று இப்பாசுர அடிக்குப் பொருள்கூறி உள்ளார். அவ்வகையில் இத்திருத்தலம் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது என்று கூறுவதை அறிஞர் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரலாம்.

திருமங்கையாழ்வார்,

"கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள் நச்சி பாடகத்துள்
எல்லாவுலகும் வணங்கஇருந்த அம்மான்" . . .[126]

என்றும்,

"கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறென்னும்"[127] என்று தலைவி நிலைகண்டு இரங்கித் தாய் உரைக்கும் உரையாகவும் பாசுரம் அருளுகின்றார்.

"கச்சிமேய களிறு என்கிறது திருப்பாடகத்து நாயனாரை" என்பது பெரியவாச்சான்பிள்ளையின் விரிவுரையாகும்.

உடையவருடன் வாதம் செய்து தோற்ற யஜ்ஞமூர்த்தி என்னும் அத்வைதி அருளாளப்பெருமாள் எம்பெருமானார் என்னும் பெயருடன் அவருடைய சீடரானார். அவருடைய சந்நிதி இங்குள்ளது. தாயார் ருக்மிணி, சத்யபாமா. சக்கரத்தாழ்வாருக்குத் தனிச்சந்நிதி இப்பொழுது புதியதாக நிர்மாணம் செய்துள்ளனர். இக்கோயிலின் கல்வெட்டுகளில் எம்பெருமான் பெயர் தூதஹரி என்று உள்ளது. (இத்திருக்கோயில் செல்லும் வழியில் மேலண்டை இராசவீதியில் திருக்குமரகோட்டம் உள்ளது. அங்கு ஒரு தனி சந்நிதியில் "உள்ளம் உருக்கும் பெருமாள்" நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.)

5.1.25. **திருப்புட்குழி**[128] : காஞ்சியிலிருந்து சுமார் 11 கி. மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. சடாயு என்னும் பெரியவுடையார் இராமனிடம் நடந்தவற்றைக் கூறிப் பரமபதித்தபோது, இராமன் அவருக்கு அந்திமச் சடங்குகளை இத்தலத்தில் நடத்தியதாகக் கூறுகிறது புராண வரலாறு. எனவே, இத்தலத்திற்குத் திரு + புள் + குழி என்ற பெயர் ஏற்பட்டது. கோயிலுக்கு எதிரில் சடாயுவின் சந்நிதி உள்ளது. இடையில் சடாயு புஷ்கரிணி என்னும் திருக்குளம் உள்ளது. பெருமாள் எப்பொழுது எழுந்தருளினாலும் சடாயுவிற்கு மரியாதை சாதித்தருளும் வழக்கம் உண்டு.

மூலவர் கிழக்கே திருமுக மண்டலமாய் நான்கு திருக்கரங்களோடு வீற்றிருக்கிறார். தொடையின்மேல் சடாயுவை வைத்துக்கொண்டு இறுதிக்கடன் செய்யும் நிலையில் எழுந்தருளியுள்ளார். அந்தத் தாபத்தைத் தாங்கமுடியாத திருமகளும், நிலமகளும் (இடம் வலமாக) இடம் மாறியும் திருமுகத்தைச் சற்றுப்

பெருமாளுக்கு எதிர்ப்புறமாகச் சாய்த்தும் எழுந்தருளியுள்ளனர். முன்னால் உற்சவரும், அவருக்குப் பக்கத்தில் போரேற்றுப்பெருமாளும் எழுந்தருளியுள்ளனர்.

பெருமாள் திருநாமம் விஜயராகவன். தனிக்கோயில் நாச்சியார் மரகதவல்லித் தாயார் என்பது. ஸ்ரீராமானுஜர் இத்திருத்தலத்தில் வாழ்ந்த யாதவப் பிரகாசர் என்ற அத்வைதியிடம் வேதாந்த பூர்வபட்சங்களைக் கற்றார். எம்பாரும் உடன் கற்றார். உடையவர் யாதவப் பிரகாசரிடம் வாசித்த மண்டபமும், அதைக் குறிப்பிடும் சிற்பமும்[129] இக்கோயிலில் உள்ளன. உடையவரின் சீடராக யாதவப் பிரகாசர் நின்ற நிலையிலும் உடையவர் அமர்ந்த நிலையிலும் உள்ளனர்.

நம்பிள்ளையின் சீடரும், ஆராயிரப்படி குருபரம்பரையை இயற்றியவருமான பின்பழகிய பெருமாள் ஜீயர் அவதரித்த தலமும் இதுவேயாகும். இக்கோயிலில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளும், 13-ஆம் நூற்றாண்டில் சுந்தரபாண்டியனாலும், பின்னர் விஜயநகர மன்னர்களாலும் கட்டப்பட்ட மண்டபங்களும் உள்ளன. கல்வெட்டுகள் இக்கோயிலை "போரேற்றுப்பெருமாள் கோயில்", "சித்தனவேலி திருப்புட்குழி நாயனார் கோயில்" என்று குறிப்பிடுகின்றன.

மாசிமாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தின் எட்டாம் திருநாளன்று நடக்கும் குதிரை வாகன உற்சவம் வெகு சிறப்பானது. கீல்குதிரை என்று வழங்கப்பெறும் இவ்வாகனம் உண்மையான குதிரையைப் போலவே அசையும் உறுப்புகள் கொண்டது. இவ்வாகனத்தைச் செய்த தச்சன், வேறுயாருக்கும் இம்மாதிரியான வாகனத்தைச் செய்வதில்லை என்ற உறுதியுடனிருந்து உயிர் துறந்தான். அவனது பக்திக்கு உகந்து, பெருமாள் எட்டாம் உற்சவத்தன்று, அவனது வீதிக்கு எழுந்தருள்கின்றார்.

இத்திருத்தலத்தைத் திருமங்கை ஆழ்வார் ஒருவரே மங்களாசாசனம் செய்துள்ளார். "பொருநீர்ப்புட் குழிபாடும்"[130] என்று பெரிய திருமொழியிலும் "மன்னு மரகதத்தைப் புட்குழியெம் போரேற்றை" என்று பெரிய திருமடலிலும்[131] பாடியுள்ளார்.

வேதாந்த தேசிகர் இவ் எம்பெருமானைப் பற்றி "பரமார்த்த ஸ்துதி" என்றொரு தோத்திர நூலை அருளியுள்ளார்.

5.1.26. **திருவெஃகா—சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில்**[132]
இத்திருத்தலம் காஞ்சிபுரம்—ஆடிசன்பேட்டை—தேரடிக்கு அருகில் உள்ளது. இதனருகில் உள்ள திருக்குளத்தில் பொய்கையாழ்வார் அவதரித்தார் என்பது முன்னர்க் கூறப்பட்டது.

நம்மாழ்வார் தமது முதல் பிரபந்தமான திருவிருத்தத்தில் கோயில், திருமலை, திருவெஃகா ஆகிய மூன்று திருத்தலங்களை மட்டுமே பாடியுள்ளார். கோயிலுக்குள் வலப்புறம் பொய்கையாழ்வார் சந்நிதியும், இடப்புறம் தாயார் சந்நிதியும் உள்ளன. முக்கிய கருவறைக்குச் செல்லும் முன் வலப்புறம் தென்படும் சந்நிதி ஸ்ரீராமர் சந்நிதியாகும். "அழியா அழகனாக" அவர் பெரிய வடிவில் எழுந்தருளியுள்ளார்.

சொன்னவண்ணம் செய்த பெருமாள் பிற திருத்தலங்களைப் போலன்றி, இங்கு மட்டும் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார். கலைமகள் பிரம்மாவின் யாகத்தைக் கலைக்க வேகவதியாறாகப் பெருக்கெடுத்து வந்தபோது, அதைத் தடுக்க, குறுக்கே சயனித்தார் பெருமாள் ; அவசரத்தில் சயனித்தபடியால் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார் என்பர். கணிகண்ணனுக்காகப் பைந்நாகப்பாய் சுருட்டிச்சென்று, மீண்டும் "விரித்துக்கொள்" என வேண்டியதற்கேற்ப வந்து சயனித்தப்படியால் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார் என்றும் கூறுவர்.

மூலவருடைய திருவடியருகில் சரஸ்வதி வீற்றிருக்கிறாள். திருமுன்பே உற்சவர் எழுந்தருளியுள்ளார். முகப்பில் உள்ள மண்டபத்தில் இங்குச் சிலகாலம் வசித்தவர்களான பொய்கையாழ்வார், திருமழிசையாழ்வார், மணவாளமாமுனிகள் ஆகிய மூவரும் எழுந்தருளியுள்ளனர். இங்குச் சுமார் ஓராண்டுக்காலம் மணவாள மாமுனிகள் எழுந்தருளியிருந்து "பகவத் விஷய காலட்சேபம்" செய்தருளியபடியால், இங்கு மட்டும் மாமுனிகள் ஞான முத்திரையுடன் எழுந்தருளியிருக்கிறார்.

திருமழிசையாழ்வாருடனும், கணிகண்ணனுடனும் பெருமாள் ஊருக்கு வெளியே எழுந்தருளிய நிகழ்ச்சி திருமழிசையார் அவதாரம் செய்த தை மாதம் மக நட்சத்திரத்தன்று உற்சவமாக நடைபெறுகின்றது. அன்று பெருமாளும் ஆழ்வாரும் வேகவதி ஆற்றங்கரைக்கு எழுந்தருளி மீள்வர். பாஞ்சராத்திர ஆகமப்படி திருவாராதனம் நடைபெறுகின்றது.

இத்தலத்தைப் பாடியுள்ள ஆழ்வார்கள் ஐவராவர். பொய்கையாழ்வார், "வெஃகாவில் . . . கிடந்தான் . . . என்றால் கெடுமாம் இடர்"[133] என்று ஏத்துகிறார். பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் பிற திருத்தலங்களோடு இதைச்சேர்த்து நான்கு பாசுரங்களிலும்,[134] முழுமையாக ஒரு பாசுரத்திலும் பாடி அருளியுள்ளார்.

"மலைமீது நின்றும், நீரில் குளித்தும், நெருப்பிடையே நின்றும் நீர் தவம் செய்யவேண்டா ; வெஃகாவில் பள்ளிகொண்டிருக்கும் பெருமானை மலர்களைத் தூவி வணங்கினால் தீவினைகள் அழியும்" என்று பாடுகிறார்.[135] திருமழிசையார் திருச்சந்த விருத்தத்தில் இரு பாசுரங்களாலும் (63, 64) நான்முகன் திருவந்தாதியில் ஒரு பாசுரத்தாலும் (36) பாடியருளியுள்ளார். நம்மாழ்வார் "நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் (5 : 10 : 6) இவரைப் பாடியுள்ளார் என்பது நம்பிள்ளை அவர்களின் கருத்தாகும்.

"கிடந்தவாறும்—திருவெஃகாவில் கிடந்தபடியுமாதல்"—என்பது ஈடு. ஆயின் திருவிருத்தத்தில் ஒரு முழுமையான பாசுரத்தில் அவர் பாடியருளியுள்ள கருத்துக்களை இங்குச் சிந்திக்கலாம்.

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீர் அறமென்று கோது கொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத் துமிழ்பாலை கடந்த பொன்னே !
கால்நிலந் தோய்ந்துவிண் ணோர் தொழும் கண்ணன் வெஃகா உது ; அம்பூந்
தேனிளம் சோலைஅப் பாலது எப்பாலைக்கும் சேமத்ததே"[136]

இது "நகர் காட்டுதல்" என்னும் துறையில் பாடிய பாடல். தலைவன் தலைவியை உடன் போக்கில் அழைத்துக்கொண்டு, இடைவெளியில் உள்ள பாலை நிலத்தைக் கடந்து, தன் ஊருக்கு ஏகுகின்றான். அப்பொழுது அவட்கு வழிநடைத்துன்பம் தோன்றாதிருக்கும் பொருட்டு அவளை நோக்கி, "அதோ தெரிகின்றதே நகர், அதுதான் நாம் அடையவேண்டிய இடம்" என்று கூறுதல் இத்துறையின் இலக்கணமாகும்.

"இயல்பாகவே வெப்பக் கதிர்களையுடைய பகலவனும் வெறுத்தொதுக்கும்படியாக உள்ளது பாலையின் கொடுமை என்பது தோன்ற "வேனிலஞ்செல்வன் சுவைத்து உமிழ் பாலை" என்று நயமாகக் கூறியுள்ளார். இத்தகு நிலத்தைக் காலால் நடந்து கடந்துவந்து மிக வருந்தவேண்டிய நிலையிலும் தலைவனைப் பிரியாது அவனுடன் வருதலையே ஓர் இன்பமாகக் கருதி வருகின்ற தலைவியைப் "பாலை கடந்த பொன்னே" என்று குறிப்பிடுகிறான் தலைவன். பொற்கொல்லன் எரியும் நெருப்பில் உருக்கிய பொன்னை ஓடவிடுங்கால் அது ஒளிவிடுவதுபோல, துன்பத்திலும் இன்பத்தைக் காணும் இவளது முகமலர்ச்சியைக் காட்டும் பொருள் பொதிந்த இச்சொற்றொடரை நினைத்து மகிழலாம்.

தேவர்கட்கு இந்நிலவுலகில் கால் தோயாமை இயல்பு. உம்பர் உலகினும் பெருமையை உடைய இத் திவ்விய தேசத்தில் அவர்களும் அந்த இயல்பு மாறிக் கால்நிலம் தோய்ந்து நடப்பர். நிலத்தில் நடக்கும் மண்ணுலகோரும் கால் பொருந்துவதற்கு அரிய பாலையின் வெப்பத்தைத் தணிக்கவல்லது திருவெஃகா. இத்தலம் பாபம் தணிக்கும் சிறந்த இடம் என்பதைக் காட்டவே பாசுரத்தில் "அம்பூந்தேன் இளஞ்சோலை" எனக் குறிப்பிடப்பெற்றது. "எப்பாலைக்கும்", என்பதில் 'பாலை' என்பது இலக்கணையாய் துன்பத்தைக் குறித்தது. இங்கு ஈடு உரை, "எல்லாப் பாலை நிலங்களால் வந்த வெம்மையையும் போக்கி, நமக்கு இரட்சகமான தேசங்காண் அது ; (வெஃகா) இப்பாலை நிலமேயன்றிக்கே இன்னமும் சில பாலைவனமும் கடக்கலாங்காண் இந்நிலமுண்டாக", என்பது.

**உள்ளுறை :** ஆழ்வார் கொடிய சம்சாரத்தைக் கழித்த தன்மையையும், எம்பெருமான் உகந்தருளின நிலத்தின் பரம போக்கியதையையும், அவருக்குப் பாகவதர்கள் எடுத்துக்கூறி, அவரது ஆற்றாமையைத் தவிர்த்தலே இதன் உள்ளுறை. முதலிரு அடிகள் ஒளி வடிவான எம்பெருமானின் பலவகை நிலங்களையும் திருவுளத்திற்கொண்டு ஆய்ந்து அவற்றில் சத்தற்றது என்று கழித்ததும், பசையற்றதும் வெப்பம் மிக்கதுமான சம்சாரத்தைக் கடந்து மிக்க ஒளிபெற்றவரே ! என்று பாகவதர்கள் ஆழ்வாரை விளிப்பதைக் காட்டுகின்றன. பின்னிரு அடிகள், மீளா உலகத்தவரான நித்திய சூரிகளும் மீண்டு வந்து வசிக்கும்படியான பெருமையுள்ள அவதாரத்தலம் மிக அண்மையில் உள்ளதாய் மிக இனிமைதருவதாய், எவ்வகைத் துன்பங்களையும் தவிர்ப்பதாய், நன்மைகட்கெல்லாம் புகலிடமாய் உள்ளது என்பதைக் காட்டி நிற்கின்றன.

5.1.27. **திருவேங்கடம் :** "தமிழ்மொழி நடையாடுவதற்கு எல்லை நிலம்"—என்று வியாக்கியான சக்கரவர்த்தி கூறியவண்ணம், பண்டைத் தமிழகத்தின் எல்லை வடமாலவன் குன்றமாகும். பிற்கால திவ்விய தேசப்பிரிவின்படி இஃது வடநாட்டுத் திருத்தல வரிசையில் வைக்கப்பெற்றிருப்பினும், நாம் ஆய்விற்கு எடுத்துக்கொண்ட தொண்டைநாடு என்ற பழைய பிரிவில் இஃது நம் ஆய்வின் எல்லையில் வருகின்றது. இத் திவ்வியதேசம் மூன்று பிரிவாக வருகின்றது ; அவையாவன ;

(1) கீழ்த்திருப்பதி (அ) திருப்பதி — அ/மி கோவிந்தராஜப்பெருமாள் திருக்கோயில். ஆதிசேடன்மீது பள்ளிகொண்ட திருத்தலம், கிழக்கே திருமுகமண்டலம். தாயார் புண்டரீகவல்லி. இங்கு ஆண்டாள், உடையவர், திருமலை நம்பி ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன.

(2) திருமலை : மூலவர் ; திருவேங்கடமுடையான், உற்சவர் கலியாணவேங்கடேசர் ; ஆனந்த நிலைய விமானம் ; கோனேரி தீர்த்தம் முதலிய 14 தீர்த்தங்கள்.

(3) ஆதிவராகர் சந்நிதி : சுவாமி புஷ்கரிணியின் வடமேற்கு மூலையில் கோயில் கொண்டுள்ள இப்பெருமாளை வணங்கியபிறகே, திருமலையப்பனை வணங்கவேண்டும் என்பது மரபு. பெருமாள் இங்கு எழுந்தருள்வதற்கு முன்பாக ஆதிவராகர் இத்தலத்தில் சேவை சாதித்ததால் இம்மரபு ஏற்பட்டது.

(4) திருச்சானூர் (அலர்மேல்மங்காபுரம்) : மூலவர் ; அலர்மேல்மங்கை ; கிழக்கே திருமுக மண்டலம். தீர்த்தம் : பத்மசரோவரம். இத்திருக்கோயிலில் அ/மி கண்ணனுக்கும், அ/மி சௌந்தரராஜனுக்கும் சந்நிதிகள் உள்ளன.

5.1.28. **திருமலை—ஆலய அமைப்பு, மூலவர், பஞ்சபேரங்கள் :** இத்திருக்கோயிலின் தலைவாயிலை படிக்காவலி என்கின்றனர். அவ்வாயிலை ஒரு கோபுரம் அணிசெய்கின்றது. இந்த வாயிலில் நுழைந்து முதல் திருச்சுற்றையும் கடந்தால், வெள்ளிவாயில் (வெண்டிவாகிலி) உள்ளது. அதனுள் நுழைந்தால் விமானப் பிரதட்சிணம். பங்காருபாவி என்னும் தங்கக் கிணறு இருப்பது இங்கேதான். இப்பிரகாரத்தைச் சுற்றினால் கருவறையின் மேல் கட்டப்பெற்றிருக்கும் "ஆனந்தநிலைய விமானம்". பின் தங்கவாயில் (பங்காரு வாகிலி) அமைந்துள்ளது. இதன் இருபக்கமும் துவாரபாலகர் தங்கச் சட்டங்களுக்குள் உள்ளனர்.

"பங்காருவாகிலி—இரு திருக்கதவுகள் அமைந்தது. இவை ஒவ்வொன்றிலும் எட்டுப் பிரிவுகள் உள்ளன. அவை சதுரவடிவில் உள்ளன. இரு கதவுகளையும் மூடியநிலையில் ஒரு வரிசையில் நான்கு பகுதிகள் இருக்கின்றன. இடமிருந்து வலமாக மேல்வரிசையில், சக்கரம், ஸ்ரீவேங்கடவன், விஷ்ணு (பரமபதநாதனாக) சங்கு ஆகிய நான்கு திருவுருவங்கள் உள்ளன. இவை பரத்துவ-மேலான நிலையைக் குறிக்கின்றன. பரமபதநாதனும், வேங்கடவனும் ஒருவரே என்பதை இவை குறிப்பிடுகின்றன.

இரண்டாம் வரிசையில் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன் ஆகிய வியூகமூர்த்திகள் நால்வரும் அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளனர். மூன்று, நான்கு, ஐந்தாம் வரிசைகளில்,

(1) கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன்.

(2) விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன்.

(3) ஸ்ரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன்.

ஆகிய பன்னிருமூர்த்திகள் (துவாதச மூர்த்திகள்) நின்ற திருக்கோலத்தில் உள்ளனர்.

கடைசி மூன்று வரிசைகளில் தசாவதார மூர்த்திகள் (விபவ வடிவம்) எழுந்தருளியுள்ளனர். (3 × 4 = 12 — 10 — 2) இரு பிரிவுகளில் தாமரை மலர்கள் உள்ளன. இவ்வாறு இத்திருக்கதவும் ஸ்ரீநாராயணனின் பரத்துவ, வியூக, விபவ வடிவங்களைக் கொண்டதாய் உள்ளது. விடியற்காலையில் இத்திருக்கதவின் முன்பிருந்தே 'சுப்ரபாதத்தை'ப் பாடி எம்பெருமானைத் துயிலெழுப்புகின்றனர்."[137]

துருவபேரமாக (மூலவர்) எழுந்தருளியிருக்கும் திருவேங்கடவன் சுயம்பு மூர்த்தியாகக் கருதப்படுகிறார். கலை உலகிலும் வேங்கடவனாகவே—அழிவற்ற செல்வம் உடையவனாக எழுந்தருளியுள்ளார். கம்பீரமான திருவுருவம், பல்லவர் காலத் திருமால் சிலைகளில் உள்ள உத்தரீயம் இல்லை.

"பெருமான் உத்தமதாச தாலத்தில் ஸ்தானகமூர்த்தமாய் (நின்ற திருக்கோலத்தில்) எழுந்தருளியுள்ளார். பத்தடி உயரம் ; சாளக்கிராமம் ; பாதாதி கேசமாகப் பெருமானின் திருக்கோலத்தை நோக்குவோம்.

திருவடியின் கீழ் பத்மபீடம் ; நான்கு திருக்கரங்கள் ; கீழுள்ள வலத் திருக்கை வரத முத்திரையுடன் அமைந்துள்ளது. இதை வைகுந்த அஸ்தம் என அழைப்பர். தன் அடியார்கள் வேண்டும் வரத்தைத் தரத் தயாராக இருக்கும் நிலை. அடுத்த கீழ்ப்புற இடத்திருக்கை கீழ்நோக்கியுள்ளது. கத்யவலம்பித முறையில் அமைந்துள்ளது. அது அவன் திருவடியே எல்லா நலன்களையும் தரும் என்பதைச் சுட்டிக்காட்டும் சான்றாக உள்ளது. மேல்புறம் உள்ள இரு திருக்கைகளில் வலப்புறத்தில் திருவாழியும், இடப்புறத்தில் சங்கமும் உள்ளன.

"சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையானின் கிரீடமகுடம் அழகுற அமைந்துள்ளது. திருச்செவிகள் இரண்டிலும் மகரகுண்டலங்கள் அணிசெய்கின்றன. திருமார்பில் திருமார்பு நாச்சியார் (வசஷஸ்தல லட்சுமி) திருவுருவம் சிறிய அளவில் செதுக்கப்பெற்றுள்ளது. பூணூல், கடகம், கைவளை ஆகியவற்றைத் தரித்துள்ளார். பொலம்பூ ஆடை (பீதாம்பரம்) செட்டாக அமைந்துள்ளது.

பெருமாள் பல அணிகளை அணிந்துள்ளார். ஆயினும் இவருக்கென்றே உள்ள திருவாபரணங்கள் சிலவாகும். அவற்றைக் காண்போம்.

இவர் தம்கீழ் இரு திருக்கைகளிலும் இரு நாகாபரணங்களைத் தரித்துள்ளார். திருக்கழுத்தில் உள்ள அணிகலன்களில் பொன்கண்டியில் அமைக்கப்பெற்ற புலிநகங்கள் குறிப்பிடத்தக்கன. வலப்புற மார்பில் திருமகளும் இடப்புற மார்பில் பத்மாவதியும் இடம்பெற்றுள்ளனர். இடைக்கச்சையில் (பெல்ட்) தசாவதாரச் சிற்பங்கள் உள்ளன. அக்கச்சையிலிருந்து மிகு பழமை வாய்ந்த சூரியகடாரி என்னும் வாள் தொங்குகிறது. அதற்குக் கீழே வங்கியும், அதற்கும் கீழே தண்டைகளும் அணி செய்கின்றன. மேலிரு திருக்கைகளின்றும் கீழே தொங்கும் இலட்சுமி ஆரத்தில்நூற்றெட்டுத் திருமகள் உருவங்கள் உள்ளன. கழுத்தணியில் கோக்கப்பெற்றுள்ள தொங்கணி (துளசி ஆரம்) ஐந்து வரிசையாக உள்ளது. சாளக்கிராம ஆரத்தில் ஸ்ரீவேங்கடேச சஹஸ்ர நாமம் செதுக்கப்பெற்றுள்ளது. திருமுடி "ஆகாச ராஜா கிரீடம்" என அழைக்கப்பெறுகிறது. விலையுயர்ந்த பொன்னாடை பெருமானுக்கு அணிவிக்கப்பெற்றுள்ளது.[138]

மூலவருக்குப் பக்கத்தில் (துருவபேரம்) நான்கு செப்புத் திருமேனிகள் உள்ளன. ஆக "பஞ்சபேரங்கள்" அமைந்துள்ளன. மூலவருக்கு வலப்பக்கத்தில் உற்சவ மூர்த்தி (ஸ்ரீமலையப்ப சுவாமி) ஸ்ரீதேவி, பூதேவி, ஆகியோருடன் எழுந்தருளி உள்ளார். எல்லா விழாக்களிலும் திருவீதி புறப்பாடு கண்டருள்பவர் இவரே. அவருக்குச் சற்றுப் பின்னால் போக ஸ்ரீநிவாசர் (கௌதுக விக்கிரகம்) உள்ளார்.

நாள்வழிபாடு இவருக்கே முதலில் இயற்றப்பெறும். மூலவரின் திருவுருவின் சுருங்கிய நேர்படியாக இவர் கருதப்பெறுவதே இதற்குக் காரணம். மூலவருக்கு இடப்பக்கத்தில் கொலுவு சீனிவாசமூர்த்தி (ஸ்தபந பேரம்) உள்ளார். மகா மண்டபத்தில் நாளும் நடக்கும் தர்பாரில் இவர் தலைமை வகிக்கிறார். அவருக்குச் சற்றுத் தள்ளி உக்கிரசீனிவாசர் உபயநாச்சியாருடன் (பலிபேரம்)எழுந்தருளிஉள்ளார்.

மேலும், இங்கு இராமர், சீதை, இலட்சுமணன், நவநீதநிருத்யக்கண்ணன், உருக்குமிணி ஆகியோரும் இடம் பெற்றுள்ளார்கள். கருவறைக்கு வெளியே, "இராமர் மேடையில்" சுக்கிரீவன், அனுமன், அங்கதன் ஆகியோர் உள்ளனர். அவர்களுக்கு எதிரில் விஷ்வக்சேனரும், அனந்தனும், கருடரும் உள்ளனர்.

கருவறையைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் தென்கிழக்கு மூலையில் அ/மி வரதராஜரும், வடகிழக்கு மூலையில் அ/மி யோக நரசிம்மரும் எழுந்தருளியுள்ள சந்நிதிகள் உள்ளன. பழமையான வைகானச ஆகமப்படி இங்கு திருவாராதனங்கள் நடைபெறுகின்றன. இந்தியாவில் உள்ள எட்டு சுவயம்வியக்த திருத்தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

மகாவிஷ்ணுவை மலையிலே வசிப்பராகக் கருதும் வேதமரபைத் தழுவியே வேங்கடம், சோளிங்கபுரம், அழகர்மலை, திருமெய்யம் முதலிய மலையிடங்கள் அவன் உகந்த தலங்களாயின. ஆழ்வார்களும் வேங்கடத்தை வேதத்துடன் சேர்த்தே எண்ணுவது, வேதப்பொருள் விஷ்ணு என்பதாற்போலும். "வேதப்பொருளே என் வேங்கடவா" என்பார் பெரியாழ்வாரும், "வேதத்தான் வேங்கடத்தான்" என்பார் பூதத்தாரும், வேதாந்த தேசிகரும். "வேங்கடவெற்பு என விளங்கும் வேதவெற்பு" என்பார். அவர் இப்பெருமாள் எல்லாக் கலியாண குணங்களோடு கூடியவன் ஆயினும், அவைகளைக் குணமாக்கும் தயையைப் புகழ்ந்து "தயாசதகம்" பாடினார். திருமலை பற்றிய சரித்திரக் குறிப்புகள் தனியே அட்டவணை மூன்றில் இணைக்கப்பெற்றுள்ளன.

5.1.29 **ஆழ்வார்களின் பாசுரக் கருத்துகள் :** தொண்டரடிப் பொடியாழ்வார், மதுரகவியார் தவிர ஏனைய பத்து ஆழ்வார்களும் இருநூற்று இரண்டு பாசுரங்களால் இவரை மங்களாசாசனம் செய்து உள்ளனர். பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்த பாசுரக் கருத்துகளின் சுருக்கம் பின்வருமாறு : "வித்தகன் வேங்கடவாணன் (கண்ணன்) நிலவை அழைக்கின்றான் ; அவன் கைத்தலம் நோகாமுன்னர் அம்புலியே ஓடிவா ![139]. "கடியார் பொழிலணி வேங்கடவன்".[140]

"சென்னியோங்கு தண்திருவெங் கடமுடையாய் உலகு
தன்னைவாழ நின்ற நம்பீ ! தாமோதரா ! சதிரா !
என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப்பொறி

யொற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் ; இனியென் திருக்குறிப்பே ?"[141]

**ஸ்ரீஆண்டாள் அருளிச் செய்தவை :** "கண்ணனை இணக்கு" எனக் காமனை வேண்டுகிறார் கோதையார். அதற்காக நோன்பு நோற்கின்றார். "வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே"[142] என வேண்டுகின்றார். தலைவி நிலையில் பாடும் பாசுரம் — குயிலை நோக்கிக் கூறுகின்றாள்.

"சங்கேந்திய விமலன் எனக்கு உருக்காட்டான் ; என் உள்ளம் புகுந்து என்னை வருத்தித் துன்புறுத்துகின்றான் ; சோலையில் செண்பகமலரைக் கோதி இசைபாடும் குயிலே ! என் வேங்கடவன் வரக்கூவாய் !"[143]

மேகவிடு தூதாகத் திருவேங்கடவன்மீது பாடிய பாசுரங்கள் பத்து. அவற்றின் திரண்ட கருத்தைக் காண்போம்.

"அருவி பாயும் வேங்கடவன் என்னைக் கண்ணீர்விடச் செய்து, பெண்ணீர்மையை அழிக்கின்றான் ; இது அவனுக்குப் பெருமையோ ! நான் காமத்தீயுள் புகுந்து இடை இரவில் தென்றல் வருத்த இருக்கின்றேன் ; என் வளை, சிந்தை, உறக்கம் இவற்றை எல்லாம் கொள்ளை கொண்டான் ; கோவிந்தன் குணம் பாடி உயிரைக் காத்திருப்பேன் ; மேகங்களே ! என் மார்பைத் தழுவ வருமாறு சென்று சொல்லுங்கள் ; திருமலையில் பொழியும் மேகங்களே ! என் நலங்கொண்ட நாரணற்கு என் நோயைச் சொல்லுங்கள். மழைக்காலத்தில் பழுத்துவிழும் எருக்கிலைபோல் நலிந்து வருந்துகின்றேன். அவர் நல்உரை தந்தருளமாட்டாரோ ? ஒரு பெண்கொடியை வதைசெய்தான் என்னும் சொல்லை இவ்வுலகினர் மதிக்கமாட்டார்களே.[144]

குலசேகராழ்வார் திருவேங்கடமலைத் தொடர்பு தமக்கு வேண்டிப்பாடும் பாசுரங்களில்—கருத்துகளின் சிறப்பினை நோக்குவோம். திருமலையில், "கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"[145] என்கிறார். உடன் அவரது சிந்தனை சிறகடித்துப் பறக்கிறது. குருகுக்கு இறகுகள் இருப்பதால் அவை பறந்து செல்லக்கூடும் என்று எண்ணுகிறார். அங்ஙனமின்றி அம்மலையிலேயே பிறத்தல், வாழ்தல், இறத்தல் ஆகிய செயல்களையுடைய மீனாய்ப் பிறந்தாலும் போதுமே என்கிறார்.

"தேனார் பூஞ்சோலைத் திருவேங் கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"[146]

என்று தன் அவாவை வெளியிடுகிறார். பெருமானுக்கு அந்தரங்கச் சேவைசெய்யும் தொண்டு புரிய வாய்ப்புக் கிடைக்கப்பெற்றால், தடையின்றி கருவறையை அடைந்து அருகில் நின்று பணிசெய்யலாம் என்று அடுத்து எண்ணுகிறார். ஆயின்

அப்பொழுது பொன் வட்டில்மேல் மனம் சென்று களவாடத்தோன்றும் ; சிறைவாசமும் கிட்டும். ஆகவே, இயங்கு திணைப் பிறப்பு வேண்டாம் ; நிலைத்திணைப்பிறப்பு கிடைத்தாலே போதும் எனச் சிந்திக்கிறார். மலர் சொரியும் மரமாகப் பிறந்து மலர்ப் பணியாற்றக் கருதுகிறார். ஆயின் திருமலைக்கு வரும் செல்வர் யாரேனும் செண்பக மரத்தைப் பிடுங்கிச் செல்லக்கூடுமே என்ற ஐயம் தோன்றுகின்றது. எனவே, ஒன்றுக்கும் உதவாத புல், பூண்டு, செடி, கொடியின் புதராக வேணும் (தம்பகமாக) இருந்தால் யாதொரு துன்பமும் நேரிடாது என நம்புகிறார். ஆயின் அதற்கும் ஓர் ஆபத்து உண்டு என்று எண்ணுகிறார். காட்டுத்துறையினர் இவற்றைக் களைவர் ; எரிப்பர். எனவே, மலையின் ஒரு பகுதியாக இருப்பின் மாறாத ஒரே நிலையில் இருக்கலாமே என்று கருதுகின்றார். இவ்விருப்பத்திலும் இடையூறு உண்டு. திருப்பணிக்குக் கல்லை உடைத்துச் செல்வர். எனவே, பெயர்க்கமுடியாத கானாறாகவேனும் பிறக்கலாமே என்றும் கருதுகின்றார். ஆற்றில் எப்பொழுதும் நீரோட்டம் இராது ; அப்பொழுது திருமலை வாழ்வும் இல்லாமல் போகும். திருமலையப்பனைச் சேவிக்க வரும் அடியார்களின் அடிப்பொடி படும்படி வழியாகக் கிடக்கும் நிலைமை ஏற்பட்டால் நலமாகும் என்று எண்ணுகின்றார். இதிலும் ஒரு குறை-வழிகள் மாறும் தன்மையன. எனவே, எம்பெருமானது திருவருள் நோக்கம் பதியுமாறு அவன் கண் வட்டத்தில் மெய்யடியாரும் பிறரும் வேறுபாடின்றி எல்லாரும் இடைவிடாது நடமாடும்படியான ஓர் அறிவற்ற பொருளாகிவிடில் (அசேதனம்) அவனுடைய திருப்பவளத்தை விடாது காணும் பேறு கிட்டுமே என்று நினைக்கின்றார்.

> "செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
> நெடியானே ! வேங்கடவா ! நின்கோயி லின்வாசல்
> அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
> படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே"[147]

என்று சிறப்பான விருப்பத்தையும் வெளியிடுகின்றார். இதனால் திருமால் திருக்கோயிலின் கருவறையின் வாயிற்படி "குலசேகரன்படி" என்று இவர் பெயரையிட்டு வழங்கும் மரபு இருந்து வருகின்றது.

இச்சிறப்பான விருப்பத்திற்கும் ஒரு குறை ஏற்படலாம் என்று குலசேகரர் எண்ணுகிறார். கருவறை வாயிலைத் தங்கத் தகட்டால் மூட நேர்ந்தால்... ஆகையால் படியாய்க் கிடப்பதும் பாங்கன்று என்று நினைத்து, பின்னர் எப்பிறவியை வேண்டுவது என்று தோன்றாமல்,

"எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே"[148] என்று இறுதியாக வேண்டி நிற்கிறார்.

இப்பெருமாள் திருமொழியைத் தழுவி, முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்,

"மாடாக நிழற்று செழு மரனாகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்தறும் புதலாக வழிப்படுவோர்
ஓடாகப் பெறுவமெனில் உயிர்காணற் கதிபெறலாம்
வீடாகத் திருநெடுமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே"[149]

என்ற பாடலைப்பாடி ஆழ்வாரிடமும், திருமலையிடமும் தமக்குரிய ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறார்.

திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தத்திலும், நான்முகன் திருவந்தாதியிலும் பதினைந்து பாசுரங்களால் இப்பெருமானைப் பாடியருளியுள்ளார்.

நான்முகன் திருவந்தாதியில் தொடர்ச்சியாகப் பத்து பாசுரங்களில் பாடியுள்ளார்.

"சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை"[150]
"மங்குல் தோய் சென்னி வடவேங்கடம்"[151]
"வேங்கடமே-விண்ணோர் தொழுவதும் மெய்ம்மையால்
"வேங்கடமே-மெய்வினை நோய் தீர்ப்பதுவும்"[152]

திருப்பாணாழ்வார் இரு பாசுரங்களில் திருமலையையும் பெருமானையும் குறிப்பிடுகிறார்.

"அமலன் ஆதிபிரான் அடியார்க் கென்னெ யாட்படுத்த விமலன்
விண்ணவர் கோன்விரை யார் பொழில் வேங்கடவன்"[153]
"மந்திபாய் வடவேங்கட மாமலை"[154]

திருமங்கையாழ்வார் அறுபத்திரண்டு பாசுரங்களில் திருமலையையும், பெருமானையும் பாடியருளியுள்ளார். அவற்றின் கருத்துகளை ஒருவாறு தொகுத்துக் காண்போம். பெரிய திருமொழி முதற்பத்து எட்டாம் திருமொழி முதலாக—இரண்டாம்பத்து—முதல் திருமொழி ஈறாகத் தொடர்ந்து நாற்பது பாசுரங்களால் இவர் முதற்கண் மங்களாசாசனம் செய்கின்றார். அவற்றுள் சில முக்கிய கருத்துகளைக் கீழே தொகுத்துக் காண்போம்.

"திருப்பெயர் சொல்பவர் அனைவருடைய பிறவித்துன்பங்களையும் போக்குவதற்காகத் திருமலையிலே வந்து அணியனாய் உறைபவன் ஆனான். நாம் அங்கே போய் வணங்கி மகிழ்வோம் என்று தம் மனத்திற்கு அறிவுறுத்துகின்றார்."

"குருந்த மரத்தை அழித்த கண்ணன் ஆகிய பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் கயல்மீன்கள் களித்து வாழும் சுனைகளையுடைய திருமலையாகும். ஒரு மலையை எடுத்து ஆயரையும் ஆக்களையும் காத்தவன். ஒரு மலையில் நின்று காக்கக் கருதினான் ; நெஞ்சமே ! அவனைச் சென்றடைவாயாக" ! கயேந்திரன் செயல்

தளர்ந்து ஒயும்வரை பார்த்திருந்து காலங்கழிந்து உதவிய குறை தீர அடியார்க்கு முற்பாடாய் உதவுவதற்காக வந்திருக்கும் இடம் திருமலையாகும். அதை அடை நெஞ்சமே ! பொய்யான உறவினரை நம்பித் துன்பப்பட்டேன் ; மெய்யான உறவாகிய உன்னை வணங்கவேண்டும் என்னும் ஆசையால் உன்பால் வந்து தஞ்சம் புகுந்தேன் ; அடிமைகொண்டு அருள்வாய். ("தாய், தந்தை, உடன்பிறந்தவன், இருப்பிடம், பாதுகாப்பு, நண்பன், புகல் என்னும் எல்லாம் நாராயணனே ஆவான்" என்பது சுபாலோபநிடதம்—6.)

"அவன்" வினை வயப்படாதவனாய்த் திருநாட்டிலே அயர்வறும் அமரர்களுக்கு ஓலக்கம் கொடுப்பவனாய் இருப்பவன் ; அத்தகையவன், குழந்தை விழுந்த கிணற்றிலே ஒக்க விழுந்து எடுக்கும் தாயைப்போல, உயிர்கள் நோவுபடும் மண்ணுலகில் வேங்கடமாகிய இவ்விடத்திலே வந்திருக்கிறான் ; இது உயிர்களைக் காத்தற்காகவே ஆகும்.

"குலந்தான் எத்தனையும் பிறந்தேஇறந் தெய்த் தொழிந்தேன்
நலந்தான் ஒன்றுமிலேன் நல்லதோர் அறம் செய்துமிலேன்
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறிஆர்திரு வேங்கடவா !
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனைஆட் கொண்டருளே !
1 : 9 : 4

"நலம் ஒன்றும் இல்லேன்"—என்பதற்கு.

1. அறியாமல் செய்த நன்மையாதல் (அஜ்ஞாத சுக்ருதம்)
2. விழுக்காடாக நேரும் நன்மையாதல் (யாத்ருச்சிக சுக்ருதம்)
3. இடைப்பிறவரலாக அமையும் நன்மையாதல் (பிராசங்கிக சுக்ருதம்) உடையவன் அல்லேன் என்பது பிரதிவாதி பயங்கரம் அண்ணகராசாரியாரின் உரையாகும்.

"அடியேனை ஆட்கொண்டருளவேண்டும்" என இவர் வேண்டியவாறே, இவர் திருவுள்ளத்திலே அவன் வந்து இவர்க்கு இறையன்பு முதலியவற்றைப் பிறப்பித்தான்" என்று முதற்பத்து—பத்தாம் திருமொழியில் ஆறு முதல் ஒன்பது முடிய நான்கு பாசுரங்களால் பாடியருளுகின்றார்.

"மன்னா இம்மனி சப்பிற வியைநீக்கித்
தன்னாக்கித் தன்னின் அருள்செய் யும்தலைவன்
மின்னார் முகில்சேர் திருவேங் கடம்மேய
என்னானை என்னப்பன் என்நெஞ்சில் உளானே" 1 : 10 : 6
(தன்ஆக்கி—தன்னோடு ஒக்கப் பண்ணினான்).

"முழு முதற்பொருளைக் கண்டபின்பு ஞானியானவன் நல்வினை தீவினைகளை விட்டு, உலகின் தொடர்பு அற்றவனாய் முழு முதற்பொருளோடு மேலான ஒப்புமை அடைகிறான்" என்கிறது முண்டக உபநிடதம் (3 : 1 : 3) இதனால் உயிர் இறைவனோடு ஒத்த நிலையினை அடைதல் தெளிவு.

> "வந்தாய் என்மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்
> நந்தாத கொழுஞ்சுடரே ! எங்கள் நம்பீ !
> சிந்தாமணியே ! திருவேங் கடம்மேய
> எந்தாய் ! இனியான் உன்னை என் றும்விடனே" 1 : 10 : 9

திரு வைகுந்தம் விட்டு இவர் இருக்குமிடம் தேடிவந்தான் ; நிலையாக நின்றான் ; திரு வைகுந்தம் நமக்குரிய இடமாய் இருக்க, நாம் இங்கே வந்து சிறைப்பட்டோம் என்னும் இன்னாப்போடு அல்லாமல், இது பெறாப்பேறாய்த் தனக்குப் பண்டு இல்லாத செல்வம் பெற்றதாய்க் கருதிப் புகர் (ஒளி) மிக்கவன் ஆனான். அணையாத ஒளி உடையவனே ! இப்பாழ்ந்தாற்றை (படுகுழி) ஒருபடி நிரப்புகை இவன் ஒன்றை நினைக்கட்டும், நாம் அதனை அவனுக்குக் கொடுப்போம் என்று இருக்கின்றான் ; இனி யான் உன்னை என்றும் விடேன்—எனக்காக நிற்கிற நிலையை நீ விடமாட்டாய் ; அவ்வாறு ஆனபின்பு நான் உனக்கு உரியனாகுமாறு பற்றிய பற்று விடுவேனோ ? அரைநொடியும் அவனை யொழியச் செல்லாமையன்றோ (வாழாமை) பரபக்தியாகும்.

"இறைத்தொண்டு செய்யும் பேறு குறித்துத் திருவடிகளிலே தஞ்சம் புகுந்த அளவில், அத்தொண்டுதான் காலமெல்லாம் கிட்டவேண்டும் என்னும்படி அதில் விழைவு பிறந்தது. இப்படி இறைவன் திறத்து ஒன்றியிருக்கும் நிலையுண்டாகக் காரணம் எது என ஆராய்ந்தார்.

"மனிதர்களின் உலக வாழ்க்கைக்கும் வீடுபேற்றிற்கும் மனமே காரணம் ; புலன் இன்பங்களில் ஈடுபட்ட மனம் உலக வாழ்க்கைக்குக் காரணமாகின்றது. புலன்இன்பங்களில் பற்றற்ற மனம் வீடுபேற்றுக்குக் காரணமாகிறது—(விஷ்ணு புராணம் 6 : 7 : 28) என்பதால், தம் திருவுள்ளத்தைக் குறித்து, "உன்னாலேயே இந்த நன்மைகள் எல்லாம் உண்டாயின" என்று திருவுள்ளத்தோடே கட்டி இனியர் ஆகிறார்" என்பது பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானமாகும் — இரண்டாம் பத்து முதல் திருமொழிக்குத் தோற்றுவாய்.

"அயர்வறும் அமரர்களுடைய நெஞ்சம் இறைத்தொண்டிலே மூண்டு இருப்பதுபோலே நீ அவன் திருவடிகளில் ஊழியம் புரிய உகப்போடே மூண்டனையே ! நம்மை அடிமைகொள்ள, குறப்பெண்களோடு, வண்டுகள் குறிஞ்சி, இந்தளம் என்னும் பண்ணைப் பாடுகின்ற திருமலையில் உள்ள தலைவனுக்கு, நெஞ்சே ! நீ அடிமைத்தொழில் பூண்டாயே, அவ்வகையில் குறையொன்றும் இல்லா

நிறைவினன் ஆன பெருமானது குறையை ஒரளவு நிரப்பினாயே ! "இவர் அடிமை செய்யாவிட்டால் அவனுக்குக் குறையோ ?" என்னில் திருமலையில் வந்து புகுந்து இவரை அடிமை கொள்ளும் முன், விண்ணாட்டையும்-மண்ணாட்டையும் (நித்திய விபூதி-லீலா விபூதி) பெற்றிருப்பதால் வந்த செல்வத்தை ஒன்றாக நினைத்திலன் காணும் அவன். பொருள்மீது கடும் பற்றுக்கொண்டவன் ஒரு காசு விழுந்த இடத்தில் கையெல்லாம் புழுதியாகத் தேடிக்கொண்டிருப்பான் அன்றோ ! அதுபோல் பெருமாள் ஆழ்வாரைத் தேடிக்கொண்டிருந்தான் ! என்பது விரிவுரையாகும்.

பிரிவாற்றாத தலைவியைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறும் பாசுரத்தில், "வெருவாதாள் வாய் 'வெருவி வேங்கடமே" வேங்கடமே ! என்கின்றாளால்" என வரும் அடி இங்கு நோக்கத்தக்கது.

தலைவி பறவைகளை நோக்கி, "மாயனை அழைக்குமாறு கூறல்

"சொல்லாய் பைங்கிளியே !
சுடர் ஆழி வலனுயர்த்த
மல்லார் தோள்வட வேங்கட வன்வர
சொல்லாய் பைங்கிளியே ![156]

பெண்களின் விளையாட்டு வடிவில் பல பாசுரங்களை இவர் அமைப்பார். திருச்சாழல் என்பது அவற்றுள் ஒன்று.

"எம்பெருமானது எளிமையையும் உயர்வையும் இரண்டு பெண்கள் எதிரெதிராகக் கூறுவது "இவ்விளையாட்டாகும். இவ்வகையில் 11-ஆம் பத்து 5-ஆம் திருமொழி முழுதும் இவ்வகையில் அமைந்துள்ளது. இதன் இறுதிப் பாசுரத்தைக் காண்போம்.

"கள்ளத்தால் மாவலியை மூவடிமண் கொண்டளந்தான்
வெள்ளத்தான் வேங்கடத்தான் என்பரால் காணேடீ — எளிமை
வெள்ளத்தான் வேங்கடத்தா னேலும் கலிகன்றி
உள்ளத்தி னுள்ளே உளன்கண்டாய் சாழலே" — உயர்வு 11 : 5 : 10

இவ்விடத்து இளங்கோவடிகளின் சிலம்பில் உள்ள ஆய்ச்சியர் குரவைப் பாடல் ஒப்பு நோக்கத்தக்கது. ஆனால் ஒரு மாற்றம். அடிகள் முதலில் உயர்வைக் கூறி, பின்னர் எளிமையைக் கூறுகிறார்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன் பண்டொருகால் கடல்வயிறு கலக்கினையே — உயர்வு
கலக்கியகை அசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் ! மாயமோ ? மருட்கைத்தே ! — எளிமை[157]

திருமங்கை மன்னர் திருமலை பற்றி முழுயாகப் பெரிய திருமொழியில் நாற்பது பாசுரங்களில் பாடியுள்ளார் என்பதை முன்னர்க் கண்டோம். (1 : 8, 1 : 9, 1 : 10, 2 : 1) இனி அவர் பிற திருத்தலங்களைப் பாடியருளும்போதெல்லாம் திருவேங்கடவனின் நினைவு வருகின்றது. அதுபற்றித் தொகுத்துக் காண்போம். திருநாங்கூர்ச் செம்பொன்செய் கோயிலைப் பாடும்போது,

"மின்திகழ் குடுமி வேங்கடமலை" - எனவும் (4 : 3 : 8)
திருநாங்கூர்த் திருவெள்ளக்குளத்துப்பெருமானைப் பாடும்போது,

"வேடார் திருவேங் கடம்மேய விளக்கே !" எனவும் (4 : 7 : 5)
திருவெள்ளறைப்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது,
"திருவேங்கடப் பொருப்ப !" — எனவும் (5 : 3 : 4)

திருவரங்கத்துப் பெருமானை மங்களாசாசனம் செய்கையில்,
"வெருவாதாள் வாய்வெருளி 'வேங்கடமே'
வேங்கடமே ! என்கின் றாளால்" — எனவும் (5 : 5 : 1)

". . . பிரியாது வந்தெனது மனத்திருந்த வடமலையை" — எனவும் (5 : 6 : 7)
திருநறையூர் நின்ற நம்பியை ஏத்தும்போது,
"தேன்கொண்ட சாரல் திருவேங் கடத்தானை" — எனவும் (6 : 8: 1)
"உம்பர்க்கணியாய் நின்ற வேங்கடத் தரி" — எனவும் (7 : 3 : 10)
திருக்கண்ணமங்கைப் பெருமானைப் போற்றுகையில்,

"வடமாமலை உச்சியை எனவும் (7 : 10 : 3)
திருக்கண்ணபுரத்து அடிகளை வழுத்துகையில்,

"அருவிசோர் வேங்கடம்" — எனவும் (8 : 2 : 3)
திருவல்லவாழ் அடிகளைப் பாடும்போது,

"விண்ணுளார் விண்ணின்மீ தியன்ற வேங்கடத்துளார்" — எனவும் (9 : 7 : 4)
திருமாலிருஞ்சோலை நின்ற ஆடல் பறவையினைப் போற்றும்போது,

"பொழில்வேங்கட வேதியனை" — எனவும் (9 : 9 : 9)
பல திருப்பதிகளை மங்களாசாசனம் செய்கையில்,

"வேங்கடத்துச்சியிற் கண்டுபோய்" — எனவும் (10 : 1 : 2)

திருவேங்கடவனை மறாவாமல் பாடிப்போற்றியுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது. இதனால் திருமலைப்பெருமாள்மீது திருமங்கை மன்னர் கொண்டிருந்த பக்தியின் மேன்மை நன்கு விளங்கும்.

இனி, நம்மாழ்வாரின் பாசுரக் கருத்துகளை ஒருவாறு சுருக்கமாக நோக்குவோம் :

எம்பெருமான், "இப்படிப் பொருந்தினால், நினைவும் சொல்லும் செயலும் ஒரு படிப்பட்டு இராமல், பலவகைப்பட்ட சேதநரோடு தான் கலக்கும் இடத்தில் அவர்கள் போன வழி தனக்கும் வழியாம்படி தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரிமாறுகையாகிய ஆர்ஜவ குணமுடையவனாவான். அத்திருக்கலியாண குணத்தைச் சொல்லும் பதிகத்தில், திருவேங்கடவனின் பெருமையை அருளிச் செய்கிறார்.

"நித்திய சூரிகள் தங்கியுள்ள குளிர்ச்சி பொருந்திய திருமலையில் எழுந்தருளி இருக்கின்ற இறைவன், எக்காலத்தும் மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் கண் ஆனான்" (கண்—பற்றுக்கோடு).

"கண்ணாவான் என்றும், மண்ணோர்விண் ணோர்க்குத்
தண்ணார் வேங்கட, விண்ணோர் வெற்பனே"[158]

"இரட்டைக் குழந்தைகளைப் பெற்ற தாயானவள் இருவர்க்கும் பால் கொடுக்கும் தகுதியாக நடுவே கிடக்குமாறு போன்று, நித்தியசூரிகளுக்கும் சம்சாரிகளுக்கும் ஒக்க முகம் கொடுக்கைக்காகத் திருமலையில் நிற்கின்ற நீர்மையை அருளிச்செய்கிறார்" — என்பது ஈடு விரிவுரையாகும்.

ஆழ்வார் இறைவனைச் சிக்கெனப்பிடிக்கின்றார். "எந்தையே ! இலங்கையை அழித்தவனே ! அமுதே ! உன்னை என்னுள்ளே குழைத்தஎம் மைந்தனே ! தண் திருவேங்கடத்துள் நின்றாய் ! இனி எங்குப் போகின்றதே ! முக்காலங்களிலும் தாய், தந்தை, உயிர் ஆகின்றவனே ! மூவுலகுக்கும் நாதனே ! குளிர்ந்த வேங்கடம் மேவியவனே ! உன்னை நான் அடைந்தேன் ; விடுவேனோ ?"[159]

"தென்னா தெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடம்" (3 : 9 : 1)
'திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே என்தலையே
திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே எனதுயிரே" (10 : 7 : 8)

தலைவன் பொருள்தேடி முடித்துக் கார்காலம் வந்ததும் ஊர் திரும்புகின்றான். தேரை ஓட்டிவரும் பாகனுக்கு உரைக்கின்றான்.

"ஒண்ணுதல் மாமை ஒளிபய வாமை விரைந்து நந்தேர்
நண்ணுதல் வேண்டும் வலவ ! கடாகின்று தேன்நவின்ற
விண்முதல் நாயகன் நீள்முடி வெண்முத்த வாசிகைத் தாய்
மண்முதல் சேர்வுற்ற அருவிசெய் யாநிற்கும் மாமலைக்கே ![160]

இனி முழுமையும் பதினோரு பாசுரங்களில் நம்மாழ்வார் பாடியருளியுள்ள இரு பத்துகளை — அவற்றில் அருளிச்செய்யப் பெற்றுள்ள தத்துவக் கருத்துகளைத் தொகுத்துக் காண்போம் :

"திருவேங்கடமுடையான் திருவடிகளிலே எல்லாத் தேசத்திலும், எல்லாக் காலத்திலும், எல்லா நிலைகளிலும் எல்லா அடிமைகளும் செய்யவேண்டும் என்கிறார்" திருவேங்கடத்து எழில்கொள்சோதி ; வானார் சோதி பகல் விளக்குப் பட்டிருக்கும் ; நீராழிச்சோதி கடல் கொண்டுகிடக்கும் ; இது குன்றத்திட்ட விளக்காய் இருக்கும். இப்பாசுரத்தால் புருஷார்த்தம் கைங்கரியமே என்று அறுதியிடுகின்ற திருமந்திரப் பொருளை உணர்த்துகின்றார்.

"நித்தியசூரிகள் சேனை முதலியாரொடும் வந்து தூவி வணங்குகின்ற பூக்கள் வாசனை வீசுகின்ற திருமலையில் எழுந்தருளியிருக்கும் அண்ணல் என் குலத்திற்கு முதல்வனாய் உள்ளான் ! அவன் நித்தியசூரிகளுக்குத் தலைவனாவான்.

"ஈசன் வானவர்க் கென்பன் என்றாலது
தேச மோதிரு வேங்கடத் தானுக்கு ?
நீச னேன்நிறை வொன்றுமி லேனென்கண்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே"

"தாழ்ந்தவனாய் நற்குணங்கள் சிறிதுமில்லாதவனான யான், பெருமானை நோக்கி, நித்தியசூரிகளுக்குத் தலைவன் என்பேன் ; அப்படிச் சொன்னால், அது அப்பெருமானுக்குப் புகழாகுமோ ? ஆகாது".

1. வானவர்க்கு ஈசன் என் கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதி—நித்தியசூரிகளுக்கு ஈசனாயிருந்தான் ; என் பக்கலிலே பற்றை வைத்தான்.

2. "முதன்முதலில் திருமணம் செய்துகொள்ளப் பெற்றவள் என்பதற்காகவும், முதல் மனைவிக்கு ஜீவனம் கொடுக்கவில்லை என்று உலகோர் கூறும் பழிச் சொற்களுக்காகவும் (அவள்) காவி ஆடை உடுத்திப் பிச்சையெடுக்கச் சென்றால் தனக்கு மானக்கேடு உண்டாகுமே என்ற எண்ணத்தாலும் முதல் மனைவிக்கு உயிர்வாழச் சிறிது பொருள் கொடுப்பாரைப் போன்று நித்தியசூரிகள் பக்கம் ; நெஞ்சும் உடம்பும் தந்தது எனக்கு என்கிறார். பாசம் வைத்த — என்றதால் நெஞ்சு கொடுத்தமை சொல்லிற்று.

3. அவர்கள் சத்தை உண்டாகைக்காக அவர்களோடே கலந்தான் ; தன் சந்தைப் பெறுகைக்காக என்னோடே வந்து கலந்தான் — என்பது இங்குக் குறிக்கப்பெறும் ஈடு விளக்கவுரையாகும்.

''ஆதிமூர்த்தி'' என்று ஒரு பாசுரத்தில்[161] எம்பெருமானை விளிக்கிறார். பிரம்மம் அறியத்தக்கது. அறியத்தக்க அப்பிரம்மத்திற்கு இலக்கணம் யாது ? என்ன, ''எதனிடமிருந்து இந்தப் பூதங்கள் உண்டாகின்றனவோ, எதனால் உண்டானவை பிழைத்திருக்கின்றனவோ, இவையெல்லாம் அழிந்து பிரளய காலத்தில் எதனை, முற்றிலும் சேர்கின்றனவோ அதனை அறிவாயாக ; அதுதான் பரப்பிரம்மம்'' — (தைத்திரீய பிருகு - 1) என்னும் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

ஆறாம் பாசுரத்தில் ''வேங்கடம்'' என்ற திருநாமத்திற்கு ''பாவங்கள் அழியும்'' என்று பொருள் அருளுகின்றார். மேலும், வேங்கடத்துறைவார்க்கு ''நம'' என்றபோதே வினைகள் உருமாயும் என்கிறார்.

''குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே''

''திருமலையப்பன் சென்று தங்கியிருக்கின்ற திருவேங்கடமலை என்னும் ஒன்றையுமே வணங்க நம்முடைய வினைகள் நீங்கும்''. உள்ளே எழுந்தருளியிருக்கின்றவன் தானும் வேண்டா, திருமலையாழ்வார் தாமே அமையும் என்பார் ''ஒன்றுமே'' என்கின்றார்.

தத்துவங்கள் மூன்று ; அவை சித்து ; அசித்து ; ஈசுவரன் என்பன.

| | | |
|---|---|---|
| சித்து | — | உயிர்கள் (அ) சீவான்மாக்களின் தொகுதியாகும். |
| அசித்து | — | மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்பு ; உலகில் உள்ள ஏனைய பொருள்கள் இவற்றிற்குக் காரணமான பிரகிருதியாகும். (பிரகிருதி-மூலப்பகுதி). |
| ஈசுவரன் | — | இறைவன், (இவை மூன்றும் தத்துவத்திரயம் எனப்பெறும்) |
| அசித்து | — | அறிவில்லாத பொருள் (அசேதனம்) அசித்து ஈசுவரனுக்கு உடலாகத் திகழ்கின்றது. இதனைச் சரீர—சரீரி பாவனை என்பர். (உடல்-உயிர் உறவு). அசித்தும் எம்பெருமானுடைய படைப்பாகி அவனுடைய திருமேனியாகத் திகழ்வதால் அதுவும் வழிபாட்டிற்குரியது. |

"சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஒயுமே" - என்னும் பாசுர வரிகள்

இக்கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்னவுடனேயே எம்பெருமான் மனமகிழ்ந்து நமக்குத் திருவருள் பாலிக்கும் பெருமை பேசப்பெறுகின்றது.

இம்மூன்றாம் பத்து ஒப்பில்லாதது என ஈற்றுப் பாசுரத்தில் குறிக்கிறார். "ஆத்மாவினுடைய சொரூபத்திற்குத் தக்கதான கைங்கரியத்தை விரும்பிய பத்து ஆகையால் வந்த ஒப்பு இல்லாமை என்பது ஈடு விரிவுரையாகும்.

திருவாய்மொழி ஆறாம் பத்து பத்தாம் திருமொழியில் பதினோரு பாசுரங்களின் திரண்ட கருத்தை இங்கு நோக்குவோம். ஒன்பது பாசுரங்களால் சரண்யன்படி சொல்லி, பத்தாம் பாசுரத்தில் சரணம் புகுகின்றார்.

1. வாத்சல்யம்
2. சுவாமித்துவம்
3. சௌசீல்யம் (உயர்ந்தவர் தாழ்ந்தவரோடு புரையறக் கலத்தல்)
4. சௌலப்பியம் - (எளியனாயிருக்கும் இருப்பு ("இதற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்" - என்று முமுட்சுப்படி பேசும்")[162]

இந்நான்கு திருக்குணங்களும் சேதநன் எம்பெருமானைப் பற்றுவதற்குத் துணை செய்யக்கூடியவை.

"உலகம் உண்ட பெருவாயா ! உலப்பில் கீர்த்தி யம்மானே !
நிலவும் சுடர்சூ ழொளிமூர்த்தி ! நெடியாய் அடியே னாருயிரே !
திலதம் உலகுக் காய்நின்ற திருவேங் கடத்தெம் பெருமானே !
குலதொல் லடியேன் உனபாதம் கூடுமாறு கூறாயே" 6 : 10 : 1

பிரளயத்தில் உலகினைப் புசித்தவனே ! புகழுடையவனே ! சுடர்கள் சூழ்ந்த ஒளிமூர்த்தியே ! அடியேன் உயிரே ! திருமலையானே ! தொன்று தொட்டுவரும் தொண்டக் குலத்தில் பிறந்த அடியேன் நின்திருவடிசேர அருளுக. நித்திய சூரிகளுக்குத் தலைவனே ! நின் திருவடிசேர அருளுக. வினையேன் நின் திருவடிகளைப் பொருந்தக் கற்பிக்கவேண்டும்" மண்ணளந்த திருவடிகளைக் காண்பது என்று ? என்று தேவர்கள் முக்கரணங்களாலும் வழிபாடு செய்ய எழுந்தருளியுள்ள பெருமானே ! அடியேன் உண்மையாகவே உன் திருவடிகளை அடைவது என்று ? கருடக்கொடியனே ! தூறு மண்டிக்கிடக்கும் தீவினைகளைத் தீர்க்கின்ற மருந்தே ! ஒரு சாதன அனுட்டானமும் செய்யாதிருந்தும் உன் திருவடிகளைக் காணக் கணநேரமும் ஆற்றமாட்டேன். தேவர்கள் திருமலையில் நின்

திருவடிகளைக் காணச் சாதனம் ஒன்றும் செய்யாமலே, "ஆற்றாதவர்கள் நாங்கள்" என்று வழிபாடு செய்கின்றனர். எல்லாரையும் மயக்கிக் கண்ணன் வந்ததுபோல, அடியேனிடமும் வரவேண்டும்.

"வந்தாய் போலே வாராதாய் ! வாரா தாய்போல் வருவானே !
செந்தா மரைக்கட் செங்கனிவாய் நால்தோ ளமுதே ! எனதுயிரே !
சிந்தா மணிகள் பகரல்லைப் பகல்செய் திருவேங் கடத்தானே !
அந்தோ ! அடியேன் உனபாதம் அகல கில்லேன் இறையுமே ! 6 : 10 : 9

"வந்தவன் போல் வராமலும், வராதவன் போல் வந்தவனே ! அமுதமே ! உயிரே ! திருமலை எம்பெருமானே ! ஐயோ, அடியேன் உன் திருவடிகளைச் சிறிது பொழுதும் நீங்கமாட்டேன் !

"வாராதாய் போல் வருவானே" — ஒருநாளும் கிட்டமாட்டோம் என்று இருக்கையில் கடுகக் கைப்புகுந்து கொடுநிற்கும் ; அடியார்கட்கு "இவன் கிட்ட அரியன்" என்று இருக்குமாறு செய்து, உட்புகுந்து இருக்கும்படியைச் சொல்லியது. இவ்விடத்து கம்பராமாயணம், ஆரணியகாண்டம், விராதன் வதைப்படலப்பாடல் ஒன்று ஒப்புநோக்கத்தக்கது. ஆழ்வாரின் பாடலடியை அப்படியே கம்பர் அமைத்து உள்ளார்.

"தாய் தன்னை அறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயு மறியும் உலகின்தாய் ஆகினைய
நீயறிதி யெப்பொருளும் அவையுன்னை நிலையறியா
மாயையிது என்கொலோ வாராதே வரவல்லாய்"[163]

1. "இந்தப் பிரகிருதியுள் சம்பந்தப்படாமலேயே இதனுள் புகுந்து நடக்கவல்லாய்" எனவும்,

2. "ஊனக் கண்ணுக்கு வந்து தோன்றாமலே ஞானக்கண்ணுக்கு வந்து தோன்ற வல்லாய்" எனவும்,

3. "பரமபதத்தினின்றும் நீங்காமலிருந்தே இங்கே திருவவதரிக்க வல்லவன்" எனவும்,

4. " கர்மவசியமாய்ப் பிறக்கும் பிறவிபோலன்றி, அருள்பற்றி உளதாகின்ற இச்சா மாத்திரத்தில் அவதரிக்க வல்லவனே" எனவும் பொருள் கொள்ளலாம்.[164]

பத்தாம் பாசுரத்தை இனிக் காண்போம். அதன் விரிந்த பொருள்களில் ஆழங்கால் படுவோம்.

"அகல கில்லேன் இறையும்" என்றலர்மேல்
மங்கை யுறை மார்பா !

நிகரில் புகழாய் ! உலகமூன் றுடையாய் !
என்னை ஆள்வானே !

நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்
திருவேங் கடத்தானே !

புகலொன் றில்லா அடியேன்உன் அடிக்கீ-
-ழமர்ந்து புகுந்தேனே![165]

"இறையும் அகலாது பிராட்டியார் வாசம் செய்யும் திருமார்புடையவனே! ஒப்பில்லாத புகழ், மூவுலகு, —இவற்றை உடையவனே. என்னை ஆள்பவனே ! நித்தியசூரிகளும் முனிவர்களும் விரும்பும் திருமலையில் எழுந்தருளியிருப்பவனே ! வேறுகதி ஒன்றும் இல்லாத அடியேன் உனது திருவடியிலே பொருந்தி அடைந்தேன்" என்கிறார்.

மேல் ஒன்பது பாசுரங்களிலும் சர்வேசுவரனுடைய சொரூபத்தைச் சொன்னார். இதில் தம்முடைய சொரூபம் சொல்லிச் சரண் புகுகின்றார். இங்குப் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக் கொண்டு சரண்புகுகின்றார்.

1. அலர் மேல் மங்கை—என்றால் ஸ்ரீ என்ற சொல்லின் பொருளும்,

2. அகலகில்லேன்—என்றதால் மத்—என்ற சொற்பொருளும்,

3. உறைமார்பா—என்றதால் நித்தியயோகமும்,

4. நிகரில் புகழாய், உலகம் மூன்றுடையாய் என்னை ஆள்வானே, நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே என்றதால் நாராயண—என்ற சொல்லின் பொருளும்,

5. புகல் ஒன்றில்லா அடியேன் என்றதால்—உத்தமனால் போதரும் அதிகாரியும்,

6. உன்னடிக்கீழ் என்றதால்—சரணௌ என்ற சொல்லின் பொருளும்,

7. அமர்ந்துபுகுந்தேனே என்றதால்—சரணம் பிரபத்யே என்ற சொல்லின் பொருளும் கூறப்பெற்றுள்ளன.

சரணம்—என்ற சொற்பொருளைத் தெரிவிக்கும் பதம் இத் திருப்பாசுரத்தில் இல்லையே எனின், புகுந்தேன் —என்றதால் இச்சொல் பெறப்படுகிறது.

நிகரில் புகழாய்—"என்னடியார் அது செய்யார்" என்னும் குணாதிக்கியம் உடையவர். உலகம் மூன்றுடையாய்—தான் குணங்கள் இல்லாதவனேயாயினும், விட ஒண்ணாத சம்பந்தம் சொல்கிறது.

என்னை ஆள்வானே—மோட்சத்தளவும் செல்ல நடத்திக்கொடுபோந்து, நடுவில் உள்ள விருப்பத்தைக் கொடுப்பதால் ஆள்பவன்.

நிகரில் . . . திருவேங்கடத்தானே—சௌலப்பியம்.

புகல் ஒன்றில்லா அடியேன்—வேறுபுகல் இன்மை (ஆகிஞ்சன்யமும் சொரூபமும்)

சரணாகதிக்கு உறுப்புகள்

உன்னடிக்கீழ்—சரணென என்ற பதப்பொருள்

அமர்ந்து—சரணாகதியில் உபாயபுத்தி இன்றிக்கே இருக்கை.

புகுந்தேனே—

இவையெல்லாம் துவயத்தால் – பொருளாற்றலால் முன்பாகத்தில் முடிகிற பதத்தோடு சேரக்கடவனவாம். பின்வாக்கியப் பொருளும் குறிப்பாக உள்ளது. இருவருமான சேர்த்தியே உபேயம் என்பது கருத்து.

1. நிகரில் புகழாய் — நாராயண சப்தப்பொருள் (நாரணாம் அயநம்-நாரங்களுக்கு அயனமாய் இருப்பவன். நரன் நாரம் (ஜீவன் களின் கூட்டம்) அயநம்—ஆதாரம். நார அயநம் யஸ்ய—நாரங்களை அயனமாக உடையவன். சேதன, அசேதனங்களுக்கு இருப்பிட மானவன். அவற்றைத் தனக்கு—இருப்பிடமாகக் கொண்டவன்). உலகிற்குக் காரணமாய் இருத்தல். இவன் குற்றங்களோடு கூடியவன். அவற்றைப் பொறுக்க, அவற்றைப் போக்கிக்கொள்ளத்தக்க வாத்சல்ய குணம் உடையவன்.

"எல்லையில்லாத காருண்யம், சௌசீல்யம், வாத்சல்யம் முதலிய குணங்களுக்கு இருப்பிட மானவனே"—

"அபார காருண்ய ஸௌஸீல்ய வாத்ஸல்ய"—உடையவர் சூத்த்தில் அருளியது.

| | | | |
|---|---|---|---|
| 2. | உலகம் மூன்றுடையாய் | — | வாத்சல்யத்திற்கு அடிப்படையான சுவாமித்வம், |
| 3. | என்னை ஆள்வானே | — | தன்னுடைய மேன்மையையும், இவருடைய சிறுமையையும் பாராமல் ஒருநீராகக் கலந்தான் ஆகையால் சௌசீல்யம். |
| 4 | நிகரில் அமரர் . . . | | திருவேங்கடத்தானே—சௌலப்பியம் |
| | உன் அடிக்கீழ் . . . | | திருவடியே எளிதில் பற்றக்கூடியது. முதன்முதலில் "துயரறு சுடரடி தொழுது எழு"—என்று திரு வுள்ளத்தைக் குறித்து அருள்செய்து, தாம் பற்றுகிற இடத்தில், (இந்த ஆறாம் பத்தில் மொத்தம் இருபத்தாறு இடங்களில் திருவடி குறிக்கப் பெறுகிறது.) |

1. உனபாதம் கூடுமாறு கூறாய் எனவும்,
2. உன்னடி சேர் வண்ணம் அருளாய்—எனவும்,
3. உன்னடி சேர அடியேற்கு ஆஆ என்னாயே—எனவும்,
4. பூவார் கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராய்—எனவும்,
5. உனபாதம் சேர்வது அடியேன் எந்நாள்—எனவும்,
6. எந்நாள் உன்னடிகள் அடியேன் மேவுவதே—எனவும்,
7. நொடியார் பொழுதும் உனபாதம் அகலகில்லேன் இறையும்—எனவும்,
8. அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையும்—எனவும்,
9. உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்—எனவும்,

10. *அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின், எனவும் இவர் அடிவிடாமல் அநுசந்திக்கிறார்.*

*அமர்ந்து—அவன் திருவடிகளும் தம் தலையும்-கொக்கு வாயும் படுகண்ணியும் போலே இடைவெளி இல்லாமல் பொருந்தியபடி.*

*புகுந்தேன்—பிரபத்யே; பற்றுகிறேன்.*

*இனி, பலச்சுருதி சொல்லும்பாசுரத்துடன் நம்மாழ்வார் திருவேங்கடவனைப் பற்றிப் பாடியருளிய பாடல்களின் கருத்துகளை இந்த அளவுடன் முடிக்கலாம்.*

*"அடிக்கீ ழமர்ந்து புகுந்தடியீர்! வாழ்மின் ! என்றென்*
*றருள்கொடுக்கும்*
*படிக்கே ழில்லாப் பெருமானைப் பழனக் குருகூர்ச் சடகோபன்*
*முடிப்பான் சொன்ன ஆயிரத்துள் திருவேங் கடத்துக்*
*கிவைபத்தும்*
*பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே"*

*இவர் செய்த சரணாகதியே நமக்கும் எல்லாம் ; தனித்து*
*வேண்டா;*
*நற்கன்றுக்கு இரங்கினது, தோற்கன்றுக்கு இரங்குமாப்*
*போலே ;*
*"ஆழ்வார் புகலற்றுப் புகுந்து பாடிய "அகலகில்லேன்" என்ற*
*பாடலைச் சொல்லிப் பலனைப் பெறலாம்"என்று நம்பிள்ளை*
*மொழிவார். இக்கருத்தே சம்பிரதாயமாக உருவாகி, பிரபத்தி*
*நெறியின்[169] இறுதி நிலையாக ஏற்கப்பட்டது.*

5.1.30 **திருவேளுக்கை :** [166] *இத் திருத்தலம் காஞ்சிபுரம் விளக்கொளிப்பெருமாள் சந்நிதிக்கு அருகில் உள்ளது. சிறிய சந்நிதி. அண்மையில் ஆலயத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழா செய்துள்ளனர். மூலவர் ஆள் அரி என்ற திருநாமத்துடன் யோக நரசிம்மராக எழுந்தருளியுள்ளார். உற்சவர் அழகிய திருமேனியுடன் எழுந்தருளி உள்ளார். தனிக்கோயில் நாச்சியார் திருநாமம் அமிருதவல்லி என்பது. வேள்—என்ற சொல்லுக்கு ஆசை என்பது பொருள். நரசிம்மர் ஆசையுடன் வசிக்கும் இடமாதல் பற்றி, வேளிருக்கை என வழங்கப்பெற்று, வேளுக்கை என மருவிவிட்டது. இங்குச் சக்கரத்தாழ்வாருக்குத் தனிச்சந்நிதி உள்ளது.*

*புராணத்தின்படி, பிருகு முனிவர்க்கு நின்ற திருக்கோலத்துடன், கிழக்கே திருமுக மண்டலமாய், கனக விமானத்தினடியில் முகுந்த நாயகனாகக் காட்சி கொடுத்தார் என்று தெரிகிறது. ஆனால், தற்போதுள்ள சந்நிதியில் மேற்கே திருமுக மண்டலமாய், வீற்றிருந்த திருக்கோலத்தில் நரசிம்மராகச் சேவை சாதிக்கிறார்.*

இவ் ஆய்வாளன் களஆய்வு செய்தபோது கிடைத்த தகவல்களை இங்குக் கூறுவது பொருந்தும்.

திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பாக—நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைப் பூதூர் வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பித்து வெளியிட்டு உள்ளார். முதல் பதிப்பு 1973-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் காஞ்சியில் உள்ள திருத்தலங்களைச் சேவித்து, அந்நூலின் பின்இணைப்பில், திவ்விய தேசப்பிரபாவத்தை, அவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவ்வகையில் அவர் எழுதியுள்ள குறிப்பு பின்வருமாறு.[167]

"இத்தல எம்பெருமான் இப்போது பூசை இன்றி ஓர் ஏரியின் மத்தியில் ஜலவாசம் செய்து மிகவும் வருந்தத்தக்கது."

காஞ்சியிலிருந்து உத்தரமேரூர் செல்லும் சாலை வழியாகச் சுமார் 1 கி. மீ. தொலைவு சென்றால், ஒரிரவு இருக்கை—என்னும் ஒரிக்கை ஊருக்கு முன்னுள்ள ஓரிடத்தை அடையலாம். சாலையிலிருந்து மேற்குப் பக்கத்தில் சற்றுத்தொலைவில் ஒரு சிறிய சந்நிதி உள்ளது. அங்கு நான்கு திருக்கரங்களுடன் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.[168] இவரையே பூதூர் சுவாமிகள் ஏரியின் நடுவில் கண்டிருக்கவேண்டும். அதன்பின் சற்று மேட்டுப் பகுதிக்குக் கொணர்ந்து ஒரு சிறிய (பம்ப்செட் ஷெட், அளவுள்ள) சந்நிதி கட்டி எழுந்தருளச் செய்துள்ளனர். புராணக் கருத்தின்படி நின்ற திருக்கோலம்.

பழங்காலத்தில் சுமார் 200, 300 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விடத்திலிருந்த சந்நிதி, வெள்ளத்தாலோ வேறு காரணத்தாலோ பாழாக, அங்கிருந்த நரசிம்மர், தாயார், கருடாழ்வார் ஆகியோரைப்பபாதுகாப்பாக எடுத்துச்சென்று, தற்சமயம் விளக்கொளிப்பெருமாள் சந்நிதியருகில் உள்ள இடத்தில் புதிய ஆலயம் அமைத்து எழுந்தருளச் செய்திருக்கவேண்டும். அப்படியும் நின்ற திருக்கோலப்பெருமாள் பூமியில் மறைந்தோ, நீரில் அமிழ்ந்தோ இருந்து, பின்னர் வெளிப்பட்டிருக்கவேண்டும. அவரை மட்டும் தற்சமயம் உள்ள சிறிய சந்நிதியில் எழுந்தருளச் செய்திருக்கவேண்டும். புதிய ஆலயத்தில் பூசை செய்யும் வயது முதிர்ந்த பட்டரைக் கேட்டபோது, "மிகவும் புராதனமான ஆலயம் அந்த இடத்தில் இருந்திருக்கவேண்டும்", என்று பதில் கூறினார். பேயாழ்வார் பாசுர அமைப்பைக் கூர்ந்து நோக்கினால்,

"அன்றிவ் வுலகம் அளந்த அசைவே கொல்
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய் அன்று
கிடந்தானைக் கேடில் சீரானை முன்கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே காண்"[169]

பெருமாள் இங்கு நின்ற திருக்கோலத்தில் காட்சி தருவதை அறியலாம். ஆயின், திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடல் (அடி 127) அடி,

'மன்னு மதிட்கச்சி வேளுக்கை ஆளரியை'

என்று குறிப்பிடுவதால், இங்கு நரசிம்மர் கோயில் கொண்டிருப்பதை அறியலாம். பேயாழ்வார் நின்ற திருக்கோலப் பெருமானைப் பாடியருள, திருமங்கையாழ்வார் நரசிம்மரைப் பாடியருளுகின்றார். புராதனமான ஆலயம் இருந்த இடம் 'வேளுக்கைத் தோட்டம்' என்று அழைக்கப்பெறுகின்றது. பேயாழ்வார் மேலும் இரு பாசுரங்களாலும் இவரை - (மூன்றாம் திருவந்தாதி 26, 62-) மங்களாசாசனம் செய்துள்ளார்.

இதுகாறும் தொண்டைநாட்டுத் திருத்தலங்கள் இருபத்திரண்டுடன், திருமலை ஒன்றையும் சேர்த்து ஆழ்வார்கள் மங்களாசாசனப் பாசுரக் கருத்துகளையும், வரலாற்றுச் செய்திகளையும், ஆலய அமைப்பு, சிற்ப அமைப்பு ஆகியவற்றுடன் தொகுத்து அறியப்பட்டது. இனி நடுநாட்டுத் திருப்பதிகளாகிய திருவயிந்திரபுரம், திருக்கோவலூர் ஆகிய இரண்டையும் தொண்டைநாட்டுடன் சேர்த்து, நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை, நூற்றெட்டுத் திருப்பதிப் பெருமாள் கோவை, நாலாயிரப் பாசுரப்படி ஆகியவற்றில் கூறப்பெற்றுள்ளது. திருக்கோவலூரில் முதலாழ்வார்கள் மூவரும் ஒன்றாகச் சேர்ந்து திவ்வியப் பிரபந்தம் அருளிச்செய்தனர். அவ்வகையில் தொண்டைநாட்டைச் சார்ந்துள்ள அத்திருத்தலத்தைப் பற்றியும், திருவயிந்திர புரத்தைப் பற்றியும் சில செய்திகளை இங்கு ஒருங்கு சேர்த்துக் காண்பது பொருத்தமாகும்.

5.1.31 **திருக்கோவலூர்**[170] : பெருமாள்கோயில் இவ்வூரின் மேலைப்புறத்தில் அமைந்துள்ளது. மூலவர் திரிவிக்கிரமன் ; வலத்திருவடியை உயரே தூக்கியநிலை ; நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். உற்சவர் ஆயனார், கோவலன் (கோபாலன்) தாயார் : பூங்கோவல் நாச்சியார். மூலவர் வலத்திருக்கையில் சங்குமும், இடக்கையில் சக்கரமுமாக வலத்திருவடியால் வையமளந்து நிற்கிறார்.

திருமங்கையாழ்வார் இப்பெருமானை,

'மகிள்கோவல் இடைகழி ஆயனை'[171]
'மதிள்கோவல் இடைகழி மைந்தனை'[172]
'கோவலூர் மன்னும் இடைகழி யெம் மாயவனை'[173]

என்று வழங்குகின்றார். இது முற்பட்ட சோழர்கள் காலக் கோயிலெனினும் இதன் விமானம் பரகேசரி இரண்டாம் இராசேந்திர சோழனுடைய உள்ளூர்த் தலைவனான மிலாடு நரசிங்கவர்மனால் செங்கல்லிலிருந்து கருங்கல்லாக மாற்றி அமைக்கப்பட்டதாக அறிகிறோம்.[174] பதினொரு நிலையுள்ள கோபுரம்.

இரண்டாயிரம் ஊர்களைக்கொண்ட மலையமான் நாடு என்ற மலாடு சங்ககாலம் தொட்டு ஆண்டுவந்த மலையமான் என்ற குறுநில மன்னர்களின் தலைநகராக இவ்வூர் புகழ் பெற்றிருந்தது.

ஊரின் வடக்காகத் தென்பெண்ணையாறு செல்கிறது. இவ்வூர் பஞ்சகிருஷ்ணாரண்ய தலங்களுள் ஒன்று என்பது பெரியோர் கொள்கை. அவை : திருக்கண்ணபுரம் திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, கண்ணன் கவித்தலம், திருக்கோவலூர் என்பவையாகும். ஆழ்வார்கள் கோவல், கோவல்நகர், பூங்கோவல் நகர், திருக்கோவலூர் எனப் பலபெயர்களால் பேசியருள்வர். வேதாந்த தேசிகர் 'கோபபுரம்' என்கிறார்.

திரிவிக்கிரம வடிவில் மிருகண்டு முனிவர்க்குக் காட்சியளித்த திருத்தலம். இடத்திருவடியைப் பூமியில் ஊன்றி வலத்திருவடியை உயரத் தூக்கிய வடிவில் அவருக்குச் சேவை சாதித்தார். முதலாழ்வார்கள் மெய்விளக்கும், மொழிவிளக்கும், ஞானவிளக்கும் ஏற்றி மங்களாசாசனம் செய்தனர்.

ஜனநாத வளநாடு என்றும் திருமுனைப்பாடி நாடு என்றும், அந்த நாட்டையும், 'குறுக்கைக் கூற்றம்' என்று உள்நாட்டையும், திருக்கோவலூர் மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம் என்று ஊரையும். திருவிடை ஆழ்வார் என்று பெருமானையும் கல்வெட்டுகள் கூறும். இனி ஆழ்வார்கள் இத்திருத்தலத்தைப் பாடியருளியுள்ள பாடல்களின் கருத்துகளைத் தொகுத்து நோக்குவோம்.

'வேங்கடத்தில் நின்றான் ; விண்ணகரில் இருந்தான் ; வெஃகாவில் கிடந்தான் ; பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரில் நடந்தான் என்று கூறினால் துன்பம் நீங்கும் என்கிறார் பொய்கையாழ்வார்.[175] அவருடைய மற்றொரு பாசுரத்தை ஏற்கெனவே, மூன்றாம் இயலில் கண்டோம்.[176] பூதத்தாழ்வார்,

. . . .'தமருள்ளும் மாமல்லை கோவல்'[177] என்று கூறுகிறார்.

திருமங்கையாழ்வார் இத் திருத்தலத்தைப் பெரிதும் உகந்து மங்களாசாசனம் செய்துள்ளார். பெரிய திருமொழி இரண்டாம் பத்து, பத்தாம் திருமொழி முழுவதும் இப்பெருமானைப் பற்றிப் பாடியருளியுள்ளார். அக்கருத்துகளை ஒருவாறு சுருக்கிக் காண்போம் :

'அனைத்தையும் தம் திருவயிற்றில் அடக்கி, ஆலிலைப் பாலகனாய்த் திருக்கண் வளரும் முழுமுதற்கடவுளை, பெண்ணையாற்றுத் தென்கரையில் தூய மறையோர் சோமவேள்விகளைச் செய்ய, அதனால் நெற்பயிர்கள் வயல்களில் செழித்துத் தோன்றுகின்ற திருக்கோவலூரில் கண்டேன் !

'கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபம்கொண் டமரர்தொழப் பணம்கொள் பாம்பில்
சந்தணிமென் முலைமலராள் தரணி மங்கை
தாம் இருவர் அடிவருடும் தன்மை யானை
வந்தனைசெய் திசையேழா றங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனைசெய் திருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே' (2 : 10 : 2).

'ஏழிசையாலும், மறைகளை அறியத் துணைபுரியும் ஆறு கருவிகளாலும், ஐம்பெரும் வேள்விகளாலும், முத்தீயினாலும் வந்தனை செய்து (பரம்பொருளைத் தன் உயிராகவே, உள்ளுறை உயிராகவே இடையறாது நினைக்கவேண்டும் ; அவ்வாறே எண்ணுகின்றனர்; வேதத் தொடர்களும் இப்படியே தெரிவிக்கின்றன - பிரம்மசூத்திரம் 4 : 1 : 3) அவனைப் படிகொளியாகவும், தங்களைப் படியாகவும் காலங்கள்தோறும் ஒருபடிப்பட எண்ணிச் சொல்லும் அந்த இறைவழிபாடு ஆகிய திருமாறாமல் செல்லும் திருக்கோவலூரில் கண்டேன். இப்பாடலில் எண்ணலங்காரம் அமைந்திருப்பது கண்டு மகிழத்தக்கது.

5.1.32 **இயற்கை வளம் :** வயலும், பொழில்களும் அமைந்த இத்திருத்தலம் ஒரு பொற்கொல்லனின் களரி போல் காட்சியளிக்கிறது.

| | | |
|---|---|---|
| நீரிலிருந்து வெளிப்பட்ட கருநெய் தற்பூ | — | கரியாகவும், |
| புன்னை மரங்களின் மொட்டு | — | முத்துகளாகவும் |
| புன்னை மலர்கள் மலர்ந்தநிலையில் | — | பொன்னாகவும் |
| தடாகங்களில் உள்ள தாமரைகள் | — | தீப்பிழம்பு போலவும் |

தோற்றமளிக்கின்றன.

'எழுந்தமலர்க் கருநீலம் இருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்டச்
செழுந்தடநீர்க் கமலம்தீ விகைபோல் காட்டும்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ! (2 : 10 : 3)

'கோங்கம்பூக்களும், சுரபுன்னைகளும், குரவ மரங்களும் மிக்குள்ள சோலையிலே திரண்ட வண்டுகள் மது உண்டு களித்தனவாய்ப் பாடும் பாட்டைக் கேட்டு இனிய கரும்பானது ஒரு கணு மேலெழுந்து நிற்கும் ! ஈண்டு திருக்கோவலூர் எம்பெருமானையே கரும்பாகக் குறிப்பிட்டதாகவும் கொள்ளலாம். வண்டுகள் வெறும் இன்னொலியை எழுப்பாமல், முதலாழ்வார்களின் பாடல்களையே பாடியதாகவும் கொள்ளலாம். அமுதூறும் அப்பாடல்களின் இன்பப்பெருக்கில்

திளைக்கும் 'திருக்கோவலூர்த் தீங்கரும்பு' (பெருமாள்) கண் வளருவதாகவும் கொள்ளலாம்.

முதலாழ்வார்கள் மூவரையும் கரும்பினைப் பிழியும் மூன்று ஆலை உருளைகளாகவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானை நெருக்குண்ட இடமாகிய திருக்கோவலூர் அருகில் விளையும் கரும்பாகவும், அப்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும், தேசிகர் குறிப்பிட்டுள்ளமை[178] கண்டு நினைவுகூர்ந்து மகிழத்தக்கது. இத்தகு சோலைகள் சூழ்ந்த திருப்பதியில் தென்றல் வீசி அச்சூழலை மேலும் இன்பமாக்குகிறது. மறை ஓதுவாரின் இளைப்பு மாறும்படி குளிர்ச்சியூட்டிற்று.

'சிறையணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும்
திருக்கோவலூர்'. . . . . .[179]

கருவறைக்கு வெளியே வலப்புறத்தில் உள்ள முதல் சுற்றில் கொற்றவை நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். அவளுடைய ஊர்தி மானாகும். எட்டுத் தோள்களை உடையவள் ; அவளே அவ்வூருக்குக் காவலாய் இருப்பவள் ; கண்ணன் பிறந்த அன்று காட்டிக்கொடுத்துப் போனோம் என்னும் அவ்வருத்தம் தீர அவள் கருத்தாய்ப் பாதுகாக்கும் இடம் கோவலூராகும்.

'வெறி ஆர்ந்த மலர்மகள்நா மங்கை யோடு
வியன்கலைஎண் தோளினாள் விளங்கு செல்வச்
செறி ஆர்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூர்' (2 : 10 : 6)

. . . . ''விந்தம் மேய
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில் சூழ் நெடுமறுகில் கமல வேலி
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
பூங்கோவலூர்''

என்று இச்செய்தியைத் திருநெடுந்தாண்டகத்திலும் (7) இவர் குறிப்பிடுவார்.

சுற்றிலும் உள்ள சோலைகளில் கமுக மரங்கள் உள்ளன. அவற்றின் நிறம் கருப்பு. பாளைகளின் நிறம் பசுமை ; பாக்குப்பிஞ்சுகள் வெண்ணிற முத்துகளைப் போல் காட்சியளிக்கின்றன ; பச்சை நிறக் காய்கள் மரகதம் போன்று காணப்படுகின்றன ; பழுத்த செந்நிறப் பாக்குப் பழங்கள் பவளம் போன்று உள்ளன ; பாக்கு மரங்களூடே வளர்ந்துள்ள சுரபுன்னையின் மொக்குகள் மலர்ந்து சோலையைப் பொலிவுறச் செய்கின்றன. (சுரபுன்னையின் மொக்குகள்

மலர்ந்திருப்பது, "கமுக மரம் ஒன்றே எல்லாவற்றையும் காட்டுகிறதே ! இது என்ன புதுமை !" என்று நகைப்பதுபோல உள்ளது).

"கருங்கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று
காய்எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்டச்
செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே"[180]

5.1 33 **ஆலய அமைப்பு :** கொடிமரத்தை அடுத்துத் திருமங்கை மன்னர் கட்டிய கோபுர வாயில். பெரியபிராட்டி, மகாபலி, சுக்கிராச்சாரியார், மிருகண்டு முனிவர், அவர் துணைவியார், முதலாழ்வார் முதலானோர் சூழ்ந்துநிற்க, வலத் திருவடியை நான்முகனும் இடத்திருவடியை மாவலியின் புதல்வன் நமுசியும் ஆராதித்து நிற்கின்றனர். இரண்டடிநிலம் போக, "எஞ்சிய ஓரடிநிலம் எங்கே" ? என மாவலியை வினவுவது போல் வலக்கையின் ஒருவிரல் நீட்டியநிலையில் காணப்பெறுகின்றது. மாவலியை வெற்றிகொண்ட எக்களிப்பால் இடக்கையில் இருக்கவேண்டிய சங்கினை வலக்கையில் ஏந்திய நிலையில் காணப்பெறுகின்றார். முதல் சுற்றில் கொற்றவை காவல் தெய்வமாக எழுந்தருளியிருப்பதை முன்னரே கண்டோம். இரண்டாவது சுற்றில், பூங்கோவல் நாச்சியார் சந்நிதி உள்ளது. இதன் முன்னுள்ள மண்டபம் $55\frac{1}{2}$ நீளம், $31\frac{1}{2}$ அகலம் உள்ளது. இது போன்ற அமைப்புள்ள மண்டபங்களில் தமிழ்நாட்டிலேயே இதுதான் மிகப் பெரியது என்பர். சங்ககாலத்தில் மலையமான் திருமுடிக்காரி இந்நகரைச் சார்ந்தவன். இவன் இப்பெருமாள் மீது கொண்டிருந்த அன்பை,

"பொற்புடைய மலையரையன் பணியநின்ற பூங்கோவலூர்" என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரப் பகுதியால் (7) அறியலாம். "மலையரையன்" என்பதற்கு "மலையமான்களை" என உரைவகுத்துள்ளார் பெரியவாச்சான்பிள்ளை. ஆழ்வார் காலத்தில் திருமுடிக்காரியின் வழியினர் வாழ்ந்தனர் என்பது இதனால் பெறப்படும்.

இடைக்காலத்தில் சோழர் வீர சைவர்களாகவும், வைணவ சமய வெறுப்புற்றவர்களாகவும் இருந்தகாலத்தும், முகம்மதியர் படையெடுப்பு நடைபெற்ற காலத்திலும், "எம்பெருமானார் ஜீயர்" என்ற மகான் இக்கோயிலைக் காத்தார் எனவும், அதனால் அம்மகானின் வழிவரும் ஜீயர் சுவாமிகள் ஆதிக்கத்துக்கு உட்பட்டு இக்கோயில் நிருவகிக்கப்படுகிறது எனவும் அறிகிறோம். ஜீயரின் மடம் சந்நிதித்தெருவில் உள்ளது. இங்கு எல்லாப் பிரிவு மக்களுக்கும் பஞ்சசம்ஸ்காரம் செய்து வைக்கப்பெறுகிறது.

5.1.34 **திருவயிந்திரபுரம் :**[181] கடலூரிலிருந்து மேற்கில் 5 கி.மீ. தொலைவில் இத் திருத்தலம் உள்ளது. மூலவர் தெய்வநாயகன் ; நின்ற திருக்கோலம் ; கிழக்கே திருமுக மண்டலம். உற்சவர் தேவநாதன், அடியவர்க்கு மெய்யன், தாயார் வைகுந்த நாயகி

(ஹேமாப்புஜவல்லி) கோயிலுக்கு அருகில் கருடநதி ஓடுகிறது. மேலும், ஔஷதகிரி என்னும் குன்றின்மேல் அயக்கிரீவர் சந்நிதி உள்ளது. வேதாந்த தேசிகர் இங்கே தவம் செய்து, கருடன் அருளையும், அயக்கிரீவர் அருளையும் பெற்றார். தேசிகர் இங்கு நாற்பதாண்டுகள் வசித்த திருமாளிகையும் அவர் கையால் கட்டிய கிணறும் இன்றும் உள்ளன. ஆதிசேடனால் அமைக்கப்பெற்ற தலமாதலின் (அஹி + இந்திரபுரம்) இப்பெயர் ஏற்பட்டது என்பர்.

இத்திருத்தலத்தினைத் திருமங்கையாழ்வார் மூன்றாம் பத்து முதல் திருமொழியில் பத்துப் பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். அவற்றின் கருத்துகளைத் தொகுத்துக் காண்போம்.

5.1.35 **இயற்கை அழகில் ஈடுபாடு :** வண்டுகள் தாமரை மலர்களின் தேனை அருந்தி, சுரபுன்னை மலர்களைச் சென்றடைகின்றன. மலைச்சாரலில் உள்ள மாதவிப் பந்தலில் பொன் வண்டுகள் தொடர்ந்துவர, மலரும் தாமரையில் "தென்ன" என்னும் ஒலியோடு ஆண் வண்டுகள் இசையெழுப்புகின்றன. மாதவி, சண்பகம், முல்லை ஆகிய கொடிகள் ஆடுகின்றன.

வயல்களில் தாமரை மலர்கின்றது ; கரும்புகள் வானளாவி வளர்கின்றன ; வானரங்கள் வேங்கை மரத்திலும், கோங்கு செண்பகக் கொம்புகளிலும் இரைதேடி, இறுதியில் தேன்கலந்த பலாப்பழங்களை நுகர்கின்றன. ஆண் அன்னம் பெடையுடன் தாமரைத் தவிசில் இலையாகிய குடைநிழலில் இனிதாக அமர்கின்றது. அவற்றுக்குச் செந்நெல் தன் கதிர்களினால் கவரி வீசுகின்றது. இவ்வாறு அன்னம் அரசு வீற்றிருக்கின்றது.

கருட நதி, மலைபடு பொருள்களையும், யானைத் தந்தங்களையும் அகிலையும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வந்து வயல்களில் சேர்க்கின்றது. அந்நதியில் மீன்கள் பாய்கின்றன ; இத்தகுவளம் நிறைந்த திருத்தலம் இதுவாகும்.

5.2 **சமுதாயச் செய்திகள் :** ஞானமோ வைராக்கியமோ இன்றி, பக்தி ஒன்றினாலேயே முக்தி எய்தும் எளிய வழி கலியுகத்துக்கென்றே அமைந்தது. இதைப் பரப்பிடப் பெரிய பெரிய நாராயண பக்தர்கள் திராவிட நாட்டில் பாலாறு, காவிரி, தாமிரபரணி, பெரியாறு, வைகை என்ற ஆறுகள் பாயும் இடங்களில் தோன்றுவார்கள் என்று பாகவதம் பதினோராம் ஸ்கந்தத்தில் கூறப்பட்டுள்ளது.[182] இது அந்நதிக்கரைகளில் அவதரித்த ஆழ்வார்களைக் கருதித்தான். இவ் ஆழ்வார் பாசுரங்களை ஏற்கெனவே ஆங்காங்கே விளக்கிய இடங்களில் பல சமுதாயச் செய்திகளும் உடன் சுட்டப்பெற்றன. இனி மேலும் சில செய்திகளை இங்கு நோக்குவோம்.

மகளிர் தமது பன்னிரண்டாம் வயதில் காமன் நோன்பு நோற்பர் எனப் பன்னிரு பாட்டியல் கூறும். அமி ஆண்டாள் இவ்வாறு நோற்றதை ஏற்கெனவே கண்டோம். நாட்காலையில் எழுந்து கீழ்வானம் வெள்ளெனுமுன் நீர்த்துறை படிந்து

முள்ளில்லாச் சுள்ளி எரிமடுத்து அனங்கன் நோன்பு மேற்கொள்வது வழக்கம் என்பது ஆண்டாள் பாசுரங்களால் அறியமுடிகிறது. நாயகன் வரவை எதிர்நோக்கி நிற்கும் மகளிர், அவன் வருதல், வாராமையை அறிவதற்காக மணலில் ஒரு வட்டமிட்டு, அதன் இருமுலையும் நேராகச் சேருமானால், அவன் வருவான் என்றும், அங்ஙனம் கூடாவிடின் வாரான் என்றும் அறிதல் கூடலிழைத்தல் எனப்படும்.

> "காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்
> வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
> ஓட்ட ராவந்தென் கைப்பற்றி தன்னொடும்
> கூட்டு மாகில், நீ கூடிடு கூடலே"[183]

> "அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண
> இழைப்பன் திருக்கூடல் கூட" .... (நான்முகன் திருவந்தாதி-39)

என்று திருமழிசையாரும் பாடியுள்ளார்.

பல்லியின் சொல்லுக்கு மக்கள் பயன் அறிவதைப் பழந்தமிழ் நூல்களும் குறிக்கின்றன.

> "பல்லியும் பாங்கொத் திசைத்தது
> நல்லெழி லுண்கணு மாடுமாலிடனே" — என்பது பாலைக்கலி.

இச்செய்தி திருமங்கை மன்னரின் பாசுரத்தாலும்[184] அறிய வியல்கின்றது. கடல் வாணிபம் மாமல்லபுரத் துறைமுகம் வழியாக நடந்தது என்பதைத் திருமங்கை மன்னரின் பாடல் குறிப்பிடுவதை முன்பே கண்டோம்.

**ஆட்சிமொழி :** வடமொழியே பல்லவர்களின் ஆட்சிமொழியாக இருந்தது. இதனால் பல்லவர் தம் பட்டயங்களை அம்மொழியில் வெளியிட்டனர். லோக விபாகம், மத்தவிலாசப் பிரகசனம் போன்ற வடமொழி நூல்கள் இயற்றப்பெற்றன. இதனால் அம்மொழியின் செய்யுள் இலக்கண அமைதிகள் தமிழில் பரவின. தமிழ் யாப்பிலக்கண முறையிலேயே வடமொழிக் கலப்பு உண்டான காலம் பல்லவர் காலமேயாகும்.

மகேந்திரவர்மன், இரண்டாம் நந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன் அபாராசிதவர்மன் ஆகியோர் தமிழறிவு பெற்றிருந்தனர் என்பது தளவானூர்க் கல்வெட்டு, திருமங்கையாழ்வார் பாடல்கள், நந்திக்கலம்பகப் பாடல்களால் அறியமுடிகிறது.

பிற்காலப் பல்லவர் காலத்திற்றான் தமிழ்மொழியிற் கல்வெட்டுகள் வெளிவந்தன. ஆழ்வார்கள் மிகுந்த தமிழ்மொழிப் பற்றுடைவர்களாக விளங்கினர்.

. . . . . . . . . . . .

"இருந்தமிழ்நல் மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது"[185]

"அருந்தமிழந் தாதி"[186]

"ஞானத்தமிழ் புரிந்த நான்"[187]

"செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவரிவர்"[188]

"இருந்தமிழ் நூற்றலைவன்"[189]

"கொண்ட சீரால் தண்டமிழ் செய்மாலை"[190]

"சங்க முகத் தமிழ்மாலை பத்தும்"[191]

எனவரும் தொடர்கள் இதற்குச் சான்றாகும்.

. . . . . . . . . . நின்றான் தன்னை
வண்டமிழ் நூற்க நோற்றேன்"[192]

. . . . . . . . . . என்னால் தன்னை
இன்றமிழ் பாடிய ஈசனை"[193]

எனவரும் நம்மாழ்வாரின் பாசுர அடிகளாலும் இதனை நன்கு அறியலாம்.

சாதிப்பாகுபாடு : அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவுகள் அக்காலத்தில் இருந்தன.

"குலங்களாகிய ஈரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்"[194]

ஆயினும் திருமாலிடம் பக்தி பூண்டொழுகும் அடியார்கள் எச்சாதியினராயினும் உயர்வாகக் கருதப்பட்டனர்.

ஆலயத் திருப்பணிகள் : அரசர்களும், செல்வரும் ஆலயத் திருப்பணிகளில் பக்தியுணர்வுடன் ஈடுபட்டனர். அரசர்கள் வாழ்ந்த அரண்மனைகள் இன்று இல்லை ; ஆயின் அவர்கள் கட்டிய, அமைத்த ஆலயங்கள் நின்று நிலவுகின்றன. சைவ, வைணவ வேறுபாடுகள் படிப்படியாக வளரத் தொடங்கின ; பிற சமயங்களுக்கும் இவற்றிற்கும் பல பிணக்குகள் ஏற்பட்டன. அரசர்கள் ஒரு சமயம் விட்டு வேறொரு சமயத்திற்கு மாறியபோது மக்களும் அவ்வாறே மாறநேர்ந்தது இயல்பே. பொதுவில் மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். மக்களின் நன்மைக்காக அரசர்கள் பல ஏரிகளை, வாய்க்கால்களை அமைத்தனர். காடுகெடுத்து நாடாக்கினர். அரசர்கள் திருமாலின் அமிசராகப் போற்றப்பெற்றனர்.

5.3 *முடிவுரை* : இதுகாறும் ஏனைய ஆழ்வார்களின் பாசுரக் கருத்துகளின் அடிப்படையில் தொண்டைநாட்டுத் திருத்தலப் பெருமைகள் சுட்டப்பட்டன. இயற்கைக்காட்சிகள் புலனாயின. வைணவ சமயத் தத்துவக் கருத்துகள் அறியப்பட்டன. இவ் ஆழ்வார்களின் காலத்தில் அரசர்கள் கட்டிய திருக்கோயில்களின் அமைப்பையும் சிற்பச் சிறப்புகளையும் ஆய்ந்து அறியப்பட்டன. இவ்வகையில் பக்தி இயக்கமானது ஆறாம் நூற்றாண்டு தொடங்கி எட்டாம் நூற்றாண்டு முடிய ஆழ்வார்களால் வளர்க்கப்பெற்றது. இது சைவ சமயக் குரவர்களின் தொண்டினாலும் தமிழக அளவில் விரிவடைந்தது. முதலாழ்வார்கள் காலத்தில் தொண்டைநாட்டில் தோன்றிய இவ்வியக்கம் நம்மாழ்வார் காலத்தில் பாண்டியநாட்டில் சிறப்புற்று ஓங்கியது. இனி அடுத்துவரும் இயலில் ஆசாரியர்கள் காலத்தில், குறிப்பாக ஸ்ரீ இராமாநுஜர் காலத்தில் இது திரும்பவும் தொண்டை நாட்டை மையமாகக்கொண்டு மேலும் வளரப்போவதையும், அவருக்குப்பின் வட இந்தியா முழுமையும் பரவப்போவதையும் அறியமுடியும்.

## அடிக்குறிப்புகள்

1. இத்திருக்கோயில் காஞ்சியில் அரங்கசாமி குளத்திற்கு அருகில் உள்ளது.
2. மூன். திரு. 99
3. பெரி. திரு. 2 : 8 : 1
4. மேலது - 2 : 8 : 2
5. மேலது - 2 : 8 : 3
6. "விண்ணுக்கும் அவ்வருகில் (திருநாட்டில்) இறைவனாகிய ஒளி விளங்குகிறது" - தெ. ஞானசுந்தரம், "பெரிய திருமொழி உரையின் தமிழாக்கம்" முதல் பதிப்பு, (தஞ்சாவூர், 1984), ப. 542.
7. பெரி. திரு. 2 : 8 : 4
8. மேலது - 2 : 8 : 5
9. மேலது - 2 : 8 : 6
10. மேலது - 2 : 8 : 7
11. மேலது - 2 : 8 : 10
12. S.I.I. Vol. II, P. 366.
13. மு. இராகவையங்கார், "ஆழ்வார்கள் காலநிலை", பக். 145-160. வரையுள்ள செய்திகள்.
14. இத்திருக்கோயில் மிகவும் புகழ்பெற்றது.
15. இர. திரு. 95, 96.
16. பெரி. திரு. 2 : 9 : 3
17. 598 of 1919
18. திருவல்லிக்கேணி என்று இன்று வழங்குகிறது.
19. கு. அருணாசலக் கவுண்டர், "தமிழ்ப்பண்பாட்டில் வைணவம்", முதற்பதிப்பு (கோவை 1982) பக். 44-46.
20. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், "வேங்கடம் முதல் குமரி வரை" பகுதி 1, முதற்பதிப்பு (திருநெல்வேலி 1960), ப. 74.
21. மூன். திரு. 16.

22. திருமகள் பரமபதத்திலிருந்து இவ்வுலகுக்கு வந்து இத் திருஅல்லிக்கேணிக் கரையில் பிருகு முனிவரின் பர்ணசாலையருகே ஒரு சந்தன மரத்தடியிலே பெண் மகளாகத் தோன்றுகின்றாள். அவளை முனிவர் வேதவல்லி என்று பெயரிட்டு வளர்க்கிறார். இவளைக் கண்டு விரும்பி மணம்புரிந்து கொள்கிறார் மந்நாதன். இவரைக்கண்டு "இவரே என் நாதன்" என்று வேதவல்லி நாணிக் கூறியதால் இவருக்கு "மந்நாதன்" என்ற பெயர் ஏற்படுகின்றது. மன நாதன் (மன - "என்னுடைய"-என்பது இத்தெலுங்குச் சொல்லுக்குரிய பொருளாகும்). இது "ம்ந்நாதன்" என்றாயிற்று. விஜயநகர அரசர் காலத்தில் அரங்கநாதருக்கு இத் திருப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

23. நான். திரு. 35.

24. பெரி. திரு. 2 : 3 : 9-ஆம் பாசுரக் கருத்தாகும்.

25. தெ. ஞானசுந்தரம், "பெரிய திருமொழி உரையின் தமிழாக்கம்", ப. 373.

26. பெரி. திரு. 2 : 3 : 1.

27. மேலது - இரண்டாம் பத்து மூன்றாம் திருமொழி இரண்டு முதல் ஆறு முடியவுள்ள பாசுரங்களின் திரண்ட கருத்துகள்.

28. மேலது - 2 : 3 : 8.

29. இத்திருத்தலம் கடற்கரையருகில் இயற்கையழகுடன் விளங்குகின்றது.

30. முதல் இராசராசன், இராசகேசரிவர்மன் காலக் கல்வெட்டுகள் பல உள்ளன. 258 of 1910.

31. பெரி. திரு. 1 : 8 : 4.

32. மேலது - 1 : 7 : 1

33. மேலது - 1 : 7 : 2

34. ஆசாரிய உறிருதயம், சூத். 118

35. இத்திருத்தலங்கள் காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள உலகளந்தப்பெருமாள் திருக்கோயிலில் உள்ளன.

36. வேங்கடகிருஷ்ணன், "தொண்டைநாட்டுத் திருத்தலங்கள்", கீதாசார்யன், மூன்றாவது ஆண்டு மலர், முதல்பதிப்பு, (சென்னை, 1981), ப. 93.

37. மூன். திரு. 64.

38. திருச். விரு. 63, 64.

39. திருவாய், 5 : 10 : 6.

40. பெரி. திரு. 1 : 5 : 4 இதில் "ஊரான் குடந்தை உத்தமன்" - ஊரான் - திருவூரகத்தைத் தனக்கிருப்பிடமாக உடையவன் - என்பது பெரியவாச்சான் பிள்ளையின் உரையாகும்.

41. திரு. நெடுந். 8

42. திரு + எவ்வுள் + ஊர் = திரு எவ்வுளூர் > திருவள்ளூர் என மருவியது.

43. நான். திரு. 36.

44. பெரிய திருமடல் அடி. 116.

45. பெரி. திரு. 2 : 2 : 1

46. மேலது - 2 : 2 : 3

47. "அன்றுதூது கொண்டிலங்கை தீவிளைத்தவ னைவர்க்
கின்றுதூது வந்தெயிற் புறத்திருந் தனனென்னாத்
துன்றுதூது வண்டினமுரல் தொடையலான் தனக்குச்
சென்றுதூது வரியம்பினர் சேவடி வணங்கி.
-வில்லிபாரதம், கிருட்டிணன் தூதுச் சருக்கம், செய்யுள் எண். 70.

48. மாமல்லபுரம் > மகாபலிபுரம் என மருவி வழங்குகிறது.

49. இரா. நாகசாமி, "மாமல்லை", முதல் பதிப்பு, (சென்னை 1968), ப. 6.

50. இர. திரு. 70.

51. பெரி. திரு. 3 : 5 : 8

52. மேலது - 7 : 1 : 4

53. மேலது - 2 : 5 : 1

54. மேலது - 2 : 5 : 9

55. ஐந்து வேள்விகள் : பிரமயக்ஞம் (மறைஓதல்) தேவயக்ஞம் (தேவர்களுக்குத் தீயில் உணவின் ஒரு பகுதி இடுதல்) பூதயக்ஞம் - நாய், பூனை, காக்கைக்கு உணவிடல் ; பித்ருயக்ஞம் - தென்புலத்தார்க்கு உணவின் பகுதியை அளித்தல் ; மனுஷயக்ஞம் - விருந்தினர்க்கு உணவளித்தல்.

ஆறு அங்கங்கள் : சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கற்பம் என்பன.

56. பெரி. திரு. 2 : 6 : 1, & 2 பாசுரக் கருத்துகள்.

57. மேலது - 2 : 6 : 3

58. கி. வேங்கடசாமி ரெட்டியார், "நாலாயிர திவ்வியப்பிரபந்தம்" (பதிப்) இரண்டாம் பதிப்பு (சென்னை 1981), ப. 186.

59. கு. அருணாசலக் கவுண்டர், "தமிழ்ப் பண்பாட்டில் வைணவம்", ப. 60.

60. இரா. நாகசாமி, "மாமல்லை", தமிழக அரசு தொல்லியல் துறை வெளியீடு, முதல் பதிப்பு (சென்னை 1980).

61. குடவாயில் பாலசுப்பிரமணியன், "சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும்", முதற்பதிப்பு (தஞ்சாவூர் 1987), பக். 37-39.

62. "மத்சய கூர்ம வராஉறஸ்ச நாரசிம்மஸ்ச வாமனஹ
ராமோ ராமஸ்ச ராமாஸ்ச புத்தக் கல்கீ த சாஸ்மிருதா" :

"தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய்

மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான் கோயில்"
—பெரியாழ்வார் திருமொழி 4 : 9 : 2

63. கோ. தங்கவேலு, "இந்தியக் கலை வரலாறு - பகுதி - 1" (பதிப்) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், (சென்னை 1976), ப. 426.

64. நீர் அருகில் பள்ளிகொண்ட நிலை-என்பது இதன் பொருள்.

65. கோ. தங்கவேலு, "இந்தியக் கலை வரலாறு-1" பக். 447-451.

66.
67. மகிஷாசுரமர்த்தனி மண்டம்-என்று பொதுவாக வழங்கப்படும் இடம்.

68.
69. இவை, இரண்டும் பேருந்து நிலையம் அருகில், சற்றுப்பின் தள்ளி உள்ளன.

70. வ.ஆ.அ. மாவட்டத்தில், இவ்வூர் உள்ளது.

71. மூன். திரு. 61.

72. பெரி. திரு. 8 : 9 : 5

73. திருவாய். 2 : 9 : 8

74. காஞ்சியிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று.

75. "திருமகளுக்கு, தான் மிகவும் அழகி என்று கர்வம். அதனால் திருமாலின் அழகையே கேலிசெய்ய, அவர் சாபமிட, அது நீங்கக் காமகோட்டம் அடைந்து தவம்புரிகிறார். காமாட்சி அருளால் சுயவடிவு பெறுகிறாள். அரூபலட்சுமி, சௌந்தரியலட்சுமியாகி வலப்புறத்தில் இருக்கிறாள். அவளைத் திரும்ப அழைத்துச்செல்ல வந்திருக்கிறார் கள்ளப் பெருமான்". —தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான், "வேங்கடம் முதல் குமரி வரை"-1. முதல் பதிப்பு, (சென்னை, 1960), ப. 105.

76. "காமகோட்டத்தில் பஞ்சதீர்த்தக்கரையில் இலட்சுமியும், பார்வதியும் உரையாடியதைத் திருமால் ஒளிந்து கேட்டதால், பார்வதி அவருக்குக் "கள்வன்" என்ற பெயர் சூட்டினாள். பார்வதியின் வேண்டுகோளுக்கு இணங்கத் திருமால் பூதத்தின் மேல் நின்று, இருந்து, கிடந்தபடியால் மூன்று சந்நிதிகள் ஏற்பட்டுள்ளன" - ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசம், லிஃப்கோ வெளியீடு, முதல் பதிப்பு, (சென்னை 1986), ப. 59.

77. திரு. நெடுந். 8.

78. குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருத்தலம், இன்று விளக்கடிப் பெருமாள் கோயில் என வழங்குகிறது.

79. இச்சந்நிதிக்குப் பக்கத்தில் தேசிகர் வாழ்ந்த இடம் உள்ளது.

80. பெரி. திரு. 10 : 1 : 2

81. திரு நெடுந். 17.

82. காஞ்சியிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று.

83. திரு நெடுந். 18.

84. "ஏகாம்பரேசுவரர் சந்நிதியுள்ள இடத்தில் மாமரத்தின்கீழ் பார்வதி தவம் செய்ததாகவும், அத்தவத்தைச் சோதிக்க, சிவன் மாமரத்தை எரிக்க, பார்வதி வாமனரைப் பிரார்த்திக்க, வாமனர் திருமாலாகத் தோன்றி, அமிழ்த கிரணங்களைக்கொண்டு மாமரத்தைத் தழைக்கச் செய்தார். பார்வதியும் தாபம் தீர்ந்து தவம் செய்தார். பார்வதியின் தாபத்தைத் துண்டித்தபடியால், பெருமாளுக்கு "நிலாத்திங்கள் துண்டத்தான்" என்ற பெயர் ஏற்பட்டது. "ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேச வைபவம்", ப. 55.

85. அப்பர் தேவாரம், 6 : 25 : 9 (ஏகாம்பரநாதர் கோயிலுக்கு முன்புள்ள 16 கால்மண்டபத்தின் ஒரு தூணில் புடைப்புச் சிற்பமாக அனுமன் எழுந்தருளியுள்ளார். இவர் மக்களால் பெரிதும் பக்தியுடன் வழிபடப் பெறுகிறார்).

86. பெரியபுராணம் குறிப்பிடும் பூசயார் நாயனார் மனக்கோயில் கட்டிவாழ்ந்த ஊர்.

87. பெரி. திரு. 2 : 5 : 2

88. மேலது 7 : 10 : 5

89. பல்லாவரத்திலிருந்து 5. கி.மீ., தொலைவில் இவ்வூர் உள்ளது. அழகிய திருக்குளமும் உள்ளது.

90. பெரி. திரு. 2 : 4 : 1

91. இர. திரு. 46.

92. பெரி. திரு. 2 : 4 : 1

93. மேலது - 2 : 7 : 8, 8 : 2 : 3, 9 : 2 : 8

94. மேலது - 5 : 2 : 8, 6 : 8 : 4, 7 : 1 : 7, 10 : 1 : 1

95. சிறிய திருமடல் - அடி. 73. பெரிய திருமடல் அடி. 130.

96. திரு நெடுந். 18

97. வரலாற்றுப் புகழ்பெற்ற திருத்தலம். காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது.

98. தமிழகத்தில் அட்டாங்க விமானத்தைக் கொண்ட ஆலயங்களில் முதலாவதாகும். பிற : உத்திரமேரூர் சுந்தரவரதப்பெருமாள் கோயில் ; மதுரைக் கூடலழகர் கோயில். திருக்கோட்டியூர் சௌம்யநாராயணப் பெருமாள் கோயில் ; சென்னை பெசன்ட் நகரில் உள்ள அஷ்டலட்சுமி கோயில் ; (திருவட்டாறு திருக்கோயில்-திருவனந்தபுரத்திற்கருகில் உள்ள கோயில்).

99. இக்குறிப்பு பின்வரும் நூலின் கீழ்க்காணும் பக்கங்களில் உள்ளது.

100. கோ.தங்கவேலு, "இந்தியக் கலை வரலாறு-1" பக். 455-462.

101. தெ. ஞானசுந்தரம், "பெரிய திருமொழி-முதல் இருநூறு பாசுரங்கள்" பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தின் தமிழாக்கம், இரண்டாம் பத்து ஒன்பதாம் திருமொழி தோற்றுவாய் - ப. 556.

102. மேலது - 2 : 9 : 1

103. எஸ். குலசேகரன், "வைணவத்தின் ஆழ்வார்கள் கால நிலை", ப. 186.

104. மு. இராகவையங்கார், "ஆழ்வார்கள் கால நிலை" ப. 139.

105. தெ. ஞானசுந்தரம், "பெரிய திருமொழி" பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் தமிழாக்கம், ப. 568.

106. மயிலை. சீனி. வேங்கடசாமி, "நரசிம்மவர்மன்" ப. 18.

107. சாளுக்கிய மன்னன் இரண்டாம் கீர்த்திவர்மன், (கி.பி. 746-757) வெளியிட்ட வக்கலேரி, கேந்தூர்ப் பட்டயங்களிலும், "சமுத்திரகோஷம்" குறிக்கப்படுகிறது. மா. இராசமாணிக்கம்பிள்ளை, "பல்லவர் வரலாறு" பக். 178-179.

108. பெரி. திரு. 5 : 8 : 5.

109. எஸ். குலசேகரன், "வைணவத்தின் ஆழ்வார்கள் கால நிலை", ப. 194.

110. சோழ நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. ஆயினும் பல்லவ மன்னன் திருப்பணி செய்ததால் இங்குக்குறிக்கப்படுகிறது.

111. குடவாயில் பாலசுப்பிரமணியன், "நந்திபுரம்" "தினமணி", பொங்கல் சிறப்பிதழ், சென்னை, ஜனவரி 14, 1990. ப. IV.

112. பெரி. திரு. 3 : 2 : 10

113. Ep. Rep. 323-4 of 1903. இச்சாசனம் முழுவதையும் பின்இணைப்பு அட்டவணை 2-இல் காணலாம்.

114. மு. இராகவையங்கார், "ஆழ்வார்கள் கால நிலை", ப. 201.

115. காஞ்சியிலுள்ள பாடல் பெற்ற திருத்தலம்.

116. திரு. நெடுந். 9.

117. ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேச வைபவம், பக். 60-61.

118. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, பாடல். 86

119. காஞ்சியிலுள்ள பாடல் பெற்ற திருத்தலம் ; சக்கரத்தாழ்வார் சந்நிதி புதியதாக இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

120. இவ்விடத்துப் பின்வரும் வில்லிபாரதப் பாடல்கள் ஒப்புநோக்கத்தக்கன. (கிருட்டிணன் தூதுச் சருக்கம்).

"இறைவனெழிற் கதிர்மணிக ளழுத்திய தவிசினிருத்தலுமே
நெறு நெறெனக் கொடு நிலவறையிற்புக னெடியவனப் பொழுதே
மறலியெனத் தகு திருபனியற்றிய விரகை மனத்துணரா
முறுகு சினத் துடனடிய தலத்துற முடிகசுனத்துறவே" - 191

"அஞ்சின மஞ்சின மென்று விரைந்து யரண்டர் பணிந்திடவும்
துஞ்சின மின்றென வன்பணியில் கிளைதுன்ப முழங்கிடவும்
வஞ்சமனங் கொடு வஞ்சகனின்றிடு வஞ்சனை நன்றிதெனா
நெஞ்சில் வெகுண்டுல கொன்றுபடும்படி நின்று நிமிர்ந்தனனே"-192

"சில சில கைத்தல மடுகழலிற் பல செறிகழல் கட்டினவே
சில சில கைத்தல மிறுகுபுயத்திடை செறிதொடை யிட்டனவே
சில சில கைத்தல மணிகொளுரத்திடை பணிகடிருத்தினவே
சில சில கைத்தலம் விரல்கொடு கட்டின செறுநர் திகைத்திடவே"-207

"கண்ண பொறுத்தருள் வெண்ணெயருந்திய கள்வ பொறுத்தருள்கார்
வண்ண பொறுத்தருள் வாமபொறுத்தருள் வரதபொறுத்தருள் நீ
திண்ண மனத்துணர் வொன்றுமிலாதவர் செய்த பெரும்பிழையென்று
அண்ணல் மலர்க்கழல் சென்னியில் வைத்ததெதிர் அன்று துதித்தனரே"-212.

121. இர. திரு. 94.

122. மூன். திரு. 90

123. மேலது - 64.

124.
125. திருச். விரு. 63, 64.

126. பெரி. திரு. 6 : 10 : 4

127. திரு. நெடுந். 15.

128. பாலு செட்டிசத்திரம் என்று இவ்வூர் இன்று குறிக்கப்படுகிறது.

129. கள ஆய்வில் கண்டது.

130. பெரி. திரு. 2 : 7 : 8

131. பெரிய திருமடல் - அடி. 117.

132. சின்னகாஞ்சிபுரம்-அரங்கசாமி குளத்திற்கு அருகில் இத்திருத்தலம் உள்ளது.

133. முத. திரு. 77

134. மூன். திரு. 26, 34, 62, 64

135. மேலது - 76.

136. திரு. விருத். 26

137. "A Hand Book of South Indian Images", by T.N. Srinivasan, Second Edition, (Tirupati, 1982), pp. 128 & 129.

138. மேலது-பக். 125 முதல் 129 முடிய

139. பெரியா. திரு. 1 : 5 : 3

140. மேலது - 3 : 3 : 4

141. மேலது - 5 : 4 : 1

142. நாச். திரு. 1 : 1

143. மேலது - 5 : 2

144. நாச். திரு. 8 : 1 : 10 பாசுரக் கருத்துகள்

145. பெரு. திரு. 4 : 1

146. மேலது - 4 : 2

147. மேலது - 4 : 9

148. மேலது - 4 : 10

149. திருவேங்கடக் கலம்பகம் - 72.

150. நான். திரு. 42

151. மேலது - 43.

152. மேலது - 48

153. அமலனாதிபிரான் - 1

154. மேலது - 3

155. பெரி. திரு. 5 : 5 : 1

156. மேலது - 10 : 10 : 5

157. சிலப். ஆய்ச்சியர் குரவை, முன்னிலைப்பரவல்-வரிகள் 29-32.

158. திருவாய் 1 : 8 : 3

159. மேலது - 2 : 6 : 9 & 10

160. திரு. விருத் . 50

161. திருவாய் 3 : 3 : 5

162. அர்ச்சாவதாரத் திருக்கோலத்தில்

1. அபய முத்திரையுள்ள திருக்கரம் — வாத்சல்யத்தையும்,
2. சென்னியில் சூடியுள்ள இரத்தினமுடி — சுவாமித்துவத்தையும்,
3. முகமலர்ச்சி, புன்னகை ஆகியன — அடியார்களுடன் கலக்கும் சௌசீல்யத்தையும்
4. திருவடிகள் — அனைவரும் பற்ற இடந்தரும் சௌலப்பியத்தையும் குறிப்பனவாம்.

163. கம்ப. விராதன் வதைப்படலம். 55 (ஆரணிய காண்டம்).

164. மேல்பாடலுக்கு வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரை. ப. 12.

165. பிரபத்தி என்பது இறைவனையே தக்க நெறியாகப் பற்றுவது. பற்றுதற்கு உரியோர் போக்கற்றவரும், கைம்முதலற்றவரும். அங்ஙனம் பற்றுவதும் இறைவனாலேயே விளைவிக்கப்படுகிறது. இது பக்திக்கு உறுப்பாகாது. தானே தனி நெறியாக இருந்து பயனைத் தரவல்லது. இதற்கு ஐந்து அங்கங்கள் உண்டு. அவையாவன :

1. அநுகூல்ய சங்கல்ப்ம் — இறைவனின் திருவருளைத் தொடர்ந்து செல்லுதல்.
2. பிரதிகூல்ய வர்ஜநதம் — அவனுக்கு உகப்பில்லாதவற்றை நீக்குதல்.
3. மகாவிசுவாசம் — அவன் தன்னைக் காப்பான் என நம்பிக்கை கொள்ளல்.
4. கோபத்ருவரணம் — அவன் காவலை வேண்டி நிற்றல்.
5. கார்ப்பண்யம் — தான் என ஒன்றுமில்லை என்பதை அறிதல்.

பக்தி (அ) இறைவனிடம் அன்பு பூண்டொழுகுதல் என்பதற்கும், பிரபத்தி (அ) இறைவனைச் சரணடைதல் என்பதற்கும் வேறுபாடு உண்டு. பக்திநெறிக்கு அறிவுடையவனாயிருத்தல், நல்வினைகளைச் செய்தல், உயர்குடியில் பிறத்தல் போன்ற சில தகுதிகள் உண்டு. ஆனால் பிரபத்திக்கு இவை தேவையில்லை. அது யாவரும் செல்லக்கூடிய ஒரு பொதுப்பாதை. இறையன்பின் உயர்ந்தநிலை அது. கீதையின் சரமச் சுலோகம் கூறுவது

இதைத்தான் பாகவத மரபுப்படி இதுவே வீடு பேறடையச் சிறந்த வழியாகும். ஞானபக்திக்குக்கூட இது வழிகாட்டுவதால் முக்கியமானதாகும்.

டி.எம்.பி. மகாதேவன், "இந்து சமயத்தத்துவம்", (மொழி), ஞா. இராஜாபகதூர், முதல் பதிப்பு (சென்னை 1964), பக். 84, 85, 142 & 143.

166. இத்திருத்தலம் பண்டு வேறுஇடத்திலிருந்து, இவ்விடத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

167. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பு. திவ்வியதேசப் பிரபாவம். ப. 200

168. பெருமாள் கம்பீரமாகக் காட்சிதருகிறார்.

169. மூன். திரு. 34

170. நடுநாட்டுத் திருப்பதியாயினும் முதலாழ்வார்கள் சந்தித்த தலமாதலின் இங்குக் குறிப்பிடப்படுகிறது. நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்-மூன்று திருவந்தாதிகள் தோன்றிய இடம் இது.

171. பெரி. திரு. 7 : 3 : 2

172. மேலது - 7 : 10 : 4

173. பெரிய திருமடல் - அடி 122.

174. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், "முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்", ப. 296.

175. முத. திரு. 77.

176. மேலது - 86.

177. இர. திரு. 70.

178. தேகளீசஸ்துதி - சுலோகம் 7.

179. பெரி. திரு. 2 : 10 : 5 (சிறையணைந்த - நீர் அரணையுடைய).

180. மேலது - 2 : 10 : 7.

181. நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டனுள் இதுவும் ஒன்றாகும்.

182. சுவாமி ராமகிருஷ்ணானந்தர், "ஸ்ரீராமானுஜர்", (மொழி) கா.ஸ்ரீ-ஸ்ரீ. முதல் பதிப்பு, (சென்னை 1992), ப. 90.

183. நாச். திரு. 4 : 2.

184. பெரி. திரு. *10 : 10 : 4.*

185. இர. திரு. *74.*

186. முதல் திருவந்தாதித் தனியன்.

187. இர. திரு. *1.*

188. பெரி. திரு. *2 : 8 : 2.*

189. மேலது - *1 : 17 : 10.*

190. மேலது - *2 : 2 : 10.*

191. மேலது - *3 : 4 : 10.*

192. திருவாய் - *4 : 5 : 10.*

193. மேலது - *7 : 9 : 1.*

194. திருச். விருத். *90.*

# தொண்டை நாடும் வைணவமும்

(பகுதி II)



முனைவர். இரா. வ. கமலக்கண்ணன், எம்.ஏ., பிஎச்.டி., பி.எட்.

திருவேங்கடவன் பதிப்பகம்,
கீழ்ப்புத்தூர்-604 501, தி.ச.மா.

# இயல் ஆறு
## ஆசாரியர்கள் காலத்தில் வைணவம்

6.0. முன்னுரை.

6.1. பாரதம் பாடிய பெருந்தேவனார்.

6.2. ஆசாரிய பரம்பரை.

6.2.1. உடையவர் வரலாறு (தொகுப்பாக) அவதார காரணம்.

6.2.2. திருவரங்கத்தில் தலைமைப் பதவி ஏற்றல், சமயக்கல்வி பெறுதல்.

6.2.3. கூரத்தாழ்வான் ஸ்ரீபாஷ்யம் எழுத உதவுதல்.

6.2.4. முதலியாண்டான் சீடராதல்.

6.2.5. சோழமன்னன் பகைமை.

6.2.6. தரிசனத்துக்காகக் தரிசனம் தந்த ஆழ்வான்.

6.2.7. உடையவர் திருவரங்கத்துக்குத் திரும்புதல்.

6.2.8. ஆழ்வானின் அருள் உள்ளம்.

6.2.9. திருவாய்மொழிக்கு முதல் வியாக்கியானம் தோன்றுதல்.

6.2.10. மேலும் பல திருப்பணிகள், சீர்திருத்தங்கள்.

6.2.11. எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் தொண்டை நாட்டைச் சார்ந்தோர்.

6.2.12. உடையவர் வடமொழியில் இயற்றிய நூல்கள்.

6.2.13. திவ்வியப்பிரபந்த ஈடுபாடு.

6.2.14. நிறைவாழ்வு.

6.2.15. எம்பார்.

6.2.16. திருக்கச்சிநம்பி.

6.2.17. பட்டர்.

6.2.18. கிடாம்பியாச்சான்.

6.2.19. வீரசோழிய உரையாசிரியர் குறிப்பிடும் திருமால் துதிப்பாடல்கள்.

6.2.20. வடகலை, தென்கலைப் பிரிவுகள்.

6.2.21. நடாதூரம்மாள்.

6.2.22. ஆத்திரேய ராமானுஜா.

6.2.23. சுதரிசனபட்டர்.

6.2.24. வேதாந்த தேசிகர்.

6.2.25. தேசிகரின் நூல்கள்.

6.2.26. தேசிகர் திவ்வியப்பிரபந்தங்களுக்கு ஏற்றமளித்தல்.

6.2.27. தனியன் தோற்றம்.

6.2.28. நயினாராசாரியார் (எ) வரதாசாரியார்.

6.2.29. தேசிகர் நூற்றந்தாதி.

6.3. தென்கலை வழியினரில் தொண்டை நாட்டைச் சார்ந்தோர்.

6.3.1. பின்பழகிய பெருமாள் ஜீயர்.

6.3.2. மணவாள மாமுனிகள்.

6.3.3. பிரதிவாதி பயங்கரம் அண்ணன்.

6.3.4. எறும்பியப்பா (எ) தேவராஜாசார்யா.

6.4. அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலும் வைணவ சமய மறுமலர்ச்சியும்–காஞ்சியின் சிறப்பு.

6.4.1. இடங்களின் பெயர்கள் ; பெருமாளின் திருப்பெயர்கள்.

6.4.2. திருக்கோயில் அமைப்பு.

6.4.3. தாயார் சந்நிதி.

6.4.4. பிற சந்நிதிகள், மண்டபங்கள்.

6.4.5. வைணவ சமய மறுமலர்ச்சி.

6.4.6. பிரிவு 1–உடையவர் காலம்.

6.4.7. பிரிவு 2–உடையவருக்குப் பிந்திய காலகட்டம்.

6.4.8. ஈட்டின் ஒராண்வழிச்செலவும், பேரருளாளரின் பெருங்கருணையும்.

6.4.9. பிள்ளை லோகஞ்சீயர்.

6.4.10. நடாதூரம்மாள், சுதரிசனபட்டர்.

6.4.11. தேசிகர்.

6.4.12. பிரம்ம தந்திர ஸ்வதந்திரர்.

6.5. பிரிவு ஆ-மணவாள மாமுனிகளுக்குப் பின்னர்.

6.5.1. அழகிய மணவாள ஜீயர்.

6.5.2. மற்றொரு அழகிய மணவாள ஜீயர்.

6.5.3. ஆதிவண் சடகோப ஜீயர்.

6.5.4. பல்வேறு குடும்பத்தினரின் பணிகள்.

6.5.5. ஆத்தான் ஜீயர்.

6.5.6. தொட்டாசாரியார் சேவை.

6.6. பூஜைகளும் திருவிழாக்களும்.

6.7. கோயிலும் சமுதாயமும்.

6.8. ஆசாரிய அபிமானத் தலங்கள், வேறுவகையில் குறிப்பிடத்தக்க சில திருக்கோயில்கள்.

6.8.1. ஸ்ரீபெரும்புதூர்.

6.8.2. மதுராந்தகம்.

6.8.3. உத்தரமேரூர்.

6.8.4. காவேரிப்பாக்கம்.

6.8.5. திருப்பாற்கடல்.

6.8.6. கோவிந்தப்பாடி.

6.8.7. பொன் விளைந்த களத்தூர்.

6.8.8. எண்ணாயிரம்.

6.8.9. கங்கபுரம்.

6.8.10. தென்னாறு.

6.8.11. நாவல்பாக்கம்.

6.8.12. வந்தவாசி.

6.8.13. மலைவையாவூர்.

6.8.14. சிங்கப்பெருமான் கோயில்.

6.8.15. செய்யூர்.

6.8.16. மயிலாப்பூர்.

6.8.17. உக்கல்.

6.8.18. மீஞ்சூர்.

6.8.19. தேசூர்-திருமால்பாடி.

6.8.20. ஆரணி-ஆவணியாபுரம்.

6.8.21. திருவண்ணாமலை.

6.8.22. பள்ளிகொண்டா.

6.8.23. பொன்னேரி-திருவாயர்பாடி.

6.8.24. ஐயன்குளத்து அனுமன்.

6.8.25. ஆர்க்காடு.

6.9. இக்காலகட்டத்தில் தோன்றிய சில இலக்கியங்கள்.

6.10. பிராம்மணரல்லாத ஆசாரிய புருடர்கள்.

6.11. முடிவுரை.

# இயல் ஆறு

## ஆசாரியர்கள் காலத்தில் வைணவம்

6.0. முன்னுரை : முதலாழ்வார்களும், திருமழிசையாழ்வாரும் தொண்டை நாட்டில் தோன்றிப் பக்தி இயக்கத்தை வளர்த்த செய்தியை முந்தைய இயல்களில் அறியப்பட்டது. ஏனைய ஆழ்வார்கள் தொண்டை நாட்டுத் திருத்தலங்களைப் பாடிப் பரவிய செய்திகளும் சுட்டப்பட்டன. ஆழ்வார்களுக்குப்பின் வைணவ நெறியாகிய ஆறு நாதமுனிகள் என்ற பெரும்பக்தரின் உள்ளத்தில் புகுந்து, கடல் வெள்ளமாகப் பாய்ந்து பெருகும் பெருவேகத்தைப் பெற்றது.

ஆழ்வார்களுக்குப் பின்னர்த் தோன்றி, வைணவ சமயப் பயிரைத் 'தத்துவ நீர் கொண்டு' வளர்த்தவர்கள் 'ஆசாரியர்கள்' எனப்படுவோராவர். இவர்களுள் முதன்மையானவராகக் கருதப்பெறும் நாதமுனிகள், அவர் பெயரர் ஆளவந்தார் ஆகியோர் சோழ நன்னாட்டில் வீரநாராயணபுரத்தில் தோன்றினர். நடுநாயகமணியாய் விளங்கும் ஸ்ரீராமானுஜர், அவரது தம்பியார் எம்பார், முக்கிய சீடர்களான முதலியாண்டான், கூரத்தாழ்வான் ஆகியோர் தொண்டை நன்னாட்டில் தோன்றியவராவர். உடையவரின் அம்மானாகிய பெரிய திருமலை நம்பியும் அவருடை குமாரர் திருக்குருகைப்பிரான்பிள்ளானும், பின்னர்த் தோன்றிய வேதாந்த தேசிகரும் மணவாள மாமுனிகளின் தலைமைச் சீடர்களான அட்டதிக்கயங்களில் ஒருவரான பிரதிவாதி பயங்கரம் அண்ணனும் மற்றொருவரான எறும்பியப்பாவும் இந்நன்னாட்டில் தோன்றியவர்கள் ஆவர். ஆறாயிரப்படி குருபரம்பரையை இயற்றிய பின்பழகிய பெருமாள் சீயரும் இங்குப் பிறந்தவராவர்.

பிராம்மணரல்லாதோரும் ஆசாரியராக விளங்கி இச்சமயத்தை வளர்த்தனர். அவர்களுள் புதுவை விலட்சணகவி, இராமாநுஜ நாவலர் என்பவர் திண்டிவனத்தை அடுத்த ஏப்பாக்கத்தில் பிறந்தவர் ஆவார். இங்ஙனம் ஆசாரிய பரம்பரையினர் பலர் தோன்றி மீண்டும் வைணவ சமய வளர்ச்சியின் மையப் பகுதியாகத் தொண்டைநாட்டை ஆக்கினர். இவர்களது காலக்கட்டங்களில் இங்கு வைணவம் செழித்த வரலாறு இவ்வியலில் ஆராயப்படும். அத்துடன் காஞ்சிபுரம் அ/மி. வரதராஜப் பெருமாள் ஆலயம் இவ்வைணவ சமய மறுமலர்ச்சியில் பெரும்பங்கு கொண்டது. அதுபற்றியும் இவ்வியலில் நோக்கப்படும். உடையவர், தேசிகர், மணவாள மாமுனிகள் ஆகியோருக்குப் பின்வந்த ஜீயர்கள் பலர் பலவகையில் இச்சமய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுள்ளனர். அச்செய்திகளைப் பற்றியும் இவ்வியலின் பிற்பகுதியில் தொகுத்துச் சுட்டப்படும்.

ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் தவிர ஆசாரியர்கள் தோன்றிய திருத்தலங்கள், அவர்கள் உள்ளம் உவந்து விரும்பிய திருத்தலங்கள் என்ற வகையில் பல திருக்கோயில்கள் இங்குள்ளன. அத்துடன் 'குடத்துவிளக்காக' இன்றும்

தம் பழம்பெருமையைத் தெரிவித்துக்கொண்டு இருக்கும் ஆலயங்கள் பல ; சிதைந்த நிலையில் உள்ளவை பல ; அவைபற்றியும் சுருக்கமாக இறுதியில் சுட்டப்படும். இவ்வகையில் இவ்வியல் சென்ற இயல்களுடன் கருப்பொருளால் பலவகையிலும் தொடர்புபட்டு நிற்கின்றது.

இலக்கிய நோக்கில் இக்காலக்கட்டத்தில் தோன்றிய பல நூல்களையும் தனியன்களையும் ஆங்காங்கு இடையிடையே சேர்த்து நோக்குவதும் இன்றியமையாததாகும். அவ்வகையில் சில செய்திகளும் இவ்வியலில் சுட்டப்படும்.

6.1. *பாரதவெண்பா பாடிய பெருந்தேவனார் (கி. பி. 825–850)* : இவர் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தவர் ; அவ்வரசனைச் சிறப்பித்துப் பாரதவெண்பாவில் சில பாடல்களில் பாடியுள்ளார் ; தொண்டைமண்டலத்தார். இவர் திருமலை, அழகர்மலை, திருவரங்கம், கச்சிவரதர் கோயில் ஆகிய திருத்தலங்களை ஒரு வெண்பாவில் பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு :

'தேனோங்கு சோலைத் திருவேங் கடமென்றும்
வானோங்கு சோலைமலை என்றும் – தானோங்கு
தென்னரங்க மென்றும் திருஅத்தி யூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்'

காஞ்சி வரதரை இவர் இந்நூலின் மூன்று இடங்களில் குறிப்பிடுகின்றார்.[1] இவற்றுள் இரண்டில் அத்திகிரியை மட்டும் குறிக்கிறார். ஒரு பாடலில் (349) கண்ணன் துரியனிடம் தூது சென்று வந்ததைக் கூறும்போது கண்ணனை,

'அத்திகிரி மன்னும் பெருமான்' என்கிறார்.[2]

'நீலமே காரின் முகிலே நெடுங்கடலின்
கோலமே, அத்திகிரிக கோமானே – மூலமென
மாத்தா மரைமடுவில் மால்யானை ஓலமிடக்
காத்தாய், கடைபோகக் கா'

என்பது அத்திகிரியின் புராணக் கதையைப் புலப்படுத்தும் பாடலாகும். மாவிந்தப் பகுதியிலும் அத்திகிரி ஒருமுறை குறிப்பிடப்பெறுகின்றது.

'கார்மேக வண்ணனே, கண்ணபுரவா, கச்சி
ஊர்மேவி நின்றாய், உலகளந்தாய்–சீர்மேவு
தாமரையாள் கேள்வா, சரணே சரணென்று
நாவுரை செய்தான் நயந்து'

எனவே இவர் காஞ்சி மாநகரைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருதுவர்.

6.2. **ஆசாரிய பரம்பரை** : 'வைணவ சமயத்தைச் சாத்திர ஆராய்ச்சிகள் செய்து, ஞானிகளாய்ச் சமயவாதங்கள் செய்து ஆழ்வார் கொள்கைகளைச் சித்தாந்தம் செய்தவர்கள்' ஆசாரியர்களாவர். இவர்களும் பகவத் கைங்கரியத்திலும் பாகவத கைங்கரியத்திலும் இறைத்தொண்டிலும், அடியார் தொண்டிலும் திளைத்தவர்களாவர்.

வைணவ ஆசாரிய பரம்பரை, 'ஸ்ரீமந்நாராயணன், திருமகள், விஷ்வக்சேனர் (சேனை முதலியார்) நம்மாழ்வார் – பின் நாதமுனிகள் தொடக்கமாக எனக்கூறுவது மரபு.[3]

நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள்–என்பது நன்கு தெரிந்த பரம்பரை. இதில் எம்பார் இடத்தில் கூரத்தாழ்வானைக் கருதுவதுமுண்டு', என்று விளக்குகிறது திரிம் சத்ப்ரச்நோத்ரம்.[4]

இவர்களுள் முதல் மூவரும் (திருமால், திருமகள், சேனைமுதலியார்) மனித இனத்தைச்சேர்ந்தவரல்லர். நான்காமவராகிய நம்மாழ்வரோ ஆழ்வார்களுக்குத் தலைவர். ஆதலால், ஆசாரிய பரம்பரை நாதமுனிகளை முதலாகக் கொண்டு தொடங்குகிறது என்பதே பொருத்தம். இவ் ஆசாரிய மரபு,

1. ஆச்ரயண பரம்பரை (சார்பு வழி)
2. கிரந்த பரம்பரை (நூல்வழி) என இருவகைப்படும்.

கிரந்த பரம்பரை

ஸ்ரீபாஷ்ய பரம்பரை | திவ்வியப்பிரபந்த வியாக்கியான பரம்பரை | இரகசிய கிரந்த பரம்பரை

என்று கிரந்த பரம்பரை மேற்குறித்தவாறு மூன்று பிரிவாக அமைந்தது. இங்ஙனம் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் தமக்குரிய துறையினை வளர்த்துவந்தனர். எனினும், மற்றத் துறைகளை மறந்துவிடாமல் அவற்றிலும் நிறைந்த அறிவும் ஆர்வமும் வாய்ந்தவர்களாக விளங்கினர். இது தவிர, பொதுவான சார்புவழி ஒன்றுண்டு. இனி, தொண்டை நன்னாட்டில் தோன்றிய ஆசாரியர்களையும் அவர்களது பணிகளும் பற்றி ஆராயப்படும்.

**நாதமுனிகள்** (கி.பி. 823-918) திவ்வியப்பிரபந்தங்களைத் தொகுத்தவர். அவருக்குப்பின் குறிப்பிடத்தக்கவர் அவரது பெயரர் ஆளவந்தார் என்பவர். இவரது சீடர்களில் குறிப்பிடத்தக்கோர்.

1. பெரிய நம்பி.
2. திருக்கோட்டியூர் நம்பி.
3. பெரியதிருமலை நம்பி.
4. திருமலையாண்டான்.
5. திருக்கச்சிநம்பி.
6. மாறநேரிநம்பி.
7. திருவரங்கப் பெருமாளரையர்-என் போராவர்.

6.2.1. **உடையவர் வரலாறு : அவதார காரணம் :** முற்காலத்தில் புரோகிதர்கள் புலனின்பத்துக்கு ஆளாகி, மது மாமிசத்தைக் கொண்டு இயற்றும் பல தீய வேள்விகளைச் செய்தனர். வேதங்களில் அவற்றுக்கு அனுமதி இருப்பதாகவும் பிரசாரம் செய்தனர். இந்நிலையில் புத்தர் தோன்றி வேதத்தையும், கடவுளையும் நீக்கி நல்ல செயல்களைச் செய்யுமாறு மக்களை வற்புறுத்தினார். இதனால் அவரை அறிவிலிகள் நாத்திகர் என்றனர். நல்லவர் கெட்டவர் அனைவரையும் அவர் தமது மோட்சப்பாதையில் (நிர்வாணம்) பயணிகளாகக் கொண்டார். ஆனால், தகுதியற்றவர்கள் அவரது உன்னதமான அரிய மதிப்புள்ள கருத்துகளைத் தமது வாழ்வில் நடைமுறையில் கொண்டுவரத் தவறினர். இப்படியாக அவரது தூய்மையான ஆத்திகக் கொள்கை நாத்திகமாகவும், சூனியவாதமாகவும் தாழ்வுற்றது. உலகைப் படைப்பவனும் இல்லாத நிலையில் யாரிடம் பயப்பட வேண்டும் ? என்ற எண்ணத்தில் வேரூன்றி, புத்தரைப் பின்பற்றியவர்கள் மனம் போனபடி வாழ்ந்துகொண்டு, நல்வழியில் திரும்ப இயலாதவராயினர். மீண்டும் உலகில் இன்பமும் அமைதியும் ஒழிந்தன. இந்நிலையில் ஆதிசங்கரர் தோன்றி, தகுதி வாய்ந்தவர்களுக்கு வேதத்து உண்மைகளைக் கவனத்துடன் வெளியிட்டார். அவர் வந்த பணி முடிந்தபின், முப்பத்திரண்டாவது வயதில் அவர் இயற்கை எய்தினார்.

சங்கரருக்குப் பின் அவரது நெறியை மேற்கொண்ட துறவியர் பலர் புலன்களுக்கு அடிமையாகி, வேதங்களின் சாரமான நான்கு மகாவாக்கியங்களுக்கு சங்கரர் தெரிவித்த உரையை மாற்றி மொழிந்து, தங்களுக்கும் சமூகத்திற்கும் பெருங்கேட்டை விளைவித்தனர்.

'நான் பிரம்மம் ஆகிறேன்' (அஹம் ப்ரம்மாஸ்மி- பிருகதாரண்யக உபநிடதம், 1 : 4 ச 10) என்ற மகாவாக்கியத்திற்கு, 'சாதாரண நிலையிலுள்ள, பிறப்பு, இறப்பு மூப்புப் பிணிக்கு ஆளான இப்பௌதிக மனிதனே அழிவற்ற ஆதியந்தமற்ற, எங்கும் நிறைந்த பேரானந்த வீடான பிரம்மமாகிறான்' என்று அவர்கள் பொருள்கொண்டனர். சத்தியத்தில் அசத்தியமும், தாமரை இலையில் தண்ணீரும் ஒட்டாததுபோல, பிரம்மத்தை எதுவுமே தீண்டமுடியாது என்று கருதினர். எனவே, அவர்கள் எதைச் செய்தாலும் தம்மீது எவ்வித மாசும் படியாது என்று கருதினர். இத்தகைய தவறான கருத்துகளைப் பற்றிக்கொண்டு, பாரதநாட்டில் மீண்டும் தீய வழிகளையும் பேராசையையும் பகையையும் அசத்தியத்தையும் நடமாட

விட்டனர். இன்பமும் அமைதியும் உண்மையும் மறைந்தன. இந்நிலையை மாற்றத் தோன்றியவர் ஸ்ரீராமானுஜர் ஆவார்.[5] இவர் விசிட்டாத்துவதை நெறியை உருவாக்கியவர். விசிட்டாத்வைதம் பற்றிய விளக்கத்தை அட்டவணை IIIஅ-இல் காணலாம்.

ஆளவந்தாரின் சீடர்களில் ஒருவரான பெரிய திருமலை நம்பிக்கு இரு தங்கையர் இருந்தனர். அவர்களுள் மூத்த தங்கையாகிய பூமிப்பிராட்டி என்ற காந்திமதி, ஸ்ரீபெரும்புதூரில் இருந்த கேசவ சோமயாஜியை மணந்தார். இவ் இருவர்க்கும் பிங்கள, சித்திரை, 12-ஆம் நாள், திருவாதிரை நன்னாளில் சக ஆண்டு 939, கி.பி. 1017 வியாழக்கிழமை இராமானுஜர் பிறந்தார். அடுத்த தங்கையான பெரியபிராட்டி, மதுரமங்கலம் கமலநயனபட்டரை மணந்தார். இவ் இருவருக்கும் கி.பி. 1026-ல் எம்பார்[6] தோன்றினார். (குரோதன, தை, புனர்வசு நன்னாள்). பெரிய திருமலை நம்பி இவ்விருவர்க்கும் முறையே 'இளையாழ்வான்' என்றும், 'கோவிந்தன்' என்றும் பெயரிட்டு மகிழ்ந்தார்.

உடையவர்க்கு இளமையில் திருமணம் முடிந்தது. சில நாள்களில் தந்தை காலமானார். எனவே, அவர்தம் குடும்பத்தினருடன் காஞ்சிபுரம் சென்று தங்கினார். அருகிலுள்ள திருப்புட்குழி சென்று அத்வைதியான யாதவப் பிரகாசரிடம் சென்று கல்வி பயின்றார்.[7] உடன் சென்று கோவிந்தரும் கல்வி பயின்றார். ஸ்மிருதி வாக்கியங்களுக்குக் குரு மாறுபட்ட முறையில் பொருள் கூறினார்.[8] எனவே இருவருக்கும் பிணக்கு ஏற்பட்டது ; குரு, சீடரைக் காசி யாத்திரையாக அழைத்துச்சென்று கொல்ல எண்ணினார். வழியிடையில் உடையவர் பேரருளாளன் அருளால் காஞ்சி மீண்டார். கோவிந்தர் காசிக்குச் சென்று கங்கையில் நீராடும்போது, அவருக்கு ஓர் இலிங்கம் கிடைத்தது.[9] அதனால் அவர் இந்த இலிங்கத்தைத் தம் ஊரில் பிரதிட்டை செய்து, பின் காளத்தி சென்று திருக்கோயில் தொண்டில் ஈடுபட்டார். பின்னர் உடையவர் வேண்ட, பெரியதிருமலை நம்பிகள் அவரைத் திருத்திப் பணிகொண்டு மீண்டும் வைணவ சமயத்தில் சேரவைத்தார் ; உடையவரிடம் அவரை ஒப்படைத்தார். இந்நிகழ்ச்சியிலிருந்து அக்காலத்தில் மதமாற்றங்கள் நடந்தை நாம் அறியமுடிகிறது. அதுபோன்றே பிற மதத்தில் சேர்ந்தோர், திரும்பத்தாய்மதத்திற்குத் திரும்பும் வழக்கமும் இருந்ததை அறியமுடிகின்றது.

உடையவர் காஞ்சியில் பேரருளாளனுக்குத் தொண்டுபுரிகையில், ஆளவந்தார் திருவரங்கத்திலிருந்து அங்குவந்து, இவரைத் தொலைவிலிருந்து நோக்கி, 'ஆம்முதல்வன்' என அறிந்து வாழ்த்தினார். பின்னர் பேரருளாளரிடம் அவர் வேண்டினார்.

'திருமகள் கேள்வா ! செங்கமலக் கண்ணா !' இராமானுஜரிடம் நீ அருள்கொண்டு அவரை உனது நெறியில் வந்து சேருமாறு செய்வாயாக ![10]

இவ்வாறு வேண்டிப் பின் திருவரங்கம் சென்றார். பின் ஆளவந்தார் இயற்கை எய்த, இராமானுஜர் அவர் உடலைப் பார்க்க நேர்ந்தது. அவருடைய ஒரு கையில் மூன்று விரல்கள் மடங்கியிருந்தன. அவருடைய மூன்று விருப்பங்கள் நிறைவேறாததால் இவ்வாறு நேர்ந்தன என அங்கிருந்தோர் கூறக்கேட்டு, அவற்றைத் தாம் நிறைவேற்றுவதாக உறுதிகூறினார்.

பின்னர் உடையவர் காஞ்சி திரும்பினார். திருக்கச்சி நம்பிகள் மூலமாக பேரருளாளர் அருளிய 'ஆறு வார்த்தைகளைக்'[11] கேட்டறிந்தார். பெரிய நம்பிகள் இவருக்குமதுராந்தகத்தில் பஞ்சசம்ஸ்காரங்களை (ஐந்திக்கை) கோதண்டராமர் சந்நிதியின் பின்புறத்திலுள்ள மகிழமரத்தடியில் செய்தார்.[12] பெரிய நம்பிகளிடம் மந்திரார்த்தங்களைக் கற்றார். பின்னர் இராமானுஜர் துறவியானார்.

6.2.2. **திருவரங்கத்தில் தலைமைப் பதவி ஏற்றல் ; சமயக்கல்வி பெறுதல் :** பின்னர் உடையவர் திருவரங்கத்தில் மடத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். திருக்கோட்டியூர் நம்பியிடம் மறைபொருள்களைக் கற்றார். திருஎட்டெழுத்து மந்திரத்தை அனைவர்க்கும் உபதேசித்தார். அதனால் நம்பியின் சீற்றத்துக்கு ஆளானார். 'ஆசாரியன் சொல்லை மீறியதன் பயனாய் அடியேன் ஒருவன் மட்டும் நரகம் புகுவேன் ; ஆயின் இவர்கள் அனைவரும் பரமபதம் அடைவர்' என்று கூற, நம்பிகள் கேட்டு, 'பிறர் நலத்திற்காகத் தன்னலம் துறப்பவனே மனிதருள் மாணிக்கம் ; அத்தகையவன் கோடியில் ஒருவன்' என்று பாராட்டி,

'நன்று நன்று அன்ப ! உன்னை நானிலத்து எவர்கள் ஒப்பார்
தன்னுயிர் தன்னைக் கொண்டு தான்பிழைத் திடுவதன்றி
மன்னுயிர்க் கிரங்கித் தன்னை மைந்தனே ! மாய்க்கப்புக்கார்
இந்நிலத்தில்லை ! இல்லை ! ஏழுலகத்தும் இல்லை !

என்று பலவாறு கூறி, 'எம்பெருமானேரே !' என்று உடையவரை அணைத்துக்கொண்டார். விசிட்டாத்வைத சித்தாந்தம் 'எம்பெருமானார் தரிசனம்' என்று அன்றுமுதல் அழைக்கப்பெற்றது.

6.2.3. **கூரத்தாழ்வான் ஸ்ரீபாஷ்யம் எழுத உதவுதல் :** காஞ்சிக்கு மேற்கிலுள்ள கூரத்தில் பிறந்தவர் கூரத்தாழ்வான்.[13] (கி.பி. 1010). இவர்தம் பெருஞ்செல்வத்தைத் துறந்து வந்து உடையவரின் சீடரானார். இவருக்குத் திருவரங்கன் திருவருளால் ஆண்மக்கள் இருவர் தோன்றினர். அவர்களுக்கு முறையே 'பராசரபட்டர்', 'வேதவியாசபட்டர்' என்ற பெயர்களைச் சூட்டி, ஆளவந்தாரின் விருப்பங்கள் மூன்றனுள் ஒன்றினை நிறைவேற்றினார் இராமானுஜர்.

உடையவர், கூரத்தாழ்வானுடன் காஷ்மீரம் சென்று, சாரதாபீடத்திலிருந்த போதாயனரின் பிரம்மசூத்திர[14] விளக்கவுரையைப் படித்துவந்து, 'ஸ்ரீபாஷ்யம்' என்னும் பிரம்மசூத்திர விசிட்டாத்வைத பரமான உரையெழுதினார். அவ்வகையில்

ஆளவந்தாரின் மற்றொரு விருப்பத்தை நிறைவேற்றினார். திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவரைக் கொண்டு திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி உரைவகுத்தார். இவ்வகையில் ஆளவந்தாரின் மூன்றாவது விருப்பத்தையும் உடையவர் நிறைவேற்றினார்.

'தத்த்வமஸி'–அது நீ ஆகிறாய் என்றும்,

'அஹம் பிரம்மாஸ்மி'–நான் பிரம்மமாக இருக்கிறேன்' என்றும் உள்ள வேதவாக்கியங்களை வெறுமே ஞானத்தினால் அறிந்துகொண்டால் போதும் நிரந்தரமான முக்தியின்பத்தைப் பெற்றுவிடலாம் என்று சொல்வோரின் தவறான கொள்கைகளை முறியடித்து,

இவ்வாக்கியங்களை அறிவதுடன் வேள்வி, தானம், தவம், கர்மம் ஆகியவற்றின் சிறந்த பயன் பயக்கும் தன்மையையும் ஒப்புக்கொண்டு, 'ஞானமும் கர்மமும் இணைந்தவை' என்று கூறும் ஞான-கர்ம சமுச்சயவாதிகளின் கொள்கைகளையும் முறியடித்து,

'தியானம், வழிபாடு, பக்தி ஆகியவற்றின் வாயிலாகத்தான் முக்தி கிடைக்கும்'–என்பதே வேதங்களும், வேதாந்தங்களும் கூறும் சாரமான பொருள் என்பதை நிலைநிறுத்தும் முறையில் இவரது ஸ்ரீபாஷ்ய உரை அமைந்தது.[15]

கூரத்தாழ்வான் இவ்விரிவுரையை ஏடுபடுத்தும்போது, 'தான் சொல்வது பொருத்தமில்லை என்று தோன்றினால் நிறுத்துமாறு' உடையவர் கூறியிருந்தார். அவ்வகையில், ஜீவனுடைய உண்மை இயல்பை வருணிக்கும்போது, உடையவர்,

'நித்யத்துவமும்—எப்பொழுதும் இருக்கும் தன்மையும், ஜ்ஞாத்ருத்வமுமே-அறியும் தன்மையுமே, ஆத்மாவுக்கு இயற்கையான இயல்பு'—என்று கூறினார். அதாவது, 'ஞானமயமாக இருப்பவன் ஆத்மா, (அல்லது) அறியும் தன்மை ஒன்று மட்டுமே ஆத்மாவின் தனிப்பட்ட பண்பு என்று பொருள். இதைக் கேட்டதும் ஆழ்வான் எழுதுவதை நிறுத்தினார். பின் உடையவர் சிந்தித்து,

'ஜீவனின் உண்மை இயல்பு அறியும் தன்மை மட்டுமன்று ; அதனுடன் இறைவனை அறிவுடன் சார்ந்திருப்பதுதான் ; உடையவன் தன் உடைமையை முற்றும் தனக்காகப் பயன்படுத்திக்கொள்வதுபோல், இறைவன் தன் விருப்பப்படி பயன்படுத்திக்கொள்ளும் உடைமையே ஜீவன்' என்று சிந்தித்துக் கூறினார். மமைவாம் சோ ஜீவலோகே ஜீவபூத ; ஸனாதன : கீதை 15.7—இந்த உயிருலகில் என்றுமுள்ள எனது ஓர் அம்சமே ஜீவனாக உள்ளது என்னும் கீதையின் கருத்து இங்கு அறியத்தக்கது. ஆழ்வான் தொடர்ந்து எழுதினார்.[16] ஸ்ரீபாஷ்யம் பற்றிய சுருக்கமான விளக்கத்தை பின்இணைப்பு 4-இல் காணலாம்.

6.2.4 **முதலியாண்டான் சீடராதல் :**[17] பூவிருந்த வல்லிக்கு அருகிலுள்ள பச்சைவாரனர் கோயிலில் உடையவரின் தங்கை பூமிப்பிராட்டி என்பவர் அனந்தநாராயண தீட்சிதரை மணந்து வாழ்ந்தார். இவ் இருவருக்கும் பிறந்தவர் முதலியாண்டான். இவர்தம் செல்வத்தையெல்லாம் துறந்து உடையவரின் சீடரானார். இவரைத் 'தண்டு' (திருதண்டம்) என்றும், கூரத்தாழ்வானைப் 'பவித்திரம்' என்றும் உடையவர் சிறப்பித்திருந்தார். இவர் முதல் திருவந்தாதிக்கு ஒரு தனியன் பாடியுள்ளார்.[18] இவர் மகன் கந்தாடையண்ணன் ஸ்ரீபெரும்புதூரில் இராமானுஜருக்கு - அவர் காலத்திலேயே ஒரு விக்கிரகம் அமைந்தார்.[19] இது 'தான் உகந்த திருமேனி' எனப்பெறும். உடையவர் திருவடி முதலியாண்டான் எனப்படும். "சடாரி" என்றல் தவறு. முதலியாண்டானுக்குப் பின் அவரது குடும்பத்தினர் பெரியகோயில் பொறுப்புகளைக் கவனித்து வந்தனர். முகம்மதியர் படையெடுப்புக்குப் பின் இது மாறியது.

6.2.5 **சோழமன்னன் பகைமை :** சைவம் பெரியதா ? வைணவம் பெரியதா ? என்ற விவாதம் எழுந்த வகையில், சோழமன்னன் முதற் குலோத்துங்கனின்[20] பகை உடையவருக்கு ஏற்பட்டது. அம்மன்னன் எண்ணத்தை அறிந்த கூரத்தாழ்வான் உடையவரின் காவியுடையைத் தாம் அணிந்து அரசவைக்குச் சென்றார். உடையவர் மைசூரை அடைந்தார் ; அங்கு அந்நாட்டு மன்னன் விட்டலதேவன் (பிட்டிதேவன்) இவருக்கு அடியவனானான். திருநாராயணபுரத்தில் யதிராஜமடமும், தொண்டனூரில் ஓர் ஏரியும் அமைத்தார். தில்லி சென்று முகமதிய அரசன் மகளிடமிருந்த செல்வப்பிள்ளை - உற்சவவிக்கிரகத்தை மீட்டுவந்து, திருநாரயணப் பெருமாளுடன் சேர்ந்தார்.[21] அவ்வகையில் தமக்கு வழியில் பாதுகப்பளித்து உதவிய உறரிஜனங்களுக்குத் "திருக்குலத்தார்" என்று பெயரிட்டார். அவர்கள் திருநாராயணப் பெருமாள் ஆலய ஆண்டுவிழாவில் (பிரம்மோற்சவம்) குறிப்பிட்ட நாள்களில் (3 நாள்) கருவறை வரை சென்று பெருமானைச் சேவிக்கவும், தீர்த்தம், சடாரி ஆகியவற்றைப் பெறவும் வழி செய்தார். இவ்வகையில் 890 ஆண்டுகளுக்கு முன்பே "உறரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு" வழி வகுத்துப் பெரிய சமுதாயப்புரட்சி செய்தார் இராமானுஜர்.

6.2.6 **தரிசனத்துக்காகத் தரிசனம் தந்த ஆழ்வான் :** சோழமன்னனால் தம் கண்களை இழந்த கூரத்தாழ்வான், அழகர்மலை நோக்கிச் சென்றார். வழியில் ஸ்ரீவைகுண்ட ஸ்தவம், அதிமானுஷஸ்தவம் என்ற இரு நூல்களை இயற்றினார். அழகர்மலையை அடைந்து "சுந்தர பாகுஸ்தவம்" பாடினார். பின்னர் காஞ்சி சென்றபோது உடையவர் விருப்பப்படி "வரதராஜஸ்தவம்" பாடினார். இவை பஞ்சஸ்தவங்கள் எனப்டும்.

சுரத்தாழ்வான் தமது அகக்கணகளால் பரமபதநாதனைக் கண்டு பாடியதே ஸ்ரீவைகுண்டஸ்தவம் ஆகும். இந்நூலைத் தமது ஆசாரியருக்கு வணக்கம் கூறித் தொடங்குகின்றார். இந்த எம்பெருமானாரைப் பற்றிய தனியன் சுலேகம்தான், எல்லா

வைணவப் பெருமக்காளாலும் திவ்வியப்பிரபந்தத் தொடக்கத்தில் சேவிக்கப்படுகின்றது.

"யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோகதஸ் ததிராணி த்ருணாய மேநே
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைய சிந்தோ
ராமானுஜஸ்ய சரணௌ சரணம் பிரபத்யே"

"எந்த இராமானுஜர், எப்பொழுதும் அழிவில்லாதவனான எம்பெருமானுடைய இரண்டு திருவடித் தாமரைகளாகிற பொன்னிடத்தில் வைத்த ஆசையினால் அந்தப் பகவானுக்கு வேறான விஷயங்களைத் துரும்பாக நினைத்தாரோ, அப்படிப்பட்ட என்னுடைய ஆசாரியரும், எல்லாக் குணங்களும் நிறைந்தவரும், அருட்கடலானவருமான இந்த இராமனுஜருடைய இரண்ரு திருவடிகளையும் உபாயமாகப் பற்றுகிறேன் ; - என்று இதற்குப் பொருள் தருகிறார் புருடோத்தமநாயுடு.[22] இறைவன் திருவடிகள் வடிவாலும், நிறத்தாலும் தாமரைமலர் போன்றன என்றும், மதிப்பால் பொன்னைப் போன்றவை என்றும் கொள்ளவேண்டும்.

"பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் ; - என்னும் ஆண்டாள் வாக்கு இங்கு நோக்கத்தக்கது."

இவ் ஐந்து நூல்களின் சிறப்பை ஆழ்வானின் திருக்குமாரர் "பட்டர்" பின்வருமாறு கூறுகின்றார் :

"ஆழ்வானுடைய ஸ்ரீசூக்திகள் வேதமாகிற பெண்ணின் கழுத்திலே திருமாங்கல்யமாக இருக்கும் தன்மையுடையவை. அந்தப் பரமபூஜ்யரான ஆழ்வான் பொருட்டு நம : என்ற சொல்லை ஓதுகின்றோம்."[23]

6.2.7 **உடையவர் திருவரங்கத்துக்குத் திரும்புதல் ;** உடையவர், மைசூரில் ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து, சோழன் மறைவுக்குப்பின் திருவரங்கம் வந்து சேர்ந்தார். அவரைப் பிரிய மேலக் கோட்டையிலிருந்த அடியார்கள் வருந்தினர். தம்மைப்போன்ற ஒரு விக்கிரகத்தை அங்கே நிறுவச்செய்து, அதன் பின்னர் அவர்களிடம் விடைபெற்று வந்தார் இராமானுஜர். இது தமருகந்த திருமேனி[24] எனப்படும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்மப் பல்லவனால் தில்லையம்பல முன்றிலில் நிறுவப்பெற்று, அந்நாள் முதல் நிலைபெற்றிருந்த திருமால் மூர்த்தத்தைக் கடலில் எறிந்தான் இரண்டாம் குலோத்துங்கன். அவ் உற்சவரைக் கடலிலிருந்து எடுத்துவந்து திருப்பதியில் சேர்த்தனர் அடியார்கள். உடையவர் திருப்பதியில் ஒரு புதிய ஆலயம் அமைத்து, அங்கு அ/மி. கோவிந்தாராசரை எழுந்தருளச் செய்தார்.

6.2.8 **ஆழ்வானின் அருள் உள்ளம் :** ஆழ்வானின் கண்கள் தன்னால்தான் பிடுங்கப்பட்டன என இராமானுஜர் வருந்தி, அவரை அழைத்துகொண்டு காஞ்சி பேரருளாளன் சந்நிதியை அடைந்தார். "நீர் கண் வேண்டி நம் வரதனைப்பற்றி ஒரு துதிசெய்யும்" என்று நியமித்தார். ஆழ்வானுக்கு ஊனக்கண்ணில் நாட்டமில்லை. ஆயினும் ஆசாரியரின் சொல்லுக்கு இணங்க அருளாளன் மீது, "ஸ்ரீவரதராஜஸ்தவம்" என்னும் நூலை இயற்றினார். இதில் நூற்றிரண்டு சுலோகங்கள் உள்ளன. தமக்குக் கண் வேண்டும் என்று வெளிப்படையாக வேண்டாமல் குறிப்பாக வேண்டுகிறார் (90-ஆம் சுலோகம்).[25]

"நிகரற்ற திருவருளை உடையவரும் பொறுமைக் கடலாயும் எல்லாருக்கும் நன்மையை அளிப்பவரும் விரும்பிய எதையும் அருள்பவரும் ஆன ஸ்ரீவரதராஜப்பெருமாளே ; கீழ்க்கூறியபடியானபோதும் அடியேன் நூற்றுக் கணக்கான கெட்ட வாசனைகளின் வயப்பட்டவனானபடியால், ஏதோ ஒன்றை விரும்பிக் கேட்கின்றேன். அதை அருளவேணடும்" என வேண்டி நின்றார். அப்பொழுது பெருமாள் உமக்கு என்ன வரம் வேண்டும் ?" என்ன ?

"நான் பெற்ற பேறு நாலூரான் பெறவேண்டும்" - என்று பகைவனுக்கும் அருள் செய்யும் பண்போடு, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்போடு வேண்டி நின்றார். உடையவர் இதைக் கேட்டு வியந்தார். பின், பெருமாள் தம்மையும், உடையவரையும் சேவிக்கும்போது மட்டும் ஆழ்வானுக்குக் கண்கள் தெரியும்படி அருள்செய்தார்.

"நாலூரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே"
என்பது ஆழ்வானின் வாழித் திருநாமப் பாடலின் வரியாகும்.[26]

6.2.9 **திருவாய்மொழிக்கு முதல் வியாக்கியானம் தோன்றுதல் :** திருமலையில் வசித்த பெரியதிருமலை நம்பியின் மகனாகத் தோன்றியவர் "பிள்ளான்", என்பவர் (கி.பி.1068). இவர் இராமானுஜரின் அறிவுப்பிள்ளையாகவும்[27] (ஞானபுத்திரர்) மாணாக்கராகவும் விளங்கினர். இவருக்கு நம்மாழ்வாரின் நினைவாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்று யதிராசர் பெயர் சூட்டினார். அவர் வைணவ சமயத்தைப் பரப்ப நியமித்த எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் இவர் முதல்வராவார்.

ஆசாரியர்களும், பாகவதர்களும் ஒன்றுகூடிப் பிள்ளான் மூலமாக, 'திருவாய்மொழி முதலான நூல்களுக்கு உரை வகுக்குமாறு உடையவரை வேண்டினர். அது கேட்ட உடையவர், "ஆழ்வார் பாசுரங்களுக்குப் பொருள் அவரவர் அறிவுக்கும் பக்திக்கும் தக்கவாறு சுரக்கும். ஆகவே நாம் செய்யின் அருளிச் செயல்களுக்கு வரம்பு கட்டியதுபோலாகும் ; நீரே திருவாய்மொழிக்கு ஒரு படி உரை எழுதும்" என்று பிள்ளானையே பணித்தார். பிள்ளானும் அதை ஏற்று, "ஆறாயிரப்படி" உரை கண்டார். இவ்வகையில் ஆளவந்தாரின் மூன்றாவது

விருப்பத்தையும் இராமானுஜர் நிறைவேற்றினார். திருவாய்மொழுக்கு அமைந்த அவ்விரிவுரையின் பெருமையை அறிந்த உடையவர், "யாம் செய்த ஸ்ரீபாஷ்யத்தைப் போலவே, இதுவும் காலட்சேபத்தில் வைக்கப்படுவதாக' என்று பணித்தார்.

''பாசுரங்களின் திரண்ட கருத்தினைப் பெரும்பாலும் விளக்கிச்செல்லல், பாட்டிலும் சுருக்கமாக உரை வகுத்தல், பாட்டினை உரைநடையாக்கி எழுதிச்செல்லல், சமயக் கருத்துகளை விளக்கும்போது விரிந்த உரை எழுதிச்செல்லல், பாட்டின் சில தொடர்களை விடுத்துச் சில தொடர்களுக்கு விரிந்த உரைகூறல், இராமானுஜரின் கத்யத்திரயத் தொடர்கள் விரவி எழுதுதல்" - ஆகியவை ஆறாயிரப்படியில் காணப்படும் இயல்புகளாகும். அன்றியும் ஒவ்வொரு திருமொழியிலும் முன்வந்த பாசுரங்களோடு தொடர்புபடுத்தி எழுதுவதும் இவரது இயல்புகளாகும்.

6.2.10 மேலும் பல திருப்பணிகள், சீர்திருத்தங்கள் :

1 வைணவருடைய தினசரி ஒழுக்கங்களையும் ஆலய வழிபாட்டு முறைகளையும் உடையவர் ஒழுங்குபடுத்தினார். திருவரங்கம் முதல் எல்லாத் திருமால் ஆலயங்களிலும் இன்னின்ன காலங்களில் இன்னின்ன பாசுரங்களைச் சேவிக்கவேண்டும் என்று நியமித்தார். இதனால் ஆழ்வார்களின் செந்தமிழ்ப்பாசுரங்கள் வைணவர் குடும்ப வாழ்விலும் புகுந்து அனுபவிக்கத்தக்க பொருளாகிவிட்டன. இச்சிறப்பு, சொல்லப்போனால் உலக வரலாற்றிலேயே வேறெந்தச் சமய இலக்கியத்துக்கும் இல்லாத ஒரு மேலான வாய்ப்பாகும்.''[28]

2 பெரிய கோயில் நிருவாகமுறை சீர்கெட்டிருந்ததை அறிந்து சீர்திருத்தினார். பத்துக்கொத்துகள் (குழுக்கள்) ஏற்படுத்தி, ஒவ்வொரு கொத்துக்கும் உரிய பணிகளை வகுத்தார். இதுபற்றிக் "கோயிலொழுகு" என்னும் நூல் விரிவாகக் கூறுகின்றது. இதனால் எம்பெருமானாரை, "தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே" - என்று உலகமெல்லாம் இன்றும் வாழ்த்தி வருகின்றன.

3 பாகவதர் குழுவில் இராமானுஜர் திருவாய்மொழிக்குப் பொருள் உரைத்துக் கொண்டிருந்தார். அப்போது, ''ஒழிவில் காலமெல்லாம்'' என்ற பதிகத்தில் ''சிந்து பூ மகிழும் திருவேங்கடம்'' என்ற தொடர் வந்ததும், தம் குழுவினரை நோக்கி, திருவேங்கடமுடையானுக்கு நந்தவனம் அமைத்துப் பூக்கொடுப்பார் இங்கு யாரேனும் உண்டோ ? என்று கேட்டார். உடனே அனந்தாழ்வான் என்பவர் அத்திருப்பணியை ஏற்றார் அவ்வாறே திருமலைக்குச் சென்று நந்தவனம் அமைத்து, ''இராமானுஜன்'' என்று பெயரிட்டு, மலர்க்கைங்கரியம் செய்துவந்தார்.

4 திருமலைப் பெருமாள் சிவனா ? திருமாலா ? என்ற விவாதம் ஏற்பட்டபோது "அவர் திருமாலே" என்பதை இவர் நிறுவினர். "மூலவரின்

கருவறைக்கு மேலிருக்கும் ஆனந்தநிலைய விமானத்தை வைகானச ஆகம விதிப்படி சீர்திருத்தம் செய்தார். மூர்த்தியைச் சரியான நிலையில் எழுந்தருளச் செய்து, பத்மாவதித் தாயார் பிம்பம் ஒன்றைத் தங்கச்சங்கிலியில் சேர்த்துப் பெருமாள் திருக்கழுத்தில் சார்த்தினார்."

5 அடுத்ததாக அவர் கவனத்தைச் செலுத்தியது பெருமாளுக்கு வாரந்தவறாமல் திருமஞ்சனம் செய்வித்து, நெற்றியில் திருமண்காப்பு சார்த்துவது பற்றி ஆகும். வைகானச ஆகமத்தில் ஆனந்த சம்உறிதையில் சொல்லப்பட்டிருக்கும் முறைப்படி ஒவ்வோரு வெள்ளிக்கிழமையும் வாரத் திருமஞ்சனம் செய்வது ; பின் நெற்றியிலிடும் திருமண்காப்பு பச்சைக்கருப்பூரத்தால் இடப்படவேண்டும். திங்கள், செவ்வாய், புதன், ஆகிய மூன்று நாள்களும், திருமண் சார்த்தவேண்டும். வியாழக்கிழமை பெருமாளின் திருமேனியிலிருந்து ஆடை அணிகளைக் களைந்துவிட்டு, மலர்களால் அலங்கரிக்கவேண்டும். இந்த அலங்கார மாற்றம் செய்யும்போது 'நாச்சியார் திருமொழி' என்னும் பிரபந்த பாகத்தைச் சேவிக்கவேண்டும் - என விதித்தார்.

6 பெருமாளுக்குத் திருவாராதனங்களைச் சரிவரச் செய்யவும் வைகானச ஆகமமுறைப்படி நடத்தவும். முதல் வைகானச பட்டரான பிம்பாதரர் என்பவருடைய வம்சத்தவர்களிடம் ஒப்படைத்தார்.

7 ஆழ்வார்களின் விக்கிரகங்களைக் கீழ்த்திருப்பதி கோவிந்தராஜர் சந்நிதியில் அமைக்கச் செய்தார். அ/மி. ஆண்டாளின் சந்நிதி ஒன்றையும் அங்குத் தனியே அமைக்க ஏற்பாடு செய்தார். இவ்வகையில் யாதவராயன் என்னும் சிற்றரசன் அவருக்கு உதவினான். அவன் இக்கோயிலின் நான்கு பக்கங்களில் வீடுகளைக் கட்டி அவற்றைப் பிராமணர்களுக்கு வழங்கி, அக் குடியிருப்புக்கு "இராமானுஜபுரம்" எனப் பெயர் வைத்து அங்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தான்.

8 திருமலையில் பெருமாளுக்கு கைங்கரியம் செய்பவர்கள்தான் வசிக்கவேண்டும். மற்றவர்கள் மலையடிவாரத்தில்தான் வசிக்கவேண்டும். மேல்மலையில் வசிப்போரில் யாராவது இறக்கும் நிலையிலிருந்தால், அவர்களைக் கீழே கொண்டுவந்து விடவேண்டும். மலையிலுள்ள விலங்குகள் பறவைகள் யாவும் பெருமாளிடம் பக்தி பூண்டனவாகும். ஆகவே அவற்றை வேட்டையாடக்கூடாது ; மலைமேல் செல்வோர் வாகனங்களில் செல்லக்கூடாது. மலைமேல் வேறு தெய்வங்களுக்குக் கோயில் கட்டக்கூடாது என்ற விதிகளையெல்லாம் யதிராசர் வகுத்தார்.

9 திருமலையில் கோவில் அமைத்தபொழுதே அரங்கதாசர் என்னும் பக்தரால் இரு கிணறுகள் வெட்டப்பட்டு அதிலிருந்து கோவில் உபயோகத்திற்கு நீர் எடுத்துக்கொள்ளப்பெற்றது. ஆயினும் அவை பழுதடைந்தன. உடையவர் இவற்றைச் சீர்செய்தார். கோவிலில் உபயோகப்படுத்தும் பூக்களை அக்கிணற்றில் போட்டுவிட ஏற்பாடு செய்தார்.

10 எம்பெருமானார் திருவேங்கடவனுடைய இரு திருக்கரங்களில் தங்க நாக ஆபரணங்களை அணிவித்தார். ஆனந்த விமான நிலையத்தின் கீழே அ/மி. நரசிம்மருக்குச் சந்நிதி ஏற்படுத்தி, அங்கு வழிபாடுகள் நடக்க ஏற்பாடுகள் செய்தார்.

11 கோனேரி தீர்த்தத்தின் மேற்குக் கரையிலுள்ள வராகப் பெருமாளுக்கு வழிபாடு செய்த பின்னரே கோவிலில் திருவேங்கடவனுக்குத் திருவாராதனம் செய்யவேண்டும் என்ற பழைய வழக்கத்தை மேற்கொள்ள ஏற்பாடு செய்தார்.

12 பெரியதிருமலை நம்பிகளின் மறைவுக்குப்பின் அவர் நினைவாக ஓர் உற்சவம் ஆரம்பித்தார். இது அத்யயன உற்சவம் முடிந்த மறுநாள் நடத்தப்பெறும். அன்று பெருமாளை மங்களகிரியில் எழுந்தருளச்செய்து, ஸ்ரீவைணவர்கள் ஆகாய கங்கையிலிருந்து திருமஞ்சன நன்னீரை, பெரிய திருமொழி ஒலிக்க எடுத்துக்கொண்டுவந்து, பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்ய ஏற்பாடு செய்தார்.

13 சடகோபயதி என்னும் சந்நியாசியை நியமித்து, திருவாராதனங்களை நடத்த ஏற்பாடு செய்தார். அவருக்கு உதவியாக இரண்டு, மூன்று நபர்களை நியமித்தார்.[29]

14 வைணவ ஆகமங்கள் இருவகைப்படும். அவை வைகானசம், பாஞ்சராத்திரம் என்பன. இவற்றுள் முதலாவது ஒரு குடும்பத்தினருக்கு/பிரிவினருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. இது வேதநெறியை முற்றிலும் தழுவியது. பாஞ்சராத்திர ஆகமம் கட்டுப்பாடு இல்லாதது ; அனைத்துப் பிரிவு மக்களுக்கும் இது பொதுவானது ; இதன் சிறப்பம்சம் இதுவாகும்.

''கடவுள் முன் எல்லாரும் ஓர் குலம்'' என்ற கொள்கையை வேத வழியோடு இணைத்துக்காட்டுவது.[30] எனவே ஏற்கனவே வைகானச ஆகம வழிபாட்டிலிருந்த பல ஆலயங்களை எம்பெருமானார் பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டிற்கு மாற்றினார். உடையவர் செய்த பல புரட்சிகளுள் இதுவும் ஒன்றாகும்.

15 எல்லாவற்றுக்கும் மேலாக சங்கரரின் மாயா வாதத்தை மறுத்து, பிரம்மசூத்திரம், உபநிடதங்கள், மற்றும் பகவத் கீதைக்குத் தம் விசிட்டாத்வைதக் கொள்கையின் அடிப்படையில் விளக்கமளித்தார். ஆதிசங்கரரின் அத்வைதத்தில் ஆன்மாவே கடவுள். விசிட்டாத்வைதத்தில் ஆன்மாவுக்கு வேறுபட்டவராக (விலட்சணம்) உயர்ந்த பரம்பொருளே கடவுளாகும். காண்கின்ற அனைத்தும் அழிபவை ; மாயை, பொய் ; காணாத அந்த ஒன்று மட்டும் மெய் ; சத்தியம் - என்பது அத்வைதம். ஆனால் இராமானுஜரின் விசிட்டாத்வைதமோ,

''இல்லாத பொருள் தோன்றுவதில்லை ; தோன்றும் பொருள் இல்லாது போவதுமில்லை ; அனைத்துப் பொருள்களும் உண்மையே ; அவற்றின் மாற்றங்களும் சத்தியமே ; அவற்றின் காரண காரியங்களும் நித்தியமே'' என

விளக்குகின்றது. உயிர் (சித்து) உடல் (அசித்து) இறைவன் (ஈசுவரன்) ஆகிய மூன்றும் பிரிக்கமுடியாத தத்துவங்களாகும்", என்பது இராமானுச தத்துவத்தின் உயிரான கோட்பாடாகும். இம்மூன்று பொருள்களின் கூட்டமே உலகமாகும் என்பது இவர் கூறும் உண்மையாகும். இவ்வுண்மையை - கொள்கையை உருவாக்க இவருக்கு அடிப்படையாக இருந்தது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரமாகும்.

> "திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
> படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
> உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
> சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" 1 : 1 : 7.

இவர்தம் நெறியின் சிறப்பைப் போற்றும் திருவரங்கத்தமுதனார்,

> "நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன",[31] என்றும்
>
> "பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப",[32] என்றும் போற்றுகின்றார்.

16 இவர் தமது கொள்கைகளைப் பரப்பச் சீடர் குழாத்தை உருவாக்கினார். அவர்களில் எழுநூறு சந்நியாசிகளும், பன்னிரண்டாயிரம் ஏகாங்கிகளும், முந்நூறு பெண் அடியார்களும் (ஸ்ரீஆண்டாள் குழுவினர்) கணக்கற்ற பிராம்மணரல்லாத பாகவத உத்தமர்களும் இருந்தனர்.[33]

6.2.11 எழுபத்து நான்கு சிம்மாசனாபதிகளில் தொண்டை நாட்டைச் சார்ந்தோர்:

1. திருக்குருகைப் பிரான் பிள்ளான்.
2. சுந்தரத் தோளுடையான் (திருமலை ஆண்டானின் திருக்குமாரர்).
3. பராசரபட்டர் - கூரத்தாழ்வானின் திருக்குமாரர்.
4. முதலியாண்டான்.
5. உக்கல் ஆழ்வான்.
6. எம்பார்.
7. கணியனூர் சிறியாச்சான்.
8. திருமலை நல்லான்.
9. உக்கல் அம்மாள்.
10. ஆர்காட்டுப்பிள்ளான்.
11. இடாம்பியாச்சான்.

6.2.12 **உடையவர் வடமொழியில் இயற்றிய நூல்கள் :**

1. வேதார்த்த சங்கிரகம் - விசிட்டாத்வைதக் கொள்கை விளக்கம்.
2. ஸ்ரீபாஷ்யம் - பிரம்மசூத்திர விளக்கம்.
3. கீதாபாஷ்யம் - பகவத்கீதை விளக்கம்.
4. வேதாந்த தீபா - பிரம்ம சூத்திரச் சுருக்கம்.
5. வேதாந்த சாரா - தொடக்க நிலையினர்க்குரிய மேற்படி விளக்கநூல்.
6. சரணாகதி கத்யம்
7. ஸ்ரீரங்க கத்யம் — சரணாகதியைப் பற்றிக் கூறுவன. இவை மூன்றும் கத்யத்ரயம் எனப்படும்
8. ஸ்ரீவைகுண்ட கத்யம் — பரமபதம் பற்றிக் கூறுவது.
9. நித்யகிரந்தா - நாள் வழிபாட்டுமுறைகளைக் கூறுவது

இவர் பெரிய திருமொழிக்கு ஒரு தனியனும் திருமங்கை மன்னரின் திருவெழுகூற்றிக்கை என்னும் பிரபந்தத்துக்கு ஒரு தனியனும் பாடியுள்ளார்.[34]

6.2.13 **திவ்வியப்பிரபந்த ஈடுபாடு :** வடமொழியில் பல நூல்களை எழுதிய உடையவர் தமிழ் நூல்களுள் எதற்கும் விளக்கவுரை எழுதவில்லை. இதனால் அவருக்குத் தமிழ்ப் புலமை குறைவாக இருக்குமோ என்று கருதுபவரும் உண்டு.[35]

திருப்பாவையில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினால் பெற்ற

1. "திருப்பாவை ஜீயர்" என்னும் பட்டமும்,
2. அவரது வாழ்க்கை முறையினைப் பற்றிக் காணப்படும் உரைக்குறிப்புகளும்,
3. அவர் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்து அவர்மேல் இராமானுச நூற்றந்தாதி பாடிய திருவரங்கத்தமுதனார் தம் நூலில்,

"சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன்"[36]

"உணர்ந்தமெய்ஞ் ஞானியர் யோகந் தொறும் திரு
வாய்மொழியின்
மணந்தரும் இன்னிசைமன்னும் இடந்தொறும் மாமலராள்

புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்குநிற்கும்

குணந்திகழ் கொண்டல் இராமானுசன்''[37]

''கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப் பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டுதன் னுள்ளம் தடித்து, அதனால்
வலிமிக்க சீயம் இராமா னுசன்''[38]

என்று போற்றிச் சொல்வதும்,

4. இராமாநுசர் உரைநயங்களாகவும் ஆட்சிகளாகவும் ஈட்டில் பல குறிப்புகள் இருப்பதும் அவர்தம் சிறந்த தமிழ்ப்புலமைக்குச் சான்றுகளாகும்.

உடையவர் திவ்வியப்பிரபந்தத்தில் மூழ்கிக்கிடந்த திறத்தை.

1. ''பகலெல்லாம் பாஷ்யத்திலே அந்யபரராயிருப்பர் ; இரவமுது செய்து பால் அருந்தி-பள்ளிக் கட்டிலே ஏறியருளினால், ''சந்தை சொல்ல வாராரோ ?'' என்றழைப்பர். முந்துறச் சந்தை சொன்னால் புளகிதராவர் ; இரண்டாம் சந்தைக்குச் சிதலராவர் என்று ; எங்கேனு மொருகால் வேண்டும்படியாயிற்று கண்ணநீர் வெள்ளமிடும்படி'' என்று வரும் திருவிருத்த உரையால் உணரலாம்.[39]

2. ஒருநாள் உலாவச் சென்றவர் பாதியிலேயே திரும்பிவிட்டார். திருமடத்திலிருந்த எம்பார் கதவைத் திறந்தவாறே ''திருமாலிருஞ்சோலை மலைத் திருவாய்மொழி திருவுள்ளத்திலே ஓடுகிறதுபோலும்'' என்று வினவ, இவரும் ''ஆம் அப்படியே'' என்று கூறினார்.[40]

3. திருநாவாய் நோக்கிச் செல்லும்போது, எதிர்வருபவரிடம் திருநாவாய் எவ்வளவு தொலைவு என்று கேட்க, அவர்கள் ''குறுக்கும்'' என்று சொல்லக்கேட்டு அவர்களது பேச்சுமொழியில், ''குறுக்கும் வகையுண்டு கொல்லோ'' என்று ஆழ்வார் பாசுரம் புனைந்துள்ள தன்மையினை எண்ணி வியந்தார்.[41]

4. தம் நெஞ்சுகந்த சீடர் ஆழ்வார் இயற்கையெய்தியபோது, உடையவர் விச்லேஷம் (பிரிவு) பொறுக்கமாட்டாமல்,

''ஒருமகள் தன்னை உடையேன்'', என்றும்,

''உலகம்நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன்'', என்றும்

''செங்கண்மால் தான் கொண்டு போனான்'' - என்றும் அருளிச்செய்தார் என்று ப்ரசித்தமிறே'' என்பது மணவாள மாமுனிகளின்

உரைக்குறிப்பு.[42] மேலும் இவர் திவ்வியப்பிரபந்தப் பாசுரத் தொடர்களுக்கு நுட்பமான உரைகளை உரைத்துள்ளார்.

5. "வான் திகழும் சோலை" என்று தொடங்கும் திருவாய்மொழிக்குத் தனியனில் "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்று கூறப்பட்டுள்ளது. திருவாய்மொழியை இவர் எவ்வாறு வளர்த்தார் ? எனின், வியாக்கியானங்கள் தோன்ற நியமித்தார். திருத்தலங்களில் அருளிச்செயல் பிரச்சாரங்களை அதிகமாக்கினார். ஸ்ரீபாஷ்யம் வரைந்தபோது,

"பாஷ்யகாரர் இது கொண்டு சூத்திர வாக்கியங்கள் ஒருங்க விடுவர்" என்னும் ஆசாரிய உறிருதய சூத்திரப்படி, ஸ்ரீபாஷ்யத்தின் நிதியான பொருள்களை ஆழ்வாருடைய திருவாய்மொழியைக் கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டார். இங்ஙனம் பலவகையிலும் தமிழ்மறைகளின் ஏற்றத்திற்கு எம்பெருமானார் பாடுபட்டதால்,

> "மாறனுரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே" என்று வாழித் திருநாமப் பாடலில் மணவாள மாமுனிகள் குறிப்பிட்டார்.

திருவாய்மொழிக்கு ஒரு தனியன் பாடிய அனந்தாழ்வான் என்பவர்,

> "ஏய்ந்தபெருங் கீர்த்தி யிராமானுசமுனிதன்
> வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன் - ஆய்ந்த பெருஞ்
> சீரார் "சடகோபன் செந்தமிழ்வே தம்தரிக்கும்,
> பேராத வுள்ளம் பெற"

என்று இராமானுசரின் திருவடிகளை வேண்டுகின்றார். பெரிய திருமொழிக்கு ஒரு தனியன் பாடிய எம்பார் என்பவரும்,

> "எங்கள் கதியே ! இராமா னுசமுனியே !
> சங்கைகெடுத் தாண்ட தவராசா ! - பொங்குபுகழ்
> மங்கையர்கோ னீந்த மறையா யிரமனைத்தும்
> தங்குமனம் நீயெனக்குத் தா !

என்று உடையவரை முன்னிலைப்படுத்தி விண்ணப்பிக்கின்றார். இவ்வகையில் உடையவரின் பணிகள் அமையாமல் இருந்திருப்பின், நாதமுனிகளின் காலத்திற்கு முன்னிருந்த நிலையிலேயே திவ்வியப்பிரபந்தங்கள் அமைந்திருக்கும். அந்நிலை நேராவண்ணம் இவர் பலமுகமாகத் திவ்வியப்பிரபந்தங்களுக்கு ஏற்றமளித்துப் பாதுகாத்தார்.

6.2.14 ***நிறைவாழ்வு :*** உடையவரின் வரலாறு, வயது - இரண்டும் நீண்டவை. தம் அயரா உழைப்பினால் திருமால் நெறியினைக் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளியிடச்செய்த அப்பெருமகனார், கி.பி. 1137-இல் "வானுறையும் தெய்வ" நிலையடைந்தார்.[43]

இவர் அருள் நிறைந்த நெஞ்சமுடையவர் ; குழந்தைகளிடமும், சலவைத் தொழிலாளியிடமும் கூடக் கனிவோடு பழகியுள்ளார். இவரது சீடர்கள் இவருக்குப் பின் இச்சமயத்தை வளர்க்கும் திருத்தொண்டில் ஈடுபட்டனர். தென்னாட்டில் மட்டுமன்றி, வடநாட்டிலும் வைணவ சமயம் வளர வழி ஏற்பட்டது. உடையவரின் கொள்கையைத் தழுவிய இராகவானந்தர் என்பவரின் சீடர் "இராமானந்தர்" என்பவர் (கி.பி.1299-1410) வடநாட்டில் இச்சமயம் பரவக் காரணராய் இருந்தார்.

இராமானந்தர், "மக்கள் அனைவரும் கடவுளின் கோத்திரத்தினர் ; ஒரே இனத்தவர், "என்று உபதேசித்தும், வாழ்ந்தும் காட்டினார். சமயநூல்கள் அனைவருக்கும் புரிய, தாய்மொழியில் இருக்கவேண்டும் என்றார். இதனால் இந்திமொழி வளர்ச்சியடைந்தது. இவரைப் பின்பற்றிக் கபீர், துளசிதாசர் போன்ற அடியார்கள் தம்முடைய தோத்திரங்களையும், நூல்களையும் இந்தியில் இயற்றினர். இவருடைய மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இரவிதாஸ், கபீர், பரமானந்தர் முதலியோராவர். ஆழ்வார்களின் அன்புநெறி வடநாட்டில் பரவக் காரணமாக இருந்த சிறந்த பெரியோர்களில் இவரும் ஒருவராவார்.[44]

உடையவரது சமுதாயத் தொண்டுகள் பல. இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உண்டாக்கல் அவற்றுள் ஒன்று. பெருமாளுக்குத் துலுக்க நாச்சியாரைத் திருமணம் முடிக்க, அதைத் திருவரங்கத்திலேயே நடைமுறைப்படுத்தினார். திருநாராயண புரத்திலும் டில்லி நவாப் பெண்ணைப் பெருமாளுக்குத் திருமணம் புரிவித்து பீபி நாச்சியாராக்கி உற்சவம் நடத்தினார்.

பிற்பட்டோரை மேல்நிலைக்குக் கொண்டுவரும் வகையில் உறங்காவில்லியை திருத்திப் பணிகொண்டார். காவிரியில் நீராடச் சென்றபோது தம் தங்கையின் மகனாகிய முதலியாண்டான் தோள்மீது கையை வைத்துக்கொண்டு சென்று, நீராடி முடித்துத் திரும்புகையில் நாலாம் வருணத்தைச் சார்ந்தவன் எனக் கருதப்பெற்ற உறங்காவில்லியின் தோள்களின்மீது கையை வைத்துக்கொண்டு வருவார். இவ்வகையில் சாதி பேத நீக்கத்தை நடைமுறைப்படுத்திக் காட்டினார். தமக்கு நஞ்சூட்ட முயன்ற பிராம்மணரையும் மன்னித்த அருள் உள்ளம் கொண்டவர் அப்பெரியார்.

ஆத்மவிசாரத்தில் ஈடுபட்டு நியாய வேதாந்தங்களுக்குப் புத்துயிர் கொடுத்துச் சமயப்புரட்சி செய்தவர் ஒருவகை ; சமுதாயத்தின் உலக வாழ்வுக்குரிய நலன்களை அதிகப்படுத்த, அநீதிகளைத் தவிர்க்கப் புரட்சி செய்தவர் ஒருவகை.

இவர் இரண்டாம் வகையினர். உலகத்திடமிருந்து பிரிந்துநின்ற வேதாந்தத்தை உலகோடு இணைக்கவும், வேதாந்தப்புரட்சியோடு சமுதாயப் புரட்சியை விளைவிக்கவும் இவர் தோன்றினார்.

இவர் தமக்கு முன்னே சென்ற ஆசாரியர்களுக்கும் பின்னால் வந்த சீடர்களுக்கும் இடையே ஸ்ரீவைணவ சமயமாகிற முத்துமாலையில் இடையே பதித்த பெரும் மாணிக்கமாகச் சுடர் விட்டார். இவருக்கு முன் சென்றவர்கள் அவரது திருமுடி சம்பந்தத்தாலும், பின் வந்தோர் அவரது திருவடி சம்பந்தத்தாலும் பேரின்பத்தை அடைந்தனர்.

உடையவரின் பத்துக் கட்டளைகளுடன் இவரது வரலாறு நிறைவடைகிறது.

1. பகவானைச் சரணடைந்த யாரும் தம் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. அது எம்பெருமானின் பொறுப்பு என்று இருக்கவேண்டும்.
2. சரணடைந்த பின் ஏற்படும் இன்ப துன்பங்கள் முன்வினைப் பயனால் உண்டாயவை என்றிருக்கவேணடும்.
3. மோட்சம் அடைய உபாயம் என்று எச்செயலையும் செய்யற்க.
4. ஸ்ரீபாஷ்யத்தைப் பொருளுடன் கற்க ; கற்பிக்க ; இது இயலாவிடின்,
5. திருவாய்மொழியைப் பொருளுடன் கற்க ; கற்பிக்க ; இது இயலாவிடின்,
6. திவ்வியதேசங்களில் வசித்துத் தொண்டு செய்க ; இது இயலாவிடின்,
7. திருநாராயணபுரத்தில் ஒரு குடிசையாவது கட்டிக்கொண்டு வாழ்க ; இது இயலாவிடின்,
8. இருந்த இடத்தில் இருந்தே பகவான், ஆசாரியன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, அவர்களைச் சிந்தித்திருக்க ; அல்லது,
9. எல்லா இலட்சணங்களும் பொருந்திய ஒரு ஸ்ரீவைணவரின் ஆதரவில் ஒதுங்கியிருக்க,

10. மந்திர ரத்தினமான துவயம் எல்லாப் பயன்களையும் அளிக்கவல்லது. அதை எப்பொழுதும் அநுசந்தித்திருக்க.

உடையவரின் பெருமைகளைப் போற்றி அமுதனார் "இராமானுச நூற்றந்தாதி" பாடினார். இது உடையவர் நியமனப்படி திவ்வியப்பிரபந்தங்களோடு சேர்க்கப்பெற்றது.

6.2.15 எம்பார் : (கி.பி. 1026-1131)[45] இவரது வரலாற்றை ஏற்கெனவே கண்டோம். உடையவர் இவரது வைராக்கியத்தைக் கண்டு துறவுக்கோலம் தந்து "எம்பார்" என்னும் பெயரினைச் சூட்டினார். இவர் உடையவரிடம் கொண்டிருந்த மதிப்பு அளவிடற்கரியது. உடையவருக்குப்பின் இரு கலைகளாகப் பிரிந்த வைணவ சமயத்தில் இவர் தென்கலை வழியினர்க்கு முதல்வரானார்.

இவர் பிற உயிர்களிடத்தும் பெருங்கருணையுடையவராய் இருந்தார். இவர் திருமலையில் பெரிய திருமலை நம்பியின் திருமாளிகையில் வாழ்ந்துவந்த காலத்தில் ஒரு பாம்பின் வாயில் கையிட்டு வாங்கித் தீர்த்தமாடி வந்ததை உடையவர் கண்டார்."என்ன காரணம் ?" என்று உடையவர் வினவினார். அதற்கு "பாம்பு நாக்கை நீட்டிக்கொண்டு துன்பப்பட்டுக்கொண்டிருந்தது ; அதன் நாவில் முள்ளிருந்தது ;; அதை எடுத்துவிட்டு நீராடினேன்" என்று பதில் கூறினார். அது கேட்டு உடையவர்,

"என்னே இவரின் பூத தயை !" என உளம் கனிந்தார்.[46]

இவர் திவ்வியப்பிரபந்தப் பாடல்களின் கருத்திற்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப மெய்ப்பாடு பிடிப்பதில் வல்லவர். இதுபற்றி உரைகளில் பல நிகழ்ச்சிகள் குறிப்பிடப்படுகின்றன. திவ்வியப்பிரபந்த விளக்கச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இவர் திருமங்கையாழ்வாரின் பெரியதிருமொழிக்கு இரு தனியன்களைப் பாடியுள்ளார். அவற்றுள் "எங்கள் கதியே" எனத்தொடங்கும் பாடலை ஏற்கனவே குறித்துள்ளோம்.

மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று
கோலிப் பதிவிருந்த கொற்றவனே ! —வேலை
அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத்
துணித்தருள வேணும் துணிந்து.

கூரத்தாழ்வான் — பாடியருளிய பெரியதிருமொழித் தனியனும் இங்கு ஒன்றாகச் சேர்த்து நோக்கத்தக்கது.

"நெஞ்சுக் கிருள்கடி தீபம், அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம், தமிழநன் னூல்துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம், பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே".

6.2.16. **திருக்கச்சிநம்பி** : இவரைப்பற்றி உடையவரின் வரலாற்றின் தொடக்கத்தில் குறிப்பிடப்பெற்றது. முழுமையான சில செய்திகளைத் தொகுத்து நோக்குவோம். ஸ்ரீபெரும்புதூரையடுத்த பூவிருந்தவல்லியில்[47] வணிக மரபில் பிறந்தவர். காஞ்சி அருளாளருக்குத் திருவாலவட்டக் கைங்கரியம் செய்தவர். அவர் மீது 'தேவராஜாஷ்டகம்' பாடியவர், திருச்சந்த விருத்தத்திற்கு இரு தனியன்களைப் பாடினார்.

"தருச் சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீர
திருச் சந்த விருத்தம்செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச் சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணநாறும்
திருச் சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே.

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க - உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும், மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது."

இவருக்குத் தனிச் சந்நிதி காஞ்சிபுரத்தில் உள்ளது. இங்கு மூலவர் ஆளவந்தார் ; நம்பியின் மூலவர், உற்சவர் விக்கிரகங்கள் உள்ளன. அங்கிருந்து உற்சவரை மார்கழி மாத அத்யயன உற்சவத்திற்கு வரதராஜர் சந்நிதிக்கு எழுந்தருளச்செய்கின்றனர். அவர் இருபத்தொரு நாள் அங்கு இருப்பார்.

6.2.17 **பட்டர்** (கி.பி. 1122 — 1137) : ஆழ்வானுக்கும் அவர்தம் தேவி ஆண்டாளுக்கும் மகனாகத் தோன்றியவர். உடையவருக்குப் பின் மடத்துப் பொறுப்புக்களை ஏற்றவர். வராக புராணத்தில் உள்ள கைசிகபுராணம் 92 சுலோகங்களுக்குத் தமிழில் உரை எழுதியவர். திருமங்கை மன்னனின் 'திருநெடுந்தாண்டக' வியாக்கியானத்தில் வல்லவர். 'மைவண்ண நறுங்குஞ்சி' என்னும் இருபத்தோராம் பாசுரத்திற்கு எண்ணூறு கிரந்த அளவு உரை வகுத்தவர். இவர் பாடிய திருவாய்மொழித் தனியன்கள் இரண்டும் மிகவும் புகழ்பெற்றவையாம்.

"வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்றதமிழ் மறைகள் ஆயிரமும்-ஈன்ற
முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமா னுசன்".

"மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்,
தக்க நெறியும் தடையாகித்-தொக்கியலும்,
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்,
யாழினிசை வேதத் தியல்".

பட்டரின் தம்பியாகிய சீராமப்பிள்ளை என்பவர் 'நான்முகன் திருவந்தாதிக்குத் தனியன் பாடினார்.

"நாரா யணன்படைத்தான் நான்முகனை நான்முகனுக்
கேரார் சிவன் பிறந்தான் என்னும்சொல் - சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே ! மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்ந்து".

6.2.18 கிடாம்பியாச்சான் (கி.பி. 1056 — 1158) : இவர் காஞ்சியில் பிறந்தவர் ; பெரிய திருமலைநம்பியின் மருகர் ; திருக்கோட்டியூர் நம்பியின் நியமனப்படி உடையவருக்குத் தளிகை செய்தவர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். நம்மாழ்வாரின் திருவிருத்தத்திற்கு ஒரு தனியன் பாடியுள்ளார்.

"கருவிருத் தக்குழி நீத்தபின் காமக் கடுங்குழி வீழ்ந்து
ஒருவிருத் தம்புக் குழலுறு வீர் ! உயிரின்பொருள் கட்கு
ஒருவிருத் தம்புகு தாமல் குருகையர் கோனுரைத்த
திருவிருத் தத்தோ ரடிகற் றிரீர்திரு நாட்டகத்தே".

6.2.19 வீரசோழிய உரையாசிரியர் குறிப்பிடும் திருமால் துதிப்பாடல்கள் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) பெருந்தேவனார் என்பவர், புத்தமித்திரர் என்பவர் இயற்றிய"வீரசோழியம்" என்னும் நூலுக்கு உரைஎழுதியுள்ளார். அவ்வுரையில் இவர் குறிப்பிடும் திருமால் துதிப்பாடல்கள் இரண்டு அழகிய முறையில் அமைந்துள்ளன. இப்பாடல்களை இயற்றியோர் யாவர் என்று தெரியவில்லை. பாடல்கள் காஞ்சியின் சிறப்பையும், பேரருளாளரின் பெருமையையும் புகழ்ந்து கூறுகின்றன.

1. புரவுதரு குடியாகிப் புயல்வண்ணன் விரும்பியதூ உம்
        பொழில் சூழ் காஞ்சி
   கரியசுடர் வீதிதொறும் உலாப்போந்து கவர்வதூ உம்
        கலைசூழ் காஞ்சி
   நிரைவளையிவ் வுலகுய்ய நின்றுதவம் செய்வதூ உம்
        நிழல் சூழ் காஞ்சி
   சுரமகளிர் பாடுவதும் பயில்வதூ உம் சொன்மாலை
        தொடுத்த காஞ்சி.

2. அன்றயனை உந்தியின் அளித்தபரன் மேவுவதும்
        அத்தி கிரியே
   சென்றுகரி கவ்வுமுதலைக் கணிற மேவுவதும்
        அத்திகிரியே
   வென்றவன் வணக்குவது மேவில கெயிற்றரிய
        தானவரையே

தன்தொழில் முடுக்குவது தாஙில கெயிற்றிய
தான வரையே.

6.2.20 **வடகலை, தென்கலைப் பிரிவுகள்** : உடையவருக்குப் பின் வைணவ சமயம் வடகலை, தென்கலை என்று இரு பிரிவுகள் ஆயிற்று.[48] தொடக்கத்தில் இரு பிரிவினருக்கிடையே கருத்து வேறுபாடுகளில்லை.

ஸ்ரீபாஷ்யத்திற்கு முதன்மையளித்த நடாதூர் அம்மாள், தேசிகர், நயினா வரதாச்சாரியார் ஆகியோர் காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டனர். இவர்கள் வடமொழியை முதன்மையாகக் கொண்டனர். பிரபந்தத்தை முதன்மையாகக் கொண்ட குழுவைச் சேர்ந்த நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், மணவாள மாமுனிகள், ஆகியோர் திருவரங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டனர். இவர்கள் தமிழ்மொழிக்கு முதன்மையளித்தனர். இவர்கள் சாதிக்கட்டுப்பாடுகளை விரும்பாமையாலும், பல்வேறு சாதியினராகிய ஆழ்வார்களுக்குச் சிறப்பளித்ததாலும், அவர்களின் முறை நாடெங்கும் பரவியது. மாறாக, வடகலைச் சம்பிரதாயத்தினர் வேதச் சடங்குகளை வலியுறுத்தியும், வடமொழியை வழிபாட்டு மொழியாகக் கொண்டும், வைதிக நெறிகளையும் பழமை எண்ணங்களையும் கொண்டிருந்ததால் தனிமைப்படுத்தப்பட்டனர். எனவே, திருமால் ஆலயங்கள் பல தென்கலையைச் சார்ந்தவை ஆயின.[49]

தென்கலையினர் இறைவன் பேரருளில் நம்பிக்கை உடையவர்கள். அவன் கருணைக்குக் காரணமில்லை. அவனை அடையும் நெறியும் பிரபத்தியே என்பர். மார்ஜால நியாயத்தை எடுத்துக்காட்டி, பூனை தன் குட்டியைக் கடித்தெடுத்து ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு எடுத்துச்செல்வதுபோல், இறைவன் ஆன்மாவைப் பேணுவதாகக் கூறுவர். இங்கு சாதகனின் முயற்சியினாலே ஆன்மா ஈடேறுவதாகக் கருதுவதில்லை. வடகலையினரோ ஞானநெறி, பக்திநெறி நியாயத்தை எடுத்துக்காட்டி, தாய்க்குரங்கு குட்டிக்குரங்கை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்சென்றாலும், குட்டியும் தாயைப் பற்றிக்கொள்ளவேண்டும் எனக்குறிப்பிடுவர். ஸ்ரீஅரவிந்தருடைய தத்துவத்தில் சாதகன் முயற்சி வற்புறுத்தப்படுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

திருமகளைத் திருமாலின் தேவியாகக் கொள்வதோடு அவர்கள் தொடர்பினை 'இரத்தினம் ஒளியை விட்டிராது ; எம்பெருமானும் தேவியை விட்டிரான் என்பர். இவ்வாறு விளக்குவது இரு கலையினருக்கும் உடன்பாடே ஆயினும், வடகலையினர் பரம்பொருளோடு ஒத்தநிலையில், முக்திக்கு உபாயமாகக் கருதி, திருமாலைப்போன்று திருமகளை வழிபடுவர். தென்கலையினரோ திருமகளின் தெய்வீகத்தன்மையை ஏற்றுக்கொண்டாலும், அரசு-அமைச்சு என்ற நிலையிலேயே தேவியை வழிபடுவர். சமுதாய ஆசார அளவிலும் சில வேறுபாடுகள் உண்டு

என்பர். வேறுபாடுகள் காணப்படினும் இரு சாரரும் இராமானுச தாசர்களே. இரு கலைக்குரிய பதினெட்டு வேறுபாடுளில் சிலவற்றை அட்டவணையில் காணலாம்.[50]

இவ்விரு கலைப்பிரிவினருள் தொண்டை நாட்டைச் சார்ந்தவர்களின் வரலாறுகளை இனிச் சுருக்கமாகக் காண்போம். வடகலை வழியினரில் எங்களாழ்வான் தவிர், பெரும்பாலும் தொண்டை நாட்டினரே. திருக்குருகைப் பிரான் பிள்ளானைப் பற்றி ஏற்கனவே கண்டோம். அடுத்தவர் எங்களாழ்வான். அவருக்கடுத்தவராகிய நடாதூர் அம்மாளைப் பற்றிச் சுருக்கமாக்க காண்போம்.

6.2.21. *நடாதூரம்மாள்* : திருவெள்ளறையில் பிறந்து, பிள்ளானுக்குப் பிறகு வடகலை வழியில் தலைமை ஏற்றவர் எங்களார்வான் என்பவர். இவருடைய முதன்மைச்சீடர் நடாதூர் அம்மாள் என்பவராவார். அவருக்குப்பின் இவர் தலைமையேற்றார். இவர் உடையவரின் மைத்துனரின் பெயரர் ஆவார். இவர் காஞ்சிபுரத்தை வடகலை வழியினரின் மையப்பகுதியாக்கினார். இவர் பெருமாளுக்குத் திருவாராதனம் செய்யும் பாலை, வாயால் ஊதி, தாயன்புடன் படைத்ததால் பெருமாள் இவரை 'அம்மாள்' என்று அழைத்ததால் இப்பெயர் பெற்றார். 'சுருதப்பிரதாசிகை' ஆசிரியராகிய சுதரிசனபட்டர் என்பவரும் இவருடைய சீடரே. இவர் "கடிகாசதம்" என்ற பட்டப்பெயருடையவராவர். ஒரு நாழிகையில் நூறு செய்யுள்களை இயற்றும் ஆற்றல் படைத்தவர் என்பது இதன் பொருளாகும். இப்பட்டபெயர் இவர் மரபினருக்கும் வழங்கியது. இவருக்குப்பின் "கடிகாசதம் அம்மாள்" என்ற பெயருடையவர் வாழ்ந்தார்.

இவருடைய சிடர் "ஆதிவண்சடகோப யதி" (1379-1458) என்பவர் அகோபில மடத்தை நிறுவினார்.

6.2.22 *ஆத்திரேய ராமானுஜா* : இவர் நடாதூர் அம்மாளின் சீடராவார். இவருக்கு "அப்புளார்" என்ற பெயரும் உண்டு. "நியாயகுலிசா" என்ற நூலை இவர் இயற்றினார். நடாதூர் அம்மாளுக்குப் பின் இவர் வடகலை வழியில் தலைமைப் பொறுப்பேற்றார்.

6.2.23 *சுதரிசனபட்டர்* : பராசரபட்டரின் தம்பியான வேதவியாசபட்டரின் பெயரர் சதரிசனபட்டராவார். இவர் நடாதூர் அம்மாளின் சீடர் என்பதை முன்பே கண்டோம். ஸ்ரீபாஷ்யத்திற்கு விளக்கவுரையாக "சுருதப்பிரகாசிகை" என்னும் நூலை இவர் எழுதி உள்ளார்.

6.2.24 *வேதாந்த தேசிகர்* :[51] காஞ்சி மாநகர் விளக்கொளிப்பெருமாள் சந்நிதி அருகில் உள்ள தூப்புலில் இவர் பிறந்தார். இவர் தந்தை அனந்தசூரி ஆசாரியபுருஷர். இவர் தாயார் தோதாரியம்மை. புரட்டாசித்திங்கள் திருவோண நன்னாளில் திருவேங்கடமுடையானின் திருநட்சத்திரத்தில் திருமலையப்பனின் அருளால் அவதரித்தார். பெற்றோர் இவருக்கு வேங்கடேசன் எனத் திருநாமம் சூட்டினர். மாமா அப்புள்ளார் உடனிருந்து இளமைப்பருத்திற்கு உரிய சடங்குகளை

நிறைவேற்றினார். நடாதூர் அம்மான் இக்குழவியின் அழகைக்கண்டு, அவதார புருடர் என்று அறிந்து வாழ்த்தினார். இருபது வயதிற்குள் எல்லாக் கலைகளையும் கற்றார். அப்புள்ளார் கருட மந்திரத்திதை இவருக்கு உபதேசித்தார். திருமங்கை என்பாரை மணந்தார். திருவயிந்திரபுரம் சென்று இவர் கருட மந்திரத்தை உச்சரித்து, அயக்கிரீவ தரிசனமும் பெற்றார்.

> "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விராகால் அடியோம்
> உள்ள தெழுதியது ஒலையிலிட்டனம் யாம்" என்று கூறுகின்றார்.

அயக்ரீவஸ்தோத்திரம், கருடபஞ்சாசத், அச்சுத சதகம், மும்மணிக்கோவை, நவமணிமாலை முதலிய நூல்களை அத்திருத்தலத்தில் இயற்றினார். திருக்கோவலூர் சென்றுதிரிவிக்கிரமன்மீது தேகளீசஸ்துதி பாடியபிறகு கச்சியை அடைந்து அருளாளரைச் சேவித்து நியாயசதகம், வரதராஜபஞ்சாசத், அடைக்கலப்பத்து, அர்த்தபஞ்சகம், முதலிய நூல்களை இயற்றினார். பின் திருமலைக்குச்சென்று தயாசதகம் பாடினார். வடநாட்டு யாத்திரை சென்று திரும்பினார். உடன் பயின்றவரான வித்தியாரண்யர், அரசரைப் பாட அழைத்த அழைப்பை மறுத்தார். அப்பொழுது வைராக்யபஞ்சகம் பாடினார் என்பர்.

திருவரங்கத்தில் இவர் காலத்தில் பிள்ளை லோகாசாரியர் என்னும் தென்கலை ஆசாரியர் புகழுடன் விளங்கினர். அப்பொழுது ஓர் அத்வைதி சமய விவாதத்துக்காக அங்கு வந்தார். அவருடன் வாதம் செய்யத்தக்கவரெனத் தேசிகரைத் திருவரங்கத்தில் இருந்தோர் அழைத்தனர். தேசிகரும் அங்குச் சென்று அவருடன் வாதம் செய்து வென்றார்.[53]

மாலிக்காபூர் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தபோது (கி.பி. 1310-1311) பிள்ளை உலகாசிரியர் திருவரங்கரின் உற்சவ விக்கிரகத்தைப் பாதுகாக்க உடன்சென்று வழியில் காளையார் கோயிலில் காலமானார். தேசிகரோ சுதரிசனபட்டர் இறக்கும் தறுவாயில் தம்மிடம் ஒப்படைத்த சுருதப் பிரகாசிகைச் சுவடியுடன் அவர்தம் இரு மக்களையும் அழைத்துக்கொண்டு மைசூர் மாநிலம்-சத்தியமங்கலத்திற்குச் சென்றார்.[54]

உற்சவர் அரங்கநாதனைப் பல இடங்களுக்கும் எடுத்துச்சென்று, இறுதியில் திருமலையில் பாதுகாப்பாக்கொண்டு வந்து சேர்த்தனர். பின்னர் கி.பி. 1360-1371-இல் செஞ்சியிலிருந்த விசயநகர படைத்தலைவர் கோபணாவின் துணையுடன் திருவரங்கத்தில் மீண்டும் பழையபடி பிரதிட்டை செய்யத் தேசிகர் துணையாய் இருந்தார். இடையில் சிலகாலம் திருவரங்கர் செஞ்சி-சிங்கவரத்திலிருந்தார். இவ்வரலாற்றுச்செய்தி திருவரங்கம் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளது.[55] இவ்வாறு தொண்டைநாட்டுத் திருத்தலங்களான திருமலையும், சிங்கவரமும் அரங்கர் பாதுகாப்பாக வாழ உதவிப்பெருமை பெற்றன.

**6.2.25 தேசிகரின் நூல்கள்** : இவர் வடமொழியிலும், தென்மொழியிலும் நூறு நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவற்றுள்,

1. இரகசியத்திரயம்
2. அபயபிரதான சாரம்
3. பரமபத சோபானம்
4. பாஞ்சராத்திர ரட்சை
5. கோதாஸ்துதி
6. யதிராஜசப்ததி
7. சங்கல்ப சூரியோதயம்
8. அம்ஸ ஸந்தேசம்
9. கீதாபாஷ்யசாரம்
10. பாதுகா சஹஸ்ரம் (ஒரே இரவில் பாடியது)

ஆகியன புகழ் பெற்றவையாம். முழுவிவரமான நூற்பட்டியல் பின்இணைப்பு ஐந்தில் காணலாம். இவர் உலகம் உய்வதற்காக இருபத்து நான்கு பிரபந்தங்களை அருளிச்செய்தார். இவற்றைத் தொகுத்து "ஸ்ரீதேசிகப்பிரபந்தம்" என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். இதில் நானூற்றைந்து பாக்கள் கொண்ட பத்தொன்பது பிரபந்தங்களே நமக்கு இப்போது கிடைக்கின்றன. எஞ்சிய ஐந்தும் மறைந்தன.

"வேதாந்தாசார்யார்" என்னும் பட்டத்தைத் திருவரங்கரும், "ஸர்வதந்த்ரர்" என்னும் பட்டத்தை திருவரங்க நாயகியாரும் அருளினர் என்று இவரது வரலாறு கூறுகின்றது.

**6.2.26 தேசிகர் திவ்வியப்பிரபந்தங்களுக்கு ஏற்றம் அளித்தல்** : காஞ்சியில் பேரருளானது உற்சவத்தில் பெருமாளுக்கு முன் திவ்வியப்பிரபந்தத்தை அநுசந்தித்தல் சாஸ்திரங்களுக்கு விரோதமானதென்று பிற மதத்தினர் மறுத்தனர். தேசிகர் அவர்களுடன் வாதம் செய்து திவ்வியப்பிரபந்தம் தெய்வீகமானதே என்று நிறுவி, அவர்களை வென்று உற்சவத்தைத் தடையின்றி நடக்கச் செய்தருளினார். இந்த வெற்றிக்கு அறிகுறியாகப் பேரருளாளன் தன் திருச்சின்னங்கள் இரண்டினுள் ஒன்றைத் தேசிகருக்கு அருளினான். அந்த வரலாற்றைத் தழுவியே இன்றும் பேரருளாளனுக்கு ஒற்றைத் திருச்சின்னமே சேவிக்கப்படுகிறதென்று பெரியோர் பணிப்பர்.[56]

மேலும், இவர் திவ்வியப்பிரபந்தங்களின் ஏற்றத்தைப் பற்றிப் பின்வருமாறு பாடுகிறார். "திவ்வியப் பிரபந்தங்களை நாம் பொருளுடன்

குருமுகமாக அத்யயநம் செய்து இதுவரை நமக்கு நன்கு விளங்காதிருந்த வேத பாகங்களின் பொருள்களையெல்லாம் நன்கு அறியப்பெற்றோம்" என்று கூறுகின்றார்.

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார் தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன் பாண நாதன்
தொண்டரடிப் பொடி மழிசை வந்த சோதி
வையமெலா மறைவிளங்க வாள்வே லேந்து
மங்கையர்கோ னென்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே"[57]

6.2.27 **தனியன் தோற்றம்** : ஆறாயிரப்படிக்குத் தாம் விரிவாய் அருளிய 'நிகமபரிமளம்' என்னும் நூலைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார் தேசிகர். அப்பொழுது தேசிகரின் சீடரான பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயர் என்பவர்[58] தேசிகரைப் பற்றி 'ராமானுஜ தயாபாத்ரம்' என்ற தனியனை அருளிச்செய்து தேசிகரிடம் விண்ணப்பம் செய்தார். இத்தனியனை திவ்வியப்பிரபந்தம் முதலிய தமிழ் நூல்களுக்கு அநுசந்திக்கும்படி தேசிகரே நியமித்தார். இவருக்குப்பின் இவர் மகன் நயினாராச்சாரியார் வடகலை வழியின் தலைமைப் பொறுப்பேற்றார். வைணவ சமயத்தை உடையவர் வளர்த்தார் ; அக்கோட்டையைத் தேசிகர் காத்தார் எனலாம்.

6.2.28 **நயினாராசாரியர் (எ) வரதாசாரியர்** : இவர் கேரளாவில் சுற்றுப்பயணம் செய்து பலரை வைணவ சமயத்திற்கு மாற்றினார். இவருடன் புலமுள்ள வடகலைப் பிரிவு முடிவுக்கு வந்தது. இவர் தம் தந்தையார் மீது தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் பிள்ளையந்தாதி என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் 'மாமனர் மன்னிய', என்று தொடங்கி, 'தூப்புல் அம்மான் பதமா மலரே' என்று முடிகிறது. இவர் அதிகரண சராவளி என்னும் நூலையும் இயற்றினார்.

6.2.29 **தேசிகர் நூற்றந்தாதி** : நயினாராசாரியரின் சீடரான வயலூர் கந்தாடை மன்னப்பங்கார் என்பவர். "தேசிகர் நூற்றந்தாதி" என்னும் ஓர் அரிய தமிழ் நூலை இயற்றினார். இது நூறு வெண்பாக்களைக் கொண்டது. இவர் தேசிகரிடம் கொண்ட ஈடுபாடு பல பாடல்களில் விளக்கமாகிறது. இராமானுச நூற்றாந்தாதி' போல இந்நூல் தோன்றியது. இந்நூலை அரிதில் முயன்று பெற்று அச்சேற்றி உரை எழுதி வெளியிட்டிருப்பவர் இராசிபுரம் மு. இராசாமி என்பவர்.

மன்னப்பங்கார் நயினாராசாரியாரைத் தமது ஞான குருவாகக் கொண்டார். இதனை இந்நூலின் இரு செய்யுள்கள் மூலம் அறியமுடிகிறது.

"தேவர் முனிவர்களும் சித்தர்களும் பக்தர்களும்
பூவின் மழைபொழிந்து போற்றவே — தாவி
உலகுஅளந்த மாலை உணர்ந்துகக்கும் தூப்புல்
குலகுருவே எங்கள் குரு".

இப்பாடல் இன்றும் பேரருளாளன் சந்நிதியில் பெருமாள் திருமஞ்சனம் கண்டருளும்போது சேவிக்கப்படுகிறது.

இந்நூலில் தேசிகரைக் குறிக்கும் சில கருத்துப் பொதிந்த தொடர்கள் வருமாறு :

1. "வேதமுடித்தேசிகன்" (பாடல் - 1)
2. "குன்றாக் குணத்தன்" (பாடல் - 7)
3. "வள்ளல் எதிராசன் வான்புகழே சிந்திக்கும் தூப்புல் நகர்ச்சிங்கம்"(பாடல் - 23)
4. "தேசுடைய வேதாந்த தேசிகன்" பாடல் - 51)
5. "கொண்டல் கவி வாதி சிங்கக் கோ" (பாடல் - 78)
6. "மறையவர் போற்றும் வாதிசிங்கப் புண்ணியர்" (பாடல் - 94)

இந்நூலாசிரியர் தேசிகரிடம் கொண்ட ஈடுபாடு பல பாடல்களில் விளக்கமுற அமைந்துள்ளது.

சான்றாக இரு பாடல்களைக் காணலாம் :

"தேசுஉடைய ஆழியும் சங்கமும் கையேந்தி
வாச மலர்த்துழாய் வாழ்மார்பன் — காசினியில்
காணநின் றாலும், கவிவாதி சிங்கனையே
காணக் கருதும்என் கண்." - - பாடல் 33.

"கோவைக் கனிஒத்த வாயும், குளிர்விழியும்
தாவம் தவிர்க்கும் முறுவலும் — பாவம்தீர்
வேதமுடித் தேசிகன்தன் மெய்யொளியும், மேவாதார்
சாதுவரைக் காணார் தளர்ந்து" — பாடல் 63.

**6.3 தென்கலை வழியினரில் தொண்டை நாட்டைச் சார்ந்தோர் :** தென்கலை வழியினரில் முதன்மையான ஆசாரியராக விளங்குபவர் எம்பார் என்பவரே என்பதை முன்னரே கண்டோம். அடுத்தவர் பட்டர். இவ்வகையில் இருவழிகளின் முதன்மை ஆசாரியராக விளங்கியோர் தொண்டை நன்னாட்டினரே ஆவர். வடகலை வழியில் எங்களாழ்வான் தவிர அனைவருமே தொண்டை நாட்டினராவர். பின் பழகிய பெருமாள் ஜீயர் இப்பகுதியினராவார்.

தென்கலை ஆசாரியர்களில் இறுதியில் உள்ள மணவாள மாமுனிகளின் தலைமைச் சீடர்கள் எண்மர். "அட்டதிக்கயங்கள்" என அவர்கள் அழைக்கப்பெற்றனர். அவர்களுள் திருவேங்கடராமானுஜ ஜீயர், பிரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பியப்பா ஆகியோர் தொண்டை நாட்டினர். இனி இவர்களைப் பற்றி நிரலே நோக்குவோம்.

6.3.1 ***பின்பழகிய பெருமாள் ஜீயர் :*** இவர் நம்பிள்ளையின் சீடர், காஞ்சியையடுத்த திருப்புட்குழியில் பிறந்தவர். இவர் ஆழ்வார்கள், ஆசாரியர்களின் வரலாறுகளைக் கூறும் "ஆறாயிரப்படி குரு பரம்பரை" நூலை இயற்றியவர். அதற்குக் கருவியாகக் கருட வாகன பண்டிதர் இயற்றிய திவ்யசூரி சரிதத்தைக் கொண்டார். குரு பரம்பரையைப் பற்றிக் கூறும் நூல்களில் இதுவே முதன்மையானது. இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பெற்று உள்ளது. இந்நூல நம்பிள்ளையின் உரை ஏடுபடுத்தப்பட்ட வரலாறுடன் முடிகின்றது. இதை அடியொற்றிச் சில குரு பரம்பரை நூல்கள் தோன்றின. அவை இன்று கிடைக்கப்பெறவில்லை. கி.பி. 16-ஆம நூற்றாண்டில் எழுதப்பட்ட வடிவழகிய நம்பிதாசரின் செய்யுள் வடிவிலான குரு பரம்பரை நூல் ஒன்றே இன்று முழுமையாகக் கிடைத்துள்ளது. இவர் நூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர் என்பர். மணவாள மாமுனிகள் இவரைப் போற்றிப் பாடிய பாடல் உபதேசிரத்தினமாலையில் உள்ளது.[6] இவரது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

6.3.2 ***மணவாள மாமுனிகள் (கி.பி. 1370-1443) :*** இவரோடு பூர்வாசாரியர்கள் பரம்பரை முற்றுப்பெற்றது. ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள சிக்கல்கிடாரம் என்ற ஊரில் வசித்துவந்த "திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணர் என்பவருக்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும், சாதாரண ஆண்டு ஐப்பசித்திங்கள் மூல நன்னாளில் மணவாள மாமுனிகள் அவதாரம் செய்தார். இவர் திவ்வியதேச யாத்திரையாகப் புறப்பட்டுத் திருமலையடைந்தார். அங்குத் திருமலையப்பனைச் சேவித்துக்கொண்டு திரும்புகையில் காஞ்சியை அடைந்து அங்கு பேரருளாளனைச் சேவித்துவிட்டு ஸ்ரீபெரும்புதூர் சென்று சேர்ந்தார். அப்பொழுது."

"இதுவோ பெரும்புதூர் ! இங்கே பிறந்தோ  
எதிராசர் எம்மிடரைத் தீர்த்தார் - இதுவோதான்  
தேங்கும் பொருநல் திருநகரிக் கொப்பான  
ஓங்கு புகழுடைய வூர்"

என்று வியந்துபாடி, அவ்வூருக்குள் நுழைந்து,

எந்தை எதிராசர் எம்மை எடுத்தளிக்க  
வந்தபெரும் பூதூரில் வந்தோமோ ! - சிந்தை  
மருளோ ? தெருளோ ? மகிழ்மாலை மார்வன்  
அருளோ இவற்றுக் கடி".

ஈதென்றறியோம் யாம் என்று போற்றி, உடையவரைப் பணிந்து, அவர் அனுமதியோடு, "ஸ்ரீபாஷ்யம்" கேட்கக் காஞ்சிக்கு மீண்டும் வந்தார்.

அங்கு வடகலை வழியினரான கிடாம்பியாச்சான் பரம்பரையில் வந்த கிடாம்பி திருமலை நாயனாரை அடைந்து வணங்கி அவரிடம் ஸ்ரீபாஷ்யம் கேட்டுக்கொண்டு சிலகாலம் அங்கிருந்தார்.[61] கலை வேறுபாடு கருதாமல் ஒருவரை ஒருவர் மதித்துப் போற்றியதை இந்நிகழ்ச்சியால் அறியமுடிகிறது. பின்னர் இவர் ஒருகால் யாத்திரையாக மதுராந்தகம் வழியாகத் தென்னாட்டுத் திருத்தலங்களைக் காணச்செல்கையில், மதுராந்தகத்தை அடைந்ததும்,

"மருமலர் கமழும் சோலை மதுரைமாநகர் வந்தெய்தி
அருள்பொழி பெரியநம்பி யன்றெதிரா சராற்கு
அரும்பொருள் வழங்கு மெங்களேரிகாத் தருள்வார் கோயில்
திருமகிழடியிற் செல்வீர் தீவினை தீருமாறே" — என்றும்,

"இதுவோ கிளியாறிவ் வூரோ திருமதுரை
இதுவோ திருமகிழும் கோபுரமும் — இதுவோ
பெரியநம்பி தானுகந்து பின்னு மெதிபற்குத்
துயமளித்த தூய பதி" என்றும்,

பாடிப் பரவினார்.[62]

6.3.3 **பிரதிவாதி பயங்கரம் அண்ணன் : (கி.பி. 1340-1440)** இவர் தஞ்சை மாவட்டம் திருநாங்கூரில் பிறந்து காஞ்சியில் வாழ்ந்தவர். முதலில் திருமலையாளுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். சிலகாலம் பேரருளாளனுக்கும் கைங்கர்யம் செய்தார். இவர் நயினாராசாரியரிடம் வடகலை பற்றிய செய்திகளையும், ஸ்ரீபாஷ்யம் முதலாயவற்றையும் கற்றார். இவர் தேசிகரைப் புகழ்ந்து "சப்ததி ரத்னாகரம்" என்னும் நூலை எழுதினார். இதனால் இவர் வடகலை வழியைச் சார்ந்தவர் என்று கருதவேண்டிய அவசியமில்லை.

திருமலையில் இவர் இருந்தபொழுது அத்திருமலையைப் பற்றியும், திருமலையப்பனைப் பற்றியும் பாடிய திருப்பள்ளியெழுச்சியே "சுப்ரபாதம்" என்னும் பெயரில் இன்று வழங்கும் மற்ற சுப்ரபாதங்களுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்திருக்கின்றது. இது நான்கு பகுதிகளாக விளங்குகிறது. முதல்பகுதியில் திருவேங்கடமுடையானைப் பள்ளியெழுப்புகிறார். இரண்டாவது பகுதி வேங்கடவனைப் புகழ்ந்து பாடுவது ; மூன்றாவது பகுதி சரணாகதியாகும் ; பகவானின் திருவடிகளில் அடைக்கலம் வேண்டுகிற பகுதி ; இறுதிப்பகுதி திருவேங்கடவனுக்கு மங்கலம் பாடுகிற அற்புதமான பகுதி. திருவேங்கடமுடையானின் சந்நிதியில் நாள்தோறும் காலைவேளைகளில் நடைபெறும் வைபவங்களை அழகுறக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிற ஆனந்த

வலிமை இதற்குண்டு. வைணவ சித்தாந்தக் கருத்துகளும், பொதுவான நீதிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. "ஈசானாம் ஜகதோத்யா" என்று தொடங்கும் பகுதியை மட்டும் சொன்னால்கூட, அமிட, அவர்மேல் மங்கைத் தாயாரின் திருவருளைப் பெறலாம் எனவும், "ஸ்ரீசேஷ சைல கருடாசல" — என்று தொடங்கும் பகுதியில் ஏழுமலைகளின் பெயர்களைச் சொன்னாலே போதும், பகவத்தியான நிறைவு ஏற்படுகிறதென்றும், பெரியோர்கள் நம்புகிறார்கள் என்று கூறுவர்.[63]

இவர், மணவாள மாமுனிகளின் பெருமைகளைப்பற்றிக் கேள்வியுற்றுத் திருவரங்கம் சென்று அவரிடம் ஐந்திக்கைகளையும் பெற்றார். அன்னாரிடம் 'ஸ்ரீவைஷ்ணவதாசர்' என்ற விருதுப்பெயரையும் பெற்றார்.

ஒருமுறை நயினாராசாரியர் ஓர் அத்வைதியோடு வாதம் செய்ய நேர்ந்தது. அவர் 'அண்ணனை' அவரோடு வாதம் செய்ய அனுப்பினார். அண்ணன் அவரோடு வாதம் செய்து வென்றார். அதுமுதல் அவருக்குப் 'பிரதிவாதி பயங்கரம்' என்ற பட்டம் ஏற்பட்டது.[64]

இவர் ஸ்ரீபாஷ்யவியாக்கியானம், அஷ்டஸ்லோகி வியாக்கியானம் ஆகிய நூல்களை எழுதினார். இவர் மரபில் வந்தவரே காஞ்சியில் பெரும் வைணவத்தொண்டு செய்து அண்மையில் இயற்கை எய்திய பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஆவார்.

6.3.4. எறும்பியப்பா என்கிற தேவராஜாசார்யா : இவர் சோழசிம்மபுரத்தை அடுத்தஎறும்பி என்னும் ஊரில் பிறந்தவர். அனைவரும் இவரை அன்புடன்"அப்பா"என அழைத்தனர். அதனால் இவர் இப்பெயர் பெற்றார். அட்டதிக்கயங்களில் ஒருவர். இவர் "தினசரியா" என்னும் நூலை எழுதினார். சோழசிம்மபுரம்—பெருமானைப்பற்றி, "அமிர்தபலாவளி", என்னும் நூலை எழுதியுள்ளார்.[65] மணவாள மாமுனிவரின் மற்றொரு சீடரான ஏட்டுச் சிங்கராச்சாரியார் இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானம் இயற்றியவர்.

6.4. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயிலும் வைணவ சமய மறுமலர்ச்சியும்—காஞ்சியின் சிறப்பு:[66] பாரதநாட்டில் உள்ள "முக்தி தரும் நகரங்கள் ஏழனுள், முக்கியமாம் "காஞ்சி" என்கிறார் தேசிகர். இதற்கு காரணம் என்ன ? மாயா, காசி, அவந்தி ஆகிய மூன்றும் சிவத்தலங்களாகும் ; அயோத்தி, வடமதுரை, துவாரகை—இவை மூன்றும் வைணவத்தலங்களாகும்; காஞ்சி ஒன்றே இவ்விரு சமயங்களுக்கும் பொதுவான தலமாகும். மேலும், பல சமயங்களும் தழைத்த இடமும் இதுவே.

இயூன்-சங் கூற்றுப்படி, புத்தர் கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் காஞ்சிக்கு வந்து சமய உண்மைகளை உரைத்தார். நாளந்தாப் பல்கலைக்கழகத்தில் சிறந்த பேராசிரியராகத் திகழ்ந்த தர்மபாலர் காஞ்சிபுரத்தினர். கி. மு. 150-இல் இருந்த

பதஞ்சலி தமது மாபாடியத்தில் இந்நகரைக் குறிப்பிட்டுள்ளார். கி. மு. முதல் நூற்றாண்டில் கரிகாலன் காஞ்சியை அழகு செய்தான் ; மதில்களை எழுப்பினான். வடவேங்கடம் வரை நாட்டை விரிவாக்கினான். சங்ககாலத்தில் இது கச்சி என்று பெயர் பெற்றிருந்தது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் அங்குச் சென்ற மணிமேகலை புத்த பீடிகையை அமைத்தாள். பிறகு அறவண அடிகளிடம் தவத்திறம் பூண்டு தருமம் கேட்டாள் ; "பவத்திறம் அறுக" என்று அங்குத் தானே தவம் கிடந்தாள்.[67] இந்நகர அரச மரபிரான போதிதருமர் (கி. பி. 520) சீனா சென்று புத்த சமயத்தைப் பரப்பினார். கி. பி. முதல் நூற்றாண்டில் குந்தகுந்தாசாரியார் இங்கு மூல சங்கத்தைத் தோற்றுவித்தார். கி. பி. ஆறாம் நூற்றாண்டில் சமணக் காஞ்சித் திருப்பருத்திக் குன்றில் வாழ்ந்த வச்சிரநந்தி பற்றிப் பள்ளன் கோயில் செப்பேடுகள் கூறும். இங்குத் தங்கியிருந்த வாமனாசாரியார் இயற்றிய மேருமந்தர புராணம், சமண சமய இலக்கிய வரலாற்றில் இடம்பெறத்தக்கது. "புராணம்" என்ற வகையில் தோன்றிய முதல் சமண சமய நூல் இதுவேயாகும். தண்டி, பாரவி முதலிய வடமொழிப் புலவர்கள் பல்லவர் அவையை அலங்கரித்தனர். காபாலிகரும், பாசுபதரும், கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தங்கள் சமயக்கொள்கைகளைப் பரப்பினார்.

இங்கிருந்த கடிகையில் வடமொழிப் பல்கலைக்கழகத்தில் கதம்ப குல மரபினைத் தோற்றுவித்த மயூரசன்மன் மேல் கல்வி கற்றான். ஆதிசங்கரர் இங்கு ஸ்ரீசக்கர இயந்திரத்தைப் பிரதிட்டை செய்தார். இங்குள்ள காமகோடி பீடம் அத்வைதச் சித்தாந்தக் கொள்கையைப் பரப்புகிறது.[68] சுமார் கி. பி. 275-இல் பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றிப் பல்லவப் பேரரசை நிலைநிறுத்தினர். அது முதல் இந்நகரம அவர்களின் கோநகரமாக விளங்கியது. சோழர்களின் இரண்டாம் தலைநகராகவும் இருந்தது." காஞ்சி ஆபரணம்போல் அழகுடன் திகழ்ந்த இந்நகரை மயிலுக்கு ஒபபிடும் தண்டியலங்கார மேற்கோள் பாடல் இங்கிருந்த கடிகையை அழகுமிகுதோகையாக உருவகப்படுத்தும்.[69] திருமூலர் காஞ்சியைக் குறிக்கிறார். தேவார மூவர் சைவம் தழைக்கப் பாடினர். சிவகாஞ்சிபோலவே விஷ்ணு காஞ்சியும் சிறந்து விளங்கியது. இராமானுஜரால் வைணவக்கல்வி இங்குச் சிறப்படைந்தது. தேசிகர் இங்கு அவதரித்தார் என்பதை முன்னரே கண்டோம்.

உயர் சமயக்கல்வி நிலையங்களும், சமயக்கல்வி விவாத அரங்குகளும் இங்குப் பல இருந்தன. நாலந்தா, தட்சசீலம் போன்ற ஏனைய கல்வி மையங்கள் ஒன்றிரண்டு மதத் தத்துவங்களை மட்டும் வளர்த்தன. ஆனால் காஞ்சியில் எல்லாத் தத்துவங்களும் தருக்கமும் செழிப்புற்றன.[70]

6.4.1 **இடங்களின் பெயர்கள், பெருமானின் திருப்பெயர்கள்:** பூதத்தாழ்வார் பாசுரங்கள், சோழமன்னர்களின் கல்வெட்டுகளின்படி விஷ்ணு காஞ்சியின் பழமையான பெயர் அத்தியூர் (அ) திருவத்தியூராகும். கி. பி. 16-ஆம் நூற்றாண்டில்

கோயில் விரிவடைந்தபோது ஸ்ரீவரதர் கோயில்[71] உள்ள பகுதி தேரடிவரை "விஷ்ணு காஞ்சி" என அழைக்கப்பெற்றது.

"அத்தியூர்" என்ற பெயர் அக்கோயில் மற்றும் கிராமத்தின் அடிப்படையாய் அமைந்த அத்தி (அ) உதும்பர மரம் காரணமாக அமைந்தது. இக்கோயிலில் அமைந்த பழமையான மூலவர் அத்தி மரத்தினால் ஆக்கப்பெற்றவர். அம்மூலவர் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் மாற்றப்பெற்றிருக்கலாம்.[72] அத்தியூர் சமஸ்கிருதத்தில் உறஸ்தகிரி, உறஸ்திபுரம் என மாற்றப்பெற்றது. உறஸ்தி என்ற வடசொல் யானையைக் குறிப்பதால், யானையைப் பற்றிய அடிப்படை தலபுராணத்தில் இடம்பெற்றது. மூலவர் எழுந்தருளியுள்ள கோயிலின் மையப்பகுதி மலைபோன்றுள்ளது ; எனவே, உறஸ்தகிரி எனப்பெற்றது. கூரத்தாழ்வான் மற்றும் திருக்கச்சிநம்பிகளின் நூல்களில் உறஸ்தகிரி என்ற பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளபடி, பழங்காலத்தில் அத்தியூர் காஞ்சியுடன் தொடர்பில்லாத தனிக் கிராமமாகவே இருந்தது. ஆனால் பின்னர் வந்த பதிவுகளில்,

"காஞ்சி நகரத்துத் திருவத்தியூர் !

எனக் காஞ்சியின் பகுதியாகவே இந்நகர் குறிப்படப்பெற்றுள்ளது. பழமையான தமிழ்க் கலவெட்டுக்களில்[73] இக்கோயிலின் முதன்மைத்தெய்வம்

"திருஅத்தியூர் ஆள்வார்" என்றே குறிப்பிடப்பெற்றுள்ளார்.

அருளாளப்பெருமான், பேரருளாளர் என்பன பிற திருப்பெயர்களாகும்."வரதராஜா, தேவராஜா, உறஸ்திகிரிநாதா முதலிய திருப்பெயர்கள் ஸ்ரீராமானுஜர் காலத்திலிருந்து முதன்மை பெற்று மக்களிடம் பெருவழக்காயின. தேவராஜா என்பதன் தமிழ்ப் படிவங்களான தேவப்பெருமாள், தேப்பெருமாள் என்பவை தற்போது முதன்மை பெற்றுள்ளன. பூதத்தாழ்வாரின் மங்களாசாசனத்திற்குப்பின் இத்திருக்கோயிலின் பெருமை அதிகரித்தது. திவ்வியதேசங்களில் இதுவும் ஒன்றாகும். கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்ற தலைமைத்திருத்தலங்கள் மூன்றனுள் ஒன்றாகவும் ஆயிற்று. உடையவரின் தொடர்பால் இம்மூன்று திருத்தலங்களுக்கும் இப்பெருமையாயிற்று. மேலும், திருவரங்கம் போகமண்டபம் எனவும், திருமலை புஷ்பமண்டபம் எனவும், பெருமாள் கோயில் தியாகமண்பம் எனவும் ஆறாயிரப்படி குருபரம்பரையிலும், ஆசாரிய ஹிருதயத்திலும் குறிப்பிடப்படுகின்றன. ஸ்ரீவரதர் அடியார்க்கு எதையும் அருளும் பெருமையால்—தியாகத்தால் இப்பெயர் ஏற்பட்டது.

பெருமாள் பண்டு திருஅத்தியூர் ஆள்வார் என அழைக்கப்பெற்றார். "திருவத்தியூர் நின்றருளிய பெருமாள்" எனவும் இவர் அழைக்கப்பெற்றார்.[74] பின்னர்

"வரம்தரும் பெருமாள்" எனவும் அழைக்கப்பெற்றார். தாயாரின் திருநாமங்கள் பெரிய பிராட்டியார், பெருந்தேவியார் என்பனவாம்.[75]

பிரம்மா செய்த யாகத்தின் பயனாய் புண்ணியகோடி விமானத்தில் பெருமான் காட்சியளித்தார் என்பது தலபுராணம். வேதாந்த தேசிகரும் மெய்விரத மான்மியத்தில் இதுபற்றி பாடியுள்ளார். மணவாள மாமுனிகள் தேவராஜ மங்களம் பாடியும், அப்பைய தீட்சிதர் தம் ஊராகிய ஆரணிக்கருகில் உள்ள அடையபுலத்தில் ஸ்ரீவரதராஜர் கோயில் ஒன்றைக் கட்டியும் சிறப்பித்துள்ளனர்.

6.4.2 திருக்கோயில் அமைப்பு : இத்திருக்கோயில் 377.40 மீட்டர் நீளமும், 211.65 மீட்டர் அகலமும் உடையது. இரு முக்கிய கோபுர வாயில்கள் உள்ளன. மேலைக்கோபுரவாயில் முதன்மையானது. கருவறையை அடுத்துள்ள பிராகாரம் "வையமாளிகை" எனப்படும். இரண்டாம் பிராகாரம் சேனையர் கோன் திருமுற்றம் எனப்படும். யமுனைத்துறைவர் திருமுற்றம்—மூன்றாம் பிராகாரமாகும். நான்காம் திருச்சுற்று ஆழ்வார் பிரதட்சிணம் எனப்படும்.

புண்ணியகோடி விமானம் திவிதள அமைப்புடையது. கீழே யோகநரசிம்மர் சந்நிதி, அ/மி. ஆண்டாள் சந்நிதி, மலையாள நாச்சியார், தன்வந்தரி விநாயர் சந்நிதிகள் முதலியவை உள்ளன. இவற்றைக் கடந்து அத்திகிரிமேல் ஏற 24 படிகள் உள்ளன. இருபத்துநான்கு தத்துவங்களே இங்குப் படிகளாக அமைக்கப்பெற்றுள்ளன. மூன்றாம் பிராகாரத்தில் மடைப்பள்ளி உள்ளது. இங்குள்ள கரியமாணிக்கப் பெருமாள் சந்நிதி எதிரில் ஆளவந்தார் உடையவரைக் கண்டார். இப்பிராகாரத்தில் கருடர், திருஅனந்தாழ்வார், கரியமாணிக்கப்பெருமாள், ஆகிய சந்நிதிகளும் உள்ளன. இப்பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. இது காகதீய மன்னன் பிரதாப ருத்ரதேவனால் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பர்.[76]

இப்பிராகாரத்தின் மையப்பகுதியில் அழகிய அபிடேக மண்டபம் உள்ளது. இங்கு உற்சவ மூர்த்தங்களுக்குத் திருமஞ்சனம் செய்யப்பெறும். இம்மண்டபத்தின் முகமண்டபப்பகுதி—கி. பி. 16—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அழகிய மணவாள ஜீயர் என்பவரால் அமைக்கப்பெற்றது. இம்மண்டபத்திலுள் கண்ணாடி அறையுள்ளது. ஒய்சள மன்னன் மூன்றாம் வல்லாளன், அவன் தேவியருடன் இம்மண்டபத்தில் அமர்ந்து திருவாய்மொழிப் பாசுரங்களைக் கேட்டான்.[77] இம்மண்டபத்திற்கு முன்னால் முப்பத்திரண்டு தூண்களைக் கொண்ட சிற்ப வேலைப்பாடுகளுடைய ஒரு மண்டபம் உள்ளது. அபிடேக மண்டபத்தில் உற்சவமூர்த்தங்களுக்குத் திருமஞ்சனம் நடைபெறுகையில், இம்மண்டபத்திலிருந்து கொண்டு ஸ்ரீவைணவர்கள் புருஷ சூக்தத்தின் பகுதிகளை ஓதுவார்கள். ஆழ்வார்களின் பாசுரங்களையும் பாடுவார்கள்.

இதன் வடக்குப் பகுதியில் உள்ள உயர்ந்த மண்டபம் கிளி மண்டபம் எனப்படும். இங்குப் பவித்ரோத்சவம் முன்பு நடைபெற்றது. தற்சமயம் இங்கு வாகனங்கள் உள்ளன. இதன் வடக்குப்பகுதியில் ஸ்ரீராமர்சந்நிதி உள்ளது.

6.4.3 **தாயார் சந்நிதி** : மூன்றாம் பிராகாரத்தின் மேற்குப்பகுதியில் தாயார் சந்நிதி உள்ளது. தாயாரை முதலில் சேவித்துப் பின்னரே பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்பது இங்குள்ள மரபாகும். பெருமாள் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் எழுந்தருளியிருக்கையில், தாயார் கிழக்குநோக்கி அமரந்த கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். இச்சந்நிதி தரைமட்டத்திலிருந்து 14.60 மீட்டர் உயரத்தில் உள்ளது. முகமண்டபம் கருவறைக்கு முன் உள்ளது. அதற்கு முன்னர் மகாமண்டபம் உள்ளது. இவையெல்லாம் 11.80 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ளன. தாயாருக்குத் தனிச்சந்நிதி அமைக்கும் வழக்கம் பிற்காலச் சோழர்காலத்தில்தான் ஏற்பட்டது.[78] இத்திருக்கோயிலிலும் 13—ஆம் நூற்றாண்டில் இச்சந்நிதி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

முகமண்டபம் காப்பலூர் வங்க காலிங்கரையன் என்பவனால கட்டப்பட்டது. அவனது உருவம் இம்மண்டபச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற தாயார் சந்நிதி விஜயநகர அரசர் காலத்தில் கி. பி. 15—ஆம் நூற்றாண்டில் மீண்டும் புனிதமாக்கப்பெற்றது.[79]

சந்நிதி மீதுள்ள விமானம் கல்யாண கோடிவிமானம் என்று அழைக்கப் பெறுகின்றது. இது எட்டூர் குமார தாதாசாரியரால் கி. பி. 1614—இல் அமைக்கப்பெற்றது.[80] அவர் விமானத்தைப் பொன்னால் வேய்ந்தார். தாயார் சந்நிதிக்குக் கிழக்கில் உள்ள மகாமண்டபம் விஜயநகர அரசர் காலத்தில் அமைக்கப்பெற்றதாகும். மகாநவமித் திருவிழா நாள் அன்று பெருமாளும் தாயாரும் இங்கு ஒரே பீடத்தில் எழுந்தருள்வர். இது ஆண்டில் ஒரே முறை நிகழ்வதாகும். அலங்கார மண்டபமும், நூற்றுக்கால் மண்டபமும் கி.பி. 16—ஆம் நூற்றாண்டில் அழகிய மணவாள ஜீயரால் அமைக்கப்பெற்றவையாம்.

6.4.4 **பிற சந்நிதிகள், மண்டபங்கள்** : தாயார் சந்நிதிக்கு அடுத்தாற்போல் சிறிய அழகிய ஊஞ்சல் மண்டபம் உள்ளது. இதன் நான்கு தூண்களும் அழகிய சிறிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்டவைகளாம். இதுவும் விஜயநகர ஆட்சிக்காலத்தியது ஆகும்.

“தொண்டரடிப்பொடி வாசல்” வழியே வெளியே வந்தால் நான்காம் பிராகாரத்தை அடையலாம். இதன் சரியான பெயர் தோடர்மால் வாசலாகும். இந்நுழைவாசலில், ராஜா தோடர்மால் விக்கிரகம் உள்ளது. முகம்மதியப் படையெடுப்பின்போது, உற்சவர் திருச்சி மாவட்டம் உடையார்பாளையக் காடுகளில் கொண்டுசென்று மறைத்து வைக்கப்பெற்றார். ராஜா தோடர்மால் பின்னர் அப்பெருமானைத் திரும்பவும் இவ் ஆலயத்திற்குக் கொண்டுவரும் பணியில்

ஈடுபட்டார். இந்நுழைவாயிலும், மதில்சுவரும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்றிருக்கவேண்டும். கருணாகரத் தொண்டைமானின் மனைவி அளித்த நன்கொடை பற்றிய கல்வெட்டு இங்குள்ளது.[81] இந்நுழைவாயில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அழகிய மணவாள ஜீயரால் உயர்த்தப்பெற்று, புதுப்பிக்கப்பெற்றது. மதில்சுவரின்மேல் இரு இடங்களில் அவரது சிற்பங்கள் உள்ளன.

நான்காம் பிராகாரம் ஆழ்வார் திருவீதி, ஆழ்வார் பிரதிட்சிணம் என அழைக்கப்பெறுகின்றது. இப்பிராகாரத்தில் ஆழ்வார்களின் விக்கிரகங்கள் உள்ளன. இங்குப் பல சந்நிதிகளும், மண்டபங்களும், தோட்டங்களும், கொடிமரமும், பலிபீடமும் உள்ளன. ஆழ்வார்கள், ஆசாரியர்கள், அ/மி. கண்ணன், அ/மி. வராகர், அ/மி. அரங்கநாதர், அ/மி. சக்கரத்தாழ்வார் சந்நிதிகளும் உள்ளன. இப்பிராகாரத்தில் வடகிழக்குப் பகுதியில் நம்மாழ்வார் சந்நிதி உள்ளது. நம்மாழ்வார் திருக்கையை மடித்து சின்முத்திரை காட்டும் நிலையில் வைத்துள்ளார். தென்கிழக்கு மூலையில் திருமங்கையாழ்வார், மணவாள மாமுனிகள் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. மாமுனிகளின் சந்நிதி பெரியது. விஜயநகர அரசர் காலத்தில் கட்டப்பட்டது. மாமுனிகளின் திருநட்சத்திரமான மூல நன்னாள் வழிபாட்டிற்காக அளிக்கப்பெற்ற நன்கொடை (கி.பி. 1555) பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[82] இச்சந்நிதிக்கு மேற்கில் திருமழிசை ஆழ்வார், இராமானுஜர் சந்நிதிகள் உள்ளன. உடையவர் சந்நிதியை அடுத்து முதலாழ்வார்களின் சந்நிதி உள்ளது. இது தற்சமயம் மூடப்பெற்றுள்ளது.

தென்கிழக்கு மூலையில் கல்யாண மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தொண்ணூற்றாறு தூண்கள் உள்ளன. இவற்றில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. இது விஜயநகர அரசர் காலத்தில் அமைக்கப்பெற்றது. தென்மேற்கு மூலையில் வேதாந்த தேசிகர், இலட்சுமி குமார தாதா சாரியார் சந்நிதிகள் உள்ளன. தாதா சாரியார் விஜயநகர அரசன் முதலாம் வேங்கடன் காலத்தில் இவ் ஆலய மேலாளராகப் பணியாற்றினார். வைகாசி பிரம்மோற்சவத்தின்போது, உற்சவரை இம்மண்டபத்தில் எழுந்தருளச்செய்வர். அப்பொழுது வேத பாராயணமும், பிரபந்தப் பாசுரங்களும் இசைக்கப்பெறும்.

கொடிமரத்திற்கு மேற்கில் இரு சிறிய நான்கு தூண்களையுடைய துலாபார மண்டபங்கள் உள்ளன. இவை விசயநகர அரசன் அச்சுதராயன் துலாபார தானம் செய்த நினைவாக கி.பி. 1532-இல் கட்டப்பெற்றன. அம்மன்னன் தன் எடைக்குச் சமமாக முத்தினை நிறைத்து, அவற்றை இவ் ஆலயத்திற்கு வழங்கினான். இதுபற்றிய குறிப்பு அவனது கல்வெட்டில் உள்ளது.[83]

அனந்தசரஸ் என்னும் திருக்குளம் 78.6 மீட்டர் நீளம், 60 மீட்டர் அகலம் கொண்டது. இது மிகவும் பழமையானது. இதன் நடுவில் 16 தூண்களைக் கொண்ட

சிறுமண்டபத்தில் நீருக்குள் பழைய அத்திவரதர் எழுந்தருளியுள்ளர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விசயநகர அமைச்சர் இராமராயர் இத்திருக்குளப்படிகளைச் செப்பனிட்டார். இக்குளத்தின் மேற்குப்பகுதியில் அ/மி. கண்ணன், அ/மி. வராகர் சந்நிதிகள் சிறிய அளவில் உள்ளன. கண்ணன் சந்நிதி கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபண்டியன் காலத்தில் அமைக்கப்பெற்றது. தற்சமயம் இங்கு விக்கிரகம் இல்லை, வராகர் சந்நிதியிலும் விக்கிரகம் இல்லை.

திருக்குளத்தின் வடக்கில் அ/மி. அரங்கநாதர் சந்நிதி உள்ளது. மூலவர் அழகாக உள்ளார். குளத்தின் கிழக்கில் சக்கரத்தாழ்வார் சந்நிதியுள்ளது. இது மூன்றாம் குலோத்துங்கனின் காலமான கி.பி. 1191-இல் நெட்டூர் இளையாழ்வான் காலிங்கராயனால் அமைக்கப்பெற்றது. இங்குள்ள கல்வெட்டு "திருவாழி ஆழ்வார்" என்று இப்பெருமானைக் குறிப்பிடுகிறது. இச்சந்நிதிக்கு இருவாயில்கள் உள்ளன. சக்கரத்தாழ்வாரின் இருபக்கங்களிலும் பெருமான்கள் உள்ளனர் (அ/மி. நரசிம்மர் ஒருபக்கம் ; அ/மி. சக்கரத்தாழ்வார் ஒருபக்கம்). நம்மாழ்வார் சந்நிதிக்குப் பின்புறம் பொற்றாமரைக்குளம் உள்ளது.

சக்கரத்தாழ்வார் சந்நிதிக்குக் கிழக்கில் " துரைதோட்டம்" உள்ளது. இங்கு கோவிலுக்குப் பயன்படும் மலர்ச்செடிகள், பழமரங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்குள்ள "வெள்ளி மண்டபத்தில்", ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும், தாயாரை எழுந்தருளச்செய்கின்றனர். சித்திரை மாதம் "வருஷ தவனோற்சவம்" (தோட்ட உற்சவம்) அ/மி. வரதருக்கு இங்கு நடைபெறுகின்றது. சதாசிவர் காலத்திய கல்வெட்டு, சகம் 1473 கி.பி. 1551-குறிப்பிடும் வசந்தத்தோப்பு உற்சவம்—சித்திரை மாதம் நடைபெறுவது—இதுவாகத்தான் இருக்கவேண்டும். இத்தோட்டத்திலேயே பெரியாழ்வாருக்கும், தொண்டரடிப் பொடியழ்வாருக்கும் சந்நிதிகள் உள்ளன. இவை இன்று சீரழிந்துள்ளன. இங்கிருந்த விக்கிரகங்கள் மற்ற சந்நிதிகளில் உள்ளன.

கலியாண மண்டபம் : விசயநகர அரசர் காலத்தின் சிறந்த கொடையாக இது கருதப்படுகிறது. தூண்களில் குதிரை வீரர்கள் உள்ளனர். புராண, இதிகாசச் சிற்பங்கள் இங்குச் செதுக்கப்பெற்றுள்ளன. அழகிய மணவாள ஜீயர் மேற்பார்வையில் இது அமைக்கப்பெற்றது. இவரது உருவம் இரு தூண்களில் உள்ளது. இது 575 சதுர மீட்டர் பரப்புடையது. உற்சவ காலங்களில் இங்கு சுவாமியும் உபய நாச்சிமாரும் எழுந்தருள்வர். சில குறிப்பிட்ட விழாக்காலங்களில் இங்குச் சொற்பொழிவுகள் நடைபெறும். கிழக்கு மேற்காக நடு அச்சாகச் செல்லும் கோடு கருவறையை அடிபடையாகக் கொண்டு செல்கிறது.

கொடிமரத்தின் அருகில் உள்ள நாற்கால் மண்டபம் "திருக்கச்சி நம்பி மண்டபம்" என அழைக்கப்படுகிறது. தூண்களில் அவரது உருவம் செதுக்கப்பெற்றுள்ளது.

மேலைக்கோபுரம் 53 மீட்டர் உயரமுடையது. கீழைக்கோபுரம் 60 மீட்டர் உயரம் உடையது. மேலைக்கோபுரம் ஏழு நிலைகளையுடைது. கீழைக்கோபுரம் ஒன்பது நிலைகளையுடைது. மேலைக்கோபுரத்தில் கி.பி. 1134 ஆண்டைய, கம்பண்ண உடையாரின் கல்வெட்டு உள்ளது. விசயநகர அரசர்களின் தொடக்ககாலத்தில் இது கட்டப்பெற்றிருப்பினும், பிற்காலச் சோழர், பாண்டியர்களின் கலைப்பாணியில் இது அமைந்துள்ளது. கீழைக்கோபுரம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பெற்றதாகும் (கி.பி. 16-இன் பிற்பகுதி).

6.4.5 **வைணவ சமய மறுமலர்ச்சி** : பண்டு காஞ்சியில் உள்ள திருவெஃகா திருத்தலம் புகழ்பெற்றிருந்தது. ஆசாரியர்கள் காலத்தில் அ/மி. வரதர் திருக்கோயில் புகழ்பெற்று, காஞ்சியில் உள்ள பிற திருத்தலங்களின் பெருமையைக் காட்டிலும் இது மேம்படத் தொடங்கியது. ஸ்ரீராமானுஜர் இத்திருக்கோயிலோடு கொண்டிருந்த தொடர்பினால் இப்புகழ் முக்கியமாக ஏற்பட்டது. திருக்கச்சி நம்பிகளின் தொண்டாலும், கூரத்தாழ்வான் போன்றோரின் நூல்களாலும் அருளாளரின் பெருமை மேம்பட்டது. உடையவர் இங்கு அருளாளனுக்குக் கைங்கரியம் செய்தார் ; அத்துடன் திருக்கச்சி நம்பி மூலமாக ஆறு வார்த்தைகளை அருளாளரிடம் பெற்றார் ; இல்லறத்தை விடுவித்துத் துறவியாக அவர் ஆனதும் இங்குத்தான். விசிட்டாத்வைதக் கொள்கையை உருவாக்க தொடக்ககால ஆன்மப்பயிற்சிகளும், அனுபவங்களும் அவருக்கு இங்குத்தான் கிடைத்தன. "ஒவ்வொரு ஸ்ரீவைணவரும் சந்தியா மந்திரத்தின்போது, திருவரங்கம், திருமலை, பெருமாள்கோயில் - அ/மி. வரதர் கோயில், திருநாராயணபுரம் ஆகிய நான்கு திருத்தலங்களையும் தியானிக்கவேண்டும்" என்று உடையவர் வலியுறுத்தினார். அவர் இங்கு வழிபாட்டு முறைகளையும், உற்சவங்களையும் செம்மைப்படுத்தினார். இவ்வகையில் இத்திருக்கோயில் "மாதிரி ஆலயமாக" ஏற்கப்பட்டது ; பின்பற்றப்பட்டது. பாஞ்சராத்திர ஆகமத்தின் மூன்று முக்கிய சம்ஹிதைகளை இவர் மூன்று ஆலயங்களில் வழிபாட்டு முறையாக அமைத்தார். காஞ்சி-ஜயாக்கியசம்ஹிதை ; திருவரங்கம்-பௌஷ்கர சம்ஹிதை , ஈஸ்வர சம்ஹிதை-மேல்கோட்டை. உடையவரைத் தொடர்ந்து விசயநகர அரசர்களின் காலத்தில் இவ்ஆலயம் எல்லா வகையிலும் சிறப்புற்றோங்கியது. நடாதூர் அம்மாள், தேசிகர், மணவாள மாமுனிகள் முதலிய புகழ்பெற்ற ஆசாரியர்கள் இப்பெருமானைப் போற்றிப் பாடியுள்ளனர். ஸ்ரீபாஷ்யம், சுருதப்பிரகாசிதம் ஆகிய அரிய நூல்களுக்கு முதலில் ஆய்வு நடந்தது, வரதர் கோயிலில்தான். சுதரிசன சூரி என்பவர் தம்முடைய நூல்கள் அனைத்தையும் கச்சி வரதரையே துதித்துத் தொடங்கி உள்ளார். தேசிகர் இராமானுஜரின் சரணாகதித் தத்துவத்தை ஏற்றுக் கச்சி வரதருக்கே சரண் என்று குறித்திருக்கிறார். மேலும், அவர் ஹஸ்தகிரி மகாத்மியம் என்னும் வரதரைக் குறித்த தோத்திரமாலையில் வரதரின் புகழைப் பேசியுள்ளார். மணவாள மாமுனிவர் "தேவராஜமங்களம்" என்னும் நூலில் இப்பெருமானை மிகவும் உருக்கமாகத் துதித்துள்ளார்.[84] பல மடங்கள் இராமானுஜ தரிதசனத்தைப் பரப்ப இங்கு ஏற்பட்டுள்ளன.

ஆசாரியர்களுக்கும் இத்திருத்தலத்திற்கும் உள்ள தொடர்பு மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.

6.4.6 **பிரிவு-1-உடையவர் காலம் :** திருக்கச்சி நம்பிகளைப் பற்றியும், உடையவரைப்பற்றியும் ஏற்கனவே கண்டோம். குறிப்பாக இவ் ஆலயத்திற்கும் உடையவருக்கும் உள்ள சில தொடர்புகள் இங்குக் குறிக்கப்படுகின்றன. அமுதனார் இராமானுஜ நூற்றந்தாதியில், உடையவரை, "தென் அத்தியூரர் கழலிணைகள் பூண்ட அன்பாளன்" என்று போற்றுகிறார். "ஸ்ரீபாஷ்யம்" எழுதுவதற்காகச் சுவடிகளைச் சேகரிக்க இவர் திருமலைக்கும், வடஇந்தியாவிற்கும் செல்லுமுன், காஞ்சிக்கும்வந்து பேரருளாளரின் நல்வாழ்த்துக்களையும் திருக்கச்சி நம்பிகளின் நல்வாழ்த்துக்களையும் வேண்டிச் சென்றார். "வழிபாட்டின்போதும், விழாக்காலங்களிலும் வடமொழி வேதங்களுடன், திவ்வியப் பிரபந்தங்களையும் ஓதவேண்டும்" என்று உடையவர் நியமித்தார்.[85] இயல்கோஷ்டி எனப்படும் திவ்வியப்பிரபந்தம் சேவிக்கும் குழுவினர் இவ் ஆலயத்தில் இன்றும் உள்ளனர். இவர்கள் வைகாசி பிரம்மோற்சவத்தின்போது பெருமாளின் முன்னர் பாசுரங்களைப் பாடிச் செல்கின்றனர். உடையவர் தாம் நியமித்த 74 சிம்மாசனாதிபதிகளில், சிலரை மட்டும் ஸ்ரீபாஷ்யத்தைப் பரப்பவும், பெரும்பாலானோரைத் திவ்வியப்பிரபந்தங்களைப் பரப்பவும் ஏற்பாடு செய்தார். இதிலிருந்து தாய்மொழியில் உள்ள பிரபந்தப் பாசுரங்கள் பெரும்பாலான மக்களுக்கு எளிதில் புரியும் என அவர் அறிந்திருந்தது புலனாகிறது. கூரத்தாழ்வான் மூலமாக வரதராஜஸ்தவம் பாடச்செய்தார். அந்நூலின் சுலோகங்கள் சில முக்கிய நிகழ்ச்சிகளின்போது இங்கு ஓதப்பெறுகின்றன. யக்ஞமூர்த்தி என்னும் அத்வைதியை, பேரருளாளன் கருணையால், வழிகாட்டுதலால் வென்றார். அவருக்கு "அருளாளப்பெருமாள் எம்பெருமானார்" என்ற பெயரைச் சூட்டி, தம்முடைய திருவாராதனப் பெருமாளாகிய அமி. வரதருக்குத் திருவாராதனம் செய்துவர ஏற்பாடு செய்தார்.

உடையவரின் மேலான தொண்டுகளைப் போற்றும்வகையில், அவர் இயற்கை எய்தி ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்குள்ளாக அவருடைய விக்கிரகம் இங்கு நிறுவப்பெற்றது. மூன்றாம் குலோத்துங்கனின் படைத்தலைவன் நெட்டூர் இளையாழ்வான் காலிங்கராயன் இவ்விக்கிரகத்தை எழுந்தருளச்செய்து, வழிபாடுகளுக்காக இறையிலியாக இரு கிராமங்களையளித்தான்.[86] ஸ்ரீபாஷ்யவிருத்திக்காகவும் இவன் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளான்.

6.4.7 **பிரிவு-2 : உடையவருக்குப் பிந்திய காலகட்டம் :** கி.பி.12-இல் எம்பார், பட்டர், குருகேசர் (பிள்ளான்) நஞ்சீயர் முதலியோர் உடையவருக்குப்பின் வாழ்ந்து வியாக்கியானங்களை இயற்றி உடையவரின் கொள்கைகளைப் பரப்பிவந்தனர். பகவத்விஷயம் எனப்படும் திருவாய்மொழி ஈடுஉரைகள் இக் காலகட்டதில் மேலும் தோன்றின. "உடையவர் காலத்தில் திருக்குருகைப் பிரான்பிள்ளான்

ஆறாயிரப்படியை இயற்றி இவ்வகையான மணிப்பிரவாள[87] நடைவியாக் கியானங்களைத் தொடங்கிவைத்தார்.

6.4.8 **ஈட்டின் ஓராண்வழிச்செலவும், பேரருளாளரின் பெருங்கருணையும்:** நம்பிள்ளையின் திருவாய்மொழிச் சொற்பொழிவுகளைக் கேட்ட அவரது சீடர் வடக்குத் திருவீதிப்பிள்ளை அதைக்கேட்டது கேட்டபடியே இரவில் ஏடுபடுத்தி வந்தார். முடிவுற்றதும் நம்பிள்ளையிடம் காட்ட, அவர் ஏற்று அதை வெளியிடாமல் தம்மிடமே வைத்திருந்தார். ஒருநாள் இறைவன் ஆணையால் நம்பிள்ளை தமது சீடரான ஈயுண்ணி மாதவப்பெருமாள் என்பவருக்கு ஈடுமுப்பத்தாறாயிரப்படியை வழங்கினார். அப்பொழுதும் அதைப் பிறர்க்குக் காட்டாமல், ஓராண் வழியாகவே கற்பித்து வருமாறு ஆணையிட்டார். அவர் தம் மகனாரான பத்மனாபருக்கு ஈட்டைக் கற்பித்தார். இவவிருவரிடம் ஈடு பல்லாண்டுகள் தங்கிவிட்டது. காஞ்சியிலேயே அவ்விருவரும் தங்கிவிட்டனர். அவர்கள் ஈட்டைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல், நிதியை நோக்கிக் கொண்டிருப்பதுபோலக் காத்துக்கொண்டிருந்தனராம். பிறகு நம்பிள்ளையின் மற்றொரு சீடரான நாலூர்ப்பிள்ளை பத்மனாபருக்குத் தொண்டுகள் செய்து மகிழ்வித்து அவ் ஈட்டைப் பெற்றார். அப்போது நிகழ்ந்த ஓர் அற்புதத்தை யதீந்திரப்பிரவணப்பிரமாணம் விரிவாகக் கூறுகின்றது.

பத்மனாபர் ஈட்டை நாலூர்ப்பிள்ளைக்கு வழங்கியபோது பேரருளாளர் அருச்சகர் வாயிலாக ஆவேசித்து, ஈட்டை எல்லார்க்கும் வெளிப்படுத்துமாறு ஆணையிட்டார்.[88] அப்படியிருந்தும் ஈடு வெளிப்பட்டுப் பிரச்சாரம் அடையவில்லை. நாலூர்ப்பிள்ளை தம்முடைய மகனாரான நாலூர் ஆச்சான்பிள்ளையிடம் ஈட்டை வழங்கினார். அவர் அதைத் திருநாராயணபுரத்து ஆய் என்பவருக்கும், திருவாய்மொழிப் பிள்ளைக்கும், இளம்பிளிசைப் பிள்ளைக்கும் கற்பித்தார். திருவாய்மொழிப் பிள்ளையிடமிருந்து மணவாள மாமுனிவர் பெற்று, திருவரங்கன் திருவோலக்கத்தில் பத்துத்திங்கள் விரித்துரைத்து ஈட்டைப் பிரசாரப்படுத்தினார்.[89] அதுவரை சுமார் இருநூறு ஆண்டுகள் நம்பிள்ளை ஈடு ஓராண் வழியாகச் சென்றது.

காஞ்சிபுரம் வடகலைவழியின் தலைமை இடமாக அமைந்ததுபற்றி ஏற்கெனவே கண்டோம். பட்டர் "ஸ்ரீரங்கநாத ஸ்தோத்திரம்" பாடினார். அதில் அத்திகிரிப்பெருமாள் உடையவரின் இதயத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததாகக் கூறுகிறார்.

6.4.9 **பிள்ளை லோகஞ்சீயர் :** யதீந்திரபிரவணப் பிரபாவம் என்னும் அரிய உரைநடைநூல் பிள்ளை லோகஞ்சீயரால் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது. இது மணவாள மாமுனிகளின் வரலாற்றைக் கூறுவது. இந்நூலாசிரியர் மாமுனிவரின் சீடரும் அட்டதிக்கயங்களில் ஒருவருமான பரவஸ்து பட்டர் பிரான் சீயரின் சீடர் பரம்பரையில் வந்தவர். இவர் நெடுநாள் மாமல்லபுரத்தில் இறைபணியாற்றி வந்தார்.

6.4.10 *நடாதூரம்மாள்-சுதரிசனபட்டர்* : எங்கள் ஆழ்வானின் சீடரும், காஞ்சிவாசியுமான நடாதூரம்மாள் ஸ்ரீவரதராஜசுவாமி ஆலயத்தில் ஸ்ரீபாஷ்ய விரிவுரைகளையாற்றி வந்தார். இதைக்கேட்ட அவர் சீடராகிய சுதரிசனபட்டர், சுருதப்பிரகாசிகையை எழுதினார். இந்நூல் ஸ்ரீபாஷ்யத்தைப் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவுவதாகும். நடாதூரம்மாள்-தத்துவசாரம், பிரபன்னபாரிஜாதம், பிரத்வாதி பஞ்சகம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இப்பஞ்சகத்தில் நூற்றெட்டுத் திருத்தலங்களில், குறிப்படத்தக்க மூன்று திருத்தலங்களில்-அஸ்தகிரியும் ஒன்று என்று குறிப்பிடுகிறார். நடாதூரம்மாளின் சீடராகிய ஆத்திரேய ராமனுஜா (எ) அப்புள்ளார் கி.பி. 13-இன் நடுப்பகுதியில் காஞ்சியில் வாழ்ந்தார். இவரும் ஸ்ரீபாஷ்ய விரிவுரை ஒன்று எழுதியுள்ளார். இவர் தேசிகரின் தாய்மாமா என்பதை முன்னரே பார்த்தோம்.

6.4.11 *தேசிகர்* : தேசிகரைப் பற்றி விரிவாகக் கண்டோம். இங்கும் சில செய்திகளைக் காண்போம். இவர் அருமி. வரதரிடம் தனித்த ஈடுபாடும், பக்தியும் கொண்டவர். "வரதராஜ பஞ்சாசத்" என்னும் நூலில் இவர் பெருமானைப் போற்றுகிறார். இது பிரபத்தி நெறியினை விளக்கும் சுலோகங்களைக் கொண்டது. விசிட்டாத்வைதக் கொள்கையையும் விளங்குவது. இச்சுலோகங்கள் சில முக்கிய நிகழ்ச்சிகளின்போது பேரருளாளன் முன்பு சேவிக்கப்படுகின்றன. "வைராக்கிய பஞ்சகத்தில்" இதயங்கனிந்த பக்தியை இப்பெருமானிடம் வெளிப்படுத்துகிறார். தமிழ்ப்பிரபந்தமான அடைக்கலப்பத்தில் அருளாளரிடம் தூய பக்தியுடன் தெரிவிக்கிறார். சரணாகதிநெறியை இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது. ஸ்ரீபாஷ்ய விரிவுரையை இவர் முப்பதுமுறை நிகழ்த்தியுள்ளார். சுருதப்பிரகாசிகையை இவர் முகலாயப் படையெடுப்பின்போது காப்பாற்றியது பற்றி முன்பே கண்டோம். இப்பெரும் கைங்கர்யம் காரணமாகவே ஸ்ரீபாஷ்யத்தைப் படிக்கும் முன்னர் வடகலை-தென்கலை ஆகிய இரு பிரிவினரும் வேறுபாடின்றித் தேசிகரை நன்றியுடன் போற்றித் தொடங்குகின்றனர்.

6.4.12 *பிரம்மதந்திர ஸ்வதந்திரர்* : இவர் தேசிகரின் சீடர். இளமையில் காஞ்சியில் வாழ்ந்து பின் திருப்பதியில் தங்கியவர். இவர் காஞ்சியிலிருந்த ஒரு மடத்திற்குத் தலைமை தாங்கினார் என்று ஒரு கல்வெட்டால் அறியமுடிகிறது.[90] இம்மடம் பின்னர் திருப்பதிக்கு மாற்றப்பட்டு, பின்னர் அங்கிருந்து மேல்கோட்டைக்கு மாற்றப்பட்டது. இதுவே புகழ்மிக்க பரகாலமடமாகும். பிரதிவாதி பயங்கரம் அண்ணாவின் தொண்டுகளைப் பற்றி ஏற்கெனவே கண்டோம். மணவாள மாமுனிகள் வரதர் மீது தேவராஜமங்களம் பாடினார். இவர் இயற்றிய உபதேசரத்தினமாலை எல்லாத் திருமால் கோயில்களிலும் பாடப்பெறுவதுபோல, இத் திருக்கோயில் நிகழ்ச்சிகளிலும் பாடப்பெறுகிறது. மணவாள மாமுனிகளின் சந்நிதி இங்கு இருப்பதைப் பற்றி முன்னர் கண்டோம். ஐப்பசி மூல நன்னாளில் 10 நாள் விழா இங்கு நடைபெறுகிறது.

6.5 *மணவாள மாமுனிகளுக்குப் பின்னர்* : (பிரிவு 3) பூர்வாசாரியர் பரம்பரை மாமுனிகளுடன் நிறைவடைந்தது. கி.பி.15-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி

முதல் ஜீயர்கள் பொறுப்புடன் மடங்களை நிர்வகித்தனர். ஆலய வழிபாடுகள் குறைவின்றி நடைபெற ஆவன செய்தனர். விசயநகர அரசர்கள் வைணவராயிருந்து வைணவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டனர். இத் திருக்கோயில் அவர்கள் காலத்தில் எல்லாவகையிலும் சிறந்து வளர்ந்து ஓங்கியது. அவர்கள் இத்திருக்கோயிலுக்கு நிலங்களையும், ஆபரணங்களையும், வாகனங்களையும் வழங்கினர் ; பொருளுதவி செய்தனர். பல மண்டபங்களை எழுப்பினர். மூலவருக்கு மட்டுமின்றி ஆழ்வார்கள், ஆசாரியர்களுக்கும் விழா எடுத்தனர். சுருங்கக்கூறின் விசயநகர அரசர்களின் காலம் ஸ்ரீவைணவ சமயத்திற்குப் பொற்காலமாகும். இத்திருக்கோயிலுக்கும் அவ்வாறே.

6.5.1 **அழகிய மணவாள ஜீயர் (கி.பி.1420-1468)** :இவர் முக்கியமான ஜீயராக இக் காலகட்டத்தில் விளங்கினர். கி.ப.15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள் இவரது பணிகளையும் முக்கியத்துவத்தையும் குறிக்கின்றன. இவர் பட்டர்பிரான் ஜீயரின் சீடராவார். இவரது சீயர் கந்தாடை இராமானுஜ அய்யங்காரும் இவ் ஆலய முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க கைங்கரியங்களைச் செய்துள்ளனர். இருவரும் விசயநகர மன்னன் சாளுவநரசிம்மனின் சமகாலத்தவராவர். நரசிம்மன் இராமானுஜ அய்யங்காரை இராமானுஜ கூடங்களைத் திருமலையிலும் காஞ்சியிலும் மேற்பார்வையிடும் பணியில் அமர்த்தினான். இதனைத் திருமலைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

6.5.2 **மற்றொரு அழகிய மணவாள ஜீயர்** : இவர் சதாசிவராயர் காலத்தினர். இவர் இக்கோயிலின் ஸ்ரீகாரியமாக கோயில் கேள்வி ஆகப் பணியாற்றியவர். கி.பி.1558-1562-ஆம் ஆண்டுகளின் இரு கல்வெட்டுகள் இவர் நான்கு கிராமங்களை நனகொடையாக அளித்த செய்தியைத் தெரிவிக்கின்றன. இவற்றின் வருவாய் மூலம் பல வழிபாடுகள் செய்யவும், தை மாதத்தில் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பத்துநாள் உற்சவம் நடத்தவும் பயன்பட்டது. மேலும் ஆடி, ஆவணி, புரட்டாசி, கார்த்திகை, மாசி. வைகாசி மாதங்களில் பெருமாள் அழகிய மணவாளப் பெருந்தோப்புக்கு எழுந்தருளும் உற்சவத்திற்கு இவர் நன்கொடை வழங்கியுள்ளார். இவர் தாயார் சந்நிசிக்கு முன் ஒரு மண்டபம் அமைத்தார். கலியாண மண்டபத்தை அமைத்தார். மூன்றாம் பிராகார மதில் சுவரைப் புதுப்பித்தார்,

6.5.3 **ஆதிவண்சடகோப ஜீயர்** :இவர் மேலக்கோட்டையில் சித்தார்த்தி ஆண்டு புரட்டாசி மாதம் வியாழக்கிழமை தனுர்லக்கினம் கூடியநாளில் (செப்1379) பிறந்து காஞ்சியில் வாழ்ந்தவர். இவர் தந்தையார் ஸ்ரீ உ.வே. கிடாம்பி கேசவாச்சாரியார் என்பவராவார். கடிகாசதம் அம்மாளிடம் கல்வி கற்றார். பின்னர் கர்நூல் மாவட்டத்தில் உள்ள அகோபிலம் சென்று சந்நியாசியானார். ஆந்திரப்பிரதேசத்தில் வைணவ சமயம் பரவ இவர் பெருந்தொண்டாற்றியதைக் கிருஷ்ணதேவராயர் தம்முடைய "ஆமுக்த மால்யதா" என்னும் நூலில் பாராட்டுகிறார். தென்கலை மரபுப்படி இவர் மாமுனிகளின் சீடராவார். வடகலை மரபுப்படி இவர் மாமுனிக்குச் சந்நியாசம் அளித்ததாகக் கூறப்படுகிறது காலநிலையை ஆராயுமிடத்து இதுவே

பொருத்தமாகத் தெரிகிறது. இவர் மணவாள மாமுனிகளுக்குச் சந்நிதி அமைத்துள்ளார் என்பர். இவர் நிறுவியதே அகோபில மடமாகும்.

6.5.4 **பல்வேறு குடும்பத்தினரின் பணிகள்** : நல்லான் சக்கரவர்த்தி குடும்பத்தினர், தாளப்பாக்கம் குடும்பத்தினர் தாதாசாரியர் குடும்பத்தினர், கோமடம் குடும்பதினர், பிரதிவாதி பயங்கரம் குடும்பத்தினர் ஆகப் பலரும் இத்திருக்கோயில் கைங்கரியங்களில் பலவகையில் ஈடுபட்டிருப்பதைக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

திருமலை நம்பி மரபினர் தாதாசாரியர் எனப்படுவர். தொட்டாசாரியரும் தாதாசாரியரும் அழகிய கோவிந்தராஜர் விக்கிரகத்தைத் திருமலையில் பிரதிட்டை செய்யப் பெரிதும் பாடுபட்டனர். குமாரதாதாசாரியார் துலாபார தானம் செய்த பொன்னைக்கொண்டு தாயார் சந்நிதி விமானத்திற்குப் பொன்வேய்ந்தார். ஐயங்குளத்தில் தாதசமுத்திரம் என்னும் பெரிய குளத்தைவெட்டினார். அதன் கரையில் அனுமனுக்குக் கோயில் கட்டினார். இங்குதான் சித்திரா பௌர்ணமியன்று அழகியவரதர் எழுந்தருளிச் சேவை சாதிக்கிறார். பெரியவிழாவாக இது நடைபெறுகிறது.

6.5.5 **ஆத்தான் ஜீயர்** : கி.பி.1688-இல் அவுரங்கசீப் தென்னாட்டின்மீது படையெடுத்தபோது, உற்சவ விக்கிரங்களைத் திருச்சி-உடையார்பாளையம் காட்டிற்கு எடுத்துச்சென்று மறைத்து வைத்தனர். இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப்பின் அந்நியர் பயம் நீங்கி, திரும்பவும் உற்சவ விக்கிரகங்களைக் கொண்டுவர முனைந்தபோது, உள்ளூர் படைத்தலைவன் அவற்றைக் கொடுக்க மறுத்தான். ஆத்தான் திருவேங்கடராமானுஜ ஜீயர் தன் சீடராகிய லாலாதோடர்மல்லாவின் உதவியை நாடினார். அவன் படைபலத்தைப் பிரயோகித்து, கி.பி.1710-இல் உற்சவப்பெருமாளையும், உபய நாச்சிமாரையும் மீட்டு வந்து காஞ்சியில் எழுந்தருளச்செய்தான். இச்செய்தி தாயார் சந்நிதி அருகில் உள்ள கல்வெட்டில் உள்ளது.[91]

இவரது மடம் கிழக்குச் சந்நிதிக்குத் தெற்கே மதிலோரத்தில் இருந்தது. சாத்திரப்புலவர் இருவர், வடமொழிப்புலவர் ஒருவர், தமிழ்ப்புலவர் ஒருவர் ஆகிய நால்வரை ஒன்றுகூட்டி பகவத் விஷயத்திற்கு ஓர் அரும்பதவுரை எழுதுமாறு இவர் பணித்தார். திருவரங்கம் பெருமாளுக்கு அடையவளைந்தான் மதில்போல பகவத் விஷயத்திற்கு இது பாதுகாப்பாக இருந்ததால், இதை அடையவளைந்தான் அரும்பதஉரை என்று பெயர் வழங்கச்செய்து, இலக்கிய உலகில் புகழோங்கச்செய்தார். தவிர திருப்பல்லாண்டு வியாக்கியானம் அரும்பதம் என்ற நூல் இவருடையதாகும்.

6.5.6 **தொட்டாசாரியர் சேவை** : இவர் நானூறு ஆண்டுகளுக்கு முன் சோளிங்கபுரத்தில் வாழ்ந்தவர். ஆண்டுதோறும் காஞ்சி வரதர் கருடசேவை

சேவிப்பவர். அவ்வாண்டு உடல்நிலை சரியில்லாததால் சோளிங்கபுரம்-தக்கான்குளத்தில் நீராடிப் பெருமானை வணங்கி ஐந்து பாடல்களால் போற்றினார்.[92] அவ்வளவில் அ/மி வரதராஜப்பெருமான் அவருக்கு அக்குளக்கரையிலேயே கருடசேவை அருளினார். அந்நினைவாக இன்றும் காஞ்சி வரதர் கருடசேவையின்போது மேலைக்கோபுரவாயிலில், பெருமாளைச் சற்றுநேரம் நிறுத்தி, குடையினால் அவர் திருமுகத்தை மறைக்கின்றனர். கருப்பூர ஆரத்தி நடக்கிறது. பின்னர் சுவாமி பதினாறுகால் மண்டபம் அருகே எழுந்தருள்கிறார்.

6.6 **பூஜைகளும் திருவிழாக்களும்** : இத்திருக்கோயிலில் ஒருநாள் ஐந்துமுறை வழிபாடுகள் நடக்கின்றன. விடியற்காலை, பகல் 12 மணி ; மாலை 6.00 மணி ; இரவு 9.00 மணி ; நித்திய பூஜை (அ) சேவா காலத்தின்போது திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைப் பாடுகின்றனர். அ/மி. நரசிம்மர் சந்நிதியிலும், அ/மி. பெருந்தேவித்தாயார் சந்நிதியிலும் தனித்தனியே வழிபாடுகள் நடக்கின்றன.

உற்சவமூர்த்திக்கு ஒரு மாதத்தில்-மாதப்பிறப்பு, பௌர்ணமி, அமாவாசை, அஸ்தம், திருவோணம், இவற்றுக்கு முந்தைய நாள் ஆகிய ஆறு நாட்களில் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. அபிடேக மண்டபத்தில், வாத்தியங்கள் முழங்க திவ்வியப்பிரபந்த வேதபாராயண சேவையுடன் திருமஞ்சனம் நடக்கிறது. "சாலைக்கிணறு கைங்கரியம்"-உடையவர் செய்ததை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் அங்கிருந்து திருமஞ்சன தீர்த்தம் கொண்டுவரப்படுகிறது. மூலவருக்கு ஒவ்வொரு வெள்ளியன்றும் திருமஞ்சனம் நடக்கும். இதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.[93]

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்கள் முழுவதையும் இங்கு ஓராண்டில் நான்குமுறை சேவிக்கின்றனர். நாள் ஒன்றுக்கு ஐம்பது பாசுரங்களாக விழாக்காலங்களிலும், இவ்வாறு விடாமல் சேவித்து நிறைவுசெய்கின்றனர். இவற்றுடன் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் இராமானுச நூற்றந்தாதியையும், உபதேசரத்தினமாலையையும், திருவாய்மொழி நூற்றந்தாதியையும் சேவிக்கின்றனர். வேதபாராயணம் குறிப்பிட்ட ஆறு நிகழ்ச்சிகளின்போது சேவிக்கப்படுகிறது. ஆழ்வானின் வரதராஜஸ்தவமும், தேசிகரின் வரதராஜ பஞ்சாசத்தும் கூட இசைக்கப்படுகின்றன.

இத்திருக்கோயிலில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சித்திரையில் திருவவதார உற்சவம், அஸ்தநட்சத்திரத்தன்று நடக்கின்றது. சித்திரா பவுர்ணமி விழா ஐயங்குளத்தில் நடப்பது பற்றி முன்னரே கூறப்பட்டது. சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது வைகாசியில் நடைபெறும் பிரம்மோற்சவமாகும். இது பத்துநாள்கள் நடைபெறும். வைகானச ஆகமப்படி திருவாராதனங்கள் நடக்கும் திருத்தலங்களில் ஐந்தாம் நாள் இரவு கருடசேவை நடக்கும் (எ.டு.திருமலை). பாஞ்சராத்திர ஆகமப்படி காஞ்சி முதலிய திருத்தலங்களில் மூன்றாம்நாள் காலையில்

கருடசேவை நடக்கும்.[94] கருடசேவை குறிப்பாகக் காஞ்சிபுரத்தில் மட்டும் பெரிய அளவில் நடப்பது. மேலும், இக்கோயிலில் ஆனிமாதம் கோடை உற்சவம் எட்டாம் நாளன்று, ஒருமுறையும், ஆடிமாதத்தில் ஒருமுறையும், ஆக மூன்றுமுறை கருடசேவை நடக்கிறது. தியாகராஜர் "வினசுதா" என்ற கீர்த்தனையிலும், முத்துசாமி தீட்சிதர் "ஸ்ரீவரதராஜா" என்ற கீர்த்தனையிலும், வைகாசி மாதக் கருடசேவையைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இச்சிறப்பினால் அன்று தொண்டைநாட்டில் உள்ள பெரும்பாலான பெருமாள் சந்நிதிகளில் கருடசேவை நடக்கின்றது. இரு ஆகம முறைகளிலும் ஏழாம்நாள் திருத்தேர்[95] உற்சவம் என்பதில் மாற்றமில்லை.

வைகாசி உற்சவத்திற்கு வழங்கிய நன்கொடைகள் பற்றிப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கி.பி.1537-இல் வெட்டப்பெற்ற கல்வெட்டு "ஆழ்வார் திருநாளுடன்" இவ்விழா தொடங்குவது பற்றிக் குறிப்பிடப்படுகிறது. கி.பி.1572-ஆம் ஆண்டைய கல்வெட்டு "திருவைகாசித்திருநாள்" நடத்த ஐந்து ஊர்களை நன்கொடையாக வழங்கியது பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும், இக் கல்வெட்டு, பெருமாள் தங்கிச்செல்லும் மண்டபங்களைப் பற்றியும் குறிப்பிடுகிறது. வைகாசி விசாகத்தில் நம்மாழ்வார் அவதரித்த நன்னாள் அன்று கருடசேவை நடக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் பல திருவிழாக்கள் இங்கு நடக்கின்றன. அவற்றுள் குறிப்பாக அத்யயன உற்சவத்தைக் கூறலாம்.

வைகுண்ட ஏகாதசிக்கு முந்தைய பத்துநாள் பகல்பத்து உற்சவம் எனவும், அடுத்த பத்துநாள் இராப்பத்து எனவும் இரு பிரிவாக இவ்விழா நடக்கிறது. அப்பொழுது எல்லா ஆழ்வார்கள் ஆசாரியர்களின் விக்கிரகங்களும் பெருமாளுக்குமுன் எழுந்தருளச் செய்யப்பெறும். இராப்பத்து உற்சவத்தில் திருவாய்மொழி சேவிக்கப்பெற்று, இறுதிநாளில் கடைசி 20 பாசுரங்களைச் சேவித்தவாறு நம்மாழ்வார் விக்கிரகத்தைப் பெருமாளுடைய திருவடியில் கொண்டுசேர்ப்பர். விடுபட்ட ஆன்மா எவ்வாறு பரமாத்வை அடைகிறது என்பதை இப்பாசுரங்கள் கூறுகின்றன. பின்னர் மீண்டும் நம்மாழ்வார் உலகமக்களின் நன்மைக்காக இவ் உலகை அடைவதாக ஐதீகம். ஏகாதசி கழித்த ஆறாம்நாள் திருவாய்மொழியில் ஆறாம்பத்து "உலகமுண்ட பெருவாயா"-சேவிக்கப்பெறும். இதைக் கல்வெட்டு "உலகமுண்ட பெருவாயன் சிறப்பு"[96] என்று தெரிவிக்கிறது.

6.7 **கோயிலும் சமுதாயமும் :** ஆண்டுமுழுவதும் நடைபெறும் விழாக்கள் ஆழ்ந்த சிந்தனையுடனும், சமுதாயத்தில் உள்ள மக்கள் பங்குபெறும் முறையிலும் அமைக்கப்பெற்றுள்ளன. அவை பருவகாலங்களுக் கேற்றாற்போலவும் அமைந்துள்ளன. அறுவடைகள் முடிந்து மக்கள் ஓய்வாக இருக்கும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடக்கின்றது. மழைக்காலம் முடிந்து குளங்கள் நிறைந்திருக்கும் மாசி மாதத்தில் தெப்போற்சவம் நடப்பது பொருத்தமே.

தச்சர்கள், பொற்கொல்லர்கள், குலாலர்கள், பந்தல் அமைப்போர், பட்டர்கள், சிற்பிகள், பெருமாளை எழுந்தருளச்செய்யும் முன்தண்டு, பின்தண்டு பிடிப்போர், தோட்டங்களைப் பராமரிப்போர், ஆக பல்வேறு பிரிவினர்க்கும் வேலைவாய்ப்புகளும் ஊதியங்களும் இத்திருக்கோயிலால் கிடைக்கின்றன.

கல்வி கற்கும் மையமாக இத்திருக்கோயில் அன்றும் இன்றும் விளங்குகிறது. இங்குள்ள மடங்கள் உயர்கல்வி கற்பிக்கும் மையங்களாக விளங்குகின்றன. திருக்குளத்தின் கரையில் ''அரிகேசவன்மடம்'' இருந்ததாக முதற்குலோத்துங்கன் காலக்கல்வெட்டு உணர்த்துகிறது. இதன் தலைவராக ஒரு பெரிய முனிவர் இருந்தார். இங்குக் கல்வி கற்ற பிராம்மணர்களுக்கு உணவளிக்க அருகில் உள்ள கிராமத்துநிலங்கள் இறையிலியாக விடப்பட்டன. கி.பி. 1359 ஆண்டைய கல்வெட்டினால் நாம் மற்றொரு மடத்தைப் பற்றி அறிய இயலுகின்றது. பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயர் இதன் தலைவராக இருந்தார். இராமானுஜ தரிசனத்தைப் பரப்புவதே இதன் முக்கிய குறிக்கோளாகும். இங்கு ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பெற்றன.

மத்வமடம் ஒன்றும் இங்கிருந்தது. ''வேதமடம்'' என இது அழைக்கப்பெற்றது. வேதக்கல்வி இங்கு கற்பிக்கப்பெற்றது. அழகிய மணவாள ஜீயர் மடம் பற்றி ஏற்கனவே கண்டோம். இம்மடம் இன்றும் சமய, தத்துவக்கல்வியைக் கற்பிக்கும் இடமாக விளங்குகின்றது.

பாகவதர்களுக்கு உணவளிக்கும் ஆதுலர் சாலையாகவும், இத்திருக்கோயில் விளங்குகின்றது. வானமாமலை, அகோபில மடங்களில் ததியாராதனை கைங்கர்யம் செய்யப்பட்டது.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சாளுவநரசிம்மன் காலத்தில் திருமலை, காஞ்சி, திருவரங்கம், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் இராமானுஜ கூடங்கள் ஏற்படுத்தப்பெற்றன. தேசாந்திரிகள் இங்குத் தங்கவும் உணவுகொள்ளவும் வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டன. காஞ்சியில் சந்நிதித் தெருவிலிருந்து இம்மடம் இவ்வகையில் தொண்டாற்றி வந்தது. ஆனால் இந்த இராமானுஜ கூடம் சந்நிதித்தெருவில் எங்கிருந்தது என்று இன்று யூகிக்கவும் முடியவில்லை. கோயில் நிலத்தை உழுது பயிரிட்டு வரும் பல உழவர்கள் பயனடைகின்றனர். இவ்வாறு பூத்தொடுப்போர், முதல் பட்டர்கள் வரையிலான பல்வேறு சமுதாய மக்களும் கோயிலால் பயன்பெறுகின்றனர். கோயிலும் சமுதாயமும் இணைந்து நிற்பது எங்கும் காணக்கூடிய ஒன்றாகும்.

6.8 **ஆசாரிய அபிமானத்தலங்கள் ; வேறுவகையில் குறிப்பிடத்தக்க சில திருக்கோயில்கள்** : தோத்திரங்கள் மூலமாகவும், வியாக்கியானங்களின் வழியாகவும் நிதில் நன்னெறியாகிய வைணவ சமயத்தை வளர்த்த ஆசாரியர்கள்

அவதரித்த தலங்கள், (ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திவ்வியதேசங்கள் தவிர) பல தொண்டை நன்னாட்டில் உள்ளன. அவர்களுடைய அபிமானத்தலங்கள் என்ற வகையிலும் சில தலங்கள் இங்கு உள்ளன. மேலும் இவ்வகையான சிறப்புகள் ஏதும் இல்லாமல் பழங்கால அரசர்கள், சிற்றரசர்கள் ஆகியோரால் நிர்மாணம் செய்யப்பெற்று, இன்று குடத்துவிளக்காக இருக்கும் தலங்கள் சில உள்ளன. இவற்றைப்பற்றிச் சுருக்கமாக இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

6.8.1 **ஸ்ரீபெரும்புதூர்** : உடையவர் அவதாரத்தலம், அவர் அவதாரம் செய்த திருமாளிகை இருந்த இடத்தில் இன்று ஒரு மண்டபம் புதியதாகக் கட்டியுள்ளனர். கொடி மரத்திற்குத் தெற்கே இருப்பது குதிரைக்கால் மண்டபம். இதன் வழியாக மேலே ஏறிச்சென்றால் வடக்குப்பக்கம் இருப்பது உடையவர் சந்நிதி ; வாசலுக்கு மேற்கே ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி. உடையவர் சந்நிதியில் மூலவர் தெற்குநோக்கி அமர்ந்துள்ளார். முன்னால் இருப்பவர் உற்சவர். ஆதிகேசவர் சந்நிதியில் பெருமாள் கிழக்குநோக்கியவராய் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். வலப்புற மார்பில் ஸ்ரீவத்சம் ; ஸ்ரீதேவியரும் உள்ளனர். இவருக்கு முன்னால் கேசவாநந்தனவர்த்தனன் என்னும் உற்சவர். இவருடைய தாழ்ந்த இடத்திருக்கை ஆகூய வரதமாக உள்ளது.

கோயிலில் பெரிய பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் தாயார் சந்நிதியுள்ளது. எதிராஜவல்லித்தாயார், ஸ்ரீராமர், கருடன், ஸ்ரீஆண்டாள் ஆகியோருக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. வெளியில் மணவாள மாமுனிகளின் சந்நிதி உள்ளது.

6.8.2 **மதுராந்தகம்** : கோயிலுக்கு முன்னால் திருக்குளம் உள்ளது. மூலவர் கோதண்டராமன் ஆவார். உற்சவமூர்த்தி இருவரில் ஒருவர் கருணாகரன் ; மற்றொருவர்கோதண்டராமன். கருணாகரர் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக விளங்குகிறார். ஏரிகாத்த கோதண்டராமர் கோயிலுக்கு வலப்பக்கத்தில் ஜனகவல்லித் தாயாரின் கோயில், வெள்ளைக்கார கலெக்டர் லயனல் பிளேசால் கட்டப்பெற்றது. இங்குத்தான் பெரிய நம்பிகள் உடையவருக்கு பஞ்சசம்ஸ்காரம் செய்தார் என்பதை முன்னரே கண்டோம். கன்னியாகுமரிக் கல்வெட்டுகளின்படி முதற்பராந்தகனால் நிறுவப்பட்ட பல சதுர்வேதிமங்கலங்களுள் இவ்வூரும் ஒன்றாகும். இவ்வரசனால் வெட்டப்பெற்றதே "வீரசோழப் பேரேரி"யாகும். கோதண்டராமர் கோயில் என்று தற்சமயம் வழங்கப்பெறுவது, "அயோத்யப் பெருமாள் விண்ணகரம்" என இக்கோயில் கல்வெட்டில் வழங்கப்படுகிறது. இவ்வூர் கல்வெட்டில் ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூராகிய மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப்படுகிறது.

6.8.3 **உத்திரமேரூர்** :[97] பல்லவ மன்னன் நந்திவர்மன் காலந்தொட்டு இவ்வூர் சரித்திரத் தொடர்புடையதாக வழங்குகின்றது. வைகுந்தப் பெருமாள் கோயில் சுவர்களில் இம்மன்னனுடைய 7, 9, 21-ஆம் ஆண்டுகளின் கல்வெட்டுகள்

காணப்படுகின்றன. இவனுடைய 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சுந்தரவரதப் பெருமாள் கோயில் சுவரில் காணப்படுகின்றது. எனவே, இவ்விரு கோயில்களும் பல்லவர் காலத்தின என்பது தெளிவு.

பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள வைகுந்தப்பெருமாள் கோயிலில் விசயாலயனுடைய 15-ஆம் ஆண்டைய கல்வெட்டு வைகுந்தப்பெருமாள் கோயிலில் பிரதிட்டிக்கப்பட்ட இராமருடைய விக்கிரகமான திருவயோத்திப்பெருமாளடிகளுக்கு வழங்கப்பட்ட நிலத்தை இறையிலியாக்கிய செய்தி குறிக்கப்பட்டுள்ளது. முதற்பராந்தகன் காலத்திய குடவோலைக் கல்வெட்டு[98] அக்கால கிராம ஆட்சிமுறை பற்றி அறிவிக்கிறது.

சுந்தரவராகப்பெருமான் கோயில் : இக்கோயில் கங்கரையரின் திருப்பணி என்பது கருவறையின் தென்புறச் சுவர்க் கல்வெட்டால் அறியப்படுகிறது. கருவறையின் மேற்குச்சுவரில் தந்திவர்மனுடைய 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டிருப்பதால், இக்கோயில் நந்திவர்மன் காலத்ததாகிய கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது தெளிவு.

இக்கோயிலின் பழைய பெயர் "ஸ்ரீவேலி விஷ்ணுகிருகம்" (அ) "வெள்ளைமூர்த்திப் பெருமானடிகள் ஸ்ரீகோயில்" என்பது. முதற்பராந்தகன் காலத்தில் இக்கோயில் "துலாபார ஸ்ரீகோயில்" (அ) துலாபாரத்தளி எனப்பட்டது. காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயிலுக்கு அடுத்தபடியாகப் பல்லவர் காலக் கோயில்களில் இதுவே மேம்பட்டதாகும். இதன் கருவறை உயரமாகவும், கம்பீரமாகவும் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. வைகுந்தப்பெருமாள் கோயிலைப்போல இதுவும் முத்தளக் கற்றளியாக அமைந்துள்ளது. இது வைகானச ஆகமத்தில் குறிப்பிட்டதுபோல் 96 விமானங்களை உடையதாகக் கட்டப்பட்டது. ஒவ்வொரு தளத்திலும் காணப்படும் முக்கிய தேவதை, பக்கத்தேவதை ஆகியவற்றின் பட்டியல் பின்வருமாறு :

### தேவகோட்ட தேவதைகள்

| தளம் முக்கிய தேவதை | தெற்கு | மேற்கு | வடக்கு |
|---|---|---|---|
| 1. சுந்தரவரதன் | அச்சுதன் | அநிருத்தன் | கல்யாணவரதன் |
| 2. வைகுந்தநாதன் | கிருஷ்ணார்ஜுனர் | யோககிருஷ்ணன் | இலட்சுமிநாராயணன் |
| 3. அநந்தநாராயணன் | வாக்வல்லிதேவி | இரதி, மன்மதன் | பிருகு |

இப்படி மூன்று தளமாகக் கட்டப்பட்டிருப்பினும் அவைகளில் வீற்றிருக்கும் ஸ்திரபேரங்கள் நேருக்குநேராக ஒன்றின்மேல் ஒன்றாக அமைக்கப்படவில்லை.

பழங்காலத்தில் இங்கிருந்த பன்னிரு பிராம்மணர் தெருக்களுக்கும் மகாவிஷ்ணுவின் திருப்பெயர்களே சூட்டப்பெற்றிருந்தன.[99] இவ் ஆலயம் மரீசிசம் உறிதைப்படி அமைக்கப்பெற்றது.

6.8.4 காவேரிப்பாக்கம் (சுந்தரவரதப்பெருமாள் கோயில்) : இவ்வூர் மூன்றாம் நந்திவர்மனுடைய விருதுப்பெயரால் அவனி நாராயண சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டது. நிருபதுங்கனுடைய 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இக்கோயில் "காவிரிப்பாக்கத்துத் திருமேற்றளி" என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் பழுதடைந்தது. இங்கிருந்து கிடைத்த பழைய அருமையான சிலைகள் சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் உள்ளன. தற்போது இவ்வூரில் உள்ள அபயவரதப் பெருமாள் கோயில் பிற்காலத்தது.

6.8.5 திருப்பாற்கடல்[100] மற்றும் சில திருக்கோயில்கள் : இவ்வூர் காவேரிப்பாக்கத்திற்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. முதற்பராந்தகனுடைய 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு குறிக்கும் செய்தி முக்கியமானது. சோழநாட்டு அரைசூரைச் சேர்ந்த உதயதிரன் சென்னிப்பேரரையன் என்பான் இவ்வூர் ஏரி வாரியப் பெருமக்களிடம் 120 கழஞ்சு பொன் கொடுத்து, அதன் வட்டியைக் கொண்டு ஏரியைச் சீர்த்திருத்த ஏற்பாடு செய்தான். அவ்வமயம் முதற்பராந்தகன் பாண்டியர், சிங்களர் படைகளை வெள்ளூரில் வென்றான். அவ்வெற்றிவிழா கீழைப்பழுவூரில் கொண்டாடப்பட்டது. அப்போரில் வீரர் நால்வர் எதிரிகளைக் கொன்று விழுப்புண் பெற்று மாண்டனர். இவர்களின் ஆன்ம சாந்திக்காக, நற்செயல் செய்ய விரும்பிய உதயதிரன் அந்தணர் நால்வருக்கு நாளும் உணவிட அறச்சாலை மண்டபம் ஒன்றை நிறுவ எண்ணி, முன்பு கொடுத்த பொன்னால் வரும் வட்டியைக் கொண்டு இதை நிறைவேற்ற ஊர்ச்சபையினரை வேண்டினான். அவர்களும் அதை நிறைவேற்றினர். எனவே, ஒரறச் செயலுக்குச் செய்யப்பட்ட மானியத்தைக் கொடையாளர் வேறொன்றுக்கு மாற்றும் வழக்கம் அக்காலத்து இருந்தமை தெரிகின்றது.

இக்கோயிலின் கருவறை 16 அடிப்பக்கமுடைய சதுரமாகும். இதனோடு இணைந்த அர்த்தமண்டபம் 11 அடி முன்னோக்கி நீண்டுள்ளது. அவற்றில் ஐந்து தேவகோஷ்டங்கள் உள. அவற்றுள் வடக்கில் பிரமன் சிலையும், மேற்கில் விஷ்ணு சிலையுமே காணப்படுகின்றது.

திருமாலும் சிவனும் இணைந்த கோலத்தில் இங்கு மூலவர் உள்ளார். ஆவுடையார் மீது லிங்கம் இருக்கும் இடத்தில் பெருமாள் நின்று கொண்டிருக்கிறார். இரு தனித்தனி கோயில்களில் பிரசன்ன வேங்கடேசரும், அரங்கநாதரும், கோயில் கொண்டுள்ளனர். வேங்கடேசர் ஆலயத்திற்கு முன்பு ஒரேகல்லில் செதுக்கிய 20 அடி உயரம் உள்ள கருடஸ்தம்பமும், அழகிய திருக்குளமும் உள்ளன. அரங்கநாதர் திருவுருவம் பழமையானது ; பெரியதுமாகும். இங்கு வைகுண்ட ஏகாதசியன்று நடக்கும் விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்துகொள்கின்றனர்.

*நிரவலூர் : சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூரில், அகோபிலமடம் ஆறாம் ஜீயர் - கி.பி. 1503-இல் ஒரு பெருமாள் கோயில் கட்டினார். அ/மி. இலட்சுமிநாராயணன் இருந்த கோலத்தில் உள்ளார்.*

*கூரம் : இங்குள்ள அ/மி. பங்கயச் செல்வி உடனாய கேசவப்பெருமாள் கோயில் இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பெற்றது. இவனுக்குமுன் பரமேசுவரவர்மன் காலத்தில் (கி.பி. 670-685) இவ்வூரில் கட்டப்பட்ட "வித்யா விநீதபல்லவ பரமேசுவரக்ருகமே" தமிழகத்தில் கட்டப்பட்ட முதல் கற்கோயில் என்பர் ஆய்வாளர்.*

*திருவதிகை : இங்குள்ள சாரநாராயணப்பெருமாள் ஆலயம் பழமையானது. அ/மி. நரசிம்மர் இங்குச் சயனகோலத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையான அமைப்பு வேறு எங்கும் இல்லை என்பர்.*

**6.8.6 கோவிந்தப்பாடி** : *அரக்கோணம் அருகிலுள்ள திருமால்புரம் (திருமாற்பேறு) என்னும் ஊரைச் சார்ந்தது கோவிந்தப்பாடி. இங்குள்ள பெருமாள் கோயில் சிதைந்த நிலையிலுள்ளது. இதில் முதற்பராந்தகனின் காலக் கல்வெட்டுகள் உள்ளன. தொண்டைநாட்டுத் தாமர்க்கோட்டத்து வளநாட்டுக் கோவிந்தப் பாடியிலுள்ள நின்றருளின் பெருமானடிகளுக்குப் பாண்டி நாட்டைச் சேர்ந்த சோழ அரசியான அவனிமாதேவியார் திருவிளக்கிற்காக வழங்கிய நன்கொடை பற்றிய செய்தியும் இங்குள்ள கல்வெட்டில் உள்ளது.*

*உத்தம சோழனுடைய 14-ஆம் ஆண்டில் இக்கோயிலில் மணவாளப் பெருமாளுடைய விக்கிரகம் நிறுவப்பட்டு அதன் வழிபாட்டுக்கு வேண்டிய நன்கொடை வழங்கப்பட்டது. முதல் இராசராசனின் 11-ஆம் ஆண்டில் அனுமனுடைய விக்கிரகம் இக்கோயிலில் இடம்பெற்றது. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி முதலிய நான்கு பிரபந்தங்களையும் கோயிலில் ஓதுவாருக்கு மானியம் விடப்பட்டது. இக்கோயில் தொடர்பான மேலும் சில செய்திகள் எட்டாம் இயலில் கூறப்பெறும்.*

**6.8.7 பொன்விளைந்த களத்தூர்** : *கரிகால் சோழன் காலத்திலிருந்து தொண்டைமண்டலத்தில் அடங்கிய 24 கோட்டங்களில் ஒன்றாகக் களத்தூர்க் கோட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள முன்குடுமி ஈஸ்வரன் கோயிலில் 21 கல்வெட்டுகள் உள்ளன. இங்கு இலட்சுமி நரசிம்மர் கோயிலும், கோதண்டராம சுவாமி கோயிலும் உள்ளன. இராமர் கோயில் அகோபிலமடஜீயர் சுவாமிகளால் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. புகழேந்தியும், நேமிநாத ஆசிரியர் குணவீரபண்டிதரும், தொண்டைமண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவரும் இவ்வூரினர் ஆவர். இவ்வூர் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் 15 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரின் அருகில் 2 கி.மீ. தொலைவில் "பொன்பதர் கூடம்" என்னும் ஊர் உள்ளது. இங்குக் கோயில்*

கொண்டிருக்கும் இராமருக்கு நான்கு திருக்கைகள் உள்ளன. இவ்வமைப்புள்ள இராமர் விக்கிரகம் வேறுஎங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

6.8.8 *எண்ணாயிரம் :* இச்சிற்றூர் பல்லவர் ஆட்சியில் பருத்திக்கொல்லை என்ற பெயருடன் புகழ் பெற்று விளங்கியது. இராமானுசர் இங்கு ஒரு பாகவதரின் இல்லத்தில் சிலநாள் தங்கியிருக்கையில், சமணர்களுடன் வாதம் செய்தார். சமணர்கள் தோற்றனர். ஒப்பந்தப்படி கழுவேரத் தயாராகிவிட்டனர். ஆனால் உடையவர் அவர்கள் அனைவரையும் அந்தணராக்கினார். எண்ணாயிரம் பேர் அன்று மறுவாழ்வு பெற்றதால் பருத்திக்கொல்லை என்ற பெயர் மாறி இப்பெயர் ஏற்பட்டது. உடையவர் அங்கு அழகிய நரசிங்கப்பெருமாள் கோவிலை உருவாக்கினார். அவரது விக்கிரகமும் இவ் ஆலயத்தில் உள்ளது.[102]

6.8.9 *கங்கபுரம் :* வைகானச ஆகமத்தை[104] உருவாக்கி உபதேசித்த விகனசர் என்பவரின் தனிச்சந்நிதிகள் தொண்டைநாட்டில் சில திருத்தலங்களில் உள்ளன. வளவனூர், கீழ்த்திருப்பதி, செங்கல்பட்டையடுத்த ஆத்தூர், மீஞ்சூர், கோயம்பேடு, பண்பாக்கம் என்பன அவை. அவற்றுள் செஞ்சிவட்டம் கங்கபுரம் அ/மி.வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் விகனசர் புகழ் பெற்றவராக விளங்குகிறார். இவருடைய திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் இவருக்குப் பெரியஅளவில் விழா எடுக்கிறார்கள். அன்று வைகானச ஆகம அடிப்படையில் வழிபாடுகள் நடத்தும் திருத்தல அருச்சகர்கள் அனைவரும் இங்குக் கூடுகின்றனர். இங்குள்ள பெருமாள் ஆலயக் கருவறைச் சுவர்களில் இராமாயணக் காட்சிகள் பல செதுக்கப்பட்டுள்ளன.

6.8.10 *தென்னாறு :*[105] பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மன் இங்கு நடந்த பெரும்போரில் வெற்றிபெற்றதால் "தெள்ளாறெறிந்த நந்திவர்மன்" என்று சிறப்பிக்கப்பெற்றான். இங்குள்ள சிவன் கோயிலை வைப்புத் தலமாக அப்பர் பாடியுள்ளார். இங்குள்ள அ/மி. அம்புஜவல்லி உடனாய ஆதிநாராயணப் பெருமாள் கோயில் பழமையானது. கோயிலின் எதிரே நின்ற நிலையிலுள்ள பல்லவர் காலச்சிம்மத்தூண் இதன் பழமைக்குச் சான்றாகும். ஆழ்வார்கள் நால்வர் விக்கிரகங்கள் உள்ளன. அ/மி. ஆண்டாள் தனிச்சந்நிதியில் இருக்கிறார். வந்தவாசி வட்டத்தில் இவ்வூர் உள்ளது.

6.8.11 *நாவல்பாக்கம்*[106] : இவ்வூரில் பல சிறந்த மகான்கள் தோன்றியுள்ளனர். அவர்களுள் குமார தாததேசிகர் என்பவர் குறிப்பிடத்தக்கவராவார். இவர் விசயநகர மன்னன் இரண்டாம் வேங்கடனுக்கு முடிசூட்டியவர் (கி.பி. 1630). தஞ்சை நாயக்கமன்னர் செவ்வப்ப நாயக்கர் இவ் ஆலயத்தைக் கட்டினார். அ/மி பத்மாவதித்தாயார் உடனாய அ/மி. சீநிவாசப்பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். இங்குள்ள உடையவர் விக்கிரகத்தின் பீடத்தில் இணைந்தநிலையில் திருக்குருகைப்பிரான் பிள்ளான் இருப்பதை முன்பே கண்டோம்.

6.8.12 *வந்தவாசி :* இங்கு ஒரு பழமையான சிவன் கோயில் உள்ளது ; அதையடுத்து அ/மி. அரங்கநாதர் ஆலயம் உள்ளது. ஒரே மதில் சுவர்களுக்கிடையே இவ்விரு ஆலயங்களும் அமைந்திருப்பது வைணவ-சைவ ஒற்றுமைக்கு

எடுத்துக்காட்டாகும். பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள கோட்டை அனுமன் சந்நிதியும் பழமையானது. திருவோத்தூர் - செய்யாறில் அ/மி. எதிராஜவல்லி உடனாய ஆதிகேசவப்பெருமான் சந்நிதி உள்ளது.

6.8.13 **மலைவையாவூர்** : மதுராந்தகத்தை அடுத்துள்ள மலைவையாவூர் மலைமேல் அ/மி. அலர்மேல்மங்கை உடனாய சீனிவாசப்பெருமாள் திருக்கோயில் உள்ளது. திருமலைப்பெருமாள் போன்றே இவர் திருவுருவம் அமைந்துள்ளது.

6.8.14 **சிங்கப்பெருமாள் கோயில்** : செங்கல்பட்டை அடுத்து சென்னை செல்லும் வழியிலுள்ள, இவ்வூரிலுள்ள அ/மி. நரசிங்கப்பெருமாள் ஆலயம் பழமையானதாகும். குடைவரைக்கோயில் ; நரசிங்க விண்ணகரம் ; மூலவர் சுதை வடிவினர். வீராசனத்தில் உள்ளார். அருள் வடிவினர் ; நான்கு திருக்கைகள் ; பின்வலக்கையில் சக்கரம் ; இடக்கையில் சங்கு. முன்வலக்கை அபயமுத்திரை ; இடக்கை தொடைமீது உள்ளது. இடக்கை கடி முத்திரையில் இல்லாது தொடைமீது இருப்பதும், சுகாசனத்திற்குப் பதில் வீராசனத்தில் இருப்பதும் ஆகமவிதிக்கு மாறுபட்டுள்ளது.

6.8.15 **செய்யூர்** :[107] அ/மி. பெருந்தேவித்தாயார் உடனாய அ/மி. கரியமாணிக்கப்பெருமாள் கோயில் இங்குள்ளது. வைகானச ஆகமமுறையில் வழிபாடு நடக்கிறது. சிவாலயமும், முருகன் கோயிலும் உள்ளன. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் இவர்மீது பாடப்பட்டதாகும். செய்யூரை அடுத்துள்ள கூவத்தூர், கடுக்கலூர், சூனாம்பேடு, மரக்காணம், ஆலத்தூர் ஆகிய பல கடற்கரையைச் சார்ந்த ஊர்களில் திருமால்கோயில்கள் உள்ளன.

6.8.16 **மயிலாப்பூர்** : **ஆதிகேசவப்பெருமான், பேயாழ்வார் கோயில்** : கபாலீசுவரர் கோயில் அருகில் சித்திரக்குளத்தின் தென்கரையில் இக்கோயில் உள்ளது. பழமையான இவ் ஆலயம் பல்லவர் காலத்தது என்பர். மயூரவல்லித் தாயார், பேயாழ்வார் தோன்றிய தலமாதலின் அவருடைய சிலையும் இங்குள்ளது.

**மாதவப்பெருமாள் கோயில்** :[109] அ/மி. மாதவப்பெருமாள், பூதேவி சீதேவியுடன் காட்சியளிக்கின்றார். இங்கும் பேயாழ்வார் தனிச்சந்நிதியில் இருக்கிறார். அ/மி. அமுதவல்லித் தாயார் தனிச்சந்நதியில் இருக்கிறார். அ/மி. இராமர் ஆண்டாள் ஆகியோருக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. ஆழ்வார்களின் விக்கிரகங்களும், ஆசாரியர்களின் விக்கிரகங்களும் உள்ளன.

6.8.17 **உக்கல்** :[110] (புவனமாணிக்க விஷ்ணுகிருகம்) இவ்வூர் காஞ்சிபுரம்-வந்தவாசிப் பெருவழியில் உள்ளது. பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன் (கி.பி. 850-882) மனைவி பிருதிவீமாணிக்கம் என்பவள் ஆவாள். இவள் கட்டிய பெருமாள் கோயில் இங்குள்ளது[111] இக்கோயில் இன்று பாழடைந்த நிலையில் உள்ளது. கல்வெட்டில் இப்பெருமாள், "புவனமாணிக்க விஷ்ணுகிருகத்துப்பெருமானடிகள்" என்று குறிப்பிடப்பெறுகிறார். முதல்

இராசராசனின் கல்வெட்டில் இவர் "திருவாய்மொழித்தேவர்" என்று குறிப்பிடப்பெறுகிறார்.

இரண்டாம் ஆதித்தனுடைய 4-ஆம் ஆண்டில் இவ்வூர்ப் பெருமகன் ஒருவன் வேதங்களில் வல்ல சான்றோரான ஊராள் பெருமக்கள் கூடும் பிரம்மத்தான மண்டபத்தில் கோடை ஆறு மாதங்களில் குடிநீரும், குளிர்மிக்க ஆறுமாதங்களில் குளிர் காய கணப்பும் உதவ அதற்குரிய நன்கொடை வழங்கி அந்நன்கொடையை சம்வச்சரவாரியரின் மேற்பார்வையில் விடுத்தான். இதலிருந்து பருவகாலங்களுக்கு ஏற்றவாறு அறச்செயல்கள் செய்யப்பட்டமையை அறிகிறோம். இவ்வூர்ச் சபையின் பலவகைப்பட்ட உரிமைகளைப் பெற்று ஊராட்சியைத் திறம்பட நடத்திவந்தனர் எனவும், இங்கிருந்த பெருமாள் கோயிலையொட்டியே இவ்வூர் மக்களுடைய சமூக, ஆன்மீக, பொருளாதார அரசியல் வாழ்க்கை வளம் பெற்றது எனவும், ஊரும் கோயிலும் பிரிக்கமுடியாத அறவுணர்ச்சியால் பிணிக்கப்பட்டிருந்தன எனவும் உணர்கிறோம்.[112] இக்கோயில் பாழடைந்துள்ளது எனினும் கல்வெட்டுகள் நிரம்பியுள்ள மகாமண்டபமும், கருவறையும் சிதைவுறவில்லை. கருவறையிலிருந்த மூலவர் திருவாய்மொழித்தேவர் - பின்னமாகிவிட்ட காரணத்தால் வெளிமண்டபத்தில் வைக்கப்பெற்றுள்ளார். புதிய மூலவர் கருவறையில் உள்ளார். உற்சவர்-செப்புத்திருமேனி பழமையானதாக இருக்கவேண்டும்.

6.8.18 *மீஞ்சூர் :* செங்கை மாவட்டம் பொன்னேரி வட்டத்திலுள்ள இவ்வூரில் அ/மி. வரதராசர் கோயில் உள்ளது. பழங்காலத்தில் சோழகுல சுந்தரவிண்ணகர ஆழ்வார் என்று பெருமாள் வழங்கப்பெற்றார். சுந்தரசோழனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், இது கேசவன் கருக்கைக்கோன் என்பவனால் எடுப்பிக்கப்பெற்ற செய்தி உள்ளது.

6.8.19 *தேசூர் :*[113] - (திருமால்பாடி)- வந்தவாசி வட்டத்திலுள்ள 'ஊர். அ/மி. ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில் இங்குள்ளது. இங்குப் பழங்கால முதலே பல பாகவத உத்தமர்கள் தோன்றி வைணவ சமயத்தை வளர்த்து வந்துள்ளனர். இவ்வூருக்கு அருகில் மகேந்திரவர்மன் காலக் குடைவரைக்கோயில் சீயமங்கலம் > (சிம்மவிஷ்ணு சதுர்வேதிமங்கலம்) என்னும் ஊரில் உள்ளது. அதற்கருகில் (திருவாய்ப்பாடி)[114] திருமால்பாடி என்னும் ஊரிலுள்ள சிறிய மலைமேல் அ/மி. அரங்கநாதர் பள்ளிகொண்டுள்ளார். இக்கோயிலில் பாண்டிய சம்புவராயர்கள் காலக் கல்வெட்டுகள் உள்ளன. இவ்வூரிலுள்ள ஆசாரிய புருடர் தென்கலை சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். இவர் வைணவர்களுக்கு ஐந்திக்கை அளித்து வருகிறார்.

6.8.20 *ஆரணி - ஆவணியாபுரம் :* ஆவணியாபுரம் மேல் மலைமீது பெருமாள் சந்நிதிகள் மூன்று உள்ளன. கீழ்மலையில் அ/மி இலட்சுமி நரசிம்மர் சந்நிதி உள்ளது. போளூரில் (பொருளூர் > போளூர்) மலைமீது அ/மி. நரசிங்கப்பெருமாள் சந்நிதி உள்ளது. ஆரணியை அடுத்த படைவீடு என்னும் பழமையான ஊரில் இராமர் சந்நிதி

உள்ளது. மூலவர் யோக நிலையில் சின்முத்திரை உட்பக்கம் நோக்கி அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். சீதை இராமருக்கு இடப்புறத்தில் அமர்ந்திருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். அனுமன் வேதம் வாசித்துக் கொண்டிருப்பதும் ஒரு சிறப்பான அம்சமாகும்.

6.8.21 **திருவண்ணாமலை** : சைவ சமயத்தில் பஞ்சபூதத் தலங்களுள், நெருப்பு-மயமான மலை என்று போற்றப்படும் இங்கு பூதநாராயணப் பெருமாள் கோயில் ஒன்று சிறிய அளவில் உள்ளது. அ/மி. அருணாசலேசுவரர் ஆலயத்தின் கருவறைக்குப் பின்னால் அ/மி. வேணுகோபாலன் எழுந்தருளியுள்ளார். இவ் ஆலயக் கணக்குகளை இவர் முன்பு படிக்கும் வழக்கம் உண்டு.

6.8.22 **பள்ளிகொண்டா** : உத்தர அரங்கம். வேலூருக்கு மேற்கே 23 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூரில் அ/மி. அரங்கநாதர் கிடந்தகோலத்தில் காட்சி தருகிறார். கோயிலின் மேலைத் திருச்சுற்றில் தனித்தனி சந்நிதிகளில் உள்ள இராமன், கண்ணன், ஆண்டாள் திருவுருவங்கள் அழகியன. மேலும் கருவறையில் திருவுண்ணாழிப் பிராகாரத்திலுள்ள ஆண்டாள், கண்ணன் சிலை உருவங்கள் மிகவும் அழகியன. இங்குள்ள விக்கிரமசோழன் (கி.பி. 10) கல்வெட்டிலிருந்து, அக்காலத்துக்கும் முன்பே இக்கோயில் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று அறியமுடிகிறது. அப்பொழுது இவ்வூருக்கு "நந்திவர்ம சதுர்வேதி மங்கலம்" என்ற பெயர் வழங்கியது.

6.8.23 **பொன்னேரி - திருவாயர்பாடி அரிகிருஷ்ண பெருமாள் கோயில்** :[115] இத்திருக்கோயிலுக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில் சிவன்கோயில் உள்ளது. சித்திரா பவுர்ணமிக்கு ஐந்தாம் நாள் நடக்கும் திருவிழாவை இரு கோயில்களும் சேர்ந்து நடத்துகின்றன. அன்று மாலையில் தேர் வீதி உலாவரும். இரவில் அரிகிருஷ்ணபெருமாள் அனுமன் வாகனத்திலும், சிவன் எருது வாகனத்திலும் புறப்பட்டு, அரிகரன் கடைத்தெருவில் சந்திப்பர். இரவு விழா முடிந்தபின் இரு சுவாமிகளும் பெருமாள் கோயில் முன் நிற்பர். சூரிய ஒளி வாகனத்தில் பூசப்பட்ட தங்கம்மீது படடு ஆலய மதிலின்மீது பிரகாசமாக ஒளி ஏற்படும். சைவ-வைணவ சமய ஒற்றுமைகளை வலியுறுத்த இப்படிப்பட்ட விழாக்கள் மக்களுக்குப் பயன்பட்டன.

6.8.24 **ஐயன்குளத்து அனுமன்** :[116] காஞ்சியிலிருந்து கலவை செல்லும் சாலையில் பாலாற்றைத் தாண்டியதும் திருப்பத்தில் உள்ள முதல் ஊர் இதுவே. "படைவீட்டுராச்சிய, காளியூர் கோட்டத்து ஐயன்குளம்" எனக் கல்வெட்டில் இவ்வூர் குறிக்கப்படுகிறது. கி.பி. 1585-1614-வரை விசயநகர அரசை ஆண்ட வேங்கடபதி மகாராயரின் அமைச்சரும், அப்பையதீட்சிதர், தெனாலிராமன் ஆகியோரின் சமகாலத்தவருமான நெட்டூர் கோடி கன்னிகாதானலட்சுமி குமார தாதாசாரியார் இவ்வூரின் மேற்கில் நீர்ப்பாசனத்திற்கென்று 136 ஏக்கர் பரப்பில் நீர்நிலை வெட்டி, அதன் ஒருபக்கத்தில் நான்கு புறமும் கோபுரங்கள் வானளாவி நிற்க, அனுமனுக்கு ஆலயம் எழுப்பினார். தாததேசிகன் வெட்டியதால் அந் நீர்நிலைக்குத்

"தாதசமுத்திரம்" என்ற பெயர் ஏற்பட்டது. ஊரும் ஐயங்கார் குளமாயிற்று. பரந்த ஏரிக்கு அணியாய்ச் சுற்றிலும் படிகள் அழகுடன் அமைந்துள்ளன. அனுமன் தொழுத கையராய் உள்ளார். உட்தளம் முழுதும் ஒருகாலத்தில் ஓவியம் பளிச்சிட்டிருக்கவேண்டும். இன்று அவை அழிந்துவிட்டன. கோயிலின் மேற்குச்சுவரில் தாததேசிகர் இயற்றிய "அனுமத்விம்சதி" சாசனங்களாய் மிளிர்கின்றன. இங்கு சித்திரா பவுர்ணமியன்று வரதர் காஞ்சியிலிருந்து எழுந்தருளி தூசி, மாமண்டூர் சென்று பின் இவ்வூரை அடைந்து ஒருநாள் விழாக்கண்டு, இரவு புறப்பட்டு ஆலயத்தை அடைவார். மாமண்டூரில் ஒரு பெரிய திருமால் கோயில் உள்ளது.

6.8.25. **ஆர்க்காடு :** அ/மி. பெருந்தேவித் தாயார் சமேத அ/மி. வரதராஜசுவாமி திருக்கோயில் பாலாற்றங் கரையில் உள்ளது. கூர்மபீடம்-அதன்மீது பத்ம பீடம், அதன்மேல் பெருமாள் நின்ற திருக்கோலம். திருமலைப்பெருமாள் திருக்கைபோன்ற அமைப்புடன் உள்ளார்.

6.9. **இக்காலகட்டத்தில் தோன்றிய சில இலக்கியங்கள் :**

(1) அருளாளப் பெருமாள் எம்பெருமானார் இயற்றிய நூல்கள் ஞானசாரம், பிரமேயசாரம் எனபன. ஞானசாரம் நாற்பது வெண்பாக்களையும் ஒரு தனியனையும் கொண்டது, பிரமேய சாரம் பத்து வெண்பாக்களையும ஒரு தனியனையும் கொண்டது. 'வண்டு படிதுளப மார்பனிலை ' எனும் ஞானசாரப் பாடலை முன்பே கண்டோம்.

(2) கோயில் கந்தாடையண்ணன் (முதலியாண்டானின் குமாரர்) பரமபதநாதன் முதல் மணவாள மாமுனிகள் வரையுள்ள ஆசாரிய பரம்பரையைத் தொகுப்பாகப் 'பெரிய திருமுடியடைவு' என்ற பெயரால் ஓர் உரைநடை நூலாக எழுதிவந்தார். வரலாற்றுச்செய்திகள் பல இதில் உள்ளன.

(3) பிரதிவாதிபயங்கரம் அண்ணன் : 'அமலனாதிபிரான்'— என்னும் தலைப்பில் பத்து கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் மணவாள மாமுனிவரைப் பற்றிய துதியாகப் பாடியுள்ளார். பாதாதிகேசமாலையாகப் பாடினார். இதன் முதற்பாடல் பின்வருமாறு.

'போதச்சிவந்து பரிமளம் வீசிப் புதுக்கணித்து
சீதக் கமலத்தை நீரறவோட்டிச் சிறந்தடியேன்
ஏதத்தை மாற்றும் மணவாளயோகி இனிமைதரும்
பாதக்கமலங்கள் கண்டேன் எனக்குப் பயமில்லையே'

(4) இலக்கண விளக்கம் எழுதிய வைத்தியநாத தேசிகர், அந்நூல் பொருளதிகாரம் 90-ஆம் நூற்பா உரையில் 'அத்தியூர்க்கோவை' என்ற நூலிலிருந்து ஒரு பாடலை மேற்கோளாகக் காட்டுகிறார். அத்தியூர் வரதரைப் போற்றும் இந்நூல் இன்று கிடைக்கவில்லை ; பிற செய்திகளும் தெரியவில்லை.[117]

'அடங்கா அசுரர்குல மறுத் தோர் அத்தியூரர் வென்றி
மடங்காத நேமிவரதர்நன் னாட்டிற்றன் மைந்தனுடன்
முடங்காமல் அந்த மனைவியும் போய்முயன் றூரனுடன்
தடங்காவும் யாறும்குளனும் சென்றாடவும் தக்கதுவே'

—இது தலைவி புனலாடற்கு மேற்கோள்.

(5) அரிதாசர் : திருமால் சமயத்தை உயர்த்திச்சொல்லும் 'இரு சமய விளக்கம்' எழுதியவர், குன்றவர்த்தனக்கோட்டம் அரிவாசபுரம் அரிதை என்ற ஊரில் காசாளர் மரபில் பிறந்தவர். இவ்வூர் இப்பொழுது நாகலாபுரம் என வழங்கும். 'சந்திரகிரி இராச்சியத்து வேதகிரி தேசத்து ஹரிவாசபுரமான நாகலாதேவி அம்மன்புரம்' — என்பது நாகலாபுரக் கல்வெட்டாகும்.

கிருஷ்ணதேவராயர் கலிங்கத்தை ஆண்ட கஜபதி அரசன் பிரதாபருத்திரனை அடக்கப் படையெடுத்துச்சென்று, (கி. பி. 1520) வென்று அங்குச் செயத்தம்பம் நாட்டினார். நாட்டப்பட்ட இடம் விசாகப்பட்டினத்தையடுத்த சிம்மாசலம் என்னும் சிங்காத்திரி. அங்கிருந்து தெற்கு நோக்கிவந்து அரிகண்டபுரத்தையடைந்தார். அங்கு அரிதாசர் கட்டியிருந்த அ/மி. கருமாணிக்க வண்ணர், அ/மி. வேதவல்லி நாச்சியார் ஆலயத்தை வணங்கி நிபந்தங்களையும் கொடுத்தார். இவருடைய தாயார் நாகலாதேவி பெயரால் அரிகண்டபுரத்தை நாகலாபுரம் என்று மாற்றி வழங்கச்செய்தார்.

இரு சமயவிளக்கம் என்னும் நூல் சைவக்கதைகளை மறுத்து வைணவ சமயப் பெருமைகளைச் சொல்ல வந்ததாகும். வைணவ சமயத்தைச் சேர்ந்த ஆரணவல்லி என்னும் பெண்ணும், சைவ சமயத்தைச் சேர்ந்த ஆகமவல்லி என்னும் பெண்ணும் வேதவதிநதியில் நீராடிக் கரையேறித் தத்தம் தெய்வங்களைத் துதிக்கிறார்கள். பின்னர் அவையினர் முன் வாதம் செய்கிறார்கள். இவ்வாறு இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டாகும்.

(6) பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் திருமலைப் பெருமாள்மீது திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை என்ற இருநூல்கள்

இயற்றியுள்ளார். இவை அவரது அஷ்டப்பிரபந்தம் என்ற நூல் தொகுப்பில் அடங்கும். திருவேங்கடத்தந்தாதி நூறு கட்டளைக் கலித்துறைகளால் அமைந்தது. இந்நூலிலுள்ள கலித்துறைகள் யாவும் பெரும்பாலும் திரிபு என்ற சொல்லணியும் யமகம் என்ற சொல்லணியும் அமைந்தவையாகும். வைணவதத்துவக் கருத்துகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன ; சரணாகதித் தத்துவம் பல இடங்களில் வற்புறுத்தப்படுகின்றது ; ஆழ்வார்களின் பாசுரக்கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

திருவேங்கடமாலை என்னும் நூல் நூறு வெண்பாக்களால் அமைந்தது. இந்நூலாசிரியர் காப்புச்செய்யுள்களில் முதலில் வைணவர்கள் வழிபடு கடவுளாகப் போற்றும் நம்மாழ்வார் வணக்கத்துடன் நூலைத் தொடங்குகிறார். இந்நூலின் பாடல்களில் முன்னிரண்டடிகளில் வேங்கடத்தின் சிறப்பும் பின்னிரண்டடிகளில் அங்கு எழுந்தருளியிருக்கும் திருமலையப்பனின் பெருமையும் பேசப்படுகின்றன. ஒரு பாடலைக் காண்போம் :

"மாலைக்கோ வித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே—சோலைத்
தருமா தரைநட்டான் தண்முல்லை ஆயர்
தருமா தரைநட்டான் சார்பு"—பாடல் 3.

பிறவிப் பெருங்கடலுக்கு வங்கமாகத் திகழ்வது திருவேங்கடமலை என்பதாக முன்னிரண்டடிகளில் கூறினார். பின்னிரண்டடிகளில் ஆயர்மகள்.ரைக் கூடிய கண்ணன் தேவருலகிலிருக்கும் பாரிசாதமரத்தை இப்பூவுலகில் கொண்டுவந்து நட்ட பெருமையைப் பேசுகின்றார். பின்னிரண்டடிகளில் யமகம் என்ற சொல்லணி அமைந்து பாடலை அழகுபடுத்துகின்றது.

(7) திருவேங்கடக்கலம்பகம் : இந்நூலாசிரியர் அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் மகள் வயிற்றுப் பேரரான முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் என்பவராவர். இவர் காஞ்சி அ/மி. வரதர்மீது பஞ்சரத்னம் பாடிப் போற்றினார். இந்நிலையில் பெருமானின் திருமாலை தானே இவர் கழுத்தில் விழுந்தது. அதுகண்ட வைணவப் பெருமக்கள் வியப்படைந்து இவருக்குக் கோயில் மரியாதைகளைச் செய்தனர். இன்னும் பல சிறப்புகளைச் செய்தனர். 450 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் வாழ்ந்தார்.[118]

இந்நூலில் சொற்சுவை, பொருட்சுவை மிகுந்திருப்பதுடன், 'பக்திச்சுவையும்' மிகுந்துள்ளது. நெஞ்சை நோக்கிக் கூறும் ஒரு பாடலில் இச்சுவை

தெளிவாகத் தென்படுகிறது. ஆழ்வாரிகளின் அருளிச்செயல்களில் ஆழ்ந்து சிந்தித்து. பெருமானது திருவடிப் பேற்றினை அடையுமாறு நெஞ்சிற்கு உபதேசித்தலைக் காணலாம்.

'பதின்மர்செந் தமிழைநீ படிக்கிலாய் கேளாய்
படித்தபேர் தாளையும் பணியாய்
எதிபதிசரணே சரணமென் றொருகால்
இசைக்கிலாய் எமதுவேங் கடத்தைத்
துதிசெயாய் யிருந்த விடத்திருந் தேனும்
தொழுகிலாய் வாழிஎன் மனமே
மதிநுதல் அவர்மேல் மங்கைநா யகனார்
மலர்ப்பதம் கிடைப்பதெவ் விதமே'[119]

இந்நூலில் சமயக் காழ்ப்பில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் காஞ்சி அமி. பெருந்தேவித் தாயார்மீது திருக்கச்சி பெருந்தேவித் தாயார் பதிகம் என்னும் பதினொரு பாடல்களைக் கொண்ட ஒரு சிறு நூலையும் இயற்றியுள்ளார். பாடல்கள் பக்திச்சுவையும் தமிழ்ச்சுவையும் கலந்து மிளிரும் தன்மையன. தாயாரைப் பணிவதால் வரும் பலன்களைப் பட்டியலிட்டுக் காட்டும் ஒரு பாடலைக் காண்போம்.

''இருள்வரும் மனத்தர்ஆ னாலும் உன் சந்நிதியின்
எதிர்வந்து பணிவ ரானால்
இந்நிலத் தவருக்கு ரத்நபூ டணம் வரும்;
இலகுபீ தாம்பரம் வரும் ;
பொருள்வரும் ; தானியத் திரள்வரும்; சுழிபெற்ற
புரவியும் கவிகை யும்வரும்;
பொற்சிவிகை மத்த கரிவரும்; புவியைப்
புரக்கின்ற ஆண்மை வரும்;மெய்த்
தெருள்வரும்; திகழ்பெரும் புகழ்வரும்; அட்டமா
சித்தியும் வரும்; பரத்தில்
தேவேந்திர போகம்வரும்; நான்முகன் பதவியில்
திகழ்வாழ்வு வரும்; உண்மைகாண்—பாடல் 3.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(8) நல்லாப்பிள்ளை : கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பதியில் வாழ்ந்தார். மதலம்பேட்டில் பிறந்தவர். வில்லிபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு, வில்லிபுத்தூரார் பாடாத எஞ்சிய எட்டுப் பருவங்களையும், இடையிடையே சில இடங்களில்

கதையை விரிவுபடுத்தியும், பாரதம் பாடினார். காஞ்சி அ/மி. வரதர் சந்நிதியில் அரங்கேற்றம் நடந்தது. இந்நூலில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன.

(9) *எம்பிரான் சதகம்* : ஸ்ரீபெரும்புதூரில் வாழ்ந்த கோபாலகிருஷ்ணதாசர் என்னும் பெரியாரால் பாடப்பெற்றது இந்நூல். இவரது காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டாகலாம். பக்திச்சுவையுடன் உள்ளம் உருக்கும் பல பாடல்களை இந்நூலில் காணலாம்.

6.10 *பிராம்மணரல்லாத ஆசாரியபுருடர்கள்* : ஆசாரிய பரம்பரை நாதமுனிகள் தொடங்கி, மணவாள மாமுனிவருடன் முடிவடைந்தது. இராமாநுசர் சாதிபேதங்களை ஒழிக்கப் பாடுபட்டு, பாகவதர் அனைவரும் சமம் என்று சொல்லாலும் செயலாலும் நடைமுறைப்படுத்தி வாழ்ந்து மறைந்தபின்னரும், சமுதாயத்தில் பிராம்மணர்—பிராம்மணரல்லாதோர் ஏற்றத்தாழ்வு தொடர்ந்து இருந்தது. வடகலை ஆசாரியர்கள் பிராம்மணரல்லாதார்க்குப் பஞ்ச சம்ஸ்காரம்—ஐந்தீக்கை செய்யும்போது ‘ஓம்’ என்ற பிரணவ மந்திரத்தை ‘அம்’ என இன்னும் உச்சரித்துவருகின்றனர். தொண்டரடிப்பொடியாழ்வார் சதுப்பேதி மார்களைப் (சதுர்வேதிமார்களாகிய நால்வேதங்களும் அறிந்தவர்களைப்) பார்த்து, “எம்மடியார்கள் இழிகுலத்தவராயினும் அவர்களை வணங்குங்கள் ; அவர்களுக்கு நல்ல ஞானத்தை கொடுங்கள்; அவர்களிடமிருந்து சிறந்த கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று உரத்த குரலில் கூறியும்,[120] அவர் கருத்து ஏற்கப்படவில்லை. இதனால் பிராம்மணரல்லாதார் தனியாக ‘இராமாநுச கூடங்களை’ அமைத்துப் பாகவதர்களுக்குக் கைங்கரியம் செய்யத் தொடங்கினர். சிலர் ஆசாரியபுருடர்களாகி, பிராம்மணரல்லாதார்க்கு ஐந்தீக்கைகளை அளித்தனர். அவ்வகையில் சிறந்தது விளங்கியர் புதுவை, விலட்சணகவி. ஏ. வே. இராமநுஜநாவலர் ஆவார். இவரைப் பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம் :

திண்டிவனத்தை அடுத்த ஏப்பாக்கத்தில் வேங்கடராமநாயுடு என்பவருக்கு மகனாக இவர் பிறந்தார் (கி. பி. 1829-1891). புதுவையில் வாழ்ந்தார். இவர் பல சிறந்த நூல்களை இயற்றியும், வடமொழியிலிருந்து மொழிபெயர்த்தும் சமயத் தொண்டாற்றியுள்ளார். பிற சமயத்தினர் வைணவ சமயத்தை இழித்துப் பேசியபோது அவர்களுக்குத் தக்க மறுப்புரைகளைக் கூறி, அவர்கள் மனம் திருந்துமாறு செய்தார். இவரியற்றிய சில முக்கியமான நூல்கள் வருமாறு :

(1) ஸ்ரீபாத்மோத்ரபுராணம்.

(2) திருமுட்டப்புராணம்.

(3) திருச்சித்திரகூடப்புராணம்—61 படலம், 4030 பாடல்கள்.

(4) ஸ்ரீவைஷ்ணவ தத்துவம்.

(5) வைராக்கிய சூர்யோதயம் (தெலுங்கிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

(6) தேசிகன் திருப்பதிகம்.

(7) மணவாள மாமுனிகள் திருப்பதிகம்.

(8) எதிராஜ சதகம்.

(9) ஸ்ரீவரதராஜப் பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி.

(10) ஸ்ரீவைணவ மங்கையர் வாழ்க்கைப்பாடு.

(11) ஸ்ரீசூர்ண விளக்கம்.

(12) ஆண்டாள் விஷயம்.

அச்சில் வெளிவராதவை :

1. ஸ்ரீவைஷ்ணவ கம்பீர ஜோதி.
2. திருவேங்கடக்கோவை.
3. எம்பெருமானார் விஜயம்—முதலியன.

இவருக்குப்பின் புவனகிரி ஏகாங்கி சுவாமிகள் இவ்வகையில் தொண்டாற்றினார்.

6.11 முடிவுரை : "ஆசாரியர்கள் காலத்தில் வைணவம்"—என்ற தலைப்பில் இவ்வியலில் பல கருத்துகள் ஆராயப்பட்டன. அவற்றைத் தொகுத்து நோக்கும்போது சில கருத்துக்களை உணரமுடிகிறது.

வைணவ-சைவ சமயங்களுக்குள் பொதுவில் பிணக்குகள் அதிகமில்லாத நிலை இருந்தது. இரு சமய ஒற்றுமையை வலியுறுத்த திருப்பாற்கடல் போன்ற ஊர்களில் ஆலயங்கள் தோன்றின. திருப்பாற்கடலில் ஆவுடையார்மீது பெருமாள் இருக்கிறார். திருவிழாக்களும் நடைபெற்றன. அதேசமயம் உடையவர் காலத்தில், சைவ சமய ஆதிக்கத்தால், அவர் மேலக்கோட்டைக்குச் செல்ல நேர்ந்தது; இரு சமய விளக்கம்—போன்ற நூல்கள் ஒரு சமயத்தை உயர்த்தவும், மற்றதைத் தாழ்த்தவும் எழுந்தன.

உடையவர் காலம் வைணவ சமயத்தின் பொற்காலமாகும். ஆசாரியர்கள் காலத்தில் திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களுக்குப் பல வியாக்கியானங்கள் தோன்றின, தேசிகர், பிரதிவாதிபயங்கரம் அண்ணா போன்றோர் பணிகள் இச்சமய வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்தன. விசயநகர மன்னர்களின் காலத்தில் அ/மி. வரதர் கோயில் வைணவ சமய மறுமலர்ச்சிக்குரிய

இடமாக வடகலையினரின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. அவ் ஆலயம் பற்றிய செய்திகள் விளக்கமாக அறியப்பட்டன. மேலும் பல புதிய ஆலயங்கள் எடுக்கப்பட்டன. மடங்கள் பலவகையில் தொண்டு புரிந்தன. ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்துவைக்கும் இடமாகவும் விளங்கின. இது பற்றி விஜயநகர மன்னன் கம்பண உடையார் காலத்துக் கல்வெட்டு கூறும் செய்தி அறியத்தக்கது.[121] தமிழ் இலக்கியங்கள் இக்காலகட்டத்தில் எவ்வாறு தோன்றி இச்சமயத்தை வளர்த்தன என்பதும் சுட்டப்பட்டன.

சமுதாயத் தொண்டாகப் பல நீர் நிலைகள் அமைக்கப்பட்ட செய்திகள் குறிப்பிடப்பட்டன. கோயிலும் சமுதாயமும் இணைந்துநின்றது அறியப்பட்டது. ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெறாத பல திருத்தலங்களைப் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது. இவ்வகையில் பல செய்திகளையும் தொகுத்துக்கண்டதுடன் இராமாநுஜ நாவலரின் தொண்டுகள் பற்றியும் இறுதியில் அறியப்பட்டன. இனி "தற்காலத்தில் வைணவம்" என்னும் தலைப்பில் ஆசாரியர்களுக்குப் பின்னர் தோன்றிய பல பெரியார்கள் தொடர்ந்து எவ்வாறு இச்சமயத்தை வளர்த்துவந்தனர் என்பதைப் பற்றி இனி ஆராயப்படும்.

## அடிக்குறிப்புகள்

1. பாரத வெண்பா 349, 484, 514.

2. "கொன்னவில் வேல் நாகக் கணைதடுப்பக் குந்திதனைக்
கன்னனிடை விட்டதொரு காரணமும்-முன்னி
வருவார் தமக்கருள அத்திகிரி மன்னும்
பெருமான் உரைத்தான் பெயர்ந்து"

3. "என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கு
யானடைவே யவர்குருக்கள் நிரைவ ணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்
டெம்பெருமான் திருவடிக ளடைகின் றேனே"

—ஸ்ரீதேசிகப் பிரபந்தம், பாசுரம் 42.

4. தெ. ஞானசுந்தரம், "வைணவ உரைவளம்", முதல் பதிப்பு (சென்னை, 1989). ப. 2.

5. சுவாமி ராமகிருஷ்ணானந்தர், "ஸ்ரீராமானுஜர்", (மொழி). கா. ஸ்ரீ. ஸ்ரீ. முதல் பதிப்பு (சென்னை, 1992), கப். 82-86.

6. இவரது இளமைத் திருநாமம் கோவிந்தர் என்பதாம்.

7. இது பற்றி முன்னரும் குறிப்பிடப்பட்டது.

8. "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ" என்பது சாந்தோக்ய உபநிடதம் முதல் அத்தியாயம், ஆறாவது பகுதி ஏழாவது மந்திரத்தித்தின் வாக்கியத்தில் வரும் பகுதி. "அப் பொன்மயமான பிரமத்தின் இரண்டு கண்களும் குரங்கின் பிருஷ்ட பாகம் (பின்புறம்) போல் சிவந்த தாமரை மலரைப் போன்றவை" என்று யாதவப்பிரகாசர் விளக்கம் கூறினார்.

"கம் ஜலம் பிபத்தி கபி:ஸுர்ய அதாவது தண்ணீரைப் பருகும் கதிரவன்"அஸ் "என்ற மூலச்சொல்லுக்கு மலர்தல் என்று பொருள் ; எனவே"ஆஸ"என்றால் சூரியனால் மலர்தல் என்று பொருள். எனவே அந்த வாக்கியத்தின் பொருள் :"சூரிய மண்டலத்திலுள்ள அந்தப் பரமனின் கண்கள், கதிரவனின் கதிர்களால் மலர்ந்த தாமரைப் பூப்போல அழகானவை என்பதே (இதனால் பிரம்மத்துக்கு உருவம், குணம் முதலியன உண்டு என்று பொருள்படும். ஆனால் அத்வைதக் கொள்கைப்படி இவை இல்லையாகையால் யாதவப்பிரகாசர் பொருளைத் திரித்துக் கூறினார்).

மற்றொருநாள், தைத்திரீய, உபநிடதத்தில் வரும்,

"ஸத்யம் ஜ்ஞானம் அனந்தம் ப்ருஹ்ம" (2:1)

என்ற மந்திரத்துக்கு, யாதவப்பிரகாசர், பரப்பிரம்மம் சத்தியமானது, அறிவுமயமானது, இறுதியற்றது" என்று பொருளுரைத்தார். இராமானுஜர் அதைமறுத்துத் தமது கருத்தை விளக்கினார். "பரப்பிரம்மம் சத்தியம் என்ற பண்புடன் கூடியது; அசத்தியம் கொண்டதல்ல ; ஞானம் அதன் நற்பண்பு, அஞ்ஞானமல்ல ; இறுதியின்மை அதன் பண்பு, இறுதியல்ல ; எனவே இப்பண்புகளைப் பரமனாகவே கொள்வது சரியன்று ; இவை அவனுடையவை ;ஆனால் அவனன்று ; இந்த உடல் என்னுடைது ; ஆனால் நான் உடலன்று"என்றார் இராமானுஜர்.

—சுவாமி ராமகிருஷ்ணானந்தர், "ஸ்ரீராமானுஜர்", (மொழி) கா ஸ்ரீ. ஸ்ரீ. பக். 98—100.

9 இந்த இலிங்கத்தை, மதுரமங்கலம் ஊரின் மேற்கிலுள்ள கோவிந்தரின் அவதார மண்டபம் அருகில் உள்ள வயல்வெளியில் உள்ள ஒரு சிறிய கோயிலில் பார்க்கலாம்.

10. "லக்ஷ்மீச புண்டரீகாக்ஷ க்ருபாம் ராமானுஜே தவ"
நிதாய ஸ்வமதே நாத ப்ரவிஷ்டம் கர்த்துமர் உறவி
—அனந்தசார்யர் இயற்றிய பிரபன்னாம்ருதம், 7.31.

—சுவாமி ராமகிருஷ்ணானந்தர், "ஸ்ரீராமானுஜர்" (மொழி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. ப. 116.

11. ஆறுவார்த்தைகள் :

1. நாமே பரதத்துவம் (மும்மூர்த்திகளில் நானே முதல்வன்)
2. நம் சமயம் பேதம்உடையது (சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று பேதம்)
3. உபாயம் சரணாகதியே (என்னை அடைய சரணாகதியாகிய நானே வழி)
4. இறுதிக்கால நினைவு தேவையில்லை (என்னைச் சரணமடைந்தவனுக்கு இறக்கும்போது என்னைப் பற்றிய நினைவு தேவையில்லை)
5. இத்தேக முடிவில் மோட்சம்.
6. பெரிய நம்பிகளை ஆச்ரயிக்க வேணும் (இராமானுஜர் பெரிய நம்பிகளிடம் பஞ்ச சம்ஸ்காராதிகளைப் பெறவேண்டும்).

12. *பஞ்ச சம்ஸ்காரம் :* 1. திருவாழி, திருச்சங்கு முத்திரைகளைத் தோளில் பொறித்தல், 2. திருமண் இடுதல், 3. தாசநாமம் இடப்பெறுதல், 4. மூன்று மந்திரங்களைப் பெறுதல், 5. பகவானை அடைதல் என்பன அவை. (தாபம், புண்ட்ரம், தாஸ்யம், மந்த்ரம், இஜ்யை) பார்க்க : ப. தொ. பு. ப. எண். 34.

13. இவரது இயற்பெயர் தெரியவில்லை.

14. *பிரம்ம சூத்திரம் :* சுமார் கி. மு. 400-இல் வாதராயணர் என்பவரால் செய்யப்பெற்றவை. பிரம்மத்தைப் பற்றிய விளக்கமாயிருத்தலின் இப்பெயர் பெற்றன. உபநிடதங்கள், கீதை, பிரம்மசூத்திரம்—ஆகிய மூன்றும் வேதாந்தத்தின் அடிநிலைகளாகும். இந்நூலில் 550 சூத்திரங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் பொருள் விளங்கா. ஆகவே, சங்கரர், இராமாநுஜர் முதல் பல உரையாசிரியர் தோன்றினர்.

—ஏ. வி. கோபாலாசாரியார், கலைக்களஞ்சியம், தொகுதி 7, பக். 290—291.

15. சுவாமி ராமகிருஷ்ணானந்தர், "ஸ்ரீராமாநுஜர்" (மொழி) கா. ஸ்ரீ. ஸ்ரீ. பக். 250—251.

16. மேலது—பக். 251—251.

17. தாசரதி—என்ற பெயரும் இவருக்குண்டு.

18. ஓர் ஆழ்வார் அல்லது ஆசாரியரின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடும் தனிப்பாடலே தனியன் எனப்படும். சிறப்புப்பாயிரம் போன்றது. தனியனை ஓதியபிறகே ஆழ்வார் அல்லது ஆசாரியரின் நூல்களைப் பயில்வர். நூலிருந்து தனியே நிற்பதால் தனியன் எனப்படுகிறது.

> "கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
> பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்து
> அடியவர்கள் வாழஅருந் தமிழந்தாதி
> படிவிளங்கச் செய்தான் பரந்து."—முதல் திருவந்தாதித்தனியன்.

19. பிங்கள ஆண்டு, தை மாதம் சுக்கிலபட்ச பௌர்ணமியன்று புஷ்ய நட்சத்திரத்தில் அமைத்தார்.

20. கிருமி கண்ட சோழன் இரண்டாம் குலோத்துங்கன் என்பவர், டி. வி. சதாசிவப்பண்டாரத்தார் (பிற்காலச் சோழர் வரலாறு—பாகம் II, பக். 346). இவன் கி. பி. 1133-இல் பட்டம் பெற்றவன்; அப்பொழுது உடையருக்கு வயது 116 ஆகும். இதற்கு மேல் அவர் மேலக்கோட்டைக்குச் சென்று பன்னிரண்டாண்டுகள் இருந்தார் என்பது பொருந்தாது. அதன்பின்னும் பல நிகழ்ச்சிகள் அவர் வாழ்வில் நடந்துள்ளன. எனவே இவர் காலத்தில் இவர் திருவரங்கத்தை விட்டு வெளியேறினார் என்பது பொருந்தாது. முதற்குலோத்துங்கன் காலத்தில்தான் இந்நிகழ்ச்சி நடந்தது

என்பதைப் பல அறிஞர்கள் முடிவுசெய்து கூறுகின்றனர். அக்குறிப்புகள் பின்வருமாறு :

1. N. Jagadeesan, "History of Sri Vaisshnavism in the Tamil country. (Post-Ramanuja) First Edition, (Maduri 1977) P. 13."

2. தெ. ஞானசுந்தரம், "வைணவ உரைவளம்", முதல் பதிப்பு (சென்னை, 1989) ப. 20.

3. நாலூரான் என்னும் அமைச்சன் தூண்டுதலால் சோழன் உடையவரைத் தன் அவைக்கு அழைத்துவரப் பணித்தான் என்று குருபரம்பரை, மற்றும் உடையவர் வரலாறு கூறும் நூல்கள் கூறுகின்றன. "முதற்குலோத்துங்கனுடைய அரசியல் அதிகாரிகளில், சேனாதிபதி ஞானமூர்த்திப் பண்டிதன் ஆகிய மதுராந்தக பிரமாதிராஜன் என்பவன் ஒருவன் ; இவன் சோழநாட்டிலுள்ள நாலூர்என்னும் ஊரினன். இவன் அந்தணன்"—என்று சதாசிவ பண்டாரத்தார் கூறுகிறார்.—சோழர் வரலாறு— ப. 315. இதுவும் ஒரு தக்க சான்றாக அமைகின்றது.

4. Bitty Deva's conversion to Vaishnavism in the year 1101 A. D. Mysore Gazatteer vol. II, Part II, Page 1323 by Hayavarndana Rao. இம்மேற்கோள், —எஸ். கலியாணராமன், "ஸ்ரீ இராமாநுஜர் சரித்திர ஆராய்ச்சி மகிமை", முதல் பதிப்பு (சென்னை) என்னும் நூலினின்றும், (அப்பொழுது உடையவருக்கு வயது 84 ஆகும். முதற்குலோத்துங்கன் காலம்—கி. பி. 1070—1120 இக்கால எல்லையில் கி. பி. 1101 வருகின்றது.

21. பி. ஸ்ரீ. "ஸ்ரீராமாநுஜர்", முதல் பதிப்பு (சென்னை, 1973), பக் 253—258.

22. ஸ்ரீவசனபூஷணம், பக். 1—2.

23. மு. இராமசாமி, "பெரும்புகழான்", முதல் பதிப்பு (இராசிபுரம், 1980), ப. 120.

24. உடையவரின் முக்கிய திருமேனிகளில் இதுவும் ஒன்றாகும்.

25. ததபி கெமபி உறந்த !துர்வாஸநா—
சத விதயா ! யதப் யர்த்தயே !
தத் அதுலதய ! ஸர்வர்ரத !
ப்ரவி தர வரத ! க்ஷமாம் போறிதே !

ஸ்ரீவரதராஜ ஸ்தவம்—90. உரையாசிரியர்—உ. வே. வா. ஸ்ரீவத்ஸாங்காசார்யர், முதல் பதிப்பு (சென்னை, 1990), ப. 224.

26. வாழித்திருநாமம் :

"சீராரும் திருப்பதிகள் சிறத்தவந்தான் வாழியே ;
தென்னரங்கர் சீரருளைச் சேருமவன் வாழியே ;

பாராரும் எதிராசர் பதம்பணிந்தோன் வாழியே ;
பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே ;
நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே ;
நாலூரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே ;
ஏராரும் தையில் அத்தத்து இங்கு வந்தான் வாழியே ;
எழில் கூரத் தாழ்வான்தன் இணையடிகள் வாழியே.

(கூரத்திலுள்ள ஆழ்வான் சந்நிதியின் மூல விக்கிரகத்தில் கண் திறக்கப்படவில்லை என்று அருச்சகர் கூறினார்—கள ஆய்வின்போது கேட்டறிந்த செய்தி).

27. (திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம் நாவல்பாக்கம் கிராமத்திலுள்ள பெருமாள் கோயிலில், ஆழ்வார்கள், ஆசாரியர்களின் விக்கிரகங்கள் உள்ளன. அவற்றில், உடையவர் அமர்ந்துள்ள பீடத்தின் அடியில், இணைந்தவாறே, பிள்ளான் அமர்ந்துள்ளார். இதுபோன்று வேறு இடங்களில் இருவருடைய சேர்த்தியான விக்கிரக அமைப்பு இருப்பதாகத் தெரியவில்லை.)

28. மு. அருணாசம், "தமிழ் இலக்கிய வரலாறு"—கி. பி. 12-ஆம் நூற்றாண்டு, பகுதி 1, முதல் பதிப்பு, (மாயூரம், ஆ. இ.) பக். 18—19.

29. மேலே வரிசையாகக் குறிப்பிடப்பட்டவற்றுள் வரிசை எண். 4 முதல் 12 வரையுள்ளவை எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், "ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தான வரலாறு", (மொழி) டி. வி. எஸ். ராகவன், முதல் பதிப்பு (சென்னை, 1984) என்னும் நூலில் 4, 5, 6, 7 பிரிவுகளில் காணப்படும் செய்திகளின் தொகுப்பாகும். பக் 158—168.

30. டானியல் ஸ்மித், "பாஞ்சராத்திர நூல்விளக்கம்", (மொழி). கே. கே. ஏ. வேங்கடாச்சாரி, முதல் பதிப்பு (சென்னை, 1967), ப. 18.

31. இராமா. நூற். பா. 54.

32. மேலது—52.

33. N. Jagadeesan, History of Srivaishnavism in the Tamil Country (Post -Ramanuja), p 43.

34. "வாழி பரகாலன் வாழி கலிகன்றி,
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ,
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள், மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்"

—பெரிய திருமொழித்தனியன்.

"இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள், சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு !"

—பெருமாள் திருமொழித்தனியன்.

"சீரார் திருவெழு கூற்றிருக் கையென்னும் செந்தமிழால்
ஆரா வமுதன் குடந்தைப் பிரான்றன் அடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பெரு னெல்லா மெடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே"

—திருவெழுக்கூற்றிருக்கைத்தனியன்.

35. மு. அருணாலம், "தமிழ் இலக்கிய வரலாறு", 13-ஆம் நூற்றாண்டு, முதல் பதிப்பு (மாயூரம், ஆ. இ.) பக். 306.

36. இராமா. நூற். 44.

37. மேலது—60.

38. மேலது—88.

39. திரு. விரு. 99.

40. திருவாய்மொழி. 10 : 8 : 3—முப்பத்தாறாயிரப்படி உரை.

41. மேலது—9 : 8 : 1 இருபத்துநாலாயிரப்படி, மற்றும் முப்பத்தாயிரப்படி உரைகள்.

42. பெரியா. திரு. 3 : 8 : 4. பிங்கள ஆண்டு, மாசி மாதம், சுக்கிலபட்சம், தசமி திதி, செவ்வாய்க்கிழமை, ஆயில்ய நட்சத்திரம் நடுப்பகலில் பரமபதித்தல்.

43. உடையவரின் சரம திருமேனி பெரிய கோயிலின் ஒரு பகுதியிலேயே அடக்கம்செய்யப்பட்டது. அவ்விடத்தில் ஒரு விக்கிரகத்தை நிறுவியுள்ளனர். இது "தானான திருமேனி" எனப்படும்.

44. கலைக்களஞ்சியம், தொகுதி 2, பக். 74, 75.

45. உடையவரின் சிறிய தாயாரின் திருக்குமாரர்.

46. *எதிராஜ ராமானுஜதாசன், “குருபரம்பரை வைபவம்”, முதல் பதிப்பு (சென்னை, 1982), ப. 84. (கள ஆய்வு செய்கையில் எம்பார் பிறந்த மதுரமங்கலத்தில் நேரில் ஊரார் கூறக்கேட்ட செய்தியை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும் “ இவ்வூரைச் சுற்றிலுமுள்ள சுமார் 8 கி. மீ. சுற்றளவுக்குள். பாம்புகள் யாரையும் கடிப்பதில்லை ; கடித்தாலும் விஷம் ஏறுவதில்லை”, என்றனர். “இது எம்பார் பெற்ற வரம்”, என்றனர். திருமலையில் பாம்பின் வாயிலிருந்த முள்ளை எடுத்தபோது இவ்வாறு அவர் பெருமாளிடம் வேண்டியிருக்க வேண்டும். மேலும் “அவ்வூரின் வடக்கிலுள்ள ஒரு சிறிய குளத்தில் நீர் எப்பொழுதும் வடிவதில்லை என்றும், ஒருக்கால் நீர் வற்றும் நிலை ஏற்படின், உடனே மழை பொழிந்து அக்குளம் நிரம்பிவிடும் ; இதுவும் இவ்வூரில் எம்பார் பிறந்த பெருமையினால்தான்” என்றனர்.*

47. *பூவிருந்தவல்லி ஆலயம். இங்கு அ/மி. வரதர், அ/மி. சீனிவாசர், அ/மி. அரங்கநாதர் சந்நிதிகள் உள்ளன. காஞ்சியில் கருடசேவை நடக்கும் அன்று இங்கும் நடைபெறுகிறது.*

48. ஸ்ரீ ராமானுஜர்

| வடகலை வழி (பாஷ்ய வழி) | | தென்கலை வழி (பிரபந்த வழி) |
|---|---|---|
| திருக்குருகைப்பிரான் பிள்ளான் | | எம்பார் (கி. பி. 1026) |
| எங்களாழ்வான் (கி. பி. 1108) | | பராசரபட்டர்(கி. பி. 1062) |
| நடாதூரம்மான் (கி. பி. 1165) | | நஞ்சியர் (1113) |
| ஆத்திரேய ராமானுஜர் (1221) | | நம்பிள்ளை (1147—1252) |
| வேதாந்த தேசிகர் (1268—1369) | | பெரியவாச்சான்பிள்ளை |
| பிரம்மதந்திர ஸ்வதந்தரஜீயர் 1 (கி. பி. 1360-இல் பரகால மடத்தைத் தொடங்கியவர்) | நயினார் ஆசாரியா (தேசிகன் மகனார்) கி. பி. 1316 | வடக்குத்திருவீதிப்பிள்ளை (1167—1285) |
| | | பிள்ளை லோகாசாரியர் (கி. பி. 1300) |
| கடிகாசதம் அம்மாள் | | திருவாய்மொழிப்பிள்ளை (கி. பி. 1380) |
| ஆதிவண்சடகோபஜீயர் (கி. பி. 1398-இல் அகோபில மடத்தைத் தொடங்கியவர்) | | மணவாளமாமுனிகள் (1370—1443) |
| | | வானமாமலை ராமானுஜஜீயர் (அட்டதிக்கயஙகளின் தலைவர்) வானமாமலை மடத்தைக் கி. பி. 1440-இல் தொடங்கிவர். |

—N. Jagadeesan, "**History of Srivaishnacism** (Post-Ramuja), pp. 100 & 133)".

49. K. V. Raman, **Sri Varadaraja Swami Temple-Kanchi,** First Edition (New Delhi, 1975), pp. 82 & 86.


## 50. வடகலை—தென்கலை—வேறுபாடுகள்

| வடகலை | | தென்கலை | |
|---|---|---|---|
| 1. | பரமாத்மாவின் கருணை கூடி வாழச்செய்வது. | 1. | அக்கருணை தடையற்றது. |
| 2 | மோட்சத்தினை அடைய வேறுபட்ட படிநிலைகள் இல்லை. | 2. | உண்டு. |
| 3 | கர்மமும் ஞானமும் பக்திக்குத் துணையானவை | 3. | ஒவ்வொன்றும் முதன்மை பெற்றவை. |
| 4 | ஸ்ரீமந்நாராயணனுக்குச் சமமாக ஸ்ரீயும் அருள் வழங்கக்கூடியவள் | 4. | குறிப்பிடத்தக்க (சொரூப வியாப்தி) அருள் நிலைமை உடையவள் அல்லள். |
| 5 | திருமகள் மோட்சம் அளிக்கும் ஆற்றல் உடையவள் | 5. | இடைநின்று பரிந்துரை (புருஷகாரம்) மட்டுமே செய்யவல்லவள். |
| 6 | ஆன்மாவை வினைகளினின்றும் நீக்கும் பரம கருணை அவனது விருப்பமாகும். | 6. | அப்பரமகருணை ஆன்மாவின் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும். |
| 7 | பிரபத்திக்கு முற்பட்டவை ஆறு அங்கங்கள் | 7. | அவை தேவையில்லை. |
| 8 | கீழ்ச்சாதியில் பிறந்த பிரபன்னன் சொல்லளவில் மரியாதைக் குரியவன் | 8. | சாதி வேறுபாடின்றிப் பிரபன்னர் அனைவரும் சமமே. |
| 9 | பரமாத்மாவின் ஊடுருவி நிரம்பும் ஆற்றல் நுட்பமான ஆன்மாவிடம் வரையறைக்குட்பட்டது. | 9. | அவ்வாற்றல் எல்லைக்குட் பட்டதன்று. |
| 10 | பிரபத்தி இறைவனை அடையும் பல வழிகளில் ஒன்றாகும் | 10. | பிரபத்தி ஒன்றே வழி. |
| 11 | உதவியற்ற ஆன்மாவிற்குக் கடைசி அடைக்கலம் பிரபத்தியே | 11. | பிரபத்தியே முதலும் முடிவுமான வழியாகும். |
| 12 | அவனது திருவருள் ஆன்மாவின் தவறுகளையும் கடந்து, ஆன்மாவின்மீது தனித்தன்மை வாய்ந்தது | 12. | ஆன்மாவின் தவறுகளையும் அவர் ஏற்கிறார். |

| | | | |
|---|---|---|---|
| 13 | உலகின் ஒருபகுதியாகக் கைவல்யம் உள்ளது | 13. | கைவல்யம் ஆன்ம உலகின் ஒரு பகுதியாக மாறியமையும் படி நிலையிலுள்ளது. |
| 14 | ஆன்மாவை உடலினின்றும் பிரிக்கும் கைவல்யநிலை, தற்காலிக நிலையாகும் | 14. | அது தொடர்ந்துவரும் படிநிலையாகும். |

—N. Jagadeesan, "History of Srivahnavism"—pp. 198—199.

51. **வேதாந்த தேசிகர் அவதார விவர அட்டவணை :**



—"ஸ்ரீவைஷ்ணவ சதாசார சங்கிரகம்", லிப்கோ வெளியீடு,
முதல் பதிப்பு (சென்னை, 1968), ப. 2.

52. தேசிகப்பிரபந்தம், அதிகாரசங்கிரகம், 56.

53. N. Jagadeesan, "History of Srivaishnavism", p. 139.

54. மேலது—ப. 141.

55. இரண்டாம் பிராகாரம் கிழக்குச் சுவரிலுள்ள கல்வெட்டு—சகம், 1296. கி.பி. 1371—E.I., Vol. XIII, p. 222.

56. தேசிகப்பிரபந்தம், ஸ்ரீதேசிக சரித்திர சங்கிரகம், ப. 45.

57. மேலது—பாடல் 40.

58. ஸ்ரீவேதாந்த தேசிகன் தனியன் :

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேஸிகம்
(ஸ்ரீராமாநுஜரின் கருணைக்குப் பாத்திரரானவரும், ஞானம்-வைராக்கியம் ஆகியவற்றைத் தம் அணிகலன்களாகப் பூண்டவரும், வேங்கடநாதாரியர் என்ற பெருமைக்குரியவரும் ஆகிய வேதாந்த தேசிகரை வணங்குகின்றேன், என்பது இச்சுலோகத்தின் பொருளாகும்.

59. மு. இராமசாமி, "தேசிகர் நூற்றாந்தாதி" (பதிப்) முதல் பதிப்பு, (இராசிபுரம்).

60. "பின்பழகராம் பெருமாள் சீயர் பெருந்திவத்தில்
அன்பதுவு மற்றுமிக்க ஆசையினால்—நம்பிள்ளைக்
கான அடிமைகள் செய்யந் நிலையை நன்னெஞ்சே
ஊனமற எப்பொழுது மோர்"

—உபதேசரத்தினமாலை, 66 (பெருந்திவம்—பரமபதம்).

61. எதிராஜராமாநுஜதாசன், "குருபரம்பரை வைபவம்", ப. 185.

62. டி. எஸ். இராசகோபாலன், "வைணவ ஆசாரியர்கள்", பகுதி 3, முதல் பதிப்பு, (சென்னை, ஆ. இ.) என்னும் நூலினின்றும்.

63. உ. வே. வா. ஸ்ரீவத்சாங்காசாரியார், "ஸ்ரீ வேங்கடேச சுப்பிரபாத மகிமை", "கல்கி வார இதழ்"—சென்னை, நவம்பர் 3, 1991.

64. N. Jagadeesan, "History of Srivaishnavism", First Edition, (New Delhi 1975).

65. எறும்பியப்பா இயற்றிய வேறு நூல்கள்: வரவர முநிசதகம், பர்வதின சரியை, உத்தரதினசரியை, விலட்சண மோட்சாதிகாரி நிர்ணயம், சம்பூப்பிரபந்தம்.

66. K.V. Raman, "**Sri Varadaraja Swami Temple-Kanchi**", First Edition, (New Delhi 1975).

67. மா. இராசமாணிக்கம்பிள்ளை, "பல்லவர் வரலாறு", பக். 12, 13.

68. வாழ்வியல் களஞ்சியம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, பக். 38—43.

69. "ஏரி இரண்டும் சிறகா, எயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவா—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு—சோழர்காலத் தண்டியலங்காரப் பாடல்".

70. 25—09—1983 அன்று நடைபெற்ற காஞ்சித் தத்துவமையக் கருத்தரங்கில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறை வெளியிட்டது.

71. சுமார் 2 கி. மீ. தொலைவு.

72. An epigraph Dt. Saga 1409 (A.D. 1487). இவர் திருக்குளத்திலுள்ள ஒரு மண்டபத்தில் நீருக்குள் எழுந்தருளச் செய்யப்பெற்றுள்ளார். 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுத்து வரப்பெற்று 48 நாள்கள் வழிபாடுகள் செய்யப்பெற்றுப் பின்னர் மீண்டும் நீருக்குள் எழுந்தருளச் செய்யப்பெறுகிறார்.

73. 519 of 1919 (A.D. 1050).

74. மேலது—மற்றும் S.I.I. IV. 358 and S.I.T. Vol. I. 404.

75. S.I.I., IV, No. 852.

76. E.I. VII., p. 132, அருளாளநாதன் கோயிலில் செய்யும் திருப்பணி ஆயிரக்கால் திருமண்டபம்.

77. 572 & 585 of 1919.

78. K.A.N. Sastri, **The Cholas** (1955).

79. 648 of 1919.

80. 650 of 1919, A.R.E. 1919-20, p. 115.

81. 631 of 1919.

82. S.I.T.I., I. No. 390, p. 375.

83. S.I.T.I., 406, p. 395.

84. *எஸ். எஸ். இராகவாச்சார்,* 25-09-1983 *அன்று காஞ்சியில் நடைபெற்ற தத்துவ மையக் கருத்தரங்குக் கட்டுரை.*

85. *உடையவருக்கு முன்பே சில திருமால் ஆலயங்களில் திவ்வியப்பிரபந்தங்களை ஓதும் முறை இருப்பினும் நாள் வழிபாடுகளிலும், விழாக்களிலும் கண்டிப்பாகத் திவ்வியப்பிரபந்தங்களை ஓதுவதற்கு இவர் தக்க ஏற்பாடுகள் செய்து நடைமுறைப்படுத்தினார்.*

—K.A.N. Sastri, "**The Cholas** ", p. 639 and J.K.T. Veeraraghavacharya, "**History of Tirupati** ", II., pp. 953 & 974.

86. 493 of 1919.

87. *மணிப்பிரவாளம் வடமொழிவிரவிய தமிழ் உரைநடை "மணியும் பவளமும் சேர்ந்து காட்சிக்கு இன்பம் பயக்குமாப்போலே, செந்தமிழும் வடமொழியும் விரவிய மணிப்பிரவாளத்தில் வல்லோசைகள் இணைந்து, செவிக்கின்பம் பயக்கின்றது என்பர்.*

*—வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர், செந்தமிழ், தொகுதி* ***12****, பகுதி* ***12****,* ***1914****.*

*"கி. பி. 4, 5-ஆம் நூற்றாண்டுகளில் சமணர்களே இந்நடையைப் படைத்தனர். தமது நோக்கங்களை முழுதும் நிறைவேற்றிக்கொள்ள அம்மொழிநடை வாய்ப்பு அளித்தமையால், திவ்வியப்பிரபந்த உரையாசிரியர்கள் அதைத் தேர்ந்தெடுத்தனர்."*

*—இரா. அரங்கராஜன், "**நம்பிள்ளை உரைத்திறன்**", பகுதி 2, முதல் பதிப்பு (சென்னை, **1986**), பக். **53**, **54**.*

88. *பிள்ளை லோகம் ஜீயர், "**யதீந்திர பிரவணப்பிரபாவம்** ", (சென்னை, **1891**). ப. **20**.*

89. *இரா. அரங்கராஜன், "**நம்பிள்ளை உரைத்திறன்**", பக். **53**, **54**.*

90. EP. Ind. XXV, No. 34.

91. A.R.R. 1920, p. 122.

92. *1) கீழ்வானம் வெள்ளென்றது. இலட்சக்கணக்கான மக்கள் குழந்தைகளும் பெரியோர்களுமாகத் திரள்திரளாகப் போட்டியிட்டுக்கொண்டு, "நான் முன்னே நான் முன்னே" என்று விரைந்து இடைவெளியின்றிக் கருடசேவைக்கு வருவதைக் கண்டு முறுவல் பூத்து விளங்குகிறான்*

பேரருளாளன். அவனைக்கண்டதுமே அனைவருக்கும் ஆகா! என்ன இன்பம்! சாமரங்கள் இருபுறமும் மெதுவாக அசைகின்றன. மணிமயமான வெண்கொற்றக் குடையின் குச்சங்கள் வைகறைத் தண்காற்றில் அலையெழுப்புகின்றன. கருடவாகனத்திலே எம்பெருமான் கோபுரத்தினுள்ளே மெல்ல மெல்ல வந்து தோன்றுகிறான்.

2) முத்துக்குடைகள் இரண்டும் சாமரங்கள் இரண்டும் கருடவாகனனைச் சிறிது மறைக்கின்றன. இப்பொழுது அடியார்கள் அபயமளிக்கும் அவனது தாமரைக் கைகளைத் தரிசிக்கிறார்கள். வைத்த கண்வாங்க இயலாதபடி எப்பொழுதுமே அழகிய அலங்காரரூபன் அவன். இத்தகைய வரதனை என்றும் வணங்கிக்கொண்டே இருக்கிறேன்.

3) தத்துவ நூல்களை ஆராய்ந்த சிலர், " பசுபதியே பரம்பொருள்" என்கிறார்கள். "பிரமனே உயர்ந்த தத்துவம்" என்றனர், சிலர். நியாய சாஸ்திரத்தில் தேர்ந்த மற்றவர்கள, திருமாலே பரத்துவம் என்று ஆதாரத்துடன் சொல்கிறார்கள். அவற்றின் முடிவுதான் என்ன ? என்று கலங்கிய நெஞ்சினர்க்கு, "இதோ இதுதான் பரம்பொருள்" என்று எம்பெருமானுடைய திருவடித்தாமரையைக் கையிலே தாங்கிக் காண்பிக்கிறான்போலும் கருடாழ்வான் ! ஏன் ஐயா, சாஸ்திரங்களை யெல்லாம் அறிந்தவர்களே கலங்கும் விஷயத்தில் ஒரு பறவை சொல்வது பிரமாணமாகுமோ ? என்ற கேள்வி எழும். எனவே வேதங்களுக்கு நிதியான பக்ஷிராஜன் நிருபிக்கிறான். என்கிறார் தொட்டாச்சாரியார். கருடன்வேதாத்மா வேதமே வடிவானவன். அவன் வாக்கே வேதவாக்கு.

4) பத்மநாபனுடைய பாத பதுமங்களைக் கையில் ஏந்திய பெரிய திருவடி, "வேதாந்தங்களைக் கொண்டு அறியக்கூடிய அடிக்கமலம் இது ; மற்ற எதனாலும்அறிய இயலாதது. பிரமனும் உருத்திரனும் இந்திரனும் மணிமுடி தாழ்த்தி வணங்கப்பெறும் கமலபாதம் இது. நீங்கள் அனைவரும் தொழுவதற்குரிய திருவடி இதுவே" என்று 'பிரத்தியட்சமாகக் காண்பிக்கிறான் போலும் !

5) பொழுது புலரும் நேரத்திலே மேலைக் கோபுரவாசலில் பறவையரசன் மேல் வீற்றிருக்கிறான் தேவாதிராஜன். சாமரங்கள் மொட்டுவடிவில் நடனமாடுகின்றன. ஒப்பற்ற குடைகள் இரண்டும் ஒளிவீசுகின்றன. இறைவனுடைய புறப்பாட்டை அறிவிக்கும் திருச்சின்னம் ஒலித்தவுடனே, மறையவர்கள் கூட்டம் கூட்டமாக வடமறையும் தென்மறையும் ஓத ஆனந்தமாகக் குழுமுகிறார்கள். காஞ்சியில் மூன்றாம் திருநாளன்று இப்படிக் கண்ணையும் கருத்தையும் கவரும் பேரருளாளனைப் பாக்கியசாலிகள் தொழுகிறார்கள்.

—மஞ்சரி மே, **1973** (வசந்தகாலத்தில் தேவசார்தூலனுடைய மகோற்சவம் நடக்கிறது).

93. S.I.T.I., No. 343.

94. அன்று தொண்டைநாட்டிலுள்ள பல திருத்தலங்களிலும் கருடசேவை நடக்கும்.

95. மேலது—45.

96. 439 of 1919.

97. செங்கற்பட்டு மாவட்டத்தில் இவ்வூர் உள்ளது.

98. Archaeolagocal Survey of India Annual Report 1094—1905, pp. 136-38.

99. R. Nagaswamy, "Marichi Samhita and Uttara Merur", "**Agama and Silpa**", First Edition, (Bombay, 1981), p. 42.

100. கள ஆய்வின் போது, வைகுண்ட ஏகாதசி நன்னாள் அன்று இத்திருத்தலத்தைச் சேவிக்கும் பேறு கிடைத்தது.

101. சி. வசந்தி, "வரலாற்றில் பொன்விளைந்த களத்தூர்", தினமணி, (சென்னை) மார்ச் 2, 1992.

102. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான், கலைமகள் (சென்னை) ஜனவரி, 1949. இதழில் எழுதிய கட்டுரையின் பகுதி, ஸ்ரீராமானுஜர், ஸ்ரீராமகிருஷ்ணமடம் வெளியிட்ட நூலில் அடிக்குறிப்பில் சுட்டப்பட்டுள்ளது. பக். 231 & 132.

103. கெங்கவரம் என்று இவ்வூர் இன்று மருவி வழங்குகிறது.

104. வைகானச-பாஞ்சராத்திர ஆகம வேறுபாடுகள் பற்றிப் பின்இணைப்புV-இல் காணலாம். விகனசர் பிரம்மாவின் அவதாரம் என்று வைகானச சாஸ்திரஸம்ஹிதைகளில் குறிப்பிடப்படுகின்றது. இவை 108 ஸம்ஹிதைகளாகும். நான்கு இலட்சம் கிரந்தங்கள் இவற்றில் உள்ளன. இவற்றிலுள்ள பொருள்கள்: சரியா, கிரியா, யோகம், ஞானம் என நான்கு வகையாக இருக்கும். இவர் அத்திரி, மரீசி, காசியபர், பிருகு ஆகிய முனிவர்களுக்கு உபதேசித்தார்.

—திருப்பதி. தாதாசாரியார், "வைகானஸஸூத்திரம்", Golden Jubilee Celebrations, Souvenir, T.T.D. Administration, 1933—1983, April 22-24, 1984.

105 & 106. பல்லவர் காலத்திலேயே வரலாற்றுப் புகழ்பெற்ற தெள்ளாறு ஆகும். நாவல் பாக்கத்தில் பல மகான்கள் வாழ்ந்துள்ளனர்.

107. 19-10-91 அன்று கள ஆய்வின்போது செய்யூரிலுள்ள முரளீதரபட்டர் அவர்கள் உணவளித்துப் பல விவரங்களைக் கூறினார்.

108. சு. ராஜசேகரன், "திருமயிலைத் திருத்தலம்", முதற்பதிப்பு, (சென்னை, 1989). ப. 258.

109. கள ஆய்வின் போது இத்திருத்தலத் தனி அலுவலர் ஆவன செய்து உதவினார்.

110. பல்லவர் காலத்திலேயே புகழ்பெற்ற ஊர். கூழமந்தலில் இறங்கிச் செல்ல வேண்டும் (3 கி. மி. தொலைவு ).

111. மா. இராசமாணிக்கம்பிள்ளை, " பல்லவர் வரலாறு", பக். 215-இல் உள்ள அடிக்குறிப்பு, Dr. C. Minakshi's Administration and social Life under the Pallavas, pp. 4, 161.

112. எஸ். ஆர். பாலசுப்பிரமனியம், "முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்", பக். 199—203.

113. இது அடியேன் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று ஆசிரியர் பணி செய்த ஊர்.

114. சியமங்கலத்திலிருந்து 1 கி. மீ. தொலைவு, தேசூலிருந்து 3. கி. மீ. தொலைவு.

115. த. உதயநாராயணன், "கொடியவரின் கூடாரமாகிய கோயில்கள்", வாசுகி சென்னை, செப்டம்பர் 18-24, 1992, ப. 22.

116. வெ. நாராயணன், "தமிழக அற்புத ஆலயங்கள்", முதல் பதிப்பு, (சென்னை 1983), பக். 222-227.

117. மு. அருணாசலம், "இலக்கிய வரலாறு", 15-ஆம் நூற்றாண்டு, முதற்பதிப்பு, (சென்னை). ப. 291.

118. ந. சுப்புரெட்டியார், "திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்", முதற்பதிப்பு, (சென்னை, 1975), ப. 215.

119. திருவேங்கடக் கலம்பகம், 24.

120. "பழுதிலா வொழுக வாற்றுப் பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேலும் எம்மடி யார்க ளாகில்
தொழுமின் நீர், கொடுமின் கொள்மின் !" என்று நின் னோடு மொக்க
வழிபட வருளி னாய்போன்ம் ! மதிள்திரு வரங்கத் தானே !

—திருமாலை-42.

121. கி. பி. 1359 சித்திரை 3, இரவு 7.00 மணிக்கு —இக்கல்வெட்டை மன்னன் எழுதுவித்தது போலன்றி, அருளாளரே ஆணையிட்டது போன்றுள்ளது.

"திருமுகப்படி ஸ்வஸ்தி கிரீஸஸ்ய தேவ தேவஸ்ய சாசனம் என்று தொடங்குகிறது."

சுருக்கம் : அருளாளப்பெருமான் ஸ்ரீதேவி பூதேவி நாச்சிமாரோடு எழுந்தருளி நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாட்டைக் கேட்டு மகிழ்ந்திருக்கும் சமயத்து, கோயில் அதிகாரிகள், மற்றும் பக்தர்களின் வேண்டுகோள்படி அருளாளப்பெருமான் ஆணையிட்டார்.

இதன்படி அறிஞரான வைஷ்ணவ தாசருக்குப் பிரம்மதந்திர ஸ்வதந்திரஜீயர்என்ற பட்டத்தைப் பெருமாள் கொடுத்தார். ? இராமாநுஜ தரிசனம் நடக்கைக்காகவும், பொஸ்தகங்களும் இதற்கு வேண்டிய உபகரணங்களும் பாதுகாக்க ஒரு மடமும் கொடுத்து அருளினான்."

இதில் குறிப்பிடப்படும் ஜீயர் சேகரித்த நூல்களை வைக்க அளிக்கப்பட்ட மடம் ஒரு நூலகமாகக் காஞ்சியில் திகழ்ந்தது.

—குடந்தை என். சேதுராமன், "பண்டைத் தமிழகத்தில் நூலகங்கள்", "தினமணி" (சென்னை) ஜூலை 21, 1989.

# இயல் — ஏழு

## தற்காலத்தில் வைணவம்

7.0. முன்னுரை

7.1. நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தைப் பதிப்பித்தோர்.

7.2. இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்.

7.3. தமிழாக்க நூல்கள்.

7.4. ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம் என்னும் திருவேங்கடத்தான் திருப்பள்ளியெழுச்சி.

7.5. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்.

7.5.1. அருளிச்செயல்களில் காஞ்சி அண்ணா சுவாமியின் அரிய பாடங்கள்.

7.5.2. முக்கூரில் தோன்றிய அகோபிலமடஜீயர், பிற ஜீயரின் அரும்பணிகள்.

7.6. வைணவம் வளர்க்கும் சபைகள்.

7.7. முடிவுரை.

## இயல் ஏழு

## தற்காலத்தில் வைணவம்

7.0. முன்னுரை : முதலாழ்வார்கள் மற்றும் திருமழிசை ஆழ்வார் காலத்தில் வைணவ சமய வளர்ச்சி, பக்தி இயக்கமாகத் தொண்டைநாட்டில் கால்கொண்டது. பின் நம்மாழ்வார் காலத்தில் பாண்டிய நாட்டில் இச்சமய வளர்ச்சி, மையம் கொண்டது. பின் ஆசாரியர்கள் காலத்தில் குறிப்பாக இராமானுஜர், தேசிகர் முதலியோர் காலத்தில் இங்கு இச்சமய வளர்ச்சி மீண்டும் உச்சக்கட்டத்தை அடைந்தது. கழிந்தகாலப் பெருமைகள் ஒருபுறம் இருக்க, நிகழ்காலத்தில் இத்தொண்டை நாட்டில் இச்சமய வளர்ச்சி எவ்வாறுள்ளது ? இதுபற்றித் 'தற்காலத்தில் வைணவம்' என்னும் இவ்வியலுள் ஆராயப்படுகின்றது.

நாலாயிர திவ்வியப்பிரபந்தப் பதிப்புகள்—ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்குக் கொணரும் பெரும் முயற்சியில் முதன் முதலில் ஈடுபட்டவர்கள் இங்குத் தோன்றியவர்களேயாவர். அவர்களைப்பற்றி முதலில் தொகுத்துக் காண்போம். அடுத்து இக்கால கட்டத்தில் சுமார் நூறு ஆண்டுகளில் தோன்றிய வைணவ சமய இலக்கியங்களைப் பற்றியும் நோக்குவோம். குறிப்பாச் சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பு.ரா. புருடோத்தமநாயுடுவின் தமிழாக்கப்பணியும் நோக்குதற் குரியது.

காஞ்சியில் வாழ்ந்து வைணவ சமய வளர்ச்சியில் தம்மை முழுமையாகப் பலவழிகளிலும் ஈடுபடுத்திக்கொண்டு அண்மையில் மறைந்த பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியாரின் பல்வேறு பணிகள் மதிப்பிடப்பட உள்ளன. திருவரங்கம் பெரியகோயில் இராஜகோபுரக் கைங்கரியம் செய்த அகோபிலமடம் 44—ஆம் பட்டத்து ஜீயர் முக்கூர் முனிவரைப் பற்றியும் சுட்டப்படும்.

வைணவ சமயப்பயிரை இன்றைய நவீன உலகிலும் தொடர்ந்து வளர்த்து வரும் பெரும்பணியில் இங்குள்ள பல சபைகள் ஈடுபட்டுள்ளன. அவற்றைப் பற்றிய செய்திகளும் இறுதியில் தொகுத்துச் சுட்டப்படும்.

7.1. நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தைப் பதிப்பித்தோர் : 'மயர்வற மதிநலம் அருளப்பெற்ற' ஆழ்வார்களின் பாசுரங்கள் வைணவ சமயத்தின் அடிப்படை நூலாக விளங்குவன. அத்துடன் ஆழ்வார்கள் அருளிய திவ்வியப்பிரபந்தம் சிறந்ததொரு இலக்கிய நூலாகவும் மதிக்கப்படுகின்றது.

"திவ்வியப் பிரபந்தத்தின் கவிதைச்சுவையும் அழகும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறத்தக்கன. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாக இது கொள்ளுதற்குரிய பெருந்தகுதி வாய்ந்தது. பக்திப்பாடல்கள் என்ற நூல்வகையில்

இதனைப் போன்ற பெருமையுடைய நூல்கள் உலகில் மிகமிகச் சிலவற்றைத்தான் கருதுதல் கூடும்”[1].

இப்படிப்பட்ட சிறப்புடைய திவ்வியப்பிரபந்தத்தை முதன்முதலில் அச்சுக்குக் கொணர்ந்தவர் திருப்புட்குழி கூர்மாசார்யர் என்பவராவர். ஏட்டுச்சுவடிகளிலிருந்து நாலாயிரத்தைப் பகுதிபகுதியாக 1856—ஆம் ஆண்டு முதல் 1859-ஆம் ஆண்டுவரை பதிப்பித்து முடித்த தனிச்சிறப்பு இவருக்குண்டு.[2] (பெரிய திருமொழியை இவர் பதிப்பிக்கவில்லை). இந்நன்னாட்டில், முடிச்சூர் என்னும் சிறிய ஊரில் பிறந்து, கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் வாழ்ந்த அப்பாவு முதலியார் என்பவரே, 1865-இல் திவ்வியப்பிரபந்தங்கள் அனைத்தையும் வைப்பு முறைப்படி அமைத்து ஒரே பதிப்பாகஅச்சிட்டவராவார். மேலும் தற்கால இராக தாளக் குறிப்புகளையும் இவரே அமைத்துத் தம்பதிப்பில் சேர்த்துள்ளார்.

| | |
|---|---|
| அடுத்து, திருவல்லிக்கேணி அரங்காச்சாரி ஐயங்கார் என்பவர் | 1873-ஆம் ஆண்டிலும், |
| இதே நகரைச்சார்ந்த கா. வெ. திருக்கச்சி நம்பிதாசர் என்பவர் | 1908-ஆம் ஆண்டிலும், |
| திருக்கழுக்குன்றத்தையடுத்த ஊரகம் சேட்லூர் கிருஷ்ணமாச்சாரி என்பவர் | 1917-ஆம் ஆண்டிலும், |
| சென்னை நகரில் வாழ்ந்த டி. சி. பார்த்தசாரதி அய்யங்கார் என்பவர் | 1939-ஆம் ஆண்டிலும், |
| மயிலை மாதவதாசன் என்பவர் செம்மையான முறையில் | 1943-ஆம் ஆண்டிலும், |

முழுமையாகப் பதித்து வெளியிட்டனர்.

திருவல்லிக்கேணியில் வசித்த ஆர். கேசவ அய்யங்கார் என்பவர் 1951-ஆம் ஆண்டில் முதலாயிரத்தை மட்டும் தனியே பதிப்பித்து வெளியிட்டார். மர்ரே. எஸ். ராஜம் என்பவர் வையாபுரிப்பிள்ளையைக் கொண்டு முதலாயிரத்தை 1955-இல் பதிப்பித்து வெளியிட்டார். பின்னர் ஏனைய பகுதிகளையும் சிறந்த அறிஞர்களைக் கொண்டு 1956-இல் பதிப்பித்து வெளியிட்டார்.

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் 1927-இல் பதிப்பித்தார். மேலும் நாலாயிரத்தின் மூலத்தைத் தெலுங்கு, இந்தி ஆகிய எழுத்துகளின் வரி வடிவில் பதிப்பித்த பெருமையும் இவருக்குண்டு. அத்துடன் அவைகளுக்குக் கீழே தெலுங்கிலும் இந்தியிலும் கவிதைவடிவில் நாலாயிரம் இவரால் மொழிமாற்றம் செய்யப்பட்டது.

விழுப்புரம் வட்டம் வி. பூதூரில் பிறந்த கி. வேங்கடசாமி ரெட்டியார் என்பவர் 1973-இல் நாலாயிரத்தையும் செம்மையாகப் பதிப்பித்தார். திருவேங்கடத்தான் திருமன்றப்பதிப்பாக வெளிவந்துள்ள இதில் நூல் முகம் சிறந்த ஆய்வுரையாக அமைந்துள்ளது. இரண்டாம் பதிப்பில் திருவாய்மொழி நூற்றந்தாதி, சடகோபரந்தாதி ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. 'திவ்வியப்பிரபந்தப் பாசுரங்கள் சிலவற்றிற்குப் பிறர் கொள்ளும் கருத்தும், அதற்கு மரபின்வழி விளக்கமும்' என்ற தலைப்பில் ஓர் ஆய்வு காணப்படுகின்றது. 'லிப்கோ' பதிப்பக உரிமையாளர் ஸ்ரீவத்ஸன் என்பவர் இருபகுதிகளாக 1984-இல் இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

திருக்குடந்தை தட்டை கிருஷ்ணமாசாரியார், காரப்பங்காடு கோபாலாசாரியார், திருச்சி-புத்தூர் கிருஷ்ணசாமி அய்யங்கார்-ஆகிய மூவரே தொண்டைநாட்டைச் சாராதவராவர். எஞ்சிய பன்னிருவரும் இத்தொண்டைநாட்டவரே என்று ஒப்பீட்டு முறையில் நோக்கிக் கூறுவது பொருத்தமாகும்.

7.2. **இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் :** முடிச்சூர் அப்பாவு முதலியார், 'கூரேசவிஜயம்', 'விஷ்ணு தத்துவ விளக்கம்', 'சத்சம்பிரதாய தீபிகை' முதலிய நூல்களை எழுதியுள்ளார். கா. வெ. திருக்கச்சி நம்பிதாசர் என்பவர் வைணவ சமய நூல்கள் பலவற்றைப் பதிப்பித்ததுடன் அவற்றை விற்பனைசெய்ய 'ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய புத்தகசாலை'யைத் திருவல்லிக்கேணியில் நிறுவினார். சேட்லூர் கிருஷ்ணமாச்சாரியாரும் வை.மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியாரும் கம்பராமாயணம், வில்லிபாரதம், அஷ்டப்பிரபந்தம் முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளனர். வி. பூதூர் வேங்கடசாமி ரெட்டியார் 'வேதாந்த தேசிகர் சதகம்' பாடியுள்ளார். இந்நூல் எழுசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தத்தால் அமைந்தது ; 100 பாடல்கள் உள்ளன. சி. நா. கிருட்டிணமூர்த்தி என்பவர் 'திருமலையாற்றுப்படை' என்னும் நூலை இயற்றியுள்ளார். திருநின்றவூர் திருமலை தத்தாங்கி தாதாசாரியார் தொண்டன் என்பவர் 'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி'யைப் பாடியுள்ளார். இது நூற்றுப் பத்துக்கட்டளைக் கலித்துறைகளால் அமைந்தது.

சென்னை டி. எஸ். இராச கோபாலன் என்பவர் செய்யுள் வடிவில் 'வைணவ ஆசாரியர்கள்' என்ற நூலை மூன்று பகுதிகளாக எழுதி வெளியிட்டுள்ளார். 'லிப்கோ' பதிப்பகத்தார் பல வைணவ சமய நூல்களை வெளியிட்டுவருகின்றனர். கோயில்களுக்குச் சடாரி செய்து கொடுக்கின்றனர்.

7.3. **தமிழாக்க நூல்கள் :** சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக விளங்கிய பு.ரா. புருஷோத்தமநாயுடு என்பவர் திருவாய்மொழி-முப்பத்தாறாயிரப்படி உரையை மணிப்பிரவாள நடையிலிருந்து இனிய தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவரே ஆசாரியஇருதயம், ஸ்ரீவசனபூஷணம் ஆகிய நூல்களையும் தமிழாக்கம் செய்து இச்சமய உலகுக்குப் பேருதவி செய்துள்ளார். இவ்வாறே பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்

பேராசிரியராகப் பணிபுரியும் தெ. ஞானசுந்தரம் என்பவர் பெரியதிருமொழி—முதல் இருநூறு பாசுரங்களை—பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தைத் தமிழாக்கம் செய்துள்ளார். இவர்களுடைய பணிகள் என்றும் போற்றப்படத்தக்கவையாம். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற உணர்வுள்ள இந்நாளில் சமயநூல்கள் தாய்மொழியில் இருப்பதுதான் முறையாகும். அவ்வகையில் இவர்களின் தொண்டுகள் காலங்கருதிச் செய்யப்பெற்றவையாகும்.

7.4. *ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம் என்னும் திருவேங்கடத்தான் திருப்பள்ளியெழுச்சி* : இந்நூல் பிரதிவாதி பயங்கரம் அண்ணா, மணவாள மாமுனிகளின் விருப்பப்படி திருமலைப் பெருமாள்மீது பாடியருளியது என்பதை முன்பே கண்டோம். இதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பவர் செய்யாறு வட்டம், முனுகப்பட்டு என்னும் ஊரைச் சேர்ந்த பேராசிரியர், ச. பார்த்தசாரதி என்பவராவர். இனிய ஓசையுடன் அழகிய தெளிந்த நடையில் இம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. சான்றாக முதல் பாடலைக் காண்போம்.

*கௌஃசல்யா ஃசுப்ர சா ராம*
*பூர்வா ஃசந்த்யா ப்ரவர்த்த தே !*
*உத்திஃஷ்ட நரசார் தூல*
*கர்த்தவ்யம் தைவ மாஃக்நிகம்*

*வந்துதித்தாய் ராமா! நீ*
*கௌசலைதன் திருமகனாய்*
*சிந்துமொளிச் சிறுகாலை*
*திசை எங்கும் புலர்கிறது !*
*மந்திரங்கள் வாய்மொழிந்து,*
*வந்தனைகள் புரிந்தருளச்*
*செந்திருக்கண் அருள்பொழிய*
*வேங்கடவா எழுந்தருள்வாய் !*

7.5. *பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்* :[3] கி. பி. 1881-இல் காஞ்சியில் இவர் பிறந்தார். இவர்களுடைய முன்னோர்கள் செய்யாறு வட்டம் சித்தாத்தூரை அடுத்த திருவடிராயபுரத்தில் வாழ்ந்தனர். பிரதிவாதிபயங்கரம் அண்ணாவின் மரபில் தோன்றியவர் ; தென்கலையினர் ; வடமொழி வேதங்களையும், நாலாயிர திவ்வியப்பிரபந்தங்களையும் தெளிவாகக் கற்றுணர்ந்தவர். பூர்வாசாரியர்களின் வியாக்கியானங்களைத் தங்குதடையின்றி விளக்கியுரைத்துக் 'காலட்சேபம்' செய்வதில் வல்லவர். 'ஸ்ரீராமானுஜன்' என்ற வைணவ மாத இதழையும் இவர் நடத்திவந்தார். இந்திய அரசின் உயர் விருதான 'பத்மவிபூஷண்' என்னும் பட்டத்தைப் பெற்றவர். 'கிரந்தமாலா ஆபீஸ்' என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றை நிறுவி வைணவ இலக்கியங்கள் பலவற்றைத் தமிழ், தெலுங்கு, இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் வெளியிட்டார். இவ்வகையில்

ஆழ்வார்களின் அருளிச்செயல்களைத் தமிழ் அறியாத ஆந்திராவிலும், வடநாட்டிலும் பரவச்செய்த பெருமை இவருக்குண்டு. இவரால் பதினாறு துறைகளில்[4] மொத்தம் 1276 நூல்கள் தோன்றியுள்ளன. பூர்வாசாரியர்களின் வியாக்கியான விளக்கங்களின் அடிப்படையில் நாலாயிரம் முழுவதையும் உரையோடு தனித்தனிப் பிரபந்தங்களாகப் பதிப்பித்த தனிப்பெருமையும் இவருக்கு உண்டு. 'உபயவேதாந்த மஹாவித்துவான்' என்று வைணவப் பெருமக்களால் அழைக்கப்பெற்றவர். 51 ஆண்டுகளில் (1931—1981) 53 முறை சென்னையில் திருப்பாவை உபந்நியாசம் செய்துள்ளார். காஞ்சியில் வேதாத்யயன பாடசாலையை நிறுவி நம்பிள்ளைக்குச் சந்நிதியும் அமைத்துள்ளார்.

7.5.1. **அருளிச்செயலில் காஞ்சி அண்ணா சுவாமியின் அரியபாடங்கள் :** இத்தலைப்பில் 'அண்ணா சுவாமி நூற்றாண்டு விழா' மலரில் கிருஷ்ணமாச்சார்யர் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களின் பாசுரங்கள் பலவற்றுக்குப் பலர் கொள்ளும் பாடங்களும், அவை சரியல்ல என்பதை விளக்கி அவ்வப்போது காஞ்சி அண்ணங்கராசாரியர் பல கட்டுரைகளில், இதழ்களில் எழுதிவந்தவற்றைத் தொகுத்து இவர் எழுதியுள்ளார். அவற்றுள் சில இங்கே காட்டப்படுகின்றன.

(1) பெரியாழ்வார் திருமொழி : 4 : 9 : 1, 2 :

திருமங்கை மலர்க் கண்ணும் . . .
மலர்க்கண் வைத்த . . .

இவ்விடங்களில் இவை உவமைத் தொகைகளல்ல : வினைத்தொகையாக விரிவுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, 'வினைத்தொகையில் வலி மிகாது' என்னும் விதிப்படி, 'மலர்கண்' என்றே சேவிக்க வேண்டும்.

(2) திருமாலை — 44 :

ஆனைக் கன்றருளை யீந்த கண்ணறா . . .

கண்ணறாய் . . . என்பதே சரியான பாடம். கண்ணறா—என்ற சொல்லுக்குத் 'தயையில்லாதவன்' என்பது பொருளாகும்.

(3) பெரியதிருமொழி : 2 : 6 : 2 :

நீர்வண்ணன் மார்வத்தில் இரு கையை முன் நிறைந்தவனூர் . . .

'மார்வகத்தில்'—என்ற பாடமே சிறந்தது. மார்வும் அகமும்—மார்வகம் என உம்மைத் தொகையாகக் கொள்க.

அகம்—அருகு

'கடல் போலே இருக்கிற குளிர்ந்த வடிவில் இடவருகிலும், திருமார்விலும் முறையே பார்மங்கையும், மலர்க்கிழத்தியும் எழுந்தருளியிருக்கையை அநுசந்தித்து என்பது விரிவுரை.' திருமகள் மார்பிலும், பூதேவி அகத்திலும் (இடவருகிலும்) உள்ளமை கூறப்படுதலால் 'நீர்வண்ணன் மார்வகத்தில்' என்பதே சிறந்த பாடம்.

(4) பெரிய திருமொழி : 5 : 8 : 9 :

. . . . தொண்டை மன்னவன் திண்டிற் லொருவற்கு
உளங்கொளன்பினோடு இன்னருள் சுரந்தங்கு
ஓடுநாழிகை ஏழுடனிருப்ப . . . .

ஓடுநாழிகை : 'வீணாய்க் கழிகிற காலத்தில்' என்பது விரிவுரை. 'பயனில்லாமல் கழிகிற காலத்திலே'

'அத்யாபகர்கள் சேவிக்கும்போது 'அங்கொடு நாழிகை' எனச் சேவிக்கின்றனர் ; இங்கு 'ஒடு' —குறுக்கல் விகாரம் என்பர். ஆயின் ஒரசைச்சீராகும். இது தவறு. ஒவ்வோரடியும் எட்டு ஈரசைச்சீர்களைப் பெற்றது என்னுமிடம் காணலாம்.

(5) மேலது— 8 : 2 : 5

'பெண்மைஎன் தன்னுடையுண்மை உரைக்கின்றாள்'

"பெற்ற தாயான எனக்கும் வாய் விடாநின்றாள் ; இவளுக்கு என்னபெண்மை !' என்கின்றாள். இவ்விடத்து 'பெண்மை என்' என்ற பாடம் கொள்ளத்தக்கது. தன் தோழிக்கும் மறைக்கத்தக்க தன்னுடைய உண்மைநிலையைத் தாயாகிய என்னிடம் சொல்கிறாளே, இது என்ன பெண்மை!' என்பது இதன் கருத்தாகும்."

(6) முதல் திருவந்தாதி — 86 :

'குன்றெடுத்துப் பாயும் பனி மறைத்த பண்பாளா'

'உடம்பிலே விழப்புக்க மழையை, மலையையெடுத்துப் பரிஹரித்த நீர்மை'—என்பது பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானமாகும். பரிஹரித்தல்—தடுத்தல் ; அது மறைத்தலன்று ; மறுத்தலேயாகும்.

(7) திருவாசிரியம் — 3-ஆம் அடி :

'பலசுடர் புனைந்த பவளச் செவ்வாய்'

'பல நட்சத்திரங்களையும் பூண்டு'—என்ற விரிவுரைப்படி, 'பூண்டு'—வினையெச்சமாக விவரிக்கவேண்டும். மூலத்திலும் 'புனைந்து' என வினையெச்சம் இருக்கவேண்டும்.

(8) **திருவாய்மொழி — 1 : 4 : 7**

'என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக் கென்றொரு வாய்ச்சொல்' ஒருவாய்—ஒரு வார்த்தை ; சொல் சொல்லு என்றாகி 'ஒருவார்த்தை சொல்லு' என்றபடி, என்பது ஈடு விரிவுரை. எனவே வலிமிகாமல் ஒரு வாய்சொல்' என்றே அநுசந்திக்கவேண்டும் என்பது புலனாகும். வாய்-வாயால் சொல்லும் சொல்லுக்கு ஆகுபெயர். சொல்-என்பது வினைமுற்று. 'வார்த்தையைச் சொல்லு' என்ற பொருளில் நடுவில் சகரம் மிகாமல் 'வாய்சொல்' என்று இயல்பாக நிற்கும்.

'நன்னீர்மை யினியவர்கண் தங்காதென் றொரு வாய்ச்சொல்' (திருவாய்மொழி 1 : 4 : 4) என்ற இடத்தில் வலிமிகும் பாடம் ஏற்கத்தக்கது. வாயால் சொல்லும் சொல் வாய்ச்சொல் ; அது நல்குதிரோ என்பதில் அந்வயிக்கப்படுகிறது. இவ்விடத்தில் 'வாய்ச்சொல்' என்பதை 'உக்தி' என்று விவரித்துள்ளமை கவனிக்கத்தக்கது. ஆக 1 : 4 : 4—இல் வாய்ச்சொல் எனவும், 1 : 4 : 7—இல் வாய்சொல் என்றும் சேவிப்பது ஈட்டுரைக்குப் பொருந்தும்.

(9) **உபதேசரத்தினமாலை— 7 :**

. . . 'பெற்றிமையோர் என்று முதலாழ்வார்களென்னும் பேரிவர்க்கு' இவ்வடியில் 'என்னும்'-தேமாமுன், பேர்-நேரசை வரின் வெண்டளை பிறழும். எனவே, 'பெயரிவர்க்கு' என்று கொண்டால், தேமாமுன்நிரையாகிக் குற்றமின்றாம்.

(10) **மேலது — 34 :**

'ஏழ்பாரும் உய்யவவர்கள் செய்த வியாக்கியை களுள்ள தெல்லாம்' உய்யவவர்கள்—கூவிளந்தண்பூ. நாலசைச்சீர் வெண்பாவில் வராது. எனவே, 'கள்'-நீக்கி, உய்யவவர்-செய்த-எனக்கொண்டால் கூவிளங்காய் முன் நேரசை வந்தது ; எனவே தளை பிறழாது.

இங்ஙனம் காஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியரின் பணிகள் இச்சமய வளர்ச்சிக்குப் பலவகையிலும் உதவியுள்ளன. இக்காலத்திலும் காஞ்சிபுரம் வைணவ சமய வளர்ச்சியில் ஓங்கி நிற்பதற்கு இவரே காரணராவார்.

7.5.2. **முக்கூரில் தோன்றிய அகோபிலமடஜீயர், பிற ஜீயரின் அரும்பணிகள் :** ஆதிவண்சடகோபர் என்பவர் அகோபிலமடத்தை நிறுவியது பற்றி ஏற்கெனவே கண்டோம். இதுவரை நாற்பத்து நான்கு மடாதிபதிகள் பட்டம் ஏற்று இம்மடத்தை நிருவகித்து வந்துள்ளனர். நாற்பத்தைந்தாம் பட்டம் வகிப்பவர் தற்சமயம் திருவரங்கத்தில் உள்ளார். இவர்களில் தொண்டை நாட்டைச் சார்ந்தோர் பதினெட்டு பெரியார்கள் மடத்தின் தலைமைப் பீடத்தை வகித்தவராவர்.[5] 45-ஆம் பட்டத்திலுள்ளவரும் இந்நன்னாட்டினரே.

செய்யாறு வட்டம் முக்கூரில் 1895-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிறந்தவர் 44-ஆம் பட்டம் வகித்த பெரியார். இவர் 'ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்திர மகாதேசிகன்' என்னும் திருப்பெயரினர். இவருக்கு முன் 42-ஆம் பட்டத்தில் இருந்த இஞ்சிமேட்டு அழகியசிங்கர் காலத்தில் இம்மடத்து வழியாக 'ஸ்ரீநரசிம்மப்பிரியா' என்ற மாத இதழ் தொடங்கிவைக்கப்பட்டது. வித்துவான்களைக் கூட்டி ஆண்டுதோறும் 'சதஸ்' நடத்தப்பட்டது. மதுராந்தகத்தில் வேதபாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. வடமொழிக் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. 44-ஆம் பட்டம் வகித்த சுவாமிகள் வடநாடுவரை சென்று காலட்சேபங்கள் செய்து வைணவ சமயத்தைப் பரப்பினர். இவரியற்றிய நூல்கள் பின்வருமாறு :

1. தயாஸாகர சதகம் — என்ற மாலோல ஸ்தோத்திரம்.
2. சாரீரகாதி கரண க்ரம போதினி.
3. அதிகரண ஸங்க்யா விஷய போதினி.
4. பிரம்மசூத்ரார்த்தபத்யமாலிகா.
5. விசிஸ்டாத்வைத சித்தாந்தத்வ சங்கிரகம்.

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க, இவருடைய திருப்பணிகளிலெல்லாம் முடிமணியாய்த் திகழ்வது இவர் முன்னின்று பெரும்பொருள் திரட்டித் திருவரங்கத் திருக்கோயிலின் தெற்கு இராயகோபுர-இராஜகோபுரம் கட்டியதாகும். ஆசியாவிலேயே பெரிய கோபுரமாக, 236 அடி உயரமும், 13 நிலைகளும் கொண்டதாக இது அமைந்துள்ளது. 25-03-1987 அன்று இதன் குடமுழுக்கு விழா நடைபெற்றது. தம்முடைய தளர்ந்த முதிர்ந்த வயதிலும் சுவாமிகள் இப்பெரும்பணியை நிறைவேற்றினார். இவர்தம் 97-ஆம் வயதில் இயற்கையெய்தினார்.[6] (16-08-1992).

45-ஆம் பட்டத்தில் தற்சமயம் எழுந்தருளியுள்ளவர் வந்தவாசி வட்டம் கீழ்வில்லிவனத்தில் தோன்றியவர். இங்ஙனம் இத்தொண்டை நன்னாட்டில் தோன்றிய பெரியார்கள் அகோபிலமடத்துத் தலைமைப் பொறுப்பேற்று அரும் பணியாற்றியுள்ளனர்.

7.6. **வைணவம் வளர்க்கும் சபைகள் :** ஒரு சமயம் உயிரோட்டமுள்ளதாகத் தொடர்ந்து விளங்கவேண்டுமாயின், அதைப் பின்பற்றுவோர், பல்வேறுவகையில் கைங்கரியங்களைச் செய்யவேண்டும். ஊர்கள்தோறும் கூடி சனிக்கிழமைகள் (அ) திங்கட்கிழமைகளில் திவ்வியப்பிரபந்தப்பஜனை, தேவார பஜனை சேவித்துக் கொண்டு ஊர்வலமாக வருதல் ; அவ்வச் சமய விழாக்களைப் பக்தியுணர்வுடன் கொண்டாடுதல் ; வட்ட, மாவட்ட அளவில் சபைகளை ஏற்படுத்திவாரந்தோறும், மாதந்தோறும், ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாள்களில் சிறப்புக் கூட்டங்களை நடத்தி, அவற்றுள் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் ; அடியார்களுக்கு அன்னமிடல் ; பல அடியார்கள் கூடித் திருத்தல யாத்திரையாகச் சென்றுவருதல்—என்று பலவகையில் இத்திருப்பணி அமையவேண்டும். இவ்வகையில் வைணவ சபைகள் பல இத்தொண்டை நன்னாட்டில் தோன்றி இச்சமயத்தை உயிர்ப்புள்ள வகையில் வளர்த்து வருகின்றன. இவற்றைப்பற்றி இங்குத் தொகுத்து நோக்குதல் நலம். காஞ்சிபுரம் யாதவச் சத்திர பரிபாலன சபையின் சார்பாக காஞ்சி வைணவ சபை 1983-ஆம் ஆண்டு முதல் நடந்துவருகின்றது.

(2) **ஸ்ரீமத்ராமாநுஜ நாவலர் சுவாமிகள் சபை—பண்ணுருட்டி :**

இச்சபையினர் ஆண்டுதோறும் நாவலர் சுவாமிகள் தோன்றியருளிய பங்குனி மாதக் கேட்டை நன்னாளில் வைணவ சமய மாநாட்டை நடத்தி வருகின்றனர். இச்சபை 1925-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று அறுபத்துஏழு ஆண்டுகளாக நடந்துவருகின்றது. இச்சபையின் சார்பாக நாவலர் தோன்றிய ஏப்பாக்கத்தில் அவருக்கு ஒரு சந்நிதி அமைத்துள்ளனர் ; பண்ணுருட்டியிலுள்ள பெருமாள் கோயிலைப் ' புதுப்பித்துக் குடமுழுக்கு விழா நடத்தியுள்ளனர். ஆண்டுதோறும் நடக்கும் வைணவ மாநாட்டில் பல அறிஞர்களை வரவழைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சமய விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்கின்றனர். பாகவதர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்துதருகின்றனர். வைணவ சமய நூல்களை வெளியிடும் ஆசிரியர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பளிக்கின்றனர். பண்ணுருட்டியைஅடுத்த புதுப்பேட்டை, பில்லாலி ஆகிய இடங்களிலும் ஆண்டுதோறும் இவ்வகையான மாநாடுகள் நடக்கின்றன. கடலூரை அடுத்த சம்பாரெட்டிபாளையத்திலும் மாநாடு நடக்கின்றது. மேலும் ஆங்காங்குள்ள பாகவதர்கள் மாதம் ஓர் ஊராகச் சென்று இரண்டு மூன்று நாள்களில் நாலாயிர திவ்வியப்பிரபந்தப் பாசுரங்கள் முழுவதையும் சேவித்து நிறைவு செய்துவருகின்றனர்.

(3) **ஸ்ரீமத்ராமாநுஜ நாவலர் சுவாமிகள் மன்றம், புதுவை :**

கடந்த பதினான்கு ஆண்டுகளாக இச்சபை இயங்கிவருகின்றது ; இரு நாள்கள் நடக்கும் விழாவில் பல அறிஞர்கள் கலந்துகொள்கின்றனர். இடைவேளையில் பஜனைக்குழுவினர் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைப் பண்ணுடன் பாடுகின்றனர். வைணவ சமயப் பாசுரவிளக்கமாகச் சிறுவர்களின்

கோலாட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன. வைணவம் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள பெரியார்களை ஆண்டுதோறும் சிறப்பிக்கின்றனர்.

(4) **ஸ்ரீவைணவ மகாசங்கம்—சென்னை :**

இச்சங்கத்தின் சார்பில் கடந்த 66 ஆண்டுகளாக வைணவமாநாடு திசம்பர் திங்களில் ஆறுநாள்கள் நடக்கின்றது. முதல் நான்கு நாள்கள் பொதுவாகவும், இறுதி இரண்டு நாள்கள் மாதர் மாநாடாகவும் நடப்பது குறிப்பிடத்தக்கது. கோவிந்தப்ப நாயகர் வீதியிலுள்ள உப்புட்டூர் ஸ்ரீஆழ்வார் செட்டியார் இராமாநுஜ கூடத்தில் நடக்கும் இம்மாநாட்டில் நூல்வெளியீடுகள் நடக்கின்றன. வைணவசமயப் பயிரை வளர்க்கும் வகையில் பலவகைத் தொண்டுகள் செய்துவரும் பெரியார்களுக்கு ஆண்டுதோறும், 'ஸ்ரீவைணவச்செல்வர்' என்னும் சிறப்பு விருது வழங்கப்படுகிறது.

(5) **ஸ்ரீமந்நாதமுனி சுவாமிகள் ஸ்ரீவைணவ சபை—வந்தவாசி :**

இச்சபை கடந்த ஏழாண்டுகளாக நடந்துவருகிறது ; மற்ற இடங்களில் இல்லாத ஒரு சிறப்பு இச்சபைக்குண்டு. அதாவது வாரந்தோறும் ஞாயிறன்று சபை நடக்கிறது. அரிய சொற்பொழிவுகள் நடக்கின்றன. தொடர் சொற்பொழிவுகளும் நடக்கின்றன. 'திருவாய்மொழி ஈடு' தொடர் விரிவுரையாற்றும் முதுபெரும்புலவர் திரு. இராமாநுஜம் என்பவரின் தொண்டு போற்றத்தக்கது. ஆண்டுதோறும் நாதமுனிகள் அவதார நன்னாள் அன்று மாநாடு நடக்கின்றது.

(6) **ஸ்ரீகுலசேகராழ்வார் சபை—தென்னாறு :**

இங்கு வாரந்தோறும் சனியன்று சபை நடக்கின்றது. பாகவதர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறுகின்றன. ஆண்டுதோறும் மாநாடும் நடக்கின்றது.

இவ்வாறே சோளிங்கபுரம், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை, பட்டாபிராம்நகர், திருவல்லிக்கேணி முதலிய பல நகரங்களில் பல சபைகள் இயங்கிப் பலவகையிலும் பெருந்தொண்டாற்றி வருகின்றன. அவ்வாறே பல ஊர்களில் பஜனைக் குழுவினர் சனிக்கிழமைகளில் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைப் பாடி ஊர்வலமாக வருகின்றனர். இவ்விடத்து,

"ஏறடர்த்ததும் ஏனமாய்நிலம் கீண்டதும் முன் இராமனாய்
மாறடர்த்ததும் மண்ணளந்ததும் சொல்லிப்பாடி வண்பொன்னிப்பே
ராறுபோல்வரும் கண்ணநீர் கொண்டரங்கன்கோயில் திருமுற்றம்
சேறுசெய் தொண்டர் சேவடிச் செழுஞ் சேறென்சென்னிக் கணிவனே"

என்று அடியார்களின்—தொண்டர்களின் பெருமையைக் கூறும் குலசேகராழ்வாரின் திருப்பாசுரம் நினைக்கத்தக்கது.

இப்பாகவதர்கள் பஜனைக்குழுக்களாக திருமலை-பிரம்மோற்சவம், காஞ்சிபுரம்-கருடசேவை, ஸ்ரீபெரும்புதூர்-இராமானுஜர் சாற்றுமுறை உற்சவம் போன்று பலஇடங்களில் பத்துநாள் நடைபெறும் விழாக்களில் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைப் பக்க வாத்தியங்களுடன் பண்ணுடன் பாடி திருவீதி வலம் வருவர். இவர்களுக்கு உண்டு, உறை வசதிகளைப் பல சபையினர் நன்கொடைகள் திரட்டி, பக்திபூர்வமாகச் செய்துவருகின்றனர். இவர்களின் பயன்கருதாத் தொண்டுகளைப் போற்றவேண்டும். இப்படிப்பட்ட பாகவதர்களின் கைங்கரியங்களால்தான் இச்சமயம் இன்றும் உயிர்ப்புடன் திகழ்கின்றது என்பது மிகையன்று. ஒப்புநோக்கு என்னும் அளவில் பார்க்கும்போது பிற சமயத்தினர் இந்த அளவு தொண்டு செய்கிறார்களா என்ற கேள்விக்கு, இல்லை என்பதே பதிலாகும். குறிப்பாக ஆர்க்காடு சபையின் சார்பாகக் கடந்த 25 ஆண்டுகளாகத் திருமலை-திருப்பதி படிவிழா உற்சவம் சித்திரை மாத முதலில் நடத்தப்பட்டுவருவது பற்றி இங்குக் கூறுவது பொருத்தமாகும். பல பஜனைக் குழுக்கள் இதில் பங்கு பெறுகின்றன.

7.7. முடிவுரை : இவ்வியலில் திவ்வியப்பிரபந்தப் பதிப்புப் பணி பற்றிச் சுருக்கமாக அறியப்பட்டது. இக்காலகட்டத்தில் (நூறு ஆண்டுகளுக்குள்) தோன்றிய இலக்கியங்களையும் தமிழாக்க உரைகளையும் பற்றி ஆராயப்பட்டது. அடுத்து பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியாரின் பணிகள் தொகுத்து மதிப்பிடப்பட்டன. முக்கூரில் தோன்றிய அகோபிலமடஜீயரின் பெரியகோயில் இராயகோபுரத்திருப்பணியும் அறியப்பட்டது. இறுதியாக வைணவம் வளர்க்கும் சபைகள், கைங்கரியம் செய்யும் சபைகள், பஜனைக்குழுக்கள் ஆகியவை இக்காலத்தில்எவ்வாறு தொடர்ந்து இச்சமயத்திற்குத் தொண்டாற்றி, உயிர்ப்புடன் இச்சமயத்தை ஆக்கிவருகின்றன என்பதுபற்றியும் சுட்டப்பட்டது. இனி அடுத்த இயலில், கல்வெட்டுகளால் அறியப்படும் தொண்டைநாட்டுத் திருத்தலங்களைப் பற்றிய செய்திகள் ஆராயப்படும்.

## அடிக்குறிப்புகள்

1. வையாபுரிப்பிள்ளை, (பதி), 'முதலாயிரம்', திவ்வியப்பிரபந்தம் (1955), ப. 3.

2. ந. செல்லக்கிருஷ்ணன், நாலாயிர திவ்வியப்பிரபந்தப் பதிப்புகள்', புதுவைப் பல்கலைக்கழக எம்.பில் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடு, (காரைக்கால், 1991), ப. 40.

3. இவர் கூரத்தாழ்வானின் அமிசர் என்பர்.

4. பதினாறு துறைகளில் வெளியான சில முக்கிய நூல்கள் பின்வருமாறு :

   (1) திவ்வியப்பிரபந்த உரைகள், 6 பதிப்பு.

   (2) ஆசாரியர்களின் தமிழ்ப் பிரபந்த உரைகள் : உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்பிரபந்தம் இவற்றுக்கு உரைகள்.

   (3) பூர்வாசார்ய ஸ்தோத்திர உரைகள் : பஞ்சஸ்தவம், ஸ்ரீரங்கராஜஸ்தவம்-தமிழ் உரைகள்.

   (4) ஆழ்வாராசார்ய பிரபாவநூல்கள் ' : ஆழ்வார் ஆசாரியர்களின் வைபவங்களை வெளியிட்டிருக்கிறார். ஆழ்வார்கள் கால நிர்ணயம்.

   (5) இதிகாச புராண சரித்திர நூல்கள் : திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் கூறப்படும் இதிகாசங்களையெல்லாம் திரட்டி, 'திவ்வியப்பிரபந்த பகவத்கதாம்ருதம்' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். வால்மீகி இராமாயணம் முழுவதையும் உரைநடையில் சுருக்கமாக எழுதி வெளியிட்டார்.

   (6) இரகஸ்யார்த்த விளக்கநூல்கள் : முமுட்சுப்படி, தத்துவத்திரயம், ஸ்ரீவசனபூஷணம், ஆசாரிய இருதயம்—முதலிய நூல்களுக்கு விரிவான விளக்கநூல்கள் எழுதியுள்ளார்.

   (7) வேதாந்தப் பொருள்விளக்க நூல்கள் : தான் எழுதியவற்றுள் சிறந்த நூல் என்று அவரே குறிப்பிடுவது, 'ஸ்ரீபாஷ்யஸாராம்ருதம்' ஆகும். ஸ்ரீமத்பகவத் கீதாசாரம், ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமஉரை, திவ்வியப்பிரபந்தங்களின் பெருமையை விளக்க எழுந்தது, 'த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்' என்னும் நூலாகும்.

(8) வேதலக்ஷண விசாரநூல்கள் : 'வேதாத்யயன ஸர்வ ஸ்வம்' என்னும் நூல் வேதலக்ஷண நூல்களை ஆய்ந்து எழுதப்பெற்றது.

(9) சத்சம்பிரதாய விளக்கநூல்கள் : தென்கலை சம்பிரதாயத்தின் உண்மைப் பொருள்களை விரிவாக விளக்க எழுதப்பெற்ற நூல்கள் பல. குறிப்பிடத்தக்கது 'ஸத்ஸம்பிரதாயார்த்த ஸாரநிதி' என்பது.

(10) லோகாபிராம நல்வார்த்தை நூல்கள் : நல்வார்த்தை நானூறு.

(11) உபந்யாஸக செளபாக்ய நூல்கள் : உபந்யாஸ சதத்வயம்-இருநூறு உபந்நியாசங்கள் கொண்ட நூல்.

(12) வடமொழிநூல்திரள் : திவ்வியப்பிரபந்தத்திற்குச் சமஸ்கிருதத்தில்வியாக்கியானம். மணவாள மாமுனிகள் விஷயமாக அறுநூறு சுலோகங்கள் ; ஸ்ரீசைலேச பாதுகா ஸஹஸ்ரம் முதலியன சிறப்பானவை.

(13) இந்திமொழி நூல்கள் : திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்கள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

(14) திவ்வியப்பிரபந்த மூலத்தைத் தெலுங்கு லிபியில் பதிப்பித்தவர் ; விரிவுரைகள் அனைத்தும் தெலுங்கில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

(15) ஈடுவிரிவுரைகளைப் பதிப்பித்துள்ளார். ஸ்ரீவிஷ்ணுபுராணம், ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமம் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். தேசிகரின் நூல்கள் அனைத்தையும் பரிசோதித்து பத்து மாதங்களில் ஆறு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

(16) வாத விவாத நூல்கள் : பிள்ளை உலகாசாரியரும் மணவாள மாமுனிகளும், தேசிகரும் ஒரே கோட்பாடுடையவர்கள் என்பது இவரது கருத்தாகும்.

மாதப் பத்திரிகைகள் : மஞ்சுபாஷிணி, வனமாலிகை, பிரம்மவித்யா.

| | | |
|---|---|---|
| ஸ்ரீராமாநுஜன் | — | 1948 முதல் 400 இதழ்கள் வெளிவந்துள்ளன. |
| சமஸ்கிருதத்தில் | — | வைதிக மநோஹரா. |
| தெலுங்கில் | — | ஸ்ரீராமாநுஜ பத்திரிகா. |
| இந்தியில் | — | ஸ்ரீவைஷ்ணவசுதா. |

இவர் 93 ஆண்டுகள் வாழ்ந்து 21-06-1983 அன்று இயற்கையெய்தினார்.

அண்ணங்கராசாரிய சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு, நூற்றாண்டு நினைவுமலர்.

வேங்கடகிருஷ்ணன் (பதிப்). கீதாசார்யன் வெளியீடு, முதல்பதிப்பு (சென்னை, 1992).

5. 3-ஆம் பட்டம் வகித்தவர் — மலையாங்குளத்தூரினர்.
5-ஆம் பட்டம், 37-ஆம் பட்டம் — ஸ்ரீபெரும்புதூரை அடுத்த பிள்ளைப்பாக்கம் என்னும் ஊரினர்.
6-ஆம் பட்டம் — திருவள்ளூரையடுத்த கரளப்பாக்கம் என்னும் ஊரினர்.
7-ஆம் பட்டம் — வந்தவாசி வட்டம் இளங்காடு என்னும் ஊரினர்.

11, 12, 13, 18-ஆம் பட்டம் + திருவள்ளூரைச் சார்ந்தோர்.
15-ஆம் பட்டம் — ஆற்காட்டையடுத்த எசனூர் என்னும் ஊரினர்.
16-ஆம் பட்டம் — வந்தவாசி வட்டம் சோகத்தூர் என்னும் ஊரினர்.
29-ஆம் பட்டம் — இராணிப்பேட்டையையடுத்த லாலாபேட்டை என்னும் ஊரினர்.
34-ஆம் பட்டம் — திருவள்ளூரையடுத்த அத்திப்பட்டு என்னும் ஊரினர்.
35-ஆம் பட்டம் — பொன்விளைந்த களத்தூரினர்.
32, 42-ஆம் பட்டம் — வந்தவாசி வட்டம் இஞ்சிமேடு என்னும் ஊரினர்.
43-ஆம் பட்டம் — ஆவடி அருகிலுள்ள பருத்திப்பட்டு என்னும் ஊரினர்.
44-ஆம் பட்டம் — செய்யாறு வட்டம் முக்கூர் என்னும் ஊரினர்.
45-ஆம் பட்டம் — வந்தவாசி வட்டம் கீழ்வில்லிவனம் என்னும் ஊரினர்.

6. அடியேனுடைய ஆசாரியர் இவரே ஆவார்.

7. பெரு. திரு. 2 : 3.

## இயல் - எட்டு

## கல்வெட்டில் தொண்டை நாட்டுத் திருப்பதிகள்

8.0 முன்னுரை

8.1.1 அரசர்கள் கட்டிய ஆலயங்கள் ; வழங்கிய கொடைகள்

8.1.2 திருச்சானூரில் சோழர் கல்வெட்டுகள்

8.2 விஜய நகர ஆட்சியில் திருப்பதி

8.2.1 ஆதிவண் சடகோபர் பற்றிய குறிப்புகள்

8.2.2 கிருஷ்ணதேவராயர் காலத்துச் சாசனங்களிலிருந்து நாம் அறியும் முக்கிய செய்திகள்

8.2.3 கிருஷ்ணதேவராயர் வெளியிட்ட தங்கக்காசு

8.2.4 சமுதாயத்திற்கு ஏற்பட்ட நன்மைகள்

8.2.5 காஞ்சி அருள்மிகு வரதர் கோயில் சாசனங்களால் வெளியாகும் சில முக்கிய செய்திகள்

8.2.6 அருள்மிகு வரதராஜர் காஞ்சியிலிருந்து வெளியேற நேர்ந்த நிகழ்ச்சி கி.பி. 1688

8.2.7 காஞ்சியில் உள்ள ஏனைய திருக்கோயில்களைப் பற்றிய சிலசெய்திகள்

8.2.8 திருப்புட்குழி கல்வெட்டு குறிப்பிடும் ஒரு செய்தி

8.2.9 திருவல்லிக்கேணிக் கல்வெட்டு

8.2.10 திருக்கடன் மல்லைக் கல்வெட்டுகள் சில

8.2.11 கல்வெட்டுகளால் அறியக்கூடிய நிலையிலுள்ள பழைய பழுதடைந்த சில திருக்கோயில்கள்

8.2.12 திருமால் கோயில்களில் திவ்வியப்பிரபந்தம் சேவிக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றமை

8.2.13 நிறைவுரை

## இயல் - எட்டு

## கல்வெட்டில் தொண்டை நாட்டித் திருப்பதிகள்

8.0 *முன்னுரை :* தமிழக வரலாற்றை அறிய கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், அயல் நாட்டார் குறிப்புகள் ஆகியவை மூலங்களாக அமைகின்றன. தொண்டை நாட்டில் உள்ள திருமால் கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகளில் ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்றவை இருபத்திரண்டு ஆகும். இவை தவிர ஆசாரியர்கள் உகந்த திருத்தலங்கள் பல உள்ளன. அன்றியும், "குடந்து விளக்காக"த் தன் பழம்பெருமையை ஓரளவு நிலைநாட்டிக்கொண்டு இருக்கும் திருத்தலங்கள் மிகப்பலவாகும். இவற்றில் உள்ள பல கல்வெட்டுகள் அக்கால அரசியல், சமுதாயம், அறக்கொடைகள், ஆலய வரலாறுகள் ஆகியவற்றை அறியப் பெரிதும் துணைசெய்கின்றன. அவற்றைப்பற்றி இக்கட்டுரையில் தொகுத்து ஆராயப்படும்.

8.1.1 *அரசர்கள் கட்டிய ஆலயங்கள் ; வழங்கிய கொடைகள் :* தொண்டை மண்டலம் இருபத்து நான்கு கோட்டங்களாப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றுள் ஒன்றான திருவேங்கடக்கோட்டம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சித்தூர், சந்திரகிரி, திருச்சானூர், காளஉறஸ்தி என்பவை அவை. திருச்சானூர் பிரிவில் உள்ள திருமலை ஆலயத்தைத் தொண்டைமான் என்னும் சிற்றரசன் கிறிஸ்து சகாப்தத் தொடக்கத்தில் கட்டி இருக்கவேண்டும். இவன் காலத்திலிருந்துதான் கல்வெட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன.[1] இவன் மரபில் பின்வந்த அரசனின்மருமகள் சாருதேவி இவ்வாலயத்திற்குச் சில தானங்களைச் செய்தாள் என்று கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

8.1.2 *திருச்சானூரில் சோழர் கல்வெட்டுகள் :* திருச்சானூர் கோயிலில் முதற்பராந்தகனுடைய கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. முதல் கல்வெட்டு அவனது இருபத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில் - கி.பி. 936-இல் வெட்டப்பட்டது. அதில் சேரநாட்டில் கொடுங்காளூரைச் சேர்ந்த ஓர் அதிகாரி திருச்சானூர் சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி திருக்கோயிலில் ஒரு நந்தா விளக்கு வைக்க 40 கழஞ்சு பொன் கொடுத்து ஏற்பாடு செய்தது பற்றிய செய்தி பொறிக்கப் பட்டுள்ளது. பராந்தகனுடைய தேவியருள் இருவர் சேரநாட்டைச் சேர்ந்தோர்[2] ஆதலின் சேரநாட்டைச் சேர்ந்த ஒரு பக்தன் இந்நன்கொடையைக் கொடுத்தான் என்பதில் வியப்பில்லை.

முதல் இராசராசனின் (கி.பி. 985-1014) காலக் கல்வெட்டுகள் பல திருமலையில் கிடைக்கின்றன.[3] 16-ஆம் ஆட்சியாண்டு—கி.பி. 1001-இல் வெட்டப்பட்ட செய்தி பின்வருமாறு : திருவேங்கடதேவப் பெருமானுடைய திருவபிஷேகத்திற்கு (தலையங்கிக்கு) ஒரு தங்கத்தால் செய்யப்பட்ட தட்டை தேவி அம்மனார் நன்கொடையாகக் கொடுத்தார். இது 51 கழஞ்சு தங்கத்தால் ஆகியது. அதில் 4 புஷ்பராகம், 6 வைரம், 28 நன்முத்துகள் பதிக்கப்பட்டிருந்தன.

முதல் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் ; கி.பி. 1012-1044 : இவ்வரசனின் 7-ஆம் ஆட்சியாண்டில் - கி.பி. 1019-இல் திருமலையில் செதுக்கப்பெற்றுள்ள சாசனம் ஒரு முக்கியமான செய்தியைக் குறிப்பிடுகிறது. இது திருவேங்கடமுடையானுடைய கோவிலில் வழிபாடுகள் சரிவர நடந்து வருகின்றனவா என்பதை விசாரிக்க நடத்திய அதிராரப்பூர்வ விசாரணை திருச்சானூரில் (திருச்சுகனூர்) நடைபெற்றது. விசாரணையில் "தேவர் கன்மி" என்னும் கோவில் ஊழியர்களும் கலந்துகொண்டார்கள். விசாரணையில் தெரியவந்தது என்னவெனில், திருகோவிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட பொன்னை சிறுமுண்டியும் என்னும் கிராமசபை பெற்றுக்கொண்டு, கோவிலில் 24 நந்தா விளக்குகள் எரிக்க ஒப்புக்கொண்டனர். ஆனால் அச்சபையார் 2 விளக்குகளைத்தான் எரித்துக்கொண்டிருந்தனர். ஆகவே, திருமுண்டியம் ஊரினரிடம் இருந்து 3 கழஞ்சு எடுத்து திருச்சானூர் சபைக்குக் கொடுக்கவேண்டியது எனவும் இவற்றை வைத்துக்கொண்டு அச்சபை மலைமேல் உள்ள எல்லா விளக்குகளையும் சரிவர எரியவைக்க வேண்டியதெனவும் தீர்மானமாயிற்று.

முதற்குலோத்துங்கன் காலக் கல்வெட்டு ஒன்றிலிருந்து[4] திருமலைப் பெருமாள் "திருவாய்ப்பாடி திருமலை ஆழ்வார்" எனக் குறிக்கப்பெற்றதை அறியமுடிகிறது. அக்காலத்தில் முதலாழ்வார்களின் பாடலில் குறிக்கப்பட்டுள்ளவாறு வைணவர்கள் இப்பெருமாளைக் கண்ணனின் அம்சம் எனக் கருதினர் என்று தெரிகிறது.

ஆலயங்களைப் புதுப்பிக்கும்போது, ஏற்கெனவே திருச்சுற்றுச் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளைப் பிரதியெடுத்துப் பாதுகாத்து, பின்னர் மீண்டும் "அவற்றைப் புதிய ஆலயச் சுவர்களில் பொறிப்பது வழக்கம். இதை வீரநரசிங்க யாதவராயனுடைய 40-ஆம் ஆண்டில் (கி.பி. 1218) வெட்டப்பட்டுள்ள சாசனம் தெரிவிக்கிறது. திருப்புல்லாணி தாசன் என்னும் தேசாந்தரி கோவிலைப் புனருத்தாரணம் செய்யத்திருப்பணி மேற்கொண்டான். இதற்காக அவன் அரசனின் அனுமதியை நாட, அரசன் அனுமதித்து, அனுமதிப் பத்திரத்தில் "கோவிலின் வடக்குச் சுவரில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுகள் யாவற்றையும் பிரதிசெய்யவேண்டும் என்றும், அதன் பின்னர்தான் சீர்செய்யவேண்டும்" என்றும் விதித்தான். ஊர்களைச் சர்வமானியமாக (இறையிலி) திருமால் ஆலயங்களுக்கு வழங்கும்போது, அவ்வூர் எல்லையைக் குறிக்க விஷ்ணு சக்கரம் பொறித்த கற்கள் அவ்வூரைச் சுற்றி நடப்படவேண்டும் என்றும் விதிக்கப்பெற்ற செய்திகளையும் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

8.2.0 **விஜயநகர ஆட்சியில் திருப்பதி :** இரண்டாம் தேவராயன திருமலையில் வேதபாராயணம் செய்ய ஏற்பாடு செய்ததைப் பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு சக ஆண்டு 1355-க்குச் சரியான நவம்பர் 22, 1433-இல் வெளியிடப்பட்டதாகும்.

ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணரில் முக்கியஸ்தரான திரு. கலிகன்றிதாஸர் புத்திரன் அழகப்பிரானார், தேவண்ண உடையாருக்கு பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்.

'திருவேங்கடமுடையானுடைய மகிமைக்கேற்ப சகலவிதமான அம்சங்களும் நிறையப் பெற்றிருந்தும் வேதபாராயணம் என்னும் அங்கம் இல்லாதிருப்பது ஒரு குறையாயிருக்கிறது எனக்கூறி, இந்த அம்சத்தை ஆளும் அரசன் தேவராய மகாராஜன் பெயரில் அழைத்தல் நன்கு எனக் கூறினார்.[7] அதைக்கேட்ட அரசன் இந்த ஏற்பாட்டின் பொருட்டு சித்திக்குட்டை எனும் ஊரியிருந்து வரும் வரி வசூலிலிருந்து ஒரு பாதியை அரசபண்டாரத்தின் மூலமாக இந்தச் சேவைக்கு, ஒதுக்கிவைக்கும்படி கட்டளையிட்டான் (முன்பு நடைபெற்றுக்கொண்டிருந்த வேத பாராயணம் காலப்போக்கில் நிறுத்தப்பட்டது).

8.2.1 **ஆதிவண்சடகோபர் பற்றிய குறிப்புகள்** : இவர் திருநாராயணபுரத்தில் கி.பி. 1378-இல் பிறந்தார். 20 வயதுக்கு மேல் காஞ்சி வந்து கடிகாசதம் அம்மாள் என்பவரிடம் மேல்கல்வி கற்றார். அங்கிருந்து அகோபிலம் சென்று மடாதிபதியானார். பிறகு திருமலைக்கு வந்து திருவேங்கடவனுக்கு எல்லாவிதமான கைங்கரியங்களையும் பேரன்புடன் வெகுகாலம் செய்து, பின்னர் அகோபிலம் சென்றார். சாளுவர் காலத்தில் வெளியிடப்பட்ட சாசனங்களில் மூன்று இடங்களில் ஜீயரின் பெயர் குறிப்பாக வருகிறது. சகம் 1415-க்குச் சரியான 10-02-1493-ஆம் தேதியில் பொறிக்கப்பட்ட சாசனத்திலிருந்து இவர் பெயரில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்ட செய்தியை அறியமுடிகிறது.

8.2.2 **கிருஷ்ணதேவராயர் காலத்துச் சாசனங்களிலிருந்து நாம் அறியும் முக்கிய செய்திகள்** : கிருஷ்ணன் திருமலைக்கு ஏழு முறை பயணம் செய்தான். ஒவ்வொரு முறையும் பேரரசனுக்கு ஏற்றவகையில் நன்கொடைகள் கொடுத்தான். இவனது முதற்பயணம் 10-02-1513 அன்று ஆகும். இம்முறை ஒன்பது கல் இழைத்த கிரீடமும், திருவாராதனத்திற்குப் பயன்பட 25 வெள்ளித் தாம்பாளங்களும் பெருமாளுக்குச் சமர்ப்பித்தான். இவற்றைப் பற்றிப் பாமரரும் அறிய எல்லா மொழிகளிலும் செதுக்கி வைத்தான். கிருஷ்ணனுடைய திருப்பதிப் பயணங்கள் எல்லாம் இவனது வெற்றிகளுக்கு அஞ்சலி செய்யும் முறையில் அமைந்திருந்தன. முதல் பயணத்தில் இவனுடன் இவனது இரு இராணிகளான சின்னாதேவி, திருமலாதேவி ஆகியோரும் சென்று இரு தங்கக் கிண்ணங்களைச் சமர்ப்பித்தனர். அவற்றில் இரவு அர்த்தஜாம வழிபாட்டிற்குப்பிறகு பால் சமர்ப்பிக்குமாறு வேண்டினர்.

இவன் தன் மூன்றாம் பயணத்தின்போது (13-06-1513) தன் பெற்றோர்களான நரஸாநாயக, நாகம்மாவின் பெயர்களைச் சிறப்பிக்க ஒவ்வொரு ஆண்டும் தை மாதத்தில் ஓர் உற்சவம் நடக்க ஏற்பாடு செய்தான். இதற்காக இவன் ஐந்து ஊர்களைத் தானம் செய்தான். இவனது மூன்றாம் வருகை திருமலைக்

கோவிலின் மூன்றாம் பிராகாரப் படிகாணல் கோபுரத்தில் பெரிய கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

நான்காம் வருகை 6-07-1514 அன்று நிகழ்ந்தது. இதைப்பற்றிக்கூறும் சாசனத்தில் இவன் ஒரிஸ்ஸாவின் கஜபதிகளோடு செய்த போர்களின் சரித்திர விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவனது ஐந்தாம் வருகையின்போது (2-01-1517 அன்று) ஆனந்த நிலைய விமானத்தைத் தங்கமுலாம் பூச முப்பதாயிரம் தங்க வராகன்கள் கொடுத்தான் கி.பி. · 14-ஆம் நூற்றாண்டில் ஜடாவர்ம சுந்தரபாண்டியன் முதல்மறை பொன் வேய்ந்தான் ; கிருஷ்ணனுக்குப் பின் முதலாம் வேங்கடன் ஆட்சியில் காஞ்சி கோடி கன்னிகாதானம் தாதாசாரியரால் ஒருமுறையும் அண்மையில் 1909-இல் மகந்தினுடைய சேடன் இராமலட்சுமணதாஸ் பாலாஜியால் மறுமுறையும் (பொன்) வேயப்பட்டது.

8.2.3 கிருஷ்ணதேவராயர் வெளியிட்ட தங்கக்காசு : இத் தங்கக்காசின் பின்புறம் "ஸ்ரீகிருஷ்ணராய" என்று "நந்தி நாகரி" எழுத்துக்களில் மூன்று வரிகளாகப் பொறிக்கப்பட்டுள்ளது. தலைப்புறம் திருமால் நான்கு கரங்களுடன், சங்கு சக்ரதாரியாக, அபயமளிக்கும் நிலையில் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். அவரைச்சுற்றி அழகான ஒரு பிரபை காணப்படுகிறது. இத் திருமால் திருவுருவம் திருமலைப்பெருமாளின் திருவுருவமேயாகும். இவ்வரசன் 25-10-1515 ஆம் நாளன்று திருவேங்கடமுடையானுக்கு ஒரு நவரத்தின பிரபாவளியான மகரதோரணம் சமர்ப்பித்தான். இதன் மொத்த எடை 31, 124 தூக்காம். "சூர்யன் ஒளிமண்டலத்தின் நடுவே பரஞ்சோதி எவ்வாறு ஒளி வீசுகிறதோ அதுபோல இந்தக் கிருஷ்ணதேவராயர் கொடுத்த நவரத்தின பிரபாவளியின் நடுவில் திருவேங்கடமுடையான் பிரகாசித்துக்கொண்டு இருக்கிறார்" என்று ஒரு கவிதையைக் கல்வெட்டில் எழுதிவைத்துள்ளான். அந்த அளவுக்குச் சிறப்பான பிரபாவளி சமர்ப்பித்ததையொட்டி இத் தங்கக்காசை வெளியிட்டிருக்கிறான். இக்காசு 1515-இல் வெளியிடப்பெற்றதாகலாம்.[9]

இவ்வரசனின் காலத்தில் செலாவணியான காசு "வராகன்" எனப்பட்டது. சாதாரணமாக அக்கால வராகன் பொன்காசு 58-60 "கிரெய்ன்" (குன்றிமணி) எடை இருக்கும். இக்காசு அதைப்போல் இருமடங்கு (120 கிரெய்ன்) எடையுள்ளது. ஆதலின் இது ஒரு சிறப்பு வெளியீடு என்று தெரிகிறது. அதனால் இதைத் தொட்ட வராகன் (பெரிய வராகன்) என்று அழைப்பர். அநேக விஜநகர நாணயங்களில் ஸ்ரீவெங்கடேவராய நமஉற ; என்று எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆசாரியரைச் சிறப்பித்து வெளியிடப்பட்டகாசு : திருக்கோவலூர் அருகே தென் பெண்ணையாற்றில் கிடைத்துள்ள காசின் முன்பக்கம் 'ஸ்ரீராமாநுஜர்' அமர்ந்த நிலையிலும், பின் பக்கம் 'ஸ்ரீபட்டண' என்ற தெலுங்குகன்னட எழுத்துகளும் காணப்படுகின்றன. கி.பி. 15 இல் மைசூர் ஸ்ரீரங்கப்பட்டணம்

பகுதியில் ஆண்ட சாறாவநரசிம்மன் வெளியிட்டது இது. உடையவர் மேல் கோட்டைப்பகுதியில்சமயப் பணியாற்றிய போது ஆலயப்பணிகளையும் கொள்கை பரப்பும் பணிகளையும் செய்தார். தொண்டனூரில் பலமடங்களையும் கட்டினார். இவ்வகையில் ஓர் ஆசாரியபுருஷரைச் சிறப்பித்து காசு வெளியிடப்பட்டது இதுவே முதல் முதல் முறை என்று கருதமுடிகிறது —(தினமணி 18.2.94 பக் 2).

8.2.4 சமுதாயத்திற்கு ஏற்பட்ட நன்மைகள் : அரசர்களும், அரசியல் அலுவலர்களும், பொதுமக்களும் வழங்கிய நன்கொடைகள் பல. இந் நன்கொடைகள் மூலம் அவர்கள் கோவிலுக்குப் பல பணிகள் செய்து தெய்வத் திருவருளைப் பெற்றனர் ; சேவார்த்திகளுக்கு அங்கே பிரசாதங்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்தனர். பணமாக வழங்கப்பட்ட நன்கொடைத் தொகைகளைக் கோவிலின் கருவூலத்தில் கட்டினர். அத்தொகைகளைக் கொண்டு ஏற்கனவே இருக்கும் பாசன வசதிகளை அதிகரிக்கவும், புதிய வசதிகளைப் பெருக்கவும் வழிவகை செய்தனர். மேலும் இதுவரை சாகுபடியாகாத தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரவும், ஏற்கெனவே உள்ள நிலங்களை மேலும் அபிவிருத்தி செய்யவும் முடிந்தது. இவற்றின் வருவாயைக்கொண்டு கோவில் திருப்பணிகள் நடைபெற்றன.

8.2.5 காஞ்சி அருள்மிகு வரதர் கோயில் சாசனங்களால் வெளியாகும் சில முக்கிய செய்திகள் : இத்திருக்கோயிலில் 350 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து காஞ்சி மாநகரம் தமிழக வரலாற்றில் தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பெற்றிருந்த முதன்மை புலப்படுகிறது. இது பல்லவர்களின் கோநகராகவும், சோழர்களின் இரண்டாம் தலைநகராகவும் இருந்துள்ளது.

திருமங்கை மன்னர் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில், (2 : 9 : 3)

"உரந்தரு மெல்லணைப் பள்ளி கொண்டான்
ஒரு கால் முன்னம் மாவுருவாய்க் கடலுள்
வரந்தரு மாமணி வண்ணன் இடம்
மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி"

என்று மங்களாசாசனம் செய்துள்ளார். "வரந்தரு மாமணி வண்ணன் என்பது அருள்மிகு வரதராஜப்பெருமானைக் குறிக்கும். இத்தொடர் வேறு பெருமானைக் குறிக்காதா ? என்ற ஐயம் ஏற்படலாம். இக்கோவிலில் உள்ள சோழர்காலக் கல்வெட்டில் [10] இப்பெருமாள் "வரந்தரும் பெருமாள்" என்று குறிப்பிடுவது கொண்டு இவ் ஐயம் நீங்குகின்றது. முதற்குலோத்துங்கனின் 43-ஆம் ஆண்டில் (கி.பி. 113) கருணாகரத் தொண்டைமானின் மனைவி அழகிய மணவாளினி இக்கோவிலில் ஒரு நுந்தா விளக்கு வைத்தாள். அக்கல்வெட்டு வருமாறு :

1. சயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து
எயில் நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழ
2. மண்டலத்துக்குலோத்துங்க சோழ வளநாட்டுத்
திருநாரையூர் நாட்டு வண்டாழஞ் சேரியுடையான் வேளான
3. கருணாகர தொண்டைமானார் தேவியார்
அழகிய மணவாளினி மண்டையாழ்வார்
வைத்த திரு நுந்தா விளக்கு[10] .

இங்குக் குறிக்கப்பெறும் "திருவத்தியூர் ஆழ்வார் அமி வரதராஜராகும்".

பிற்காலச் சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற தாயார் சந்நிதி, விஜயநகர அரசர் காலத்தில் புதுப்பிக்கப்பெற்றுப் புனிதமாக்கப்பெற்ற செய்தியை ஒரு கல்வெட்டு[11] தெரிவிக்கின்றது. சந்நிதி மீதுள்ள "கல்யாண கோடி விமானம்" எட்டூர் குமார தாதாசாரியாரால் கி.பி. 1614-இல் அமைக்கப்பட்டது. அவர் விமானத்தைப் பொன்னால் வேய்ந்தார்.[12]

இவ் ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் கலியாண மண்டபம் உள்ளது. இது விஜயநகர அரசர் காலத்தில் அமைக்கப்பெற்றதாகும். அழகிய மணவாள ஜீயர் என்பவரால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் அமைக்கப்பெற்றது. ஜீயரின் உருவம் மண்டபத்தின் இரு தூண்களில் செதுக்கப்பெற்றுள்ளது. இங்குள்ள 96 தூண்களிலும் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்துள்ளன.

8.2.6 **அருள்மிகு வரதராஜர் காஞ்சியிலிருந்து வெளியேற நேர்ந்த நிகழ்ச்சி கி.பி. 1688** : கல்வெட்டுகளிலிருந்து ஆலய வரலாறுகளும் அரசியல் வரலாறுகளும் பின்னிப் பிணைந்திருப்பதை அறியமுடிகிறது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அந்நியரின் படையெடுப்பினால், பெருமாளையும், உபயநாச்சிமாரையும் எழுந்தருளச் செய்து திருச்சி மாவட்டம் உடையார்பாளையத்தின் அருகில் உள்ள காடுகளில் பாதுகாப்பாக வைத்திருந்தனர். கி.பி. 1710-இல் அபாயம் அகன்றது. ஆனால் அப்பகுதியினை ஆண்ட தலைவன் பெருமாளைத் திரும்பக் காஞ்சிக்கு எழுந்தருளச்செய்ய அனுமதியளிக்க மறுத்தான். இந்நிலையில் ஆத்தான் ஜீயர் என்பவர் லாலா தோடர்மாலை உதவவேண்டினார். தோடர்மால் படையெடுத்துச்சென்று, வென்று, திரும்பவும் பெருமாளைக் காஞ்சிக்கு எழுந்தருளச் செய்தான். இச்செய்தி தாயார் சந்நிதி அருகில் உள்ள ஒரு நீண்ட கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலயத்தின் படிப்படியான வளர்ச்சிபற்றிய செய்திகளையெல்லாம் இங்குள்ள பல கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

8.2.7 காஞ்சியில் உள்ள ஏனைய திருக்கோயில்களைப் பற்றிய சில செய்திகள் : திருப்பாடகத்தில் உள்ள பாண்டவதூதரின் திருநாமம் 'திருப்பாடகத்து ஆழ்வார்'' என்றும், "தூதஉறரி'' என்னும் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.[14] ''சொன்னவண்ணம் செய்த பெருமாள்'' (யதோத்தகாரி) என்று திருவெஃகாவில் உள்ளபெருமாள் குறிப்பிடப்படுவதும் புலனாகின்றது.[15] இது கணிகண்ணர் வரலாற்றை நமக்கு அறிவிப்பதாகும்.

வைகுந்தப்பெருமாள் ஆலயத்தைக் கட்டியவன்' இரண்டாம் நந்திவர்மன் ஆவான். இவனது வெற்றிச்சிறப்புகளைப் புகழ்ந்து திருமங்கை மன்னர் பெரிய திருமொழி இரண்டாம் பத்து ஒன்பதாம் திருமொழியில் பத்துப்பாசுரங்களில் பாடியுள்ளார். அப்பாசுரங்களில் இம்மன்னன் மண்ணை, கருவூர், நென்மேலி ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் பகைவரை வென்றான் என்று குறிப்பிடுகிறார். இச்செய்தி உதயேந்திர சாசனங்களால் உறுதிப்படுகின்றது. மேலும் இத்திருமொழி ஒன்பதாம் பாடலில்,

"கறையுடை வாள்பிற மன்னர்கெ டக்கடல்
போல்முழங் கும்குரல் கடுவாய்ப்
பறையுடைய பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே"

என்று நந்திவர்மனின் பறையைக் குறிப்பிடுகிறார். அதைக் "சமுத்திரகோஷம்" என்று வக்கலேரி, கேந்தூர்ப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன.[16] இவ்வகையில் இலக்கிய, சாசனச் சான்றுகள் ஒன்றுபடுகின்றன.

மேலும் இரண்டாம் பரமேசுவரவர்மனுடன் சிம்மவிஷ்ணு மரபு முடிந்து புதிய பல்லவர் மரபு இரண்டாம் நந்திவர்மன் முதலாகத் தொடங்கும் வரலாற்றுச் செய்திகளை அறிய வைகுந்தப்பெருமாள் கோவில் சிற்பங்கள் துணை செய்கின்றன.[17]

8.2.8 திருப்புட்குழி கல்வெட்டு குறிப்பிடும் ஒரு செய்தி : இத்தலப்பெருமானின் திருநாமம் "விஜயராகவப்பெருமாள் என்பது. விஜயகண்ட கோபாலன் என்னும் தெலுங்குச் சோழன் கி. பி. 1250-இல் முடிசூடினான். இவனது 15-ஆம் ஆட்சியாண்டில் இங்கு இராமர் கோவில் கட்டப்பட்டது. அப்பெருமானுக்குத் தன் பெயரையும் இணைத்து "விஜயராகவப் பெருமாள்" எனச் சூட்டினான் என்று கருவறையில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது.[18]

கி. பி. 1573-இல் முகம்மதியர் பன்னிரு ஆழ்வார்களின் விக்கிரகங்களை அழித்தனர். அவற்றுள் மூன்று பழுதுபார்க்கப்பட்டன; ஒன்பது விக்கிரகங்கள் புதியனவாக அமைக்கப்பெற்றன என்னும் செய்தி விஜயநகர மன்னர் சதா சிவ மகாராயரின் கல்வெட்டில் உள்ளது.[19]

8.2.9 திருவல்லிக்கேணிக் கல்வெட்டு : பல்லவ மன்னன் நந்திவர்மன் (கி. பி. 775-825) காலக் கல்வெட்டு அக்காலத்தில் நிலவிய வட்டி விகிதத்தைக் குறிக்கிறது.

"குலங்கிழார் கோவில் நிலத்தில் ஒருபகுதியை ஒற்றிவைத்து, அதன் வருவாயில்45 காடி நெல் குறைந்துபோனதால், அதற்குப் பதிலாக 30 காடி நெல்லும் 5 கழஞ்சு பொன்னும் புகழ்த்துணை விசையரசன் என்னும் அரசியல் அதிகாரி தானம் செய்தான். இதற்கு நாள் ஒன்றுக்கு 5 நாழி நெல் வட்டியாகும். அதை அரிசியாக்கி நாள்தோறும் திருவமுதுபடைப்பாராக"என்பது கல்வெட்டுச் செய்தியாகும். இந்த வட்டிக்கணக்கு 45 காடி நெல்லுக்கு ஆண்டு ஒன்றுக்கு 18 3/4 கலம் நெல் ஆகும்.[20] அக்கால முகத்தல் அளவைகளாக நாழி, காடி என்பன இருந்தன என்பதும் இக்கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.

8.2.10 திருக்கடன் மல்லைக் கல்வெட்டுகள் சில : வீரராசேந்திர சோழனின் 9-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1063-1070) கி. பி. 1072-இல் சிறுதாவூர்கிராம மகாசபையினர் 2000 குழி நிலத்தைத் திருக்கடன் மல்லைத் தேவர்க்கு வழங்கினர்.[21]

முதல் இராசராசனின் 26-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு (கி.பி. 1011) இராசசிம்ம பல்லவனால் கடற்கரையில் கட்டப்பெற்ற மூன்று கோவில் களின் பெயர்களையும் குறிக்கின்றது. அவையாவன :

1. க்ஷத்திரிய சிகாமணிப்பல்லவேச்சுரம்
2. இராசசிம்ம பல்லவேச்சுரம்
3. பள்ளிகொண்டருளிய தேவர் கோயில் என்பன.[22]

பாண்டியர்களுடைய வீழ்ச்சிக்குப்பிறகு விஜயநகரப் பேரரசின் தோற்றம் வரை இப்பகுதியில் இராஜநாராயண சம்புவராயர் ஆண்டுவந்தார். இவருடைய 3, 5, 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் மாமல்லை உலகுய்ய நின்ற நாயனார்க்கும், நிலமங்கை நாச்சியார்க்கும் திருவாராதனங்களுக்கும், திருப்பணிகளுக்கும் கொடுத்த மானியங்களைக் குறிக்கின்றன. இவற்றிலிருந்து பெருமாள், தாயார் திருநாமங்களை அறியமுடிகின்றது.

8.2.11 கல்வெட்டுகளால் அறியக்கூடிய நிலையில் உள்ள பழைய பழுதடைந்த சில திருக்கோயில்கள் :

1. வடார்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கத்தில் இரட்டமன்னனான மூன்றாம் கிருஷ்ணன் (கி. பி. 939-68) மேற்பாடியில் தங்கியிருந்த போது, காலப்பிரியர், கங்கமார்த்தாண்டர், கிருஷ்ணர் ஆகிய மூவருக்கும் கோயில்கள்

எடுப்பிக்க ஆணையிடப்பட்ட செய்தி கர்உறாடு செப்பேடுகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால் அவை இன்று கவடற்றுப்போயின.[23]

2 வடார்க்காடு-வேலூருக்கருகே 12.8 கி. மீ. தொலைவில் உள்ள சோழபுரத்தில் ஒரு பெருமான் கோயில் இருந்தது. கம்பவர்மன் காலத்தில் இது "கனகவல்லி விஷ்ணுக்கிருகம்" என்று அழைக்கப்பெற்றது. இவ்விடத்தில் உள்ள முக்கியமான கல்வெட்டால் தமிழக வரலாற்றில் ஒரு வரலாற்றுச் செய்தியை, காலத்துடன் அறியமுடிகிறது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு இரண்டு சக வருஷம் 871 சக்கரவர்த்தி கனரதேவ வல்லபன் இராசாதித்தரை இரிந்து (எறிந்து) தொண்டைமண்டலம் புகுந்த வாண்டு—"

"உல்ஷ்" என்பார் யாண்டு இரண்டு என்பது இராசாதித்தனுடைய ஆட்சியாண்டு எனவும், அது சகயாண்டு, 871-க்கும், கி. பி, 949-க்கும் இணையானதென்றும், அதுவே தக்கோலப்போரில் இராசாதித்தன் இறக்கக் கன்னரதேவன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய காலம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.[24]

3. புதுவையிலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் 24 கி. மீ. தொலையில் உள்ள கிளியனூரில் (கிளிஞூனர்) பெருமாள் கோயில் இருந்தது. (இன்று புதுப்பிக்கப்பட்டுள்ளது). அன்று இது "திகைத்திரள விஷ்ணுக்கிருகம்" என அழைக்கப்பட்டது. மூன்றாம் நந்திவர்மன் காலத்துத் திகைத்திரளார் என்பவர் இவ்விண்ணகரை எடுப்பித்து, அதன் வழிபாட்டிற்கு நிலமும், விளக் கெரிப்பதற்கு ஆடுகளும் வழங்கிய செய்தி கருவறையில் தென்சுவரில் உள்ள கல்வெட்டால் அறியப்படுகிறது. எனவே, இது மூன்றாம் நந்திவர்மன் (கி. பி. 835-860) காலத்ததாகிய 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது தெரிகிறது.[25]

4 வேலூர் வட்டம் பொய்கை என்னும் ஊரிலிருந்த கோயில் திருமால் அருளாளப்பெருமாள் (அ) சித்திர மேனி மண்டல விண்ணகர் எனச் சோழர் காலத்தில் அழைக்கப்பட்டது.

5 திருப்பாற்கடல் - இது காவேரிப்பாக்கத்திற்கு அருகில் 3 கி. மீ. தெற்கில் உள்ள ஊர். இவ்வூர் இறைவர் 'பாலாற்றங்கரையில் உள்ள திருக்கரபுரத்துப் பெருமானடிகள்' என்று கல்வெட்டுகளில் வழங்கப்படுகிறார். முதற்பராந்தகனுடைய 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டினால்[26] ஓர் அறச்செயலுக்கு வழங்கிய கொடையை மற்றொரு அறச்செயலுக்கு மாற்றி வழங்கிய செய்தியை நாம் அறியமுடிகிறது. உத்தரமேரூர் வைகுந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டுகள் அன்றைய கிராம ஆட்சிமுறையை விளக்கி நிற்கின்றன. இவை புகழ்பெற்றவை.

6. மதுராந்தகம் : கன்னியாகுமரிக் கல்வெட்டுக் குறிப்பிடும் முறையில் முதற் பராந்தகனால் நிறுவப்பட்ட பல சதுர்வேதி மங்கலங்களுள் இதுவும் ஒன்றாகும். இவ்வூரின் அருகில் உள்ள 'வீரசோழப்பேரேரியும்', அவனது படைப்பெயராகும். கல்வெட்டுகளில் வீரநாராயண வீதி, வீரசோழ வாய்க்கால், வீரசோழன் பேரங்காடி என்றாற்போல இவ்வூர்த் தெருக்களும், வாய்க்கால்களும், கடைத்தெருவும் முதற் பராந்தகனுடைய விருதுப்பெயரால் வழங்கப்படுகின்றன. இதனால் அக்கால மக்கள் மன்னர்களிடம் எவ்வளவு பெருமதிப்பு வைத்திருந்தனர் என்பது புலனாகின்றது.

7. அவியனூர் : விழுப்புரம் வட்டத்திலுள்ள இவ்வூரில் மாரியம்மன் கோயில் சந்நிதி இடப்புறத்தில் முதற்பராந்தகனின் 31-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 938) கல்வெட்டு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அவியலூர் மகாசபைப் பெருமக்கள் ஜலசயன தேவர் (பெருமாள்) கோயிலில் பணிபுரியும் கணபெருமக்களிடம் 12 கழஞ்சு பொன் பெற்றுப் பல்வேறு இடங்களில் நிலம் வாங்கப்பட்டதற்கான கல்வெட்டுப் பத்திரமாக (Documentation) இக்கல் வெட்டு உள்ளது. "இறைவனுக்குச் சேவை செய்யும் அன்பர்களுக்குக் கலியாக 7 மாநிலமும், இறைவர்க்கு $1\frac{1}{2}$ செறுவும், நாவல் தோப்புக்கு 2 செறுவும், பிற மரங்கள் வைத்துத் தோட்டம் அமைக்க ஒரு செறுவும், கருங்குளம் அமைக்க 2 செறுவும் எற்றைக்கும் இறையிலி தானமாகக் கொடுத்தோம்" என்ற செய்தி இதில் உள்ளது.[27]

இதிலிருந்து அக்கால நில அளவைகளை அறியமுடிகிறது. 'மல்லுக்கு மாகாணி' என்ற பழமொழி இன்றும் வழங்குகின்றது.

விண்ணமங்கலம் பெருமாள்கோயில்[28]
களம்பூர் வேணுகோபாலசுவாமி கோயில் (பார்த்தி வேந்திர-
வர்மனின் பட்டப்பெயரான 'காலிகேசரி' விண்ணகரதேவர்[29]
திருக்கோவலூர் அருகில் உள்ள திருவரங்கம்[30]
கூரம் கேசவப்பெருமான் கோவில்[31]
மணிமங்கலம் இராஜகோபாலப்பெருமாள் கோயில்[32]
சோமங்கலம் சௌந்தரராஜப்பெருமாள் கோயில்[33]

ஆகியவை பற்றிக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. சோளிங்கபுரம்-கல்வெட்டில் சோழாபுரி என அழைக்கப்படுகிறது.[34] இது குரு பரம்பரைகளில் 'கடிகை' எனக் குறிப்பிடப்படுகிறது. ஆதிவண் சடகோபரின் 'சத்சம்பிரதாய முக்தாவளி' என்னும் நூலைப்பற்றிக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். இங்குள்ள கோயில் நிருவாகம் தொட்டாசாரியாரின் கைக்கு மாறியது பற்றியும் நாம் அறியமுடிகிறது.

8. நெடுங்குன்றம் : வந்தவாசி வட்டத்தில் சேத்துப்பட்டுக்கு அருகில் உள்ள ஊர். இவ்வூரைத் தலைநகராகக்கொண்டு விஜயநகர அரசர்களின் சார்பாளர்களாக வாழ்ந்த நாயக்கர்களில்[35] திம்மப்ப நாயக்கர்-பாயாம்பிகா தம்பதிகளுக்கு நான்கு புதல்வர்கள் பிறந்தனர். அவர்கள் பெத்தசெவ்வா, சின்னசெவ்வா, பெத்தமல்லா, சின்னமல்லா ஆவர்.[36]

இவர்களில் சின்னசெவ்வா கிருஷ்ணதேவராயர் காலத்தில் தளவாயாகப் பணிபுரிந்தவர். இவர் அச்சுத தேவராயரின் மனைவி திருமலாம்பாவின் தங்கை மூர்த்திமாம்பாவை மணந்தார். அதனால் இவருக்குச் சோழமண்டல அரசு சீதனமாகக் கிடைத்தது. தஞ்சை நாயக்கர் ஆட்சி இவரால் தோற்றுவிக்கப்பெற்றது. கி. பி. 1532-1563 வரை 31 ஆண்டுகள் ஆண்ட இவர் பல இறைத்தொண்டுகள் செய்தார்.

1. திருவண்ணாமலை இராசகோபுரத்தைத் கட்டினார்.[36 (அ)]

2. காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் திருப்பணி.

3. ஸ்ரீசைலம், திருமலை முதலிய கோயில் விமானங்களுக்குப் பொன்வேய்ந்தார். கிருஷ்ணதேவராயர் திட்டமிட்டவற்றையெல்லாம் செயல்வடிவமாக்கியவர் இவரே.

இவரது தம்பி சின்னமல்லா என்பவர் கிருஷ்ணதேவராயரின் தம்பி அச்சுதராயர் காலத்தில் திருமலைக்கு அளித்த நன்கொடை பற்றி அங்குள்ள ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[37]

சின்னசெவ்வாவின் மகன் அச்சுதப்ப நாயக்கன் ; இவரது மகனே இரகுநாத நாயக்கன். இவன் பேரரசர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவன். கி.பி. 1600-1634 வரை தஞ்சையை ஆண்டவன். விசயநகர அரசன் ஸ்ரீரங்கனின் குழந்தை இராமராயனுக்கு அடைக்கலம் தந்து, குடந்தையில் முடிசூட்டுவிழாவை நடத்தினான் இரகுநாதநாயக்கன். இந்நினைவாகக் கும்பகோணம் இராமசாமி கோவிலை இரகுநாதன் கட்டினான்.[38] நெடுங்குன்றம் அருகில் உள்ள ஓர் ஊர் இவன் பெயரால் இரகுநாதசமுத்திரம் என வழங்குகிறது. அங்கும் ஓர் இராமர் கோயில் உள்ளது. இவ்வாறு நெடுங்குன்றத்தில் பிறந்த நால்வரின் வம்சம் பலவகையிலும் சிறந்து விளங்கியது. இவர்களை ஈன்ற இவ்வூரில் அ/மி இராமச்சந்திரப்பெருமாள் கோயில் உள்ளது. இவ்வாலயத்தின் முதல் பிராகாரம் வடக்குச்சுவரில், விஜயநகர அரசன் வீரபிரதாப வீர அச்சுததேவ மகாராஜர் கி. பி. 1466-ல் அளித்த நிலக்கொடை பற்றிய செய்தி ஒரு கல்வெட்டில் உள்ளது.[39]

அ\மி இராமச்சந்திரப்பெருமாள் அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளார். சீதையும், இளவலும் இருபுறமும் உள்ளனர். எதிரே அனுமன் வேதம் வாசிக்கும் நிலையில் அமர்ந்திருக்கிறார். இஃது ஓர் அரிய சிற்ப வடிவமாகும் (இதுபோன்று

படைவீடு இராமர் கோயிலிலும் உள்ளது) தாயார் சந்நிதி தனியே உள்ளது. துவாரபாலகியர் இருவர் வாயிலில் உள்ளனர். வடார்க்காடு மாவட்டத்திலேயே பெரிய பெருமான்கோயில் இது என்பர். இரு இராஜகோபுரங்களும், மகாமண்டபம், அர்த்தமண்டபங்களுடன் மிகப்பெரிய ஆலயமாக இது விளங்குகின்றது. இவ்ஆலயத்தின் திருத்தேர் அண்மையில் புதியதாக அமைக்கப்பெற்றது.

### 8.2.12 திருமால் கோயில்களில் திவ்வியப்பிரபந்தம் சேவிக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றமை :

பல்லவர் காலத்தில் அவதரித்த ஆழ்வார்கள் பன்னிருவரின் நாலாயிர திவ்வியப் பிரபந்தப்பாடல்கள் அவ்வரசர்களின் காலத்திலேயே வைணவத் திருக்கோயில்களில் பாடப்பெற்றன. இதற்கு அரசர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.[40]

உக்கல் என்ற புவனமாணிக்க விஷ்ணுகிருகத்தில் (இவ்வூர் காஞ்சி-பெருநகர் சாலையில் கிழக்கே 3 கி. மீ. தொலைவில் உள்ளது). முதல் இராசராச சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில், இத் திருக்கோயில் பெருமாளின் திருநாமம் 'திருவாய்மொழித்தேவர்' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இதுகொண்டு இவன் காலத்திலேயே (கி. பி. 985-1016) நம்மாழ்வாரது திருவாய்மொழி சிறப்புற்று இருந்தமையை அறியமுடிகிறது.

திருமால்புரம் (திருமால்பூர்) என்னும் ஊர் அரக்கோணம் அருகில் உள்ளது. இவ்வூரைச் சேர்ந்த கோவிந்தப் பாடியிலிருந்த நின்றருளின பெருமாள் கோயிலில் திருவாய்மொழி ஓத ஏற்பாடு செய்திருந்ததை அறிகிறோம். அத்துடன் ஒரு புதிய செய்தியையும் இங்குள்ள கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. முதலாம் இராசராசனின் 10-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 995) குலக்குடையன் அருள்நிலை ஸ்ரீகிருஷ்ணன் (எ) மூவேந்த பிடவூர் வேளார், கோவிந்தப்பாடி நின்றருளின பெருமாள் திருமுன்பு அவரைப்புகழ்ந்து, இவரது தந்தையாரால் இயற்றப்பெற்ற 'கோலனார் குழல்' எனத் தொடங்கும் பிரபந்தத்தை விழாவில் பாடப் பொன் அளித்தார்[41]. இப்பிரபந்தம் இன்று இருப்பதாகத் தெரியவில்லை.

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள எண்ணாயிரம் என்னும் ஊரில் இராஜராஜ விண்ணகர் என்னும் பெருமான்கோயில் உள்ளது. இங்கு ஒரு கல்லூரி இருந்தது. இங்கு வேதம், வியாகரணம், மீமாம்சை ஆகியன கற்பிக்கப்பட்டன. நாளும் நால்வர் திருவாய்மொழி, விண்ணப்பித்தனர் என்பதை முதல் இராஜேந்திரனின் 12-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (கி. பி. 1024) குறிப்பிடுகின்றது.[42] இதனால் வேதங்களுக்குச் சமமாகத் திருவாய்மொழிக்கு ஏற்றமளிக்கப்பட்டமை புலனாகும்.

காஞ்சி அழகி வரதர் கோயிலில் 58 பிராம்மணர்கள் திருவாய்மொழியைப் பாடினர்.[43] இங்குள்ள அபிடேக மண்டபத்தில் ஒய்சளமன்னன் தன் தேவியருடன் 'வீரவல்லாளன்' என்னும் சிம்மாசனத்தில் அமர்ந்து திருவாய்மொழியைக் கேட்டான் என்பதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.[44] இதைவிடச்சுவையானதொரு செய்தியையும் சாசனம் மூலம் அறியமுடிகிறது. 'நரசிங்கதேவன்' என்னும் குறுநில மன்னன் திருவாய்மொழியில் வல்லவன். இவன் திருவாய்மொழியைக் கற்றவர்களைப் பார்த்து, வினாக்களை எழுப்புவான். எனவே, இவன் 'திருவாய்மொழிப் பரிட்சை' எனப்பட்டான்.[45] உத்தரமேரூரில் பிரபந்தங்களைப் பாடுவோர்க்கு உணவளிக்க நன்கொடையளிக்கப்பெற்றது. இச்செய்தி முதல் இராசேந்திரனின் கல்வெட்டுக்களால் புலனாகின்றது.[46]

திருமலைக் கோயிலிலும் திருப்பதியிலும் திவ்வியப்பிரபந்தங்கள் ஓத ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியைப் பல கல்வெட்டுகள் இயம்புகின்றன.[47]

காஞ்சி வட்டம் புள்ளலூரில் அழிந்த, நிலையில் உள்ள இராமர் கோயில் கல்வெட்டினால்,[48] அக்கோயிலில் இராமாயணம், புராணங்கள் படிக்க இறையிலி நிலங்கள் வழங்கப்பட்ட செய்தியும் தெரிகின்றன.

8.2.13 **நிறைவுரை** : இதுகாறும் நாம் கண்ட பல கல்வெட்டுச் செய்திகள் காலங்கடந்து நின்று நமக்குப் பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. புராதனமான ஆலயங்களைப் புதுப்பிக்கவேண்டும் : வழிபாட்டில் உள்ள ஆலயங்களில் திவ்வியப்பிரபந்தங்களை ஓத இளஞ்சிறார்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும். காத்தற்கடவுளாகிய திருமாலின் திருவருள் பெற்று இவ்வுலகம் உய்யுமாக.

## அடிக்குறிப்புகள்

1. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், வேங்கடேச தேவஸ்தான வரலாறு, முதல்பாகம், மொழிபெயர்ப்பாளர், டி. வி. எஸ். ராகவன், முதல்பதிப்பு (சென்னை 1984), ப. 105.
2. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு,முதல் பதிப்பு. (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974), ப. 57-இல் உள்ள அடிக்குறிப்பு.
S.I.I., Vol. II, No. 76 & EP.Ind, Vol. XV, No. 5.
3. திருமலை - திருப்பதி தேவஸ்தான சாசனங்கள் தொகுதி-1, எண். 14-முதல் 18 வரை.
4. மேலது-எண். 27
5. மேலது-எண். 102
6. மேலது-எண். 192
7. மேலது-எண். 199
8. மேலது-தொகுதி-2, 83, 101, 112 எண் உள்ளவை.
9. இரா. நாகசாமி, 'கதை சொல்லும் தங்கக்காசு', தினமணி, சென்னை, ஆகஸ்டு 4, 1989, ப. 2.
10. 598 of 1919 & 645 of 1919 Dr. K.V. Raman, **Sri Varadaraja Swami Temple**, Kanchi, First Ed., (New Delhi, 1975), pp.4-5.

அ) S.I.I., Vol. V, No. 862.

11. 648 of 1919.
12. 650 of 1919, A.R.E., 1919-1920, p. 115.
13. A.R.E., 1920, p.20.
14. S.I.T.I., I, No. 435.
15. 561 of 1919 & S.I.T.I., I, p.423.
16. மா. இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, மறுபதிப்பு (சென்னை, 1964), ப. 179.
17. மேலது - பக். 170-171.

18. 164 of 1916.

19. 175 of 1916.

20. EP. Indica, Vol. VIII, p. 291.

21. A Topographical List of the Inscriptions of the Madras Presidency by V. Rangacharya, Vol. I, No. 42, pp.68-69.

22. Ep. Report, 961 of 1913, pp. 88-89.

23. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், முதற்பதிப்பு, தமிழ் வெளியீட்டுக்கழகம் (சென்னை 1966), ப. 191.

24. மேலது - ப. 300.

25. மேலது - ப. 189.

26. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், பக், 308-309.

27. "Dinamani", Madras, October 23, 1992, p.3.

28. 21 of 1899.

29. 245 of 1909.

30. 66 of 1906.

31. 32 of 1900.

32. 20 of 1892.

33. 182 of 1901.

34. 9 of 1896.

35. A.R.E., 497 of 1907, 75 of 1925.

36. குடவாயில் பாலசுப்பிரமணியம், 'சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும்', முதல்பதிப்பு, (தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987), பக். 231-234.

அ) E.P. Rep., 1905, p.61.

37. திருமலை திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டுத்தொகுதி.

38. குடவாயில் பாலசுப்பிரமணியம், 'சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும்' பக். 253-254.

39. 704 of 1904.

40. 354 of 1916-1917. *திருக்கோவலூர். குலோத்துங்கனது 29-ஆம் ஆட்சியாண்டு, திருப்பாவை ஓதும்போது ஏற்படுத்தப்பட்ட சில நிவேதனங்கள் பற்றியது.* 298 of 1923 *திருக்கோட்டியூர் ஆலயத்தில் பெரிய திருமொழி ஓத ஏற்பாடு.* 298 of 1924 *சுந்தரபாண்டிய தேவர் காலம் திருக்கோட்டியூர், 10-ஆம் நாள் திருவிழாவில் பெரிய திருமொழி ஓதுதற்கு (மார்கழி மாதம்) ஏற்பாடு. உத்தரமேரூரில் கிடைத்த முதல் இராசேந்திரன் காலத்துச் சாசனத்தில் கோயிலில் திருவாய்மொழி ஓதும் மூவர்க்கு வேண்டிய உணவு வசதிகளுக்காக நிபந்தம் ஏற்படுத்தப்பட்டது. 1171-இல் இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் ஐப்பசி, வைகாசி மாதங்களில் திருக்கோவலூரில் திருவாய்மொழி ஓதுதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.*

41. 326 of 1906.

42. A.R. Ep. 1918, p. 148.

43. 557 of 1919.

44. 572 and 585 of 1919.

45. 526 of 1922.

46. 176 and 181 of 1923.

47. *திருக்கோயில் கல்வெட்டுகள் எண். 200, 494 &கோவிந்தராசர் கோயில் கல்வெட்டு எண். 396.*

48. 48 of 1923. *இரண்டாம் இராசேந்திர தேவனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (1061) இச்செய்தி உள்ளது.*
*ச. வே. சுப்பிரமணியன் & ஜி. இராஜேந்திரன் (பதிப்.)* 'Heritage of the Tamils-Temple Arts' *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், (சென்னை 1985) என்னும் நூலினின்றும் திரட்டப்பெற்றவை.*

## இயல்—ஒன்பது

## முடிவுரை

"தொண்டை நாடும் வைணவமும்"—என்னும் பொருளில், "முன்னுரை" தவிர்த்த ஏனைய ஏழு இயல்களில் ஆராயப்பட்ட கருத்துகளும், கிடைத்துள்ள முடிபுகளும் இங்குத் தொகுத்தளிக்கப்படுகின்றன.

இரண்டாம் இயலில் தொன்டைநாட்டின் எல்லையும் அதன் பழமையும் பெருமையும் முதற்கண் கூறப்பட்டன. தொண்டையரும் பல்லவரும் வெவ்வேறானவர் என்று ஆய்ந்து முடிவு செய்யப்பட்டது. அடுத்து வடவேங்கடத்திற்கும் தொண்டைமானுக்கும் உள்ள தொடர்புகள், அகநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்கள் சுட்டும் திருமலை பற்றிய செய்திகள், ஆகியவை சுட்டப்பட்டன. ஆழ்வார் பாசுரத்தொடர்கள் தொண்டைநாட்டுத் திருத்தலங்களைச் சுட்டும் பாங்கு தொகுத்துக்கூறப்பட்டது. அடுத்து, நூற்றெட்டுத் திருப்பதிக்கோவை, நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதிகள் குறிப்பிடும் தொண்டைநாட்டுத் திருத்தல எண்ணிக்கை, அவற்றிடையே உள்ள வேறுபாடு ஆகியன ஆய்ந்துரைக்கப்பட்டன. தொண்டை மண்டல சதகம் புலப்படுத்தும் தொண்டைநாட்டுச் செய்திகள் இறுதியில் தரப்பட்டன.

மூன்றாம் இயலில் "முதலாழ்வார்கள் காலத்தில் வைணவ சமயநிலை" பற்றி ஆராயபபட்டது. அவர்களுடைய சுருக்கமான வரலாறும், காலமும் சுட்டப்பட்டன. சஙகாலப் பொய்கையார் வேறு, பொய்கையாழ்வார் வேறு, இருவரும் வெவ்வேறு ஊரினர்; காலத்தினர், என்று ஆய்ந்து உரைக்கப்பட்டது. அடுத்து முதலாழ்வார்கள் பிறதலங்களைப் பாடியிருப்பினும், குறிப்பாகத் திருமலையைப் பற்றியும், திருவேங்கடவனைப் பற்றியும் ஈடுபாட்டுடன் பாடியுள்ள பாடல்களின் கருத்துகள் தொகுத்துத்தரப்பட்டன. இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டு, சங்க இலக்கிய நெறியில் அமைந்த இவர்களின் பாடல்களில் காணப்படும் திருமலையின் சூழல் ஆராயப்பட்டது. பிறகாலத்தில் வைணவ சமய வளர்ச்சிநிலையில் தத்துவக் கருத்துக்கள் ஆசிரியர்களால் வகுத்து உரைக்கப்பட்டன ; ஆயினும் அதற்கு அடிப்படையாக இவர்களின் பாடல்களில் உள்ள ஒரு சில கருத்துக்கள் இறுதியில் சுட்டப்பட்டன.

நான்காம் இயலில் திருமழிசையாழ்வார் காலத்தில் இச்சமயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆராயப்பட்டன. முதலில் இவரது வரலாறும் காலமும் சுருங்கிய அளவில் ஆய்வு செய்யப்பட்டன. இவரும் சிவாக்கியரும் வேறானவர் என்பது பற்றி ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது. இவரது இரு நூல்களின் அமைப்புகள், அவற்றிலுள்ள கருத்துகள், பக்தியோகம் பற்றிய செய்திகள் ஆகியவை அடுத்துக் கூறப்பட்டன. இவர் பாடியருளிய திருத்தலங்கள் பற்றியும், திருச்சந்த விருத்தத்திலுள்ள

சில பாடல்களில் அமைந்துள்ள வைணவக் கருத்துகள் பற்றியும் ஆராயப்பட்டன. அடுத்து அக்கால நிலையில் சைவ-வைணவ-சமயங்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள், தத்தம் தெய்வங்களையே உயர்த்திக் கூறும் போக்குகள் ஆகியவற்றால் இவர் பாடல்களில் ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இறுதியில் இவர்கால அரசர்கள் செய்துள்ள திருப்பணிகள் பற்றியும் மதிப்பீடு செய்யப்பட்டது.

"ஏனைய ஆழ்வார்கள் காலத்தில் வைணவம்"—என்னும் ஐந்தாம் இயலில் தொண்டைநாட்டுத் திருப்பதிகள் (அகரவரிசைப்படி) பற்றிய செய்திகளையும், பிற ஆழ்வார்கள் அத்திருப்பதிகளைப் பற்றிப் பாடியுள்ள பாசுரங்களின் கருத்துகளையும் பற்றிய விரிவான ஆய்வு இடம்பெற்றது. அவ்வக் கோயில்களின் அமைப்புகள், சிற்பங்கள், அரசர்களின் திருப்பணிகள் பற்றிய செய்திகள் வரிசையாக இடம்பெற்றன. "நந்திபுர விண்ணகரம்"—எது ? என்பது பற்றிய அறிஞர்களின் கருத்துகள் சுட்டப்பட்டுள்ளன. திருமலையின் ஆலய அமைப்பு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. திருக்கோவலூர், திருவயிந்திரபுரம் ஆகிய திருத்தலங்களைப் பற்றிய இயற்கையழகும், அதில் ஈடுபட்டுப் பாடிய திருமங்கை மன்னரின் பாடல் கருத்துகளும் இறுதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அக்காலச் சமுதாயச்செய்திகள் முடிவில் இடம்பெற்றுள்ளன.

"ஆசாரியர்கள் காலத்தில் வைணவம்"என்னும் ஆறாம் இயலில் ஆசாரிய பரம்பரை பற்றி முதலில் கூறிப் பின்னர், உடையவரின் வரலாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர் மைசூர் மாநிலத்திற்குச் சென்றது எந்த அரசன் காலம் ? என்பது பற்றி ஆய்வாளர்கள் கொண்டுள்ள இருவேறு கருத்துக்களைக் கூறி, இவ்வாய்வாளர் சோழர் வரலாற்றின் துணைகொண்டு ஆராய்ந்து, முதற்குலோத்துங்கன் காலமே என முடிவு செய்திருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். உடையவரின் வெவ்வேறு பணிகளைத் தொகுத்து மதிப்பிட்டுள்ளதும், திருக்கச்சிநம்பி, கூரத்தாழ்வான், எம்பார், முதலியாண்டான், பட்டர் ஆகிய பல ஆசாரியர்களின் தொண்டுகளை மதிப்பிட்டுள்ளதும் இவ்வாய்வின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். வடகலை, தென்கலைப், பிரிவுகளும் வேதாந்ததேசிகரின் பணிகள், "குருபரம்பரை"நூலின் தோற்றம். மணவாள மாமுனிகள் இத்தொண்டை நாட்டுத் திருத்தலங்களைப் பற்றிப் போற்றிப்பாடியுள்ள பாங்கு, பிரதிவாதி பயங்கரம் அண்ணா, எறும்பியப்பா ஆகியோரின் பணிகள் ஆகியனவும் ஆய்ந்து கூறப்பட்டுள்ளன. அடுத்து அருள்மிகு வரதராஜர் ஆலய அமைப்புப் பற்றிய செய்திகள் விரிவாக ஆராயப்பட்டன. அக்கோயிலைச் சார்ந்து வைணவ சமய மறுமலர்ச்சி எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றியும் சுட்டப்பட்டது. மணவாள மாமுனிகளுக்குப் பின்னர் தோன்றிய ஆசாரியர்கள் இவ்வாலயத்திற்குச் செய்துள்ள பல்வேறு பணிகள், இங்கு நடைபெறும் வழிபாடுகள் திருவிழாக்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் முதலியன ஆய்ந்து உரைக்கப்பட்டன.

அடுத்து ஆசாரியர்களின் அபிமானத் தலங்கள், குடத்துள் விளக்காய் உள்ள பல்வேறு தலங்கள் பற்றிய விரிவான செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் இவ்வாய்வாளர் பல்வேறு தலங்களுக்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்து சேகரித்த செய்திகள் (புகைப்படங்கள்) இங்கு. இந்நூலில் இடம் பெறப் பெருந்தொகை தேவைப்படுவதால் விடப்பட்டன. வைகானச—பாஞ்சரத்திர ஆகமம் பற்றிய கருத்துக்கள் பின்இணைப்பில் தரப்பட்டுள்ளன.

இக்காலக் கட்டத்தில் தோன்றிய பாரத வெண்பா முதல் பல்வேறு வகையான இலக்கியங்களைப் பற்றிய செய்திகள் அரிதில் முயன்று தொகுத்து இவ்வியலில் காலவரிசைப்படி ஆங்காங்கு தரப்பட்டுள்ளன. பிராமணரல்லாத ஆசாரிய புருடர்களைப் பற்றிய செய்திகளுடன் இவ்வியல் முடிவடைகிறது.

ஏழாம் இயலில் "தற்காலத்தில் வைணவம்" பற்றிய செய்திகள் ஆராயப்பட்டன. முதலில் நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தைப் பதிப்பித்தவர்களில் பெரும்பாலோர் இந்நாட்டினரே என்பது பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. அடுத்து இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் தமிழாக்க நூல்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றன. காஞ்சி—பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரின் பணிகள் முழுமையாக மதிப்பிட்டு, அவர் இயற்றிய நூல்களின் விவரங்கள் தொகுத்தளிக்கப்பட்டன. முக்கூரில் தோன்றிய அகோபிலமடம் நாற்பத்து நான்காம் பட்டத்து ஜீயரின் பணிகள் எடுத்துரைக்கப்பட்டன. இறுதியில் இக்காலத்தில் வைணவம் வளர்க்கும் சபைகளைப் பற்றிய விவரங்களும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

"கல்வெட்டில் தொண்டைநாட்டுத் திருப்பதிகள்" என்னும் எட்டாம் இயலில், பல்வேறு அரசர்களின் காலத்தில் செய்யப்பட்ட திருப்பணிகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும் அவ்வக்கால அரசியல், சமுதாயச் சூழல்களின் தாக்கம் ஆலயங்களை எவ்வாறு உயர்த்தியுள்ளன, பாதித்துள்ளன என்பது பற்றிய செய்திகளும் இங்கு இடம்பெற்றுள்ளன. அக்கால சமுதாய நிலைகளை, மாற்றங்களை அறியக் கல்வெட்டுகள் எவ்வாறு துணைபுரிகின்றன என்பது பற்றியும் சுட்டப்பட்டுள்ளது. திருமால் திருக்கோயில்களில் நாலாயிர திவ்வியப்பிரபந்தம் சேவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்ட செய்திகளைத் தருவதுடன் இவ்வியல் நிறைவடைகின்றது.

இவ்வாறு மேற்கூறிய இயல்களில் "தொண்டைநாட்டில் வைணவ சமயம்" எவ்வாறு தோன்றி, வளர்ந்து செல்வாக்குப் பெற்றுள்ளது (Influences of vaishnavism) என்பது பற்றிய பல்வேறு செய்திகள் ஆராயப்பட்டன. எனினும் இவ்வாய்வு ஒரு முடிந்த முடிபன்று. இவ்வாய்வு ஒரு முன்னோடியாகவே மேற்கொள்ளப்பட்டது. இன்னும் விரிவான முறையில்,

1. தொண்டைநாடு வைணவ சமயத்திற்கு அளித்த கொடை,
2. ஸ்ரீ இராமானுசரின் விரிவான பணிகள்,
3. ஆசாரியர்கள் அனைவருடைய நூல்களையும் வடமொழியினின்றும் தமிழாக்கம் செய்து, அவற்றின் திரண்ட கருத்துகளைத் தொகுத்துக் தருதல்,
4. இதுவரை இங்குத் தோன்றியுள்ள தமிழ் இலக்கியங்களைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வு,
5. கல்வெட்டுகள் அனைத்தையும் வரிசையாகத் தொகுத்து, அவைமூலம் அறியக்கூடிய செய்திகள்,

ஆகிய தலைப்புகளில் ஆராய்ந்தால் மேலும் பல செய்திகள் துலங்கும் என்பது உறுதி.

# துணைநூற்பட்டியல்

## 1. தமிழ் நூல்கள் :


அரங்கராஜன், இரா., : நம்பிள்ளை உரைத்திறன், அமுதநிலையம் லிமிடெட், முதல் பதிப்பு, சென்னை, 1986.

அருணாசலம், ப., : வைணவ சமயம், பாரி புத்தகப்பண்ணை, முதல் பதிப்பு, சென்னை, 1982.

அருணாசலம், மு., : தமிழ் இலக்கிய வரலாறு — 9-ஆம் நூற்றாண்டு, முதல் பாகம் (ஆ.இ)
— 12-ஆம் நூற்றாண்டு, முதல் பாகம் (ஆ.இ)
— 13-ஆம் நூற்றாண்டு, மாயூரம் (ஆ.இ)

அருணாசலக்கவுண்டர், கு., : தமிழ்ப் பண்பாட்டில் வைணவம், சமுதாயம் — பிரசுராலயம், முதல் பதிப்பு, கோவை, 1982.

இராகவையங்கார், மு., : ஆழ்வார்கள் காலநிலை, மணிவாசகர் நூலகம், புதிய பதிப்பு, சிதம்பரம், 1981.
ஆராய்ச்சித்தொகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், முதல் பதிப்பு, தஞ்சாவூர், 1984.

இராசமாணிக்கம்பிள்ளை, மா., : பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, முதல் பதிப்பு, சென்னை, 1964.

இராசகோபாலன், டிஎஸ்., : வைணவ ஆசாரியர்கள் — பகுதி 3, ஸ்டார் பிரசுரம், முதல் பதிப்பு, சென்னை (ஆ.இ)

இராமகிருஷ்ணானந்தர், கா.ஸ்ரீ.ஸ்ரீ. (மொழி.) : ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீராமகிருஷ்ணமடம், முதல் பதிப்பு, சென்னை, 1992.

இராமசாமி, மு., : பெரும்புகழான் கூரத்தாழ்வான், திருவரங்கம் பதிப்பகம், முதல் பதிப்பு, இராசிபுரம், 1990.

உமாசங்கரன், : திருத்தலங்கள் நாற்பது, நர்மதா பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை, 1987.

எதிராஜராமாநுஜதாஸன், : குருபரம்பரை வைபவம், ஆழ்வார்கள் அமுதநிலையம், முதல் பதிப்பு, சென்னை, 1982.

கலியாணராமன், எஸ்., : ஸ்ரீஇராமாநுஜர் சரித்திர ஆராய்ச்சி மகிமை, (ப.இ.), முதல் பதிப்பு, சென்னை, 1961.

கிருஷ்ணசாமி அய்யங்கார், எஸ்.
இராகவன், டி.வி.எஸ்., (மொழி) ஸ்ரீவேங்கடேச தேவஸ்தான வரலாறு — பாகம் 1, 2 (பஇ), முதல் பதிப்பு, சென்னை, 1984.

குலசேகரன், எஸ்., : வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை, திருமகள் வெளியீடு. முதல் பதிப்பு, சென்னை, 1988.

கோபாலகிருஷ்ணமாச்சாரியார்,
வை. மு., (உரை) : கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி, ஐந்தாம் பதிப்பு, சென்னை 1958.

சதாசிவ பண்டாரத்தார் தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதல்பதிப்பு, அண்ணாமலைநகர், 1974.

சுப்பிரமணியம், ச. வே., : தமிழ் இலக்கிய வகையும் வடிவமும், தமிழ்ப்பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை, 1984.

சுப்பு ரெட்டியார், ந., : திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும், பாரிநிலையம், முதல்பதிப்பு, சென்னை, 1975.

தொண்டைநாட்டுத் திருப்பதிகள், பாரிநிலையம், முதல் பதிப்பு, சென்னை, 1982.

சில நோக்கில் நாலாயிரம், பாரிநிலையம், முதல் பதிப்பு, சென்னை, 1983.

ஞானசுந்தரம் தெ., : பெரியதிருமொழி உரையின் தமிழாக்கம் (முதல் இருநூறு பாசுரங்கள்) தமிழ்ப் பல்கலைக் கழகம், முதல் பதிப்பு, தஞ்சாவூர், 1984.

வைணவ உரைவளம், தாயம்மை பதிப்பகம், முதல்பதிப்பு, சென்னை, 1989.

டானியல் ஸ்மித்,
வேங்கடாசாரி,
கே. கே. (மொழி) : பாஞ்சராத்திர நூல் விளக்கம் (ப. இ.) முதல் பதிப்பு, சென்னை, 1987.

தங்கவேலு, கோ., : இந்தியக்கலை வரலாறு பகுதி 1, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், முதல் பதிப்பு, சென்னை, 1976.

நாகசாமி, இரா., : **மாமல்லை,** தமிழக அரசு தொல்லியல்துறை வெளியிடு, முதல்பதிப்பு, சென்னை, 1980.

நாராயணசாமி அய்யர், அ., பின்னத்தூர், : **நற்றிணை உரை,** கழகப்பதிப்பு, முதல்பதிப்பு, சென்னை (ஆ.இ.)

நாராயணஸ்வாமி, வெ., : **தமிழக அற்புத ஆலயங்கள்,** நர்மதா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1985.

**திருமலை வைபவம் - வரலாறு,** நர்மதா பதிப்பகம், முதல்பதிப்பு, சென்னை, 1987.

பார்த்தசாரதி, ச. : **ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம் என்னும் திருவேங்கடத்தான் திருப்பள்ளி எழுச்சி,** புதுவெள்ளம் வெளியீடு, முதல்பதிப்பு, மறைமலைநகர், சென்னை (603 209), 1987.

பாலசுப்பிமணியம், எஸ். ஆர்., : **முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்,** தமிழ்வெளியீட்டுக் கழகம், தமிழகஅரசு, முதல்பதிப்பு, சென்னை, 1966.

பாலசுப்பிரமணியன், குடவாயில், : **சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்,** தமிழ்ப் பல்கலைக் கழகம், முதல்பதிப்பு, தஞ்சாவூர், 1987.

பாஸ்கரத்தொண்டைமான், தொ. மு., : **வேங்கடம் முதல் குமரிவரை - பாகம் 1,** எஸ். ஆர். பாலசுப்பிரமணியப்பிள்ளை பப்ளிஷர்ஸ், முதல்பதிப்பு, திருநெல்வேலி, 1960.

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியார், : **பெரிய திருமொழியில் திருக்குறுந்தாண்டகமும், திருநெடுந்தாண்டகமும் - திவ்யார்த்த தீபிகை உரை,** க்ரந்தமாலா ஆபீஸ், முதல்பதிப்பு, காஞ்சிபுரம், 1968.

**முதல், இரண்டு, மூன்று திருவந்தாதிகள், நான் முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் - திவ்வியார்த்த தீபிகை உரைகள் - வை** பதிப்பு.

புருடோத்தமநாயுடு, பு. ரா., (மொழி) : **ஸ்ரீவசனபூஷணம் மூலமும், மணவாள மாமுனிகள் அருளிய வியாக்கியானத்தின் தமிழாக்கமும்,** (ப.இ.) முதல்பதிப்பு, கடலூர், 1970.

திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் - மூன்று, ஆறாம் பத்துகள், சென்னைப் பல்கலைக்கழகம், நான்காம் பதிப்பு, சென்னை (ஆ.இ.)

மகாதேவன், டி.எம்.பி., இராஜாபகதூர், ஞா., (மொழி) : இந்து சமயத் தத்துவம், தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழகஅரசு, முதல்பதிப்பு, சென்னை, 1964.

ராஜசேகரன், சு., : திருமயிலைத் திருத்தலம் - இலக்கிய வரலாற்றுப்பார்வை, ராஜலட்சுமி பதிப்பகம், முதல்பதிப்பு, சென்னை, 1989.

வத்ஸங்காசாரியர் சுவாமி, : ஸ்ரீவரதராஜஸ்தவம், (பதிப்) எஸ். கிருஷ்ணமாசாரி, முதல்பதிப்பு, சென்னை, பிரபவ - தை.

வரதராசன், மு., : தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதமி, முதல்பதிப்பு, புதுதில்லி, 1972.

வரதராஜ அய்யர், இ.எஸ்., : தமிழ் இலக்கிய வரலாறு, (கி.பி. 1-1100), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இரண்டாம் பதிப்பு, அண்ணாமலைநகர், 1979.

வேங்கடகிருஷ்ணன், : தொண்டைநாட்டுத் திருத்தலங்கள், ஸ்ரீதாசார்யன், மூன்றாம் ஆண்டுமலர், சென்னை, 1981.

வேங்கடசாமி, சீனி, மயிலை., : மகேந்திரவர்மன், கழகவெளியீடு, முதல்பதிப்பு, சென்னை (ஆ.இ.)

வேங்கடசாமி ரெட்டியார், கி., (பதிப்.) : நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், இரண்டாம்பதிப்பு, சென்னை, 1981.
ஸ்ரீவேதாந்ததேசிகர் சதகம், புதுவை திருமால் திருநெறிமன்றம், முதல்பதிப்பு, புதுவை, 1966.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., (பதிப்.) : முதலாயிரம் திவ்வியப்பிரபந்தம், மர்ரே எஸ். ராஜம், சென்னை, 1981.

2. அச்சிடப்படாத ஆய்வுநூல் :

செல்லக்கிருஷ்ணன், ந., : நாலாயிர திவ்வியப்பிரபந்தப் பதிப்புகள், புதுவைப் பல்கலைக்கழக எம். ஃபில். பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, தமிழ்த்துறை, காரைக்கால், 1991.

இதழ்களில் வெளியான கட்டுரைகள்

உதயநாராயணன், த. : "கொடியவரின் கூடாரமாகிய கோயில்கள்" வாசுகி வாரஇதழ், சென்னை, செப்டம்பர் 18 - 24, 1992.

சுப்பிரமணியம். கே. : "அத்திமலையில் புதுப்பிக்கப்படும் அழகிய கோயில்," தினமணி, டிசம்பர் 12, 1994.

சேதுராமன், என், குடந்தை, : "பண்டைத்தமிழகத்தில் நூலகங்கள்", தினமணி, சென்னை, ஜூலை 21, 1989.

தமிழண்ணல், : "தமிழ்மணி கேள்வி அரங்கம் பகுதி", தினமணிசுடர், சென்னை, ஆகஸ்டு 8, 1992.

தாமரைக்கண்ணன், : "சிங்கவரம் கோயில்", பெருங்கருணை மாதஇதழ், சென்னை, 1987.

நாகசாமி, இரா., : "கதைசொல்லும் தங்கக்காசு", தினமணி, சென்னை, ஆகஸ்டு 4, 1989.

பாலசுப்பிரமணியன், குடவாயில், : "நந்திபுரம்", தினமணி, பொங்கல் சிறப்பிதழ், சென்னை, ஜனவரி 14, 1990.

வசந்தி. சி., : "வரலாற்றில் பொன்விளைந்த களத்தூர்", தினமணி, சென்னை, மார்ச் 2, 1992.

ஸ்ரீவத்சாங்காசாரியார், : "ஸ்ரீவேங்கடேச சுப்பிரபாத மகிமை", கல்கி வாரஇதழ், சென்னை, நவம்பர் 3, 1991.

மஞ்சரி, மே, 1973 (மாதஇதழ்).

ஸப்தகிரி - திருமலை திருப்பதி தேவஸ்தான மாதஇதழ்கள், டிசம்பர் 1988, ஜன, பிப், மார்ச், ஏப், மே-1989.

கலைக்களஞ்சியம் : தொகுதிகள் 2, 4, 7, 9 - தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை.

வாழ்வியல் களஞ்சியம் : தொகுதி - 4, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. பிற :

ஸ்ரீராமாநுஜர் நினைவுமலர், ஸ்ரீராமாநுஜர் விழாமலர்க்குழு வெளியீடு, இராதாகிருஷ்ணன், மு., (தொகுப்.) புதுவை, 1979.

108 திவ்யதேசவைபவம், "லிப்கோ" வெளியிடு, முதல்பதிப்பு, சென்னை, 1986.

ஸ்ரீதேசிகப்பிரபந்தம், "லிப்கோ" வெளியீடு - சென்னை, மூன்றாம்பதிப்பு, 1982.

*ஸ்ரீவைஷ்ணவ சதாசார சங்கிரகம், லிப்கோ வெளியீடு - சென்னை.*

*திருகோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் வைபவம், (பதிப்.) புதுவை. துரைரங்கராமாநுஜதாஸர் முதல்பதிப்பு சிங்கிரிகோயில், 1958).*

*கோ. கிருபாநிதிப்பிள்ளை மணிவிழாமலர் (3 - 05 - 1991) (தொகு.) இராதாகிருஷ்ணன், மு., புதுவை.*

*அண்ணகராசாரிய சுவாமிகள் வாழ்க்கை வரலாறு நூற்றாண்டு நினைவுமலர், வேங்கடகிருஷ்ணன் (பதிப்.) கீதாசாரியன் வெளியீடு, முதல்பதிப்பு, சென்னை, 1992.*

*ஸ்ரீபுதபுரி என்கிற ஸ்ரீபெரும்புதூர் தலமகாத்மியமும் ஸ்ரீராமாநுஜார்ய திவ்விய சரிதைச் சுருக்கமும் - இராமாநுச நிலைய வெளியீடு, 8, பழைய மண்டித்தெரு, ஆர்க்காடு - 632 503.*

4. **நேர்காணல் :**

   1. *கிருஷ்ணசாமி அய்யங்கார், வயது 65, ஸமஸ்கிருத வித்துவான், திருவத்திபுரம், 604407.*

   2. *சடகோப இராமாநுஜஸ்வாமி, ஏந்தூர், வயது 80, வைணவநூல் பதிப்பாளர், முதலியார்பேட்டை, புதுவை.*

5. BOOKS IN ENGLISH :

**Agama and Silpa,** (Ed). Venkatachari, K.K.A., Ananthacharya Indological Research Institute, First Edition, Bombay 1984.

**A Hand Book of South Indian Images,** by Srinivasan, T.N., Published by Tirumalai Tirupathi Devasthanams, Tirupathi, Second Edition, Tirupathi, 1982.

**"Early History of Vaishnavism"**, by Dines Chandra Sircar, **"The Cultural Heritage of India"**, Vol. IV, Haridas Bhattacharya, (Ed), The Ramakrishna Mission Institute of Culture, Fifth Edition, Calcutta, 1983.

**History of Srivaishnavism in the Tamil Country-Post Ramanuja,** by Jagadeesan, N., Koodal Publishers, First Edition, Madurai, 1977.

**Sri Varadaraja Swami Temple-Kanchi**, by Raman, K.V., Abinav Publications, First Edition, New Delhi, 1975.

Brahma Sutra — Sri Bhashya with Sruthaprakasika, Two parts, Visishtadwaita Pracharini Sabha Desika Bhavanam, Mylapore, Madras - 4.

Book Review — THE HINDU, Dt. 22-08-1989.

**Heritage of the Tamils - Temple Arts**, by Subramanian S.V. , & Rajendiran, G., World Tamil Research Centre, Madras, 1985.

A Topographical List of the Inscriptions of the Madras Presidency, Vol. I, No. 42. by V. Rangacharya.

Golden Jubilee Celebrations, Souvenir, T.T.D. Administration, 1933—1983, April 22–24, 1984

## அட்டவணை—I

### முதலாழ்வார்கள் பாடிய திருத்தலங்கள்—பட்டியல் :

| வ. எண் | திவ்விய தேசங்கள் | பொய்கையாழ்வாரின் பாசுர எண்ணிக்கை | பூதத்தாழ்வார் பாசுரங்கள் | பேயாழ்வார் பாசுரங்கள் |
|---|---|---|---|---|
| 1. | திரு அத்தியூர் | — | 2 | 1 |
| 2. | திரு அட்டபுயகரம் | — | — | 1 |
| 3. | திருஅல்லிக்கேணி | — | — | 1 |
| 4. | திருஅரங்கம் | 1 | 4 | 2 |
| 5. | திருக்கடிகை (சோழசிம்மபுரம் > சோளிங்கபுரம்) | — | — | 1 |
| 6 | திருக்கோட்டியூர் | — | 2 | 1 |
| 7. | திருக்கோவலூர் | 2 | 1 | — |
| 8. | திருக்குடந்தை | — | 2 | 2 |
| 9. | திருமலை | 10 | 9 | 19 |
| 10. | திருத்தண்கால் | — | 1 | — |
| 11 | திருநீர்மலை | — | 1 | — |
| 12. | திருப்பரமபதம் | 2 | — | 1 |
| 13 | திருப்பாடகம் | — | 1 | 1 |
| 14. | திருபாற்கடல் | 1 | 2 | 4 |
| 15. | திருக்கடன்மல்லை | — | 1 | — |
| 16. | திருத்தஞ்சைமாமணிக் கோயில் | — | 1 | — |
| 17. | திருமாலிருஞ்சோலை | — | 3 | 1 |
| 18. | திருவெஃகா | 1 | — | 4 |
| 19. | திருவேளுக்கை | — | — | 3 |
| 20. | திருவிண்ணகர் | — | — | 2 |

இதனால், திருவரங்கத்தைக் காட்டிலும் திருமலையே முதலாழ்வார்களின் உள்ளத்தைக் கவர்ந்தது என்பது இனிது விளங்கும்.

## அட்டவணை—II

### திருவல்லிக்கேணி கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ பல்லவகுலதிலக பார
த் வாஜ கோத்ரா லங்கார பதியாகிய ஸ்ரீ
தந்திவர்ம மஹாராஜர்க்கு வர்ஷவர்த்தந
ம் யாண்டு பன்னிரண்டாவது திருவல்லி
க்கேணி குலங்கிழார்கள் (க) குமாரச்சேரிப் புலம்
ஒற்றி இட்டு நாற்பத்தைங்காடி நெல்பொலி ஊட்டதிரு
வடிகட்கு திரு வமர்து முட்டப் புகழ்த்துணை விசை
யரயன் முப்பதின் காடி நெல்லும் அஞ்சு கழஞ்சு
பொன்னுங் கொடுத்து மீட்டுத் தனதாக்கி நாற்பத்
தைங் காடியந் நிசதி அஞ்ஞாழி நெல்லா விருந்நா
ழி தூக்குத்தலரிசியா லிராப் போனகஞ் சங்கச
ர் மனுஞ் சட்டிசர்மனும் இளைய சட்டிசர் மனுங்
காட்டு வாரானா (ர்) கள் முட்டில் (ல) விப்புலத் துந் தத்தன் புல
த்துங் காரைக்கிழான் புலத்தும் ஸ்வாமி போகத்துட்டிருவ
ம்ர்து காட்டுவோமானோம் இத்தர்மத்துள்ளார்யாவ
ரேனுங் கோச்சேவது செயது செலுத்த வொட்டி குடுத்
தோம் ஈழவிளக்கும் வட்டி லோஉறப் பானையும்ரக்ஷிப்ப
து புகழ்துணை விசயரயன் தர்மம் இது இதனை ர
க்ஷித்தாரடி இரண்டும் என்முடி மேலின ஸ்வஸ்தி ||

# அட்டவணை—III

## திருமலை வரலாறு

**ஏழுமலை:**

திருமாலே வராகமாக வந்து நிலமகளை மீட்டதால் வராககிரி ; விருஷபாசுரனைப் பகவான் ஆட்கொண்டு பேரருள் புரிந்ததால் விருஷபகிரி ; அஞ்சானதேவி தவம் செய்து அனுமனைப் பெற்றதால் அஞ்சனாத்திரி ; ஆதிசேடனே திருமலையாகி எம்பெருமானைத் தாங்குவதால் சேஷகிரி ; பாவங்களை எரிக்கும் பெருமையுடையதால் வேங்கடகிரி. (வேம்—பாவம் ; கடம் எரித்தல்). ஸ்ரீமந்நாராயணனே வந்து கோயில் கொண்டதால் நாராயணகிரி ; உலக நன்மைக்காக யாகம் செய்யும் ஞான முனிவர்களின் இருப்பிடமானதால் ஞானகிரி என்னும் திருப்பெயர்கள் அமைந்தன.

ஸ்ரீ கிருஷ்ணாவதார முடிவில், சீநிவாசனின் திருவுருவம் ஏற்பட்டு, ஏழுமலைகளின் மேலே அமைந்ததாகவும், சில ஆயிரம் ஆண்டுகள் வரை தேவர்களால் மட்டுமே ஏழுமலையான் வணங்கப்பட்டதாகவும் ஓர் ஐதீகம் உண்டு.

> "வேங்கடமே விண்ணோர் தொழுவதும், மெய்ம்மையால்
> வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதும், வேங்கடமே"—

என்பார் திருமழிசையாழ்வார்.

தற்கால வரலாற்று அர்ஞர்களின் குறிப்பின்படியே பார்த்தாலும், பாரதப்போர் நடந்த காலம் கி. மு. 9102. மகாபாரத அருச்சுனன் "அரவக்கிரி" (சேஷாசலம்) வந்து புனித நீராடியதாக மகாபாரதம் கூறுகிறது. கி. மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து திருமலையின் பெருமை நாடெங்கும் பரவலாகப் பேசப்பட்டிருக்கிறது. கி. பி. 1 முதல் மக்கள் போக்குவரத்து திருமலையில் தொடங்கியுள்ளது. தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் திருமலையின் சிறப்புகள் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் சேரநாட்டிலிருந்து திருமலைக்கு யாத்திரீகள் சென்றதாகக் குறிப்பு உள்ளது. கி. பி. 2-இன் பிற்பகுதியில் திருப்பதி மலைப்பகுதியை "புல்லிதிரையன்" என்னும் வடுகர் பரம்பரையினர் ஆண்டனர். சோழ மன்னர்கள் அவர்களை வென்று அப்பகுதியைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

வேங்கடாசலபுராணத்தில் வரும் சந்திரகிரி சோழமன்னரில் தொடங்கி, சுதர்மன், ஆகாயராசன் என வளர்ந்து, தொண்டைமான் சக்கரவர்த்தியால் திருமலை ஆலயம் உருவாகியுள்ளது. புராணகால மேற்படி தொண்டைமானை அடுத்து, சோழபரம்பரையில் வந்த தொண்டைமான் இளந்திரையன் (2-ஆம் நூற்றாண்டு) இப்பகுதியைத் "தொண்டை மண்டலம்" என்ற பெயரோடு, 24 கோட்டங்களாகப் பிரித்து ஆண்டிருக்கிறான். அதில் ஒரு கோட்டம்"திருவேங்கடக் கோட்டமாகும்".

கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்ற வால்மீகி இராமயணத்தித்தில் திருவேங்கடத்தின் புகழ் பாடப்பட்டிருக்கிறது. கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பெரும்பகுதியோடு, தொண்டைமண்டலமும் பக்திஉணர்வே இல்லாத "களப்பிரர்" என்ற முரட்டு இனத்தவரால் ஆளப்பட்டு நாடெங்கும் அறநெறிகளும், ஆலய வழிபாடுளும் நின்றுவிட்டிருக்கின்றன. மேற்படி காலகட்டத்தில் பிரமவாதம், ஆசீவகம், நிகண்டம், சாங்கியம், வைசேடிகம், லோகாயுதம் முதலான பல மதக்கலவரங்களாலும், சமண, பௌத்த மதங்களின் ஆவேச வளர்ச்சியாலும், சைவ வைண்வ பக்திநெறிகள் சக்தியிழந்திருந்தன. (72 துர்மதங்கள் நாடு முழுவதும் இருந்ததாக ஆதிசங்கரர் பிற்காலத்தில் குறிப்பிடுகிறார்).

கி. பி. 6-ஆம் நூற்றாண்டு :

சைவ வைணவங்களைக் கண்களாகப் பேணிய பல்லவர்காலம். ஆழ்வார்கள் (கி. பி. 6-9 முடிய) 108 திவ்விய தேசமூர்த்திகளுக்கான நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைப் பாடியருளியனார்கள். 10 ஆழ்வார்கள் திருமலை எம்பெருமானை 213 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

வைணவ ஆசாரியர்களான நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, பிள்ளான், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, தேசிகர், மணவாள மாமுனிகள் ஆகியோருடன், கம்பர், அருணகிரி, அகோபில ஆதிவண்சடகோப ஜீயர், இராயசம் வேங்கடபதி, புரந்தரதாசர், பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், சேத்திரய்யா, பக்த இராமதாசர், தியாகப்பிரம்மம், முதலிய பல மகான்களோடு, தென்னாட்டு இந்து சமய மும்மூர்த்திகளான சங்கரர் (788—820), இராமாநுஜர் (1017—1137) மத்வர் (1198—1275) ஆகியோரும்திருப்பதிக்குப் பெருமை சேர்த்தவர்கள்.

இங்கு சுவாமி புஷ்கரணி, தும்புருதீர்த்தம், நாரததீர்த்தம், ஆகாய கங்கை முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன.

திருமலை வரலாற்றை நாம் அறிய சுமார் 1060 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவை தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகிய மொழிகளில் உள்ளன. திருமலை. மேல் கீழ் ஆலய உட்பிராகாரங்களில் ஏராளமான தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. இவ் ஆலய ஆரம்பப்பாதுகாப்பாளரான சோழர், பாண்டியர்களோடு, 6-ஆம் நூற்றாண்டு முதல் பல்லவ மன்னர்களும் இடம்பெறுகின்றனர்.

**கி.பி. 7-ஆம் நூற்றாண்டு :**

நாதமுனிகள் திருமலைக்கு வந்து ஆலய வழிபாட்டு நடைமுறை சிறப்பின்றி இருப்பதைக் கண்டிருக்கிறார். பின் அவர் பெயரர் ஆளவந்தாரின் பெயரானகிய திருமலை நம்பியின் திருப்பதி தொண்டு குறிப்பிடத்தக்கது. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நந்திவர்மப் பல்லவன் தந்த ஏராளமான பொற்காசுகளால், ஆலய நந்தாவிளக்குத் திருப்பணி சிறப்படைகிறது.

**கி.பி. 8-ஆம் நூற்றாண்டு :**

தென்னாட்டில் சமண, பௌத்த மதங்கள் மெருகிழுந்தன. பிற மதச்சூறாவளியால் வீழ்ந்து விடாதிருக்க, சைவ வைணவச் செடி இரண்டும் ஒரு மரமாக பிணைந்து வளர்ந்த நிலைமாறி, "நீயா ? நானா ?"பூசல்கள் தோன்றிப் புகைந்தநேரம், "திருமலைப் பெருமாள் சிவனா ? முருகனா ?அம்பாளா ?" என்ற சர்ச்சை வருவதால், வழிபாட்டுப் பக்தியற்ற பட்டர்களை அப்போதாண்ட யாதவ மன்னன் தண்டித்து வெளியேற்றவே, ஆலயம் வழிபாடற்றுப் போன நிலையில் சைவர்கள் கோயிலை ஆக்கிரமித்து உரிமை கொண்டாடியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது உண்மையாக இருக்கமுடியாது என்பதை அடுத்த நூற்றாண்டு நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டப்போகின்றன.

**கி.பி. 9-ஆம் நூற்றாண்டு :**

சைவ, வைணவ வேறுபாடற்ற ஆதிசங்கரர் திருமலைக்குவந்து, ஜனாகர்ஷண (மக்களை ஈர்க்கும்) தனாகர்ஷண (செல்வத்தை ஈர்க்கும்) யந்திரப் பிரதிஷ்டை" செய்தார். சீனிவாசப் பெருமாளை அடிமுதல் முடிவரை வருணித்து "விஷ்ணு பாதாதி கேசாந்தர ஸ்தோத்திரம்"—பாடியுள்ளார். கி. பி. 828-இல் திருமலைகருவறை புதுப்பிக்கப்பெற்றதால் "திருவிளங்கோயில்" ஏற்பட்டுத் தற்காலிக வழிபாடுகள் நடந்துள்ளன. சோழ பரம்பரையைச் சேர்ந்த "சாமவை"எனும் பெண்ணரசி 3 ஆயிரம் குழி நிலத்தையும், 47 கழஞ்சு பொன்னையும் திருமலை ஆலயத்திற்கு வழங்கினாள்.

**10-ஆம் நூற்றாண்டு :**

கி. பி. 952-இல் பராந்தகச் சோழரின் படைத்தலைவன் ஏராளமான பொன்னாபரணங்களை திருமலை ஆலயத்திற்கு வழங்குகிறான். இந்நிலையில் கோயிலைப் பேணவேண்டிய குடும்பத்தார் சிலரால் ஆலயப் புனிதம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. எனவே, சைவர்கள் ஏராளமாக வந்து ஏழுமலையானை வழிபடவே முன்பே புதைந்துகொண்டிருந்த சைவ, வைணவமூர்த்தி பேதப்புகை, தீயாய்க் கனிந்திருக்கிறது.

**11-ஆம் நூற்றாண்டு :**

முதல் இராச இராசனின் காணிக்கைகளோடு, சோழஅரசி அம்மனார் என்ற பெண்ணரசியின் 57 கழஞ்சுப்பொன்னும் திருமலை ஆலயத்திற்குக் கிடைத்திருத்திறது. ஸ்ரீராமாநுஜர் திருவரங்கத்திலிருந்து ஆலய நிர்வாக சேவைக்கு அனந்தாழ்வான் என்னும் தமது சீடரை அனுப்புகிறார். 1030-இல் உடையவர் திருமலைக்குவந்து சென்றிருக்கிறார். மூர்த்தி பேதப்பூசலும், ஆலய நடைமுறைக் குழறுபடிகளும் அவரைத் தீவிரமாகச் சிந்திக்கவைக்கின்றன.

**12-ஆம் நூற்றாண்டு :**

யாதவ, சாளுவ, காகதிய, ஹொய்சள மன்னர்களோடு, உடையவரால் வைணவரான விஷ்ணுவர்த்தனரும் திருமலைப் பெருமாளைப் போற்றிய நூற்றாண்டு, கி. பி. 11-இல் இரண்டாம் முறையாக உடையவர் திருமலைக்கு வந்து ஆலய நிருவாக நடைமுறை, வழிபாட்டுமுறை ஆகியவற்றை ஒழுங்குபடுத்தியதோடு, கீழ்த்திருப்பதி கோவிந்தராஜப்பெருமாள் ஆலயத்தையும் விரிவுபடுத்தி, தன்னலமற்று ஆலயத்தை நிருவகிக்க, "ஜீயர்கள்"ஸ்தானத்தை ஏற்படுத்தி, திருமலையின் முழு நிருவாகப் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைக்கிறார்.

அவர் 3 நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த மூர்த்திபேதச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார். "அகலகில்லேன் இறையுமென்று அவர்மேல் மங்கைஉறை மார்பன்"—சங்கு, சக்கர சீநிவாசன் தான் என்று கட்டி தேவராயமன்னன் அவையிலும் உறுதிப்படுத்துகிறார். அவர் மூர்த்திபேதத்தை விரும்பாதவர். திருநாராயணபுரத்தில் சிதிலமடைந்திருந்த சிவாலயத்தைச் சீர்படுத்தியுள்ளார்.

**13-ஆம் நூற்றாண்டு :**

உடையவர் கட்டளைப்படி இரு மடாலய "ஜீயர்களால்" திருமலை ஆலய நிருவாகம் பெருவளர்ச்சி கண்டு, இதுவரை தடைப்பட்டிருந்த "பிரம்மோற்சவம்" மீண்டும் தொடங்குகிறது. 1251-இல் நெல்லூர், கடப்பைவரை கைப்பற்றிய சடையவர்ம சுந்தரபாண்டியன் திருமலை ஆலயத்துக்குப் பல பொற்கலங்களைக் காணிக்கையாகத் தருகின்றான்.

1260-இல் வீரநரசிம்ம யாதவராயர் ஆலயக்கருவறை "ஆனந்தநிலைய விமானத்" திற்கு முதன்முலாகப் பொன் வேய்ந்தார். 1268-இல் தேசிகர் திருமலைக் கோயிலின் கண்டாமணியின் அம்சமாக அவதரித்து ஆலயத்தோடு ஒரு நூற்றாண்டுக்காலம் இரண்டறக் கலந்தே வாழ்ந்திருக்கிறார். இக் காலகட்டத்தில்தான், மகான் வியாச தீர்த்தரின் சேவையும், அகோபிலமட ஜீயர்களது கவனிப்பும் ஆலயத்திற்குக் கிடைக்கிறது.

1294-இல் டில்லி பாதுஷா அலாவுதீன், தென்னாட்டின் மேல் முதன்முதலாகப் படையெடுத்து, ஏராளமான பொன்னாபரணங்களைக் கவர்ந்து சென்றான்.

**14-ஆம் நூற்றாண்டு :**

1307, 1310 (மாலிக்காபூர்) 1317 (குஸ்ருகான்) 1323 (உலூகான்) இவ்வாண்டுகளில் முகமதியரின் தொடர் படையெடுப்புகள். 1325-இல் தென்னாட்டின் பெரும்பகுதி துக்ளக் வசம் வந்தது. 1336-இல் விஜயநகரப் பேரரசு தோன்றியது. அதன் கிளைகளான சங்க, சாளுவ, துளுவ மன்னர்கள் திருமலைச் சேவையையே முழுமுதற்கடமையாக ஏற்கின்றனர். 1356-இல் சாளுவ மங்க தேவர் கோபுரத்துக்குப் பொன்வேய்ந்தார்.

முகலாயரின் சூறையாடலிலிருந்து திருமலையில் சுமார் 50 ஆண்டுகள் வைத்துக் காப்பாற்றப்பட்ட ஸ்ரீரங்கநாதர் 1371-இல் மீண்டும், திருவரங்கம் போய்ச் சேருகிறார்.

**15-ஆம் நூற்றாண்டு :**

விஜயநகரப் பேரரசு தழைத்துச் செழித்த இக்காலகட்டத்தில், அவர்களது வழிபடு கடவுளாகிவிட்ட திருமலை ஆலயம், வரலாறு காணாத வகையில் பொருள் வளம் கண்டதாக வரலாறு கூறுகிறது. 1404-இல் இரண்டாம் ஹரிஹரர் "ஸ்ரீ வேங்கடஸ்வராய நமஹ" என்னும் சுலோகம் பதித்த நாணயத்தை வெளியிட்டார். 1444-இல் வீர நரசிம்ம யாதவராயர் மணிமண்டபம் கட்டியது, 1456-இல் கட்டி சாளுவர், "அலிபிரி" ஊரையே கோயிலுக்கு வழங்கியது, சாளுவ நரசிம்மன் கோயிலுக்குப் பொன் வேய்ந்ததோடு, 10 ஊர்களையும் தந்தது, 1464-இல் சாளுவ மல்லய தேவன்ஆயிரக்கால் மண்டபம் கட்டியது, 1490-இல் 7 மைல் நீளம் (சுமார் 11 கிலோமீட்டர்) திருமலைக்குக் கீழிருந்து படிக்கட்டுகள் அமைத்தது முதலிய ஏராளமான முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

பாளிந்தி வேங்கடத்துறைவன்—என்ற மகான் "திருவேங்கடமகாத்மியம்" பாடினார். 32 ஆயிரம் பாடல்கள் ஏழுமலையான் பேரில் மகாகவி தாள்ளபாக்க அன்னமாச்சார்யா பாடினார். இவைபோன்ற பறபல அற்புதச் சிறப்புகளை திருமலை பெறுகிறது.

**16-ஆம் நூற்றாண்டு :**

ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் பட்டத்திலிருந்த (1509 முதல் 1529 வரை) காலத்தில் 7 முறை திருமலை வந்திருக்கிறார் 7 ஊர்களைப் பல சேவைகளுக்காகத் தந்திருக்கிறார். ஆலயத்தில் தங்க பலிபீடம், தங்கக் கொடிமரம் முதலானவை

ஏற்பட்டன. 1513-இல் ஏராளமான வைர நகைகளோடு கனகாபிஷேகமும் செய்து, ஆலய கோபுரத்துக்குப் பொன்வேய்ந்தார். அவரது மனைவியர் திருமலாதேவி, சின்னாதேவி இருவரும் போட்டி போட்டுக்கொண்டு காணிக்கைச் செல்வங்களைக் குவித்துள்ளனர். இம்மூவரின் ஆளுயர வெண்கலச் சிலைகளைத் திருமலை ஆலயத்தில் இன்றும் காணலாம். 1528 சாசனப்படி கோயில் பட்டர்கள் பெருமாளின் நகைகளைத் திருடிவிட, மன்னன் சாளுவ நரசிம்மன் அவர்களுக்கு மரணதண்டனை விதித்தான். இதனால் ஆலயத்தில் சில மாதங்கள் வழிபாடுகள் நடைபெறவில்லை. பின் இவை தொடங்கப்பெற்றன.

அச்சுத தேவராயர் (1530—1542) சதாசிவராயர் (1542—1575) திருமலைராயர் (1576) முதலிய மன்னர்களின் ஏராள நில தானங்களால் திருமலையின் தானிய வருவாய் பெருகியது. மணவாள ஜீயரின் முதல் சீடரான கந்தாடைராமாநுஜ அய்யங்கார் திருமலை யாத்திரிகர்களின் உணவுத்தேவை, பிரசாதவகை, மற்றும் பொது நலன்களைச் சிறப்பாக மாற்றி அமைத்தார். இவரைப்பற்றிப் பல கல்வெட்டுகள் பாராட்டுகின்றன.

1548-இல் துவாரபாலகர்கள் நிறுவப்பட்டனர். 1561-இல் திருமலைராயன்மண்டபம் அமைந்தது ; இந்த நூற்றாண்டில் (1543-இல்) திருமலை ஆலயத்தைக் கொள்ளையிட முயன்ற போர்த்துக்கீசியர் தோல்வியடைந்தாலும், தொல்லைகள் நீடிக்கின்றன. (45 கப்பல்கள் 27 மாலுமித் தலைவர்களையும் கொண்ட கடற்படை புறப்பட்டு வந்தது. ஆனால் ஒரு பெரும் புயலால் சிதறுண்டது).

17-ஆம் நூற்றாண்டு :

ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிபக் கழகம் 1600-இல் ஏற்பட்டது. திருமலை ஆலய உண்டியலைக் குறிவைத்தது அக்கழகம். 1610-இல் இராஜ ஒடையார் மைசூர் அரசை மீண்டும் உருவாக்கி முடிசூடுகிறார். 1618-இல் ஏற்பட்ட கோல்கொண்டா படையெடுப்பால் திருமலை ஆலயம் வருவாயை இழந்து, பொலிவிழந்து நிற்கிறது. 1639-முதல் மைசூர் அரசர்கள் அக்கறை கொண்டதால், திருமலை ஆலயம் படிப்படியாகச் சமநிலை பெறுகிறது. 1646-விஜயநகரக் கடைசி வாரிசான ஸ்ரீரங்கனின் வேலூர் கோட்டைமேல், பீஜப்பூர் சுல்தான் படையெடுக்கவே, போர்ச் செலவுக்காகத் திருமலை உண்டியின் பணத்தையெடுத்த ஸ்ரீரங்கன், போரிலே தோல்வி கண்டு மடிகிறான். இக் காலகட்டத்தில்தான் திருமலை எம்பெருமான் அருளால் பிறந்து (1581—1671) வேங்கடநாதனாக வாழ்ந்த ஸ்ரீராகவேந்திர சுவாமிகள், பீஜப்பூர் சுல்தானின் சிற்றரசனான சித்தி மசூத்கானுக்குப் பேரருள் புரிந்தபெருமையால், திருமலை ஆலயம் பெரும்புகழ் கொண்டது. 1668-இல் ஆலயப்பணத்திலே உரிமை கொண்டாடப் புதுவித சட்டத்தை வெள்ளைக் கம்பெனி கொண்டுவந்தது. 1672 முதல் கோல்கொண்டா நவாபும், மீர்ஜும்லா படைகளும் மாறிமாறித் திருமலைப் பகுதியைப் பந்தாடிக்கைப்பற்றத் துடிக்கின்றனர். 1674-இல்

முடி சூடிய சிவாஜியால் இந்துமதம் புது பலம் பெற்றாலும், சிவாஜியின் பார்வை திருமலை பக்கம் திரும்பாததால், *1680*-இல் மீர்ஜும்லா படைகள் திருப்பதியைக் கைப்பற்றுகின்றன. ஆயுத பலமுள்ள வெள்ளைக் கம்பெனி அவனிடமிருந்து ஆலயத்தை மீட்டு நவாபிடம் குத்தகைக்கு விடத் திட்டமிடுகிறது.

**18-ஆம் நூற்றாண்டு :**

1707-இல் வெள்ளையர் இவ் ஆலயத்தை ஆர்க்காடு நவாபிடம் அடமானம் வைக்கின்றனர். *1730*-இல் கிருஷ்ணராஜ உடையாரின் அகண்ட தீப கைங்கரியமும், சிறந்த பக்தியும் திருமலைக்கு மீண்டும் பெருமை சேர்க்கின்றன. நவாபிடமிருந்த ஆலய உரிமையை "இராபர்ட் கிளைவ்" கம்பெனியின் பெயரால் தட்டிப் பறித்துக்கொள்கிறார். *1735* முதல் பெருகிய திருமலை ஆலய வருவாய்க்காக வெள்ளையர், நவாபுகளின் திரைமறைவுப் போட்டா போட்டிகள் நடந்துவந்தன. *1758*-இல் முகலாய மன்னர்கள் கூட்டணியமைத்துத் திருமலை மேல் படையெடுத்தனர். ஆலயவாசலில் இரத்தக்களரி, வழக்கம்போல் வெள்ளையரே வென்று, அதிக குத்தகைக்கு ஆர்க்காடு நவாபிடமே ஆலயத்தினை மீண்டும் ஒப்படைக்கின்றனர்.

**19-ஆம் நூற்றாண்டு :**

1801-இல் நவாபின் திருமலை நிருவாக உரிமை, கம்பெனியரால் பறிமுதல் செய்யப்படுகிறது. "ஜான்வேல்ஸ்" என்பவர் தலைமையில் "வேல்ஸ் கமிட்டி" ஆலய நிர்வாகத்தை ஏற்கிறது. *1831*-இல் மைசூர் அரச குடும்பம் கம்பெனியாரிடம் அரசுரிமையை இழக்கிறது. அந்த நிலையிலும் திருமலை சேவையில் சீராகச் செயல்படுகிறது. பயிரையே மேயும் வேலியாக வேல்ஸ் கமிட்டி மாறியதால், *1843*-இல் திருமலையில் இருந்த வடஇந்திய "ஹதிராம்ஜி மடத்து" மகந்துகளிடம் நிர்வாகத்தை ஒப்படைத்து, விலகியிருந்து கண்காணிக்கிறது வெள்ளைக்கம்பெனி.

1857-இல் நடந்த சிப்பாய்க் கலகத்தால் எச்சரிக்கை பெற்ற இலண்டன் மேலிடம், *1858*-இல் கம்பெனியைக் கலைத்து, இந்தியாவை நேரடியாக ஆள முற்படுகிறது. "மதசுதந்தரத்தில் தலையிடமாட்டோம்" என்ற விக்டோரியா இராணியின் பிரகடனத்தால், வெள்ளையரின் அடக்கியாளும் முறையிலிருந்து, திருமலை ஆலயம் ஓரளவு விடுபடுகிறது. *1875*-இல் வீரராகவ சுவாமிகளால் "திருவேங்கடத் தலபுராணம்" உருவாகிறது. புகழ்மிக்க "கருடசேவை", "திருப்பதிகுடை" விழாக்கள் ஏற்படுகின்றன. *1881*-இல் ஏழுமலையானின் திருவருளால் மைசூர் அரச குடும்பத்திற்கு மீண்டும் அரசுரிமை கிடைத்துவிடுகின்றது.

**20-ஆம் நூற்றாண்டு:**

*1909-இல் இராமாலெட்சுமண பாவா என்கிற ஜீயர் திருமலை கோபுரத்துக்குப் பொன் வேய்கிறார். 1914—1918 முதல் உலகப்போர்க் காலங்களிலும், மகந்துகளால் திருப்பதி—திருமலையில் படிக்காவல் கோபுரம், திருக்குளப்பராமரிப்பு, மின்இணைப்புகள் ஆகிய திருப்பணிகள் நடக்கின்றன. 1928-இல் மைசூர் அரசு பல அறச்செயல்களுக்காகத் திருமலைக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 20 ஆயிரம் ரூபாய்களை ஒதுக்குகிறது. 1933-இல் சென்னை மாகாண சட்டசபைத் தீர்மானப்படி ஆலய நிருவாகம் மகந்துகளிடமிருந்து ஒரு தனிக்குழுவிடம் செல்கிறது. 1939-45 இரண்டாம் உலகப்போர்க் காலங்களில் திருமலைக்கு வரும் (யாத்திரிகர்) புனிதப்பயணிகள் தொகை குறைந்திருக்கிறது. 1944-இல் இரு பேருந்துகளோடு 12 மைல் தூர திருப்பதி—திருமலை பேருந்து போக்குவரத்து தொடங்குகிறது. (இப்போது சுமார் 500 பஸ்கள்) 1947-இல் குடியரசு. 1951-இல் "இந்துமத ஆலயப் பாதுகாப்புத்துறை" ஏற்பட்டு, "திருப்பதி—திருமலை தேவஸ்தானம் போர்டு" (T.T.D.) உருவாகி, சுற்றுப்புறத்திலுள்ள சுமார் 40 கோயில்களையும் இணைத்துக்கொண்டு, நிருவாகம் விரிவடைகின்றது. 1985-இல் இவ் ஆலய ஊழியர் தொகை சுமார் 7 ஆயிரம். 1953-இல்ஆந்திர அரசுப் பிரிவினை ஏற்பட்டு, தமிழகத்து எல்லையாக விளங்கிய வடவேங்கடம், ஆந்திரசோதரரின் பங்காகப் போய்ச்சேருகிறது.*

*1958-இல் 20 இலட்ச ரூபாய் செலவில், 40 அடி உயர "ஆனந்த விமானம்" பொன் வேயப்படுகிறது. 1959-இல் தினசரி யாத்திரிகர் தொகை சுமார் 4 ஆயிரம், 1975-இல் 10 ஆயிரம்; 1983-இல் 30 ஆயிரம் ; 22—09—85 கருடசேவையன்று 2 இலட்சம் பக்தர்களாகப் பெருகிவந்துள்ளது. 10—06—1985 அன்று முற்பகல் உண்டியல் வருவாய் மட்டும் சுமார் $4\frac{1}{2}$ இலட்ச ரூபாய். 6 கோடி ரூபாயில் "வைரக்கிரீடம்"—20—12—1985 அன்று திருவேங்கடவனுக்குச் சூட்டப்பெற்றது. 3 கோடி செலவில் 16,500 பக்தர்கள் ஒரே சமயத்தில் தங்கும் வழிகொண்ட மிகப்பெரிய புதிய "கியூ" வரிசை மண்டபம் (வைகுண்டம்) 6—04—1985 முதல் செயல்படுகிறது.*

*இத்திருத்தலத்தின் தொன்மையான புனித விழாக்களும், புகழ்மிகு சம்பிரதாயங்களும், அதிவேக நவநாகரிகச் சூழல்களால் கரைந்துவிடாமல் திகழ்வதாகுக.*

*—திருவேம்பத்தூர் கிருஷ்ணன்—சுடர்மாலை—எனும் நூலின்று எடுத்து திரு. எஸ். சந்திரமௌலி என்பவர் 1986 அக்டோபர் திங்கள் சப்தகிரி மாத இதழில் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.*

## அட்டவணை—III அ.

**விசிட்டாத்வைதம்** இது வேதாந்த வியாக்கியானங்களுள் ஒன்று, மற்றவை அத்துவைதம், பேதாபேதம், துவைதம், சுத்தாத்துவைதம் என்பனவாகும். இவை உபநிடதங்களுக்கும், வாதராயணருடைய வேதாந்த சூத்திரங்களுக்கும் பொருள் செய்தே தஙகள் கொள்கைகளை நிலைநாட்டுகின்றன. உபநிடதங்கள் கூறும் பரப்பிரமம், சீவர்கள், பிரபஞ்சம் ஆகிய மூன்றுக்கும் இடையிலுள்ள தொடர்பு இத்தகைய என்று கூறுவதைப் பொறுத்தே அவற்றின் பெயர் உண்டாகி இருக்கின்றன.

**அத்வைதம்** : "பிரமம் ஒன்றே உளது ; ஏனைய வெல்லாம் அவித்தையால் ஏற்படும் மாயையேயாம்" என்று அத்வைதம் கூறுகின்றது.

**துவைதம்**: "பிரமமே சுதந்தர புருடன் ; ஆன்மாக்களும் பிரபஞ்சமும் பிரமத்தைச் சார்ந்தவை ; பிரமத்தின் உடலாக அமைந்தவை ; பிரமத்தை விட்டுத்தனியாக எதுவும் இருக்க முடியாதவை; அவைகளும் பிரமுமம் ஒன்றே என்று கூறமுடியாது" என்று துவைதம் கூறுகிறது.

**விசிஷ்டாத்வைதம்**: "பிரமமே கடவுள் ; சீவர்களும் சடமும் கடவுளின் உடல்கள் (சரீரம்) இந்தச் சரீர—சரீரி சம்பந்தம் ஒன்று என்றும் பலவென்றும் கூறலாம். சார்பற்றது என்றும சார்புடையது என்றும் கூறலாம்; சீவர்களும் சடமும் பலவாயினும் அவற்றிடையே உள்ள ஒருமைப்பாட்டையும், சார்பற்ற தன்மையையும் காட்டும் இணையற்ற தத்துவம் பிரமமே. ஆதலால் பிரமம் ஒன்றாயும் பலவாயும் உளது; அதுவே சித்—அசித்—விசிஷ்ட—பிரமம் என்று விசிஷ்டாத்வைதம் கூறுகிறது.

வரலாற்று முறையில் நோக்கின், இந்தக் கொள்கையைத் தத்துவ முறையில் வகுத்தவர் இராமாநுசராவார். ஆயினும் அவர் இந்தக் கொள்கை உபநிடதங்களில் காணப்பெறும் யாக்ஞவல்கியருடைய தத்துவ சாத்திரம் போலவே பழமை வாய்ந்தது என்று கூறுகிறார்.

"பிரமம் சீவர்கள் அனைத்திலும் உளது; சீவர்கள் பிரமத்தின் சரீரமாக அமைந்துள்ளனர். ஆனால் அவர்கள் பிரமத்தை அறியமாட்டார்கள். அந்தர்யாமியாயுள்ள பிரமம் நித்தியமானது. இதுவே ஐம்பூதங்களையும், பிரபஞ்சத்தையும், ஆன்மாக்களையும் பற்றிய உண்மையாகும். பிரமம் இருப்பதனாலேயே நாம் எவ்வுயிர்களிடமும் அன்பு கொள்கிறோம்.

டங்கர், திரமிடாசாரியார் போன்றோரும் ஏற்கனவே வேதாந்த சூத்திரங்களுக்கு உரைகள் வகுத்துள்ளனரென இராமாநுசர் கூறுகிறார். வைணவத்தில் தலைசிறந்த ஆசாரியராகிய நாதமுனிகள், ஆழ்வார்களின்

திவ்வியப்பிரபந்தங்களைச் சேகரித்து, அவற்றை வியத்தகு முறையில் ஒழுங்கு செய்துள்ளார். அத்துடன் "நியாய தத்துவம்", "யோக தத்துவம்" போன்ற சில விசிஷ்டாத்துவைத நூல்கள் செய்திருப்பதாகவும் தெரிகிறது. ஆனால் அந்நூல்கள் மறைந்துபோயின. அவருடைய பெயரரும் மாணவருமான ஆளவந்தார் தமது சித்தித்திரயம் என்னும் நூலில் விசிஷ்டாத்துவைதத்தைத் தெளிவுற விளக்கியுள்ளார். இதுவே இராமாநுசருடைய ஸ்ரீபாஷியத்திற்கு மூலம் என்று கூறலாம். உடையவருக்குப் பின்னர் இதனை வியாக்கியானம் செய்தவர்கள் நடாதூர் அம்மாள், ஆத்திரேயராமாநுசர், பிள்ளை லோகாசாரியார், வேதாந்ததேசிகர் ஆவர். ஆழ்வார்கள், நாதமுனிகள் முதலியவரிடமிருந்து விசிட்டாத்துவைத அனுபவ நிரூபணம் பெற்றதாகக் கூறலாம்.

விசிட்டாத்துவைதம் உண்மையின் பண்பை அறிவதற்கான முயற்சியாகும். வேதாந்த சூத்திரத்தில் பேதம், அபேதம் பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றைக் கடக முறையைக் கையாண்டு, முரண்பாட்டை நீக்கும் சமன்வயமுறை, வேறெங்கும் காணப்படாத சிறப்புடையதாகும். அதன் பிரதான பிரதிதந்திரம் என்னும் கொள்கை சரீர—சரீரி பாவமாகும். பிரபஞ்சம் சீவன், கடவுள் எனத் தத்துவத்திரயம் என்னும் மூன்று பதார்த்தங்கள் கூறப்படுகின்றன. இம்மூன்று தத்துவங்களையும் பிரத்தியட்சம், அனுமானம், சப்தம் ஆகிய பிரமாணங்கள் மூலம் அறியலாம். விசிட்டாத்துவைதம் சரீரம் என்பதற்குச் சிறந்த பொருள் கூறுகிறது. மற்றத் தத்துவ அறிஞர் சரீரம் சடமானது என்றும், அதனால் அழியும் தன்மையுடையது என்றும் கூறுவர். ஆனால் இராமானுசர் சரீரம் என்பது க்ஷேத்துவமுடையது. அதாவது தனிச் சுயேச்சையுடையது என்று கூறுகிறார். ஆன்மாக்களின் உடல்கள் அசித் எனினும் உள்ளவைகளே. அதனால் ஆன்மாக்களும் பிரபஞ்சமும் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் கடவுளுடைய சரீரமாகும்.

பிரமமே சிருஷ்டிகர்த்தா என்று விசிட்டாத்துவைதம் கூறுகிறது. பிரமம் எப்பொழுதும் சித்-அசித்-விசிஷ்டம். சிருட்டி என்பது சித்-அசித் என்பதன் சூக்கும சரீரத்தைத் தூலமாக்குவதாகும். இச்சிருட்டி முறை படிப்படியாக நடைபெறும். சாங்கிய தரிசனம் ஏற்றுக்கொள்ளும் 24 தத்துவங்களும் படிப்படியாக வெளிப்படும். ஆன்மா தன் கன்ம வினையின் காரணமாக அதற்கேற்ற சாரீரத்தைப் பெறும். இந்தச் சிருட்டிமுறை சிறிதுசிறிதாகச் சூக்குமமாவதற்கும் (நுண்ணிய நிலை). இரு நிலைமையிலும் ஆன்மாக்களும் பிரகிருதியும் கடவுளுடைய சரீரங்களாகவே இருந்துவரும்.

*ஈசுவரனுடைய தன்மை* : கடவுள் சித்து-அசித்து இரண்டுக்கும் உயிராக இருப்பதோடு வேறு சில குணங்களும் உடையவராவர். அவர் எல்லாம் அறிந்தவர் ; எல்லாவல்லமையும் உடையவர் ; எல்லாவற்றிலும் பரந்து நிற்பவர் ; எல்லாவித நன்மையும் செய்பவர் ; எல்லையற்றவர் ; ஹேய குணங்கள் எதுவும் இல்லாதவர் ;

எல்லாவற்றையும்— தம் சொந்தக் காரியத்துக்காகப் பயன்படுபவர். அவரைச் சுருதிப் பிரமாண வாயிலாகத்தான் அறிய இயலும். அவர் அருளும் திவ்விய அனுபவ வாயிலாகத்தான் அவரை அனுபவிக்கமுடியும். அவரே பரிபூரணர். அதனால் அவர் சத்து-சித்து-ஆனந்தம் என்று அழைக்கப்பெறுவர். எல்லாவற்றுக்கும் அதிபர். அதுவே அவருடைய சிருட்டி சக்தி. அவருடைய அகண்டமான குணங்கள் ஐசுவரியம். பலம், வீரியம், ஞானம், தேசஸ், சக்தி என்பனவாம்.

அவரே அனைத்தையும் ஆள்பவர். தருமத்தைக் கூறுபவரும் அதைக் காப்பவரும் அவரே. யக்ஞம், யாகம், யோகம் ஆகியவற்றால் வணங்கப்பெறுபவர் அவரே. அவர் எல்லாம் கடந்தவராயிருப்பதோடு, அன்பாகவும் இருக்கிறார். சேதனங்களாகிய ஆன்மாக்களிடமுள்ள அருளின் காரணமாக அவர் வியூகம், விபவம் அந்தர்யாமி, அர்ச்சை எனும் நான்கு முக்கியமான வடிவங்களை மேற்கொள்கிறார். வாசுதேவன், சங்கருஷணன், பிரத்தியும்நன், அனிருத்தன் என்பவை நான்கு வியூக அவதாரங்கள். படைத்தல், காத்தல், அழித்தல், ஞானமாகிய காரியங்களுக்காக இவை ஏற்பட்டன. விபவாவதாரங்கள் தருமத்தைக் காக்கவும் அதருமத்தை நீக்கவும் ஏற்பட்டவை. இராமன், கண்ணன். கபிலன் போன்ற விபவாவதாரங்களில் தரும போதகர்களாகவும் இருந்தனர்.

கடவுள் பக்தனுடைய இதயத்தில் புகுந்து, அவனுடைய செயல்களை எல்லாம் ஆட்கொள்ளும் நிலையே அந்தர்யாமி. தம்மைத் தேடிடும் ஆன்ம கோடிகளுக்கு அறம் பொருள், இன்பம், வீடாகிய நான்கு உறுதிப்பொருள்களையும் அருள்வதற்காக மேற்கொள்ளும் நித்திய வடிவங்களே அர்ச்சாவதாரங்கள் விக்கிரகம் செய்து வைத்துக்கொண்டு, அதையே ஈசுவரனாக எண்ணி வழிபடும் வடிவம் வேறு, அர்ச்சாவதாரம் என்பது வேறு. விக்கிரக வணக்கம் யோகம் செய்வதற்கு உதவியாக இருக்கலாம். ஆனால் விக்கிரக ஆராதனை வேண்டும் என்று சுருதிகள் கூறவில்லை. இறைவனை அவனுடைய சக்தியாகிய ஸ்ரீயினின்றும் பிரிக்கமுடியாது என்று இராமானுசர் கூறுகிறார். ஸ்ரீயும் (திருமகளும்) நித்தியத்துவம் பெற்ற சீவனே என்று சில ஆசாரியர்கள் கருதுகின்றனர். இறைவனை ஸ்ரீநிவாசன் என்று இராமானுசர் தம் ஸ்ரீபாஷ்யத்தில் அழைக்கின்றார். இத்தம்பதிகளே அறத்தையும் வீட்டையும் போதிக்கும் ஆதி ஆசாரியர்கள். பொருளும் இன்பமும் அருள்பவர்களும் அவர்களே. ஆதலால் இறைவன் எக்குணமும் இல்லாதவன் என்னும் பொருளில் நிர்க்குணன் அல்லன். ஹேயகுணங்கள் அற்றவன் என்னும் பொருளிலேயே நிர்க்குணன் ஆவன். எல்லையற்ற பரிபூரணமான குணங்கள் வாய்ந்த சற்குணன்.

**சீவர்களுடைய தன்மை :**

சீவர்கள் ஈசுவரனுடைய சரீரங்கள், அவர்களிடம் அறிதல், செய்தல், நுகர்தல், தூய்மை, ஆனந்தம் ஆகிய பண்புகள் காணப்பெறும். அவர்கள் சித்து

ஆவர். ஒளி எப்படி ஒளியாயும் ஒளிக்கிரணங்களாகயும் இருக்கிறதோ, அப்படியே சீவர்களும் தருமபூத ஞானமாகச் சித்துடையராவர். அவர்கள் நித்தியர், அவர்களுடைய சித்து ஒருநாளும் அழிவதில்லை. நித்தர்சீவன், முத்தர்சீவன், பத்தர்சீவன் (Baddha) அதாவது முறையே சங்கோசத்தால் பிணிப்பே படாதவர், தம்முடைய தருமபூத ஞானத்தின் சங்கோசத்தினின்று விடுபட்ட சீவன், சங்கோசத்தால் பிணிப்புற்ற சீவர்கள் வீடு தேடுபவர் (முமுட்சுகள்) என்றும், வீடு தேடாதவர் (கேவலர்கள்) என்றும் இரு வகைப்படுவர். எப்பொழுதும் வீடுபெற்றவர் போல் எப்பொழுதும் பிணிப்பற்றவர் என்ற சீவர்கள் இல்லை என்பது இராமாநுசர் கருத்து. எந்த ஆன்மாக்களும் வீடு பெற விரும்பாமல் இரார். பிணிப்புற்றவர்க்கும் பிணிப்பற்றவர்க்குமுள்ள வேறுபாடு அவித்தை காரணமாக உண்டாகும் தருமபூத ஞானத்தின் சங்கோசத்தனின்றும் வீடு பெறுவதைப் பொறுத்தேயாகும். சீவர்கள் ஒவ்வொரு நிலையிலும் அனைத்துக்கும் உயிராயுள்ள இறைவனுக்கு வேறாகவே இருப்பர்.

தருமபூதஞானம் :

ஆன்மாவின் பண்பாய் வெளிப்பட்டுத் தெரியும் அறிவு. இது உளவியல் வகையிலும் தத்துவ வகையிலும் நனவை வருணிப்பதாகும். ஆன்மா ஒவ்வொன்றும் தருமபூதஞானம் என்னும் நனவு உடையதாகும். ஒவ்வோர் ஆன்மாவும் சித்து நனவு உடையது. ஆனால் அதன் தருமபூதஞானம் ஆன்மாவாகிய தருமபூத ஞானத்துடன் இணைபிரியாத தொடர்புடையதாயினும் அசித்தேயாகும். அதன் முக்கியமான தொழில் ஆன்மாவுக்குப் பொருள்களை விளக்குவதே. அது எல்லையற்று விரியவும் சூனியமாகச் சுருங்கவும் கூடியது. அது கடவுளிடத்திலும் நித்திய ஆன்மாக்களிடத்திலும் எல்லையற்றது ; அதனால் அவர்களுக்கு எல்லாம் அறியும் தன்மையை அளிக்கும். வீடு பெறாத அவர்களுக்கு அது சுருங்கிய நிலைமையிலே காணப்பெறும்.

தருமபூதஞானம் மதி, பிரக்ஞை, சம்வித், தீஷணம், தீற், மனீஷா, சேமுஷீ, மேதை, புத்தி எனவும் பெயர் பெறும். நனவின் தாக்குநிலைகள், அறிவுநிலைகள் எல்லாம் தருமபூத ஞானத்தின் நிலைகளே, ஸ்மிருதியும் தருமபூத ஞானத்தின் பல்வேறு நிலைகளை ஆராய்வதேயாகும். ஆன்மாக்களிடம் விழிப்பு, கனவு, உறக்கநிலைகள் என்னும் யோகஜன்ய ஞானமும் தருமபூஞானத்தின் நிலைகளே. அது கடவுளிடத்தில் ஞானம், பலம், ஐசுவரியம், தேஜஸ், சக்தி, வீரியமாகிய அவருடைய ஆறு எல்லையற்ற கலியாண குணங்களாக அமைகின்றது. ஆன்மாக்களிடத்தில் அது பக்தியாகவும் யோகமாகவும் அமைகின்றது. பிரபத்தி என்பதும் வீடுபேற்றுக்காக ஈசுவரனிடம் தன்னை ஒப்புக்கொடுத்தல் என்னுய தருமபூத ஞான வடிவமாகும். குறிக்கோளையும் அதை அடையும் வழிகளையும் அறிதல் என்பது அவற்றினிடம் கொள்ளும் பக்தியேயாகும். அது முறையே, பலபக்தி எனவும், சாதனபக்தி எனவும்

பெயர் பெறும். இவையும் தருமபூத ஞானத்தின் நிலைகளே. ஆகவே, இவற்றிலிருந்து நாம் அறிவது யாதொனில் தருமபூதஞானம் என்பது ஒரு திரவியமாகவும் இருக்கிறது. ஞானமாகவும் இருக்கிறது. இது தற்கால பௌதிகவியல் கூறும் "அலைத்தூள்" (Wavicle) போன்றதாகும்.

ஆன்மா-சீவன்-ஈசுவரன் இவர்களைப் பொறுத்ததாக இருப்பதால் அது குணமாகும். அது ஒளிபோல் விரியவும் சுருங்கவும் கூடிய பண்புடையதாய் இருப்பதால் அது ஒரு திரவியமாகும். அது மனம்போல் அசித்தாயிருந்தபோதிலும், சித்துடன் இணைபிரியாத தொடர்புடையதாயிருப்பதால் அது சித்து என்றும், பெயர் பெறுவதாயிற்று.

**பிரகிருதியின் தன்மையும் அசித்தின் தன்மையும் :**

அசித்து என்பது பிரகிருதி, காலம், சுத்த சத்துவம், தருமபூதஞானம் என நான்கு வகைப்படும். பிரகிருதியிடம் சத்துவம், இராஜசம், தாமசம் என மூன்று பண்புகள் உள. அது எப்பொழுதும் மாறும் தன்மையது. மாறிக்கொண்டேயிருப்பது. அது ஒரு பக்கம், இராஜசம், தாமசம் ஆகியவற்றிற்கும், சத்துவம் அதிகரித்த தன்மையுடன் கூடி புத்தி, அகங்காரம், மனம், பொறிகள் ஆகியவற்றிற்கும், மற்றொரு பக்கம் சத்துவம், இராஜசம் ஆகியவற்றிக்கும், தாமசம் அதிகரித்த தன்மையுடன் கூடி ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் சூக்கும பூதங்களுக்கும் அவற்றின் தூல வடிவங்களுக்கும் மூலகாரணமாகும். இவை காலத்துடன் சேர்ந்ததும், காலத்துக்கு உட்பட்டதுமான "அபர -பிரகிருதி" எனப்படும். இவை யோகஜன்ய ஞானத்தால் அறியப்பெறும். இப்பூதங்கள் தம் தூய வடிவங்களில் பஞ்சீகரணத் தத்துவத்தை அனுசரித்துச் சேர்கின்றன. அதனால் எந்த பூதமும் தனியாகக் காணப்பெறுவதில்லை. ஒரு பூதத்தின் பாதியும், மற்ற பூதங்கள் சமஅளவில் சேர்ந்த பாதியும் சேர்ந்தே காணப்பெறும். சீவர்கள் தத்தம் கன்ம வினைகளை நீக்கிக்கொள்வதற்குத் தக்கவாறு 24 தத்துவங்களாகிய சரீரங்களைப் பெறுகின்றனர்.

நித்திய சத்துவம் (அ) சுத்த சத்துவம் மாறாத பரிபூரண சடம என்றும் வழங்கப்பெறும். நித்தியர்கள். வாழும வைகுண்டம் என்பது மாறாத இன்டமாகும். அது இருளற்றது; ஒளி நிறைந்தது. தாமச உலகங்களே இருளுடையன; சூரியனில்லாதன. இராஜசமோ, தாமசமோ இல்லாததே சுத்த சத்துவம். அத்துடன் காலம் என்பதற்கும் அந்த உலகில் ஆட்சி கிடையாது. விரும்பினால் கிடைக்கும் அறிவதே உளவாந்தன்மை.

தருமபூத ஞானம் அசித்தாகவும் இருக்கிறது. அது தன்னுடைய பிற பொருள்களின் தன்மையையும் ஆன்மாக்களுக்கு விளக்குகின்றது. இந்தத் தருமபூதஞானத்தின் காரணமாக ஆன்மாக்கள் அறியவும் செய்யவும் நுகரவும் ஆற்றல் பெறுகின்றன. விலக்கிய கன்மத்தைச் செய்வதாலேயே ஆன்மாக்களுக்குப்

பந்தம் உண்டாகின்றது. நித்திய தத்துவங்களைப் பற்றிய ஞானத்தின் வேராகவும், நிவிர்த்தி தரும உருவமாகவுமுள்ள கருத்திருத்துவமே வீடு தருவதாகும். (Kartritva)

புருஷார்த்தங்களில் தலைசிறந்தகான வீடுபேற்றுக்குச் சமமான "கடவுளை அறிதல்" என்பதை அடைவதற்கான சாதனங்கள் சாஸ்திரங்களில் கூறப்பெற்றிருப்பதாக விசிட்டாத்துவைதம் கூறுகிறது. ஈசுவரன், ஆன்மா, பிரபஞ்சம் ஆகியவற்றின் பண்புகளை அறிவதை அடிப்படையாகக்கொண்ட தெய்வ கைங்கரியத்துக்காகச் செய்யப்பெறும் கன்மமே வீடுபேற்றை அளிக்கும். அத்தகைய கன்ம பலனை விரும்பாமல் கடமையாக எண்ணி மட்டுமே செய்யப்பெறும். அப்படிச் செய்தால் ஞானம் சித்தியாகும். கன்மயோகமும் ஞானயோகமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் முரண்பட்டவை அல்ல. ஆயினும் ஒவ்வொன்றும் தனித்தனியே கடவுள் அருளைப் பெறச்செய்யும் ஆற்றலுடையவை. பக்திநெறியும் சாத்திரங்கள் விதித்தபடி அனுட்டிக்கப்பெறவேண்டும். ஆயினும் பிரபத்தியே தலைசிறந்த சாதனம் என்று விசிட்டாத்துவைத ஆசாரியர்கள் கருதுகின்றனர். பிரபத்திக்கு ஆறு அங்கங்கள் இருப்பதாகக் கூறுவர். அவையாவன :

1. ஆனுகூலிய சங்கல்பம் — அதாவது கடவுள் அருள் கிடைக்கும் என்ற உறுதி.
2. பிராதிகூலிய வர்ஜனம் — அதாவது கிடைக்காதோ என்ற சந்தேகத்தை நீக்குதல்.
3. மகாவிசுவாசம் — அதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை.
4. வரணம் — அதாவது ஈசுவரனைப் பற்றுவது.
5. நியாசம் — அதாவது பாரத்தை ஈசுவரனிடம் வைத்தல்.
6. கார்ப்பண்யம் — அதாவது கைம்முதல் இல்லாமையைக் காட்டுதல்.

இந்த ஆறு அங்கங்களும் பிரபத்திக்கு இன்றியமையாதன. இந்நெறியை அனுட்டித்தால் ஈச்சுவரன் ஆன்மாவை ஈடேற்ற விரும்பி, அதற்கு ஞானம், கடமை, ஆனந்தம் எல்லாம் அருள்கின்றான். கடவுளே யோகத்தின் தலைவனாக இருப்பதால் அவனேதான் வீடுபேற்றுக்கான சாதனம். ஆதலால் பிரபத்திதான் மோட்ச சாதனமாகும். ஈசுவரன் பிறவிச்சுமையை விலக்கிவிட எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கும் சித்தோபாயமாக இருக்கின்றான். மனிதனுடைய அறியாமைதான் வீடும், ஆனந்தமும், தன்னுணர்வும் பெறுவதற்குத் தடையாக உள்ளது.

மனிதன் தேடவேண்டியது வீடாகும். அவன் வீடு பெறுவதற்காகவே படைக்கப்பெற்றவன். ஆனால் தன்னைப் பற்றியும், ஈசுவரனைப்பற்றியும்,

பிரபஞ்சத்தைப் பற்றியும் உள்ள உண்மையை அறிவதுதானே வீடு என்பது. அவித்தையினின்றும் கன்மத்தினின்றும் விலகுவதே ஒளிநிறைந்த உன்னத மோட்ச வாழ்வு பெறுவதாகும். பரம புருடார்த்தம் என்பது வெறும் வீடு மட்டுமன்று. பகவத் கைங்கரியமுமாகும் என்று விசிட்டாத்துவைத ஞானிகள் கூறுகின்றனர். ஆன்மா கடவுளுக்காகச் சகலமும் செய்கிறது. அதிலேயே பரிபூரணமான ஆனந்தத்தைக் காண்கிறது. பகவத் கைங்கரித்தின் வாயிலாகப் பரிபூரண பிரம அனுபவத்தைப் பெறுகின்றது. இவ்வாறு பகவானுடன் ஐக்கியமாவதே சாயுச்சியம். ஆன்மா சாரூப்பிய, சாலோக்கியம்இரண்டும் பெறுகிறது. இந்த அனுபவம் ஈசுவரனுடைய அருளால் வைகுண்டத்தில் கிட்டுவதுபோலவே பூலோகத்திலும் கிட்டுவதாகும்.

ஆகவே விசிட்டாத்துவைத்தின் குறிக்கோள் பகவத் கைங்கரியமேயாகும். ஈசுவரன் அருளும் ஞானம், பக்தி, தருமம் ஆகியுவற்றுடன் ஈசுவரனுடைய உதவியைக்கொண்டு ஆன்ம கைங்கரியம் செய்ய வேண்டும். பிரபத்தியே மார்க்கம் ; அதுவே கடவுள் -ஆன்மா உறவின் இன்றியமையாத குணமாகிய சேஷத்துவத்தைக் காண்பதாகும்.

கலைக்களஞ்சியம் தொகுதி 9-பக். 303-306 - டாக்டர். கே. சி. வரதாச்சாரி,<br>எம். ஏ. பிஎச். டி.,<br>தத்துவத்துறை ரீடர்,<br>ஸ்ரீவெங்கடேஸ்வரா<br>பல்கலைக்கழகம், திருப்பதி.

# அட்டவணை—IV

## பிரம சூத்திரங்கள்

இவை சுமார் கி.பி. 400-இல் வாதராயணர் என்பவரால் இயற்றப்பெற்றன. பிரம்மத்தைப் பற்றிய விளக்கமாயிருந்தலின் அவை இப்பெயர் பெற்றன. வேதத்தின் இறுதிக் குறிக்கோளைப் பற்றிக் கூறும் உபநிடதங்களை விளக்குவதால் "வேதாந்த சூத்திரம்" எனவும், சரீரபந்தத்தில் அகப்பட்ட ஆன்மாவைப்பற்றி விவரிப்பதால் சாரீக சூத்திரம் எனவும் இவை வழங்கப்படும்.

உபநிடதங்கள்
பகவத்கீதை
பிரமசூத்திம்-ஆகிய மூன்றும் வேதாந்தத்தின் அடிநிலைகளாகும்.

ஜைமினி என்பவர் இயற்றிய மீமாம்சையைக் கன்ம மீமாம்சை எனவும், வாதராயணர் இயற்றிய பிரமசூத்திரத்தை உத்தரமீமாம்சை எனவும் கூறுவர். இரண்டும் வேதங்களின் சாரத்தை விளக்குவதாக வேதாந்திகள் கூறுவர். இரண்டையும் பாகுபடுத்தி, ஒழுங்கு செய்தார் வியாசர் என்பார். வியாசர் என்னும் மொழிக்கு "ஒழுங்கு செய்பவர்"-என்பது பொருள்.

பிரமசூத்திர நூலில் 550 சூத்திரங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் இரண்டு (அ) மூன்று சொற்களால் ஆனவை. அதனால் அவை (உரை) வியாக்கியானமின்றிப் பொருள விளங்குவனவாக இல்லை. ஆதலால் பல உரையாளர்கள் தோன்றினர். அவர்களுள் சங்கரர், இராமானுசர், பாஸ்கரர், யாதவப் பிராகாசர், கேசவர், நீலகண்டர், மத்துவர், வல்லபர், விஞ்ஞானபிட்சு என்பவர் முக்கியமானவர்கள். சிலர் தத்துவசாத்திரமுறையிலும் (சங்கரர் முதலியோர்) சிலர் சமயமுறையிலும், (இராமானுசர் முதலியோர்) பொருள் கண்டுள்ளனர்.

பிரமசூத்திரத்தில் 4 அத்தியாயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு :

1. சமன் வயாத்தியாயம் : பிரமம்-அதற்கும் ஆன்மாவுக்கும் உலகுக்குமுள்ள தொடர்பு ஆகியவை பற்றியது.
2. அவிரோதாத்தியம் : மாறுபட்ட கொள்கைகளைக் கண்டிக்கிறது. அத்துடன் உலகத்தோற்றம், மறைவு ஆகியவை பற்றியும், ஆன்மாவின் பண்புகள் பற்றியும் கூறுகிறது.
3. சாதனாத்தியாயம் : பிரம வித்தையை அடைவதற்கான சாதனங்களைப் பற்றிக் கூறுவதுடன் மறுபிறப்பு விளக்கமும் தருகின்றது.

4. பலாத்தியாயம் . பிரம வித்தையின் பயனைப் பற்றியதாகும். அதனுடன் அதில் ஆன்மா இறந்தபின் அடையும் நிலையும், ஆன்ம விடுதலையின் பண்பும் கூறப்பெற்றுள்ளன.

பிரமசூத்திரமானது உபநிடதங்கள், கடவுள், உலகம், ஆன்மா, பந்தம், வீடு முதலியவற்றை ஆராய்ந்து, ஆட்சேபங்களுக்குச் சமாதானம் கூறி, வேதாந்தக்கொள்கையை உருவாக்குகின்றது. உண்மைச் சிந்திக்கக்கூடியதையே தருக்கத்தின்மூலம் அறியமுடியும். சிந்திக்கக்கூடாததை அறியச் சாத்திரங்களே வழிகாட்டியாக உள்ளன. சாத்திரம்-சுருதி, மிருதி என இருவகைப்படும். உபநிடதமே சுருதி ; பகவத்கீதை ; மகாபாரதம், மனுநூல் ஆகியவையே மிருதி என்றும் அதனால் பக்தியாலும் தியானத்தாலும் பெறக்கூடிய உள்ளொளியால் அடையும் அறிவே மெய்ப்பொருளைக் காட்டும் என்றும் வாதராயணர் கூறுகிறார்.

பிரமசூத்திரம், "புருஷன், பிரகிருதி இரண்டும் அகண்டமானவை, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை" என்று சாங்கியம் கூறுவதை மறுத்து, "பல அகண்டமான பொருளகள் இருக்கமுடியாது ; பிரமம் ஒன்றே உளது ;" அதுவே அனைத்திற்கும் மூலம் என்று கூறுகின்து. அப்படியானால் அறிவுள்ள ஆன்மாவுக்கும் அறிவற்ற பிரபஞ்சத்துக்குமுள்ள உறவு யாது எனில், பிரமம் ஐம்பூதங்களைப் படைத்து, அவற்றுள் தங்கியிருந்து பிரபஞ்சத்தை உண்டாக்குவதாக மட்டும் வாதராயணர் கூறுகிறார். பிரமமே பிரபஞ்சமாகக் கூறுவதால் காரணமும் காரியமும் ஒன்றே என்பது விளங்குகினறது. ஆயினும் பிரமத்துக்கும் பிரபஞ்சத்துககும் இடையில் வேறறுமை கிடையாது என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படியானால் வேற்றுமை உண்டான காரணம் யாது ? "பிரமம் ஒன்றே உளது ; அவித்தையினாலேயே அது பிரபஞ்சமாகத் தோன்றுகிறது" என்று சங்கரரும், பிரமம் வியக்கத்தக்க ஆற்றல் உடையது ; அதனால் அது பிரபஞ்சமாகப் பரிணமிக்கமுடியும் என்று இராமாநுஜரும் கூறுகிறார்கள்.

பிரம சூத்திரத்தில் 3-ஆம் அத்தியாயம் பிரமஞானத்தை அடைவதற்குரிய அறநெறியைக் காட்டுகின்றது. இல்லறம், துறவறம் இரண்டையும் ஏற்றுக்கொள்கின்றது. சீவன் முத்தர்கள் கூடச் செயலகள் புரியவேண்டும் என்றே வற்புறுத்துகின்றது. பிரமத்துக்கு உருவம் இல்லையாயினும் மனிதன் உபாசிப்பதற்கு உதவியாக உருவவழிபாடு வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கின்றது. ஆன்மாவின் இறுதிக் குறிக்கோள் வீடு பெறுவதே. அதை இகத்திலேயே சீவன் முக்தர்களால் பெறமுடியும் என்று சங்கரர், வாதராயணர் கூறுகின்றனர். சீவன் முக்தர்களால் நுகரத்தொடங்கிய கன்மங்கள் ஒழியும்வரை உடலில் தங்கியிருப்பர். அதன்பின் பிரமத்துடன் கலப்பர். அவ்வாறு கலப்பது ஒன்றிவிடுவதா (அ) தோழமை கொள்வதா என்பது பற்றிப் பிரம சூத்திரம் விளக்கவில்லை.

ஆகவே வாதராயணர் மெய்ப்பொருள் ஒன்றே என்னும் ஒருமைக் கொள்கையையே உடையவர். ஆயினும் அவர் அவிகாரி (மாறாதது) என்றும், நித்தியம் (அழியாதது) என்றும் உபநிடதங்கள் கூறும் பிரமம் எவ்வாறு மாறுவதும் அழிவதுமான பிரபஞ்சமாக ஆகமுடியும் என்பதைப்பற்றிப் பிரமசூத்திர உரையாளர்கள் பலவாறாகக் கூறுகிறார்கள்.

-ஏ.வீ. கோபாலாச்சாரியார், எம்.ஏ., பி.எல்.,
க.க.தொகுதி.7 பக்.290-291.

"ஞாத்ருத்வத்தோடு கூடிய சேஷத்வம்" (ஞானத்தோடு கூடிய அடிமை) என்பதை ஆழ்வான் (எழுதும்போது) ஒப்பவில்லை. காரணம்"அடியேன் உள்ளான்" என்ற திருவாய்மொழித் தொடர் என்பதை உணர்ந்து, "சேஷத்வத்தோடு கூடிய ஞாத்ருத்வம்" (பரமாத்மாவுக்கு இந்த ஜீவாத்மா முதலில் தான் அடிமை என்பதை உணர்ந்த பிறகே அறிவுடையவன் என்று உணரவேண்டும் என்பதே இதன் உள்ளுறைப்பொருள்). என்று ஆழ்வான் திருத்தம் செய்தார். இதன்மூலம் பிரம்மசூத்திரத்தின் திரண்ட பொருள் பரமாத்மா யார் ? என்பதைச் சந்தேகமற உணர்ந்து, அப்பரமாத்மாவுக்கு இந்த ஜீவாத்மா அடிமை என்று உணருவதே சிறந்த ஞானம் என்பது உணர்த்தப்பட்டது.

பிரம்மசூத்திரம், "தத்வபரம்", "உபாஸநபரம்" என்ற இரு பகுதிகளைக் கொண்டது. அதுபோன்றே திருவாய் மொழியின் முதல் பத்துப் பாசுரங்கள் "தத்வபரம்" என்றும் இரண்டாம்பத்தை"உபாஸநபரம்" என்றும் பூர்வாசாரியர்கள் நிச்சயித்துள்ளனர்.

"தத்வபரம்"-என்ற முதல் பத்துப்பாசுரங்கள் "உயர்வற உயர் நலமுடையவன்" என்று தொடங்கி, பரமாத்மா யார் ? அவன் குணம் என்ன ? செயல் என்ன ? எத்தைகைய பெருமைகளை உடையவன் ? அவனுடைய செல்வங்கள் எவை ? என்று அனைத்தையும் பட்டியல் போட்டுக் காட்டுகின்றன.

"உபாஸனபரம்"-என்ற இரண்டாம் பத்துப் பாசுரங்கள்,

"வீடுமின் முற்றவும் வீடுசெய்து உம்முயிர்

வீடுடை யானிடை வீடு செய்மினே — என்று நான்குமுறை வீடு, வீடு என்று சொல்வதன்மூலம் நாம் அடையும் பயனை (வீட்டை) முதலில் சொல்லி, பரமாத்மாவுக்கும் நமக்கும் உள்ள உறவு என்ன ? இந்த ஜீவாத்மாவின் நிலை என்ன ? அவனை அடைய நாம் செய்யவேண்டியது என்ன ? என்பவற்றை உணர்த்தி,

"ஒடுங்க அவன்கண் ஒடுங்கலுமெல்லாம்
விடும் ; பின்னுமாக்கை விடும்பொழு தெண்ணே"-என்றும்

"எண்பெருக் கந்நலத்து ஒண்பொரு ளீறில
வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே"

என்றும் உணர்த்தி இந்த ஜீவன் அடையும் பயனையும் தெரிவிக்கின்றன.

"பிரம்மசூத்திரங்களில் பொருள் விஷயமாக ஐயம் விளையும்போது திருவாய்மொழியைக் கொண்டு அவ் ஐயம் தீரப்பெற்று சூத்திரார்த்தங்களைப் பாஷ்யக்காரர் நிர்ணயிப்பார்"-என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

ஒருசில இடங்கள் : திருவாய்மொழி முதல் பதிகத்தில் மூலப்பிரகிருதிக்கும், பிரமருத்திரர்களுக்கும் காரணன் ஸ்ரீமந்நாராயணனே– என்று சொல்ல, இரண்டாம் பதிகத்தில் "வண்புகழ் நாரயணன்" என்றும், மூன்றாம் பதிகத்தில் "திருவுடையடிகள்" என்றும் அருளியதைப் பின்பற்றி பிரமசூத்திர பாஷ்யத்தில் முதல் சூத்திரத்தில் "ப்ரஹ்ம" என்னும் சப்தத்திற்குப் புருஷோத்தமனைப் பொருளாகக் கொண்டார் உடையவர்.

"உளன் சுடர்மிகு சுருதியுள்" (திருவாய்-1 : 1 : 7) என்று பரம்பொருள் விஷயத்தில் வேதமே பிரமாணம் என்று ஆழ்வார் அருளியதையொட்டி, (ஸாஸ்தீர யோத் த்வாத் (1 : 1 : 4) என்னும் நான்காவது சூத்திரத்தில் பிரம்ம விஷயத்தில் சாஸ்திரம் (வேதம்) ஒன்றே பிரமாணம் என்று அருளினார்.

"சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும்" (1 : 1 : 8) என்று ஆழ்வார் மூலப்பிரகிருதியை "விண்" என்று அருளியதையொட்டி,"அக்ஷராதிகரணத்தில்" (1:3: 9) ஆகாச சப்தத்திற்கு மூலப்பிரகிருதியைப் பொருளாகக் கொண்டார் உடையவர்.

"உளன் எனில் உளன்" (1 : 1 : 9) என்னும் பாசுரத்தில் ஆழ்வார் சர்வசூந்யவாதியான பௌத்தனைக் கண்டித்ததையொட்டியே, "ஸர்வதாசபபதித்யதி கரணத்தில்" (2 : 2 : 3) உடையவர் சர்வசூர்யவாதியான மாத்யமிக பௌத்தனைக் கண்டித்தார்.

-கோ. கிருபாநிதிப்பிள்ளை மணிவிழாமலர், பக். 23, 27, & 28.

## அட்டவணை-V (i)

### ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த திவ்யசூக்திகள்

சுவாமி தேசிகனுடைய நூல்களைப் பின்வருமாறு பிரிக்கலாம். அவையாவன:

1. இரகசிய கிரந்தங்கள்.
2. வேதாந்த கிரந்தங்கள்.
3. வியாக்கியான கிரந்தங்கள்.
4. ஸ்தோத்திர கிரந்தங்கள்.
5. காவிய கிரந்தங்கள்.
6. நாடக கிரந்தகம்.
7. அனுட்டான கிரந்தங்கள்.
8. தமிழ்ப் பிரபந்தங்கள்.
9. இதர கிரந்தங்கள்.

---

**இரகசிய கிரந்தங்கள் :**
**முதல்பாகம்**
**அம்ருதராஞ்ஜநீ ரகசியங்கள் :**

1. சம்பிரதாய பரிசுத்தி
2. தத்வ பதவி
3. ரகசிய பதவி
4. தத்துவநவநீதம்
5. ரகசிய நவநீதம்
6. தத்வமாத்ருகை
7. ரகசியமாத்ருகை
8. தத்துவசந்தேசம்
9. ரகசியசந்தேசம்
10. ரகசிய சந்தேசவிவரணம்
11. தத்வரத்னாவளி
12. தத்வரத்னாவளி பிரதிபாத்ய சங்கிரகம்
13. ரகசியரத்னாவளி

**தனி ரகசியங்கள்**

1. பரமபதபங்கம்
2. ஸ்ரீ அந்திகிரிமகாத்மியம்
3. பரமபதசோபாநம்
4. ஸ்ரீமத்ரகசியத்ரயசாரம்

**வேதாந்த கிரந்தங்கள் :**

1. மீமாம்சாபாதுகை
2. சேச்வரமீமாம்சை
3. சததூஷணி
4. அதிகரண சாராவளி
5. நியாயபரிசுத்தி
6. நியாயசித்தாஞ்சனம்
7. தத்துவமுக்தாகலாபம்
8. நிட்சேபரட்சை

14. ரகசியரத்னாவளி இருதயம்
15. தத்துவதிரய களகம்
16. ரகசிய விரய களகம்
17. ஸ்ரீசாரதீபம் (மறைந்துவிட்டது)

9. சச்சரித்ராட்சை
10. ஸ்ரீபாஞ்சராத்திரரட்சை
11. வாதித்திரய கண்டனம்
12. திரமிடோபபநிஷத்தாத்பரீய ரத்னாவளி
13. திரமிடோபநிஷத்சாரம்

**இரண்டாவது பாகம்**
**அம்ருதாஸ்வாதிநீ ரகசியங்கள் :**

18. சாரசாரம்
19. ஸ்ரீஅபயபிரதாநசாரம்
20. தத்வசிகாமணி (மறைந்துவிட்டது)
21. ரகசிய சிகாமணி
22. அஞ்சலி வைபவம்
23 பிரதாநசதகம்
24. உபகார சங்கிரகம
25. சாரசங்கிரகம்
26. முநிவாகனபோகம
27. மதுரகவி இருதயம் (மறைந்து விட்டது)
28. விரோத பரிஹாரம்

**வியாக்யான கிரந்தங்கள் :**

1. தத்துவடீகை
2. சதுச்லோகீபாஷியம்
3. ஸ்தோத்திரபாஷியம்
4. ரகசியரட்சை
5. கீதார்த்த சங்கிரரட்சை
6. தாத்பரிய சந்திரிகை
7. ஈசாவாஸ்யோபநிஷத்பாஷியம்
8. சர்வார்த்தசித்தி
9. அதிகரணதர்ப்பணம் (மறைந்து விட்டது)
10. நிகமபரிமளம் (ஷ)

**ஸ்தோத்ர கிரந்தங்கள் :**

1. அயக்கிரீவஸ்தோத்திரம்
2. தசாவதார ஸ்தோத்திரம்
3. பகவத்தியான சோபானம்

**தமிழ்ப் பிரபந்தங்கள் :**

(இரகசியங்களில் அடங்கிய பாசுரங்களைத் தொகுத்தவை :

1. அமிருதஞ்சனி
2. அதிகார சங்திரகம்
3. அமிருதாஸ்வாதினி

4. நியாசதிலகம்
5. அபீதிஸ்தவம்
6. தயாசதகம்
7. சரணாகதிதீபிகை
8. அஷ்டபுஜாஷ்டகம்
9. காமாசிகாஷ்டகம்
10. வேகாசேதுஸ்தோத்தாரம்
11. வரதராஜ பஞ்சாசத்
12. நியாயசதகம்
13. கோபாலவிம்சதி
14. பரமார்த்தஸ்துதி
15. ரகுவீரகத்யம்
16. தேவநாயகபஞ்சாகத்
17. அச்சுத சதகம்
18. தேகளீசதுதி
19. ஸ்ரீஸ்துதி
20. பூஸ்துதி
21. ஸ்ரீகோதாஸ்துரி
22. சோடசாயுதஸ்தோத்திரம்
23. ஸ்ரீசுதர்சனாஷ்டகம்
24. கருடதண்டகம்
25. கருடபஞ்சாசத்
26. நியாசஷம்சதி
27. வைராக்கியபஞ்சகம்
28. யதிராஜசப்ததி

4. பரமபத சோபாநம்
5. பரமபதபங்கம்
6. அத்திகிரி மகாத்மியம்

**தனிப்பட்டவை**

1. அடைக்கலப்பத்து
2. அர்த்தபஞ்சகம்
3. ஸ்ரீவைணவ தினசரி
4. திருச்சின்னமாலை
5. பன்னிரு திருநாமம்
6. திருமந்திரச் சுருக்கு
7. துவயச் சுருக்கு
8. சரமச் சுலோகச் சுருக்கு
9. கீதார்த்த கங்கிரகம்
10. மும்மணிக்கோவை
11. நவமணிமாலை
12. பந்துபா
13. கழல்பா
14 அம்மானைபா
15. ஊசல்பா
16. ஏசல்பா

மறைந்தவை

17. பிரபந்தசாரம்
18. ஆகாரநியமம்

**காவிய கிரந்தங்கள் :**

1. சுபாஷிதநீவி
2. யாதவாப்யுதம்
3. பாதகாசகஸ்ரம்
4. அம்சசந்தேசம்
5. சமஸ்யா ஸ்ஹஸ்ரி (மறைந்தது)

**இதர கிரந்தங்கள் :**

1. பூகோள நிர்ணயம்
2. சில்பார்த்த சாரம் | மறைந்தவை
3. திருமுடி அடைவு |
4. ஸ்தேயாஷரோதம் |
5. ச கார சமர்த்தனம்

ஸ்ரீதேவராஜஸ்வாமி திருக்கோயில், காஞ்சிபுரம் ஸ்ரீதேசிகன், ஸ்ரீதாத தேசிகன் விமான சம்ரோட்சண மலர்
17-02-91

**நாடககிரந்தம் :**

1. ஸ்ரீசங்கல்ப சூரியோதயம்

**அநுட்டான கிரந்தங்கள் :**

1. ஸ்ரீபாகவதாரதநவிதி
2. யக்ஞோபவீதபிரதிஷ்டை
3. அரிதின திலகம்

## அட்டவணை— V (ii)

### சுவாமி தேசிகர் அருளிய தோத்திரங்கள் விளக்கம்

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய : கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தா சார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி

-சுவாமி தேசிகரின் திருககுமாரரான
வரதாசாரியரால் அருளப்பட்டது.

**ஹயக்கிவ ஸ்தோத்ரம் :**

தேசிகன் திருவயிந்திரபுரத்தில் தமக்கு வைநதேயனால உபதேசிக்கப்பெறற ஹயக்ரீவ மந்திரத்தை, பலமுறை சொல்லி (ஆவிருத்தி செய்து) அதனால் ஹயக்கிரீவரைத் தரிசித்தார் அவரைப்பற்றி அருளியது இது. 33 சுலோகஙகள் கொண்டது. தாம் அவரை வணஙகி பலன் அடைந்த முறைகளும், அவருடைய திருமேனி வருணனைகளும இதில் அருளப்பெற்றது.

> "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம்
> உள்ளத்தெழுதியது ஓலையிலிட்டனம்"—என்பது சுவாமியின் வாக்கு

**கருடபஞ்சாசத்**

சுவாமி தேசிகன் திருவயிந்திரபுரத்தில்—ஔஷதாத்ரி என்னும் மலையிலிருநது தமககு ஆசாரியனால் உபதேசிக்கப்பெற்ற வைநதேய மந்திரத்தை பலமுறை சொல்லி கருடபகவானைத் தரிசித்தார். அவர், தேசிகருக்கு அயக்கிரீவ மந்திரத்தை உபதேசிததார். அப்படிப்பட்ட பெரிய திருவடி (கருடாழ்வார்) பற்றி அருளிச்செயயபபெறற தோத்திரம் இது. இதில 51 சுலோகஙகளும், பலனைக் கூறும் ஒரு சுலோகமும ஆக 52 சுலோகங்கள் அடங்கியுள்ளன.

இது 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது.

**தேவநாயக பஞ்சாசத் :**

திருவயிந்திரபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு தேவநாதப் பெருமானைப் பற்றி அருளிச் செய்யப்பெற்ற தோத்திரம் இது. இது 53 சுலோகங்கள் கொண்டது. பெருமானின் திருமேனி அழகில் ஈடுபட்டு, அவரைத்திருமுடிமுதல் திருவடிவரை வருணிக்கிறார். தேசிகர் தன்னைப் பெண்ணாகப் பாவித்து (அகப்பொருள் முறை) பாடுகிறார். ஆண்டாள் கேசவநம்பியைக் கால்பிடிக்க ஆசைப்பட்டாற் போல இவரும், தேவநாதனின் திருவடிகளில் கைங்கரியத்தை விரும்புகிறார் என்பது புலப்படுகிறது.

**அச்சுதசதகம் :**

இதுவும் அருள்மிகு தேவநாதப் பெருமானைப் பற்றி அருளிச்செய்யப்பெற்றது. (தேவநாதனைப் புகழ்ந்து தேசிகர், தமிழ், வடமொழி, பிராகிருதம்—ஆகிய மூன்று மொழிகளில் தோத்திரம் செய்துள்ளார். இப்பெருமை இவர் ஒருவருக்கே உண்டு). இதில் தானான தன்மையிலும், தலைவி நிலையிலும் தேசிகர் நின்று துதிக்கிறார். அப்பெருமானை அடைய ஆசார்யர்களை முன்னிட்டுக்கொண்டு சரணம் புகுகிறார் இதில்.

நம்மாழ்வார் தலைவி நிலையில், தன் நாயகனை "களிறு வினவிநிற்றீர்" எனறு களிறாக (ஆண் யானை) அனுபவித்தார். ஆண்டாளும் தன் நாயகனை "களிறாக என் கைப்பற்றி" என்று அனுபவித்தாள். திருமங்கை மன்னரும் "வரையுருவின் மாகளிறறைத் தோழீ" என்று அனுபவித்தார். அதேபோல் தேசிகரும் "கஜேந்த்ரம்" என்று இதிலும் அனுபவிக்கிறார்.

ரகுவீர கத்யம் :

இராமபிரானின் வடிவழகில் ஈடுபட்டவர்கள் பலர். தேசிகரும சக்கரவர்த்தித் திருமகனின் வடிவழகிலும், குணத்திலும் ஈடுபடடு இந்தத் தோத்திரத்[illegible] அருளிச்செய்கிறார். முதலில் அமைந்துள்ள மஙகள சு[illegible]கத்திலே [illegible] பிராட்டியையும் பெருமாளையும் சேர்த்து அனுபவித்துப் பிறகு. [illegible] யின வீரத்தையும், குணத்தையும் பேசுகிறார் இதில.

**கோபால விம்சதி :**

கண்ணபிரானைப் பற்றி அருளிச்செய்யப்பட்டது. [illegible] சொல்லும் சுலோகம் உட்பட (பல சுருதி ) 12 சுலோகங்களை கொண்டது. கண்ணனின் இளமைத் திருவிளையாடல்களைப் பெரியாழ்வார் நிலையில் அனுபவிக்கிறார் தேசிகர்.

ஒரு கவளம் வெண்ணெய்க்காக உலகநாதனான பரமாத்மா, ஒரு நந்தன் வீட்டில், தன்னுடைய ஆபரணங்களையெல்லாம் குலுங்கக் குலுங்கத் தயிர் கடையும் ஓசைக்கேற்றவாறு தாளம் போட்டும், அது கிடைக்காதபோது அதைத்திருடி விழுங்கும் சமயத்தில், நந்தன் மனைவியிடம் கையும் களவுமாய் அகப்பட்டுக்கொண்டு, அவளால் கண்ணிநுண்சிறுத்தாம்பினால் உரலிடை கட்டுண்டு துள்ளித் துடித்து, பாவிகளின் ஏச்சுக்குக்காளாகி, வெண்தயிர் தோய்ந்த செவ்வாயுடனும், அஞ்சின நோக்குடனும், தொழுத கையுடனும் நின்ற நிலையைக்கண்டு, யசோதை அனுபவிக்கும்படி பண்ணின கண்ணன், என் மனத்தில் அதே நிலையோடு காட்சி தந்து என்னைப் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டுகிறார், இதில்.

**ஸ்ரீதேஹளீஸ்துதி:**

திருக்கோவலூரில் சேவையருளும் ஆயனாரைப்பற்றி அருளிச்செய்யப் பெற்றது. 28 சுலோகங்கள் கொண்டது. முதலாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூரில் ஒரு திருமாளிகையின் இடைகழியில் ஒன்று சேர, இவர்களின் திருமேனித் தொடர்பை விரும்பி ஆயனார் இவர்களின் நடுவே புகுந்து இவர்களை நெருக்க, அப்போது ஆழ்வார்கள் அறிவுபெற்று எம்பெருமானை அனுபவித்து அந்தாதிகளைப் பாடினார்கள். இந்த வரலாறும், திரிவிக்கிரமாவதாரப் பெருமையும், அதனால் எம்பெருமானின் மேன்மையும் (பரத்துவம்) பேசப் படுகின்றது. இதில், தேஹளீயில் (இடைகழி) சேவை தந்தருளியதால் "தேஹளீசன்" என்று இங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்குத் திருநாமம்.

*வரதராஜபஞ்சாசத் :*

காஞ்சி அத்திகிரியில் கோயில் கொண்டுள்ள பேரருளாளரைப்பற்றி அருளிச்செய்யப்பெற்றது இது. 51 சுலோகங்கள் கொண்டது. முதலில் தேசிகர் தம்முடைய கைம்முதல் இன்மையைத் (ஆகிஞ்சந்யம்) தெரிவித்து, பிறகு பிற தெய்வங்கள் எல்லாம் எம்பெருமானுக்கு உடலாக இருப்பவை என்றும், எல்லா வகையாலும் பெருமானே வழிபடத்தக்கவர் என்கிறர். பிறகு பெருமானின் ஐவகை வடிவங்களைப் பேசுகிறார். அதற்குமேல் அவதாரங்களைப் பேசுகிறார். அர்ச்சாவதாரத்தை விரிவாக அனுபவிக்கிறார். அதனால் பேரருளாளன் திருவடிகளில் பிரபத்தி செய்கிறார். அவனது திருடிவாரத்தில் வசிப்பதும், பக்தியும், அவன் அடியார்களோடு பழகும் வாய்ப்பும் கிடைத்ததால் இல்லறமே மோட்சமாகி அந்த நல் வீட்டையும் தம் மனது கொள்ளாது என்கிறார், இதில். வைகாசித்திங்களில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் வரதராஜன்-கருடன், குதிரை, திருத்தேர், பல்லக்குமுதலிய வாகனங்களில் அநேக செல்வங்களுடன் எழுந்தருளும் சேவையைக் கண்கொட்டாமல் சேவித்து, மனத்தால் நினைப்பதற்குரிய அருளாளனின் திருமேனி அழகில் ஆழங்கால் பட்டு, வைகுண்ட வாசமும் விருப்பமில்லை என்று சத்தியமாகச் சபதம் செய்கிறார் இதில், கடைசியில் தம் மனத்தில் எப்போதும் பெருந்தேவியுடன் பேரருளாளன் குடியிருக்க வேண்டுமென்று வேண்டுகிறார்.

**அஷ்டபுஜாஷ்டகம்**

காஞ்சியில் எழுந்தருளியுள்ள அட்டபுயகரத்து எம்பெருமானைப் பற்றியது. 10 சுலோகங்கள் கொண்டது.

ஒரு கையில் சங்கும், மற்றொருகையில் ஆழியும் கொண்டு, விண்ணோரும் செந்தமிழ் பாடுவாரும் வணங்கும்படி மலர்மேல் மங்கையுடன் அலைகடல் போன்ற

அட்டபுயகரத்தான் நிற்கும் நிலையானது, அவனது மேன்மையை (பரத்துவம்) மறைக்க முடியாதவாறு காட்டினாலும், அடியார்களுடன் கலந்து அனுபவிக்க ஆசைப்பட்ட அவன், அனுபவங்களில் ஆரம்ப நிலையான உடன் உண்ணுதல், மருங்குல் நோக்குதல், வாய்திறந்து பேசுதல் முதலியவற்றைச் செய்து அவன் தன் மேன்மையை மறைக்கிறான் என்கிறார் இதில். இறுதியில் அவன் திருவடித்தாமரைகளில் என்றும் கைகரியம் செய்யவேண்டுகிறார்.

## வேகாஸேது ஸ்தோத்திரம் :

காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் சொன்னவண்ணம் செய்த பெருமானைப் பற்றிய தோத்திரம் இது. 10 சுலோகங்கள் கொண்டது. இப்பெருமானை உபாயமாகவும் அத்திரிகிரி அருளாளரைப் பாலமாகவும் அனுபவிக்கின்றார் இதில். தம் அடியார்களுடைய ஏவல் செய்கிறவர் இவர். (கணிகண்ணன் வரலாறு) அப்பெருமை தோன்ற இன்றளவும் மற்ற சயனத்திருக்கோல எம்பெருமான்களைப் போலன்றி, இடத்திருக்கையை எழுந்திருக்கும் நிலையில் வைத்துக்கொண்டு பள்ளிகொண்டிருக்கிறார். சம்சாரக்கடலின் அக்கரையைத் தாண்ட இவர் உபாயமாகையால் இவரை சேதுவாக உருவகிக்கிறார் இதில்.

## காமாஸிகாஷ்டகம் :

இது காஞ்சியில் வேகவதி நதிக்கு அருகில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நரசிம்மப் பெருமானைப் பற்றி அருளப்பெற்றது. 9 சுலோகங்கள் கொண்டது. ஒரே சமயத்தில் பகைவரிடம் சீற்றமும், அடியார்களிடம் அருளும் தோன்றும்படி இருக்கும்படி இருக்கும் நரசிம்மரின் திருக்கண்களை அனுபவிக்கிறார். தமக்கு அவரே பாதுகாப்பாவாரென்றும், வேறு யாராலும் தமக்குப் பயனில்லை என்றும் அறுதியிடுகிறார். அவர் எல்லாப் பலன்களையும் தருவார் என்றும் சொல்லி முடிக்கிறார்.

## சரணாகதி தீபிகா :

இது காஞ்சியில் சுவாமி தேசிகருடைய திருவவதாரத் தலமாகிய திருத்தண்கா என்னும் திவ்விய தேசத்தில் பகைவரிடம் சீற்றமும், அடியார்களிடம் அருளும் தோன்றும்படி இருக்கும் நரசிம்மரின் திருக்கண்களை அனுபவிக்கிறார். தமக்கு அவரே பாதுகாப்பவரென்றும், வேறு யாராலும் தமக்குப் பயனில்லை என்றும் அறுதியிடுகிறார். அவர் எல்லாப் பலன்களையும் தருவார் என்றும் சொல்லி முடிக்கிறார்.

சரணாகதி தீபிகா : இது காஞ்சியில் தேசிகருடைய திருவவதாரத் தலமாகிய திருத்தண்கா என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் விளக்கொளி எம்பெருமானைப் பற்றி அருளப்பெற்றது. 59 சுலோகங்கள் கொண்டது. சரணாகதனுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் இதில் கூறப்பெற்றிருப்பதால் இதற்கு இத்திருநாமம் வழங்கலாயிற்று.

பரமார்த்தஸ்துதி :

இது காஞ்சியிலிருந்து 8 கி. மீ. தொலைவிலிருக்கும் திருப்புட்குழி என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் விஜயராகவப் பெருமானைப் பற்றிய தோத்திரம். 10 சுலோகங்கள் கொண்டது. ஒருவன் பிரபத்தியை மேற்கொண்ட பின்னர் அவனுக்கு வரக்கூடிய பகவதனுபவமும், பிறகு மரணமானால் உண்டாகும் வீடுபேற்றின் பெருமையும் பேசப்படுகிறது இதில். எம்பெருமானுக்கு பரம விரோதியாய் இருப்பினும் சரணாகதி பண்ணினால் பாதுகாப்பன் என்று ஏற்படுகிறது.

ஸ்ரீஸுதர்ஸநாஷ்டகம் :

இது சக்கரத்தாழ்வாரைப் பற்றி அருளப்பெற்றது. 9 சுலோகங்கள் கொண்டது. தாம் புறச் சமயங்களைக் கண்டனம் செய்ய அருளிய சக்கரத்தாழ்வாரை மங்களாசாசனம் செய்கிறார் இதில்.

ஷோடாசாயுத ஸ்தோத்திரம் :

இது 19 சுலோகங்களை கொண்டது. சக்கரத்தாழ்வானின் 1 திகிரி, 2 மழு, 3 ஈட்டி, 4 தண்டு, 5 அங்குசம், 6 அக்னிரூபாயுதம், 7 வாள், 8 வேல், 9 சங்கம், 10 வில், 11 பாசம், 12 கலப்பை, 13 வஜ்ராயுதம், 14 கதை, 15 உலக்கை, 16 திரிசூலம் ஆகிய 16 ஆயுதங்களுக்கும் 16 சுலோகங்களை அருளியுள்ளார். (2 முதல் 17 வரை) 1, 18 சுலோகங்கள் பொது. 19 பலன் கூறுவது. இந்த 16 ஆயுதங்களும் காஞ்சியில் சக்கரத்தாழ்வான் உற்சவத்திருமேனியில் சேவையருளுகின்றன.

தயாஸதகம் :

திருவேங்கடமுடையானின் திருவருளைப் பாராட்டும் 108 சுலோகங்கள் கொண்டது இந்தசதகம். திருமாலுடைய பல்வேறு திருக்கலியாண குணங்களுள் சிறந்த குணம் தயாள குணம்தான் என்று வெகு அழகாக இங்கே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் என்று போற்றப்பட்ட தேசிகன், அந்தப் பிரபத்தியாகிய உபாயம் கிடைப்பது பெருமாளுடைய தயையாலேதானாகையால் அந்த தயைக்குப் புகழ் பாடுவதன் மூலம் சித்தோபாயத்தின் பெருமையை இந்தத் தோத்திரத்தால் நிறுவுகிறார்.

இதிலுள்ள முதல் 100 சுலோகங்கள் பத்து பதிகங்களாக வகுக்கப்பெற்று, ஒவ்வொரு பதிகமும் ஒவ்வொரு விருத்தத்திலேயே அமைக்கப்பெற்றுள்ளது. இந்தத் தோத்திரத்தின் எல்லாச் சுலோகங்களிலும் (இரண்டில் தவிர) தயாசப்தமோ, அதே பொருள் தரவல்ல கருணா, கிருபா, அநுகம்பா என்பன போன்ற சொற்களோ திகழ்கின்றன.

பெருமாளுடைய விருப்பம் தான் தயை என்று 71-ஆவது சுலோகத்தில் தெரிவிக்கப்பெற்றுள்ளது. தயையின் மூர்த்திதான் பெரிய பிராட்டியாரென்று பல இடங்களில் அனுபவிக்கப் பெற்றுள்ளது. எல்லா வகையாலும் சுவாமி தேசிகன் அருளியுள்ள தோத்திரங்களுக்குள் இது தனிப்பட்ட பெருமையுடையதாகவே பெரியோர்களால் கருதப்பட்டிருக்கிறது.

<u>வைராக்கிய பஞ்சகம்</u> 6 சுலோகங்களால் சுவாமியின் வைராக்கியம் பரக்கப் பேசப்படுகிறது. இதில் வித்தியாரண்யர் என்பவர் சுவாமியின் வறுமையைப் போக்க எண்ணி அரசவையில் ஒரு பதவி ஏற்குமாறு சொல்லியனுப்ப, அவருக்குப் பதிலாக எழுதியனுப்பப்பெற்ற சுலோகங்கள் இவை என்று சுவாமியின் வரலாறு கூறுகிறது. தனக்கு உரிமையான தனம் கரிகிரிமேல் நின்று அனைத்தும் காக்கும் பேரருளாளனே என்கிறார் சுவாமி.

பகவத்தியான ஸோபாநம் :

இது திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் திரு அரங்கநாதனைப் பற்றி அருளப்பெற்றது. 12 சுலோகங்கள் கொண்டது. பெருமானின் திருவடி முதல் திருமுடிவரை அனுபவிக்கிறார்.(திருப்பாணாழ்வாரைப்போல) பிரகு அரங்கனின் சமுதாய சோபையை அனுபவித்து, பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

ஸ்ரீஸ்துதி :

இது பெரியபிராட்யார் பற்றி அருளப்பெற்றது. 25 சுலோகங்கள் கொண்டது. சுருதிகள் பிராட்டியையிட்டுப் பரதத்துவ நிர்ணயம் செய்ததுபோல, இவரும் பிராட்டியின் திருவடிச் செம்பஞ்சுக் குழம்பின் அடையாளமுள்ள பொருள்தான் பரப்பிரம்மம் என்று அருளுகிறார் இதில். மேலும்"கேவல பெருமாளும், கேவல பிராட்டியும் தத்துவமல்ல. இருவரும் சேர்ந்த ஒரு திவ்ய தம்பதிகள்தாம் பரத்துவம் ; அந்தத் தம்பதிகளே உபாயம் உபேயம்",என்கிற நம் விசிட்டாத்துவைத சித்தாந்தத்தின் பொருள் இதில் பேசப்படுகிறது.

**பூஸ்துதி :**

இது பூமிப்பிராட்டியைப் பற்றி அருளப்பெற்றது. 33 சுலோகங்கள் கொண்டது. பூமிப்பிராட்டியின் திருநாமப் பெருமையைப் பேசி, அவளை வராகப்பெருமாளோடு சேர்த்து அனுபவிக்கிறார்

"கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்புக்கு
இடந்திடும் தன்னுள் கரக்கும் உமிழும்
தடம் பெருந்தோளாரத் தழுவும் பாரென்னும்
மடந்தையை மால்செய்கிற மாலார் காண்பாரே"

என்று நம்மாழ்வார் பெருமாளுக்குப் பூமிப்பிராட்டியின் மேலுள்ள விருப்பத்தைப் பலபடியாக அருளிச் செய்தவாறு. சுவாமியும் பெருமாள் தாசவடிவினனாய், பூமிப்பிராட்டியை தலையால் தாங்கிக்கொண்டிருக்கிறார் எனவும்,பெருமாட்டியின் திருவடிகளைத் தம் வலத் திருக்கையால் தாங்கிக்கொண்டிருக்கிறார் எனவும், தம்இடத் திருக்கையைப் பூமிப்பிராட்டிக்கு ஆதாரமான இடமாகக் கொடுத்திருக்கிறார் எனவும்—இப்படிப் பலபடியாக அனுபவிக்கிறார்.

**கோதாஸ்துதி :**

ஸ்ரீஆண்டாளைப் பற்றி அருளப்பெற்றது இது. 29 சுலோகங்கள் கொண்டது. ஆண்டாள் திருவவதாரம் பற்றியும், அவள் சுயம்வரம் பற்றியும் பேசி, அரங்கநகரப்பன் இவளுடைய மேலாடையையும் (உத்தரீயம்) மாலையையும் தலையில் சூடுவதனால்தான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வன் ஆனான் என்கிறார். ஆண்டாள்எம்பெருமானைத் தன்னுடைய பூமாலையாலும், பாமாலையாலும் தன் வசமாக்கிக்கொண்ட பெருமையைப் பேசி, அப்படிப்பட்ட பெருமைக்குரிய கோதை நம் மனத்தில் எப்பொழுதும் விளங்கவேண்டும் என்று வேண்டுகின்றார்.

**தசாவதார ஸ்தோத்திரம் :**

திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் தசாவதார எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்கிறார் இதில். இது 13 சுலோகங்கள் கொண்டது. முதல் சுலோகத்தில் பொதுவாக எம்பெருமானின் அவதாரங்களைச் சொல்கிறார். "எம்பெருமானைச் சொன்ன இடம் எல்லாம் பிராட்டியையும் சொல்லிற்றாம்" —என்றவாறு எம்பெருமான் அவதரிக்கும்போதெல்லாம் பிராட்டியும் கூடவே அவதரிக்கிறார் என்று சாதிக்கிறார் இதில். அடுத்த 10 சுலோகங்களால் 10 அவதாரங்களைப்பற்றி அருளுகின்றார். 12-ஆம் சுலோகத்தில் ஒவ்வொரு அவதாரத்தில் முக்கியமாகத் தோன்றிய அடிப்படைக் கருத்தை எடுத்துக்காட்டியுள்ளார். 13-ஆவது பலன் சொல்லி முடிப்பது.

**யதிராஜஸப்ததி :**

ஸ்ரீராமானுஜரைப் பற்றிய தோத்திரம் இது. உடையவரிடம் சுவாமி தேசிகனுக்குள்ள கரைகாணவொண்ணாத ஆசாரிய பக்தி, இந்தத் தோத்திரத்தில் சுலோகம் தோறும் மிளிர்கின்றது.

**ந்யாஸ திலகம் :**

திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் திருவரங்கனைப் பற்றி அருளப்பெற்றது. 32 சுலோகங்கள் அடங்கியது. முமுட்சுவுக்கு (மோட்சத்தில் விருப்பமுள்ளவர்) ஆசாரியனின் திருவருள் மிகவும் அவசியம் என்று கூறி, அவன் அறியவேண்டிய உபாயச் சிறப்புகளையும் விவரிக்கிறார் இதில்.

**ந்யாஸவிம்ஸதி :**

இது ந்யாஸ வித்யா விஷயமாக அருளப்பெற்றது. 22 சுலோகங்கள் கொண்டது. முதலிரு சுலோகங்களால் ஆசாரியன் இலட்சணமும், 3-ஆம் சுலோகத்தால் சீடனின் இலட்சணமும் சொல்லப்படுகிறது. மேல் 17 சுலோகங்களால் பிரபத்திநெறி, அங்கம் இவைகளைப் பற்றி ஏற்படும் ஐயங்களுக்குப் பரிகாரம் முதலியன பேசப்படுகின்றன. கடைசி இரண்டால் நிகமனமும் அருளப்பெற்றுள்ளது. இவற்றுக்குத் தாமே சுருக்கமாக அவதாரிகையும் பொருளும் அருளிச்செய்துள்ளார்.

**ந்யாஸ தஸகம் :**

இது 10 சுலோகங்கள் கொண்டது. பிரபத்தி நெறி பற்றி அமைந்துள்ளது.

**கருடதண்டகம் :**

இது கருடபகவானைப் பற்றியது. இதில் நான்கு சரணங்களில் முறையே கருடனுடைய பரரூபமும், வியூகரூபமும், நாகதமனகதையும், கருடமந்திரமும் அருளப்பெற்றுள்ளன.

**அபீதிஸ்தவம் :**

இது திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் திருவரங்கப் பெருமானைப் பற்றி அருளப்பெற்றது. 29 சுலோகங்கள் கொண்டது. பெருமானின் திருநாமத்தை பேசக் கற்றவர்களுக்கு நரக உலக பீதியானது நெருங்காது என்கிறார் இதில்.

**ஸ்ரீமத் வேதாந்ததேசிக மங்களாசாசனம் :**

இது சுவாமியின் திருக்குமாரரான வரதாசாரியரால் அருளப்பெற்றது. 13 சுலோகங்கள் கொண்டது. சுவாமி தேசிகனைப் பற்றிய மங்களாசாசனமாக அமைந்துள்ளது. இதில் சுவாமியின் திருவவதாரம், வமிசம், பிரவசநங்கள் இவைபற்றி விரிவாகப் பேசுகிறார்.

## அட்டவணை-VI

### பாஞ்சராத்திர ஆகமம் - வைகானச ஆகமம் - விளக்கம்

வித்துவான். ஸ்ரீ.உ.வே. தஞ்சை என்.எஸ். தாதா சார்யர், சப்தகிரி இதழ்கள்.

**சிற்பம் :** சிற்பியின் செயல், தியானம், 64 கலைகள் என்ற பொருள்கள் உண்டு. சிலையில் அழகுக்காகச் செய்யும் வேலைகள் அனைத்தையும் சிற்பம் என்ற பொதுவழக்கில் இன்று அழைப்பதுண்டு. சிற்பக்கலையின் முழுமை (பூரணத்வம்) ஒரு சிலையில் ஏற்பட்டால் அது உயிர் பெற்றுவிடும். "சிற்பங்களில் கவர்ச்சி, அழகு தேவையே ; ஆயினும் அவை ஆகம, சிற்பநூல்களில் கூறிய இலக்கணப்படி பொருந்தி இருக்கவேண்டும்" சுக்கிரநீதி.

ஆலயங்கள், கோபுரங்கள், விமானங்கள் - இறைவன் திருமேனிகளில் மந்திரசக்திகள் அடைக்கப்பட்டு, மக்களின் கண்கள் வழியாக அவர்கள் உள்ளத்திலும், வாழ்விலும் அம் மந்திரசக்திகளை உற்சவ விக்கிரகங்கள், விமானத்தில் உள்ள தாமிரக் கலசங்கள் மூலமாகப் பாய்ச்சும் நோக்கம் பெற்றவைகளே.

இன்றளவில் தமிழகத்தில்தான் ஆலயங்களும் ஆகம விதிகளும் அதிகம். இவை பெரும்பாலும் சுற்றளிகளே (தளி-கோயில்). திருமால் ஆலயங்களுக்குள் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், வாத்தியமண்டபம், நிருத்தமண்டபம் என்பன வரிசையாக அமைந்திருக்கும். மனிதனின் உடலமைப்பு, உள்அமைப்பு, இவற்றில் உள்ள 7 தாதுக்கள், பஞ்சகோசங்கள் இவற்றின் அமைப்புகளுக்கிணங்க, முறையே இச்சுற்றுகள் 5 (அ) 7 ஆக இருக்கும். விமானங்கள் பிரணவாக்ருதி விமானம், ஆநந்தநிலைய விமானம் (திருமலை) புண்யகோடி விமானம் (காஞ்சிவரதர் கோயில்) என்ற வகையில் பெயர்களுடன் அமைந்திருப்பதுபோல், திருக்குளங்களுக்கும் (புஷ்கரிணி) திருப்பெயர்கள் சூட்டப்பட்டிருக்கும். இவ் ஆலய மதில்களில் பெரும்பாலும் கைகூப்பி அமர்ந்த கருடன்களின் பிம்பங்கள் அடையாளச் சின்னமாக இருக்கும், தல புராணப்படி இந்த வடிவங்கள் சில ஆலயங்களில் மாறுபட்டிருக்கும். "விஷ்ணு : பர்வதானாம் அதிபதி" என்ற வேத வாக்கியப்படி அழகர்மலை, திருமலை. திருநீர்மலை, சோளிங்கபுரம் போன்ற இடங்களிலுள்ள ஆலயங்கள் மலைகளின் மேலும் அமைக்கப்பட்டிருக்கும்.

**ஆகமம் ... பாஞ்சராத்திரம் :**

108 திவ்விய தேசங்களில் வைகானச ஆகம வழிபாடுதான் அதிகம். எனினும் இல்லங்களில் வழிபடுவதும், ஸ்ரீரங்கம் முதலிய ஆலயங்களில் வழிபாடுகள் நடப்பதும் பாஞ்சராத்திர முறையிலாகும். கட்டுப்பாடும் இதில் அதிகமில்லை.

"பிரதிஷ்டை" - என்றால் ஆலயங்களிலுள்ள திருமால் விக்கிரகங்களில் மந்திர சக்தியைத் தேக்கிவைப்பது எனவும் பொருள் உண்டு. இதனை Spritual Battery எனலாம். பாஞ்சராத்திர பாத்மத்தில் இது 5 வகைப்படும் என்கிறது.

1. ஸ்தாபனா — திருமாலை நின்ற திருக்கோலத்தில் அமைப்பது
2. ஆஸ்தாபனா — " வீற்றிருந்த " "
3. ஸம்ஸ்தாபனா — " பள்ளிகொண்ட " "
4. ப்ரஸ்தாபனா — " வாகனங்களில் எழுந்தருளியிருக்கும் நிலையில் அமைப்பது.
5. பிரதிஷ்டை — கர்மார்ச்சையுடன் அமைப்பது.

**வைகானசம் :**

இது வேதத்தையும், வைதிக நெறியையும் நூற்றுக்குநூறு பின்பற்றுவதாகும். திருமால் திருப்பதிகள் நம் நாட்டில் பல உள. அவற்றுள் சுவயம் வ்யக்த தலங்கள் 8. பௌராணிகமும் ஆர்ஷமும் கலந்தவை 108. இவைகளில் மூர்த்தி, தலம் தீர்த்தம் என்பன முக்கியமாக இருக்கும். இவற்றுள் வைகானச ஆகம வழிபாடு நடக்கும் தலங்கள் 48. பாஞ்சராத்திர வழிபாடு நடக்கும் ஆலயங்கள் 34. இவற்றுள் தென்கலை நெறிப்படியுள்ள திவ்வியதேசங்கள் 60. வடகலை நெறிப்படியுள்ளவை 13. இவற்றுள் சயனத்திருக்கோலங்கள் அதிகம். இது 8 வகைப்படும்.

சயனத் திருக்கோலத்துள் -

1. உத்தியோக சயனம் — திருக்குடந்தை - 1 திருத்தலம்
2. தர்ப்பசயனம் — திருப்புல்லாணி - திருத்தலம்
3. தலசயனம் — திருக்கடன்மல்லை (மாமல்லபுரம்) 1 திருத்தலம்
4. புஜங்கசயனம் — திருஅனந்தபுரம், திருஅரங்கம், திருஅன்பில், திருஆதனூர், எவ்வுள் திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்) திருக்கவித்தலம், திருக்கோட்டியூர், திருக்கோளூர் (இடக்கையை உயர்த்திப் பார்ப்பது போல் சேவை), திருச்சிறுபுலியூர், திருத்தெற்றியம் பலம், திருப்பாற்கடல், திருப்பிரிதி, திருப்புளிங்குடி, திருப்புள்ளம் பூதங்குடி, திருப்பேர்நகர் (எம்பெருமான் வலத்திருக்கையின் கீழ் குடம்) திருவாட்டாறு, திருவிற்றுவக்கோடு, திருவெஃகா, திருவெள்ளியங்குடி - ஆக 20 திருத்தலங்கள்.
5. போகசயனம் — திருச்சித்திர கூடம் - 1 திருத்தலம்

6. மாணிக்கசயனம் — திருநீர்மலை (நின்றான், இருந்தான், நடந்தான் சந்நிதிகளும் உண்டு) - 1

7. வடபத்ரசயனம் — திருவில்லிபுத்தூர் - 1 திருத்தலம்

8. வீரசயனம் — திருவில்லிபுத்தூர் - 1 திருத்தலம்

ஆக சயனவகை 8-க்கு 27 தலங்கள், (நா. தி. பி. பதிப்பாசிரியர். வித்துவான். கி. வேங்கடசாமி ரெட்டியார், திருவேங்கடத் தான் திருமன்றம், சென்னை - பக். 182-205)

இந்தத் திவ்விய தேசங்களில் மூலவர் உற்சவர் இருவரும் முக்கியமாய் (பிரதானமாய்) உபயபிரதானத் தலங்களும் உள்ளன. இங்கு மூலவருக்கும் உற்சவருக்கும் தனித்தனியான திருப்பெயர்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, திருவரங்கத்தில் மூலவர் திருநாமம் அரங்கன் ; உற்சவர் திருநாமம் நம்பெருமாள் எனவும், திருமலையில் ஸ்ரீநிவாசன் - மலையப்பன் எனவும், காஞ்சி அத்திகிரியில் மூலவர் பிரணதார்த்திஉறரர் - ஸ்ரீவரதன் எனவும், திருக்குடந்தையில் மூலவர் அமுதன் - சாரங்கபாணி எனவும் தனித் திருப்பெயர்கள் பூண்டுள்ளனர்.

திருமால் ஆலயங்களில் தலவிருட்சங்களுக்கும் அதிக முக்கியத்துவம் உண்டு. திருமகள் சந்நிதி வலப்புறமும், ஸ்ரீஆண்டாள் நின்ற கோலத்துடனும் இருப்பர். பூமிதேவிக்குப் பதிலாக அவள் அவதாரமான ஆண்டாள் ஆலயம் இடப்பக்கம் அமைந்தது.

ஸ்ரீவைணவ ஆலயத்திற்குப் சென்று வணங்குவோர் கருவறையில் இறைவனைத் தரிசித்தபின், தீர்த்தம், சடாரி, திருத்துழாய் ஆகியவற்றை ஏற்காமல் திரும்பமாட்டார்கள். ஸ்ரீசடாரி - நம்மாழ்வாரைக் குறிக்கும். (ஸ்ரீராமாநுஜர் சந்நிதியில் இது - முதலியாண்டானைக் குறிக்கும்).

பொதுவாக வைணவ ஆகமங்கள் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என 4 வகைப்படும்.

இவைகளில் கிரியாபாதத்தில் — கோயில் அமைப்பு, விக்கிரக அமைப்பு, பிரதிட்டை முதலியவை பற்றிய விளக்கம் இருக்கும்.

2. சரியாபாதத்தில் — நாள் வழிபாடு, திருவிழாக்கள், அருச்சகர்களின் தன்மை, பக்தர்களின் கடமைகள் யாவும் விவரிக்கப்பட்டுள்ளன.

பகவான் அருச்சகர்கள் மூலம்தான் பேசுவர் என்பது ஆசாரியர்கள் திருவுள்ளம்.

1. பாஞ்சராத்திரம் — திருமாலின் ஐம்படைகளின் அம்சமான சாண்டில்யர், ஒளபாசனர், மௌஞ்சாயனர்,

கௌசிகர், பாரத்வாஜர் என்ற ஐவரின் மூலமாய் வெளிவந்தது.

2. வைகானசம் — விகனசர் - பிருகு, மரீசி, அத்திரி, காசியபர் என்பவர்களின் மூலமாய் வெளிவந்தது.

பொதுவாக ஆலயங்களில் 5 பேரங்களை (இறைவன் திருமேனி) வழிபடுவர்.

பரம்பொருமாளான ஸ்ரீமந்நாராயணனுக்குப் பகவான் என்று திருப்பெயர் உண்டு. ஞானம், பலம், செல்வம், வீரியம், சக்தி, ஒளி-என்று 6 குணங்களைப் பகம் என்ற சொல் குறிக்கும். இந்த 6 வகைக் குணங்களும் ஆலயத்தில் உள்ள அர்ச்சாவிக்கிரகத்தில் தேங்கிநிற்கும் என்பதை ஸ்ரீவிக்வக்ஸேனஸம்உறிதை, "ஸர்வாதிசாயி ஷாட்குண்யம்-ஸம்ஸ்திதம் மந்த்ர பிம்பமோ" எனக் கூறும். மடுநீர்போல் அர்ச்சையே அருள்மிகும் பகவான். அதை வெறும் பிம்பமாக நினைக்கக்கூடாது. அருள் பொழியும் திருமாலாகவே நினைக்கவேண்டும். திருமாலைத் திருவடி முதல் திருமுடிவரை கண்டால் உறுதியாக மறுபிறவியே கிடையாது என்பர். ("ஆபீடாத் மௌளிபத்யந்தம் பச்யத : புருஷோத்தமம்") இது இரு ஆகமங்களின் பொதுக்கருத்து.

திருமால் ஆலயங்களில் உள்ள தாயார்கள் வெளியில் திருவிழா காணமாட்டார்கள். சிவத்தலங்களிலுள்ள பஞ்சமூர்த்திகள் புறப்பாடு இங்கு இல்லை. பஞ்சபர்வ புறப்பாடுகள் உண்டு. இவ் ஆலயங்களில் கருவறைக்கு முன்பும், வெளி மண்டபங்களிலும், சிற்சில இடங்களில் தனித்தனியாகத் துவார பாலகர்கள் உண்டு. இவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள நித்தியசூரிகள் ஆனதால், இவர்கள் திருக்கைகளில் சங்கு, சக்கரத்துடனும் இருப்பார்கள். இவர்கள் பல திருப்பெயர்களுடன், பலவித முத்திரைகளுடன் இருப்பார்கள். இவர்களில் ஜய-விஜயர் முக்கியமானவர்கள் விமானத்தின் கீழே பாதுகாவலராக, விநாயகர், துர்க்கை இருப்பர். கருவறை விமானச் சுற்றுக்குத் "திருவுண்ணாழி" எனப் பெயர்.

ஸ்ரீவைணவர்களை உபயவேதாந்திகள், பரமைகாந்திகள் என்பர். இவர்களுக்குத் தமிழிலும், வடமொழியிலும் ஏற்றத்தாழ்வற்ற சரிநிகரான மதிப்புண்டு. அதனால் ஆலயங்களில் கையாளும் சொற்கள் தூயதமிழ்ச் சொற்களாகவே இருக்கும். எம்பெருமானைப் பற்றிக் குறிப்பிடும் மரபுச் சொற்கள் யாவும் தமிழிலேதான் இருக்கும் - எழுந்தருள்வது, கண்டருளப்பண்ணுவது, சிறிய திருவடி, பெரிய திருவடி, எம்பெருமான், பெருமாள், நீராடல், திருப்பரிவட்டம் என்பன போன்ற பல மரபுச்சொற்கள் உண்டு. கி.மு. 185 முதல் 72 வரை சங்ககாலக் கல்வெட்டுகளிலிருந்து, நம் தமிழகத்தில் "வாசுதேவன்" என்ற திருமாலுக்குக் கோட்டம் என்ற பெயரில் ஆலயங்கள் கட்டினார்கள் எனவும் தெரியவரும்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது ஆலய பிம்பங்களின் பீடம், திருமேனி இவற்றைப் பழுதுபார்க்கவும், கருவறையைத் தூய்மைப்படுத்தவும், குடமுழுக்கு செய்யவும் வேண்டும். மூர்த்தி சார்ந்த நித்தியம் இதனால் வலுப்படும். கோபுரம் - ஆன்மதுவாரம் ; விமானம் - அளவிற்கு விஞ்சிய பெருமையுடையது எனவும் பொருள் உண்டு. இவற்றுக்கு 8 ஆண்டுகளுக்கு ஒருமுறை சம்ப்ரோக்ஷணம் செய்வது நலம். கருவறை கோபுரத்தை "விமானம்" எனவும், மற்றவைகளைக் "கோபுரம்" எனவும் வைணவம் அழைக்கும். ஆகம முறையைப் பின்பற்றும் ஆலயம், அங்குள்ள திருமால் இவர்களிடம் பக்தியுள்ளவர்களுக்குப் பகவான் இருவகை இன்பத்தையும், இருவகைப் பலன்களையும் அருளுவார் என்பதைச் சௌனகர் அருளுகிறார். "யானைகள், தக்க அதிதிகள் இவர்களை வழிபடுவதுபோல் பகவானை வணங்கவேண்டும்" - என்று சாண்டில்ய ஸ்மிருதி கூறும் "வின்சென்ட் அரவி" எனும் மேனாட்டு அறிஞர்.

"India is the only country, which has known GOD. If any one wants to know GOD, he must know about Indian Temples and Agamas" என்றுரைத்தார். (கடவுளை உண்மையாக அறிந்த நாடு இந்தியா ; கடவுள் உண்மையை நன்கு அறியவேண்டின் இந்தியாவில் உள்ள கோயில்கள், ஆகமங்கள் இவற்றைப் படித்தறியவேண்டும்).

மாக்ஸ்முல்லர் என்ற வடமொழி ஆராய்ச்சியாளர், "ஆகமங்களின் வளர்ச்சியானது பரமாத்மாவின் மக்களின் பக்தி உணர்வை வளர்க்கும்" என்று கூறுகிறார்.

(The development of Agama School gave a great impetus to back this, by concentrating the attention on one Paramatma and this resulted in an extreme Bhakthi).

வைகானச ஆகமம் :

இது ஸ்ரீமந்நாராயணனால் பிரம்மாவுக்கு நேரில் உபதேசிக்கப்பட்டது. இவரைத்தான் ஸ்காந்தம் "விகனசர்" என்றது. இவரே திருமால்திருமார்பிலிருந்து தோன்றியவர். வியாசர் மூலவேதங்களை நான்காகப் பிரிக்குமுன்பே, இந்த ஆகமம் உண்டாயிற்று. விகனசரான பிரமன் ஒரு முனிவராகி, ஒரு முகத்துடன் நைமிசாரண்யத்தில் இந்த ஆகமம் பற்றிய சிறப்பையும், நாராயண மந்திரம் பற்றியும், தமது அணுக்கச் சீடர்களான பிருகு, மரீசி, அத்திரி, காசியபர் என்போருக்கு உபதேசித்தார். இது முதலில் 11/2 கோடி செய்யுள்களை உடையதாக இருந்து, பின் விகனசரின் சீடர்களால் 4 இலட்சம் செய்யுளாகக் குறைக்கப்பட்டது. விகனசருடைய சூத்திரங்கள் 11 பிரச்னங்களையும், 8 மந்திரங்களையும் உடையன.

> "க்ருதே சுக்ல சதுர் பாஹு : ஜடிலோ வல்கலாம்பர :
> க்ருஷ்ணாஜிநோப வீதாசஷான் பிப்ரத் தண்டகமண்டலு :
> தஸ்ய மானஸபுத்ர : விகனஸா" - பாகவதம் 11-5 (விகனஸர் பற்றி)

இது வேதநெறியை மிகவும் நெருக்கமாகப் பின்பற்றும். மந்த்ரம், ஆகமம், தந்த்ரம் தந்த்ராந்த்ரம் - என 4 பிரிவு கொண்ட ஆகமப்பகுதியில் வைகானசத்துக்கு மந்திரபாகம் அதிகம். இது உருவ வழிபாட்டின் சிறப்பையும், நன்கு பேசும், ஸ்ரீமந்நாராயணனை வழிபட்டு வந்தால், பிறவிப் பிணிநீங்கி, வீடுபேறடைவது உறுதி எனவும் கூறும்.

விக்கிரக அமைப்பு : திருமாலுக்கு மூர்த்தி அமைப்பதற்கும் வாகனங்கள் நிர்மாணம் செய்யவும் உள்ள அங்குலக்கணக்குகள் 3 வகையாகப் பிரிக்கப்படும். 1 மாத்ராங்குளம், 2. மானாங்குளம் 3. தேஉறலப்தாங்குளம்.

மூலபிம்பம் 4 வகை :

1. சிலாபிம்பம் (கல்லால் அமைவது) அதாவது துருவபேரத்தில் அழகாக, அளவுக்குத்தக்கபடி, சீரான அங்கங்கள் அமைப்பது, சிலாபிம்பத்தில் 1 அங்குலத்திற்குக் குறைவாக அங்கங்களைச் செதுக்கி, அதன்மேல் சிப்பி, சுண்ணாம்பு, போன்ற மென்மையான பண்படுத்தப்பட்ட சுண்ணாம்பைக் குறைவுக்கு நிரப்பி வர்ணம் பூசி வழிபடுவது முதலியன கூறப்பட்டுள்ளன. இதற்கு சௌதம் என்று பெயர்.
2. தாருபிம்பத்திற்குப் பெரும்பாலும் அத்திமரம் சிறந்தது. வைரமுள்ள அத்தி மரத்தாலும் செய்யலாம். இடுப்புவரை ஒரே பாகமாகவும் செய்து, மேல்பாகத்தை மற்றொரு பாகமாகவும் செய்யலாம். ஆனால் ஒரே சாதி மரமாக இருக்கவேண்டும்.
3. அடுத்து மூலபிம்பம் 8 வித மண்ணாலும், பல பச்சிலைச் சாற்றால் அமைக்கப்பட்ட சுண்ணாம்பாலும், சுக்கு, திப்பிலி முதலிய மருந்து சரக்கினாலும், அஷ்டபந்தனம் என்ற கூட்டு மருந்தாலும் அமைத்து, எலும்பு, நரம்பு, சதை, ஊன், மாமிசம், இரத்தம், தோல் என்ற 7 விதம் அமையும்படி அமைக்கலாம் என்பதும் வைகானஸக் கருத்து.
4. மூலபிம்பம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அடிபீடம் அசையாமலும், பழுதுபடாமாலும் நிலைத்திருக்கவேண்டும்.

கருவறையில் உள்ள மூலம், யாகம், ஸ்னானம், சயனம், உற்சவர் என்ற 5 பேரங்கள் இங்கும் உண்டு. அர்ச்சை (விக்கிரகம்) வடிவங்களில் யோகம், போகம், வீரம், ஆபிசாரிகம் என 4 வகைகள் உண்டு. ஆபிசாரிகத்தை வேலை முடிந்தும் ஆற்றில் கரைத்து விடுவதுண்டு.

திருமால் ஆலயங்களைச் சுமார் 5 அடி அளவு பசுஞ் சாணத்தால், மெழுகிச் சுத்தம் செய்வதும், திருமாலுக்குப் பூமாலை கட்டித் தருவதும், அக்ஷய பலத்துடன், வீடுபேறும் தரும்.

**ளக்கிராமம் :**

கருடபுராணப்படி, விஷ்ணு சாளக்கிராமம் அர்ச்சையில் ஒருவகை எனவும், து 23 வகை எனவும் கூறுவதை இவ் ஆகமமும் ஏற்கும். 12 சாளக்கிராமங்களைச் ர்த்து ஒரு க்ஷேத்ரம் தரும்.

திருமால் ஆலயங்களில் உள்ள நாச்சிமார் மூவகைப்படுவர் :

1. லயார்ச்சை — திருமால் திருமார்பில் வீற்றிருக்கும் திருமகள்.
2. போகார்ச்சை — திருமாலுக்கு இருபக்கங்களிலும் உபயநாச்சிமாராக எழுந்தருளியிருப்பது.
3. அதிகாரார்ச்சை — தனியான சந்நிதியில், தன் ஆராதங்களுடன் எழுந்தருளியிருப்பது.

"தவளதராம் சுககந்த்மால்ய சோபே" என்று ஸ்ரீசூக்தம் உரைத்த வகையில் நமாலுக்கு வெண்மையான நறுமணமுள்ள மலர்களையே சமர்ப்பிக்க வேண்டும்.

**க்கிரகங்களை அமைக்கும் முறை :**

"நியமத்துடன், சிற்ப சாஸ்திர நுணுக்கங்களை நன்கு அறிந்த, அனுபவமும் கராசியுமுள்ள சிற்ப சாஸ்திர வல்லுநர்கள் (48 நாள்) நியமத்துடன் இருந்து அந்தந்த நமால் வடிவங்களுக்குமுள்ள மந்திராதின பிரார்சனைத் தியான சுலோகங்களை ச்சரித்துக்கொண்டு, தியானமுடிவில், அவர்களின் மனக்கண்முன், தியான ாதியில் தோன்றும் திவ்விய மங்கள விக்கிரக உருவ அமைப்பில் விக்கிரகங்களை மைப்பார்கள். வைணவ ஆகமங்களில் வியூகத்தில் நோக்கு அதிகமானதால், நமால் ஆலங்களில் பள்ளிகொண்ட கோலமுள்ள எம்பெருமான்களையும் மைப்பதுண்டு.

பாஞ்சராத்திரம், வைகானஸம் இரண்டிற்கும் முரண்பாடில்லை. இரு ண்கள் கொண்ட ஒரு நோக்கு போல் இவை ஒன்றே என்பதைத் தேசிகர் ாஞ்சராத்திர ரட்சையில்" அருமையாக விளக்கியுள்ளார்.

**கமவகைகள் :**

வைதீகம், லௌகிகம் என இருவகை. ஆகம இலட்சணம் 7 ஆகும். னதிற்குள்ளேயே மனனம் செய்யப்படுவதால் "மந்திரம்" எனவும் (எண்ணம்), ம்மந்திரங்களை, எந்த இடத்தில், எப்படிப் பயன்படுத்திச் செயல்புரிவது எனத் தரிவிப்பது "தந்த்ரம்" எனவும் கூறுவர். மனிதர்களுக்குப் பல நன்மைகளையும், மன்மைகளையும் தந்து பாதுகாப்பதால் இதற்கு ஆகமம் என்ற பெயர் அமைந்தது.

இவை முக்கியமாக வைணவம், சைவம், சாக்தம், காணாபத்யம் என 4 வகைப்படும். சிவாகமங்களைச் சிவபிரான் தமது 5 முகங்களால் வெளியிட்டார். அவற்றில் சிவபேதம் 10 : உருத்திரபேதம் 18 ஆக = 28 ஆகும். பதி, பசு, பாசம் - என்ற 3 தத்துவத்தை கருவறை இலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகிய மூன்றும் குறிப்பிடும். ஆலயத்தை வாஸ்துபுருடனின் உடலாகப் பேசும் சைவாகமம்.

கோயில்வாசல் - பாதம் ; கொடிமரமுள்ள இடம் - தொப்புள் ; கொடிமரம் - முதுகெலும்பு ; உற்சவ மூர்த்தியுள்ள இடம் - இதயம் ; கருவறை - தலை ; கோபுரம் - தூயலிங்கம்.



சுப மங்களம்.



மயிலாப்பூர்-பேயாழ்வார்
(மாதவப்பெருமான் திருக்கோயில்)



திருக்கோவலூர் திரிவிக்கிரமன்



திருக்கோவலூர்-உற்சவர்



மாமல்லபுரம்-தலசயனப்பெருமாள் மூலவர்



காஞ்சிபுரம் ஸ்ரீ அட்டபுயப்பெருமான் (மூலவர்)




சோளிங்கபுரம் ஸ்ரீயோக நரசிம்மர்-மூலவர்



காஞ்சிபுரம்-ஸ்ரீவைகுண்டப்பெருமாள்-உற்சவர்

(கருடசேவை)



திருநீர்மலை-மலைஏறும்முகப்பு




பச்சைவாரணர் கோயில் (பேட்டை)
கருவறைக் கோபுரம்




காஞ்சிபுரம்-வேருக்கை பெருமாள்




ஸ்ரீபெரும்புதூர்-உடையவர்




எம்பார்-மதுரமங்கலம்



மதுராந்தகம்-ஏரிகாத்த இராமன் திருக்கோயில் இராசகோபுரம்



காஞ்சிபுரம்-ஸ்ரீவரதராஜப்பெருமாள் திருத்தேர்




உத்திரமேரூர்-சுந்தரவரதப்பெருமாள் திருக்கோயில்-அட்டாங்க விமானம்



திருப்பாற்கடல் உற்சவர்




மயிலாப்பூர்-மாதவப்பெருமாள் சந்நிதி ஸ்ரீராமர்-பேயாழ்வார் உற்சவர்கள்



தேசூர்-ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்-கண்ணன் திருக்கோலத்தில்



தென்னாறு-பெருமாள் ஆலயம்



நாவல்பாக்கம்-ஆலய முழுத்தோற்றம்

## இந்நூல் ஆக்கத்திற்கு மனமுவந்து நன்கொடை வழங்கிய அருளாளர்கள்

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| 1. | திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தினர் வழங்கியது | 15,000.00 |
| 2. | இந்தியன் வங்கியின் சார்பாக-பொது மேலாளர் திருமிகு. எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கியது | 10,000.00 |
| 3. | வல்லம் அப்பாய் நாயுடு அறக்கட்டளை சார்பாக டாக்டர். திருமிகு. இராமதாஸ் அப்பாய் அவர்கள் வழங்கியது | 5,000.00 |
| 4. | பண்ணுருட்டி. நாவலர் பொன்னடி திருமிகு ப. சீனிவாச ராமாநுஜதாசர் சுவாமிகள் அவர்கள் வழங்கியது | 101.00 |
| 5. | முதுபெரும் புலவர். வே. வேணுகோபாலரெட்டியார் அவர்கள் வழங்கியது (ஐப்திகாரணி) | 101.00 |


## முன்பதிவுத் திட்டப்படி நூல் வாங்க முன்பணமாக வழங்கிய அருளாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமிகு. டாக்டர் சி.கே. இராமன் அவர்கள் தலைவர், பிரம்ம ஞானசபை, காஞ்சிபுரம் | 1,500.00 |
| 2. | திருமிகு. தேது. சுப்பிரமணியன் அவர்கள் "நேஷனல் புரொவிஷன் ஸ்டோர்ஸ், புரசைவாக்கம் | 1,000.00 |
| 3. | திருமிகு. ஏ. லோகைய்ய நாயுடு அவர்கள், "லோகுஸ்டேஷனரி" 22, பத்திரையன் தெரு, சென்னை-1. | 1,000.00 |
| 4. | பண்ணுருட்டி ஸ்ரீ இராமாநுச நாவலர் சுவாமிகள் ஸ்ரீவைணவ சபையின் சார்பாக | 1,000.00 |
| 5. | தெய்வீகத் திருப்பணிச் செம்மல், காஞ்சிபுரம், திருமிகு. கே. திருவேங்கட முதலியார் அவர்கள் | 750.00 |
| 6. | திருமிகு. கே. நடராஜ அய்யர் அவர்கள், "ராமாஸ்லாட்ஜ்" காஞ்சிபுரம் | 500.00 |
| 7. | வந்தவாசி ஸ்ரீ நாதமுனிகள் வைணவ சபையின் சார்பாகத் தலைவர் திருமிகு. ஏ. இராமச்சந்திர ராமாநுஜதாசர் அவர்கள் வழங்கியது | 250.00 |
| 8. | திருமிகு வே. சந்திரமௌலி, உதவி பொறியாளர், சென்னை | 201.00 |
| 9. | திருமிகு. சி. ராஜரத்தினம் அவர்கள் இடைநிலையாசிரியர், அ.மே.ப. வெம்பாக்கம் | 200.00 |

| | | ரூபை |
|---|---|---|
| 10. | திருமிகு புலவர் ஏ. வேலாயுதன் அவர்கள், தமிழாசிரியர் வெம்பாக்கம் | 200.00 |
| 11. | திருமிகு கே. ஏகாம்பரம் அவர்கள் இடை நிலையாசிரியர், வெம்பாக்கம் | 100.00 |
| 12. | திருமிகு கே. இராஜசேகரன் அவர்கள் முதுகலை ஆசிரியர், வெம்பாக்கம் | 100.00 |
| 13. | திருமிகு வி. செல்வராஜ் அவர்கள் இடைநிலையாசிரியர், வெம்பாக்கம் | 101.00 |
| 14. | திருமிகு என். சந்தியப்பமுதலியார் அவர்கள், "நடேச முதலியார் அரிசி ஆலை" காஞ்சிபுரம் | 101.00 |
| 15. | திருமிகு கேவி. வரதன் அவர்கள், உதவி மேலாளர், பாரத ஸ்டேட் பாங்க்-திருத்தணி | 101.00 |
| 16. | திருமிகு வா. கண்ணபிரான் அவர்கள், தலைமையாசிரியர், அ.மே.ப. (ஆ) செய்யாறு | 101.00 |
| 17. | திருமிகு ப. சின்னதுரை அவர்கள், தலைவர் முத்தமிழ்ப் பேரவை, செய்யாறு | 101.00 |
| 18. | திருமிகு புலவர். மு. கோதண்டன், அவர்கள் திருவத்திபுரம் | 101.00 |
| 19. | திருமிகு தி. இரா. இராமசாமி அவர்கள் இடைநிலையாசிரியர், திருவத்திபுரம் | 101.00 |
| 20. | "எஸ். எம். ஜீவல்லர்ஸ்" அவர்கள் பொன், வெள்ளி நகைக்கடை, செய்யாறு | 101.00 |
| 21. | திருமிகு எம். எஸ். பெருமாள்சாமி அவர்கள், உரிமையாளர், ஸ்ரீ பாலமுருகன் ஏஜென்சிஸ், செய்யாறு | 101.00 |
| 22. | புலவர். திருமிகு டி. பலராமன் அவர்கள் தமிழாசிரியர், அ.மே.ப. (ஆ) கலவை | 101.00 |
| 23. | புலவர். திருமிகு வே. விநாயகம் அவர்கள் தமிழாசிரியர், அ.மே.ப. (ஆ). கலவை | 101.00 |
| 24. | திருமிகு புலவர் தி. சீநிவாசராகவன் அவர்கள், அ.மே.ப. தேதூர் | 101.00 |

| | | |
|---|---|---|
| | | ரூபாய் |
| 25. | திருமிகு. புலவர். எஸ். வெங்கடேசன், அவர்கள் அ.உ.பள்ளி, அல்லியந்தல் | 101.00 |
| 26. | திருமிகு. எம். கோபால் அவர்கள், எல்.ஐ.சி. வந்தவாசி | 101.00 |
| 27. | திருமிகு. ஜி. கருமாரன் அவர்கள், முதுகலை ஆசிரியர், அ.மே.ப (ஆ) வந்தவாசி | 101.00 |
| 28. | திருமிகு. எம். கோவிந்தராஜன் அவர்கள், உதவி மேலாளர் இந்தியன் வங்கி, வந்தவாசி | 101.00 |
| 29. | திருமிகு. புலவர் கே. கோவிந்தன் அவர்கள், இடைநிலையாசிரியர், அ.உ.பள்ளி, வல்லம். | 101.00 |
| 30. | முதுபெரும் புலவர். ச.மு. விமலானந்தன் அவர்கள் திருப்பத்தூர் | 101.00 |
| 31. | திருமதி. பாக்கியம்மாள் புதல்வர் திரு. காசிநாதன் TNEB, முக்கூர் | 101.00 |
| 32. | திருமிகு. இ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், நிலக்கிழார், வளர்புரம் | 101.00 |
| 33. | திருமிகு. எஸ்.ஜி. கோவிந்தராஜுலு ரெட்டியார் அவர்கள், சிவனம் | 101.00 |
| 34. | திருமிகு. கே. கோதண்டராமன், ஆசிரியர், தொன்னாமூர் | 101.00 |
| 35. | திருமிகு. எம். வைத்தியலிங்கம் அவர்கள், கே.கே.நகர், சென்னை | 50.00 |

## இந்நூலாசிரியரைப் பற்றி



56 அகவையை எட்டும் இந்த நூலாசிரியர் வந்தவாசி வட்டம் கீழ்ப்புத்தூரில் பரம்பரை ஆசிரியர் குடும்பத்தில் பிறந்தவர். இடைநிலை ஆசிரியராகத் தம்பணியைத் தொடங்கிய இவர், படிப்படியாகத் தமிழ் வித்துவான், பி.லிட். எம்.ஏ, (சிறப்பு நிலை) பி.எட் ; முதலிய பட்டங்களைப் பெற்றார். கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழாசிரியராகப் பல பள்ளிகளில் பணியாற்றிய பின்னர், தற்சமயம் பதவி உயர்வு பெற்று வந்தவாசி வட்டம் அல்லியந்தல் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் தேசூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பொறுப்பிலிருந்த போது நிரந்தரக் கட்டடம் அமைக்கக் கட்டடக் குழுவினருடன் சேர்ந்து பாடுபட்டார். இனிய ஓசையுடன் பாடம் கற்பிக்கும் இவரிடம் பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் அனைவரும் தேர்ச்சி பெற்று வருகின்றனர். இலக்கண, இலக்கிய அறிவை மாணவர்களுக்குக் கற்பிப்பதன் வழி உருவாக்கி வரும் இவருக்கு 1994 ஆம் ஆண்டு "மாநில நல்லாசிரியர்" விருது வழங்கித் தமிழக அரசு சிறப்பித்தது. எம். ஏ. பாடத்திட்டப்படி இவர் எழுதிய "உலகப் பெருங்கவிஞர் கம்பர்" நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது (1986) "இலக்கிய ஒப்பாய்வியல் ஒரு நோக்கு", "இக்கால இலக்கியம்-ஒரு நோக்கு" என்பன இவருடைய பிறநூல்களாகும். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுத்து வரும் பேரகராதிக்கு, முதலாழ்வார் பாசுரங்களுக்குச் "சொல்லடைவு" செய்து கொடுத்துள்ளார். சென்னை வானொலியில் சமய இலக்கிய உரைகளை ஆற்றிவருகிறார். காஞ்சி. ஸ்ரீ சங்கராச்சாரியர் சுவாமிகள் அறிவித்த ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு ரூ. 500 பரிசும் பாராட்டுகளும் பெற்றுள்ளார். கோடை விடுமுறையில் மகாபாரதத் தொடர் சொற்பொழிவுகளை ஆற்றிவரும் இவர், பக்க இசைக்கருவிகளுடனும் இன்னிசைச் சொற்பொழிவுகளையும் செய்து இறைத்தொண்டு செய்து வருகிறார். "தொண்டை நாடும் வைணவமும்" என்னும் தலைப்பில் ஆய்வேட்டை உருவாக்கிப் புதுவைப் பல்கலைக் கழகத்தில் "டாக்டர்" பட்டம் பெற்றுள்ளார் (1994). அவ் ஆய்வேடே நூல் வடிவம் பெற்று உங்கள் திருக்கரங்களில் திகழ்கிறது.